தவறான வாதங்களும் தெளிவான மறுப்புகளும்

(السيف المسلول على من ابتدع في الرسول ﷺ)

ஆசிரியர்:

உஸ்தாத் S.M. இஸ்மாயில் நத்வி M.A., DT., Ph.D.,

முதல்வர்: மஃஹத்தஃவா குர்ஆனிய நிகழ்நிலை கல்வி நிலையம். திருச்சி.

வாட்ஸ்அப்: +91 9677785402

ஹலா பப்ளிகேஷன்ஸ்

தவறான வாதங்களும் தெளிவான மறுப்புகளும்	Thavaraana Vaathankalum Thelivaana Maruppukalum
ஆசிரியர் : எஸ்.எம். இஸ்மாயில் நத்வி M.A., D.T., Ph.D.,	author: S.M. Ismail Nadwi M.A., D.T., Ph.D.,
துறை: வரலாறு	subject: History
பதிப்பு: பிப்ரவரி 2025	edition: Februay 2025
வடிவமைப்பு & அச்சகம் : தோழமை கிராபிக்ஸ் tozhamai@gmail.com	Design & Print : Thozhamai Graphics +91 98943 60788 www.tozhamai@gmail.com
வெளியீடு: Hala Publication	publisher: HALA PUBLICATIONS 19/1 ,Danarathinam Nagar, Near Makka Masjith, Thanjaoor road ,Trichy -10.
	WhatsApp +91 9677785402 email: halapublications@gmail.com www.facebook.com/ismailnadwi

300.00

உள்ளே...

1. உண்மையான அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் 13
2. யார் இந்த பரேல்விகள்? 16
3. யார் இந்த வஹ்ஹாபிகள் தொடர் 1........................ 22
4. யார் இந்த வஹ்ஹாபிகள் தொடர் 2........................ 27
5. யார் இந்த வஹ்ஹாபிகள் தொடர் 3........................ 31
6. இஸ்திகாஸா 37
7. மரணித்தவர்களிடம் துஆ செய்வது... 44
8. இமாம் அஹ்மத் பின் ஹன்பல் (ரஹ்)
இருட்டடிப்பும் நம் மறுப்பும் 51
9. இமாம் மாலிக் (ரலி) பெயரில் இருட்டடிப்பும் நம் மறுப்பும் 55
10. ஐயமும் தெளிவும் 59
11. இறைத்தூதர் (ஸல்) அவர்களை முறையாக நேசிப்போம்!....... 66
12. மீலாது விழா கொண்டாடலாமா? கூடாதா? 71
13. ஒடுக்கத்துப் புதன் என்பது இஸ்லாத்தில் உண்டா?.................. 78
14. மார்க்கம் காட்டித் தராத வழிபாடுகளும் வழிகேடுகளும் 91
15. யார் இந்த ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா? 102
16. வழிகெட்ட தத்துவம் 104
17. ஷாபி மத்ஹபில் இஸ்திகாஸாவின் சட்டம்........................ 110
18. ஹதீஸே கதிர்கும்........................ 114
19. இஸ்திகாஸா மீண்டும் ஒரு பார்வை... 123
20. ஹரம் ஷரீஃபின் மீது தொடரும் தாக்குதல்கள்... 128

21. ஐயமும் தெளிவும் 133
22. ஹதீஸ் கலை Vs ஃபிக்ஹு கலை 137
23. ஐயமும் தெளிவும்.......... 143
24. புத்தக அறிமுகம்.......... 145
25. அல் மதீனா அத்தைய்யுபாவின் பச்சை குவிமாடம் 146
26. மீலாது விழாவும் வரலாற்று இருட்டடிப்புகளும் 156
27. அஹ்லுஸ் ஸுன்னாவின் பார்வையில் 'மஹதி' 162
28. இஜ்மாஃ – ஒற்றைக் கருத்தும் மாற்றுக் கருத்தினரின் இருட்டடிப்பும் 166
29. நவீன பிஃத்னா! 175
30. இறைநேசர்களின் அடையாளங்கள் 177
31. மத்ஹபுகளின் முன் சென்ற சத்திய இமாம்களும் பின் வந்த மத்ஹபுகளின் அசத்தியவாதிகளும் 180
32. கபர்ஸ்தானில் திருக்குர்ஆனை ஓதலாமா?.......... 184
33. மார்க்க அறிஞர்களை சிறுமைப்படுத்துவது.......... 188
34. பிரச்சனைகளை வஹியின் ஊடாக கையாளுதல் 192
35. ஸைய்யதுனா அலீ (ரழி) விலாயத்தும்.......... 194
36. அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கண்ணோட்டத்தில் சஹாபாக்களும் ஷீஆக்கள் வழியில் பயணிக்கும் வழிகேடர்களும் 199
37. ரஜப் மாதமும் மார்க்கம் நமக்கு காட்டித்தந்த வழிமுறைகளும்.......... 205
38. பள்ளிவாசல்கள் பாதுகாக்கப்பட வேண்டுமா? வாருங்கள் மதர்ஸாக்களை பாதுகாப்போம்!.......... 210
39. ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (ரஹி) பற்றி இந்திய உலமாக்கள் அரபு மொழியில் எழுதிய புத்தகங்கள்.......... 213
40. தற்காலச் சூழ்நிலையில் குனூத் நாஸிலா பள்ளிகளில் ஐந்து நேரத் தொழுகைகளில் ஓதலாமே!.......... 215

41. பித்ஆகளை ஒழிப்பதற்கான மூன்று விதிகள் 218
42. இரண்டு புத்தகங்கள் அல்ல இரண்டு வைரக் கற்கள்!............... 220
43. மூடநம்பிக்கையின் அடிப்படை அறியாமையே! 223
44. யார் இந்த ஸலபிஃகள்?... 230
45. அல்லாஹ் எங்கே இருக்கிறான்?.. 236
46. பித்அதுக்களை துடைத்து எறியும் உஸூல் (சட்டம்) 241
47. ஐயமும் தெளிவும் 245
48. அறியாமையின் அடிப்படையில் மன்னித்தல்! 250
49. இறைபண்புகளில் அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கையாளும் மூன்று முக்கியமான சட்டங்கள் 253
50. பரக்கத்தும் தபர்ருக்கும் 255
51. அஷ்ஷேக் வலீத் அஸ்ஸயீதான்...! 259
52. அஷ்ஷேக் அஹ்மத் அஸ்ஸயித் ஓர் அறிமுகம்........................... 261
53. அகீதா - இஸ்லாமிய கொள்கை ஒரு சுருக்கமான பார்வை.... 263
54. யார் இந்த ஜியோனிஸ யூதர்கள்?.. 274
55. மங்கி போகும் வாசிப்புத் திறன் 279
56. சவூதி அரேபியாவும் & ஷீஆக்களின் சதிவலைகளும் 282
57. சவூதி அரேபியாவும் & ஷீஆக்களின் சதிவலைகளும் -2....... 284
58. சவூதி அரேபியாவும் & ஷீஆக்களின் சதிவலைகளும் -3 287
59. ஷீஆக்கள் அனைவரும் ஒரு படித்தரத்தில் இல்லை................ 290
60. மவ்லிது ஒரு பார்வை... 292
61. ஐயமும் தெளிவும்... 297
62. சஹாபாக்களை குறை கூறுதல் – ஒரு ஃபித்னா 300
63. பித்ஆ - நூதனம்.. 305
64. வணக்க வழிபாடுகளில் பேணப்பட வேண்டிய 3 விதிகள்....... 307

65. நபியவர்கள் மரணித்த தினத்தைகொச்சைப்படுத்தும் பரேல்விகள் 308

66. ஐயமும் தெளிவும் 311

67. பிக்ஹு கலையும் நமது மதரஸாக்களும் 317

68. இப்னு தைமிய்யாவும் ஜின்னும் 322

69. அறியாமையால் இணைவைத்தால் காபிரா? 325

70. இஸ்லாத்திற்கு சவால்விடும் முதல் ஆய்வு.... 328

71. சமூகம் மறந்துபோன முக்கியமான இரண்டு சுன்னாஹ் 331

72. இஸ்லாமிய சமூகத்தை அச்சுறுத்தும் நவீன ஆபத்து 334

73. சரியான அகீதா - பாதுகாக்கும் 13 விதிகள் 340

74. இனி வேண்டாமே வீணான விவாதங்கள்! 344

75. மாற்றுக் கருத்துடையவர்களை மதிப்போம்! 349

அணிந்துரை

الحمد لله رب العالمين والصلاة والسلام على رسوله الأمين وعلى آله وصحبه أجمعين.

உஸ்தாத் இஸ்மாயில் நத்வி M.A. Ph.D அவர்கள், அறிந்தவர்களுக்கு மிகவும் பரிச்சயமானவர். அவர் அறிஞர்களுடனும் கிதாபுகளுடனும் மிக நெருக்கமாக இருப்பவர். தனது ஆய்வுகளின் மூலம் இஸ்லாமிய மார்க்கத்தை ஆழமாகப் புரிந்து கொண்டார் மற்றும் அதை ஸலபுகளது மன்ஹஜின் அடிப்படையில் (அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்) விளக்குவதில் மிகுந்த முயற்சிகள் எடுத்துள்ளார்.

இவர் முகநூலில் பல ஆய்வுக்கட்டுரைகளை எழுதி வருகிறார். இவர் தனது கட்டுரைகளில், அல்குர்ஆன் மற்றும் சுன்னாஹ் ஆதாரங்களை பயன்படுத்தி, அசத்தியவாதிகளின் உண்மையான முகங்களை வெளிக்கொணர்ந்துள்ளார்.

உஸ்தாத் அவர்கள் தனது கட்டுரைகளைத் தொகுத்து "**தவறான வாதங்களும் தெளிவான மறுப்புகளும்**", என்ற பெயரில் ஒரு நூலாக வெளியிடுகிறார். அல்ஹம்து லில்லாஹ்.

முஸ்லிம் சமுதாயத்தில் உள்ள அதிகமான மக்கள் அறியாத பல விஷயங்கள் இந்நூலில் பேசப்பட்டுள்ளது. சில தவறான கருத்துக்கள் ஆதாரங்களின் அடிப்படையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது. நூல் பல்வேறு கோணங்களில் அசத்தியவாதிகளை அடையாளப்படுத்தி, அவர்கள் மூலம் ஏற்படும் ஆபத்துகளையும் அடையாளம் காட்டியுள்ளது.

உஸ்தாத் இஸ்மாயில் நத்வி அவர்களின் இந்த நூல், இஸ்லாமிய அறிவியல் ஆராய்ச்சியின் மிக முக்கியமான பங்களிப்பாக திகழ்கிறது, மேலும் இஸ்லாமிய அகீதாவை அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையில் சரியான முறையில் புரிவதற்கான வழிகாட்டியாகவும் உள்ளது.

அனைவரும் வாசிக்க வேண்டிய ஒரு நூல்.

உஸ்தாத் அவர்களின் முயற்சியை அல்லாஹ் பொருந்திக் கொள்வானாக!

அஷ்ஷேக் Dr. M.L. **முபாரக் மதனீ** M.A, Ph.D
இயக்குனர், தாருல் ஹுதா அரபு மற்றும் இஸ்லாமிய
கற்கைகளுக்கான மகளிர் கல்லூரி. மருதமுனை. இலங்கை.

என்னுரை

அல்லாஹ்விற்கே புகழ் அனைத்தும், இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மீதும், சத்திய சஹாபாக்கள், தாபியீன்கள், நம் அனைவரின் மீதும் அல்லாவின் அருள் என்றென்றும் நின்று நிலவட்டுமாக!

அல்லாஹ்வின் அருளால் **தவறான வாதங்களும் தெளிவான மறுப்புகளும்** *பற்றிய கருத்துக்களை சுமந்திருக்கும் எனது மூன்றாவது புத்தகத்தை சுருக்கமாகவும், ஆதாரபூர்வமாகவும் எழுதுவதற்கு எடுக்கப்பட்ட ஒரு சிறிய முயற்சி தான் உங்களின் கரங்களில் இருக்கும் இந்த புத்தகம்.*

பல்வேறு சந்தர்ப்பங்களில் எழுதப்பட்ட எனது கட்டுரைகள் ஒன்றிணைக்கப்பட்டு புத்தகமாக இன்று இறையருளால் வெளி வருகிறது, **அசத்தியவாதிகளின் வரலாற்று இருட்டடிப்புகளை** *எடுத்துரைப்பது காலத்தின் கட்டாயம். இன்று இஸ்லாத்தின் பெயரில் அரங்கேற்றப்படும் ஏனைய வழிகேடுகள் அறிஞர் பெருமக்களால் வன்மையாக கண்டிக்கப்பட்டும் சிலர் அதை மார்க்கமாக ஆக்க முயல்கிறார்கள்.*

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اِنْ جَآءَكُمْ فَاسِقٌ ۢ بِنَبَاٍ فَتَبَيَّنُوْۤا اَنْ تُصِيْبُوْا قَوْمًا ۢ بِجَهَالَةٍ فَتُصْبِحُوْا عَلٰى مَا فَعَلْتُمْ نٰدِمِيْنَ

விசுவாசிகளே! (ஃபாஸிக் எனும்) தீயவன் உங்களிடம் ஏதேனும் செய்தியைக் கொண்டுவந்தால் (அதை உடனே அங்கீகரித்து) அறியாமையால் (குற்றமற்ற) ஒரு சமூகத்தார்க்கு நீங்கள் தீங்கிழைத்துவிடாதிருப்பதற்காக (அதன் உண்மையை அறிவதற்காக அதனைத் தீர்க்க விசாரணை செய்து) தெளிவுபடுத்திக் கொள்ளுங்கள், (அவ்வாறு நீங்கள் செய்யவில்லையென்றால்,) பின்னர் நீங்கள் செய்தவைகளைப் பற்றி நீங்களே கைசேதப்படக்கூடியவர்களாக ஆகிவிடுவீர்கள். (அல்குர்ஆன் : 49:6)

இந்த புத்தகத்தில் காணப்படுகிற முக்கியமான சில விஷயங்கள் பின் வருமாறு...

அசத்தியவாதிகளின் வரலாற்று இருட்டடிப்புகளில் இவர்கள் ஏன் அல்லாஹ்வும், அல்லாஹ்வின் தூதரும் சொல்லாத விடயங்களை மார்க்கமாக மக்களுக்கு கொண்டு செல்கிறார்கள்.

சத்தியம் எது? அசத்தியம் எது? என்று தெளிவாக தெரிந்த பின்பும் சத்தியைத்தை பின்பற்றுவதற்கு முன்வராமல் இறுமாப்புடன் அசத்தியத்தில், நிலைகுலையாமல் இருக்கிறார்கள் என்ற கேள்வி உண்மையான அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையை பின்பற்றக்கூடிய ஒவ்வொரு இறைநம்பிக்கையாளருக்கு இயல்பாகத் தோன்றும் ஒன்று,

இதற்கு அடிப்படையான காரணம் அவர்கள் கொண்டுள்ள வழிகேடான கொள்கைகள்தான்,

தங்களது வழிகெட்ட ஷேகுமார்களை, அறிஞர்களை அல்லாஹ்விற்கு நிகராக கருதுவதும் அவர்கள் சொல்வதுதான் இறுதியான மார்க்கத் தீர்ப்பு என்று விளங்குவதும்தான்.

பரேலவிகளிடம் மரணித்த இந்த ஸாலிஹீன்களிடம் (வலிமார்கள்) நேர்ச்சை செய்வது துஆ செய்வது, வஸீலா தேடுவது கூடாது என்று நாம் சொன்னால் அவர்கள் பதிலுக்கு நாங்கள் மரணித்த இறைநேசர்களையோ, மரணித்த எங்களது சேகுநாயகங்களையோ நாங்கள் வணங்கவில்லை அவர்களிடம் துஆ தான் கேட்கிறோம் என்கிறார்கள் கீழ்காணும் நபிமொழி இதை வழிகேடு என்று தெளிவுபடுத்துகிறது.

அத்தி பின் ஹாதிம் ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்: நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் எனது கழுத்தில் தங்கத்தால் ஆன சிலுவையை தொங்கவிட்டவனாக வந்தேன் நபியவர்கள் இந்த வசனத்தை சொல்வதை செவிமடுத்தேன்

اِتَّخَذُوْٓا اَحْبَارَهُمْ وَرُهْبَانَهُمْ اَرْبَابًا مِّنْ دُوْنِ اللّٰهِ

(இவ்வாறே) அவர்கள் அல்லாஹ்வையன்றித் தங்கள் பாதிரிகளையும், தங்கள் சந்நியாசிகளையும் மர்யமுடைய குமாரர் மஸீஹையும் தங்கள் தெய்வங்களாக எடுத்துக் கொண்டனர். (அல்குர்ஆன் : 9:31)

அல்லாஹ்வின் தூதர் அவர்களே பாதிரிகளையும் சந்நியாசிகளையும் அவர்கள் (கிருத்தவர்கள்)வணங்க கூடியவர்களாக இல்லை என்றேன்,

அதற்கு ஆம் ,என்றாலும் அல்லாஹ் விலக்கி வைத்ததை ஆகுமாக்கி, அல்லாஹ் ஆகுமாக்கியதை விலக்கியதால் அவர்கள் (பாதிரிகளையும் சந்நியாசிகளையும்) வணங்கியவர்களாக கருதப்படுவார்கள்.

நூல்- ஸுனனுல் குப்ரா பைஹகி, எண்-30350, தரம்- ஸஹீஹ்.

وعن عدي بن حاتمٍ رضي الله عنه قال: أتيت النبي صلى الله عليه وسلم، وفي عُنقي صليبٌ من ذهبٍ، قال: فسمعته يقول: ﴿اتَّخَذُوا أَحْبَارَهُمْ وَرُهْبَانَهُمْ أَرْبَابًا مِنْ دُونِ اللَّهِ﴾ [التوبة: ٣١]"، قال: قلت: يا رسول الله، إنهم لم يكونوا يعبدونهم، قال: ((أجل، ولكن يحلُّون لهم ما حرم الله، فيستحلونه، ويحرِّمون عليهم ما أحَلَّ الله، فيحرِّمونه؛ فتلك عبادتهم لهم))؛رواه البيهقي في "السنن الكبرى" (٣٠٣٥٠)، وصححه الألباني.

தங்களை அஹ்லுல் பைத் என்று சொல்ல சொல்லிக் கொள்ளும் ஷிஆக்களும் தங்களது 12 இமாம்களை முதன்மைப்படுத்தியதன் காரணமாக இன்று அவர்கள் வழிகேட்டில் தாங்களும் பயணம் செய்து மற்றவர்களையும் வழிகேட்டின் பக்கம் இட்டுச் செல்கிறார்கள்,

ஆக தனி நபர் வழிபாடு மற்றும் ஷீஆக்களின் கொள்கைகளைப் பற்றி விளக்கமாக தெரிந்து கொள்ள ஷீஆக்களை ஒரு ஷீஆவாக இருந்தே எதிர்த்த ஒரு அறிஞரை பற்றியும் கூடுதலான தகவல்களை காண கீழ்க்காணும் எனது யூடியூப் சேனலின் சுட்டியை சொடுக்கவும்

https://youtu.be/p9tOvCfS4ec

இந்த ஷிஆக்களின் தத்துப் பிள்ளைகள் தான் இந்த வழிகெட்ட பரேல்விகள் கொஞ்சம் கொஞ்சமாக தமிழகத்தில் ஆதிக்கம் செலுத்த ஆரம்பித்து தர்ஹாக்களையும் அரபுக் கல்லூரிகளையும் ,மதரசாகளையும் உலமாக்களையும் வழிகேடான கொள்கைகளின் பக்கம் பகிரங்கமாக அழைக்கத் தொடங்கி விட்டனர், அவர்களின் பகல் கனவு பலிக்காது இன் ஷா அல்லாஹ்.

எனவே சத்தியமான அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கைகளை விளக்குவதிலும் இவர்களின் பொய்யான போலி "சுன்னத் ஜமாஅத் ", கொள்கைகளை மக்கள் மன்றத்தில் தெளிவுபடுத்தி விழிப்புணர்வுக்காக எனது இந்த பதிவுகளை பதிந்து வருகிறேன்,

الله هو المستعان و عليه التكلان

மரண இறுதிவரை உண்மையான கொள்கையில் நிலைகுலையாமல் பயணித்து மக்களை அதன் பக்கம் அழைத்து இறை பொருத்தத்தோடு அல்லாஹ்வை சந்திப்பதற்கு நம் அனைவருக்கும் அவன் தௌஃபீக் செய்திடுவானாக.

இமாம் ஸாலிஹ் அல் உஸைமின் *ரஹிமஹுல்லாஹ் கூறுகிறார்கள்....*

சத்தியத்தைப் பற்றி எடுத்துரைப்பதும், அசத்தியத்தைப் பற்றி எச்சரிப்பதும், மக்களுக்கு - எது சத்தியம், எது அசத்தியம் என்பதை விளக்குவதும் இன்றியமையாத ஒன்று....!!!

சத்தியம் தெளிவுபடுத்தப்படுவதை மக்கள்விட்டு விட்டால், அசத்தியத்தை ஏற்று கொள்வர். நாளடைவில், சத்தியம் - அசத்தியமாகும், அசத்தியம் - சத்தியமாகும்.

- உஸ்தாத் S.M. இஸ்மாயில் நத்வி M.A., DT., Ph.D.,
மஃஹத்தஃவா குர்ஆனிய நிகழ்நிலை
கல்வி நிலையம். திருச்சி.
96777 85402 (வாட்ஸ்அப்)


رب زدني علما

உண்மையான அஹ்லுஸ் ஸுன்னத் வல்ஜமாஅத் யார்?

அவர்கள் கொள்கைகள் என்ன?

குர்ஆன் ஸுன்னாவின் ஆதாரங்களை முன்வைத்தும் 4 மத்ஹபுகளின் சங்கையான இமாம்களின் கருத்துக்களை முன்வைத்தும் இந்த நூலை எழுதலாம் என்ற முடிவுக்கு வந்தேன். அல்லாஹ் நம் அனைவருக்கும் சத்தியத்தை உரக்கச் சொல்வதற்கும் அதில் நிலைத்திருப்பதற்கும் அருள் புரிவானாக!!

நவீன காலத்தில் முஸ்லிம்கள் முன்னோக்கி வரும் பல பிரச்சினைகளுக்கு மத்தியில் இதுபோன்ற விவாதங்கள் தேவையா என்று நீங்கள் கேட்கலாம்!

நன்மைகளை ஏவுவதும், தீமையை தடுப்பதும் மார்க்கத்தில் இன்றியமையாத ஒரு பணி. அல்லாஹ் தன் திருமறையிலே இது பற்றி இவ்வாறு கூறுகிறான்:

وَلْتَكُنْ مِّنْكُمْ اُمَّةٌ يَّدْعُوْنَ اِلَى الْخَيْرِ وَيَاْمُرُوْنَ بِالْمَعْرُوْفِ
وَيَنْهَوْنَ عَنِ الْمُنْكَرِ وَاُولٰٓئِكَ هُمُ الْمُفْلِحُوْنَ

(நம்பிக்கையாளர்களே!) உங்களில் ஒரு கூட்டத்தார் (மனிதர்களை) சிறந்ததின் பக்கம் அழைத்து நன்மையைச் செய்யும்படி ஏவி, பாவமான காரியங்களிலிருந்து அவர்களை விலக்கிக் கொண்டும் இருக்கவும். இத்தகையவர்கள்தாம் வெற்றி பெற்றவர்கள். (அல்குர்ஆன் 3:104)

ஆக சத்திய மார்க்கத்தை எடுத்துச் சொல்வதும் அதன் உண்மையான கொள்கைகளை விளக்குவதும், வழிகேடுகளை தவிர்த்து விழிப்புணர்வை

ஏற்படுத்துவதும் இறைநம்பிக்கையாளர்களின் வெற்றிக்கு வழிவகுக்கும் முக்கியமான அம்சங்கள் என்பதை மேற்காணும் வசனத்தின் ஊடாக நாம் விளங்க முடியும்.

கீழ்காணும் நபிமொழியிலிருந்து தான் ஸலஃபு ஸாலிஹீன்கள் (நமது முன்னோர்கள்) அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் என்ற சித்தாந்தத்தை இஸ்லாமிய சமூகத்திற்கு அறிமுகம் செய்கிறார்கள்.

إنَّ بني اسرائيلَ افترقتْ على إحدى وسبعين فرقةً ، وإنَّ أمتي ستفترقُ علي اثنتيْنِ وسبعين فرقةً، كلُّها في النارِ إلا واحدةً وهي الجماعةُ. الراوي : أنس بن مالك | المحدث : العراقي | المصدر : الباعث على الخلاص الصفحة أو الرقم: 61 | خلاصة حكم المحدث : إسناده صحيح التخريج : أخرجه ابن ماجه (3993)، وأحمد في ((المسند)) (541/3)، وأبو يعلى (63/7)

பனீ இஸ்ரவேலர்கள் 71 குழுக்களாகவும் எனது சமூகம் 72 குழுவாகவும் பிரிவார்கள். ஜமாஅத்தாக (ஐக்கியத்தை கொண்டிருக்கும்) ஒரு குழுவினரைத் தவிர அனைத்து குழுக்களும் நரகம் புகும். (அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக் ரளியல்லாஹு அன்ஹு, நூல்: இப்னுமாஜா (3993), முஸ்னத் அஹ்மத் (3/145), தரம்: ஸஹீஹ்-ஆதாரபூர்வமானது)

இதே கருத்தில் வேறு ஒரு ஆதாரப்பூர்வமான ஜாமிஃ திர்மிதியில் அப்துல்லாஹ் பின் அம்ரு ரளியல்லாஹு அன்ஹு அவர்களால் அறிவிக்கப்படும் ஒரு நபிமொழியில்:

ما أنا عليه و اصحابي

“நானும் எனது தோழர்களும் எந்தக் கொள்கையில் இருக்கிறோமோ அந்த குழுவினரைத் தவிர”

என்ற வாக்கியம் இடம் பெறுவதால் நானும் என்ற வார்த்தை “அஹ்லுஸ் ஸுன்னத்” என்றும் எனது தோழர்கள் என்ற வார்த்தை “வல் ஜமாஅத்” என்ற ஒரு வரைவிலக்கணத்தை நமது முன்னோர்களான சத்தியப்பாதையில் பயணித்த சஹாபாக்களிடம் படித்த மாணவர்களான தாபியீன்கள் நமக்கு வழங்குகிறார்கள்.

அதுவரை அவர்கள் இதுபோன்ற அடையாளங்களை இறை

நம்பிக்கையாளர்களான முஸ்லிம்களுக்கு அவர்கள் அறிமுகம் செய்யவே இல்லை. அனைவரும் ஒரு உம்மத்தாகதான் பயணித்தனர்.

அவர்களின் காலத்தில் வழிகேட்டின் உச்சத்தை சிலர் தொட்டனர். உதாரணம்: முஃதஸிலா, முர்ஜிஆ, கத்ரியா, ஜஹமிய்யா, கவாரிஜுகள். இவர்களைப் பற்றி பின்வரும் பக்கங்களில் தெளிவுபடுத்தப்படும்.

மேற்கூறிய குழுவினர் வழிகேட்டின் விளிம்பை அடைந்து தானும் வழிகெட்டு மற்றவர்களையும் வழிகெடுத்தனர். சிலர் அல்லாஹ்வும் தூதரும் காட்டித்தந்த பாதையில் பயணிக்காமல் பகுத்தறிவால் மார்க்கத்தை அளக்கத் தொடங்கினார்கள். இன்னும் சிலர் மார்க்கம் காட்டித்தராத “குலுவ்” என்ற கடும் போக்கை பிறருக்கு வலியுறுத்தி வந்தனர். பெரும் பாவங்கள் செய்தவர்களை இஸ்லாத்திலிருந்து காஃபிராக வெளியேற்றினார்கள்.

இன்னும் சிலர் தாங்களாக குர்ஆனுக்கும் நபி மொழிகளுக்கும் தங்களது மனோ இச்சையின் அடிப்படையில் வியாக்கியானங்களை வழங்கி சஹாபாக்கள் கடந்து வந்த பாதையை விட்டுவிட்டனர். வழி கெட்டனர்....

இந்த வழிகெட்ட சிந்தனைகளை நமது காலகட்டத்திலும் சில குழுவினர் அல்லாஹ்வும் தூதரும் சொல்லாத கருத்துக்களை மார்க்கமாகவும் சஹாபாக்கள், தாபியீன்கள், சங்கையான மத்ஹபுகளின் இமாம்கள் சொல்லாத கருத்துக்களை (போலி) ஸுன்னத் வல் ஜமாஅத் என்ற லேபிளில் அடிக்க தொடங்கிவிட்டனர்.

இந்த வழி கேடுகளை நமது முன்னோர்கள் எவ்வாறு எதிர்த்தனர்? அதனால் அவர்கள் முன்னோக்கிய துன்பங்கள் என்ன? துயரங்கள் என்ன? சத்தியத்தில் அவர்கள் நிலைகுலையாமல் எவ்வாறு பயணித்தார்கள்? தொடந்து காண்போம்...

யார் இந்த பரேல்விகள்?

பித்அத்தை அங்கீகரிப்பவர்கள், நவீன அனுஷ்டானங்களை இஸ்லாமிய வணக்க வழிபாடுகளைப் போன்று பாவித்துச் செய்யும் அனாச்சாரமான கொள்கைக்கு ஹிஜ்ரீ 14ஆம் நூற்றாண்டில் புத்துயிரூட்டியவர் அஹ்மது ரிளாகான் என்பவராவார்.

உ.பி.யின் பரேலி எனும் ஊரில் ஹிஜ்ரீ 1272 ஷவ்வால் (கி.பி. 1856 ஜூன் 14) அன்று பிறந்தார். தகப்பனார் பெயர் நகீஅலீ. இவருக்குத் தாயார் வைத்த பெயர் அம்மன் மியான். தந்தை வைத்த பெயர் அஹ்மது மியான். பாட்டனார் தான் அஹ்மது ரிளா என்று பெயர் வைத்தார். இந்தப் பெயரே பிரபலமானது. இதனால் இக்கொள்கைக்கு "ரிளாகானிய்யத்" என்று கூறுவர். ஊரின்பால் தொடர்புபடுத்தி "பரேலவிய்யத்" என்றும் கூறுவர்.

காதியானியிடம் ஆரம்பக் கல்வி

இவர் தனது ஆரம்பக் கல்வியை தன்னை நபி என வாதிட்ட பொய்யன் மிர்ஸா குலாம் காதியானியின் சகோதரர் மிர்சா குலாம் காதிர் பேக்கிடம் கற்றதாக கூறப்படுகிறது, ஆனால் சமீபமாக வடநாட்டில் இருக்கும் ரிழாகான் அமைப்பினர் இதை மறுத்து கோர்ட்டிலும் வழக்கு தொடுத்துள்ளார்கள் என்று அறிந்திருக்கிறோம்.

ஐயமும், தெளிவும்

ஐயம்: *ரிளாகான் பரேலவிக்கு முன்பே இந்தியாவில் பித்அத், அனாச்சாரங்கள் தோன்றி விட்ட போது, தேவ்பந்த் உலமாக்கள் பரேலவிகளை மட்டும் சாடுவதற்கு, மறுப்பு கொடுப்பதற்குக் காரணம் என்ன?*

தெளிவு: நியாயமான கேள்வி தான். இதற்கான விடையை சரியாக அறிய வேண்டுமெனில்,பரேலவிகளுக்கு முன், பரேலவிகளுக்குப் பின் இருந்த இந்திய முஸ்லிம்களின் நிலையைத் தெரிந்து கொள்ள வேண்டும்.

இரண்டு வித்தியாசங்கள்

பரேலவிகள் தோன்றுவதற்கு முன்பே பித்அத், அனாச்சாரங்கள் இருந்து வந்த போதிலும் பரேலவிகளுக்கும் அதற்கு முந்தைய பித்அத்வாதிகளுக்கும் இரண்டு வித்தியாசங்கள் உள்ளன.

முதல் வித்தியாசம்

பரேலவிகளுக்கு முன் எந்த ஆலிமும் பித்அத்தை இஸ்லாத்தின் போதனையாகவோ, மார்க்கத்தின் ஓர் அங்கமாகவோ கூறியதில்லை. இந்த பரேலவிகள்தான் முதன் முதலில் பித்அத்திற்கு இஸ்லாமிய வடிவம் கொடுத்து, இஸ்லாத்தின் ஓர் அங்கம் போல் ஒரு மாயையை ஏற்படுத்தினார்கள்.

இரண்டாவது வித்தியாசம்

பித்அத்தைக் கண்டித்து ஸுன்னத்தை நிலைநாட்டும் உண்மையான உலமாக்களை முதன் முதலில் காஃபிர்கள் என்று முத்திரை குத்தியது பரேலவிகள் தான்.

இதன் விளைவு தயக்கத்துடன், வெட்கத்துடன் செய்யப்பட்டு வந்த பித்அத்கள் புண்ணியமானதாகவும், நன்மைக்குரியதாகவும் கருதப்பட்டு மிகவும் முக்கியத்துவம் கொடுத்து பகிரங்கமாக அரங்கேற்றம் பெறத் துவங்கின.

முன்பு, கவலையுள்ள ஆலிம்கள் பித்அத்தின் தீய விளைவுகளை எடுத்துக் கூறினால் தவ்பாச் செய்து ஸுன்னத்தைக் கடைப்பிடிக்கும் நிலை மக்களிடம் இருந்தது. ஆனால், பரேலவிகள் தலையெடுத்த பின், பித்அத்தை எதிர்த்து நபிகளாரின் ஸுன்னத்தைப் பேணும் உண்மையான நல்லடியார்களை காஃபிர்கள் என எண்ணும் நிலை உருவானது. இதனால் ஷிர்க்கிற்கு நெருக்கமான பித்அத் என்ற இப்பெரும்பாவத்திலிருந்து பெரும்பாலோருக்கு தவ்பாச் செய்யும் வாய்ப்பே இல்லாமல் போய் விட்டது.

ஆங்கிலேயர்களாவது அந்த உண்மையான தியாகசீலர்களை வஹ்ஹாபிகளாகத் தான் ஆக்கினார்கள். ஆனால், பித்அத்தை மார்க்கமாக்கிய தீய ஆலிம்களோ அவர்களை காஃபிர்களாகவே ஆக்கி விட்டார்கள்.

எந்த உண்மையான உலமாக்கள் வந்திருக்காவிட்டால் இந்தியாவில் இஸ்லாமே அழிந்திருக்குமோ அந்தப் புண்ணியவான்களை, இஸ்லாத்திற்காக இன்னுயிரை நீத்த தியாகச் செம்மல்களை காஃபிர் என்றால் வேறு யார் தான் முஸ்லிமாக இருக்க முடியும்?

இப்போது புரிகிறதா பித்அத்தும், பரேலவியிஸமும் எவ்வளவு கொடூரமானவை என்று?

ரிளாகான் பரேலவியின் காஃபிர் ஃபத்வாவால் இந்திய முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் என்ன?

தினமும் ஏதேனும் ஓர் உண்மையான ஆலிமையோ, ஒரு குழுவையோ காஃபிர் என்று மொத்தமாகவும் சில்லரையாகவும் ஃபத்வா கொடுக்காவிட்டால் ரிளாகான் பரேலவிக்கு அன்றைய பொழுது கழியாது. இஸ்லாமிய வரலாற்றில் அல்லாஹ்வின் உண்மையான நல்லடியார்களை, தீனுக்காகத் தமது வாழ்நாளை மனத் தூய்மையோடு அர்ப்பணித்த தியாக சீலர்களை அசிங்கமான, கொச்சையான வார்த்தைகளால் வசை பாடியது மட்டுமின்றி, காஃபிர் என்று கூறிய முதல் மனிதர் ரிளாகான் பரேலவி தான்.

ரிளாகான் பரேலவியின் காஃபிர் ஃபத்வா ஒரு வரலாற்றுப் பார்வை

இந்தியாவில் முன்பிருந்தே ஆலிம்களுக்குப் பஞ்சமில்லை. ஆனால் பல பாகங்களில் பிரிந்து வட்டார அளவில் மட்டும் தம் பணிகளைச் செய்து வந்தார்கள். கி.பி. 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் நாளுக்கு நாள் ஆங்கிலேயரின் எழுச்சி ஒரு புறம், மறுபுறம் அரசியல், ஆன்மிகம், பொருளாதாரம், கல்வி, ஒழுக்கம் எல்லா மட்டத்திலும் முஸ்லிம்களின் வீழ்ச்சி. இதைக் கவனத்தில் கொண்டு நாட்டின் பல பாகங்களில் பிரிந்து கிடக்கின்ற பல்வேறு சிந்தனை கொண்ட அனைத்து உலமாக்களும் ஒரு பொதுத் திட்டத்தின் அடிப்படையில் ஒன்றிணைந்து கூட்டமைப்பாக செயல்படலாம் என்று முடிவானது.

நத்வத்துல் உலமா

இதனடிப்படையில் மௌலானா முஹம்மது அலீ மூங்கீரி (ரஹ்) அவர்களின் பெரும் முயற்சியால் (கி.பி. 18ஆம் நூற்றாண்டு பிற்பகுதி) ஹிஜ்ரீ 1311ல் கான்பூரில், நாட்டின் அனைத்துப் பகுதியிலிருந்தும் பல்வேறு சிந்தனை கொண்ட முக்கிய உலமாக்கள் கூடினார்கள். இந்த அமைப்பிற்கு நத்வத்துல் உலமா (உலமாக்கள் சங்கம்) என்றும் பெயரிடப்பட்டது. அநேகமாக இந்திய வரலாற்றில் அதற்கு முன்பு இவ்வாறு அனைத்து உலமாக்களும் கூடிய சரித்திரம் இல்லை.

வெளிநடப்பு

அனைத்து உலமாக்களும் ஓரணியில் திரண்ட பின் இனி இந்திய முஸ்லிம்களுக்குப் பிரகாசமான எதிர்காலம்தான் என்று உறுதியாக நம்பப்பட்டது. ஆனால், அந்த முதல் கூட்டத்திலேயே ஒரே ஒரு நபர் மட்டும் ஏதோ காரணம் கூறி வெளிநடப்புச் செய்து, கூட்டத்தைப் புறக்கணித்தார். அவர் தான் அஹ்மது ரிளாகான் பரேலவி.

புறக்கணித்தது மட்டுமன்றி நத்வத்துல் உலமாவின் அனைத்து ஆலிம்களையும் காஃபிர் ஃபத்வா கொடுத்து, சொல்ல முடியாத அசிங்கமான வார்த்தைகளால் வசை பாடி நூலுக்கு மேல் நூல் எழுதினார். கிட்டத்தட்ட நூறு நூல்கள் எழுதி பல்லாயிரக்கணக்கான பிரதிகள் அச்சிட்டு விநியோகித்தார்.

ஆங்கிலேயரின் மனசாட்சி

இங்கு நன்கு கவனிக்க வேண்டும். ஷாஹ் இஸ்மாயீல் தெஹ்லவீ அவர்களுக்கும், அவர்களது படைக்கும் வஹ்ஹாபிகள் என்று பொய்ப் பிரச்சாரம் செய்தது ஆங்கிலேயர்கள் தான். அதே பெயரை ரிளாகானும் பயன்படுத்துகின்றார்.

மேலும், இந்தியாவின் அனைத்து உலமாக்களும் சேர்ந்து ஆரம்பித்த நத்வத்துல் உலமா அமைப்பை ரிளாகான் என்ற ஒரு தனிநபர் மட்டும் எதிர்த்து நூல் எழுதவும், அந்த அமைப்பையே இல்லாமல் செய்யவும் முடிந்தது என்றால் ஆங்கிலேயருடன் அஹ்மது ரிளாகான் பரேலவிக்கு ஆங்கிலேயரின் மனசாட்சியாகச் செயல்படும் அளவுக்குத் தொடர்பு இருந்தது என்பதை சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

நத்வத்துல் உலமா அமைப்பு மட்டும் துவங்கிய வீரியத்தோடு செயல்பட்டு இருந்தால், இந்தியாவின் சரித்திரமே மாறி முஸ்லிம்கள் அசைக்க முடியாத சக்தியாக மாறி இருப்பார்கள்.

ஒட்டுமொத்த இந்திய முஸ்லிம்களுக்கும் காலம் காலம் நஷ்டத்தை ஏற்படுத்திய இந்த அஹ்மது ரிளாகான் பரேலவி முஸ்லிம்களின் எதிரி என்பதில் என்ன சந்தேகம் இருக்க முடியும்?

இதே ரிளாகான் பரேலவி தான் ஆங்கிலேயர்களுக்கு எதிராக உலமாக்களும் முஸ்லிம்களும் போரிட்டு வீர மரணம் அடைந்து கொண்டிருந்த வேளையில், இந்தியா தாருஸ்ஸலாம் - இஸ்லாமிய நாடு தான்; முஸ்லிம்கள் ஆங்கிலேயரை எதிர்த்துப் போர் செய்யக் கூடாது என வலியுறுத்தினார். அதற்காக ஆங்கிலேயரைப் புகழ்ந்தும், ஆங்கிலேயருக்கு எதிரான போரைக் கண்டித்தும் பல நூல்களை எழுதி ஆயிரக்கணக்கில் அச்சடித்து விநியோகித்தார்.

ஆங்கிலேயர்களுடன் போரிடுவது நம் கடமை என்று மார்க்கத் தீர்ப்பு கொடுத்த மவ்லானா அப்துல் அஜீஸ் அவர்களையும் அன்னாரின் சீடர்களையும் இவர் காஃபிர் - இறை மறுப்பாளர் என்று ஃபத்வா கொடுத்தார். இப்போது சொல்லுங்கள். பரேலவிய்யத் ஆங்கிலப் பிள்ளையா? இல்லையா?

தனது ரிளாகான் என்ற பெயரை அப்துல் முஸ்தபா என்று மாற்றிக் கொண்டார். இத்தகைய தவறான கோட்பாடுகளையும், சிந்தனையும் கொண்ட இவராலும் இவரது சீட கோடிகளாலும் பரப்பப்பட்டதே பரேலவிய்யத் ரிளாகானிய்யத்.

இவர்களின் கொள்கைகளில் சில...

1. அல்லாஹ்விடம் தேவைகளைக் கேட்பதைப் போல் அவ்லியாக் களிடமும் கேட்கலாம்.

2. இறைநேசர்களின் அடக்கத்தலங்களில் ஸஜ்தா (சிர வணக்கம்) செய்யலாம்.

3. நபி (ஸல்) அவர்கள் எல்லா இடங்களிலும் ஆஜராகின்றார்கள். அனைத்தையும் பார்க்கிறார்கள். அல்லாஹ்வுடன் பொருத்திப் பார்க்கும் அபாயகரமான நம்பிக்கை இது.

4. சில இறைநேசர்களுக்கும் கூட இவ்வாறு ஆஜராகும் தன்மைகள் உள்ளன.

5. மறைவான ஞானம் (இல்முல் கைப்) நபியவர்களுக்கும் வலிமார்களுக்கும் உண்டு.

6. தர்காஹ்க்களில் சந்தனக்கூடு, கொடியேற்றுதல், விளக்கேற்றுதல் போன்றவை நன்மை தரும் செயல்களாகும்.

7. ஷைக் - ஞான குருவின் காலில் விழலாம். ஷைக் பெண்களின் கை பிடித்து பைஅத் - ஒப்பந்தம் செய்யலாம்.

குர்ஆன், ஹதீஸ், இஜ்மா, கியாஸ் அனைத்திற்கும் புறம்பான இது போன்ற பல தவறான கொள்கைகளைப் பரப்பி இந்திய முஸ்லிம்களுக்கு மத்தியில் இன்றளவும் பல பிளவு ஏற்படக் காரணமானவர் தான் அஹ்மது ரிளாகான் பரேலவி என்பதைப் புரிந்து கொள்வோம். ரிளாகான் பரேலவியின் இது போன்ற தீய கொள்கைகளைத் தாங்கி தற்போது தமிழகத்திலும் புதிய அமைப்பு திட்டமிட்டு உருவாக்கப் பட்டுள்ளது. நாம் எச்சரிக்கையாக இருப்போம்.[1]

1 (நன்றி: மனாருல் ஹுதா அக்டோபர் & நவம்பர் 2006)

யார் இந்த வஹ்ஹாபிகள்?

ஒரு முறை சஊதி அரேபியாவைச் சேர்ந்த பிரபல்யமான மார்க்க அறிஞரான டாக்டர் முஹம்மத் ஷுவையிர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் மொரித்தானியா நாட்டிற்கு சென்று கொண்டிருந்தபோது, வழியில் மொரோக்கோ நாட்டில் ஆறு நாட்கள் தங்குவதற்கு ஒரு சந்தர்ப்பத்தை பெற்றார்கள். அங்கு சிறந்த முறையில் ஷேக் ஷுவையிர் அவர்கள் மொரோக்கோ நாட்டின் உலமாக்களால் வரவேற்கப்பட்டு கண்ணியப்படுத்தப்பட்டார்கள்.

அப்பொழுது முக்கியமான உலமாக்கள் மத்தியில் ஸஊதி அரேபியாவைச் சேர்ந்த டாக்டர் அவர்களும் ஏனைய மற்ற மொரோக்கோவின் உலமாக்களும் பேசிக் கொண்டிருக்கும் பொழுது மொரோக்கோ நாட்டைச் சேர்ந்த ஓர் அறிஞர், தங்களின் சஊதி அரசாங்கம் மிகச் சிறந்த பணிகளை செய்து கொண்டிருக்கிறது. முழு உலகத்திலும் முஸ்லிம்களுக்கு மஸ்ஜித்கள் கட்டித் தருவது, இஸ்லாமிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது என்ற பல சேவைகளை செய்கிறார்கள். ஆனால், தங்களுடைய கொள்கையில் "வஹ்ஹாபிய", கொள்கையை மேற்கொள்கிறார்கள். அதை விட்டு விட்டால் சிறந்ததாக இருக்கும் என்ற ஒரு செய்தியை முன் வைக்கிறார்.

அப்பொழுது அங்கு பல மணி நேரங்கள் ஆரோக்கியமான சில உரையாடல்கள் தொடர்கின்றன. அதன் சுருக்கத்தை இங்கு பார்ப்போம் வாருங்கள்!!

டாக்டர் அவர்கள் கேட்கிறார்கள் இந்த அளவுக்கு வெறுப்பைக் கொண்டுள்ள நீங்கள் எதை முன் வைத்து வஹ்ஹாபிகள் வழிகேடர்கள் என்று கூறுகிறீர்கள்? என்று கேட்ட பொழுது, அவர் மொரோக்கோ அரசாங்கத்தின் சார்பாக 13 பகுதிகளில் மாலிகி மத்ஹபை தழுவிய

இஸ்லாமிய மார்க்கச் சட்டங்களின் ஃபத்வா தொகுப்பு ஒன்று இலவசமாக அனைவருக்கும் வெளியிடப்பட்டிருப்பதை பற்றிச் சொன்னார்.

புத்தகத்தின் பெயர் அல்மிஃயாருல் முஃரப் ஃபீ ஃபதாவா அஹ்லில் மஃரிப் (المعيار المعرب على فتاوى اهل المغرب) அஷ்ஷய்க் அஹ்மத் பின் முஹம்மத் அல்வன்ஷரைஸி என்பவர் தொகுத்திருக்கிறார். அதில் இமாம் அலீ லுஹமி ரஹிமஹுல்லாஹ் அவர்களிடத்தில் கேட்கப்பட்டது, வஹ்ஹாபிகள் கட்டிய பள்ளிகளில் தொழுகலாமா?

அதற்கு முஃப்தி லுஹமி அவர்கள் இந்த பிரிவினர் காஃபிரான குழப்பவாதிகள் இவர்களின் பள்ளியை இடிக்க வேண்டும். இந்த சிந்தனை உடையவர்களை உடனே நாட்டிலிருந்து வெளியேற்ற வேண்டும் என்று மார்க்க தீர்ப்பு வழங்கியிருக்கிறார் என்று எழுதப்பட்டிருந்தது.

இதை என்னிடம் அந்த மொரோக்கவைச் சேர்ந்த அறிஞர் ஆதாரம் காட்டி இந்த முஹம்மது பின் அப்துல் வஹ்ஹாப் அந்நஜ்தியின் வஹ்ஹாபிய கொள்கையை தானே உங்கள் ஸஊதி அரேபியாவும் பின்பற்றுகிறது என்று சொன்னார்.

உடனே, அதற்கு டாக்டர் அவர்கள் நிதானமாக பதில் சொன்னார்கள். முஃப்தி லுஹமி கூறியது நூற்றுக்கு நூறு உண்மை அவர் மட்டுமல்ல ஏனைய அந்தலூசிய (ஸ்பெயின்), வட ஆப்பிரிக்க உலமாக்களும் பல காலங்களுக்கு முன்பே இந்த கருத்தை சொல்லி இருக்கிறார்கள் என்று அவர் சொன்ன பொழுது அவர்கள் ஆச்சரியத்துடன் என்னை பார்த்தார்கள்!!!

அவ்வாறு இருக்க ஏன் நீங்களும் உங்கள் அரசாங்கமும் இந்த வழிகெட்ட வஹ்ஹாபிய கொள்கையை ஆதரிக்கிறீர்கள் என்று சொன்ன பொழுது டாக்டர் அவர்கள் அற்புதமான முறையில் பதில் கூற ஆரம்பித்தார்கள்.

நான் மறைக்கப்பட்ட ஒரு முக்கியமான வரலாற்றை உங்களுக்கு சொல்வதற்கு முன்பாக சற்று வருடங்களை நாம் கணக்கிட வேண்டும் என்று சொல்லியவர்களாக டாக்டர் அவர்கள் தொடர்ந்தார்கள்.

இமாம் அப்துல் வஹ்ஹாப் அந்நஜ்தி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் வாழ்ந்து மறைந்த காலம் ஹிஜ்ரீ 1206ஆம் ஆண்டு (கி.பி. 1791). இந்த

ஃபத்வா புத்தகத் தொகுப்பை தொகுத்த அஹ்மத் பின் முஹம்மத் அல்வன்ஷுரைஸி வாழ்ந்த காலம் ஹிஜ்ரீ 914ஆம் ஆண்டு சுமார் 212 வருடங்கள் அல்வன்ஷுரைஸி அவர்களுக்கும் நஜ்தி அவர்களுக்கும் மத்தியில் வித்தியாசம் இருக்கிறது.

இந்த புத்தகத்தில் இடம் பெற்றிருக்கும் முஃப்தி ஸாஹிப் வாழ்ந்து மறைந்த காலம் ஹிஜ்ரீ 478 ஆம் ஆண்டு. முஃப்தி ஸாஹிபுகும் முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப் நஜ்தி அவர்களுக்கும் மத்தியில் நிகழும் கால அளவு 728 வருடங்கள் பழையது. இவ்வளவு நீண்ட வருடங்களை கொண்ட ஆலிம் பெருமக்கள் எவ்வாறு பின்னால் வர இருக்கக்கூடிய நஜ்தி அவர்களை பற்றி வழிகேடர் காஃபிர் என்று ஃபத்வா தர முடியும்?

இந்த கேள்வியை முன் வைத்தவுடன் மொரோக்கோ நாட்டைச் சேர்ந்த அனைத்து அறிஞர்களும் வாய் மூடி போய்விட்டனர்.அதற்குப் பிறகு டாக்டர் ஷுவையிர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் அப்துர் ரஹ்மான் பின் ரஸ்த்தும் என்ற அசலான வஹ்ஹாபிய இயக்கத்தை தோற்றுவித்த அந்த வழிகேடரை பற்றிய செய்திகளை அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடிய இன்றும் நாம் கைவசம் இருக்கும் பல புத்தகங்களில் குறிப்பிடப்பட்டிருப்பதையும் அங்கிருந்த நூலகத்திலிருந்து ஆதாரங்களை காட்டினார்.

ஆல்பம்ஃரட்பில் என்ற பிரான்ஸ் நாட்டைச் சேர்ந்த கீழேத்திய அறிஞர் (ஓரியன்டலிஸ்ட்) "வட ஆப்பிரிக்காவின் இஸ்லாமிய பிரிவினர்கள்" (الفرق الاسلامية في شمال إفريقية) என்ற புத்தகத்தில் அப்துல் வஹ்ஹாப் பின் அப்துர் ரஹ்மான் பின் ருஸ்துமைப் பற்றி குறிப்பிட்டுள்ளார் என்பதையும் கூடுதலாக ஆதாரத்தை காட்டினார். அல்அஃலாமில் இமாம் ஸர்கலியும் இவர் ஹிஜ்ரீ 190இல் மறைந்தார் என்ற தகவலை குறிப்பிடுகிறார்.

ஹிஜ்ரீ 2ஆம் நூற்றாண்டில் வட ஆப்பிரிக்காவில் உள்ள அல்ஜீரியாவில் அன்றைய (மேற்கத்திய மொரோக்கோ) அப்துல் வஹ்ஹாப் பின் அப்துர்ரஹ்மான் பின் ருஸ்தும் என்பவரால் "வஹ்ஹாபிய இபாளிய்யா" (الوهابية الإباضية) இயக்கத்தை தோற்று வைக்கப்பட்டது. இவரின் அத்துமீறிய ஷரீஅத்திற்கு முரண்பட்ட பல நடவடிக்கைகளால் அல்ஜீரியாவில் இருக்கும் அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் உலமா பெருமக்கள் இவரை மக்கள் மன்றத்தில் கடுமையாக விமர்சித்தனர்.

இவருடைய ஆட்சிக்காலத்தில் அல்ஜீரிய மக்களுக்கு ஹஜ் செய்வதை தடை செய்தார், தொழுகையை தடை செய்தார், மன இச்சையை மார்க்கமாக ஆக்கினார்.

இவர் அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅதை எந்த அளவுக்கு வெறுத்தாரோ அதற்கு நிகராக ஷீஆக்களையும் வெறுத்தார். இவர்கள் அலீ ரளியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு எதிராக நஹர்வான் என்ற இடத்தில் போரிட்ட கவாரிஜுகள் ஆவர்.

இவரின் கொள்கை சித்தாந்தத்தின் அடிப்படையில்தான் தற்போதைய ஓமன் அரசாங்கமே இயங்கிக்கொண்டிருக்கிறது. அன்றைய அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் உலமா பெருமக்கள் இவரைப்பற்றி மக்களிடத்திலே வஹ்ஹாபிய வழிதவறிய இயக்கம் என்று கடிந்துரைத்தனர்.

ஹம்பலி மத்ஹப் சார்ந்த இமாம் முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப் ரஹிமஹுல்லாஹ் அவர்களின் சீர்திருத்தங்களை தாங்கிக்கொள்ள முடியாத சமாதி வழிபாடுகளை செய்து கொண்டிருந்த ஷீஆக்கள் சவப்பெட்டிக்குள் அடக்கப்பட்டு புதைக்கப்பட்டிருந்த வஹ்ஹாபிய வரலாறுகளை அவர் மீது சத்தியமான உலமாக்கள் கூறியிருந்த மார்க்க தீர்ப்புகளை கூடுதலாக புனைந்த கட்டுக்கதை தான் இந்த "வஹ்ஹாபிசம்".

ஷீஆக்களின் கொள்கையை இம்மியளவும் பிசகாமல் பின்பற்றும் நமது இந்திய பரேல்விய பித்அத்வாதிகளும் இன்றளவும் ஷிர்க்கை பித்அத்தை எதிர்க்கக்கூடிய உலமாக்களுக்கு சூட்டும் மாலை தான் இந்த "வஹ்ஹாபிசம்".

இமாம் முஹம்மது பின் அப்துல் வஹ்ஹாப் நஜ்தி அவர்களின் வாழ்க்கை வரலாற்றை பற்றி ஒருமிகப் பிரபலமான அறிஞரான இந்தியாவைச் சேர்ந்த அல்லாமா அபுல் ஹஸன் நத்வி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தங்களின் புத்தகமான "இஸ்லாமிய சிந்தனை இன்னும் அழைப்பிதழின் நாயகர்கள்" (Saviours of Islamic sprit) (رجال الفكر و الدعوة) என்ற புத்தகத்திலும் இந்தியாவைச் சேர்ந்த மவ்லானா மன்ஷுர் நுஃமானி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் "دعايات مكثفة ضد الشيخ محمد بن عبد الوهاب النجدي" அஷ்ஷேக் முஹம்மது பின் அப்துல் வஹ்ஹாப் நஜ்தி அவர்களுக்கு எதிரான தவறான பரப்புதல்கள்" என்ற புத்தகத்திலும், "அநீதம் இழைக்கப்பட்ட சீர்திருத்தவாதி",

(المصلح المظلوم) என்று இந்தியாவைச் சேர்ந்த மஸ்ஊத் ஆலம் நத்வி அவர்களும் இமாம் அவர்களைப் பற்றி புகழ்ந்து அவரின் ஏகத்துவச் சீர்திருத்தங்களை பற்றி தெளிவுபடுத்தி இருக்கிறார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

இமாமவர்கள் ஏகத்துவ கொள்கையை அன்றைய அரபு தீபகற்பத்தில் வேரூன்றினார்கள் இணைவைத்தல், சமாதி வழிபாடு போன்றவற்றை அறவே களைந்தெறிந்தார்கள் என்ற காழ்ப்புணர்ச்சியில் யாரெல்லாம் அனாச்சாரங்களையும் இணைவைத்தல்களையும் ஏகத்துவத்தை உரக்கச் சொல்கிறார்களோ அவர்களுக்கு "வஹ்ஹாபிகள் " என்ற பெயர் இந்த ஷீஆக்களால் வைக்கப்பட்டு இன்றைய வழிகெட்ட பரேல்விகளால் மெருகூட்டப்பட்டது என்பதுதான் கசப்பான உண்மை.

ஸஊதி அரேபியாவில் பிறந்த டாக்டர் முஹம்மத் ஷுவையிர் ஹஃபிழஹுல்லாஹ் அவர்கள் تصحيح خطأ التاريخي حول الوهابية "வஹ்ஹாபிகள் சம்பந்தமாக வரலாற்றில் ஏற்பட்ட தவறின் திருத்தம்" என்ற புத்தகம் 112 பக்கங்கள் கொண்டது இதில் இந்த சம்பவத்தை குறிப்பிடுகிறார்.

யார் இந்த வஹ்ஹாபிகள்?

தொடர் 2

நமது முந்தைய தொடரில் வஹாபிகள் என்ற சொல்லாடலுக்கு உரித்தானவர்கள் யார்? இந்த வார்த்தையின் பின்னணி என்ன? என்ற பல தகவல்களை புத்தக நூல்களின் ஆதாரத்துடன் எழுதி இருந்தோம்,

ஆனால் இந்த வரலாற்று குறிப்புகளை ஏற்க மறுத்தது மட்டுமில்லாமல் நாம் எழுதிய அந்த வரிகளை அறவே வாசிக்கவில்லை என்பதுதான் உண்மை, அவர்களிடத்தில் இருந்த இமாம் முஹம்மது பின் அப்துல் வஹ்ஹாப் நஜ்தி ரஹிமஹுல்லாஹ் அவர்களுக்கு எதிரான குற்றச் சாட்டுகளும் தவறான பரப்புரைகளும் தான் முக்கியமான காரணங்களாக காணப்பட்டன.

இந்திய அறிஞர்கள் குறிப்பாக பாகிஸ்தான் பங்களாதேஷ் இலங்கை போன்ற நாடுகளிலும் 18 ஆம் நூற்றாண்டிலிருந்து நாம் வரலாற்று பக்கங்களை பார்த்தால் பல அறிஞர்கள் வஹ்ஹாபிய இயக்கம் வழிகேடான ஒன்று அதை தோற்றுவித்தவர் முஹம்மது பின் அப்துல் வஹ்ஹாப் நஜ்தி, அவர் ஒரு வழிகேடர் என்று பல வரலாற்று குறிப்புகளை நமக்கு தருகிறார்கள்.

அல்லாஹ்வின் அருளால் எப்பொழுதுமே மாற்றுக் கருத்து உடையவர்களின் புத்தகங்களை படிப்பதும் ஆய்வுக்கு உட்படுத்துவதும் வளமையாக கொண்டிருக்கிறோம்,

மாற்றுக் கருத்து உடையவர்கள் கூறிய தகவலின் அடிப்படையில் நாம் பார்க்கும் பொழுது 18 ஆம் நூற்றாண்டின் இறுதியில் வாழ்ந்த அஷ்ஷேக் முஹம்மது பின் அப்துல் வஹ்ஹாப் அத்தமீமி - (மரணம் -1792) ரஹிமஹுல்லாஹ் அவர்களின் மார்க்க சேவைகளை தவறாக புரிந்து கொண்டதன் வெளிப்பாடுதான் என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடிகிறது.

அதற்கு முக்கியமாக அமைந்த விடயம் ஹிஜாஸில் உஸ்மானிய பேரரசின் ஆட்சிக்கு உட்பட்ட பகுதிகளாக இருந்த மக்கா மதினாவில் அன்று உஸ்மானிர்கள் ஆட்சி வீழ்ச்சி அடையும் தருணத்தில் முதலாம் சவுதி அரேபியா (இமாம் முஹம்மத் பின் சவூத்) காலகட்டத்தில் மக்கமா நகரில் அன்று மிகவும் சிறப்பான முறையில் ஃபத்துவாக்களை வழங்கிக் கொண்டிருந்த ஷாபிஃ மத்ஹபின் தலைசிறந்த அறிஞராக கருதப்பட்ட அஷ்ஷேக் அஹ்மத் ஜெயினி தஹ்லான்

அவர்கள் கடுமையாக இமாம் நஜ்தி அவர்களை விமர்சித்தும் எழுதியும் வந்தார்கள்.

காரணம் இமாம் நஜ்தி அவர்கள் இணை கற்பித்தல் பித்அத்தான வழிமுறைகளுக்கும் மூடநம்பிக்கைகளுக்கும் எதிரானவர்களாக இருந்ததால் , மண்ணறைகளை சந்திப்பதில் இஸ்லாம் வகுத்திருக்கும் முறைகளை புறக்கணித்து வணக்க ஸ்தலங்களாக மாற்றி அமைத்திருந்த அந்த காலகட்டத்தில் கடுமையாக எதிர்த்து வந்தார்கள்.

அஷ்ஷேக் தஹ்லான் அவர்கள் இமாம் நஜ்திக்கு எதிராக இரண்டு புத்தகங்கள் எழுதினார்கள் فتنة الوهابيين பிஃத்னதுல் வஹ்ஹாபியீன், الدرر السنية في الرد على الوهابية அத்துறர் அஸ்ஸனிய்யா பிஃர் ரத்தி அலல் வஹ்ஹாபிய்யா.

இவரின் இரண்டு மாணவர்களான அஷ்ஷேக் அலவி அஹ்மத் அஸ்ஸக்காப்ஃ, அஷ்ஷேக் முஹம்மது நவவி ஜாவி இருவரும் தனது உஸ்தாதின் வழிகாட்டுதலின் அடிப்படையில் இந்தோனேசியா வரை எங்கெல்லாம் ஷாபி மத்ஹப் பரந்து விரிந்து இருக்கிறதோ அங்கெல்லாம் வஹாபியர்கள் வழிகேடர்கள் என்ற பிரச்சாரத்தை செய்து வந்தார்கள்.

இது அரபு உலகத்திலும் இஸ்லாமிய உலகத்திலும் மிகப்பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது.

ஆக அன்று உலமாக்கள் முஹம்மது பின் அப்துல் வஹ்ஹாப் நஜ்தி அவர்களைப் பற்றி அதிகமாக தவறாக விமர்சனம் செய்து எழுதிய காரணத்தினால் இந்தியாவைச் சேர்ந்த சிறந்த உலமாக்கள் கூட எழுதப்பட்ட விஷயங்களை வைத்து இமாம் நஜீதி அவர்களை கடுமையாக விமர்சித்து எதிர்த்தும் வந்தார்கள்.

அதற்கு ஏற்றவாறு இந்தியாவில் பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த அனாச்சாரங்கள் பித்அத்துக்களை முழு இந்தியாவிலும் பரப்பிய சிறப்பிற்குரிய அறிஞர் அஹ்மத் ரிழா கான் பரேல்வி ஹுஸாமுல்

ஹரமைன் (حسام الحرمين) என்ற புத்தகத்தை எழுதி அன்று இந்தியாவில் மூடநம்பிக்கையில் இணை கற்பித்தல் போன்ற செயல்களை கடுமையாக விமர்சனம் செய்து எதிர்த்து வந்த தேவ்பந்து (தாருல் உலூம் தேவ்பந்த் - யூபி) வஹாபிகள் இவர்களும் அந்த காலத்தில் இருந்த அஹ்லுல் ஹதீஸ், காதியானிகளும் ஜிந்தீகுகள், மூர்த்தத்துகளான மதம் மாறியவர்கள், எனவே இவர்களுக்கு மரண தண்டனை தர வேண்டும் என்று பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் கோரிக்கை வைத்தார்.

இவர் எழுதிய இந்த புத்தகத்திற்கு மறுப்பாக அன்று தேவ்பந்து இஸ்லாமிய பல்கலைக்கழகத்தின் சிறந்த அறிஞராக விளங்கிய இமாம் ஹுசைன் மதனி ரஹிமஹுல்லாஹ் (மதீனா முனவ்வராவில் தங்கியிருந்தவர்) அஷ்ஷிஹாபு அஸ்ஸாகிபு (الشهاب الثاقب) என்ற புத்தகத்தில் தேவ்பந்து அறிஞர்களுக்கும் வஹாபிய இயக்கத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை, குறிப்பாக முஹம்மது பின் அப்துல் வஹ்ஹாப் நஜ்தி அவர்களுடன் எந்த தொடர்பும் இல்லை என்று விளக்கம் கொடுத்திருந்தார்கள்.

இது கூடுதலாக வட இந்தியாவில் சிறந்த உலமாக்களாக அன்று சேவை புரிந்த பலர் இமாம் நஜ்தியை பற்றி தவறான கண்ணோட்டத்தை கொள்ள வைத்தது.

அதுமட்டுமில்லாமல் ஸஹீஹுல் புகாரி கிரந்தத்திற்கு விளக்க உரையாக எழுதப்பட்ட பைஃழுல் பாரி (فيض الباري) இமாம் அன்வர்ஷா காஷ்மீரி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் பாடம் நடத்தியதில் எழுதப்பட்ட நான்கு வாழியங்கள் கொண்ட புத்தகம், அதில் இமாம் அவர்கள் புகாரி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கிதாபுல் இல்மி என்ற பகுதியில் அறிஞர்கள் குறிப்பிட்ட நாட்களில் பயான் செய்வதற்கு நேரங்களை ஒதுக்குவது என்ற ஒரு தலைப்பில், இப்னு மஸ்ஊத் ரலியல்லாஹு அன்ஹு ஒவ்வொரு வியாழன் என்றும் குறிப்பாக உபதேசம் செய்து வந்தார்கள் என்று குறிப்பிடும் பொழுது இமாம் கஷ்மீரி குறிப்பிட்ட நாட்களில் உபதேசம் செய்வதை அனாச்சாரமாக பித்அத்தாக நான் பார்க்கவில்லை என்ற கருத்தை மேல் கூறப்பட்ட நபித்தோழரின் செயலின் அடிப்படையில் முன் வைக்கிறார்கள்.

அதன் ஓரக் குறிப்பில் பித்அதுகளின் வகைகள் என்ன? அதன் அபாயம் இறை நம்பிக்கையாளர்களுக்கு எந்த அளவு இருக்கும் என்ற கருத்தையும் தெளிவுபடுத்துகிறார்கள்.

அப்பொழுது அவர்கள் காலத்தில் மிகவும் பிரபலயமாக கருதப்பட்ட இரண்டு முக்கியமான அறிஞர்களை பித்அத்திற்கு எதிராக களம் கண்டவர்களை அங்கு குறிப்பிடுகிறார்கள்.

முதலாமவர் தக்வியதுல் ஈமான் என்ற புத்தகத்தை எழுதிய அஷ்ஷேக் ஷாஹ் இஸ்மாயீல் ஷஹீது ரஹிமஹுல்லாஹ்,

இந்தியாவிற்கு ஹதீஸ் கலையை முறையாக அறிமுகம் செய்தவரான இமாம் ஷாஹ் வலியுல்லாஹ் தஹ்லவி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் பேர ப்பிள்ளை.

பாட்டனாரை போன்று மார்க்கத்தை ஆழமாக விளங்கி அனாச்சாரங்கள் பித்அத்துகள் போன்ற மூடநம்பிக்கைகளை கடமையாகச் சாடினார் எழுதினார்,

இந்த புத்தகத்தை இமாம் கஷ்மீரி தனது புகாரி பாடத்தில் கூறும் பொழுது சற்று அதிகமாகவே கடும்போக்கில் இமாம் இஸ்மாயில் தங்களது நூலில் பித்அத்தை கண்டித்திருக்கிறார்கள்.

இமாம் அவர்கள் இன்னொரு புத்தகம் பித்அத் ஷிர்கை கண்டித்து எழுதப்பட்டிருக்கிறது

"யீழாஹுல் அல்ஹக்கி அஸ்ஸரீஹி பீ அஹ்காமி அல்மய்யிதி வழ் ழரீஹ்" "إيضاح الحق الصريح في أحكام الميت والضريح" மண்ணறைகளில் கடைபிடிக்கப்பட்டு வந்த அனாச்சாரங்கள் ஷிர்குகளை கண்டிருக்கிறார்கள் என்று இமாம் இஸ்மாயில் ஷஹீத் ரஹிமஹுல்லாஹ் அவர்களை சிலாகித்து கூறி அதே காலகட்டத்தில் வாழ்ந்த அரபு நாட்டில் மிகவும் பிரபலியமாக பேசப்பட்டு வந்த இமாம் முஹம்மது பின் அப்துல் வஹ்ஹாப் நஜ்தி ரஹிமஹுல்லாஹ் அவர்களைப் பற்றியும் குறிப்பிடுகிறார்கள்.

பின்பு ஓரக்குறிப்பில் பயன்பாடு என்ற ஒரு தலைப்பில் நஜ்தி ஒரு மடையர் பலரை இறை மறுப்பாளராக மாற்றியவர், காபிர் ஆக்கியவர் என்று பைழுல் பாரி புகாரி கிரந்தத்தின் விளக்க உரையில் எழுதப்பட்டிருக்கிறது.

இமாம் நஜ்தி பித்அதை கண்டித்தார்கள் என்று இமாம் கஷ்மீரி தனது பாடத்தில் கூறிய விஷயங்களை மாற்றுக்கருத்துடையவர்கள் விட்டுவிட்டு இந்த வரிகளை மட்டும் பிடித்துக் கொண்டார்கள்.

எனவே முந்தைய தேவ்பந்திய உலமாக்களில் சிலர் வஹ்ஹாபியத்தை எதிர்த்து விமர்சனம் செய்து வந்தார்கள்.

கூடுதலாக தேவ்பந்து இஸ்லாமிய பல்கலைக்கழகத்தின் பேராசிரியராக இருந்த அல்லாமா கலீல் அஹமத் ஸஹரான்பூரி ரஹிமஹுல்லாஹ் அவர்களும் இமாம் நஜ்தி அவர்களை பற்றி விமர்சனம் செய்திருக்கிறார்கள்.

யார் இந்த வஹ்ஹாபிகள்?

தொடர் 3

இந்த விமர்சனங்களுக்கு அடிப்படை காரணம் என்னவென்றால் இமாம் நஜதியுடைய சில மாணவர்கள் அந்த காலத்தில் எழுதப்பட்ட சிறந்த சில புத்தகங்களை எரித்து விட்டார்கள் சில குழப்பங்களை செய்து விட்டார்கள் கூடுதலாக மக்கா முக்கர்ரமாவில் அஷ்ஷேக் அஹ்மத் ஜைனி தஹ்லான் கடும் விமர்சனம் செய்து வந்ததால் எமன் தேசத்து சில ஹாஜிகளை அவர்கள் அவமதிப்பு செய்ததால் எமன் தேசத்தின் அன்றைய மிகப் பெரிய அறிஞரான ஷவ்கானி ரஹிமஹுல்லாஹ் சில புத்தகங்களில் இமாம் நஜ்தியை பற்றி தனது பிரபலமான புத்தகமான அல்பத்ருத் தாலிஃ (البدر الطالع الشوكاني) ல் விமர்சனம் செய்து விடுகிறார்கள்.

இந்த செய்திகள் முழு உலகிலும் குறிப்பாக இந்தியாவில் பரவத் தொடங்கியதில் தலை சிறந்த உலமாக்களும் இமாம் நஜ்தியை பற்றி ஆய்வு செய்யாமல் விமர்சனம் செய்ய தொடங்கி விட்டார்கள் இதுவே பிற்காலத்தில் முஅத்தா மாலிக் ஹதீஸ் கிரந்தத்திற்கு விரிவுரை எழுதிய இந்தியாவின் மிகப்பெரிய ஹதீஸ் கலை வல்லுனர் இமாம் ஸகரிய்யா ரஹிமஹுல்லாஹ் அல்லாமா அன்வர்ஷா கஷ்மீரி ரஹிமஹுல்லாஹ் அவர்களிடம் கல்வி கற்ற 1927 ல் தாருல் உலூம் தேவ் பந்தில் பட்டம் பெற்ற அறிஞர் முஹம்மது மன்ஸுர் நுஃமானி ரஹிமஹுல்லாஹ் அவர்களை உருது மொழியில் இமாம் இப்னு அப்துல் வஹ்ஹாப் நஜ்தி தொடர்பாக சரியான கருத்துக்களை முறையாக கோர்வை செய்து அவர்கள் மீது படிந்திருக்கும் கரைகளை நீக்கி முறையான ஆய்வு நூலை எழுத கட்டளையிட்டார்கள்.

முன்னாள் தாருல் உலூம் தேவ்பந்த் இஸ்லாமிய பல்கலைக்கழகத்தின் பேராசிரியரான அல்லாமா காரீ தய்யுப் ஸாஹிப் அவர்களும் இதை புத்தகமாக அச்சிடும்படி அறிஞர் நுஃமாணி அவர்களுக்கு

கூறியிருக்கிறார்கள் சுமார் 50 வருடங்களுக்கு முன்பாகவே இந்த புத்தகம் அரபு மொழியிலும் மொழியாக்கம் செய்யப்பட்டு இருக்கிறது.

அத்திஆயா முகஸ்ஸபாஃ லித்த முஹம்மது பின் அப்துல் வஹ்ஹாப் நஜ்தி

الدعاية المكثفة ضد محمد بن عبد الوهاب النجدي

முஹம்மது பின் அப்துல் வஹ்ஹாப் நஜ்திக்கு எதிரான பரப்புரைகள் என்ற தலைப்பில் புத்தகமாக வெளிவந்திருக்கிறது.

அதே காலகட்டத்தில் இமாம் முஹம்மது பின் அப்துல் வஹ்ஹாப் நஜ்தி அவர்களைப் பற்றி சிலாகித்து உண்மையான அவர்களின் மார்க்க பணிகளை இந்தியாவைச் சேர்ந்த தலைசிறந்த அறிஞரான அஷ்ஷேக் மஸ்ஊத் ஆலம் நத்வி ரஹிமஹுல்லாஹ்

அல்முஸ்லிஹ் அல்மழ் லூம் - المصلح المظلوم" அநீதம் இழைக்கப்பட்ட சீர்திருத்தவாதி" என்ற தலைப்பில் நேர்த்தியான புத்தகத்தையும் எழுதி இருக்கிறார்கள்.

பதினெட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த ஹதீஸ் கலை வல்லுனர் இமாம் நவாப் சித்தீக் ஹஸன் கான் அல்கின்னூஜி ரஹிமஹுல்லாஹ் தங்களது புத்தகமாகிய இத்திஹாபுஃ அன்நுபலா - اتحاف النبلاء என்ற புத்தகத்தில் இமாம் நஜ்தியை ஸ்லாஹித்து அவர்களின் உண்மையான சேவைகளை எடுத்து கூறி இருக்கிறார்கள்.

காதால் கேட்பது பொய் தீர விசாரிப்பதே மெய் என்ற அடிப்படையான ஒரு மூல மந்திரத்தை நாம் இந்த அறிஞர்களின் புத்தகங்களின் முலம் புரிய முடிகிறது.

அஷ்ஷேக் முஹம்மது மன்சூர் நுஃமானி அவர்கள் தங்களது புத்தகத்தில் கூடுதலான ஒரு சுவாரசியமான விஷயத்தை குறிப்பிடுகிறார்கள்.

பைழுல் பாரி என்ற புகாரி கிரந்தத்தின் விளக்க உரை இமாம் கஷ்மீரி ரஹிமஹுல்லாஹ் அவர்களினால் எழுதப்பட்ட புத்தகமல்ல அவர்களின் வகுப்பில் கலந்து கொண்ட அவர்களின் மாணவரான அறிஞர் பதுருல் ஆலம் மீரட்டி மதனி அவர்கள் ஒன்று சேர்த்த கோர்வை.

இமாம் கஷ்மீரி அவர்கள் மதினாவில் தங்கி இருக்கும் பொழுது இந்த புத்தகத்தை சரி செய்யுமாறும் பார்வையிடும் மாறும் படதடவைகள்

முயற்சி செய்திருக்கிறார்கள், ஆனால் இந்த புத்தகம் அவர்களால் சரிபார்க்கப்படவில்லை.

எனவே இமாம் நஜ்தி அவர்கள் தொடர்பான விமர்சனங்கள் இமாம் கஷ்மீரியின் வார்த்தைகள் கிடையாது. காரணம் ஷெய்குல் ஹிந்த் என்று சொல்லப்படக்கூடிய முப்தி மஹ்மூதுல் ஹஸன், ரஷீத் அஹமத் கங்கோஹி, அஷ்ரப்ஃ அலி தானவி ரஹிமஹுமுல்லாஹ் போன்ற அறிஞர்கள் இமாம் இஸ்மாயில் ஷஹீத் அவர்களின் புத்தகமான தக்வியதுல் ஈமானை பாராட்டி இருக்கிறார்கள் அதை மக்களிடம் படிக்குமாறு ஆர்வப்படுத்தி இருக்கிறார்கள்.

அதற்கு இணையாகவே இணை வைப்பையும் அனாச்சாரத்தையும் எதிர்த்து எழுதிய இமாம் நஜ்தி அவர்களை சாடி இருப்பது இமாம் கஷ்மீரி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் அந்தஸ்துக்கு தகுந்த ஒன்று அல்ல, இதை அவர்கள் செய்திருக்கவும் மாட்டார்கள் என்று பைழுல் பாரி என்ற புகாரி கிரந்தத்தின் விரிவுரை புத்தகத்தின் முன்னுரையில் அன்றைய காலத்து மிகப்பெரிய அறிஞரான பாகிஸ்தானை சேர்ந்த யூஸுப் பின்னூரி ரஹிமஹுல்லாஹ் கூறுகிறார்கள்.

தமிழில் கூட மிகத் தெளிவாக பல வருடங்களுக்கு முன்பு வெளியான இமாம் முஹம்மது பின் அப்துல் வஹ்ஹாப் நஜ்தி ரஹிமஹுல்லாஹ் பற்றிய மிகத் தெளிவான வாழ்க்கை வரலாறு நூலாக பிடிஎஃப் இல் இருக்கிறது,

எனவே இன்றைய சமூகத்தின் நிகழும் மிகப்பெரிய துன்பம் என்னவென்றால் புத்தக வாசிப்பு என்பது அறவே குறைந்து போய்விட்டது, தீர விசாரிக்காமல் ஆய்வுகள் செய்யாமல் தலை சிறந்த அறிஞர் பெருமக்களை விமர்சிப்பதும் இழிவுபடுத்துவதும் சர்வ சாதாரணமாக மாறிவிட்டது.

சவுதி அரேபியாவின் மிகப் பிரபலமான அறிஞரான அஷ்ஷேக் ஸாலிஹ் ஸிந்தி ஹஃபிழஹுல்லாஹ் அவர்கள் ஒரு உரையில் இவ்வாறு குறிப்பிட்டார்கள் இந்தியாவில் பித்அத்தையும் அனாச்சாரத்தையும் ஊக்குவிக்கும் ஒரு அறிஞர் இமாம் நஜ்தியை பற்றி கடுமையாக விமர்சித்து வந்தார்களாம்.

ஒரு நாள் அகீதா இஸ்லாமிய கொள்கை என்ற தலைப்பில் எழுதப்பட்ட ஒரு சிறு நூலை அந்த அறிஞரிடம் கொடுத்து வாசிக்க சொன்னார்களாம், அவரது நூலை படித்து விட்டு எனது வாழ்நாளில் இவ்வளவு தெளிவான ஆதாரங்களுடன் எழுதப்பட்ட ஒரு புத்தகத்தை நான் பார்க்கவில்லை என்று

சிலாகித்துக் கூறினாராம் இந்த புத்தகத்தை கொடுத்தவர்கள் அந்த புத்தகத்தின் அட்டை முதல் பக்கத்தை அகற்றிவிட்டு கொடுத்திருக்கிறார்கள் பின்பு சொன்னார்களாம் காலம் முழுவதும் நீங்கள் எந்த அறிஞரை பற்றி விமர்சித்து வந்தீர்களோ அவர் எழுதிய கிதாபுத் தவ்ஹீத் (ஏகத்துவக் கொள்கை) என்ற புத்தகத்தை தான் நீங்கள் இப்பொழுது புகழ்ந்து சொல்கிறீர்கள் என்று சொன்னார்களாம்.

சமீபமாக ஷீயாக்களில் மிகவும் உயரிய பட்டத்தை பெற்ற அறிஞர் ஹுஸைன் அல்முஅய்யித் (ஈராக் நாட்டைச் சேர்ந்த அறிஞர்) பல புத்தகங்கள் அரபு மொழியில் எழுதி இருக்கிறார் ,ஸலஃபி அறிஞர் எழுதிய ஒரு புத்தகத்தை தாருங்கள் என்று அதற்கு மறுப்பு தருகிறேன் என்று ஒரு புத்தகத்தை கேட்டிருக்கிறார்.

அஷ்ஷேக் நாஸிர் பின் அப்துல்லாஹ் அல்கிபாஃரி ஹஃபிழஹுல்லாஹ் (மக்கா உம்முல் குறா இஸ்லாமிய பல்கலைக்கழகத்தில் பேராசிரியர்) அவர்களின் மிகப் பிரபலியமான ஷீஆக்களின் கொள்கைகளை விமர்சித்து எழுதப்பட்ட புத்தகமான

உஸுல் மத்ஹபிஷ் ஷீஆ இமாமிய்யா அல்இஸ்னை அஷரிய்யா اصول مذهب الشيعة الإمامية الاثني عشرية - என்ற புத்தகத்தை கொடுத்திருக்கிறார்கள் இந்த புத்தகத்தை முழுவதுமாக படித்த ஷீஆக்களின் முன்னோடி அறிஞர் என்று சொல்லப்படக்கூடிய ஹுஸைன் அல்முஅய்யிது தவ்பா செய்து அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கைக்கு மாறிவிட்டார் என்று ஷியாக்களுக்கு மிகவும் தலைவலியாகவும் சிம்ம சொப்பனமாகவும் கருதப்படுகிறார்.

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا مَنْ يَّرْتَدَّ مِنْكُمْ عَنْ دِيْنِه فَسَوْفَ يَاْتِى اللّٰهُ بِقَوْمٍ يُّحِبُّهُمْ وَيُحِبُّوْنَه اَذِلَّةٍ عَلَى الْمُؤْمِنِيْنَ اَعِزَّةٍ عَلَى الْكٰفِرِيْنَ يُجَاهِدُوْنَ فِىْ سَبِيْلِ اللّٰهِ وَلَا يَخَافُوْنَ لَوْمَةَ لَاۤئِمٍ ذٰ لِكَ فَضْلُ اللّٰهِ يُؤْتِيْهِ مَنْ يَّشَآءُ وَاللّٰهُ وَاسِعٌ عَلِيْمٌ

இறைநம்பிக்கை கொண்டவர்களே! உங்களில் எவரேனும் தனது தீனை நெறியை விட்டுத் திரும்பி விடுவாராயின் (திரும்பிப் போகட்டும்.) அல்லாஹ் வேறொரு சமுதாயத்தைத் தோற்றுவிப்பான். (அவர்கள் எத்தகையவர்களாய் இருப்பார்களெனில்) அல்லாஹ் அவர்களை நேசிப்பான்; அவர்களும் அல்லாஹ்வை நேசிப்பார்கள். அவர்கள் இறைநம்பிக்கை யாளர்களிடம் மென்மையாகவும், நிராகரிப்போரிடம் கடுமையாகவும் இருப்பார்கள்; அல்லாஹ்வின் பாதையில் கடும் முயற்சிகளை மேற்

கொள்வார்கள்; நிந்திப்பவர்களின் எந்த நிந்தனைக்கும் அவர்கள் அஞ்ச மாட்டார்கள். இது அல்லாஹ்வின் அருளாகும். தான் நாடுகின்றவர்களுக்கு இதனை அவன் அருளுகின்றான். மேலும், அல்லாஹ் பரந்த வளங்களின் உரிமையாளனாகவும் அனைத்தையும் அறிந்தவனாகவும் இருக்கின்றான்.

(அல்குர்ஆன் : 5:54)

استغاثة
இஸ்திகாஸா

அல்லாஹ் அல்லாதவர்களிடம் (மரணித்த சாலிஹீன்களிடம்) பிரார்த்தனை செய்யலாம், உதவிகள் கேட்கலாம் என்பது இவர்களின் வழிகெட்ட கொள்கைகளில் உள்ளவையாகும்.

இந்த வழிகேட்டை நியாயப்படுத்தி நாங்கள் பரேல்விகளும் அல்லர். அவர்களின் தலைவரான அஹ்மத் ரிழா கான் பரேல்வியின் சிந்தனை வாதிகளும் அல்லர். நாங்கள் சங்கையான இமாம்களை ஏற்றுக்கொண்ட சத்திய சஹாபாக்களின் பாதையில் செல்பவர்கள் என்று கூறி கீழ்காணும் ஒரு சம்பவத்தை முன்வைப்பார்கள்.

இந்த சம்பவத்தின் ஊடாக அல்லாஹ் அல்லாதவர்களிடம் நாம் உதவி கேட்பது தவறில்லை என்ற வழிகேடான வாதத்தை நியாயப்படுத்துகிறார்கள். இந்த சம்பவம் (اثر) முஸன்னஃப் இப்னு அபீ ஷைபா என்ற ஹதீஸ் கிரந்தத்தில் பதியப்பட்டு இருக்கிறது.

அதாவது ஸய்யிதுனா உமர் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் காலத்தில் பஞ்சம் தொடர்ந்து கொண்டிருந்தது. அப்போது ஒருவர் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் மண்ணறைக்கு வந்து "அல்லாஹ்வின் தூதரே எங்களுக்காக மழை பொழிய செய்யுமாறு வேண்டுங்கள்! மக்கள் எல்லாம் அழிந்து கொண்டிருக்கிறார்கள்" என்று கூற அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் இவரின் கனவில் வந்து "உமருக்கு ஸலாம் சொல்லுங்கள் உங்களுக்கு மழை பெய்யும்" என்று கூறினார்கள்.

இந்த சம்பவத்தை ஹாஃபிழ் இப்னு ஹஜர் அஸ்கலானி அவர்கள் ஸஹீஹானது, அங்கீகாரமிக்கது என்று எழுதியிருப்பதாக பரேல்விகள் கூறியிருக்கும் அனைத்து ஆதாரங்களும் பிழையானது.

هذا الأثر رواه ابن أبي شيبة في "مصنفه" (6/ 653) والبخاري في "التاريخ الكبير" (403/7) - مختصرا - والبيهقي في "الدلائل" (74/7) ، وابن عساكر في "تاريخه" (543/44)

من طريق أَبِي صَالِحٍ ، عَنْ مَالِكِ الدَّارِ، قَالَ: أَصَابَ النَّاسَ قَحْطٌ فِي زَمَنِ عُمَرَ ، فَجَاءَ رَجُلٌ إِلَى قَبْرِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ فَقَالَ : يَا رَسُولَ اللهِ ، اسْتَسْقِ لِأُمَّتِكَ فَإِنَّهُمْ قَدْ هَلَكُوا، فَأَتَى الرَّجُلَ فِي الْمَنَامِ فَقِيلَ لَهُ : "ائْتِ عُمَرَ فَأَقْرِئْهُ السَّلَامَ، وَأَخْبِرْهُ أَنَّكُمْ مسْقِيُّونَ وَقُلْ لَهُ : عَلَيْكَ الْكَيْسُ ، عَلَيْكَ الْكَيْسُ"، فَأَتَى عُمَرَ فَأَخْبَرَهُ فَبَكَى عُمَرُ ثُمَّ قَالَ : يَا رَبِّ لَا آلُو إِلَّا مَا عَجَزْتُ عَنْهُ.

இந்த சம்பவத்தை பற்றி இப்னு ஹஜர் ரஹிமஹுல்லாஹ் அபூ ஸாலிஹ் ஸம்மான் என்பவர் வரைதான் சங்கிலித்தொடர் அங்கீகாரம் மிக்கது என்று கூறுகிறாரே தவிர கூறப்பட்டிருக்கும் அனைத்து சங்கிலி தொடரும் சரியானது என்று சொல்லவில்லை என்பதாக ஹதீஸ்கலை வல்லுனரான இமாம் தஹபி "அஸ்ஸியரு" என்ற புத்தகத்தில் இரண்டாம் பாகம் 412வது பக்கத்தில் தெளிவுபடுத்தி இருக்கிறார்.

அதாவது இப்னு ஹஜர் அவர்கள் இந்த சம்பவம் ஸஹீஹானது என்றோ பலவீனமானது என்றோ இங்கு குறிப்பிடவில்லை. மாறாக சங்கிலித் தொடரை மட்டும்தான் சொல்லி இருக்கிறார். அதனால்தான் இந்த அறிவிப்பை அங்கீகாரம் மிக்கதாக இப்னு அபீ ஷைபா கூறுகிறார்கள் என்று கூறப்படவில்லை என்பது கவனிக்க வேண்டிய ஒன்று.

அந்த சம்பவத்தில் ஒரு மனிதர் அல்லாஹ்வின் தூதர் அவர்களின் கப்ருக்கு வருகிறார் என்று மூடலாக தெளிவில்லாமல் வந்திருப்பதும், இதில் "நகாரத்" இருக்கிறது என்றும், இந்த அறிவிப்பாளர் தொடர்பாக எந்த ஒரு அறிவிப்பும் கூறப்பட்டால் அதை ஏற்றுக் கொள்ளப்படுவதற்கு தகுதி அற்றது என்றும் பல அறிஞர்கள் கருத்துக்களை முன்வைக்கிறார்கள்.

இவ்வாறிருக்க எவ்வாறு இந்த பரேல்விகள் இமாம் இப்னு

ஹஜர் அஸ்கலானி அவர்கள் சொல்லாத கருத்தை சொன்னதாக சொல்கிறார்கள்? இதுவே அவர்களின் நீதமின்மையை ஆய்வில் காண்பிக்கிறது.

أما قول الحافظ رحمه الله في " الفتح " (2/ 594) : "رواه ابن أَبِي شَيْبَةَ بِإِسْنَادٍ صَحِيحٍ مِنْ رِوَايَةِ أَبِي صَالِحٍ السَّمَّانِ عَنْ مَالِكٍ الدَّارِ "

فمقصوده أنه صحيح الإسناد إلى أبي صالح فقط ، ولم يحكم على جميع الإسناد بأنه صحيح ، ولذلك لم يقل : رواه ابن أبي شيبة بإسناد صحيح ، كما هي العادة في تصحيح الأخبار .

وأيضاً : قول الذهبي رحمه الله في " السير" (214/2) : " وقال الأعمش عن أبي صالح عن مالك الدار ... فإنه لم يحكم بصحته ولا بضعفه وإنما ذكر الإسناد فقط .

இந்த சங்கிலித் தொடரில் இடம் பெற்றிருக்கும் மாலிகுத்தார் என்பவர் ஹதீஸ் கலை வல்லுனர்களால் அறியப்படாதவராக கருதப்படுகிறார் என்று (جرح وتعديل) ஜரஹ் வ தஃதீல் என்ற புத்தகத்தில் கூறப்படுகிறது.

அல்ஹாஃபிழ் அல்முன்திரி தர்ஹீப் என்ற புத்தகத்திலும் **(الترغيب (2/14– 24),** *இமாம் ஹைதமி அவர்கள் மஜ்மஃஉ ஜவாயிதிலும்* **(مجمع الزوائد (3/521)** *கூறுகிறார்கள்.*

وهذا علم دقيق لا يعرفه إلا من مارس هذه الصناعة، ويؤيد ما ذهبت إليه أن الحافظ المنذري أورد في "الترغيب" (2/14–24) قصة أخرى من رواية مالك الدار عن عمر ، ثم قال: "رواه الطبراني في "الكبير"، ورواته إلى مالك الدار ثقات مشهورون، ومالك الدار لا أعرفه ".

وكذا قال الهيثمي في "مجمع الزوائد (3/521) .

ஸஹீஹான தரத்திற்கு **(مصطلح علم الحديث)** *முஸ்தலஹ் இல்முல்*

ஹதீஸ் என்ற கலையின் அடிப்படையில் அறியப்படாத நம்பகத்தன்மை இழந்த அறிவிப்பாளர்கள் இருந்தால் அந்த சம்பவம் ஆதாரமற்றது என்பதாகிவிடும்.

இதுபோன்ற வலுவிழந்த ஆதாரமற்ற சம்பவங்களை வைத்து அல்லாஹ் அல்லாதவர்களிடம் உதவி கேட்கலாம், இதை சங்கையான இமாம்களும் கூறியிருக்கிறார்கள் என்று எவ்வாறு பரேலவிகள் இட்டுகட்ட முடியும்? (معاذ الله)

அடியேன் எங்களது கல்லூரியில் திர்மிதீ கிரந்தத்தை படித்துத் தருவதற்கு முன்பாக இமாமவர்களின் العلل الصغير என்ற புத்தகத்தை படித்து கொடுப்பது வழக்கம் அதில் இமாம் அவர்கள் குறிப்பிடுகிறார்கள், இல்முல் இலல் என்ற துறை மிக சில அறிஞர்கள் மட்டுமே அறிந்து கொள்ள முடியும் எல்லா ஹதீஸ் கலை வல்லுனர்களாலும் அறிந்து கொள்ள முடியாது.

அந்த அளவிற்கு பார்ப்பதற்கு அங்கீகாரம் பெற்ற நபிமொழிகளை போன்று தெரியும். ஆனால், துறைசார்ந்த சில குறைகளால் அந்த நபிமொழி ஆதாரமற்ற ஒன்றாக மாறிவிடும்.

கூடுதலாக சில ஆதாரங்களையும் அடியேன் குறிப்பிடுகிறேன். மாலிகுத்தார் பலவீனமானவர். அவர் அறிவிப்புகள் ஆதாரத்திற்கு தூரமானது என்று இமாம் அபூ ஹாத்திம் அவர்கள் ஜரஹ் தஃதீல் என்ற புத்தகத்தில் 278/4 ல் கூறுகிறார்கள். நிலை இவ்வாறிருக்க பிறகு எப்படி இமாம் புகாரீயும் இப்னு கஸீர் அவர்களும் அல்லாஹ் அல்லாதவரிடம் உதவி கேட்கலாம் என்று இந்த சம்பவத்தை ஆதாரமாகக் காட்டி சரி கண்டிருப்பார்கள்?

قال ابن أبي حاتم "ضعيف" [الجرح والتعديل 4/ 872]

தஹ்தீபுத் தஹ்தீபில் ஹாஃபிழ் இப்னு ஹஜர் அஸ்கலானி ரஹிமஹுல்லாஹ், இமாம் இப்னு ஹப்பான், இமாம் ஹாகிம் ஆகியோர் பிலால் பின் ஹாரிஸ் என்பவர்தான் நபி (ஸல்) அவர்களின் மண்ணறைக்கு வந்த அந்த மனிதர். அவர் ஜீன்தீக் நாத்திகர் என்று குற்றம்சாட்டி இருக்கிறார்கள்.

"ورماه ابن حبان والحاكم بالزندقة" [تهذيب التهذيب 4/ 592]

தாரீகுல் கபீரில் இமாம் புகாரீ அவர்கள் உமர் என்ற வார்த்தை வரைதான் சொல்லியிருக்கிறார்கள். “ஒரு மனிதர் கப்ர் அருகில் வந்தார்” என்று அந்த புத்தகத்தில் குறிப்பிடவே இல்லை. இது முறைகேடாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

البخاري اقتصر على قول عمر " ما آلو إلا ما عجزت عنه " [التاريخ الكبير 7/ 403 رقم 5921]. ولم يذكر مجيء الرجل إلى القبر. وهذه الزيادة دخلت في القصة وهي زيادة منكرة

இந்த அறிவிப்பில் வரும் “அல்அஃமஷ்” என்பவர் “தத்லீஸ்” (அறிவிப்பின் உண்மை நிலையை மறைப்பது) செய்பவர்களில் பிரபலமானவர் என்று இமாம் தாரகுத்னீ, இமாம் நஸாஈயும் கூறுகிறார்கள். ஆக இந்த சம்பவம் ஆதாரத்திற்கு அப்பாற்பட்டது என்பது மிகத் தெளிவாகிறது. கீழ்காணும் ஆதாரங்களில்,

عنعنة الأعمش، فهو من المشهورين بالتدليس المكثرين منه، وصفه بذلك الكرابيسي والنسائي والدارقطني وغيرهم،التبيين لأسماء المدلسين 1/ 501لسبط العجمي، وجامع التحصيل 1/ 881 للعلائي، وطبقات المدلسين1/ 33لابن حجر.

இந்த அறிவிப்பில் இடம் பெற்றிருக்கும் மாலிக்குத் தார் என்பவர் அறியப்படாதவராக இருப்பதின் காரணமாக இமாம் புகாரீ, இமாம் அபூ ஹாதிம் அவர் விடயத்தில் அமைதி காத்தனர். அல்ஜரஹ் வ தஃதீல் என்ற கலையில் ஒருவரைப் பற்றி எந்த பதிலும் சொல்லாமல் அமைதி காக்கும் பொழுது அது நம்பகத்தன்மையை இழந்து விடுவதாக கூறி இருக்கின்றனர்.

مالك الدار، والذي عليه مدار هذا الأثر مجهول، سكت عنه البخاري، كما سكت عنه ابن أبي حاتم، والقاعدة عند علماء الحديث أن من سَكَتَ عنه البخاري وابن أبي حاتم فهو مجهول غير معروف، لقول ابن أبي حاتم في كتابه [الجرح والتعديل] : من سكتُّ عنه فإني لا أعرفه.

وقد سكت عن مالك الدار هذا.

இஸ்திகாஸா கூடும் என்ற ஆதாரத்தை முன்வைக்க அவர்கள் காட்டும் அனைத்து ஆதாரங்களும் முறையற்றதாகவும், தவறான ஆய்வாகவும் இருப்பதை அடியேன் பல வருடங்களாக கண்டு வருகிறேன். இது எனக்கு புதியது அல்ல.

அல்லாஹ் அல்லாதவர்களிடம் துஆ, உதவி கேட்கலாம் என்ற வழிகேடான கொள்கையை யாராவது இந்த சம்பவத்தை முன் வைத்துச் சொன்னால் இந்த ஆதாரங்களை அவர்களுக்கு காண்பியுங்கள். எல்லாம் வல்ல அல்லாஹ் நம் அனைவரையும் நேர்வழியில் செலுத்துவானாக!!

அசத்திய கொள்கைகள் தோலுரிக்கப்பட வேண்டும் கண்ணியமானவர்களே!

அடியேன் “அசத்தியவாதிகளின் வரலாற்று இருட்டடிப்புகள்” என்ற தலைப்பில் முகநூலில் தொடர்களை எழுத ஆரம்பித்த உடனே இஸ்லாமிய அழைப்புப் பணியில் ஈடுபடும் பலர், பல மார்க்க அறிஞர்களிடம் தெளிவான பதில் கிடைக்கவில்லை என்றும். இத்தொடர்களில் உள்ள கருத்துக்களால் அவர்கள் எதிர்பார்ப்பது போன்று ஊக்கமும், சிந்தனைத் தெளிவும் ஏற்படுவதால் தொடர்ந்து எழுதும்படி கேட்டுக் கொண்டனர். இவ்வாறு என்னுடன் பகிர்ந்து கொண்ட சிலர் ஒருபுறமிருக்க...

இன்னும் சிலரோ ஜிப்பா போட்ட ஸலஃபி, ஸஊதி அரசாங்கத்தின் அடிவருடி என்று காதுகிழிய சமூக வலைதள பக்கங்களில் கத்திக் கொண்டிருக்கிறார்கள். அல்லாஹ் நம் அனைவருக்கும் அருள் புரியட்டும்!

உலமாக்கள் எப்பொழுதெல்லாம் சத்தியத்தை உரக்கச் சொல்லி, அசத்தியத்தை தோலுரித்து, மக்கள் மன்றத்திலே குர்ஆன்-ஸுன்னாவின் அடிப்படையில், சத்திய ஸஹாபாக்கள் பயணித்த அந்த பாதையில், சங்கையான இமாம்களின் வழிகாட்டுதலில் விளக்கங்கள் கொடுத்தால் அவர்களை சாடுவதும், இழிவுபடுத்தும் வீணான குற்றங்களை அவர்கள் மீது சுமத்தி மக்கள் மன்றத்திலே அவமானப்படுத்துவதுமாகவே இந்த பரேல்விகள் இருக்கிறார்கள்.

இதன் காரணமாகவே உண்மையை கூற நினைக்கும் உலமாக்களும் நமக்கு ஏன் இந்த வீண் வம்பு என்று ஒதுங்கி விடுகிறார்கள். என்ன செய்வது அடியேன் சத்தியத்தை உரக்கச் சொன்ன அல்லாமா கலீல்

அஹ்மத் கீரனூரி, அல்லாமா அபுல் ஹஸன் நத்வி அவர்களின் பேரர் அல்லாமா அப்துல்லா ஹசனி நத்வி ரஹிமஹுல்லாஹ் போன்ற மார்க்க அறிஞர்களிடமல்லவா மார்க்கக் கல்வியை படித்திருக்கிறேன். சத்தியத்தை உரக்கச் சொல்வதில் காரம் சற்று தூக்கலாகத்தான் இருக்கும்.

وَمَنْ لَّمْ يَحْكُمْ بِمَا اَنْزَلَ اللّٰهُ فَاُولٰٓئِكَ هُمُ الْكٰفِرُوْنَ

எவர்கள் அல்லாஹ் இறக்கி வைத்தவைகளைக் கொண்டு தீர்ப்பளிக்க வில்லையோ அவர்கள் நிச்சயமாக நிராகரிப்பவர்களே!

(அல்குர்ஆன் 5:44)

மேற்காணும் இறைவசனத்தில் அல்லாஹ் இறை நம்பிக்கை யாளர்களுக்கு கூறும் மிக முக்கியமான ஒரு கட்டளை அல்லாஹ் இறக்கிய மார்க்கத்தை நடைமுறைப்படுத்தவேண்டும். தவறும் பட்சத்தில் நிராகரிப்பவர்களாகி விடுவீர்கள் என்ற வசனத்தை எந்த ஒரு இறைநம்பிக்கையாளர் கடந்து சென்றாலும் சற்று சிந்தித்து அல்லாஹ்வும் தூதரும் மார்க்கத்தை காட்டித்தந்த விதத்தில் மக்களிடம் கொண்டுபோய் சேர்க்க வேண்டும் என்றுதான் நினைப்பார்கள். அதற்கு எத்தனை எதிர்ப்புகள் மலைகளைப் போன்று வந்தாலும், இறையருளால் தகர்த்தெறிந்து நடை போட்டுக் கொண்டே இருப்பார்கள்.

மக்கள் மன்றத்திலே அசத்திய கொள்கையான.. ஃபாத்திஹா, மௌலூது, ஸலாத்துன் நாரியா, தர்ஹா சமாதி வழிபாடு, மரணித்த சாலிஹீன்களிடத்தில் உதவி கேட்டல், மார்க்கம் என்ற பெயரில் அனாச்சாரங்களை, பித்அத்களை அங்கீகரித்தல் போன்ற பல வழிகேடுகளை அல்லாஹ்வைத் தவிர யாருக்கும் பயப்படாமல் தெளிவுபடுத்த முன்வருமாறு உண்மையான அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையை கொண்ட உலமாக்களை அழைக்கிறேன்.

இறையருளால் இந்த அசத்தியத்தை தோலுரிக்கும் விடயத்தில் எனது மாணவ நண்பர்கள் வெகு விரைவில் இன்ஷா அல்லாஹ் களமிறங்கி உண்மையை உரக்கச் சொல்வார்கள் என்று நம்புகிறேன்.

இதோ உங்களுக்காக அல்லாஹ் தன் திருமறையில் அற்புதமான உபதேசத்தை செய்கிறான்.....

இந்த இறை அழைப்புப் பணியில் தங்குதடையின்றி சிறப்பாக தொடர முத்தான மூன்று வழிகாட்டல்கள்...

1. பொறுமையையும், சகிப்புத்தன்மையையும் கடைபிடிப்போம்.
2. நன்மைகளையும், சத்தியங்களையும் கடைபிடிக்கும்படி மக்களை ஏவி வருவோம். அசத்தியங்கள் தானாகவே மறைந்து போய்விடும்.
3. இலட்சியத்தை அடைய நடைபோடும் நமது சத்தியப்பாதையில் குறுக்கிடும் அறிவீனர்களை புறக்கணிப்போம்.

خُذِ الْعَفْوَ وَأْمُرْ بِالْعُرْفِ وَاَعْرِضْ عَنِ الْجٰهِلِيْنَ

(நபியே!) இவ்வறிவீனர்(களின் செயல்)களை நீங்கள் மன்னித்துப் புறக்கணித்து விட்டு (பொறுமையையும் கைகொண்டு, மற்றவர்களை) நன்மை (செய்யும்படி) ஏவி வாருங்கள். (அல்குர்ஆன் 7:199)

மரணித்தவர்களிடம் துஆ செய்வது மத்ஹப் இமாம்களின் பார்வையில்...

لا طاعة للمخلوق في معصية الخالق

“அல்லாஹ்வுக்கு மாறுசெய்து மனிதர்களுக்கு அடிபணிய வேண்டிய அவசியமில்லை”

இது நமது முன்னோர்களாகிய அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையின் அடிப்படையில் மிக ஆணித்தரமாக சொல்லப்பட வேண்டிய ஒரு கொள்கை.

ஒரு மனைவி கணவனுக்கு கட்டுப்படுகிறேன் என்று சொல்லி அல்லாஹ்விற்கு மாறு செய்வதும், பெற்றோருக்கு கட்டுப்படுகிறேன் என்று சொல்லி அல்லாஹ்வுடைய கட்டளைகளுக்கு பிள்ளைகள் மாறு செய்வதும் மார்க்கத்தில் தடை செய்யப்பட்டுள்ளது.

இதைக் கீழ்காணும் வசனத்திலிருந்து ஆதாரமாக எடுத்துள்ளனர் நமது முன்னோர்களான இமாம்கள்.

وَلَا يَعْصِيْنَكَ فِيْ مَعْرُوْفٍ

நன்மையான (காரியத்)தில் உமக்கு மாறு செய்யக்கூடாது.
(அல்குர்ஆன் 60:12)

சாலிஹீன்களின் கப்ரை ஜியாரத் செய்வது நபிவழிதானே என்று சொல்லிக்கொண்டு அங்கு சென்று அவர்கள் இடத்தில் துஆ கேட்பதும், அவர்களிடத்தில் தேவைகளைக் கேட்பதும், போர்வை போர்த்துவதும் விளக்கேற்றுவதும் ஸஜ்தா செய்வதும், ஆண்-பெண்கள் கலப்பதும், இவ்வாறு அல்லாஹ்வுக்கு மாறு செய்வது என்பது இணைவைப்பதே ஆகும்.

ஓர் இறை நம்பிக்கையாளர் கொண்டிருக்கும் ஏகத்துவக் கொள்கைக்கு முற்றிலும் மாறுபட்டது.

தவ்ஹீதுர் ரூபூபிய்யா, தவ்ஹீதுல் உலூஹிய்யா, தவ்ஹீது அஸ்மாயி வஸ்ஸிஃபாதி இவைகளை முறையாக கொள்கையாக கொள்ளாதவர்களுக்கு, மரணித்த நல்லடியார்களிடத்தில் வஸீலா கேட்பதும், உதவி கேட்பதும் சர்வ சாதாரண விடயமாக மட்டுமே தெரியும். இன்னும் கூடுதலாக சொன்னால் அதை ஒரு வழிபாடாகவே கருதுகிறார்கள்.

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நமக்கு போதித்தது பிரார்த்தனை என்பது ஒரு இபாதத்-வழிபாடு. அந்த நபிமொழி முஸ்னத் அஹ்மதில் அங்கீகாரமிக்க நபி மொழியாக இடம்பெற்றிருக்கிறது.

இவ்வாறிருக்க அல்லாஹ்விடம் மட்டுமே கேட்டுப்பெற வேண்டிய ஒரு வழிபாட்டை இவ்வாறு படைப்புகளோடு ஒப்பிட்டு களங்கப்படுத்துவது முறையா?

اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ

(அல்லாஹ்வே!) நாங்கள் உன்னையே வணங்குகிறோம்; உன்னிடமே உதவி தேடுகிறோம். *(அல்குர்ஆன் 1:5)*

என்ற வசனத்திற்கு முற்றிலும் மாறுபட்ட கருத்து.

திர்மிதியில் இடம் பெற்றிருக்கும் ஸஹீஹான நபிமொழியை இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னதாக

கூறுகிறார்கள்: “கேட்டால் அல்லாஹ்விடமே கேளுங்கள் உதவி பெற நாடினால் அல்லாஹ்விடமே பெறுங்கள்”

حديث ابن عباس رضي الله عنه ، أن النبي صلى الله عليه وسلم قال : إذا سألت فاسأل الله ، وإذا استعنت فاستعن بالله رواه الترمذي (6152)، وأحمد (303/1) ، وهو في « صحيح الترمذي » للألباني (6152)

இந்த நபிமொழிக்கு முற்றிலும் மாறுபடுகிறது.

இதுபோன்ற ஆதாரங்களை முன்வைத்தால் நம்மை குழப்பவாதிகள்

என்றும், தவ்ஹீத்வாதிகள்(அமைப்பினர்) என்றும் முத்திரை குத்துகின்றனர். உண்மையில் அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தினர் தான் ஷிர்க்கையும்,பித்அத்தையும் முன்னின்று எதிர்க்க வேண்டும். தவறிய காரணத்தினால் வழிகெட்ட கொள்கை உடையவர்கள் இதை கையில் எடுத்துக்கொண்டு அவர்களின் கொள்கையையும் அதில் புகுத்தி மக்களை வழிகெடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதுதொடர்பாக, மத்ஹபுகளின் சங்கையான இமாம்கள் கூறும் கருத்துக்களைக் பார்ப்போம்

ஹன்பலி மத்ஹபைச் சேர்ந்த அஷ்ஷைக் அப்துர் ரஹ்மான் அல்காஸிம் ரஹிமஹுமுல்லாஹ் அவர்கள் தங்களது புத்தகத்தில் "அல்லாஹ் அல்லாதவர்களிடம் துஆ கேட்பது சம்பந்தமாக வந்திருக்கும் குர்ஆன்-ஸுன்னாவின் ஆதாரங்களைப் போல இறைநிராகரிப்பிலும், முர்தத்து ஆகுவது தொடர்பாக கடுமையான எந்த ஆதாரமாக மார்க்கத்தில் இடம்பெறவில்லை. இந்த காரியத்தை செய்பவரை நிராகரிப்போர் என்றும், நரகத்தில் நிரந்தரமாக தங்கி விடுவார் என்ற அச்சுறுத்தலும் வந்திருக்கிறது. (அஸ்ஸெய்ஃபுல் மஸ்லூல் அலா ஆபிதிர் ரஸூல்-24)

قال الشيخ عبد الرحمن بن قاسم رحمه الله : لا نعلم نوعاً من أنواع الكفر والردة وَرَدَ فيه من النصوص مثل ما ورد في دعاء غير الله، من النهي والتحذير عن فعله، وكُفر فاعله، والوعيد عليه بالخلود في النار «السيف المسلول على عابد الرسول» ، ص 42.

ஹனஃபி மத்ஹபின் பிரபல்யமான புத்தகமான துர்ருல் முக்தார் என்ற புத்தகத்தின் விளக்க உரையான தவாலிவுள் அன்வார் என்ற புத்தகத்தை எழுதிய அஷ்ஷைக் முஹம்மத் ஆபித் அஸ்ஸின்தி அல்ஹனஃபி கூறுகிறார்:

"கப்ரில் அடங்கி இருப்பவரே!! இறைநேசரே!! தனது தேவையை நிறைவேற்றி தாருங்கள்! அல்லது எனக்காக அல்லாஹ்விடம் துஆ செய்யுங்கள் அல்லது எனக்காக அல்லாஹ்விடத்தில் ஷஃபாஅத் செய்யுங்கள்!" என்று கூறக்கூடாது. மாறாக "யாருடனும் இணைவைக்க முடியாதவனே! அல்லாஹ்வே என்னுடைய தேவையை பூர்த்தி செய்!" என்று கேட்க வேண்டும்.

وقال الشيخ محمد عابد السندي الحنفي في كتابه «طوالع الأنوار شرح تنوير الأبصار مع الدر المختار» ما نصه: ولا يقول: يا صاحب القبر، يا فلان، إقض حاجتي، أو سلها من الله، أو كن لي شفيعا عند الله، بل يقول: يا من لا يشرك في حكمه أحدا؛ اقض لي حاجتي هذه. « سيف الله على من كذب على أولياء الله»، باختصار، (ص 51–61)، الناشر مدار الوطن للنشر.

இதே கருத்தைத்தான் பின்வந்த பிரபலமான ஹனஃபி இமாம்களான இமாம் அஹ்மத் ஸர்ஹின்தி, இமாம் அஹ்மத் ரூமி, ஸிஜான் அல்பக்ஸ், முஹம்மத் பின் அலீ தானவி, முகமது இஸ்மாயில் தஹ்லவி, அபுல் ஹஸன் நத்வி ரஹிமஹுமுல்லாஹ்வும் கூறியிருக்கிறார்கள்.

மேலும் தகவல்களுக்கு கீழ்காணும் அரபி மொழி புத்தகத்தை பார்க்கவும்.

وبهذا قال من أئمة الحنفية المتأخرين الإمام أحمد السرهندي، والإمام أحمد الرومي، والشيخ سجان بخش الهندي، ومحمد بن علي التهانوي، ومحمد إسماعيل الدهلوي، والشيخ أبو الحسن الندوي، وشدد في ذلك (المجموع المفيد في نقض القبورية ونصرة التوحيد)، (ص 214)

அர்பஊன நபவியா என்ற புத்தகத்தில் ஷாஃபிஈ மத்ஹபைச் சேர்ந்த இப்னு ஹஜர் அஸ்கலானி ரஹிமஹுமுல்லாஹ் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்: "அல்லாஹ் அல்லாதவர்களிடம் உதவி கேட்பவர் நிராகரிப்பவர் ஆவார்.

இவ்வாறு தான் இமாம் ஷவ்கானியும் "அத்துரர் நழீத்" என்ற புத்தகத்தில் கூறுகிறார். ஷாம் தேசத்தின் ஹதீஸ்கலை வல்லுநர் இமாம் அபூ ஷாமா அவர்களும் (الباعث على إنكار البدع والحوادث) என்ற புத்தகத்தில் இதே கருத்தைதான் குறிப்பிடுகிறார்.

وأما كلام الشافعية؛ فقال ابن حجر الشافعي في « شرح الأربعين النووية »: من دعا غير الله فهو كافر. نقله الشوكاني عنه في « الدر النضيد ». وقال الإمام محدث الشام أبو شامة في كتاب « الباعث على إنكار البدع والحوادث »:

ஷைகுல் இஸ்லாம் ஷாஹ் வலியுல்லாஹ் ரஹிமஹுமுல்லாஹ் அவர்களின் பேரப்பிள்ளையான ஷஹீத் ஷாஹ் இஸ்மாயில் தஹ்லவி தங்களின் பிரபலமான “தக்வியதத்துல் ஈமான்” புத்தகத்தில் அல்லாஹ் அல்லாதவர்களிடம் துஆ செய்வதும், உதவி கேட்பதும் ஷிர்க்காகும்.

இந்திய சுதந்திரத்திற்காக பாடுபட்ட நமது இந்திய உலமாக்களாகிய ஷஹீத் இமாம் அஹ்மத் பின் இர்ஃபான், இமாம் ஷஹீத் ஷாஹ் இஸ்மாயில் தஹ்லவி ரஹிமஹுமுல்லாஹ் ஆகியோரை திட்டமிட்டு பித்அத்வாதிகள் குள்ளநரிகள் பாலக்கோடு என்ற அன்றைய பிரிட்டிஷ் இந்தியாவில் சீக்கியர்களுடன் கைகோர்த்து ஷஹீதாக்கினார்கள்.

காரணம் அவர்கள் எழுதிய “தக்வியதுல் ஈமான்” என்ற புத்தகத்தின் தாக்கம் வழிகெட்ட பரேல்விகளுக்கு சிம்மசொப்பனமாக மாறியதுதான். இதன் மூல புத்தகம் ஃபார்ஸி மொழியில் இருந்து இவர்களின் பாட்டனார் ஷாஹ் வலியுல்லாஹ் தஹ்லவி அவர்களால் எழுதப்பட்டு இமாம் அவர்களால் உர்தூவில் மொழிபெயர்க்கப்பட்டது.

இந்த புத்தகத்தைத் தான் பின்னர் இமாம் அபுல் ஹஸன் நத்வி ரஹிமஹுமுல்லாஹ் அரபு மொழியில் “ரிஸாலதுத் தவ்ஹீத்”, என்று எழுதினார்கள். இது அவர்களின் காலத்தில் அரபு நாட்டில் ஷிர்க்கையும், சமாதி வழிபாடையும் துடைத்தெறிந்த இமாம் முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப் நஜ்தி ரஹிமஹுமுல்லாஹ் அவர்களின் புத்தகமான கிதாபுத் தவ்ஹீதுக்கு நிகரானது என்று அறிஞர்கள் கூறுகிறார்கள்.

ولهذا الدهلوي الشهيد في تلك الرسالة عدة تصريحات بشرك من دعا غير الله واستغاث به رسالة التوحيد للدهلوي: (141–241)، والفتاوى الخيرية: (281/1).

இமாம் மாலிக் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கப்ருக்கு அருகில் நின்று கொண்டு நபியவர்களுக்காக துஆ செய்வதை வெறுத்தார்கள்.[2]

மதீனாவாசிகள் தொடர்ந்து சென்று நபியவர்களின் கபுரில் ஸலாம்

---

2 إن مالكاً –رحمه الله– كره الوقوف عند قبر النبي صلى الله عليه وسلم للدعاء له أو الدعاء عنده الشفا للقاضي عياض: (2/ 176)، نقلاً عن المبسوط لإسماعيل القاضي، والمنتقى للباجي: (1/ 692)، والرد على الأخنائي: (64، 401)، والجواب الباهر: 95، 56، والصارم: 521..

கூறுவதையும், நபியவர்களின் கப்ரை ஜியாரத் செய்தோம் என்று சொல்வதையும் வெறுத்தார்கள்.[3]

இமாம் பைஹகி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் அல்லாஹுதஆலா மூலம் பாதுகாவல் தேடக் கூடிய சில நபிமொழிகளை கூறியபின் கூறுகிறார்கள். படைப்புகள் மூலம் படைப்புகள் பாதுகாப்பு தேடுதல் என்பது கூடாது. (அல்அஸ்மா வஸ்ஸிஃபாத் - இமாம் பைஹகி-241)

فهذا الإمام البيهقي ذكر بعض أحاديث الاستعاذة بكلمات الله تعالى، ثم قال: (ولا يصح أن يستعيذ بمخلوق من مخلوق) الأسماء والصفات للبيهقي: (142).

ஹதீஸ்கலை வல்லுநராகவும், சிறந்த மார்க்க சட்ட வல்லுநராகவும் இருந்த, ஷாஃபிஈ மத்ஹபைச் சார்ந்தவராக கருதப்படும் இமாம் இப்னு குஸைமா கூறுகிறார்: "ஓர் ஆலிம் பின்வருமாறு பிரார்த்தனை செய்வதற்கு அனுமதி கொடுப்பதை நீங்கள் கேட்டால்,

- *படைப்புகளின் தீங்கிலிருந்து கஃபதுல்லாஹ்வின் மூலமாக பாதுகாப்பு தேடுகிறேன்.*
- *ஸஃபா, மர்வா மலைக் குன்றுகளை கொண்டு பாதுகாப்புத் தேடுகிறேன்.*
- *அரஃபாத், மினா போன்ற இடங்களைக் கொண்டு படைப்பின் தீமைகளிலிருந்து பாதுகாப்பு தேடுகிறேன்*

அல்லாஹ்வுடைய மார்க்கத்தை விளங்கிய எந்த முஸ்லிமும் இதுபோன்ற வார்த்தைகளை அனுமதிக்கவும் மாட்டார், கூறவுமாட்டார். அல்லாஹ்வுடைய படைப்பின் மூலமாக ஒரு முஸ்லிம் படைப்பினங்களின் தீமையிலிருந்து பாதுகாப்புத் தேடுவது இயலாத ஒன்று என்று கூறினார். கிதாபுத் தவ்ஹீத் -(1/401-402)

فمنهم إمام الأئمة ابن خزيمة أحد كبار فقهاء المحدّثين ويعد من الشافعية فإنه قال: (هل سمعتم عالماً يجيز أن يقول الداعي: أعوذ بالكعبة من شر خلق الله؟ أو يجيز أن يقول: أعوذ بالصفا والمروة، أو أعوذ بعرفات ومنى من شر ما خلق؟

---

3 ، وكره لأهل المدينة التردد للسلام عليه، كما كره أن يقال: زرنا قبره صلى الله عليه وسلم العتبية: (444/81)، والشفا: (676)، والمنتقى: (692/1)، والرد على الأخنائي: (64، 69).الشفا: (766/2)، والجواب الباهر: (85)، والصارم: (362، (172–972)، ومجمع البحار: (444/2).

هذا لا يقوله ولا يجيز القول به مسلم يعرف دين الله، محال أن يستعيذ مسلم بخلق الله من شر خلقه كتاب التوحيد: (1/ 104– 204).

இன்று சர்வசாதாரணமாக சிலர் மார்க்கத்தை தெளிவில்லாமல் அரைகுறையாக விளங்கி நபிமார்கள், மரணித்த நல்லடியார்களிடம் சென்று இஸ்திகாஸா, வஸீலா கேட்பது எனது கொள்கை. இதுதான் ஸுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கையும் கூட என்று மிக தைரியமாக கூறுகிறார்கள்.

இதற்கு முந்தைய பக்கங்களில் குறிப்பிட்டிருந்த அவர்கள் ஆதாரமாகக் காட்டிய அனைத்து சம்பவங்களும் பொய்யானது என்பது உங்களுக்கு தெரியும். தங்களோடு மட்டும் இந்த பெரும் பாவத்தை நிறுத்திக் கொள்ளாமல் பொதுமக்களையும் பலியாக்குகிறார்கள். கவனம் தேவை சகோதரர்களே!! அல்லாஹ்விடம் தவ்பா செய்து மீண்டு விடுங்கள். அல்லாஹ் நம் அனைவரையும் பொறுத்தருள்வானாக!!

இமாம் அஹ்மத் பின் ஹம்பல் (ரஹ்) பெயரில்

இருட்டடிப்பும் நம் மறுப்பும்

ஏகத்துவத்தை ஓங்கி முழங்கியதில் நான்கு மத்ஹபுகளுடைய சங்கையான இமாம்கள் யாரும் சளைத்தவர்கள் அல்ல.

குறிப்பாக அபூ அப்துல்லாஹ் அஹ்மத் பின் ஹம்பல் ஷைபானி ரஹிமஹுமஹுல்லாஹ் (ஹம்பளி மத்ஹபின் இமாம்) அவர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் அனாச்சாரதிற்கும், பித்அத்திற்கும் துணை போகாதவர்கள் என்பது அவர்களின் வாழ்க்கை வரலாற்றை முழுமையாக படித்த அனைவருக்கும் தெரியும். வழிகெட்ட பிரிவினர்களுக்கு இமாம் அவர்கள் சிம்ம சொப்பனமாகவே இருந்தார்கள். அப்படிப்பட்ட அஹ்மத் பின் ஹம்பல் ரஹிமஹுல்லாஹ் ஸூஃபியாக்களின் நடன களிஆட்டங்களை ஆமோதித்தாக சிலர் பேசி வருகின்றனர். அதற்கு அவர்கள் பின்வரும் சில ஆதாரங்களையும் முன் வைக்கின்றனர்.

அஹ்மத் ரஹிமஹுல்லாஹ் அவர்களின் ஆன்மிகம்

இமாமு அஹ்லிஸ் ஸுன்னா அதாவது அஹ்லுஸ் ஸுன்னா உடைய இமாம் என்று அனைவராலும் போற்றப்பட்ட இமாம் அஹ்மத் பின் ஹன்பல் ரஹ்மத்துல்லாஹி அலைஹி ஸூஃபியாக்களைப் பற்றி கூறுகிறார்கள்:

قال العلامة محمد السفاريني الحنبلي رحمه الله تعالى عن إبراهيم بن عبد الله القلانسي رحمه الله تعالى أن الإمام أحمد رحمه الله تعالى قال عن الصوفية: (لا أعلم أقواماً أفضل منهم.

قيل: إنهم يستمعون ويتواجدون،

قال: دعوهم يفرحوا مع الله ساعة

“சூஃபியாக்களை விட மிகச் சிறந்த ஒரு கூட்டத்தை நான் பார்த்ததே இல்லை” அப்போது, “சூஃபியாக்கள் நஃத்து போன்றவற்றை செவிமடுக்கிறார்கள். மேலும் பரவச நிலையை அடைந்து விடுகிறார்களே” என்று கேட்கப்பட்டது.

இமாம் அஹ்மது கூறினார்கள்: “அவர்களை அப்படியே விட்டு விடுங்கள் அல்லாஹ்வுடன் சில மணித்தியாலங்கள் பரவச நிலையில் மகிழ்ந்திருக்கட்டும்”.

(ஹதாஉல் அல்பாபு ஷரஹு மன்லூமதில் ஆதாபு 1/120)

இதே வார்த்தையை தனது மகன் அப்துல்லாஹ்விடம் சொன்ன பொழுதும் மகன் அவர்கள் இதேபோல கேட்டார்கள்.

فانهم إذا سمعوا السماع يقومون يرقصون دعوهم يفرحون مع الله ساعة

“தந்தையே அவர்கள் சில நேரங்களில் (திக்ரு போன்ற) சில விஷயங்களை கேட்கும்பொழுது எழுந்து குதூகலத்தில் குதிக்கிறார்கள்” என்று சொன்னபோது, இமாம் அஹ்மத் பின் ஹம்பல் ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்கள் கூறினார்கள்: “அவர்களை விட்டுவிடுங்கள், அல்லாஹ்வுடைய நினைவில் கொஞ்ச நேரம் பரவசத்தில் இருக்கட்டும்”. (ஆசிரியர்: அபுதாஹிர் ஸலஃபி, கிதாப்: துயூரிய்யாத், பக்கம் : 35)

மறுப்புகள்

1. “துயூரிய்யாத்” என்ற புத்தகத்தை நாம் ஆய்வு செய்து பார்த்ததில் ஹிஜ்ரீ ஆறாம் நூற்றாண்டில் வாழ்ந்த பிரபல்யமான ஹதீஸ்கலை வல்லுனரான இமாம் அபூதாஹிர் ஸலஃபி அஸ்பஹானி ரஹிமஹு முல்லாஹ் அவர்கள் பரேல்விகள் கூறியிருப்பது போன்று 35ஆம் பக்கத்தில் கூறவே இல்லை. அவர் கூற வரும் அந்த சம்பவம் 56ஆம் பக்கத்தில் 35-ஆவது தொகுப்பாக வருகிறது.

2. அந்த புத்தகத்தில் கூறப்பட்டிருப்பது...

அலீ பின் அல்ஹஸன் அஸ்ஸூஃபி அத்தர்ஸூஸி என்பவர் ஸுலைமான் பின் அஹ்மத் தப்ரானீ அவர்கள் வாயிலாக இமாம் அஹ்மத் பின் ஹம்பல் ரஹிமஹுல்லாஹ் அவர்களின் புதல்வரான அப்துல்லாஹ் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் சொன்னதாக கூறுகிறார்:

“இந்த சூஃபியாக்கள் எந்த ஞானமும் இல்லாமல் பள்ளிகளில் அல்லாஹ்வின் மீது நம்பிக்கை வைத்தவர்களாக அமர்ந்திருக்கிறார்கள்” என்று எனது தந்தையிடம் சொல்லப்பட்ட பொழுது, “அவர்களை அமர வைத்ததே ஞானம்தான்” என்று எனது தந்தை அவர்களுக்கு பதிலளித்தார்.

அதற்கு அவர்கள் என் தந்தையிடம், “அவர்களுடைய நோக்கமே உடைந்த சில பொருட்களும். கிழிந்த சில ஆடைகளும்தானே” என்று கேட்டனர்.

“உலகப் பற்றற்றவர்களாக உடைந்த சில பொருள்களையும், கிழிந்த ஆடைகளையும் மட்டுமே கொண்ட எந்த ஒரு கூட்டத்தையும் இவர்களைப் போன்று நான் கண்டதில்லை” என்று எனது தந்தை கூறினார்.

“குறிப்பிட்ட சில விடயங்களை செவிமடுத்தால் நடனமாட தொடங்கிவிடுவார்கள்” என்று எனது தந்தையிடம் அதற்கு அவர்கள் கேட்டார்கள்.

இவ்வரிகளுக்கு பரேல்விகள் பின்வருமாறு இருட்டடிப்பு செய்கிறார்கள்:

“தந்தையே அவர்கள் சில நேரங்களில் (திக்ரு போன்ற) சில விஷயங்களை கேட்கும்பொழுது எழுந்து குதூகலத்தில் குதிக்கிறார்கள்”

“நடனமாட தொடங்கிவிடுவார்கள்” என்ற வார்த்தைக்கு பதிலாக “எழுந்து குதூகலத்தில் குதிக்கிறார்கள்”, என்று முறைகேடாக மொழிபெயர்த்திருக்கிறார்கள். காரணம் இது போன்ற நடனங்கள் மார்க்கத்தில் அனுமதிக்கப்படவில்லை என்பது சராசரி இறைநம்பிக்கையாளருக்கும் தெரியும். பரவசத்தால் என்று அவர் குறிப்பிட்டிருப்பது, மது, கஞ்சா, போதை போன்ற பொருட்களை பயன்படுத்தும் அகோரிகள் தான் இவ்வாறு ஆடுவார்கள் என்பதாக விமர்சனம் செய்யப்பட்டு விடுமோ என்று அவர் மறைத்து “எழுந்து குதூகலத்தில் குதிக்கிறார்கள்”, என்று மொழியாக்கம் செய்திருப்பது அவர்களின் ஆய்வுகளில் நம்பகமின்மையை நமக்கு கூடுதலாக தெளிவுபடுத்துகிறது.

அரபு மொழியில் எந்த அகராதியில் நீங்கள் பார்த்தாலும் رقص -ரகஸ என்றால் ஆடுதல், நடனமாடுதல் என்ற அர்த்தம், அல்மஃஆனி அல்ஜாமிஃயில் - என்ற அகராதியில்

المعاني الجامع رقَص الشَّخصُ: اهتزّ وحرّك جسمه على أنغام الموسيقى أو الغناء

ரகஸ அஷ்ஷக்ஸு என்றால் தனது உடலை பாட்டு, இசை ராகத்தில் அசைத்து ஆடுதல் என்று அர்த்தம்.

3. மிக சுவாரசியமான விடயம் என்னவென்றால் வழமையை போன்றே இந்த பரேல்விகள் நம்பகத்தன்மை அற்ற செய்திகளை தலை சிறந்த இமாம்களும் அறிஞர்களும் கூறியதைப் போன்று புனைவது.

இந்த புத்தகத்தின் 57ஆம் பக்கத்தில் இந்த சம்பவத்தை அறிவிக்கும் அலீ பின் அல்ஹஸன் அஸ்ஸூஃபி அத்தர்ஸூஸி என்பவர் கூறும் செய்திகள் இட்டுக்கட்டப்பட்டதாகவே இருக்கும் என்று இமாம் தஹபி ரஹிமஹுமுல்லாஹ் அவர்கள் இதே பக்கத்தில் முதலாவது அடிக்குறிப்பில் மீஸானுல் இஃதிதால் - ميزان الاعتدال என்ற புத்தகத்தில் பாகம் 5 /150 வது பக்கத்தில் தெளிவுபடுத்தி இருப்பதையும் மறைத்து பொய்யான தகவலை இமாம் அஹ்மத் பின் ஹம்பல் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறியதாக இவர் எழுதி இருப்பது முழுப்பூசணிக்காயை சோற்றில் மறைப்பதற்கு முயற்சி செய்திருக்கிறார்கள் என்பது தெள்ளத் தெளிவாகிறது.

பக்கம் எண் 58லும் முதலாவது அடிக்குறிப்பில் அலீ பின் அல்ஹஸன் அஸ்ஸூஃபி அத்தர்ஸூஸி என்பவர் சூஃபியாக்களின் நிலைகளை மற்றவர்களுக்கு அழகாக காண்பிக்க முயற்சித்து இமாம் அஹ்மத் பின் ஹம்பல் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் மீது இட்டுக்கட்டி இருக்கிறார். இதை ஹாஃபிழ் இப்னு ஹஜர் அஸ்கலானி ரஹிமஹுல்லாஹ் தனது நூலான ''லிஸானுஹு'', (لسانه) என்ற புத்தகத்தில் விளக்கி இருக்கிறார்.

பரேல்விகளிடம் சற்று ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இவர்களின் புனைதல் நாளுக்கு நாள் அசுர வேகத்தில் சென்று கொண்டிருக்கிறது. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்று கூறுவார்கள். ஆயினும் இதுவரை பரேல்விகளின் பல இருட்டடிப்புகளை தெளிவுபடுத்தி இருக்கிறேன். அல்லாஹு அஃலம் பிஸ்ஸவாப்.

இமாம் மாலிக் (ரஹ்) பெயரில் இருட்டடிப்பும் நம் மறுப்பும்

இஸ்லாமிய கொள்கை ரீதியாக குர்ஆனும்-ஸுன்னாவும் நமக்கு வழங்கியிருக்கிற அனைத்து ஆதாரங்களும் மிகத் தெளிவாக எடுத்துரைக்கின்றன. மார்க்கத்தின் பெயரில் இணைவைத்தல் என்பதற்கு எந்த முகாந்திரமும் இல்லை.

ஷிர்க், குஃப்ர் ஃபத்வாவை வழங்குவதுதான் இந்த வஹாபிகளின் பணி என்று பரேல்விகளே நீங்கள் மக்கள் மன்றத்தில் உரக்க சப்தமிடுவதினால், சத்தியத்தை உங்களால் இனி மறைக்கவோ அவர்களை இனி மடையர்களாக்கவோ முடியாது என்பதை மட்டும் மிகத் தெளிவாக புரிந்து கொள்ளுங்கள்.

சில இயக்கங்கள் தவ்ஹீதை முன்வைத்து ஆரம்ப காலத்திலே செய்த மிகப்பெரிய புரட்சி இன்று மக்கள் மன்றத்தில் மிகப் பெரிய தாக்கத்தையும் விழிப்புணர்வையும் பெற்றிருப்பதை யாராலும் மறுக்க முடியாது.

அதே நேரத்தில் அந்த இயக்கங்களின் தலைவர்களுடைய அடிச்சுவடுகளை அப்படியே தக்லீது செய்யும் அவர்களின் முரீதுகள் வழிகேட்டை நோக்கி பயணிக்கின்றனர் என்பதையும் நாம் காலம் காலமாக விமர்சித்து தான் வருகிறோம்.

இந்தச் சூழலில் இஸ்லாம் நமக்கு போதித்த ஏகத்துவத்தை, எச்சரித்த இணைவைத்தலை யாராவது உரக்கச் சொன்னால் அவர்களையும் இதுபோன்ற இயக்கவாதிகளின் அணியில் சேர்த்து வைத்து விமர்சனம் செய்வது ஏற்புடையதல்ல.

நமது இந்த நூலில் உண்மையான அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கைகளுக்கு முரணாக முன்வைக்கப்படும் போலி

ஸுன்னத்வல் ஜமாஅத்தினரின் பொய்யான வாதங்களை வெளிச்சத்திற்கு கொண்டுவரும் வரிசையில் கீழ்காணும் ஒரு சம்பவமும் முன்வைக்கப்படுகிறது.

அதாவது இமாம் மாலிக் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் "நபியவர்களை ஜியாரத் செய்யும் பொழுது கிப்லாவை முன்னோக்காமல், நபியவர்களின் மண்ணறையை முன்னோக்கி துஆ செய்ய வேண்டும்" என்று கூறியதாக பல வலைதளங்களில் சுற்றி வந்து கொண்டிருக்கிறது அதன் உண்மை நிலை என்ன என்று பார்ப்போம்!

வலைதள வதந்தி

ஹள்ரத் இமாம் மாலிக்கி ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் ஒரு சமயம் மஸ்ஜிதுந் நபவியில் அமர்ந்திருந்தார்கள். அப்போது அப்பாஸியர்களின் இரண்டாவது கலீஃபா மன்ஸூர் என்பவர் திருநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ரவ்ளா ஷரீஃபுக்கு வருகை தந்தார். அவர் ஹள்ரத் இமாம் அவர்களிடம், "நான் கிப்லாவை (கஃபாவை) முன்னோக்கி துஆ கேட்கட்டுமா? அல்லது நபிகளார் அவர்களை முன்னோக்கி துஆ கேட்கட்டுமா?" என விசாரித்தார். அதற்கு இமாம் அவர்கள்,

ولم تصرف وجهك عنه وهووسيلتك ووسيلة ابيك آدم الى الله تعالى
بل استقبله واستشفع به فيشفّعه الله فيك

"உனக்கும் உன் தகப்பனார் நபி ஆதம் (அலை) அவர்களுக்கும் வஸீலாவான கருணைக் கடல் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை விட்டும் ஏன் உன் முகத்தைத் திருப்பப் போகின்றாய்? வேண்டாம்! நீ அவர்கள் பக்கமே திரும்பிக் கேள். அவர்கள் பொருட்டால் அல்லாஹ் உன்னை மன்னித்திடுவான்" என்றார்.

(நூல்: அஷ்ஷிஃபா 2:33)

மறுப்பு

இச்சம்பவத்தை கூறும் பரேல்விகள் கூறுவதுபோல் புத்தகத்தின் பெயர் அஷ்ஷிஃபா அல்ல அவர்கள் கூறும் பக்க எண்களும் தவறு.

மேலே, கூறப்படும் இந்தச் சம்பவம் இமாம் தகியுத்தீன் ஸுபுகி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தங்களின் ஷிஃபா அஸ்ஸிகாம் என்ற

புத்தகத்தில் 283 ஆம் பக்கத்தில் குறிப்பிடுகிறார். இந்த புத்தகம் ஷீஆ இணைய நூலகத்தில் (Shia Online Library) காணப்படுவதே இந்த பரேல்விகளின் குருநாதர்களான ஷிஆக்களின் வழிகாட்டல்கள் என்பது மிகத் தெளிவாக விளங்குகிறது.

இமாம் மாலிக் ரஹிமஹுல்லாஹ் போன்ற சங்கையான மத்ஹபுகளின் இமாம்களின் பெயர்களில் இட்டுக்கட்டும் இந்த செய்திகளை இத்துடன் நிறுத்திக் கொள்ளவேண்டும் இந்த பரேல்விகள்.

இந்த நூலின் நோக்கமே இவர்களைப்போன்ற சிந்தனை உடையவர்களின் வழிகேடான கொள்கைகளை இமாம்கள் கூறியதாக புனைகிறார்களல்லவா, அதை மக்கள் மன்றத்தில் வெளிச்சத்துக்குக் கொண்டுவர வேண்டும் என்பதுதான்!

பரேல்விகள் ஆதாரமாக காட்டியுள்ள இந்த சம்பவத்தை அறிவிக்கும் முஹம்மது பின் ஹுமைது அர்ராஸி என்பவர் ஹதீஸ் கலை வல்லுனர்களால் பொய்யர் என்று அறியப்படுபவர்.

ஸாலிஹ் பின் முஹம்மத் அல்ஆஸிலி என்ற ஹதீஸ் கலை வல்லுனர் முஹம்மது பின் ஹுமைது அர்ராஸி என்பவர் பொய் சொல்வதில் மிகவும் தைரியமானவர் என்று கூறி இருப்பதுடன், இமாம் நஸாஈ, இப்னு ஹப்பான், அபூ ஸுர்ஆ, இப்னு வாரா ரஹிமஹுமுல்லாஹ் போன்ற அனைத்து ஹதீஸ் கலை வல்லுனர்களும் இந்த அறிவிப்பாளர் பொய்யர் என்ற கருத்தையே குறிப்பிடுகின்றனர்.

அதுமட்டுமல்லாமல் அப்பாஸிய கலீஃபா அபூ ஜஃபர் அல் மன்ஸூர் மக்காவில் ஹிஜ்ரீ 158 ல் மரணமானவர். இமாம் மாலிக் ஹிஜ்ரீ 179 ல் மரணமானார். முஹம்மது பின் ஹுமைது அர்ராஸி என்ற இந்த அறிவிப்பாளர் மரணித்தது ஹிஜ்ரீ 248. இவர் அவருடைய காலத்தில் இமாம் மாலிக்கை சந்தித்தற்கு எந்த வாய்ப்பும் இல்லை.

பின்வந்த மாலிக்கி மத்ஹப்புகளின் இமாம்கள் இந்த சம்பவத்தை சரிகண்டு நபியவர்களிடம் வஸீலா தேடலாம் என்ற தவறான கருத்தை கூறி விட்டார்கள்.

ஆக இவர்கள் முன்வைத்து இருக்கும் இந்த ஆதாரம் வலுவிழந்தது மட்டுமல்ல. இமாம்கள் மீது அவர்கள் பொய் சொல்கிறார்கள் என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்நூலின் அடுத்தடுத்த

பக்கங்களில், அவர்களைப் போன்றவர்கள் செய்த குளறுபடிகளை தோலுரித்துக் காட்டியுள்ளேன்.

இணைவைத்தலை கடுமையாக சாடிய நமது முன்னோர்கள் இமாம்கள் அல்லாஹ்வின் தூதரின் மண்ணறையின் அருகில் நின்று துஆ செய்வதையே வெறுத்து இருக்கிறார்கள். ஜியாரத் செய்தோம் என்று பெருமிதமாக கூறுவதையும் வெறுத்து இருக்கிறார்கள் என்று தான் மாலிக்கி மத்ஹபுகளின் புத்தகங்களில் இடம் பெற்றுள்ளது.

துஆ என்பது அல்லாஹ்விடம் மட்டும் செய்யப்பட வேண்டிய ஒரு வணக்கம். இவ்வாறு இருக்க மண்ணறைகளை நோக்கி துஆ செய்வதாக பரேல்விகள் வழங்கியிருக்கும் ஆதாரங்கள் அனைத்தும் பொய்யானது என்பது தெளிவாகிறது.

இமாம் மாலிக் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கப்ருக்கு அருகில் நின்று கொண்டு நபியவர்களுக்காக துஆ செய்வதை வெறுத்தார்கள்.[4]

மதீனாவாசிகள் தொடர்ந்து சென்று நபியவர்களின் கப்ரில் ஸலாம் கூறுவதையும், நபியவர்களின் கப்ரை ஜியாரத் செய்தோம் என்று சொல்வதையும் வெறுத்தார்கள்.[5]

4 إن مالكاً -رحمه الله- كره الوقوف عند قبر النبي صلى الله عليه وسلم للدعاء له أو الدعاء عنده الشفا للقاضي عياض: (2/ 176)، نقلاً عن المبسوط لإسماعيل القاضي، والمنتقى للباجي: (1/ 692)، والرد على الأخنائي: (64، 401)، والجواب الباهر: 95، 56، والصارم: 521..

5 ، وكره لأهل المدينة التردد للسلام عليه، كما كره أن يقال: زرنا قبره صلى الله عليه وسلم العتبية: (444/81)، والشفا: (676)، والمنتقى: (692/1)، والرد على الأخنائي: (64، 69).الشفا: (766/2)، والجواب الباهر: (85)، والصارم: (362، (172-972)، ومجمع البحار: (444/2).

ஐயமும் தெளிவும்

ஐயம்: *பித்அத் (நூதனம், அனாச்சாரம்) என்றால் என்ன? நல்ல பித்அத் வழிகேடான பித்அத் என்று இருக்கிறதா?*

தெளிவு: இபாதத்துக்களில், (வணக்க வழிபாடுகளில்) இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கற்றுத்தந்த ஸுன்னதுகளை (வழிமுறைகளை) விட்டுவிட்டு ஊர்வழக்கு, குடும்பவழக்கு, மஹல்லா வழக்கு என்று மனோ இச்சைகளை மார்க்கமாக ஆக்க முற்படுவது.

அது தொழுகை, நோன்பு, சதகா என்ற எந்த வகை வணக்கமாக இருந்தாலும் இறைத்தூதர் அவர்களின் வழிகாட்டுதலில் வணங்கவில்லை என்றால் அது பித்அத் (நூதனம், அனாச்சாரம்).

அதை ஊர் மக்கள் அனைவரும் சேர்ந்து மார்க்க அறிஞர்களை வைத்து அரங்கேற்றம் செய்தாலும் ஒரு பித்அத் ஸுன்னதாக ஆகாது. அது வழிகேடே அன்றி வேறில்லை.

من أحدث في أمرنا هذا ما ليس منه، فهو ردٌّ))؛ رواه البخاري ومسلمٌ

யார் இந்த மார்க்கத்தில் இல்லாத ஒன்றை புதிதாக உருவாக்குகின்றாரோ அது அல்லாஹ்விடத்தில் எற்றுக்கொள்ளப்படமாட்டாது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரீ, முஸ்லிம்)

من عمل عملًا ليس عليه أمرنا، فهو ردٌّ

யார் இந்த மார்க்கத்தில் இல்லாத ஒன்றை புதிதாக செய்கின்றாரோ அது அல்லாஹ்விடத்தில் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

இவ்விரு நபிமொழிகளிலிருந்தும் பித்அத்தான செயல்கள் அனைத்தும் அல்லாஹ்விடத்தில் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பது நமக்கு தெளிவாக விளங்குகின்றது.

எல்லா பித்அத்தும் வழிகேடாகும்

“இஸ்லாத்தில் புதிதாக (ஒன்றை) உருவாக்குவதிலிருந்து உங்களை நான் எச்சரிக்கை செய்கின்றேன். ஏனென்றால், புதிதாக ஏற்படுத்தப்பட்ட அனைத்தும் பித்அத்தாகும். அனைத்து பித்அத்தும் வழிகேடாகும்” என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (திர்மிதீ)

இன்னும் ஓர் அறிவிப்பில் “அனைத்து வழிகேடும் நரகத்திற்கு கொண்டு செல்லக்கூடியவை” எனவும் வந்திருக்கின்றது.

எல்லா பித்அத்துகளும் வழிகேடு என்று நபி (ஸல்) அவர்கள் தெளிவாகச் சொல்லியிருந்தும், இன்று முஸ்லிம்களில் சிலர், எல்லா பித்அத்தும் வழிகேடல்ல, கெட்ட பித்அத்துக்கள் தான் வழிகேடாகும். நல்ல பித்அத்துக்கள் வழிகேடல்ல என்று பித்அத்துக்களை இரண்டாக பிரிப்பதுதான் ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக இருக்கின்றது. இதற்கு அவர்கள் வைக்கின்ற பெயர் “பித்அத்தே ஹஸனா”. இது முற்றிலும் தவறான அணுகுமுறையாகும்.

நபி (ஸல்) அவர்கள் பித்அத்துக்களை விவரிக்கும் போது “குல்லு பித்அத்தின் ளலாலத்துன்” என்றே கூறினார்கள். “குல்லு” என்றால் “எல்லாம்“ என்பது பொருள். “குல்லு பித்அத்தின் ளலாலத்துன்” என்றால் எல்லா பித்அத்தும் வழிகேடு என்றுதான் பொருள். அரபு இலக்கணம் தெரிந்த யாரும் இதை மறுக்கமாட்டார்கள். இதற்குப் பிறகும் சில பித்அத் வழிகேடு, சில பித்அத் நல்லது என்று கூறுவது நபியவர்களின் ஹதீஸுக்கு தவறான விளக்கம் கொடுத்ததாக ஆகாதா? இனிமேலாவது சிந்தித்துப் பார்க்கட்டும்!

பித்அத் வாதிகள் எடுத்து வைக்கும் ஆதாரங்கள்?

1. யார் இஸ்லாத்தில் நல்ல ஒரு காரியத்தை ஆரம்பிக்கின்றாரோ அவருக்கு அதற்குரிய நன்மையும், (அவருக்குப் பின்) செய்பவர்களுக்குக் கிடைக்கும் நன்மையில் ஒரு பங்கும் இவருக்கு உண்டு. ஆனால் அவர்களின் நன்மையில் ஏதும் குறைக்கப்படமாட்டாது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

அசத்தியவாதிகளின் புரிதல்

இந்த ஹதீஸில் நபி (ஸல்) அவர்கள், புதிதாக நல்ல காரியத்தை இஸ்லாத்தில் ஆரம்பிக்கலாம் என அனுமதி அளித்திருக்கின்றார்கள். ஆகவே நல்ல பித்அத்தைச் செய்வது ஆகுமானதாகும்.

தெளிவு

இது நீளமான ஹதீஸின் ஒரு பகுதியாகும். அந்த ஹதீஸை முழுமையாகப் படித்தால் தெளிவு கிடைத்து விடும். அதாவது நபி (ஸல்) அவர்களிடத்தில் மிக வறுமை நிலையில் சில நபித் தோழர்கள் வந்தார்கள். அதைப்பார்த்த நபி (ஸல்) அவர்கள் தன் தோழர்களைப் பார்த்து, அவர்களுக்கு தர்மம் செய்யும்படி வற்புறுத்தினார்கள். இதைக் கேட்ட ஒரு நபித் தோழர் தன் வீடு சென்று, தன் கை நிரம்பிய அளவு வெள்ளிக் காசுகளைக் கொண்டு வந்து அவர்களுக்குக் கொடுத்தார். இதைப்பார்த்த மற்ற நபித் தோழர்களும் தங்கள் வீடுகளுக்குச் சென்று உணவு மற்றும் ஆடைகளைக் கொண்டு இரு குவியல்களாகக் குவித்தார்கள். இப்போதுதான் நபி (ஸல்) அவர்கள் மேற்கூறிய வார்த்தையைக் கூறினார்கள்.

அதாவது ஒரு நல்ல செயலை முதலில் யார் செய்கின்றாரோ அவரைப் பார்த்து செய்பவர்களின் நன்மையில் ஒரு பங்கு இவருக்கும் கிடைக்கும். இதுதான் அந்த வார்த்தையின் விளக்கமாகும். நல்ல பித்அத் கெட்ட பித்அத் என்பதற்கு இங்கே எந்த ஆதாரமும் இல்லை. நபி(ஸல்) அவர்கள் ஏவியதைச் செய்வது எப்படி பித்அத்தாகும்?

2. உமர் (ரளி) அவர்கள், "இது நல்ல பித்அத்" எனக் கூறினார்கள். (முஅத்தா)

அசத்தியவாதிகளின் புரிதல்

நல்ல பித்அத் இருப்பதினால்தான் இப்படி உமர் (ரளி) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

தெளிவு

இது உமர் (ரளி) அவர்களின் ஆட்சி காலத்தில் நடந்த ஒரு சம்பவமாகும். அதாவது நபி (ஸல்) அவர்கள் மக்களுக்கு தராவீஹ் தொழுகையை மூன்று நாட்கள் ஜமாஅத்தாகத் தொழவைத்தார்கள். அது

ஃபர்ளாக்கப்பட்டு விடும் என்பதால் அவர்களின் மரணம் வரைக்கும் பின்பு ஜமாஅத்தாக மக்களுக்குத் தொழவைக்கவில்லை. நபியவர்களின் மரணத்திற்குப் பிறகு அபூபக்ர் (ரளி) அவர்களின் ஆட்சி காலத்திலும் அப்படியே விடுபட்டிருந்தது. உமர் (ரளி) அவர்களின் ஆட்சி வந்த போது மக்கள் தராவீஹ் தொழுகையை தனிமையில் தொழுவதைப் பார்த்து, இவர்களை ஒரு ஜமாஅத்தாகத் தொழ வைத்தால் நன்றாக இருக்குமே என்று நினைத்து, உபை இப்னு கஃபு, தமீமுத் தாரி (ரளி) என்னும் இரு நபித்தோழர்களை இமாமாக ஆக்கி, அவர்களுக்குப் பின் மக்கள் ஒரு ஜமாஅத்தாக ஒருங்கிணைந்து நின்று தொழுததைப் பார்த்து விட்டே இது நல்ல பித்அத் என்றார்கள்.

இதை வைத்து நல்ல "பித்அத்", கெட்ட "பித்அத்" இருக்கின்றது என்று கூற முடியாது. காரணம் நபி (ஸல்) அவர்கள் மூன்று நாட்கள் மக்களுக்கு ஜமாஅத்தாக தொழவைத்திருக்கிறார்கள். நபியவர்கள் செய்ததைச் நாம் பின்பற்றுவது எப்படி பித்அத்தாகும்?

அப்படியானால் ஏன் உமர் (ரளி) அவர்கள் இது நல்ல பித்அத் என்று கூறினார்களென்றால், பித்அத் என்ற அரபு வார்த்தைக்குரிய நேரடி கருத்தை வைத்தே. பித்அத் என்ற அரபு வார்த்தைக்கு புதியது என்ற அர்த்தமாகும். நீண்ட காலமாக விடுபட்டிருந்த ஸுன்னத்தை புதுப்பித்திருப்பது நல்லது என்ற அர்த்தத்தில்தான் அப்படி கூறினார்களே தவிர, நபியவர்கள் தடுத்த பித்அத்தைப்பற்றி அல்ல. அதாவது நீண்ட காலமாக மக்கள் தனித்தனியாக தொழுததை விட ஒரு ஜமாஅத்தாக இன்று மக்கள் தொழுவது நன்றாக இருக்கின்றதே என்ற அர்த்தத்தில்தான்.

3. மாடிக் கட்டிடங்கள் கட்டுவது, விமானத்தில் மற்றும் வாகனங்களில் பிரயாணம் செய்வது இன்னும் இவைகள் போன்றவைகள்.

அசத்தியவாதிகளின் புரிதல்

இவைகள் அனைத்தும் நபி (ஸல்) அவர்கள் காலத்தில் இருக்கவில்லை. மாறாக புதிதாக உருவானவைகள்தான். இவைகளை உபயோகிப்பதை யாரும் தடுக்கவில்லை. ஆகவே, நல்ல பித்அத்தை செய்வது ஆகுமாகும்.

தெளிவு

இஸ்லாத்தில் ஒன்றை புதிதாக உருவாக்குவதற்குத்தான் பித்அத் என்று

சொல்லப்படும். மாடிக்கட்டிடத்தை, விமானத்தை, வாகனங்களை ஆதாரமாகக் காட்டுவது, பொருத்தமற்ற ஒன்றாகும். இவைகள் மார்க்கத்தோடு சம்மந்தப்பட்டவைகளும் அல்ல.

பித்அத்தினால் ஏற்படும் விளைவுகள்

1. முஸ்லிம் சமுதாயத்திற்குள் பல தவறுகள் ஊடுருவதற்கு மிகப் பெரும் காரணம்.
2. பித்அத் செய்பவர் பித்அத்தை விடாதவரை அவருடைய தவ்பாவை அல்லாஹ் ஏற்றுக் கொள்ளமாட்டான் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (தர்கீப், வதர்கீப்)
3. மறுமையில் கவ்தர் தடாகத்தின் தண்ணீரை அருந்த விடாமல் அவர் தடுக்கப்படுவார். (புகாரீ)

நபியவர்களை நேசிப்பது எப்படி?

நபி (ஸல்) அவர்களை நேசிப்பது அனைத்து முஃமின்களின் மீது கடமையாகும். தன் உயிரை விடவும் நபி (ஸல்) அவர்களை நேசிக்காதவர் உண்மை முஃமினாக முடியாது. நபி (ஸல்) அவர்களை நேசிப்பதென்பது அவர்கள் கொண்டு வந்த மார்க்கத்தை முழுமையாக பின்பற்றுவதாகும்.

யார் என்னை நேசிக்கின்றாரோ அவர் என் வழிமுறைகளை பின்பற்றட்டும் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (பைஹகி)

எதையாவது ஒன்றை நான் உங்களுக்கு ஏவினால், அதில் முடியுமானதைச் செய்யுங்கள். ஏதாவது ஒன்றை நான் உங்களை விட்டும் தடுத்தால் அதை முற்றாகத் தவிர்ந்து கொள்ளுங்கள் என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (நஸாஈ)

நபி (ஸல்) அவர்களின் வழிமுறையை முழுமையாக பின்பற்றி, அவர்கள் தடுத்த அனைத்தையும் தடுத்து நடக்க நம் அனைவருக்கும் அல்லாஹ் வாய்ப்பளிப்பானாக!

பித்அதின் சில உதாரணங்கள்

கதம் ஃபாத்திஹா, மௌலூது ஓதுதல், ஸலாத்துன் நாரியா ஓதுதல், மிஃராஜ் & பராஅத் இரவுகளில் விஷேடமாக விழித்து

வணங்குதல், அன்று பகல் நோன்பு நோற்பது, நபியவர்கள் காட்டித் தராத விதத்தில் சில எண்ணிக்கைகளில் சப்தமாக இசையுடனும், ஆடலுடனும் திக்ருச் செய்தல், ரஜப் மாதத்தில் உம்ரா செய்வது நபிவழி என்ற புரிதல், ஐவேளை தொழுகைக்குப்பின் நபியவர்கள் கற்றுக் கொடுத்த துஆக்கள், தஸ்பீஹாதுக்கள், திருக்குர்ஆன் வசனங்கள் இந்த அனைத்து ஸுன்னதுகளையும் தனி தனியாக செய்வதை விட்டு விட்டு இமாமுடன் ஆமீன் ஆமீன் என்று சப்தமாக கூறி கூட்டு துஆ செய்தல், (ஹனஃபி மத்ஹபின் அடிப்படையில் ஆமீன் ஆமீன் என்று சப்தமிட்டு கூறுவது மக்ரூஹ் ஆகும்), அல்லது ஜமாஅத் தொழுகை முடிந்தவுடன் மேற்கூறப்பட்ட விதத்தில் நபிவழியை பின்பற்றாமல் எழுந்து சென்று விடுவது தான் ஸுன்னத் என்று தவறாக விளங்குவது, இன்னும் பல...

இவைகள் அனைத்தையும் விட்டுவிட்டு மனோ இச்சையை மார்க்கமாக ஆக்க முயலாமல் அல்லாஹ்வை அஞ்ச வேண்டும்! இதைத்தான் காலம் காலமாக சத்திய பாதையில் பயணித்த சஹாபாக்களும், சங்கையான நான்கு மத்ஹபுகளின் இமாம்களும் புரிந்து வந்தனர்.

اَفَرَءَيْتَ مَنِ اتَّخَذَ اِلٰهَه هَوٰىهُ وَاَضَلَّهُ اللّٰهُ عَلٰى عِلْمٍ وَّخَتَمَ عَلٰى سَمْعِه وَقَلْبِه
وَجَعَلَ عَلٰى بَصَرِه غِشٰوَةً فَمَنْ يَّهْدِيْهِ مِنْ بَعْدِ اللّٰهِ اَفَلَا تَذَكَّرُوْنَ

(நபியே!) தன்னுடைய மனோ இச்சையை(த் தான் வணங்கும்) தெய்வமாக எடுத்துக்கொண்ட ஒருவனை நீங்கள் கவனித்தீர்களா? அவனுக்கு(ப் போதுமான) கல்வி இருந்தும் (அவனது பாவத்தின் காரணமாக) அல்லாஹ் அவனைத் தவறான வழியில் விட்டு, அவனுடைய செவியின் மீதும், உள்ளத்தின் மீதும் முத்திரையிட்டு விட்டான். அவனுடைய பார்வையின் மீதும் ஒரு திரையை அமைத்து விட்டான். அல்லாஹ் இவ்வாறு செய்த பின்னர், அவனை யாரால்தான் நேரான வழியில் செலுத்த முடியும்? (இதனை) நீங்கள் கவனித்துப் பார்க்க வேண்டாமா? (அல்குர்ஆன் 45:23)

யார் இந்த அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்?

சமூக வலைதளங்களில் இன்று சர்வசாதாரணமாக அனாச்சாரங்களை, பித்அதுகளை மொத்தமாகவும் சில்லரையாகவும் மார்க்கப் பெயரில்

வியாபாரமாக செய்வதற்கு மிகப் பெரிய முயற்சிகள் எடுக்கப்படுகின்றன. அனாச்சாரங்களை, பித்அதுகளை இனம் கண்டு கொள்ளாமல் சிந்தனை தெளிவைப் பெறாமலும் கொடூரமான இந்த தொற்று நோய்க்கு பொது மக்கள் பலர் சுலபமாக பலியாகிக் கொண்டிருகின்றனர்.

வயிற்று பிழைப்புக்காக மனோ இச்சைகளை மார்க்கமாக மாற்ற நினைக்கும் சிலரின் இறையச்சமின்மையாலும், மறுமையைப் பற்றிய எந்த பயமும் இல்லாததாலும் நமது சமூகம் வழிகேடுகளுக்கும், மூடநம்பிக்கைகளுக்கும் பலியாகிக் கொண்டிருக்கிறது.

இதைப் பற்றி சமூக வலைத்தளங்களில் விழிப்புணர்வு பதிவுகளாக சில தொடர்களை எழுத ஆரம்பித்து மார்க்கத்திற்கு புறம்பான பித்அதுகள் என்று சில விடயங்களை சுட்டிக் காட்டும் பொழுது சிலர் ஸுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கையின் படி இவைகள் எல்லாம் கூடும் என்று மார்க்கத் தீர்ப்பை வழங்கி விடுகிறார்கள்.

அதுமட்டுமல்ல, இது போன்ற பதிவுகளை மக்கள் மன்றத்தில் பதியும் பொழுது நம்மை தவ்ஹீத் இயக்கவாதிகள் என்றும் இயக்கவாதிகளின் கைக்கூலிகள் என்றும் விமர்சிக்கின்றனர். அடியேன் நீங்கள் கூறும் எந்த இயக்கத்தைச் சேர்ந்தவனும் அல்ல. எனது இயக்கம் இஸ்லாம், எனது கொள்கை குர்ஆன், எனது வழி நபி வழி, எனது பாதை சத்திய சஹாபாக்கள் கடந்த பாதை, எனது வழிகாட்டிகள் சங்கையான இமாம்கள், சுருக்கமாக அடியேன் ஒரு முஸ்லிம்.

இறைத்தூதர் (ஸல்) அவர்களை முறையாக நேசிப்போம்!

கீழ்காணும் ஆதாரங்களின் அடிப்படையில் இறை உவப்பை பெற்றுக் கொள்வதே நாம் நபிகளாரின் மீது வைத்திருக்கும் நேசத்திற்கு ஓர் அளவுகோள் என்பதனையும் நினைவில் கொள்ள கடமை பட்டிருக்கின்றோம்.

قُلْ اِنْ كَانَ اٰبَآؤُكُمْ وَاَبْنَآؤُكُمْ وَاِخْوَانُكُمْ وَاَزْوَاجُكُمْ وَعَشِيْرَتُكُمْ وَ اَمْوَالُ اقْتَرَفْتُمُوْهَا وَتِجَارَةٌ تَخْشَوْنَ كَسَادَهَا وَ مَسٰكِنُ تَرْضَوْنَهَا اَحَبَّ اِلَيْكُمْ مِّنَ اللّٰهِ وَرَسُوْلِه وَجِهَادٍ فِىْ سَبِيْلِه فَتَرَبَّصُوْا حَتّٰى يَاْتِىَ اللّٰهُ بِاَمْرِه وَاللّٰهُ لاَ يَهْدِى الْقَوْمَ الْفٰسِقِيْنَ

(நபியே!) நீர் கூறிவிடுவீராக: "உங்கள் தந்தையர், உங்கள் பிள்ளைகள், உங்கள் சகோதரர்கள், உங்கள் மனைவியர், உங்களுடைய உறவினர்கள், நீங்கள் சம்பாதித்த செல்வங்கள் மற்றும் தேக்கநிலை ஏற்பட்டுவிடுமோ என நீங்கள் அஞ்சுகின்ற உங்களுடைய வணிகம் மற்றும் உங்களுக்கு விருப்பமான இல்லங்கள் ஆகியவை அல்லாஹ்வையும், அவனுடைய தூதரையும்விட அவன் வழியில் போராடுவதைவிட உங்களுக்கு நேசமானவையாயிருந்தால், அல்லாஹ் தன்னுடைய தீர்ப்பினை (உங்களிடம்) செயல்படுத்தும் வரை நீங்கள் எதிர்பார்த்திருங்கள்! அல்லாஹ் தீய சமுதாயத்துக்கு நேர்வழி காட்டுவதில்லை." (அல்குர்ஆன் 9:24)

நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அனஸ் பின் மாலிக் (ரளி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: "உங்களில் ஒருவர் யார் தன்னுடைய குழந்தைகள் இன்னும் பெற்றோர் அனைவரையும் விட என்னை நேசராக ஆக்காத வரை அவர் இறைநம்பிக்கையாளராக ஆக மாட்டார்"

(ஸஹீஹுல் புகாரீ

صحيح البخاري 51, صحيح مسلم 44, سنن النسائي 3105, 4105, سنن ابن ماجه 76, سنن الدارمي 3872, مسند أحمد 41821, 11931)

நபிகளாரின் மீதுள்ள நமது நேசம் மார்க்கம் நமக்கு காட்டி தந்திருக்கும் வழிகாட்டுதலுடனும், அதற்குரிய விழுமியங்களுடனும் நம்மை இட்டு சென்றால் அது நேர்வழியாகும். அதே நேரத்தில் வரம்பு மீறிய நேசமும், முறைகேடான, மார்க்கம் காட்டிதராத வழிமுறைகளினால் நபிகளாரின் மீது நாமும் அன்பு செலுத்துகின்றோம் என்ற போலியான கட்டமைப்பு நம்மை வழிகேட்டில் கொண்டு சேர்த்து விடும் என்ற ஓர் அடிப்படையான விழிப்புணர்வை நாம் பெற்றாக வேண்டும் என்று இஸ்லாமிய ஆய்வாளர் சகோதரர் அப்துர் ரஊஃப் உஸ்மான் தங்களின் முனைவர் பட்டபடிப்பிற்காக அவர் சமர்பித்த ஆய்வு நூலாகிய "இறைதூதரின் நேசம் பின்பற்றுவதற்கும் பித்அத் (அனாச்சாரம்) செய்வதற்கும் மத்தியில்" (محبة الرسول بين اتباع و ابتداع-) என்ற புத்தகத்தில் பதிவு செய்துள்ளார்.

நபிகளாரின் மீது நமக்கு நேசம் ஏற்படுகிற அதே நேரத்தில் வரம்பு மீறிய, இஸ்லாம் காட்டிதராத, நபியவர்களோ, அவர்களின் சத்திய சஹாபக்களோ செய்யாத இந்த மீலாது பண்டிகை (பிறந்த நாள்) இன்னும் அதன் தொடரில் ஓதப்படும் மவ்லிதும், இன்னும் பற்பல அனாச்சாரங்களும் ஒரு தவறான வழிகாட்டுதலே ஆகும்.

இந்தியா போன்ற நாடுகளில் அழைப்புப் பணிக்காக இந்த தினங்களை பயன்படுத்தி முஸ்லிம் அல்லாதவர்களுக்கு நபியவர்களின் அறிமுகத்தை செய்வது உகந்தது என்றிருந்தாலும் அது இறுதியாக நபியவர்களின் பிறந்த தினவிழாவை மையமாகத்தான் கொண்டாடப்பட்டதாக மக்களிடம் கருத்து போய் சேரும்.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் ரபீஉல் அவ்வல் மாதம் 12 ல் பிறந்தார்களா? நபியவர்களின் பிறந்த தினம் குறித்து வரலாற்று அறிஞர்களிடம் கருத்து வேறுபாடுகள் உள்ளன. ஆனால், இவர்களின் இறந்த தினம் ரபீஉல் அவ்வல் 12 என்பதில் ஏகோபித்த கருத்து உள்ளது.

இவர்களின் கொண்டாட்டம், பெருமானாரின் உறுதி செய்யப்படாத பிறந்த தினத்தை முன் வைத்தா? அல்லது உறுதி செய்யபட்ட இறந்த தினத்தை முன் வைத்தா? பிறகு நாம் எதை முன்வைத்து சந்தோஷமாக கொண்டாடுகின்றோம்?

இஸ்லாமிய வரலாற்று ஆசிரியர் அல்லாமா இப்னு கதீர் (ரஹ்) அவர்கள் தங்களின் புத்தகமாகிய அல்பிதாயா வந் நிஹாயாவில், நபியவர்கள் பிறந்த நாள் 2 ரபீஉல் அவ்வள், 17 ரபீஉல் அவ்வல் என்று குறிப்பிடுகின்றார்கள். ரமளான் மாதமும் பிறந்த தினமாக கூறப்படுவதும் கூட ஆச்சிரியத்தை அளிக்கின்றது என்று கூறுகின்றார்கள்.[6]

ابن كثير في البداية والنهاية ذكر جميع هذه الأقوال في تحديد هذا اليوم ومنها 2 ربيع الأول– 71 ربيع الأول – وقيل ولد في شهر رمضان أيضاً واستغربه ابن كثير؛ وينظر : ابن هشام، السيرة النبوية، ص821؛ ابن سعد، الطبقات، ص 74.

ஃபாத்திமியாக்கள் தான் முதன் முதலில் (எகிப்து, ஷாம் தேசத்தின் ஷிஆக்களின் ஒரு பிரிவு, அப்பாஸி கிலாஃபத்தை வீழ்த்தியவர்கள்) நான்கு வகையான பிறந்த தினங்களை கொண்டாடியவர்கள்:

1. *நபிகளாரின் (ஸல்) பிறந்த தினம்*
2. *அலீ பின் அபீதாலிப் (ரளி) பிறந்த தினம்*
3. *ஹஸன் (ரளி) பிறந்த தினம்*
4. *ஹுஸைன் (ரளி) பிறந்த தினங்கள்.*

இவர்கள்தான் முதலில் இந்த அனாச்சாரங்களை ஏற்படுத்தியவர்கள் என்று அல்முக்ரிஸி என்ற அறிஞர் கூறுகின்றார்.

ஃபாத்திமிகளின் அரசரான முஸ்தஃலா பில்லாஹி உடைய அமைச்சர் பத்ருல் ஜமாலி என்பவர் அமைச்சராக பதிவியேற்கும் வரை இந்த பித்அத்தான மீலாது பண்டிகை நடந்தேறியது. ஆட்சி பொறுப்பில் வந்தவுடன், முதலில் இந்த அனைத்து பிறந்த தினவிழாக்களை இரத்து செய்தார். ஏனென்றால், இந்த அமைச்சர் நபிவழியை (ஸுன்னாவை) பின்பற்றுவதில் மிகவும் கவனமானவராக இருந்தார். இவருடைய மரணதிற்குப் பின் மீண்டும் இந்த மீலாது விழா அனாச்சாரங்கள் தொடர்ந்தது.

பாலஸ்தீனத்தில் கைபற்றப்பட்ட பைத்துல் மக்திஸை யூதர்களின் கரத்திலிருந்து முஸ்லிம்களுக்கே மீட்டுக் கொடுத்த குர்திய மாவீரர் மன்னர் ஸலாஹுத்தீன் அல் அய்யூபி (ரஹ்) அவர்கள். மிகவும் ஸுன்னாவை பேணுபவராக இருந்தார்கள். தனது முழு அய்யூபிய

6 பார்க்க: (அஸ்ஸீரதுன் நபவிய்யா-இப்னு ஹிஷாம்-பக்கம்:128, அத்தபகாத்-இப்னு ஸஃத்-பக்கம்:47)

அரசாங்கத்தின் கீழ் இருக்கும் இராஜ்ஜியங்களில் இந்த மீலாதுகளை ரத்து செய்து உத்தரவிட்டார். ஆனால், அவரின் தங்கையின் கணவர் அரசர் முஸப்பர் மட்டும் ஏற்க மறுத்தது மட்டுமல்ல. அவருடைய நாட்டில் மீலாது விழா ழுஹரிலிருந்து மறுநாள் ஃபஜ்ர் வரை நடத்தப்பட்டது. அதில் பல சூஃபிகள் கலந்து கொண்டனர். அதில் அவர் மூன்று இலட்சம் பொற்காசுகள் செலவு செய்தார். (நூல்: அல்பிதாயா வந் நிஹாயா, ஆசிரியர்: இமாம் இப்னு கதீர் (ரஹ்) பக்கம்:186, பாகம்-7, சம்பவம்-ஹிஜ்ரீ 650)

وقد احتفل الفاطميون بأربعة موالد : مولد النبي صلى الله عليه وسلم ، وعلي بن أبي طالب وولديه الحسن والحسين -رضي الله عنهم- جميعا . فهم أول من أحدث ذلك كما ذكر المقريزي وغيره . وظلت هذه البدعة يعمل بها حتى جاء (بدر الجمالي) الوزير الأول للخليفة الفاطمي (المستعلي بالله) وكان هذا الوزير شديد التمسك بالسنة، فأصدر أمرا بإلغاء هذه الموالد، وما أن مات (بدر الجمالي) حتى عادت البدعة من جديد .

واستمر الأمر على هذا الحال حتى جاء عهد صلاح الدين الأيوبي ، وكان أيضا من المتمسكين بالسنة ، فألغى هذه الاحتفالات ، وتم تنفيذ هذا الإلغاء في كل أنحاء الدولة الأيوبية ، ولم يخالف في ذلك إلا الملك المظفر الذي كان متزوجا من أخت صلاح الدين .

وقد ذكر المؤرخون أن احتفالات الملك المظفر بالمولد كان يحضرها المتصوفة حيث يكون الاحتفال من الظهر إلى الفجر ، وكان ما ينفق في هذا الاحتفال يزيد عن ثلاثمائة ألف دينار(انظر البداية والنهاية-ابن كثير-ج7-ص681-حوادث سنة036 ه) . من مقال (البدع وأثرها في انحراف التصور الإسلامي) للدكتور الشيخ صالح بن سعد السحيمي حفظه الله تعالى. نشر في مجلة البحوث الإسلامية - (51 / 751) (الجزء رقم : 61، الصفحة رقم: 061-161) نسخة المكتبة الشاملة

நம்முடைய சான்றோர்கள் பித்அத் (அனாச்சாரம்) விடயத்தில் மிகவும் கவனமாகமும், பேணுதலாகவும் இருந்தனர். ஆனால், இன்று வழிகெட்ட பரேல்விகள், இந்த தூய இஸ்லாத்தின் கொள்கை, கோட்பாடுகளை குழி தோண்டி புதைப்பது மட்டுமின்றி, அவர்களின் வழிகெட்ட கொள்கைகளை இஸ்லாமாக மாற்ற முயலுகின்றனர். இந்த உம்மத்தின் எழுச்சி இறைத்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களை பின்பற்றி வாழ்வதில் மட்டுமே இருக்கின்றது. மனோ இச்சைகளை மார்க்கமாக ஆக்க முயன்றால் இவ்வுலகிலே இழிவையும், மறுமையில் வேதனையும் காண நேரிடும். இறைவன் நம்மீது அருள் புரிவானாக!

நபிகளாரின் மீது மார்க்கம் கற்று தந்திருக்கின்ற முறையில் சலவாத்துகளை ஓதுவோம். இந்த ரபீஉல் அவ்வல் மாத்தில் மட்டுமல்ல எப்பொழுதும் ஓதுவோம். நமது நேசம் நபியவர்களின் கட்டளை களையும், ஸுன்னாக்களையும் பின்பற்றுவதில் இருக்க வல்ல அல்லாஹ் நம் மீது அருள் புரிவானாக!

மேலும், (நம்) தூதர் உங்களுக்கு எதைக் கொடுக்கின்றாரோ அதை எடுத்துக் கொள்ளுங்கள். இன்னும், எதை விட்டும் உங்களை விலக்குகின்றாரோ அதை விட்டும் விலகிக் கொள்ளுங்கள்.

(அல்குர்ஆன் 59:7)

மீலாது விழா
கொண்டாடலாமா? கூடாதா?

இதை அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையின் அடிப் படையில் விளக்கம் தரவும் என்று தொடர்ந்து சமூக வலைதளங்களில் நம்மிடத்தில் கேட்கப்படும் பல கேள்விகளில் இதுவும் ஒன்று.

மீலாது விழாவைப் பற்றி ஏற்கனவே பல விளக்கங்கள் தரப்பட்டிருந்தாலும் இந்த நூலின் வாயிலாக கூடுதலான ஆதாரங்களை ஒன்று திரட்டி சமர்ப்பித்திருக்கிறேன். அல்லாஹுதஆலா முறையாக ஸுன்னத்துகளை (நபிவழியை) இனம்கண்டு அதை பின்பற்றி வழிகேடான அனாச்சாரங்களை விட்டும் ஒதுங்கி இருப்பதற்கு நம் அனைவருக்கும் அல்லாஹ் அருள் புரிவானாக!

நபியவர்களை புகழ்வதை மறுப்பவர்கள் குர்ஆனிலிருந்து நபிமொழியிலிருந்து ஆதாரத்தை தாருங்கள். அவ்வாறு ஆதாரம் காண்பிக்கப்பட்டால் உங்களுக்கு ஒரு கோடி பரிசு தருகிறோம் என்று வழமைபோல் இந்த போலி ஸுன்னத் வல் ஜமாத் (அதிகப்) பிரசங்கிகள் ஆங்காங்கே வெற்றுக் கூச்சலிடுகின்றனர்.

நபியவர்களைப் புகழக் கூடாது என்று யார் சொன்னது? நபியவர்கள் மீது சலவாத் சொல்லக்கூடாது என்று யார் சொன்னது? சொல்லுங்கள் சகோதரர்களே!

நபியவர்களின் நேசம் பிரியம் அவர்களைப் பின்பற்றுவதில் (اتباع) மட்டுமே இருக்க வேண்டும். நேசத்தின் அளவுகோல் குர்ஆன் ஸுன்னாவாகவும் அதை சஹாபாக்களின் வழியில் நின்றும் விளங்க வேண்டும்.

நபியவர்களின் நேசம் பிரியத்தை காரணம் காட்டி அவர்கள் காட்டித் தராத வழிகளை மார்க்கமாக ஆக்குவதற்கு முயற்சி செய்யக்கூடாது.

அவ்வாறு செய்தால் அதற்கு ஸுன்னத் என்று சொல்லப்படாது. அதற்கு பெயர் பித்அத் ஆகும்.

ரபீஉல் அவ்வல் மாதம் வந்தவுடனே ஆலிம்களில் சிலர் பரவச நிலையை அடைந்து தங்களது பயான்களிலும், சமூக வலைதளங்களிலும் ஒரு முஸ்லிமுக்கு சந்தோஷமான நாள் என்று சொன்னால் இரண்டு நாட்கள்தான் ஒன்று ஈத் பெருநாள், மற்றொன்று நபியவர்கள் பிறந்தநாள் என்று கூறுவதை நாம் கேட்க முடிகிறது.

மேலும், நபியவர்கள் ரபீஉல் அவ்வல் மாதம் தான் பிறந்தார்கள் என்ற ஆதாரத்தை வழமைபோல் இருட்டடிப்புகளுடன் இமாம் இப்னு கதீர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தங்களின் புத்தகமான “அல்பிதாயா வன்நிஹாயாவில்” குறிப்பிடுவதாக தவறான ஒரு கருத்தை பதிவு செய்கிறார்கள். இதுவே அவர்கள் வழிகேடான பரேல்வியச் சித்தாந்தத்தில் இருக்கிறார்கள் என்பதை நமக்கு தெளிவுபடுத்துகிறது.

“நானெல்லாம் பரேல்வி அல்ல. ஸுன்னத் வல் ஜமாஅத்தை சேர்ந்தவன்” என்று வேறு அவர்கள் பிதற்றிக் கொள்கிறார்கள். அந்தோ பரிதாபம்! அப்பாவிகள். தாங்கள் எந்த கொள்கையில் இருக்கிறோம் என்பதே முதலில் அவர்களுக்கு தெரியவில்லை. இது உண்மையில் மிகப்பெரிய சோதனை.

மீலாது விழா கொண்டாடுவது பற்றிய ஆய்வுகளை இங்கு சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஒரு முக்கியமான விஷயத்தை சொல்ல விரும்புகிறேன். மௌலூத், மீலாத் விழாவை ஆதரிக்கும் நண்பர்களே உங்களுக்கு நான் ஒரு கேள்வி கேட்கிறேன்.

மௌலிது ஓதுவதும், மீலாது விழாவில் காரசாரமாக நபி நேசத்தை சிறப்பு பயானாக பேசுவதும், நபிநேசமாக இறைத்தூதர் அவர்களின் பிரியத்தின் வெளிப்பாடே என்று உங்களது ஆலிம்சா சொல்பவராக நீங்கள் கேட்டால் அவரிடம் நீங்கள், உங்கள் மஹல்லாவில் இருக்கும் அனைத்து முஸ்லிம்களின் வீடுகளுக்கும் அவர் வந்து மௌலிது ஓதி மீலாது பற்றிய விழிப்புணர்வை செய்யுமாறு அழையுங்கள். அவருக்குச் சொல்லுங்கள், “அஞ்சு பைசா கூடகொடுக்க மாட்டோம் பழங்கள், பண்டங்கள், பதார்த்தங்கள் எதுவும் தரமாட்டோம். வந்து தினசரி இந்த ரபீஉல் அவ்வல் மாதம் முழுவதும் இந்த மஹல்லாவில் இருக்கும் அனைத்து வீடுகளிலும் ஓதத் தயாரா?” உண்மையாகவே இந்த கேள்வியை பரேல்விய இமாமிடம் கேளுங்கள் அவரின்

உண்மையான சுயரூபம் உங்களுக்கு தெரியும்.

ஒவ்வொரு மெட்டுக்கும் ஒவ்வொரு ராகத்திற்கும் ஒரு ரேட் என்று பட்டியல் நீண்டு கொண்டே செல்லும். அடுத்த நாளே அவர் அந்த மஹல்லாவை விட்டு வேறொரு மஹல்லாவிற்கு இமாமாக சென்றுவிடுவார்.

(இது எல்லா சங்கையான பள்ளிகளின் இமாம்களுக்கும் சொல்லப் பட்டது அல்ல. வயிற்றுப் பிழைப்புக்காக நடத்தும் சிலர் செய்யும் இழிவான செயலைத்தான் கூறியிருக்கிறேன். இன்னும் தன்மானத்தோடு மௌலிது ஓதுவது கூடாது என்று சொல்லி எத்தனையோ இமாம்கள் இஸ்திகாமத்தாக பணியில் இருக்கிறார்கள். அவர்களுக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.)

சத்தியத்தை உரக்கச் சொல்லும் இமாம்களை ஆதாரத்தின் ஊடாக கருத்தின் ஊடாக எதிர்கொள்ள திராணி இல்லாத இந்த பரேல்விகள் சிலர், தனிநபர் விமர்சனம் என்ற ஆயுதத்தை கையில் எடுத்துள்ளனர். மறுமை நாளில் அவதூறு கூறும் மனிதர்கள் அல்லாஹ்விடத்தில் பதில் சொல்ல வேண்டும் என்ற நிலையை எண்ணி அஞ்சிக் கொள்ளுங்கள்.

அதில் ஷிர்க்கான வார்த்தைகள் உண்டு, இல்லை என்ற விவாதங்கள் ஒருபுறம் இருக்கட்டும். வழிபாடுகள்-இபாதாத்துகள் என்பது அல்லாஹ்வும் தூதரும் நமக்குக் காட்டி தந்தவைகளாகவே இருக்க வேண்டும்.

“அல்அஸ்லு ஃபில் இபாதா அத்தவ்கீஃப்” (الأصل في العبادة التوقيف) என்ற உஸூலின் அடிப்படையில் புதிதாக நபியவர்களின் காலத்திற்கு பின்பு மார்க்கமாக வழிபாடாக ஓதப்படும் கொண்டாடப்படும் அனைத்தும் வழிகேடே!!! அதை எத்தனை பெரிய மார்க்க அறிஞர்கள் கூடும் என்று மார்க்கத் தீர்ப்பை சொன்னாலும் அது ஒரு பித்அத் வழிகேடே.

عن أم المؤمنين عائشة رضي الله عنها قالت : قال رسول الله صلى الله عليه وسلم: (من أحدث في أمرنا هذا ما ليس منه فهو رد) رواه البخاري ومسلم ، وفي رواية لمسلم : (من عمل عملاً ليس عليه أمرنا فهو رد) .

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்: "யார் நமது மார்க்கத்தில் நூதனமாக (மார்க்கமாக) ஒரு விடயத்தை புதியதாக ஏற்படுத்துகிறாரோ அது மறுக்கப்பட வேண்டியது".

(நூல்: ஸஹீஹுல் புகாரீ, தரம்: ஸஹீஹ்-ஆதாரமிக்கது)

"إنه قد انقطع الوحي وتم الدين، أينقص وأنا حي؟!

"வஹீ முற்றுப்பெற்று, மார்க்கம் முழுமை அடைந்து விட்டது. நான் உயிரோடு இருக்கும் பொழுது மார்க்கம் நலிவடைய முடியுமா?"

இந்த ஈமானிய, உயிரோட்டமுள்ள வார்த்தைகளை ஒவ்வொரு இறைநம்பிக்கையாளர்களும் ஆழமாக மனதில் பதிய வைக்க வேண்டும்.

ஆம்! அந்த வார்த்தைகளை ஸைய்யதுனா அபூபக்ர் சித்தீக் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மரணத்திற்கு பின்பு ரித்தத் போரின் போது ஜகாத்தை மறுத்தவர்களை நோக்கி மிகத் தெளிவாக சொன்ன வார்த்தை.

இந்த வார்த்தைகளை கேட்ட ஸைய்யதுனா உமர் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் மக்களுடன் மிருதுவாக நடந்து கொள்ளலாமே என்று சொன்னபொழுது, பதிலளித்தார்கள்:

"உமரே! நீங்கள் ஜாஹிலிய்யாக் காலத்தில் கடுமையானவராகவும் இஸ்லாத்தில் கோழையாகவும் ஆகிவிட்டீர்களா?" என்று கடிந்து கொண்டதை இன்று நாம் அனைவரும் சற்று நினைவுகூரக் கடமைப் பட்டு இருக்கிறோம். (இத்தருணம் ஸைய்யதுனா அபூபக்ர் சித்தீக் அவர்கள் உமராகவும், ஸைய்யதுனா உமர் அபூபக்ராகவும் மாறிய தருணங்கள் என்றே சொல்லலாம்....)

ஸைய்யதுனா உமர் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் இந்த சம்பவத்தை சொல்லி அழ ஆரம்பித்தார்கள்.

குறிப்பாக நபி (ஸல்) அவர்களுடன் குகையில் இருந்தபொழுது, பொந்துகளை தங்களது கால்களால் மறைத்து, பாம்பால் கொத்தப்பட்டு, அதைத் தாங்கிக் கொண்டு நபியவர்களுக்கு தொந்தரவு அளிக்கக்கூடாது என்ற ரீதியில் அசையாமல் இருந்த அபூபக்ர் அவர்களின் கண்களிலிருந்து

வழிந்தோடிய கண்ணீர் துளிகள் தனது மடியில் இளைப்பாறிக் கொண்டிருக்கும் நபி (ஸல்) அவர்களை விழிக்கச் செய்தது. நபியவர்கள் தங்களது முபாரக்கான உமிழ்நீரை அந்த காயத்தில் இட்ட பொழுது உடனே குணமானார்கள். அந்த இரவில் அபூபக்ர் (ரளி) அவர்கள் பெற்றிருந்த பாக்கியத்திற்கு உமர் (ரளி) அவர்கள் தனது அனைத்து நாட்களையும் சமமாகக் கருதினார்கள்.

(நூல்: மனாகிபு அபூபக்ர் ரளியல்லாஹு அன்ஹு,
மிஸ்காதுல் மஸாபீஹ் 9/3890)

அப்படிப்பட்ட ஸைய்யதுனா அபூபக்ர் ரளியல்லாஹு அன்ஹு அவர்களின் "வஹீ முற்றுப்பெற்று, மார்க்கம் முழுமை அடைந்த விட்டது, நான் உயிரோடு இருக்கும் பொழுது மார்க்கம் நலிவடைய முடியுமா?" என்ற வார்த்தைகளை ஒவ்வொரு மார்க்க அறிஞரும் ஆழமாக உணர வேண்டும். சத்தியத்தை உரக்கச் சொல்லி கொடுத்த தாய் மத்ரஸாக்களான தாருல் உலூம் தேவ்பந்த், ஸஹரான்பூர், நத்வதுல் உலமா, அல் பாக்கியாதுஸ் ஸாலிஹாத் இன்னும் பல இஸ்லாமிய கலாச்சாலைகளிலிருந்து ஆலிம் ஸனது பெற்ற உலமாக்களே! சற்று விழித்துக் கொள்ளுங்கள்! இந்த கல்வி ஸ்தாபனங்களில் நீங்கள் பெற்ற உறைமோர் உங்களிடம் கொஞ்சமாவது இருக்குமே அது எங்கு போனது?

அன்று மார்க்கம் கேள்வி குறியாக்கப்பட்ட பொழுது, சத்திய சஹாபாக்கள் நபியவர்களின் மரணத்தினால் தாங்க முடியாத துயரத்தில் வீழ்ந்திருந்த அந்த தருணத்தில் அபூபக்ர் (ரளி) அவர்களின் வார்த்தைகள் வரலாற்று ஏடுகளில் தங்கத்தால் பொறிக்கப்பட வேண்டிய வார்த்தை களாக இஸ்லாத்தை மீண்டும் புத்துணர்ச்சியுடன் இயங்க வைத்தது. இன்று மார்க்கத்தின் பெயரில் அரங்கேற்றப்படும் மௌலூது, மீலாது போன்ற அனாச்சாரங்கள் நீங்கள் உயிரோடு இருக்கும் பொழுது வளர விடலாமா? மார்க்கமாக்க விடலாமா?

இறைக் கட்டளைகளை இறைத்தூதரிடமிருந்து முறையாக நம்மிடம் சேர்த்தவர்கள் இந்த சஹாபாக்கள்தான். அவர்களை விடவா நாம் இறைத்தூதரை அதிகமாக நேசிக்கிறோம்?

இந்த ரபீஉல் அவ்வல் மாதத்தில்தான் மூன்று முக்கியமான சம்பவங்கள் நடந்தது. நபியவர்களின் ஹிஜ்ரத், மரணம், பிறப்பு (இந்த நாளில் என்பது ஆதாரமில்லை என்று இருந்தாலும் ஒரு வாதத்திற்கு).

நபியவர்களின் காலத்தில் சஹாபாக்கள் நபியவர்களின் பிறந்தநாளை ஏன் கொண்டாடவில்லை? ஹிஜ்ரத் நாளை நினைவு கொண்டு ஏன் கொண்டாடவில்லை? மரணத்திற்குப் பின்பு ஏன் அவர்கள் துக்கம் அனுசரிக்கவில்லை?

சஹாபாக்களின் காலத்திலும் அவர்களுக்குப் பின் வந்த தாபியீன்கள் காலத்திலும், சங்கையான 4 மத்ஹபுகளின் இமாம்களும் மீலாது விழா கொண்டாடப்படவில்லை!

ஹிஜ்ரீ நான்காம் நூற்றாண்டின் இறுதியில்தான் இந்த அனாச்சாரம் மார்க்க நிறம் பூசப்பட்டது. இதை இமாம் அல் மக்ரீஸி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தங்களின் அல்கிதது (الخطط) என்பதில் 2/436 ல் கூறுகிறார்கள். மீலாதை மார்க்கமாக பார்க்க நினைக்கும் இவர்கள் முன்வைக்கும் வசனம்தான் இது:

وَاَمَّا بِنِعْمَةِ رَبِّكَ فَحَدِّثْ

மேலும், (உம்மீது புரிந்துள்ள) உமதிரட்சகனின் அருட்கொடையைப் பற்றி (அவனுக்கு நன்றி தெரிவிக்கும்பொருட்டு) அறிவித்துக் கொண்டிருப்பீராக! *(அல்குர்ஆன் 93:11)*

“நபியவர்கள் பிறந்தது அருட்கொடைதானே?” என்று கேட்டு “ஆம்!” என்று பதில் சொன்னால் மீலாது விழா கொண்டாட அல்லாஹ்வே அனுமதி அளித்துள்ளான் என்று மண்டைக்கும் மூளைக்கும் சம்பந்தமில்லாத ஒரு ஆதாரத்தை சொல்வார்கள்.

மேலும், அந்த நாளன்று நபியவர்களின் வாழ்க்கை வரலாறு பேசப் படுகிறது என்ற காரணத்தினால் மீலாது விழாவை கொண்டாடுவதற்கு பல அறிஞர்கள் அனுமதி அளித்துள்ளார்கள் என்ற மார்க்கத் தீர்ப்புகளையும் மேற்கோள் காட்டுவார்கள். குழம்பி விடாதீர்கள் தெளிவாக இருங்கள்.

நபி (ஸல்) அவர்கள் பிறந்த பொழுது மகிழ்ச்சியின் மிகுதியால் அபூ லஹப் தனது அடிமைப் பெண்ணான துவைபா அல்அஸ்லமிய்யாவை உரிமை விட்டார்கள். அதனால், அவருக்கு மறுமையில் வேதனை குறைக்கப்படும் என்ற ஆதாரத்தின் அடிப்படையில் மீலாது கொண்டாடலாம் என்கிறார்கள். அந்தக் காலகட்டத்தில் பெண் குழந்தையாக இருந்தால் உயிரோடு புதைப்பார்கள். ஆனால், ஆண் குழந்தையாக தனது சகோதரன் மகனாரான நபியவர்கள் பிறந்திருப்பதால் மகிழ்ச்சி அடைந்து இருக்கிறார் என்றுதான் எடுத்துக்

கொள்ள வேண்டுமே தவிர, மீலாது கொண்டாடுவதற்கு காஃபிரான ஒரு மனிதரை வைத்து ஆதாரமாக எடுக்கக்கூடாது. அவனின் பெயரில் ஒரு வசனமே அவனை இழிவுபடுத்தி இறங்கியிருக்கிறது.

تَبَّتْ يَدَا اَبِىْ لَهَبٍ وَّتَبَّ

அபூலஹபின் இரு கைகள் நாசமடைக! அவனும் நாசமாவானாக! (அல்குர்ஆன் 111:1)

மீலாது விழா கூடும் என்று அவர்கள் முன்வைக்கும் மற்றுமோர் ஆதாரம்

இமாம் பைஹகீ அனஸ் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் ஊடாக அறிவிக்கிறார்கள்: நபியவர்கள் தனக்குத்தானே நுபுவ்வதுக்கு பின் அகீகா கொடுத்துக் கொண்டார்கள். அதேபோல், அபூதாலிப் அவர்களும் நபியவர்கள் பிறந்த உடன் அகீகா கொடுத்தார்கள். எனவே, ஒவ்வொரு வருடமும் சந்தோஷத்தில் மீலாது விழாவை கொண்டாடலாம் என்று ஆதாரம் எடுக்கிறார்கள்.

இந்த நபிமொழியை அறிவித்த இமாம் பைஹகி இது "முன்கர்", ஹதீஸ் வகையைச் சேர்ந்தது என்றும் இமாம் நவவி அவர்கள் "அசத்திய மானது" என்று தங்களின் புத்தகமான ((8/431) ((المجموع) அல்மஜ்மூவிலும், இப்னு ஹஜர் அஸ்கலானி அவர்கள் ((9/509) ((الفتح): அல்ஃபதஹிலும் "ஆதாரத்திற்கு தகுதி இல்லாதது" என்றும் குறிப்பிடுகிறார்கள்.

أنَّهم يَستدِلُّون على جوازِ الاحتفالِ بيومِ مولدِ النبيِّ صلَّى اللهُ عليه وآله وسلَّم بما رواه البيهقيُّ في سُننه، عن أنسٍ رضِيَ الله عنه، أنَّ النبيَّ صلَّى الله عليه وسلَّم عقَّ عن نفْسِه بعدَ النُّبوَّة، ويقولون: هذا رسولُ الله قد عقَّ عن نفْسِه فرَحًا بمولدِه، مع أنَّ أبا طالبٍ قد عقَّ عنه يومَ وِلادتِه، وفي ذلك دَليلٌ على جوازِ تَكرارِ الفرحِ مَرَّةً بعدَ مرَّةٍ.

وهذا الحديثُ كما ذَكر البيهقيُّ نفْسُه عَقِبَه: (حديثٌ مُنكَر)، وقال النوويُّ في ((المجموع)) (8/134): (باطلٌ). وقال ابنُ حَجرٍ العسقلانيُّ في ((الفتح)) (9/905): (لا يَثبُت)؛ فسَقطَ الاحتجاجُ به أصلًا، على أنَّه لو ثبَتَ لم يكُن فيه دليلٌ أيضًا لهم؛ لاختِلافِ ما بين هذا الفِعلِ وما بَينَ الاحتِفالِ بالمولِدِ كلَّ عامٍ؛ فهو قياسٌ مع الفارِقِ.

ஒடுக்கத்துப் புதன் இஸ்லாத்தில் உண்டா?

"ஒடுக்கத்துப் புதன்" என்றால், "இறுதிப் புதன்" என்பது பொருளாகும். "ஸஃபர்" (صفر) மாதத்தின் இறுதியில் வரும் புதன் கிழமை. ஒடுக்கத்துப் புதன் என சடங்குவாதிகளினால் அழைக்கப்படுகிறது. ஒடுக்கத்துப் புதனில் துன்பங்கள், கஷ்டங்கள் இறங்குகின்றன என்றும், அல்குர்ஆனில் "ஸலாம்" (سلام) என்ற சொல்லைக் கொண்டு ஆரம்பமாகும் 7 ஆயத்துக்களை வாழை இலையில், அல்லது பாத்திரத்தில் எழுதி, அதை தண்ணீரால் கரைத்துக் குடித்தால் ஒடுக்கத்துப் புதனின் தோஷங்கள் பீடிக்காது என்றும் வாதிடுகின்றனர்.

இம்மூட நம்பிக்கை, அல்குர்ஆன், ஹதீஸ், சஹாபாக்களின் முன்மாதிரி ஆகியவைகளுக்கு முற்றிலும் முரண்பட்டதாகும். இது பற்றிய தெளிவை பின்வருமாறு பார்க்கலாம்:

அரேபிய மாதங்கள்

1. அல் முஹர்ரம் (المحرم),
2. ஸஃபர் (صفر),
3. ரபீஉல் அவ்வல் (ربيع الأول),
4. ரபீஉல் ஆகிர் (ربيع الآخر),
5. ஜுமாதல் ஊலா (جمادى الأولى),
6. ஜுமாதல் உக்ரா (جمادى الآخرة),
7. ரஜப் (رجب),
8. ஷஃபான் (شعبان),
9. ரமளான் (رمضان),
10. ஷவ்வால் (شوال),
11. துல் கஃதா (ذو القعدة),
12. துல் ஹிஜ்ஜா (ذو الحجة)

இவைகளில் பின்வரும் நான்கு மாதங்கள் புனிதமானவைகளாகும்: 1.துல் கஃதா (11வது மாதம்), 2.துல் ஹிஜ்ஜா (12வது மாதம்), 3.அல் முஹர்ரம் (1வது மாதம்), 4.ரஜப் (7வது மாதம்)

இவைகளில் மூன்று மாதங்கள் தொடர்ச்சியாகவும் ஒரு மாதம் தனியாகவும் உள்ளது. இதுபற்றி அல்லாஹ் அல்குர்ஆனில் பின்வருமாறு கூறுகிறான்:

إِنَّ عِدَّةَ الشُّهُورِ عِنْدَ اللهِ اثْنَا عَشَرَ شَهْرًا فِي كِتَابِ اللهِ يَوْمَ خَلَقَ السَّمَاوَاتِ وَالْأَرْضَ مِنْهَا أَرْبَعَةٌ حُرُمٌ ذَلِكَ الدِّينُ الْقَيِّمُ فَلَا تَظْلِمُوا فِيهِنَّ أَنْفُسَكُمْ (سورةالتوبة : 63)

“அல்லாஹ்வின் பதிவேட்டில் உள்ளபடி, வானங்களையும், பூமியையும் படைத்த நாள் முதல், மாதங்களின் எண்ணிக்கை அல்லாஹ்விடம் பன்னிரண்டாகும். அவற்றில் நான்கு மாதங்கள் புனிதமானவை. (அல் குர்ஆன் 9:36)

நபி (ஸல்) அவர்கள் புனித மாதங்களின் பெயர்களைக் குறிப்பிட்டு விளக்கியுள்ளார்கள். (புகாரீ 4662, முஸ்லிம் 4354)

இப்புனித மாதங்களில் யுத்தம் புரிவது தடுக்கப்பட்டுள்ளது. இதை அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்:

يَسْأَلُونَكَ عَنِ الشَّهْرِ الْحَرَامِ قِتَالٍ فِيهِ قُلْ قِتَالٌ فِيهِ كَبِيرٌ

புனித மாதத்தில் போர் செய்வது குறித்து உம்மிடம் கேட்கின்றனர். அதில் போரிடுவது பெருங்குற்றமே என்று கூறுவீராக! (அல் குர்ஆன் 2:217)

புனித மாதங்களை மதிக்கும் பழக்கம், மக்காகாஃபிர்களிடமும் காணப் பட்டு வந்தது. ஸஃபர் மாதம், பீடை மாதம் என்பது “ஜாஹிலிய்யா” மக்களின் நம்பிக்கை.

இஸ்லாம் தோன்றுவதற்கு முன்பு வாழ்ந்த ஜாஹிலிய்யா மக்கள், ஸஃபர் (2ஆம்) மாதம், அபசகுன மாதம் என நம்பினார்கள். இம்மூட நம்பிக்கையை, இஸ்லாம் அழித்து ஒழித்தது. இதை பின்வரும் ஹதீஸ் உறுதிப்படுத்துகின்றது.

عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ : قَالَ النَّبِيُّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ:

لا عَدْوَى وَلاَ صَفَرَ، وَلاَ هَامَةَ ، رواه البخاري (0775)ومسلم (9475)

“ஊரோடி நோயோ, ஸஃபர் மாத அபசகுனமோ, ஆவி நம்பிக்கையோ (இஸ்லாத்தில்) அறவே கிடையாது” என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்.

(புகாரீ 5770, முஸ்லிம் 5749)

ஜாஹிலிய்யா (அறியாமைக்)காலங்களில், மக்கள் ஸஃபர் மாதம் ஒரு கெட்ட மாதம் என நம்புவதின் பின்னணி என்னவெனில் 11,12, 1 மாதங்கள் புனித மாதங்களாக இருப்பதால், யுத்தம் செய்வதை தவிர்த்துக் கொள்வார்கள். 2ஆம் மாதமாகிய ஸஃபர் மாதம் வந்துவிட்டால், யுத்தங்களை ஆரம்பிப்பார்கள். இதனால் இம்மாதத்தில் துன்பங்கள், துயரங்கள் ஏற்பட்டன. அவர்களாகவே தேடிக்கொண்ட அவலங்களை, இன்னல்களை அறியாமை காரணமாக, ஸஃபர் மாதத்தின் மீது சுமத்திவிட்டார்கள்.

ஸஃபர் மாதம் கெட்ட சகுணமுள்ள மாதம் என்ற மூட நம்பிக்கையை, தற்போது, சடங்குவாதிகளும் பரப்பி பாமர மக்களை ஏமாற்றி வருகின்றனர்.

இஸ்லாத்தில் துரதிஷ்ட நாட்கள் கிடையாது. இஸ்லாத்தில் அதிர்ஷ்ட காலம் என்ற நம்பிக்கை கிடையாது. திருமணம், தொழில் ஆரம்பம் போன்றவைகளுக்கு முகூர்த்தம், சுபநேரம் பார்ப்பது, சனாதன ஆரிய இந்துமத கலாச்சாரமாகும்.

இராசி மண்டலத்தின் 12 பிரிவுகளான, 1. மேஷம் 2. விருஷபம் 3. மிதுனம் 4. கடகம் 5. சிம்மம் 6. கன்னி 7. துலாம் 8. விருச்சிகம் 9. தனுஷ் 10. மகரம் 11. கும்பம் 12. மீனம் ஆகியவைகள், மனிதனில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என நம்புவது சில கிரேக்க தத்துவ ஞானிகளின் நம்பிக்கையாகும். இந்நம்பிக்கையின் மூலம் ஜோதிட நம்பிக்கை, கிரக வணக்கம் ஆகியவை தோன்றின. கிரகங்கள், மனிதனின் செயற்பாடுகளில் தாக்கம் விளைவிக்க முடியாது. ஆதியில் எழுதப்பட்ட விதி ஏட்டில் உள்ளபடி, மனிதன் தனது சுய இஷ்டப்படி செயலாற்றிக் கொண்டிருக்கிறான்.

ஒரு நாளில் முஸ்லிம் அல்லாஹ்வுக்கு திருப்தியளிக்கும் செயலைச் செய்தால், அதுவே அவனுக்கு நல்ல நாளாகும். அதில் பாவமான காரியத்தில் ஈடுபட்டால் அதுவே அவனுக்கு கெட்ட நாளாகும்.

இந்த அடிப்படையில்தான் அல்லாஹ், குர்ஆனில் ஆணவம்

கொண்ட 'ஆத்' கூட்டத்தினரை அழித்த நாள் பற்றிக் கூறும் போது, அது அவர்களுக்கு கெட்ட நாட்கள் எனக் கூறுகிறான்:

{كَذَّبَتْ عادٌ فَكَيْفَ كانَ عَذابِي وَنُذُرِ، إِنَّا أَرْسَلْنا عَلَيْهِمْ رِيحاً صَرْصَراً فِي يَوْمِ نَحْسٍ مُسْتَمِرٍّ} سورة القمر : 81

'ஆத்' சமுதாயத்தினரும் (ஹூத் நபியை) பொய்யர் எனக் கூறினர். எனவே, வேதனையும், எனது எச்சரிக்கையும் எவ்வாறு இருந்தன (தெரியுமா)?!!! தொடர்ச்சியான (அவர்களுக்கு) கடுமையான நாட்(களில்), அவர்களுக்கு, கடும் சப்தத்துடன் கூடிய குளிர்க்காற்றை நாம் அனுப்பினோம். (அல் குர்ஆன் அல்கமர்: 18,19)

فَأَرْسَلْنا عَلَيْهِمْ رِيحاً صَرْصَراً فِي أَيَّامٍ نَحِساتٍ لِنُذِيقَهُمْ عَذابَ الْخِزْيِ فِي الْحَياةِ الدُّنْيا (سورة فصلت :61)

கடுமையான நாட்களில் அவர்கள் (ஆத் கூட்டம்) மீது கடும் சப்தத்துடன் குளிர் காற்றை அனுப்பினோம். (அல் குர்ஆன் புஸ்ஸிலத்:16)

وَأَمَّا عادٌ فَأُهْلِكُوا بِرِيحٍ صَرْصَرٍ عاتِيَةٍ (6)
سَخَّرَها عَلَيْهِمْ سَبْعَ لَيالٍ وَثَمانِيَةَ أَيَّامٍ حُسُوماً (سورة الحاقة : 6)

'ஆத்' சமுதாயத்தினரோ, மிகக் கொடிய காற்றால் அழிக்கப்பட்டனர். அக்காற்றை கடுமையான ஏழு இரவுகளிலும், எட்டு பகல்களிலும் அவர்களுக்கு எதிராக சாட்டிவிட்டான்.
(அல் குர்ஆன் அல்ஹாக்கஹ்: 6 -7)

இந்த ஆயத்களில் கூறப்பட்டுள்ள 'நஹ்ஸ்' (نحس), 'ஹுஸுமன்' (حسوما) என்ற சொற்கள் அந்நாட்கள் வேதனை காரணமாக 'ஆத்' சமுதாயத்தினருக்கு கெட்ட நாட்களாக மாறிவிட்டது என்ற பொருளை தாங்கி நிற்கின்றதே தவிர பரேல்விகள் கூறுவது போன்று அந்நாட்கள் துரதிர்ஷ்டமான நாட்களாக இருக்கவில்லை. எனவே, ஸஃபர் மாதத்தில் ஏனைய மாதங்கள் போன்று நல்ல நிகழ்வுகளும் இடம் பெறலாம். தீய நிகழ்வுகளும் இடம் பெறலாம்.

ஸஃபர் மாதத்தில் துன்பங்கள், தோஷங்கள் இறங்குகின்றன என்ற மூட நம்பிக்கை கி.பி 1738ல் மரணித்த 'தைரபி' (الديربي) எழுதிய

'முஜர்ரபாத்' (المجربات) என்ற சூனிய, ஜோதிட நூலில் பதியப்பட்டுள்ளது. அரபி மொழியில் எழுதப்பட்ட நூற்களெல்லாம், இஸ்லாத்தை பிரதிபலிக்கின்றன என நம்பி ஏமாந்த அத்வைத மவ்லவி, இச்சூனிய நூலை ஆதாரமாகக் காட்டுகின்றார். மேலும், "ஸஃபர் மாதம் முடிந்து விட்டதென்று என்னிடம் சுபச் செய்தி சொல்பவனுக்கு சுவனத்தைக் கொண்டு நான் சுபச் செய்தி சொல்வேன்"

(من بشَّرني بخروج صفر بشرته بالجنة) الموضوعات للصغاني

என்ற ஹதீஸ் எந்த ஹதீஸ் கலை நூற்களிலும் இல்லாத அடிப்படையற்ற பொய்யான ஹதீஸாகும். ஆனால், அதே அத்வைத மவ்லவி, இந்த ஹதீஸ் ஹிஜ்ரீ 808 ல் மரணித்த அத்தமீரி (الدميري) எழுதிய "ஹயாதுல் ஹயாவன" (மிருக உலகம்) என்ற நூலில் பதியப்பட்டிருப்பதாக குறிப்பிட்டிருப்பது நகைச்சுவைக்குரிய விஷயமாகும்.

சில தரீகாவாதிகள், நபி (ஸல்) அவர்களின் மரண நோய், ஸஃபர் மாதம் இறுதியில் ஆரம்பமாகியது. அதனால், அந்தமாதம் அபசகுனம் என்று வாதிடுகின்றார். அப்படியானால், நபியவர்கள் மரணித்தது ரபீஉல் அவ்வல் மாதமாகும். மரணம் என்பது நோயை விட பெரிய இழப்பாகும். எனவே, அவர்கள் ரபீஉல் அவ்வல் மாதத்தை அபசகுன மாதமாகக் கருதவேண்டும். ஆனால், அவர்கள் அம்மாதத்தைக் கொண்டாடுகின்றார்களே!

புதன் கிழமை சம்பந்தமான ஏனைய பொய்யான ஹதீஸ்கள் பின்வருமாறு:

(1) روى الخطيب البغدادي في تاريخ بغداد (1384) من طريق مسلمة بن الصلت قال : حدثنا أبو الوزير صاحب ديوان المهدي قال : حدثنا المهدي أمير المؤمنين عن أبيه عن أبيه عن ابن عباس مرفوعا : آخر أربعاء في الشهر يوم نحس مستمر، قال السيوطي قي جمع الجوامع 15/1 : وفي سنده مسلمة بن الصلت ، وهو متروك ، وأورده ابن الجوزي في الموضوعات 37/2 .

"ஒவ்வொரு மாதத்தின் கடைசிப் புதன் கிழமை துரதிர்ஷ்ட

நாளாகும்'' என நபியவர்கள் கூறியதாக இப்னு அப்பாஸ் (ரளி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். இதன் அறிவிப்பாளர் தொடரில், மஸ்லமஹ் பின் ஸல்த் என்ற மிகவும் பலவீனமான ராவி காணப்படுகிறார்.

(2) روى أبو عوانة في مستخرجه (٢٢٠٦) والطبراني في الأوسط (2246) والبيهقي في سننه (68602) من طريق إبراهيم بن أبي حية عن جعفر بن محمد عن أبيه عن جابر مرفوعا : يوم الأربعاء يوم نحس مستمر، قال الهيثمي في مجمع الزوائد 202/4 : وفيه إبراهيم بن أبي حية ، وهو متروك الحديث .

''ஒவ்வொரு புதன் கிழமையும் துரதிர்ஷ்டத்துக்குறிய நாள்'' என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஜாபிர் (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள். இதில் இப்ராஹீம் பின் அபீ ஹய்யா என்ற மிகவும் பலவீனமான அறிவிப்பாளர் காணப்படுகிறார்.

(3) روى ابن حبان في كتاب المجروحين 2/091 من طريق العباس بن الوليد بن بكار عن حماد بن سلمة عن أبي الزبير عن جابر مرفوعا : مَنْ غَرَسَ غَرْسًا يَوْمَ الْأَرْبِعَاءِ فَقَال : سُبْحَانَ الْبَاعِثِ الْوَارِثِ أَتَتْهُ بِأُكُلِهَا ، وفي سنده العباس بن الوليد و هو كذاب

''யாராவது புதன்கிழமை மரத்தை நட்டி, ''ஸுப்ஹானல்லாஹ் அல் பாயித் அல்வாரித்'' என்று கூறினால், அவை அவனுக்கு கனிதரும்'' என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஜாபிர் (ரளி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். இதில், அப்பாஸ் பின் அல் வலீத் என்ற பொய்யர் உள்ளார்.

(4) قالت عائشة رضي الله عنها مرفوعا : لولا أن تكره أمتي لأمرتها أن لا يسافروا يوم الأربعاء ، رواه الديلمي و بيّض له ولده .

''எனது உம்மத்தினர் வெறுக்கமாட்டார்கள் என்றிருந்தால் புதன்கிழமை பயணம் செய்ய வேண்டாம் என்று அவர்களை நான் பணித்திருப்பேன்'' என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக ஆயிஷா (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள். தைலமி அடிப்படை இல்லாத ஹதீஸ்களை தனது ''அல்பிர்தவ்ஸ்'' என்ற நூலில் பதிவு செய்பவர் என்பது பிரபல்யமான விஷயமாகும்.

(5) روى تمّام في فوائده (746) من طريق سلام بن سليمان أبي العباس ثنا فضيل بن مرزوق عن عطية العوفي عن أبي سعيد الخدري مرفوعا ... وَيَوْمُ الْأَرْبِعَاءِ لَا أَخْذَ وَلَا عَطَاءَ ... الحديث، و في سنده سلام بن سليمان ، وهو متروك الحديث، ورواه أبو يعلى في مسنده 3/49 عن ابن عباس : الحديث قال الهيثمي في المجمع : و فيه يحي بن العلاء و هو متروك .

"புதன் கிழமை எடுப்பதும் இல்லை, கொடுப்பதும் இல்லை" என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஸயீதினில் குத்ரி (ரளி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (பவாயித் தம்மாம்: 647) இதில் ஸல்லாம் பின் ஸுலைமான் என்ற மிகவும் பலவீனமான அறிவிப்பாளர் காணப்படுகிறார்.

(6) روى ابن ماجه (8843) من طريق عثمان بن مطر عن الحسن بن أبي جعفر عن محمد بن جحادة عن نافع عن ابن عمر مرفوعا .... لا يبدو جذام ولا برص إلا يوم الأربعاء أو ليلة الأربعاء ، وفي سنده سعيد بن ميمون وعبد الله بن عصمة ، وهما مجهولان ، وقال البوصيري في مصباح الزجاجة 46/4 : هذا إسناد فيه الحسن بن أبي جعفر ، وهو ضعيف ، وقال ابن حبان في المجروحين 99/2 : كان ممن يروي الموضوعات عن الأثبات لا يحل الاحتجاج به .

"வெண்குஷ்டம், கருங்குஷ்டம் இரண்டும் புதன் கிழமையில் தான் வெளிஆகும்" என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக இப்னு உமர் (ரளி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். (இப்னு மாஜா: 3488)

இதில் பலவீனமானவரும், இனங்காணப்படாதவரும் காணப்படுகின்றார்.

(7) قال رسول الله صلى الله عليه وسلم: ما من شيء بدئ في يوم الأربعاء إلا وقد تم ، قال السخاوي في المقاصد الحسنة (349) : لا أصل له .

"புதன் கிழமை ஆரம்பிக்கப்படுகின்ற எந்தவொரு காரியமும்

நிச்சயமாக நிறைவேறும்'' என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக சொல்லப்படுகிறது.

இந்த ஹதீஸ் எந்தவொரு ஹதீஸ் கிரந்தங்களிலும் இல்லாத பொய்யான ஹதீஸாகும். (நன்றி: அஷ்ஷைக் டாக்டர் அஹ்மத் அஷ்ரஃப், இலங்கை 12-10-2020)

சத்தியத்தை அறிய வேண்டும் என்று விரும்பும் சகோதரர்கள் மட்டும் தொடர்ந்து இந்த நூலை படிக்கவும் மற்றவர்கள் கடந்து செல்லலாம்.

சில சகோதரர்கள், ''இன்னுமா பரேல்விய அசத்தியவாதிகள் தங்களது கட்டுக்கதைகளை பொதுமக்களிடம் கூறி வழிகெடுத்து கொண்டிருக்கிறார்கள்? வெகு நாட்களுக்கு முன்பாகவே அவர்களின் முகவரி இல்லாமல் அவர்களின் தாகூதுகளை(அசத்திய கொள்கைகளை) தாபூதில் (சமாதிப் பெட்டிகளில்) அறைந்து புதைக்கப்பட்டு விட்டனவே'' என்று ஆச்சரியமாக கேட்கிறார்கள்!!!!

ஆம் கிட்டத்தட்ட 100 வருடத்திற்கு முன்பாக வட இந்தியாவில் இருந்து வந்து தன்னை நபி என்று வாதிட்ட அஹமத் குலாம் காதியானியின் (لعنه الله) கள்ளக் குழந்தையான அஹமது ரிழா கான் பரேல்வி போன்றோரின் குப்பை சிந்தனைகள் தமிழகத்தில் இறக்குமதி செய்யப்பட்டு அது இலங்கை வரை தமிழ் முஸ்லிம் சமூகத்தினரிடத்தில் மிகப்பெரிய ஒரு வழிகேட்டை வளர்த்து சமாதி வழிபாடுகளையும், ஷிர்க்குகளையும், பித்அத்துகளையும் மொத்தமாகவும், சில்லரையாகவும் விற்றுத்தள்ளி ''போலி ஸுன்னத் ஜமாஅத்தை'' கட்டமைத்தனர்.

இந்த வழிகெட்ட பரேல்விகளின் சில கொள்கைகள்

1. மரணித்தவர்களிடம் துஆ (பிரார்த்தனைகள்) செய்யலாம்.

2. மறைமுகமான ஞானம் அல்லாஹ் அல்லாதவர்களுக்கும் இருக்கிறது.

3. மரணித்தவர்கள் நம்மை பார்க்கலாம், நம்மிடம் வருகை தரலாம், நமது பிரச்சினைகளுக்குத் தீர்வு தரலாம்.

4. வஸீலாவை மரணித்தவர்களிடம் கேட்கலாம்.

5. ஃபாத்திஹா, மௌலிது, சலாத்துன் நாரியா, தர்கா கலாச்சாரம், ஒடுக்கத்து புதன்... இன்னும் பல....

6. மேல் கூறிய வழிகெட்ட ஷீஆக்களின் அனைத்துக் கொள்கை களையும் "அஹ்லுல்பைத்" என்ற லேபிளில் தூய இஸ்லாமாக இறக்குமதி செய்வதற்கு முயற்சி செய்வது.

இது தங்களின் அழைப்புப் பணியாகவோ, தங்களின் கொள்கை யாகவோ தங்களின் உயிர்மூச்சாகவோ கூட கருதி அதை செய்து வந்திருந்தால் பத்தோடு பதினொன்றாக விக்ரக வழிபாட்டை செய்யும் முஷ்ரிகுகளை நாம் கண்டுகொள்ளாமல் நமது பணியை செய்து கொண்டிருப்பது போல் நாம் இருந்திருப்போம், நமக்கு அதில் எந்த பிரச்சினையும் இல்லை.

ஆனால், அப்பாவி பொதுமக்களிடத்திலும், மருந்துக்கும் கூட புத்தகத்தை வாசிக்காத சில அரைகுறை ஆலிம்களிடத்திலும் தாங்கள் செய்து கொண்டிருக்கின்ற இந்த திருகுதாளங்களை "அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கைகள்" என்று கூறி இந்த வழி கேடுகளை நமது முன்னோர்களான சத்திய சஹாபாக்களும், தாபியீன்களும், சங்கையான ஃபிக்ஹு துறை இமாம்களும் இதைத்தான் செய்து வந்தனர் என்ற இருட்டடிப்புகளை பொய்யான கருத்துக்களை அவர்களின் பெயரிலேயே கட்டவிழ்த்து விட ஆரம்பித்தார்கள்.

இந்த வழிகெட்ட அமைப்பின் கொள்கைகளை இந்தியாவில் வேரோடு பிடுங்கி சாய்த்ததில் தாருல் உலூம் தேவ்பந்த் இஸ்லாமிய பல்கலைக்கழகத்திற்கு ஒரு மகத்தான பங்களிப்பு இருந்தது என்பதை யாரும் மறுக்க முடியாது.

தமிழகத்தில் இந்த வழிகேடுகளுக்கு முழுமையான முறையில் முற்றுப்புள்ளி வைக்கும் விதத்தில் சத்தியத்தை உரக்கச் சொன்ன பாக்கியாத்தின் நிறுவனரான அஃலா ஹள்ரத், அல்லாமா அமானி ஹள்ரத், மவ்லானா யஃகூப் காஸிமி, மவ்லானா கலீல் அஹ்மது கீரனூரி, புரசைவாக்கம் மவ்லானா நிஜாமுத்தீன் மன்பயீ ரஹிமஹுமுல்லாஹ் போன்ற பல உலமாக்கள் ஹைஅதுஷ் ஷரீஅத், ஷரீஅத் பாதுகாப்புப் பேரவை என்ற பெயர்களில் மக்களிடத்திலே பல விழிப்புணர்வுகளை செய்து அசத்தியவாதிகளின் வழிகேடுகளை தோலுரித்து மக்கள் மன்றத்தில் சிந்தனைத் தெளிவை கொண்டு வந்தனர்.

ஆனால், இன்று மிகக் கவலைக்குரிய விடயம் என்னவென்றால் இந்த சத்திய உலமாக்களிடத்தில் பயின்ற அதிகமான ஆலிம் உலமாக்கள் உண்மைகளை உரக்கச் சொல்ல தயங்குகிறார்கள். நாம் இதைச் சொன்னால் நமது பணி என்ன ஆகும்? நம்மை மக்கள் வஹ்ஹாபிகள் என்று சொல்வார்களே என்ற சிந்தனைகளால் வாய்மூடி மௌனம் காக்கின்றனர்.

சத்தியத்தை உரக்கச் சொன்ன அந்த அறிஞர்களின் காலத்தில் எந்த பரேல்விய கோமாளிகளோ, அசத்தியவாதிகளோ, ஷைத்தானிய குருவிகளோ தமிழகத்தில் தங்கள் சுயரூபத்தை காட்டவில்லை வாலை சுருட்டி வைத்துக் கொண்டிருந்தனர்.

உண்மையான அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கைகளை மக்கள் மன்றத்திலே உயிரோட்டமாக நல்ல விழிப்புணர்வுடன் களப்பணியாற்றிக் கொண்டிருக்கிற தஃவத்து தப்லீக் ஜமாஅத், ஜம்மியத்துல் உலமா ஹிந்த், ஜமாத்தே இஸ்லாமி ஹிந்த், இந்த சிந்தனை பள்ளிக்கூடத்திலிருந்து வந்த மற்ற ஏனைய அமைப்புகளையும் "வஹ்ஹாபிகள்" என்று மக்களிடம் இந்த வழிகெட்ட பரேல்விகள் விமர்சித்து அவர்களை திசைதிருப்பி மூளைச் சலவை செய்து வருகின்றனர்.

இந்த வரிசையில் தமிழகத்து பரேல்விகளில் சிலர் பொய்யுரைத்து நமது சங்கையான இமாம்களை அவ்வப்பொழுது சமூக வலைதளங்களில் முஷ்ரிக்காகவும், காஃபிராகவும் மாற்றிக் கொண்டிருக்கிறார்கள். அதை நாம் அவ்வப்பொழுது ஆதாரங்களுடன் மக்கள் மன்றத்தில் விளக்கி, அவர்கள் முகத்திரையை கிழித்து உண்மை சுயரூபத்தை காட்டிக் கொண்டிருக்கிறோம். இந்த விதத்தில் சமூக வலைதளங்களில் பின்வரும் செய்தி பதியப்பட்டு இருந்தது.

வலைதள வதந்தி

இமாம் இப்னுல் ஜவ்ஸி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் முஷ்ரிக்கா? என்ற தலைப்பில் வழமையான அவர்களின் பாணியில் கேளிக்கூத்துகளையும் உண்மைக்குப் புறம்பான செய்திகளையும் பின்வருமாறு பதிவிட்டிருக்கிறார்கள். இமாம் இப்னுல் ஜவ்ஸீ ரஹிமஹுல்லாஹ் அவர்கள் சொல்வதை பாருங்கள்...

عن أبي بكر المقري قال: كنت أنا والطبراني وأبو الشيخ في حرم رسول الله صلى

الله عليه وسلم، وكنا على حالة فأثر فينا الجوع، فواصلنا ذلك اليوم، فلما كان وقت العشاء حضرت قبر رسول الله صلى الله عليه وسلم،

وقلت: يا رسول الله الجوع الجوع،

وانصرفت، فقال لي الطبراني

اجلس، فإما أن يكون الرزق أو الموت،

فقمت أنا وأبو الشيخ،

فحضر الباب علوي ففتحنا له

فإذا معه غلامان بقفتين فيهما شيء كثير،

وقال: شكوتموني إلى النبي صلى الله عليه وسلم،

رأيته في النوم فأمرني بحمل شيء إليكم "

ابن الجوزي في "الوفا بأحوال المصطفى" (955/2) 955/2. الذهبي في "تاريخ الإسلام" (8 / 525) "سير أعلام النبلاء" (61 / 004)، و"تذكرة الحفاظ" (3 / 121)

தப்ரானீ ரஹிமஹுல்லாஹ் அவர்களின் வாழ்வில் நடந்த ஒரு சம்பவத்தைக் கொண்டு வருகிறார்கள். அபூபக்ருல் முக்ரீ ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகிறார்கள்:

"நானும் தப்ரானீ இமாமும், அபூ ஷைகும் நபிகளார் (ஸல்) அவர்களின் புனித ஹரமில் இருந்தோம். நாங்கள் அந்த நிலையில் இருந்த போது கடுமையான பசி எங்களுக்கு ஏற்பட்டது. அந்த நாள் முழுக்க அப்படியே நாங்கள் தொடர்ந்தோம். இஷாவுடைய நேரம் வந்ததும் நான் ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் புனித மண்ணறைக்கு வந்தேன்.

நான் சொன்னேன், "யாரஸூலல்லாஹ்! கடுமையான பசி! பசி!"

பின்னர், நான் திரும்பி வந்தேன். அப்பொழுது இமாம் தப்ரானீ என்னிடத்தில் கூறினார்கள். "உட்கார்ந்து கொள், ஒன்று உணவு வரட்டும் அல்லது மரணம் வரட்டும்". நானும் அபூ ஷைகும் எழுந்து விட்டோம்.

அலீயாரின் குடும்பத்தைச் சார்ந்த ஒருவர் வந்தார். எனவே, அவருக்காக நாங்கள் கதவைத் திறந்தோம். அவருடன் சில குழந்தைகள் இரண்டு பாத்திரங்களுடன் அதில் நிறைய பதார்த்தங்களுடன் வந்தார்கள்.

"நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் நீங்கள் முறையிட்டீர்கள் (போலும்), அண்ணாரை நான் கனவில் கண்டேன். எனவே, இதை உங்களுக்கு கொடுக்கச் சொல்லி என்னை ஏவினார்கள்". (இமாம் இப்னுல் ஜவ்ஸியுடைய அல் வஃபா பிஅஹ்வாலில் முஸ்தஃபா, இமாம் தஹபியுடைய மூன்று நூல்கள்: ஸியரு அஃலாமிந் நுபலா 16/400, தாரீஹுல் இஸ்லாம் 8/525, தத்கிரதுல் ஹுஃப்பாழ் 3/121)

வழமைபோன்று இவர்கள் முன் வைத்திருக்கும் இந்த கருத்திற்கு நீண்ட நெடிய விளக்கங்கள் தேவையில்லை. அதை அவர்களின் பதிவில் "என்னப்பன் புதருக்குள்", என்ற பழமொழிக்கு ஏற்ப தாங்களே முன்வந்து ஏற்றுக் கொண்டு, நாம் தற்பொழுது பதிய இருக்கிற மறுப்பை தாங்களே கூறி நமக்கு நேரத்தை மிச்சப்படுத்தி விட்டார்கள். அல்லாஹ் அவர்களுக்கு நேர்வழியைக் காட்டுவானாக!!!

மேற்கூறப்பட்டிருக்கும் இந்த சம்பவங்கள் மிகப்பிரபல்யமான வரலாற்று புத்தகங்களில் இடம் பெற்றிருந்தாலும், அதை தலைசிறந்த இமாம்கள் கூறியிருந்தாலும் "உஸுலுல் ஹதீஸ்" என்ற ஹதீஸ் கலை துறையின் அடிப்படை சட்டத்தின் அடிப்படையில், "ஸீகதுத் தம்ரீழ்", (صيغة التمريض) அதாவது, "இவ்வாறு அறிவிக்கப்பட்டிருக்கிறது, இவ்வாறு கூறப்பட்டிருக்கிறது" என்ற "துகிர,ருவிய", (ذكر- روي) என்ற வார்த்தைகளால் எந்த ஒரு அறிவிப்பு வருமோ அதை நம்பகத்தன்மையை இழந்து விடும் இது இமாம் புகாரீ, முஸ்லிம் ரஹிமஹுமுல்லாஹ் தங்களின் புத்தகங்களில் அங்கீகாரம் பெற்ற நபிமொழிகளுக்கு அவர்கள் வழங்கியிருக்கும் வரைவிலக்கணம்.

وفي صحيح البخاري بعض ذلك ، إلا أنه قليل جدا ، وقد يسلم هذا القليل أيضا . انظر : "كتاب الإلزامات والتتبع" لأبي الحسن الدارقطني ، "ميزان الاعتدال" (4/93-04) ، "مقدمة الفتح" (443) ، "شرح مسلم للنووي" (1/72) ، "سلسلة الأحاديث الضعيفة" (1/241) (2/174-574) (5/812) .

இதன் காரணமாக இமாம் புகாரீ, முஸ்லிம் ஹதீஸ் கிரந்தங்களில் ஒரு சில நபிமொழிகள் கூட பலவீனமானது என்பதை அவர்களுக்குப் பின் வந்த இமாம் தாரகுத்னீ தங்களின் புத்தகமான كتاب الإلزامات والتتبع என்பதில் கூறியதாக கீழ்காணும் புத்தகங்களில் கூறப்பட்டுள்ளது.

"ميزان الاعتدال" (4/93-04) "مقدمة الفتح" (443)، "شرح مسلم للنووي" (72/1)، "سلسلة الأحاديث الضعيفة" (241/1) (2/174-574) (5/812).

இந்த அடிப்படையான ஹதீஸ்கலை சட்டத்தைக் கூட அறியாத இந்த குள்ளநரி பரேல்விகள்!! இமாம் அபுல் ஃபரஜ் அல்ஜவ்ஸி, இமாம் தஹபி ரஹிமஹுமுல்லாஹ் போன்றோர் தங்களது புத்தகத்தில், அல்லாஹ்வின் தூதர் அவர்களின் மண்ணறையில் இஸ்திகாஸா & வஸீலாவை (உதவி கேட்டதாக) தப்ரானீ ரஹிமஹுல்லாஹ் அவர்களே செய்ததாகவும் அது தங்களின் கொள்கையாகவும் இருந்தது என்று கூறுவது நகைப்புக்குரியதாக இருக்கிறது.

மரணித்தவர்களிடத்தில் துஆ செய்வது கூடும் என்று வாதிக்கும் ஷிஆ கொள்கையைச் சேர்ந்த கூராணி போன்ற அறிஞர்கள் எப்பொழுதும் அவர்கள் புத்தகங்களில் இதுபோன்ற அறிவிப்புகளை முன்வைத்து மேற்கோள் காட்டுவார்கள்.

இந்த அறிவிப்பை அறிவிக்கும் அபுர் ரபீஃ ஸீலைமான் பின் ஸாலிம் அவர்கள் ஹிஜ்ரீ 281 ல் மரணித்து விட்டார்கள். இவரிடமிருந்து அறிவிப்பதாக கூறப்படும் இமாம் தஹபி அவர்கள் ஹிஜ்ரீ 748 ல் மரணித்தவர்கள் இருவருக்குமிடையில் 467 வருடங்கள் இடைவெளி இருக்கிறது.

இவர்களுக்கு மத்தியில் இருக்கும் அறிவிப்பாளர்கள் யார்? அவர்கள் விபரங்கள் என்ன? என்பது இந்த பரேல்விகள் தெளிவுபடுத்தவில்லை. ஆகையால், இவர்கள் முன் வைத்திருக்கும் இந்த அறிவிப்பு நம்பகத்தன்மையை இழந்து ஆதாரமற்றதாக ஆகிவிடுகிறது.

இவ்வாறுதான் சங்கையான இமாம்களின் பெயரில் இவர்கள் இட்டுக் கட்டும் பல அயோக்கியத்தனங்கள் "போலி ஸுன்னத் ஜமாஅத்தாக" கட்டமைக்கப்பட்டு பொதுமக்களிடத்தில் பரப்பப்படுகிறது. எச்சரிக்கை! எச்சரிக்கை! அல்லாஹு அஃலம் பிஸ்ஸவாப்.

மார்க்கம் காட்டித்தராத வழிபாடுகளும் வழிகேடுகளும்

மார்க்கத்தில் இறைத்தூதர் அவர்களின் காலத்திற்கு பின்பு வழிபாடுகளாக நன்மைகளை நாடி உருவாக்கப்பட்ட அனைத்தும் வழிகேடுகளே!

உஸூல் ஃபிக்ஹு (மார்க்கச் சட்ட அடிப்படை கலை) அடிப்படையில் அல்லாஹ்வும், அவனுடைய தூதரும் எதை நமக்கு மார்க்கமாக ஆக்கி நிறுத்தி வைத்திருக்கிறார்களோ அது தான் மார்க்கம்.

اَلْيَوْمَ اَكْمَلْتُ لَكُمْ دِيْنَكُمْ وَاَتْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِىْ وَرَضِيْتُ لَكُمُ الْاِسْلَامَ دِيْنًا

இன்றைய தினம் நாம் உங்களுக்கு உங்களுடைய மார்க்கத்தை முழுமையாக்கி வைத்து என்னுடைய அருளையும் உங்கள் மீது முழுமையாக்கி வைத்து விட்டோம். உங்களுடைய இந்த இஸ்லாம் மார்க்கத்தைப் பற்றியும் திருப்தியடைந்தோம். (அங்கீகரித்துக் கொண்டோம்) (அல்குர்ஆன் 5:3)

என்ற வசனத்தின் அடிப்படையில் இந்த சட்டம் இமாம்களால் வரையறுக்கப்பட்டிருக்கிறது.

الأصل في العبادة التوقيف دراسة وتحقيق قاعدة الأصل في العبادات المنع

என்ற புத்தகத்தில் கூறப்பட்டிருக்கிறது. அல்லாஹ்வும், தூதரும் காட்டித்தராத வணக்க வழிபாடுகள் பெயரில் பின் வந்தவர்கள் ஏற்படுத்திய அனைத்து காரியங்களும் வழிகேடுகளே பித்அத்துகளே, அனாச்சாரங்களே.

عن أم المؤمنين عائشة رضي الله عنها قالت : قال رسول الله صلى الله عليه وسلم: (من أحدث في أمرنا هذا ما ليس منه فهو رد) رواه البخاري ومسلم ، وفي رواية لمسلم : (من عمل عملاً ليس عليه أمرنا فهو رد) .

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறியதாக ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் கூறுகிறார்கள்: "யார் நமது மார்க்கத்தில் நூதனமாக (மார்க்கமாக) ஒரு விடயத்தை புதியதாக ஏற்படுத்துகிறாரோ அது மறுக்கப்பட வேண்டியது. (நூல்: ஸஹீஹுல் புகாரீ, தரம்: ஸஹீஹ்-ஆதாரமிக்கது)

فالحديث رواه البخاري ومسلم وغيرهما عن أبي هريرة رضي الله عنه عن النبي صلى الله عليه وسلم قال: "لا تشد الرحال إلا إلى ثلاثة مساجد: المسجد الحرام، ومسجد الرسول صلى الله عليه وسلم، ومسجد الأقصى."

ஸஹீஹுல் புகாரீயிலும் முஸ்லிமிலும் இடம்பெறும் ஆதாரப்பூர்வமான நபிமொழி அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் ஊடாக அறிவிக்கப்படுகிறது.

(நன்மைகளை நாடி வணக்க வழிபாடுகள் சிந்தனையில்) மஸ்ஜிதுல் ஹராம், மஸ்ஜிதுன் நபவி, மஸ்ஜிதுல் அக்ஸா, இந்த மூன்று பள்ளிகளைத் தவிர உங்களது வாகனங்களை தயார் செய்துகொண்டு பயணிக்காதீர்கள்.

இந்த நபிமொழியிலிருந்து காலம்காலமாக அறிஞர் மக்களிடத்திலே கருத்து வேறுபாடு நிலவிக் கொண்டிருக்கிறது என்பது ஒருபுறத்தில் இருந்தாலும், இஸ்லாத்திற்கு முரணாக கப்ருகள் உயர்த்தப்பட்டு, பூச்சு பூசப்பட்டு விளக்குகள் ஏற்றப்பட்டு, கட்டிடங்கள் எழுப்பப்பட்டு வணக்கஸ்தலமாக ஆக்கப்பட்டு இருந்தால், சங்கையான நான்கு மத்ஹபுகளுடைய இமாம்களின் ஏகோபித்த கூற்றின் அடிப்படையில் அங்கு செல்வது கூடாது. கபுரு என்ற ரீதியில் மறுமையின் நினைவு ஏற்படுத்திக் கொள்வதற்காக அனாச்சாரங்கள் இல்லாத கபுருகளுக்கு ஜியாரத் செய்வது தடை இல்லை.

மேற்கூறப்பட்ட நபி மொழி ஸஹீஹுல் புகாரீயில் இடம் பெற்று

இருக்கிறது. அதற்கு விளக்கம் எழுதும் விதத்தில் ஷாஃபிஈ மத்ஹபைச் சேர்ந்த இமாம் இப்னு ஹஜர் அஸ்கலானி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் இமாம் அபூ முஹம்மத் அல் ஜுவைனை, இமாம் காழி இயாழ் போன்ற ஷாஃபிஈ மத்ஹப் உடைய இமாம்களும் தனிநபர் கபுருகள் மார்க்கம் சொல்லப்படாத விதத்தில் அமைக்கப்பட்டு இருந்தால் அங்கு செல்வது கூடாது என்ற கருத்தையே தெளிவாக சொல்கிறார்கள்.

இந்த விளக்கத்தை கூறும் இமாம் அஸ்கலானி அவர்கள் ஷாஃபிஈ மத்ஹபில் நன்மையை நாடி வேற ஒரு பள்ளியில் தொழுதாலும் நன்மைகள் கிடைக்கும். ஆனால், மேற்கூறப்பட்ட இந்த பள்ளிகளில் நன்மைகள் அதிகம் என்ற கருத்தை குறிப்பிட்டு நபிமொழியில் கூறப்பட்டிருக்கும் இந்த இறை இல்லங்கள் அல்லாத இறை இல்லங்களுக்கு செல்வது ஹராம் அல்ல, கூடும் என்று தெளிவாக எழுதியும்,

இதைத்தான் தர்காஹ், ஜியாரத் கூடும் என்று சொல்பவர்கள் தவறாக புரிந்து கொண்டு, தர்காஹ், ஜியாரத் கூடும் என்று இமாம்கள் கூறுகிறார்கள் என்ற தவறான கருத்தை குறிப்பிடுகிறார்கள்.

மேற்கூறப்பட்ட நபிமொழியின் விளக்கத் தொடரில் அபூ பஸரா அல்கஃப்பாரி ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அபூஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்களைப் பார்த்து "மூஸா நபியின் (அலை) தூர் மலைக்கு சென்று ஜியாரத் செய்தேன்" என்று அபூஹுரைரா (ரளி) அவர்கள் கூறிய பொழுது "எனக்கு முன்பே தெரிந்திருந்தால் உங்களை தடுத்து இருப்பேன்" என்று மேற்கூறிய ஹதீஸை முன்வைத்து சொன்னதாக, அபூதாவூத் திர்மிதீ போன்ற கிரந்தங்களில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

இமாம் இப்னு தைமிய்யா அவர்கள் காலத்திலும் அவர்களின் கொள்கையில் பயணித்த அவர்களின் மாணவர்களாகிய இமாம் இப்னுல் கையும், இமாம் தஹபி, இமாம் இப்னு கஸீர், இமாம் முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப் நஜ்தி (ரஹிமஹுமுல்லாஹ்) அவர்களும் தங்கள் காலத்தில் மார்க்கத்திற்கு முரணாக இருந்த கப்ருகளை உடைத்தார்கள், சரி செய்தார்கள்.

அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அலீ ரளியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு யமன் தேசம் சென்று ஒரு ஜானுக்கு மேல் உயர்த்தப்பட்டிருக்கும் கபுருகள் அனைத்தையும்

இடிக்க வேண்டும் என்ற கட்டளையையும் இட்டிருந்தார்கள். அதேதான் சங்கையான இமாம்களும் செய்தார்கள்.

உண்மையான ஏகத்துவத்தை மனதில் சுமந்து கொண்டிருக்கும் எந்த ஒரு மார்க்க அறிஞரும் இதுபோன்ற தர்காஹ் கலாச்சாரத்தை அனுமதிக்கவே மாட்டார்.

இந்தத் தூய எண்ணத்தில்தான் ஸஊதி அரேபிய அரசாங்கமும் அமைந்திருக்கிறது. இதைப் பிடிக்காத ஷிஆக்கள் தான் பல சூழ்ச்சிகளை செய்து மக்களிடம் மீண்டும் தர்காஹ் கலாச்சாரத்தை வளர்க்க முயற்சி செய்கிறார்கள்.

ஹனஃபி மத்ஹபைச் சேர்ந்த இமாம்களும் மாலிகி மத்ஹபைச் சேர்ந்த இமாம்களும் ஹம்பலி மத்ஹபைச் சேர்ந்த இமாம்களும் இதே கருத்தைத்தான் முன்வைக்கிறார்கள்.

சங்கையான இமாம்கள் கீழ்க்காணும் குர்ஆன் வசனத்தின் அடிப்படையில்

وَقَدْ نَزَّلَ عَلَيْكُمْ فِى الْكِتٰبِ اَنْ اِذَا سَمِعْتُمْ اٰيٰتِ اللّٰهِ يُكْفَرُ بِهَا وَيُسْتَهْزَاُبِهَا
فَلَا تَقْعُدُوْا مَعَهُمْ حَتّٰى يَخُوْضُوْا فِىْ حَدِيْثٍ غَيْرِهٖ اِنَّكُمْ اِذًا مِّثْلُهُمْ اِنَّ اللّٰهَ
جَامِعُ الْمُنٰفِقِيْنَ وَالْكٰفِرِيْنَ فِىْ جَهَنَّمَ جَمِيْعَا

நிச்சயமாக (அல்லாஹ்) இவ்வேதத்தின் மூலம் உங்களுக்குக் கட்டளையிடுகின்றான்: அல்லாஹ்வுடைய வசனங்களை (எவரும்) நிராகரிப்பதையோ அல்லது பரிகசிப்பதையோ நீங்கள் செவியுற்றால் அவர்கள் இதனைத் தவிர்த்து வேறு விஷயத்தில் ஈடுபடும் வரையில் நீங்கள் அவர்களுடன் உட்கார வேண்டாம். (அவ்வாறு உட்கார்ந்தால்) அந்நேரத்தில் நிச்சயமாக நீங்களும் அவர்களைப் போன்றுதான் (ஆவீர்கள்.) நிச்சயமாக அல்லாஹ் இந்நயவஞ்சகர்களையும் அந்நிராகரிப்பவர்களுடன் நரகத்தில் ஒன்று சேர்த்துவிடுவான்.

(அல்குர்ஆன் 4:140)

தர்காஹ்க்களில் அல்லாஹ்வின் வசனங்கள் நிராகரிக்கப்படுகின்றன, பரிகசிக்கப்படுகின்றன. அதனால் அங்கு உண்மையாகவே சாலிஹான நல்லடியார்கள் அடங்கியிருந்தாலும், அங்கு செல்வதை தவிர்த்துக்

கொள்ள வேண்டும். இல்லை என்றால் இவைகள் அனாச்சாரங்கள்தான். என்ன செய்ய முடியும், அதை தடுக்க வேண்டும். அதே நேரத்தில் ஜியாரத் செய்யாமல் இருக்க முடியுமா? என்று சொல்லி சென்றால் அந்தப் பாவத்தில் நமக்கும் பங்கு உண்டு.

மண்ணறைகளை ஜியாரத் செய்ய நபியவர்கள் தடுக்கவில்லையே என்று நீங்கள் கேட்டால் முஸ்லிம் கிரந்தத்தில் இடம் பெற்றிருக்கும் ஸஹீஹான நபி மொழியான ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹா அவர்கள் இறைத்தூதரிடம் கேட்கிறார்கள்: “மண்ணறைகளை கடந்து சென்றால் என்ன செய்வது?” நபியவர்கள் “ஸலாம் சொல்லி கடந்து செல்” என்றார்கள்.

ஏதாவது சொந்த வேலைக்காக இதுபோன்ற தர்காஹ்க்கள் இருக்கும் ஊர்களுக்கு செல்ல நேர்ந்தால் கடந்து செல்லும்போது ஸலாம் சொல்லி செல்வது ஸுன்னத்தாகும். அங்கு இறங்கி அனாச்சாரங்களை கொண்ட தர்காஹ்வில் நுழைந்து ஸலாம் சொல்வது வழிகேடாகும்.

இந்த அனைத்து உண்மைகளையும் அறிந்த சில மார்க்க அறிஞர்கள் கூட தங்களது முகநூல்களில் மிகப் பெருமையாக நாங்கள் இந்த தர்காஹ் சென்றோம் என்று செல்ஃபிகளை எடுத்து பதிவிட்டு மக்களை தவறான பாதையில் அழைப்பது மிகவும் வருத்தமான விடயம்.

உமையாக்கள் ஆட்சிக்கு பின்பு வந்த ஷீஆக்கள் தலைமையில் கிலாஃபத்தை பிடித்த ஃபாத்திமியா அரசர்கள்தான் எகிப்தில் முதன் முதலில் தர்காஹ் கலாச்சாரத்தையும், மீலாது, மௌலூது, ஃபாத்திஹா போன்ற பல வழிகேடுகளுக்கு வித்திட்டார்கள்.

இமாம் இப்னு கஸீர் அவர்கள் தங்களது புத்தகமான பிதாயாவில் குறிப்பிடுகிறார்கள்: “வரலாற்று நாயகர் எதிரியிடமிருந்து மஸ்ஜிதுல் அக்ஸாவை மீட்டு முஸ்லிம்களிடத்தில் தந்த ஸலாஹுதீன் அய்யூபி ரஹிமஹுல்லாஹ் அவர்களும் அவரின் அமைச்சரும் முதன்முதலில் இந்த வழிகேடுகளை எதிர்த்து முற்றுப்புள்ளி வைக்கிறார்கள் என்பது வரலாறு. இந்த வழிகேடை மார்க்கமாக மாற்றிய ஷீஆக்களை பின்தொடர்ந்து இந்தியாவில் பரேல்விய சிந்தனை உடைய நபர்கள் அனாச்சாரங்களை கட்டமைத்தனர்.

இதனை எதிர்ப்பதற்காகத்தான் வடஇந்தியாவில் தாய் மத்ரஸாவாக கருதப்படக் கூடிய தாருல் உலூம் தேவ்பந்த், அரபு நாட்டில்

தோன்றிய இமாம் முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப் நஜ்தி ஆகியோரின் முயற்சியினால் தர்காஹ் கலாச்சாரத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. இதை பொறுத்துக்கொள்ள முடியாத வழிகெட்ட ஷீஆக்களும் அவர்கள் வழியில் நடைபோடும் பரேல்விகளும், இந்த தர்காஹ் கலாச்சாரத்தை எதிர்க்கும் உண்மையான அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையில் பயணிக்கும் உலமாக்களுக்கு வஹாபிகள் என்ற பெயரை புனைந்து மக்களிடத்தில் பிரச்சாரம் செய்துகொண்டிருக்கிறார்கள்.

ஆனால், வஹாபிகள் என்ற ஒரு பெயரை சூட்டியது சத்தியத்தை எடுத்துக் கூறும் அஹ்லுஸுன்னத் வல் ஜமாஅத் உலமாக்கள் தான் அந்தக் காலத்தில் மொரோக்கோவில் வழிகெட்ட இபாலியா கொள்கையைச் சேர்ந்த கொடுங்கோல் அரசன் அப்துல் வஹாப் பின் ருஸ்தும் என்பவன் ஹஜ்ஜை தடை செய்த காரணத்தினால் நமது உலமாக்கள் இவர்களுக்கு "வஹ்ஹாபி" என்று அழைத்தார்கள். இது உண்மையான வரலாறாகும்.

"வஹாபிகள் பற்றிய தவறான ஒரு வரலாறு" (تصحيح خطأ التاريخي حول الوهابية) என்ற புத்தகத்தில் மொரோக்கோ நாட்டிற்கு சென்று ஆய்வு செய்து எழுதிய மிகப்பிரபலமான மார்க்க அறிஞர் அஷ்ஷெய்க் முஹம்மத் அஷ்ஷுவைர் அவர்கள் மேற்கூறப்பட்ட தங்களின் புத்தகத்தில் இந்த வரலாற்றை குறிப்பிடுகிறார்கள்.

பின்னால் ஷிர்க் பித்அத்தை எதிர்த்த மிகப்பெரிய களம் கண்ட இமாம் முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் நஜ்தி ரஹிமஹுமுல்லாஹ் அவர்களை இன்னும் அவர்களை பின்பற்றும் அனைத்து நபர்களையும் மகாவீரர் என்று வரலாற்று பின்னணியை புரிந்து கொள்ளாமலே சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்.[7]

தர்காஹ், சந்தனக்கூடு, கொடியேற்றம் இஸ்லாம் காட்டித் தராத வழிகேடுகளே!

1. இஸ்திகாஸா பி கைரில்லாஹ் - அல்லாஹ் அல்லாதவர்களிடம் (மரணித்தவர்களிடம்) துஆ கேட்பது, உதவி கேட்பது.

7 கூடுதலான விளக்கத்திற்கு எனது கீழ்க்காணும் வரலாற்று காணொளியை காணவும். (https://youtu.be/VwgrrN59X7c)

إِيَّاكَ نَعْبُدُ وَإِيَّاكَ نَسْتَعِينُ

(அல்லாஹ்வே!) நாங்கள் உன்னையே வணங்குகிறோம்; உன்னிடமே உதவி தேடுகிறோம். (அல்குர்ஆன் 1:5)

2. மறைமுகமான விடயங்கள் அல்லாஹ் அல்லாதவர்களுக்கும் தெரியும் என்று கருதுவது.
3. மரணித்தவர்களிடம் வஸீலா கேட்பது கூடும் என்று கருதுவது.
4. மரணித்தவர்கள் வருகை தருகிறார்கள், நம்மை பார்க்கிறார்கள் என்று கருதுவது.
5. இஸ்லாத்துக்கு முரணான பித்அத்துகளான சந்தனக்கூடு எடுப்பது, கொடி ஏற்றுவது, கப்ரின் மீது போர்வை போற்றுவது, கப்ரை ஒரு ஜானுக்கு மேல் உயர்த்துவது, விளக்கு ஏற்றுவது, ஆண்கள்-பெண்கள் மார்க்கம் சொல்லாத முறையில் ஒன்றிணைவது, அங்கு சென்று நேர்ச்சை செய்வது ஸஜ்தா செய்வது.
6. ஃபாத்திஹா, மௌலிது, மீலாது போன்ற அனாச்சாரங்களை மார்க்கமாக கருதுவது.

தர்காஹ், சந்தனக்கூடு, உரூஸ் இவைகளனைத்தும் அல்லாஹ்வும், இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும் காட்டித்தராத அனாச்சாரங்கள். மண்ணறைகளை ஜியாரத் செய்வதில் இரண்டு வகை இருக்கிறது.

ஒன்று ஸுன்னத்தான நபிவழி, மற்றொன்று அனாச்சாரமான பித்அத்தான வழிமுறை. பொது மண்ணறைகளில் சென்று அவர்களுக்காக நபியவர்கள் நமக்கு போதித்த துஆக்களை முறையாக செய்வது, ஸலாம் சொல்வது தவறில்லை.

السلام عليكم أهل الديار من المؤمنين والمسلمين، وإنا إن شاء الله بكم لاحقون
نسأل الله لنا ولكم العافية يرحم الله المستقدمين منا والمستأخرين

ஷிர்க், இணைவைப்புக்கு வழிவகுக்கும் ஒரு ஜாஹிலிய்யாவின் வழிமுறைதான் கப்ர்வாசிகளிடத்தில் துஆ கேட்பது, நேர்ச்சைகள் வைப்பது, ஸஜ்தா செய்வது, போர்வை போர்த்துவது, விளக்கு

ஏற்றுவது, எண்ணெய் ஊற்றுவது, உப்பு, தேங்காய், முடி காணிக்கை செய்வது, கப்ரை வலம் வருவது போன்றவையாகும்.

ஏகத்துவத்தில் முறையாக பயணித்த அரபுகளை வழிகெடுத்த "அம்ரு பின் லுஹை"யின் விக்ரக-சிலை வழிபாட்டின் ஒரு பிம்பம் தான் இந்த தர்காஹ் வழிபாடு. மண்ணறைகள் ஒரு ஜானுக்கு மேல் உயர்த்தப்படக் கூடாது என்ற அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் நபிமொழிகளுக்கு எதிரானது. மண்ணறைகளை பூசி மொழுகுவதோ, அதன் மீது கட்டிடங்கள் கட்டுவதோ ஏகத்துவத்திற்கு முரணானது.

وروى مسلم في صحيحه عن جابر قال: نهى رسول الله أن يجصص القبر، وأن يقعد عليه، وأن يبنى عليه.

தமிழ் நாட்டில் அடங்கி ஒடுங்கி கிடக்கும் தர்காஹ் சந்தனக்கூடு, கொடியேற்றம் போன்ற வழிகேடுகளை மீண்டும் உயிர்ப்பிக்க நினைக்கும் நபர்கள் ஏகனாகிய அல்லாஹ்வை அஞ்சி கொள்ளட்டும். பொது மண்ணறைகளை மரண சிந்தனையுடன், மறுமை சிந்தனையுடன் சந்திப்பது நபிவழியாகும்.

زوروا القبور؛ فإنها تذكركم الآخرة

ஃபிக்ஹு சட்டப் புத்தகங்களில் பின் வந்த சில அறிஞர்கள் கூறிய காரணத்தினால் அதாவது, கப்ருகள் பாதுகாக்கப்பட வேண்டும், எதிரிகளிடமிருந்து மண்ணறைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற நோக்கில் அதில் கட்டிடங்கள் கட்டலாம், அவைகளை உயர்த்தலாம் என்று தவறாக விளங்கிக் கொண்டனர்.

பொதுவாக தர்காஹ்க்களில் அடக்கப்பட்டிருக்கும் நல்லோர்கள் அவர்களின் மரண இறுதிவரை இதுபோன்ற வழிகேடான ஷிர்க்கான இணை வைத்தல்களை முற்றிலும் எதிர்த்தவர்களாக தங்களது உயிர்களை அல்லாஹ்வின் பாதையில் தியாகம் செய்தார்கள்.

"அல்குனிய்யா", என்ற பிரபலமான புத்தகம் இமாம் அப்துல் காதிர் ஜெய்லானி ரஹிமஹுல்லாஹ் அவர்களால் எழுதப்பட்டது. ஷிர்க்கையும் பித்அத்தையும் இமாமவர்கள் வன்மையாக கண்டிப்பதுடன் தங்கள் வாழ்வு முழுவதும் அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்

கொள்கையிலிருந்து வழிகெட்ட குழுக்களை எதிர்த்து வந்தார்கள் என்பது அவர்களின் புத்தகத்தின் ஊடாக நாம் அவதானிக்க முடியும்.

அவர்களுடைய காலத்திற்குப் பின் நமது காலம் வரை இமாம் அவர்களுக்கே மிகப்பெரிய தர்காஹ்வைக் கட்டி ஹஜ், உம்ராவை போன்ற மிக முக்கியம் அளித்து வழிபட்டுக் கொண்டும்தான் இருக்கிறார்கள் சில மடையர்கள்.

الغنية لطالبي طريق الحق كتاب من تأليف عبد القادر الجيلاني

ஆனால், இந்த ஷீஆக்களின் தத்துப் பிள்ளைகளான பரேல்விய சிந்தனை கொண்ட சிலர் இதை புனிதப்படுத்த பார்க்கிறார்கள். இஸ்லாத்தின் சாயத்தை பூசப் பார்க்கிறார்கள். அல்லாஹ்வும், தூதரும் காலங்காலமாக நமக்கு குர்ஆனிலும் நபிமொழிகளிலும் எச்சரித்த இணைவைத்தல் என்ற பாவத்தை புதுப்பிக்க விரும்புகிறார்கள் சிலர்.

இறைநேசர்கள் யார் என்பதை முடிவு செய்வது அடியேனும் தாங்களும் இல்லை! அல்லாஹ்வும், இறைத் தூதரும் அங்கீகரித்த விடயங்கள், அங்கீகரித்த நபர்கள் சுவனத்திற்கு நன்மாராயம் கூறப்பட்டவர்களும்தான் மறு உலகில் சுவனத்தை பெறுவதற்கு தகுதியானவர்கள். சஹாபாக்களை போன்றவர்கள்.

அல்லாஹ்தான் மறுமையில் இறைநேசர்கள் யார் என்பதை உறுதி செய்வான்!!

நாமே இறைநேசர்களை வஹீயின் அடிப்படையில் இல்லாமல் மனம் தோன்றலில் அறிவித்து அவர்களுக்கு தர்காஹ்க்களை கட்டி வழிபடும் இடமாக ஆக்குவதா? அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகிறான்:

وَقَدْ نَزَّلَ عَلَيْكُمْ فِى الْـكِتٰبِ اَنْ اِذَا سَمِعْتُمْ اٰيٰتِ اللّٰهِ يُكْفَرُ بِهَا وَيُسْتَهْزَاُبِهَا فَلَا تَقْعُدُوْا مَعَهُمْ حَتّٰى يَخُوْضُوْا فِىْ حَدِيْثٍ غَيْرِهٖۤ اِنَّكُمْ اِذًا مِّثْلُهُمْ اِنَّ اللّٰهَ جَامِعُ الْمُنٰفِقِيْنَ وَالْـكٰفِرِيْنَ فِىْ جَهَـنَّمَ جَمِيْعَا

நிச்சயமாக (அல்லாஹ்) இவ்வேதத்தின் மூலம் உங்களுக்குக் கட்டளையிடுகின்றான்: அல்லாஹ்வுடைய வசனங்களை (எவரும்) நிராகரிப்பதையோ அல்லது பரிகசிப்பதையோ நீங்கள் செவியுற்றால்

அவர்கள் இதனைத் தவிர்த்து வேறு விஷயத்தில் ஈடுபடும் வரையில் நீங்கள் அவர்களுடன் உட்கார வேண்டாம். (அவ்வாறு உட்கார்ந்தால்) அந்நேரத்தில் நிச்சயமாக நீங்களும் அவர்களைப் போன்றுதான் (ஆவீர்கள்.) நிச்சயமாக அல்லாஹ் இந்நயவஞ்சகர்களையும் அந்நிராகரிப்பவர்களுடன் நரகத்தில் ஒன்று சேர்த்துவிடுவான்.

(அல்குர்ஆன் 4:140)

தர்காஹ்க்களில் அடக்கப்பட்டு இருக்கும் சாலிஹான நல்லடியார்கள் என்ற காரணத்தினால் அங்கு நடக்கும் அனாச்சாரங்களை கண்டுகொள்ளாமல் ஜியாரத் செய்வது தான் முக்கியம் என்று கூறுவது தவறான வழிமுறையாகும்.

அல்லாஹ்வுடைய வார்த்தைகள் நிராகரிக்கப்படும் பொழுது கேலி, பரிகாசம் செய்யப்படும் பொழுது, அங்கு அமர்வதோ, இருப்பதோ கூடாது என்ற இறை கட்டளையின் அடிப்படையில் அங்கு செல்வதும் கூடாது.

இன்னும் எத்தனை ஷாஹ் வலியுல்லாஹ், இப்னு தைமியா, முஹம்மத் பின் அப்துல் வஹ்ஹாப் நஜ்தி, ஷா இஸ்மாயில் ஷஹீது, அஹ்மத் பின் இர்ஃபான் ரஹிமஹுமுல்லாஹ் இச்சமூகத்தில் தோன்றினாலும், அம்ரு பின் லுஹை போன்ற கயவர்கள் தோன்றிக் கொண்டுதான் இருப்பார்கள்.

"எவன் அல்லாஹ்வுக்கு நிகராக எவரையும் பிரார்த்தித்த நிலையில் மரணிக்கிறானோ அவன் நரகில் நுழைவான்" என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

(அறிவிப்பவர்: இப்னு மஸ்வூத் (ரளி), நூல்: புகாரீ 4497)

நம்பிக்கை கொண்டு, தமது நம்பிக்கையுடன் அநீதியைக் கலந்து விடாமல் இருப்போர்க்கே அச்சமற்ற நிலை உள்ளது. அவர்களே நேர்வழி பெற்றோர். *(அல்குர்ஆன் 6:82)*

என்ற வசனம் இறங்கியதும், "அநீதி செய்யாதவர் நம்மில் எவரிருக்க முடியும்?" என்று நபித்தோழர்கள் கூறினார்கள். இதைக் கேட்ட நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள்

"இணை கற்பித்தல் மகத்தான அநீதியாகும்" *(அல்குர்ஆன் 31:13)*

என்ற வசனத்தை ஓதிக் காட்டினார்கள். *(அறிவிப்பவர்: இப்னு*

மஸ்வூத் (ரளி), நூல்: புகாரீ 32, 3360, 3428, 3429, 4629, 4776, 6918)

اِتَّخَذُوْا اَحْبَارَهُمْ وَرُهْبَانَهُمْ اَرْبَابًا مِّنْ دُوْنِ اللّٰهِ وَالْمَسِيْحَ ابْنَ مَرْيَمَ وَمَا اُمِرُوْا
اِلَّا لِيَعْبُدُوْا اِلٰهًا وَّاحِدًا لَا اِلٰهَ اِلَّا هُوَ سُبْحٰنَه عَمَّا يُشْرِكُوْنَ

இவர்கள் அல்லாஹ்வையன்றி தங்கள் பாதிரிகளையும், சந்நியாசிகளையும், மர்யமுடைய மகன் மஸீஹையும், (தங்கள்) கடவுள்களாக எடுத்துக் கொண்டிருக்கின்றனர். எனினும், வணக்கத்திற்குரிய ஒரே இறைவனைத் தவிர மற்றெவரையும் வணங்கக் கூடாதென்றே இவர்கள் அனைவரும் ஏவப்பட்டு இருக்கின்றனர். வணக்கத்திற்குரிய இறைவன் அவனையன்றி (வேறெவனும்) இல்லை. அவர்கள் இணைவைக்கும் இவைகளை விட்டு அவன் மிகவும் பரிசுத்தமானவன். (அல்குர்ஆன் 9:31)

இதைப் பற்றி பல வருடங்களாக வழிகெட்ட பரேல்விகளிடத்தில் நாம் பல தடவை விவாதம் செய்தும் அதில் எந்தவிதமான பிரயோஜனமும் இல்லை. உள்ளங்கள் உடைந்தன, ஒற்றுமைகள் சிதைந்தன, வார்த்தைகள் தடித்தன, காஃபிர் என்ற மார்க்கத் தீர்ப்பை எங்களின் மீது அவர்கள் வழங்கினார்கள்.

ஆதலால் என்றும் நாம் ஒரே கருத்தில் தான் இருப்போம், இருந்தோம், பயணிப்போம் இன் ஷா அல்லாஹ்...

மார்க்கத்தை முறையாக தெரியாதவர்களுக்கு மார்க்கத்தைப் பற்றி விளக்கி அதற்காக நேரத்தை செலவு செய்வது தவறல்ல. ''நான் பிடித்த முயலுக்கு மூன்று கால்'' என்று கூறும் அறிவிலிகளுக்கு நேரத்தை செலவு செய்து, விவாதம் செய்து நேரத்தை வீணாக ஆக்குவதற்கு வழிவகுக்கிறது என்பதன் காரணத்தினால் என்னிடம் மீண்டும் மீண்டும் இது தொடர்பாக கேள்வி கேட்கும் சகோதரர்களுக்கு இதுவே இறுதியான பதில். ஆக்கப்பூர்வமாக அழைப்புப் பணியில் கவனம் செலுத்துவோம்.

யார் இந்த
ஷைகுல் இஸ்லாம்
இப்னு தைமியா?

இன்று சர்வசாதாரணமாக மிகப்பெரிய அறிஞராகிய ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமியா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் இறை மறுப்பாளர் என்று சமூக வலைதளங்களில் எழுதப்பட்டிருப்பதை கண்டு நான் மிகவும் மனம் நொந்து சில வரிகளை அவர்களை பற்றி எழுத வேண்டும் என்று நினைத்தேன் இதே முறையில் அவர் காஃபிர் (இறைமறுப்பாளர்) என்று அன்றும் சில அறிஞர்களால் கூறப்பட்டது.

அதற்கு உதாரணம், ஷாஃபிஈ மத்ஹபின் பிரபல்யமான இமாம் ஆகிய இப்னு ஹஜர் அல் ஹைதமி (மரணம்: ஹி 974)அவர்கள் இப்னு தைமிய்யா (ரஹ்) காஃபிர் என்று கூறியிருக்கிறார். அல்லாஹ்வின் பண்புகளை உருவ அமைப்புடன் (تجسيم) இப்னு தைமிய்யா அவர்கள் கூறிவிட்டார்கள் என்று தவறுதலாக விளங்கி இந்த மார்க்க தீர்ப்பை வழங்கி இருக்கிறார்.

இவரின் தவறான இந்த விளக்கத்திற்கு அன்றைய மிகச்சிறந்த அறிஞர் பெருமக்கள் மறுப்பு அளித்தனர். ஷாஃபிஈ மத்ஹபின் தலைசிறந்த இமாம் ஆகிய ஸஹீஹுல் புகாரீ என்ற சிறந்த நபிமொழிகள் தொகுப்பின் விளக்கவுரை எழுதிய இமாம் இப்னு ஹஜர் அஸ்கலானி ரஹிமஹுல்லாஹ் (மரணம்: ஹி 854) அவர்கள் விளக்கம் கூறுகிறார்கள்.

நான் நாஸிருத்தீன் திமிஸ்கி என்ற அறிஞரின் "யார் ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமியா அவர்களை காஃபிர் என்று தவறாக கருதுகிறாரோ அவருக்கு ஒரு மிகப்பெரிய மறுப்பு" புத்தகத்தை படித்தேன்.

"الرد الوافر على من زعم أن من سمى ابن تيمية شيخ الإسلام كافر"

நாஸிருத்தீன் திமிஸ்கி அவர்கள் இப்னு தைமியா ரஹிமஹுல்லாஹ் அவர்களை யாரெல்லாம் காஃபிர் என்று கூறினார்களோ அது தவறு என்று கண்டித்து அவர்களுடைய காலத்தில் தலைசிறந்த 85 இமாம்கள் பெயர்களை குறிப்பிட்டு இவர் "ஷைகுல் இஸ்லாம்" என்ற பெயருக்கு தகுதியானவர் என்று எழுதியதை அறிஞர் இப்னு ஹஜர் அஸ்கலானி அவர்கள் படித்துவிட்டு இந்த புத்தகத்திற்கு மிக நீண்ட ஒரு முன்னுரையை எழுதுகிறார்கள்.

அதில் இமாம் இப்னு தைமியா அவர்கள் தவறுதலாக புரிய பட்டவர்கள் அன்றைய காலத்து தலைசிறந்த அறிஞராக, அல்லாமாவாக இருந்தார்கள் என்று அவர்களை மதிப்பீடு செய்கிறார்கள்.

மிகப்பெரிய அறிஞராக விளங்கிய ஜலாலுத்தீன் சுயூதி ரஹிமஹுல்லாஹ் அவர்களும் தங்களின் "தபகாத்துல் ஹுஃப்பாழ்- طبقات الحفاظ புத்தகத்தில் இப்னு தைமியா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஷைகுல் இஸ்லாமாகவும் மிகவும் பாரிய அறிவாற்றலையும் பெற்றிருந்தார்கள் என்று அவர்களை புகழ்ந்து கூறுகிறார்கள்.

அதேபோன்று இமாம் தஹபி, இமாம் இப்னு ரஜப் ஹம்பலி, அல்லாமா முல்லா அலீ காரி, ஹாஃபிழ் இமாதுத்தின் அல்வாசிதி (ரஹிமஹுமுல்லாஹ்) போன்ற நூற்றுக்கும் அதிகமான உலமாக்கள் இப்னு தைமியா அவர்களை "ஷைகுல் இஸ்லாம்" என்று ஏற்றும், அவரின் கல்வித்திறன் இன்னும் அறிவாற்றலை ஏற்றும் அஹ்லுஸ் ஸுன்னத் வல்ஜமாஅத்தின் கொள்கையான அல்லாஹ்வின் பண்புகளை அல்குர்ஆன் எவ்வாறு விளக்கி இருக்கிறதோ அவ்வாறே ஈமான் கொள்ள வேண்டும், இறைப்பண்புகளுக்கு மாற்று விளக்கம் அளிப்பது கூடாது என்ற ஒரு சரியான சிந்தனையை அவர் கொண்டிருந்தார் என்பது அவர்களுடைய பிரபலமான மார்க்கத் தீர்ப்பு புத்தகத்தில் நாம் பெறலாம் என்று கூறுகின்றனர். (பார்க்க: பஃதாவா ஷைகுல் இஸ்லாம் (27-5/26))

வழிகெட்ட தத்துவம்

இந்த பரேல்விகளின் வழிகேடான ஒரு கொள்கை தான் "வஹ்தத்துல் வுஜூத்-உள்ளமை ஒன்று"

(1165 -1240 பிறப்பு-இறப்பு) இப்னு அரபி என அழைக்கப்படும் அபூ அப்தில்லா முஹம்மதி ப்னி அலீ இப்னி முஹம்மதிப்னி அரபி அல்-ஹாத்திமி அத்தாயிஈ கஃபரஹுல்லாஹ் அரேபிய சூஃபி இறைஞானியும், மெய்யியலாளரும் ஆவார். சூஃபித்துவத்தைப் பின்பற்றுபவர்களால் இவர் "பெரும் அறிஞர்" எனவும் உண்மையான ஞானி எனவும் போற்றப்பட்டவர். 'வஹ்தத்துல் வுஜூத்' (உள்ளமை ஒன்று) என்னும் அத்வைத ஞானம் பேசியவர்களில் மிகப் பிரசித்தி பெற்றவர்களாக இவர் இருந்தார்.

காழி அபூபக்ர் இப்னுல் அரபி அல்இஸ்பீலி அல்மாலிகி ரஹிமஹுல்லாஹ் வேறு ஒரு அறிஞர் இவர்கள் பிரபலமான தஃப்ஸீர் புத்தகமான அஹ்காமுல் குர்ஆனை (احكام القرآن) எழுதியவர்கள். அல்அவாஸிமு மினல் கவாஸிமி (العواصم من القواصم) என்ற இஸ்லாமிய வரலாற்று துறையில் சிறந்த புத்தகத்தை வழங்கினார்கள். இவர் தஃப்ஸீர் ஹதீஸ், ஃபிக்ஹு கலையில் மிகவும் நிபுணத்துவம் பெற்றவர். சிலர் அபூபக்ர் இப்னுல் அரபியையும், முஹ்யித்தீன் இப்னு அரபியையும் தங்களது ஆய்வுகளில் குழப்பிக் கொள்கிறார்கள். நாம் இப்போது பார்க்கப்போவது சூஃபி இப்னு அரபியை பற்றித்தான்.

இவர் 400க்கும் அதிகமான நூல்கள் எழுதியுள்ளார். அவற்றுள் 'அல் ஃபுதுஹாத்துல் மக்கியா' (الفتوحات المكية), ஃபுசூசுல் ஹிகம்' (فصوص الحكم), 'மபாதியுல் கைப்' مبادي الغيب', 'முஹாளறதுல் அப்றார் 'محاضرة الأبرار ومسامرة الأخيار ஆகியவை மிகப் பிரபலமானவையாகும்.

லாஇலாஹ இல்லல்லாஹ் (لااله الا الله-) என்ற ஏகத்துவத்திற்கு எதிராக லா மவ்ஜூது இல்லல்லாஹ் (لا موجود الا الله) என்ற அத்வைத கொள்கையை இஸ்லாமிய உலகத்திற்கு ஏகத்துவ சாயலில் கிரேக்க தத்துவங்களை அதாவது "யாவும் இறைவனே, இறைவன் தூணிலும் இருக்கிறான்! துரும்பிலும் இருக்கிறான்!" என்ற முற்றிலும் தவ்ஹீதுக்கு (ஏகத்துவத்திற்கு) முரணான அபாயகரமான கொள்கையை பரப்பியவர்.

தமிழகத்திலும் இலங்கையிலும் இந்தக் கொள்கையை கொண்டவர்கள் மிக தைரியமாக பள்ளிகளையும், கல்லூரிகளையும் நிறுவி தங்களது வழிகேடான கொள்கைகளை மக்களிடத்தில் பிரச்சாரம் செய்வதை நாம் கண்டு வருகிறோம். தயவுகூர்ந்து இவர்களை இனம் கண்டு இவர்களுடைய நிறுவனங்களுக்கு பொருளாதார உதவிகளோ அல்லது எந்த உதவிகளையும் நீங்கள் செய்யாதீர்கள். அசத்தியம் மிகைக்கும் பொழுது சத்தியம் தனது இரும்புக் கரத்தால் அதை அடக்கி ஒழிக்கும் என்பதற்கு சான்றாக....

சமீபமாக திருச்சி ஜமாஅத்துல் உலமா சார்பாக இந்த அத்வேத கொள்கை உடைய பரேல்விகளை வேலூர் பாக்கியாத்துஸ் ஸாலிஹாத், சேலம் மழாஹிருல் உலூம், லால்பேட்டை மன்பவுல் அன்வார், திருச்சி அன்வாருல் உலூம் போன்ற அரபுக் கல்லூரிகள் வழிகேடர்களாக மார்க்கத் தீர்ப்பை வழங்கி 24 பக்கங்கள் கொண்ட ஒரு புத்தகத்தை வெளியிட்டு இருக்கிறார்கள்.

வடநாட்டில் இவர்கள் செய்த அழிச்சாட்டியத்தின் காரணமாக தாருல் உலூம் தேவ்பந்த் இஸ்லாமிய கல்வி பீடம் மிகப் பெரிய ஒரு புரட்சியை செய்து இவர்களின் கொட்டங்களை அடக்கியது. இன்றும் அங்கு மேல்படிப்பு படிப்பதற்காக செல்லும் ஆலிம்கள் தங்களது பாடத்திட்டத்தில் இந்த வழிகெட்ட பரேல்விகளை பற்றிய ஒரு ஆய்வு வகுப்பாக படிக்கிறார்கள். பயிற்சி பட்டறைகளும் (Workshop), கருத்தரங்குகளும் (Seminar) நடத்தப்படுகிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அதனால்தான் தேவ்பந்தி, நத்வி, காஷிஃபி, தாவூதி, மன்பஃஈ, யூசுஃபி, ஹஸனி, இர்ஷாதி, அன்வாரி போன்ற பட்டங்கள் பெற்று களமிறங்கும் ஆலிம் உலமாக்களை கண்டு இந்த பரேல்விய குள்ளநரிகள் வஹாபிகள் என்று அவ்வப்பொழுது ஊளையிட்டு கொண்டிருக்கின்றன. அதைக் காணும் நமது வட்டாரங்கள் பயந்து, முகம் சுளிக்கும் வகையில் இருக்கும் அவர்களின் பேச்சுக்களும்,

செயல்பாடுகளும் இருப்பதால் நமது பிரச்சாரத்தை நிறுத்திக் கொள்ள அறிவுறுத்துகிறார்கள்.

اَلَّا تَعْبُدُوْا اِلَّا اللّٰهَ

"அல்லாஹ்வைத் தவிர (மற்ற) எதனையும் நீங்கள் வணங்காதீர்கள்"
(அல்குர்ஆன் 41:14)

அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையின் அடிப்படையில்

لا معبود بحق الا الله - அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் யாருமில்லை என்று தான் நாம் கூறுகிறோம்.

من قال بالحلول فدينه معلول، وما قال بالاتحاد إلا أهل الإلحاد
—محي الدين ابن عربي

"இறைவன் மனிதனின் மீது ஊடுருவுவான்"

என்று கூறுபவரின் மார்க்கம் சந்தேகத்துக்கு உரியது. "உள்ளமையை வாதிடுபவன் நாத்திகனாக தான் இருக்க முடியும்" என்று முஹ்யித்தீன் இப்னு அரபி கூறியதாகவும் சில புத்தகங்களில் ஆதாரங்கள் இல்லாமல் பதியப்பட்டிருக்கிறது. இதை வைத்துதான் எங்கள் இமாம் இப்னு அரபி இவ்வாறு கூறவில்லை என்று சொல்கிறார்கள். இவரின் கொள்கை உண்மையான அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கைகளை விட்டும் சற்று சந்தேகத்துக்குரியதாகவே காட்சியளிக்கிறது.

فصوص الحكم', ஃபுசூசுல் ஹிகம்' என்ற இவரின் புத்தகம் இவருடைய காலத்தில் மிகப் பெரிய சர்ச்சையை கிளப்பி அந்த காலத்தில் வாழ்ந்த உண்மையான அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் உலமாக்கள் இவரை கடுமையாக எதிர்த்தனர்.

இவரின் சிந்தனைகளால் ஈர்க்கப்பட்ட இப்னு அல் பாரில், அல் தலசமானி போன்ற அறிஞர்களும் இந்த வழிகேட்டின் பக்கம் மக்களை அழைக்கத் தொடங்கினர்.

நாளை மறுமையில் வெற்றி பெறும் உண்மையான அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாத்தின் கொள்கையின் அடிப்படையில் "ஏக இறைவனான அல்லாஹ் ஏழு வானத்திற்கு மேல், தனது அர்ஷில் இருக்கிறான் என்பதும், அவனின் சக்தியும் வல்லமையும் முழு அகில உலகத்தையும் வியாபித்து இருக்கிறது என்பதுதான்.

اَلرَّحْمٰنُ عَلَى الْعَرْشِ اسْتَوٰى

(அவற்றை படைத்த) ரஹ்மான் (ஆகிய அல்லாஹ்) அர்ஷின் மீது (தன் மகிமைக்குத் தக்கவாறு) உயர்ந்துவிட்டான். (அல்குர்ஆன் 20:5)

اِنَّ رَبَّكُمُ اللّٰهُ الَّذِىْ خَلَقَ السَّمٰوٰتِ وَ الْاَرْضَ فِىْ سِتَّةِ اَيَّامٍ ثُمَّ اسْتَوٰى عَلَى الْعَرْشِ

நிச்சயமாக உங்கள் இறைவனாகிய அல்லாஹ்தான் வானங்களையும், பூமியையும் ஆறு நாட்களில் படைத்து அர்ஷின் மீது (தன் மகிமைக்குத் தக்கவாறு) உயர்ந்துவிட்டான். (அல்குர்ஆன் 7:54)

மேலும், நபி (ஸல்) அவர்கள் மிஃராஜ் பயணத்தில் மக்காவிலிருந்து மஸ்ஜிதுல் அக்ஸா சென்று அங்கிருந்து ஜிப்ரயீல் (அலை) அவர்களுடன் 'புராக்' என்னும் வாகனத்தின் மூலம் ஒவ்வொன்றாக ஏழு வானத்தையும் கடந்து சென்று 'சித்ரத்துல் முன்தஹா' என்ற இலந்தை மரத்தை (அது தான் எல்லை) அடைந்து அல்லாஹ்விடம் உரையாடி ஐம்பது நேரத் தொழுகையை ஐந்து நேரத் தொழுகையாகக் குறைத்து அல்லாஹ் இந்த சமுதாயத்தின் மீது கடமையாக்கியதையும், மேலும் பகரா அத்தியாயத்தின் கடைசி இரு வசனங்களையும் (2:285,286) பெற்றுத் திரும்பினார்கள். (ஆயிஷா (ரளி) அவர்கள் அறிவிக்கும் ஹதீஸின் கருத்து, நூல்: முஸ்லிம்).

பூமியில் உள்ளவர்கள் மீது இரக்கம் காட்டுங்கள் வானத்தில் உள்ள அல்லாஹ் உங்கள் மீது இரக்கம் காட்டுவான். (இப்னு உமர் (ரளி) திர்மிதீ, அஹ்மத்)

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஜாரியா என்ற அடிமைப் பெண்ணைப் பார்த்து "அல்லாஹ் எங்கே இருக்கிறான்?" என்று கேட்ட போது அந்தப் பெண் "அல்லாஹ் வானத்தில் இருக்கிறான்" என்று கூறினார். உடனே நபியவர்கள் எஜமானனைப் பார்த்து "இவரை விடுதலை செய்யுங்கள். இவர் ஒரு முஃமினாவார்" என்று கூறினார்கள். (முஸ்லிம்)

"திருமறை வசனங்கள் மற்றும் ஹதீஸின் அடிப்படையில் சிந்தித்தோமானால் அல்லாஹ் ஏழு வானத்திற்கும் மேல் அர்ஷில் உள்ளான் என்பதை அறிந்து கொள்ள முடியும். திருமறை மற்றும் ஹதீஸில் கூறப்பட்டுள்ளபடி அப்படியே அர்ஷில் அமைந்தான் என்பதை நம்ப வேண்டும். நாம் ஏதும் கற்பனை செய்தல் கூடாது.

அப்படி கற்பனை செய்தால் அது பித்அத் ஆகும்". (இமாம் மாலிக் (ரஹ்), தாரமி)

இமாமுல் அஃழம் அபூ ஹனீஃபா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகிறார்கள்: "எனது ரப்பு வானத்தில் இருக்கிறானா அல்லது பூமியில் இருக்கிறானா என எனக்கு தெரியாது என்று சொன்னால் அவர் காஃபிராகி விடுவார். அதே போல் அல்லாஹ் அர்ஷில்தான் இருக்கிறான். ஆனால், அர்ஷ் வானத்தில் இருக்கிறதா பூமியில் இருக்கிறதா என்று எனக்கு தெரியாது என்று சொன்னாலும் அவரும் காஃபிராகி விட்டார்.[8]

வல்ல இறைவன் நமக்கு சரியான இஸ்லாமிய கொள்கையை பின்பற்றுவதற்கு தவ்ஃபீக் செயவானாக!

ஷாபிஈ மத்ஹபில் இஸ்திகாஸா பி கைரில்லாஹ் - அல்லாஹ் அல்லாதவர்களிடம் உதவி கேட்பது (استغاثة بغير الله) முஸ்தஹப்பாகும் என்று ஷாஃபிஈ மத்ஹபைச் சேர்ந்த இமாம்களையும், அவர்களை பின்பற்றுபவர்களின் இறை நம்பிக்கையை சந்தேகிக்க வைத்துவிட்டனர் (அல்லாஹ் பாதுகாப்பானாக!).

சங்கையான நான்கு மத்ஹபுகளின் இமாம்கள் இஸ்திகாஸா பி கைரில்லாஹ் (அல்லாஹ் அல்லாதவர்களிடம் உதவி கேட்பது) ஏகோபித்த கருத்தின் அடிப்படையில் ஹராம் என்று கூறியிருக்கிறார்கள் என்பதை நாம் முன்பே ஆதாரங்களோடு பார்த்திருந்தோம்.

குர்ஆனிலிருந்தும் அங்கீகாரம் பெற்ற ஆதாரங்களை ஹதீஸிலிருந்தும் தரமுடியாமல் خلف பின் வந்த உலமாக்களின்(ரமலி ரஹிமஹுல்லாஹ் போன்ற) சில தவறான ஆய்வுகளை தோண்டி எடுத்து ஆதாரமாக காண்பிப்பது நகைப்புக்குரியதாக இருக்கிறது. மண்ணறைகளை வழிபாட்டுத் தலங்களாக ஆக்குவதற்கு ஏன் இந்த அளவுக்கு முயற்சி!!!

நமது நூலை பகுத்தறிவு உள்ளவர் ஒருவர் பகுப்பாய்வு செய்தால் யார் முறையான ஆதாரங்களை வழங்கியிருக்கிறார்கள், இதன் உண்மை நிலை என்ன என்பது தெளிவாகத் தெரியும்.

---

8 நூல்கள்:

[لفقه لأبسط ص49 ، مجموع الفتاوى لابن تيمية ج5 ص48، اجتماع الجيوش الإسلامية لابن لقيم 139، العلو للذهبي 101 ، 102، العلو لابن قدمة ص 116، شر لطحاية لابن ابي العز ص3 قال الإمام ابو حنيفة : من قال لا أعرف ربي في السماء في الأرض فقد كفر، وكذا من قال انه على العرش، ولا أدري العرش أفي السماء ام في الأرض .

உண்மையாகவே உங்களுக்கு திராணி இருந்தால் வேலூர் பாக்கியாத்துஸ் ஸாலிஹாத், சேலம் மழாஹிருல் உலூம், லால்பேட்டை மன்பவுல் அன்வார், திருச்சி அன்வாருல் உலூம், சென்னை காஷிஃபுல் ஹுதா, ஈரோடு தாவூதியா போன்ற அரபுக் கல்லூரியில் இருந்து ஹனஃபி, ஷாஃபிஈ மத்ஹபுகளில் இஸ்திகாஸா பி கைரில்லாஹ் (அல்லாஹ் அல்லாதவர்களிடத்தில் மரணித்த பிறகு உதவி தேடுதல்) என்ற கொள்கை கூடும் என்ற ஒரு ஃபத்வாவை வாங்கித் தாருங்கள்!

இந்த மவ்லவிகளை இனம்கண்டு இவர்களின் குழப்பத்திலிருந்து தப்பித்துக் கொள்ளுங்கள் மக்களே!

ஷாஃபி மத்ஹபில் இஸ்திகாஸாவின் சட்டம்

ஷாபிஈ மத்ஹபில்

இஸ்திகாஸா பி கைரில்லாஹ் அல்லாஹ் அல்லாதவர்களிடம் உதவி கேட்பது (استغاثة بغير الله) முஸ்தஹப்பாகும் என்று பரேல்விகளில் சிலர் கீழ் காணும் விதத்தில் கூறுகிறார்கள்.

ஷாபி மத்ஹபின் பிரபல்யமான அறிஞரான சேஹுல் இஸ்லாம் இப்னு ஹஜர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள்: "இஸ்திஹாஸாவை செய்தவர் காபிராகி விடுவார்" என்பதாக ஒரு மாபெரும் அவதூறை அந்த இமாமின் மீது கூறியிருக்கிறார்கள் இந்த வஹாபிகள்.

அதற்குண்டான பக்க ஆதாரத்தை கொடுக்காமல் இருப்பதே இவர்களுக்கு மிகப்பெரிய பாதுகாப்பு!

இமாம் நவவி ரஹ்மத்துல்லாஹி அலைஹி அவர்களின் 40 ஹதீஸ்கள் என்ற புத்தகத்திற்கு ஃபத்ஹுல் முபீன் என்ற விரிவுரையை இமாம் இப்னு ஹஜர் அவர்கள் எழுதியுள்ளார்கள்.

அதில் இப்னு அப்பாஸ் ரளியல்லாஹு அன்ஹு அவர்களுக்கு நபிகளார் செய்த உபதேசங்களில்

إذا سئلت فاسئل الله

நீ எதை கேட்டாலும் அல்லாஹ்விடமே கேள்.

என்ற ஹதீஸிற்கு விளக்கமாக இமாம் இப்னு ஹஜர் அவர்கள்

من دعا غير الله فهو كافر

அல்லாஹ் அல்லாத வரை யார் அழைத்தாரோ அவர் காஃபிராகி விடுவார்.

என்று சொன்னதாக சொல்லி எனவே இமாம் இப்னு ஹஜர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் இஸ்திஹாஸாவை மறுத்துள்ளார்கள் அவ்வாறு செய்பவரை காபிர் என்று கூறியுள்ளார்கள் என்று வஹாபிகள் இட்டுக்கட்டி கூறியுள்ளார்கள்.

அப்படி ஒரு வார்த்தை அந்த புத்தகத்தில் இல்லை, இமாம் அவர்கள் உதவி தேடுவது பற்றி அங்கே பேசவில்லை, கொள்கை நம்பிக்கை சம்பந்தமாக கூறுகிறார்கள்.

{إذا سألت فاسأل الله} أن من اعتقد النفع والضر لغير الله كفر

பிரயோஜனமும் கஷ்டமும் அல்லாஹ் அல்லாதவரிடமிருந்து கிடைக்கும் என்று அவர் நம்பிக்கை கொள்வாரோ அவர் நிராகரித்து விட்டார்!

இதுதான் இந்த புத்தகத்தில் இடம் பெறும் வாசகம்!

போர்த்திக்கொண்டு படுத்தாலும் படுத்துக்கொண்டு போர்த்தினாலும் எல்லாம் ஒன்றுதான்,

இவர்கள் கூறும் ஆதாரமே இவருகளுக்கு எதிராக மாறிவிட்டது. முதலில் நாம் பக்கம் எண்ணை காட்டவில்லை என்று சொல்லி அவர்களும் அங்கு காட்டவில்லை.

காரணம் இமாம் இப்னு ஹஜர் அஸ்கலானி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறியிருக்கும் இந்தக் கருத்து மிகவும் பிரபலமானது அதாவது அல்லாஹ் அல்லாதவர்களிடம் உதவி தேடும் பொழுது "காபிராகி ", விடுகிறார் என்பது , இது கூடுதலாக நமது அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையின் கருத்திற்கு வலுவைச் சேர்க்கிறது,

நபிமார்கள், வலிமார்கள், மரணித்தத்தவர்கள் இடத்தில் உதவி கேட்கலாம் என்ற பரேல்வியக் கொள்கைக்கு தானே மாறுபட்டு அவர்களே தனக்கு சூனியம் வைத்துக் கொண்டார்கள்.

ஷாஃபி மத்ஹபைச் சேர்ந்த ஷேக் முஹம்மது ஸாலிஹ் அல்புஹைரி என்ற சமகால அறிஞர் உங்களைப் போன்ற பரேல்விகளுக்கு சவுக்கடி தரும் விதத்தில் "ஷாஃபி மத்ஹபில் இஸ்திகாஸாவின் சட்டம் ", என்ற ஒரு ஆய்வுக்கட்டுரையை சமர்ப்பித்திருக்கிறார், உங்களைப் போன்று ஷாஃபி மத்ஹபை அவர் தவறாக விளங்கவில்லை, அவர் ஒரு அரபி

ஷாஃபி மத்ஹபை அவரின் கல்லூரியில் படித்துக் கொடுக்கிறார் அவர் என்ன சொல்கிறார் என்று சற்று கேளுங்கள்.....

அவர் கூறுகிறார்....

நபிமார்கள் வலிமார்கள் மூலம் இஸ்திகாஸா கேட்பது ஹராம் என்ற ஒரு விளக்கமான பகுதி.

நபிமார்கள் இறைநேசர்களிடம் நன்மையை செய்யுமாறும் தீமையை போக்கு மாறும் இஸ்திகாஸா உதவி தேடுவது இணைவைத்தலாகும், தடுக்கப்பட்டதாகும்,

உதாரணமாக" ஸெய்யதுனா ரசூலுல்லாஹ் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம், இரண்டு நேசர்கள் மூலம் என்னை காப்பாற்றுங்கள் எனக்கு தாருங்கள் ", என்று கேட்பதைப் போல். இவைகள் அனைத்தும் தடுக்கப்பட்டிருக்கிறது மாறாக இணை வைத்தலாகும்.

ஷாபி மத்ஹபின் அபூ ஸுர்ஆ அல்இராகி தனது மார்க்கத் தீர்ப்புகளிலும் அல்பத்ருல் அஹ்தல் ரஹிமஹுமுல்லாஹ் அவர்களும் கூறியிருக்கிறார்கள்.

இந்த மஸ்அலாவில் கருத்து வேறுபாடுக்கு அனுமதி இல்லை.

المبحث الأولُ: في بيان الحكم الإجمالي بتحريم الاستغاثة بالأنبياء والأولياءِ.

الاستغاثَةُ بالأنبياءِ والأولِياءِ بطلبِ جلبِ نفعٍ أو دفع ضرٍّ منهم = محرَّمة، بل شركٌ، كالاستغاثة بسيِّدنا رسول الله صلى الله عليه وسلم أو بأولياءِ الله الصالحين، كقول العامَّة: (أغِثني يا فلان) أو (أعطِني يا فلان).

كلُّ ذلك محرَّمٌ، بل شركٌ، وقد أفتى بتحريمِ ذلك جماعَةٌ من أصحابِنا الشافعيَّة كأبي زُرعة العراقيِّ رحمه الله في «فتاويه»، والبدر الأهدل رحمه الله.

والخلاف في المسألة ليس سائغًا.

https://thearchive.me/tg/mohamed_salim/-3YaOzkQex

நபி(ஸல்) அவர்களுக்கு மரண வேளை நெருங்கியபோது தங்களின்

போர்வை யைத் தங்களின் முகத்தின் மீது போடுபவர்களாகவும் மூச்சுத் திணறும்போது அதைத் தம் முகத்தை விட்டு அகற்றுபவர்களாகவும் இருந்தனர். அந்த நிலையில் அவர்கள் இருக் கும்போது “தங்கள் நபிமார்களின் அடக்கஸ் தலங்களை வணக்க ஸ்தலங்களாக ஆக்கிய யூத-கிறிஸ்தவர்களின் மீது அல்லாஹ்வின் சாபம் ஏற்படட்டும்” எனக் கூறி யூத-கிறிஸ்தவர்களின் செய்கை பற்றி எச்சரித் தார்கள். (அறிவிப்பாளர்கள் : ஆயிஷா(ரழி) இப்னு அப்பாஸ்(ரழி), நூல்கள்: புகாரி:435-437, முஸ்லிம்: 826, நஸயீ:2047, அபூதாவூத் : 3227, அஹ்மத்)

அல்லாஹு தஆலா நம் அனைவரையும் நேரான பாதையில் வழி நடத்துவானாக!

ஹதீஸ் "கதீர் கும்" "حديث غدير خم" பற்றி

வழிகெட்ட பரேல்விகளும், அவர்களின் குருநாதர்களான

ஷீஆக்களின் பார்வையும் அதன் உண்மை நிலையும்

ஷீஆக்கள் வசிக்கும் பகுதிகள்

ஈரான், ஈராக், லெபனான், லிபியா, இந்தியா போன்ற பல நாடுகளில் அதிகமாக வசித்து வருகின்றனர். இந்தியாவில் ஹைதராபாத்திலும், லக்னோவிலும், சென்னையிலும் இவர்கள் அதிகமாக வசிக்கின்றனர்.

ஷீஆக்களின் சமூகநிலையும், தங்களது 12 வகையினரும், அரசியல் செல்வாக்கும்

பெரும் செல்வந்தர்களாகவும், வியாபாரிகளாகவும் மிக ஒற்றுமையுடனும் தங்களது சமூகத்தை பொருளாதார வளர்ச்சியின் பக்கம் நகர்த்தி கொண்டு செல்பவர்கள். போராஹ் முஸ்லிம்கள் என்று அங்கு அழைக்கப்படுகின்றனர். தங்களது 12 இமாம்களை முதன்மைப்படுத்தியே அவர்களின் மார்க்கம் பயணிக்கிறது.

இந்த வழிகெட்ட 12 கூட்டங்களில் நுஸைரி என்ற ராஃபிழாக்கள் தங்களது கொள்கைகளை அரங்கேற்றுவதற்காக மாற்றுக் கருத்துடைய வர்களை கொலை செய்வதற்கும் துணிந்தவர்கள். இந்தக் கொள்கையை கொண்டவர்தான் சிரியா நாட்டின் அதிபர் பஷ்ஷார் அசதும். அவர் சிரியா நாட்டில் கொத்துக்கொத்தாக மக்களை படுகொலை செய்வதும், கடந்த காலங்களில் பேரழிவு ஏற்படுத்திய அவரது தந்தையும், ஈராக்கில் ஷஹீத் சதாம் உசேனுக்கு எதிராக சதிதிட்டம் செய்தவர்களும் இந்தவகை நுஸைரி ஷீஆக்கள் தான்.

அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் மக்களை வீழ்த்த வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இந்தியாவில் கூட சங்பரிவார் கயவர்களுடன் இவர்கள்

கைகோர்த்திருக்கிறார்கள். இந்தியாவில் பிஜேபி அரசு இவர்களுக்கு மிகப்பெரிய அந்தஸ்தையும், பொருளாதார மேம்பாட்டையும் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

ஷீஆக்களின் மார்க்க சட்டங்களும் நிலைப்பாடுகளும்

தங்களது பாங்குகளில் “அஷ்ஹது அன்ன முஹம்மதுர் ரஸுலுல்லாஹ்”, என்ற வார்த்தைகளுக்கு பின் “அன்ன அலீயன் வலியுல்லாஹ்”, அதாவது அலீ அல்லாஹ்வின் வலியாக (இறை நேசராக) இருக்கிறார்கள் என்று ஆதாரமே இல்லாமல் ஐந்து நேர தொழுகைகளிலும் கூறுபவர்கள்.

அவர்கள் தொழுகும் பொழுது இறைத்தூதரின் பேரரான இமாம் ஹுஸைன் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் ஷஹீதாக்கப்பட்ட அந்த கர்பலா மண்ணில் இருந்து சில மண் கட்டிகளை செய்து அதன் மீது தான் ஸஜ்தா செய்வார்கள். தொழுகையின் கியாமில் (நிலையில்) நெஞ்சில் தக்பீர் கட்ட மாட்டார்கள் “இர்ஸால்” என்ற அடிப்படையில் கையை கீழே தொங்க விட்டு விடுவார்கள். ஃபிக்ஹு சட்டங்களில் ஜஃபரி மத்ஹபை (المذهب الجعفري) பின்பற்றுகிறார்கள். தங்களது உலமாக்களை “முஜ்தஹிதீன்கள்” என்று அழைக்கிறார்கள்.

அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தை போன்றே இஸ்லாமிய ஷரீஆ சட்டத்தை வகுக்க அல்குர்ஆன், ஸுன்னா, இஜ்மாஃ, அகல் என்ற நான்கு அடிப்படையான அம்சங்களை கடைபிடிக்கிறார்கள்.

ஷீஆக்களும், பித்அத்துகளான அனாச்சாரங்களும்

முஹர்ரம் மாதத்தில் தங்களைத்தானே வருத்திக் கொண்டு மார்க்கத்தில் சொல்லப்படாத பல அனாச்சாரங்களை இஸ்லாத்தின் பெயரில் அரங்கேற்றுபவர்கள். குறிப்பாக ஷிர்க் வைக்கக் கூடிய விதத்தில் சமாதி வழிபாடுகளை இவர்கள்தான் தோற்றுவித்தனர்.

“நிகாஹ் முத்ஆ” என்னும் தற்காலிக திருமணம் நபியவர்களால் தடுக்கப்பட்டு இருந்தும், இன்னும் அவர்களின் சமூகத்தில் அதை அமல்படுத்தி வருகிறார்கள்.

இன்று இஸ்லாத்தில் இருக்கும் அனைத்து மூடநம்பிக்கைகளும், அனாச்சாரங்களும், பித்அத்துகளும் தோன்றுவதற்கு காரணமானவர்கள். இறைத்தூதர் முஹம்மத் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நபியாக ஏற்றுக்கொள்ளவில்லை என்பது இவர்களைப் பற்றி

கூறப்படும் தவறான வாதம். நபியவர்களை அத்துமீறி விரும்புபவர்கள். அவர்கள் கூறாத பல நபிமொழிகளை கூறியதாக இட்டுக்கட்டப்பட்ட ஹதீஸ்களை இந்த சமூகத்திற்கு வழங்கியவர்களும் கூட.

ஷீஆக்கள் என்பதற்கு வரலாற்று ரீதியான விளக்கம்

அலீ, முஆவியா ரளியல்லாஹுஅன்ஹும் ஆகிய இருவருக்கும் மத்தியில் நடந்த போர்களில் அலீ (ரளி) அவர்களுக்கு துணையாக நிற்கிறோம் என்று சொன்னவர்கள் தான் இந்த ஷீஆக்கள். அரபு மொழியில் துணை புரிபவர்கள் என்று அர்த்தம்.

இஸ்லாத்தை அழித்தொழிக்க பாடுபட்ட யூதர்கள் நயவஞ்சகர்களாக இருந்தும் சாதிக்க முடியாத விடயங்களை ஷீஆக்கள் என்ற பெயரில் பின்னர் சாதித்தனர்.

இவர்கள் முஸ்லிம்களா இல்லையா என்ற விடயத்தில் நமது உலமாக்கள் இவர்கள் வழிகெட்ட பாதையில் பயணிக்கும் முஸ்லிம்கள்தான் என்று கூறுகின்றனர். [9]

“حديث غدير خم - ஹதீஸ் கதீர் கும்'' என்பதன் விளக்கமும் ஷீஆக்களின் இழிவான அரசியலும்

“கும் “, “خم” . என்பது மக்காவிற்கும், மதீனாவிற்கும் இடையில் இருக்கக்கூடிய ஜுஹ்ஃபா எனும் பகுதியில் உள்ள ஓர் தண்ணீர் தடாகத்தின் பெயர். இந்த நபிமொழி மிகப் பிரபல்யமானது. அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தினரும், ஷீஆக்களும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அங்கீகாரம் பெற்ற ஒரு நபிமொழியும் கூட.

ஹதீஸ் “حديث غدير خم “,” கதீர் கும்“ என்ற இந்த நபிமொழியை பற்றி ஷீஆக்கள் கூறும்பொழுது அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் மறைத்து விட்டதாகவும் அதே நேரத்தில் இந்த நபிமொழியை ஷீஆக்கள் தவறாக விளங்கி இறைத்தூதர் ﷺ அவர்களின் மரணத்திற்கு பின்பு ஸய்யதுனா அபூபக்ர், உமர், உஸ்மான் ரளியல்லாஹுஅன்ஹும் போன்ற தலைசிறந்த சஹாபாக்களின் கிலாஃபத்துகள் முறையற்றது என்றும் அவர்களை அவமதிக்கும் வகையில் இறைத்தூதர் அவர்கள்

9 ஷீஆக்கள் பற்றி மேலும் தமிழில் படிக்க இலங்கையைச் சேர்ந்த அஷ்ஷைய்க் இஸ்மாயீல் ஸலஃபி அவர்களின் யார் இந்த ஷீஆக்கள்? என்ற புத்தகத்தை வாசிக்கவும், ஸஊதி அரேபியா தாவா சென்டரில் இந்த புத்தகம் இலவசமாக கிடைக்கிறது.

தங்களின் வாழும் காலத்திலே மேற்குறிப்பிட்ட இந்த நபி மொழியை மையமாக வைத்து தனது மருமகனார் அலீ ரளியல்லாஹு அன்ஹு அவர்களுக்குத்தான் விலாயத்தை வழங்கினார்கள் (கிலாஃபத் எனும் ஆட்சி அதிகாரம்) என்று தவறுதலாக புரிந்து இன்றுவரை அவர்களுக்கும் நமக்கும் மத்தியில் மிகப்பெரிய ஒரு பிளவை ஏற்படுத்தி விட்டார்கள்.

ஷீஆக்களும் ஆங்கிலேயர்களும்

காலனிய ஆதிக்கம் செலுத்திய ஆங்கிலேயர்கள் இந்த பிரிவினையை தங்களுக்கு சாதகமாக ஆக்கிக் கொண்டார்கள். இவர்கள்தான் முஸ்லிம்களுக்கு மத்தியில் ஷீஆ-ஸுன்னி என்ற மிகப்பெரிய சுவற்றை எழுப்பி அதிகமான பிணக்குகளை ஏற்படுத்துவதற்கு "முஸ்தஷ்ரிகீன்களை-ஓரியண்ட்லிஸ்ட்களை" (முஸ்லிமல்லாத மேற்கத்தியர்கள் இஸ்லாத்தை முறையாக படித்து நிபுணத்துவம் பெற்றவர்கள்) தயாரித்து, இன்று மத்திய கிழக்கு பகுதிகளில் பல குழப்பங்களை உலக அளவில் அரங்கேற்றி வருகின்றனர்.

தகிய்யா என்பதின் விளக்கம்

கீழே காணும் நபிமொழியில் வழமையை போன்று "தகிய்யா" (இஸ்லாம் அனுமதித்திருக்கும் இக்கட்டான நிலையில் சத்தியத்தை பாதுகாப்பதற்காக பொய்யுரைப்பது) என்ற கொள்கையை தங்களுக்கு சாதகமாக ஆக்கி எதிர்கருத்து உடைய மக்களை வழிகெடுப்பதற்காக தங்களது சொந்த கருத்துக்களை புகுத்தி, சத்திய சஹாபாக்களை தரக்குறைவாக இன்றுவரை பேசிக் கொண்டிருக்கும் "கதீர் கும்" நபிமொழி தான் இது.

ஸைய்யதுனா அலீயும் (ரளி), விலாயதும்

இதை புரிந்து கொள்ளாமல் தங்களை ஸுன்னத் வல் ஜமாஅத் என்று சொல்லிக் கொள்ளும் பரேல்விய சிந்தனை கொண்டவர்களும் அலீ ரளியல்லாஹு அன்ஹு அவர்களுக்குத்தான் "விலாயத்" இருக்கிறது தரீக்காக்களின் சங்கிலித்தொடர் ஸைய்யதுனா அலீ அவர்களை மட்டும்தான் சென்றடைகிறது என்று ஷீஆக்களுக்கு தங்களது மறைமுகமான ஒத்துழைப்பை வழங்குகிறார்கள். (நக் ஷபந்திய்யா தரீகாவைத் தவிர- இவர்களின் தொடர் அபூபக்ர் (ரளி) அவர்களை அடைந்து பெருமானார் (ஸல்) அவர்களை அடையும்)

இதை புரிந்துகொள்ளாமல் சில உலமாக்களும் இந்த நபிமொழியை மக்களிடத்திலே தவறாக கொண்டு சேர்க்கின்றனர். இந்தக் கருத்தை

பல பயான்களில் கூறியும் வருகின்றனர். இதன் உண்மை நிலை என்ன வாருங்கள் சற்று ஆய்வு செய்வோம்.

ஷீஆக்கள் தங்களது அரசியல் இலாபத்திற்காக தவறாக மாற்றி அமைத்த நபிமொழிகள்

وروى الإمام مسلم في صحيحه عن زيد بن أرقم أنه قال: قام رسول الله صلى الله عليه وسلم يوما فينا خطيبا بماء يدعى خما بين مكة والمدينة، فحمد الله وأثنى عليه ووعظ وذكر ثم قال: أما بعد ألا أيها الناس، فإنما أنا بشر يوشك أن يأتي رسول ربي فأجيب، وإني تارك فيكم ثقلين، أولهما كتاب الله فيه الهدى والنور، فخذوا بكتاب الله واستمسكوا به - فحث على كتاب الله ورغب فيه- ثم قال: وأهل بيتي، أذكركم الله في أهل بيتي، أذكركم الله في أهل بيتي.

ஸஹீஹ் முஸ்லிம் கிரந்தத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் நபிமொழி ஜெய்து பின் அர்கம் (ரளி) அவர்கள் கூறுகிறார்கள்:

அல்லாஹ்வின் தூதர்ﷺ அவர்கள் ஒரு நாள் எங்களுக்கு மக்கா விற்கும் மதீனாவிற்கும் இடையில் இருக்கும் “கும்” என்று சொல்லக் கூடிய ஒரு தண்ணீர் தடாகத்தில் உபதேசத்தை செய்கிறார்கள். அல்லாஹ் வைப் புகழ்ந்து தங்களது உபதேசத்தை ஆரம்பிக்கிறார்கள்.

“மக்களே! நான் ஒரு மனிதனாக இருக்கிறேன். என்னிடத்தில் மிக விரைவில் இறைத்தூதுவர் (வானவர்) ஒருவர் வருவார். அவரின் அழைப்பை ஏற்றுக்கொள்ள வேண்டி இருக்கும். நான் உங்களுக்கு இரண்டு முக்கியமான விடயங்களை விட்டுச் செல்கிறேன். முதலாவது அல்லாஹ்வின் வேதம். அதில் நேர்வழியும், பிரகாசமும் இருக்கிறது. அல்லாஹ்வின் வேதத்தை எடுத்துக் கொள்ளுங்கள். அதைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்”. அல்லாஹ்வின் வேதத்தைப் பற்றி ஆர்வமூட்டினார்கள். பிறகு சொன்னார்கள், “என்னுடைய குடும்பத்தினர். என்னுடைய குடும்பத்தினரைப் பற்றி அல்லாஹ்வை சாட்சியாக வைத்து உங்களிடத்தில் நினைவு கூர்கிறேன். என்னுடைய குடும்பத்தினரைப் பற்றி அல்லாஹ்வை சாட்சியாக வைத்து உங்களிடத்தில் நினைவு கூர்கிறேன். என்னுடைய குடும்பத்தினரைப்

பற்றி அல்லாஹ்வை சாட்சியாக வைத்து உங்களிடத்தில் நினைவு கூர்கிறேன்''. (இவ்வாறு மூன்று தடவைகள் கூறினார்கள்)

இந்த அறிவிப்பு அங்கீகாரம் பெற்றதாக நமது உலமாக்கள் கூறுகின்றனர். ஷீஆக்கள் கூறும் நபிமொழி இட்டுக்கட்டப்பட்ட அந்தஸ்தில் இருக்கிறது என்று நமது அறிஞர்கள் கூறுகின்றனர்.

ஒரு முஸ்லிம் இறைத்தூதர் அவர்களை முழுமையாக நேசம் கொள்ளாமல், நம்பிக்கை கொள்ளாமல் ஒரு பரிபூரணமான முஃமினாக ஆக முடியாது என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை. இறைத்தூதரை விரும்புவதும் அவர்கள் குடும்பத்தினரை நேசிப்பதும் நமக்கு மார்க்கம் கற்றுத்தந்த அடிப்படையான விடயங்களில் ஒன்று என்பதிலும் எந்த மாற்று கருத்தும் இல்லை.

அதனால்தான் நாம் நம்முடைய பிரார்த்தனைகளில் கூட இறைத்துதுவர் அவர்கள் மீது சலவாத் சொல்லும்பொழுது அவர்களின் குடும்பத்தினர் மீதும் அல்லாஹ்வுடைய அருள் இறங்குமாறு துஆ செய்கிறோம். ஆனால், இந்த ஷீஆக்கள் காலம் காலமாக இந்த நபிமொழியை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்துகிறார்கள். இறைத்தூதரின் மரணத்திற்கு பின்பு கலீஃபாவாக ஆகுவதற்கு முற்றிலும் தகுதியானவர், ஸைய்யதுனா அலீ (ரளி), இன்னும் அவர்களின் குடும்பத்தினர் மட்டுமே என்கின்றனர்.

இதைத்தான் அல்லாஹ்வுடைய தூதர் தங்களின் நபிமொழியில் அல்லாஹ்வுடைய வேதத்தையும், தனது குடும்பத்தையும் பற்றிப்பிடிக்குமாறு கூறினார்கள் என்று முறைகேடாக வியாக்கியானம் செய்து அதிகாரம் பெற்ற நபிமொழிகளில் வந்துள்ள சுவனத்தில் முதலில் பிரவேசிக்கும் தகுதி உடையவர் ஸைய்யதுனா அபூபக்ர், அடுத்ததாக உமர், உஸ்மான் ரளியல்லாஹு அன்ஹும் போன்ற தலைசிறந்த ஸஹாபாக்களை இழிவு படுத்துகிறார்கள். அன்னை ஆயிஷா, முஆவியா ரளியல்லாஹு அன்ஹும் அவர்களையும் தவறான வார்த்தைகளை பயன்படுத்தி கொச்சைப்படுத்துகிறார்கள்.

ஸைய்யதுனா அலீ அவர்கள் இறைத்தூதர் அவர்களின் காலத்திற்கு பின்பு இறைத்தூதரால் மிகவும் மதிக்கப்பட்ட இந்த மூன்று ஸஹாபாக்களுக்கு மிகவும் மதிப்பும் மரியாதையும் வழங்கி வந்தார்கள் என்பது வரலாற்றில் நிரூபிக்கப்பட்ட ஒன்று.

மேலும் ஒரு நபிமொழியில் அவர்களின் வழமையான

இருட்டடிப்புகளையும் பொய்யான கருத்துக்களையும் மார்க்கமாக சொல்லி மக்களை குழப்பி கொண்டிருக்கிறார்கள். கீழ்க்காணும் நபிமொழியிலிருந்தும், ஸைய்யதுனா அலீ மட்டுமே ஆட்சியாளராக ஆக தகுதியானவர் என்று பிழையாக கூறுகின்றனர்.

وأخرج الإمام أحمد وغيره عن بريدة قال: غزوت مع علي اليمن فرأيت منه جفوة فلما قدمت على رسول الله صلى الله عليه وسلم، ذكرت عليا فتنقصته فرأيت وجه النبي صلى الله عليه وسلم يتغير، فقال يا بريدة: ألست أولى بالمؤمنين من أنفسهم؟ قلت: بلى يا رسول الله، قال: من كنت مولاه فعلي مولاه. قال الأرناؤوط: إسناده صحيح على شرط الشيخين

இமாம் அஹ்மத் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் அறிவிக்கும் ஒரு அங்கீகாரம் பெற்ற நபிமொழி. புரைதா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்: “நான் யமன் தேசத்தில் அலீயுடன் போர் புரிந்தேன். நான் அங்கு அவரிடம் முறைகேடை கண்டேன். நான் எப்பொழுது அல்லாஹ்வின் தூதரிடத்தில் திரும்பி வந்தேனோ அலீயைப் பற்றி சற்று குறையை சொன்னேன். நபியவர்களின் முகம் சற்று மாறுவதை கண்டேன். “புரைதாவே! நான் இறைநம்பிக்கையாளர்களில் தலை சிறந்தவன் இல்லையா?” என்று கேட்டார்கள். நான் “ஆம்!” என்று சொன்னேன். “நான் யாருக்கு எஜமானனாக இருக்கிறேனோ அவர்களுக்கு அலீயும் எஜமானராக இருக்கிறார்”.

இந்த நபிமொழியின் பின்னணி என்ன என்று பார்த்தால் ஹஜ்ஜுடைய காலகட்டத்திலே சில சஹாபாக்களுக்கு அல்லாஹ்வின் தூதுவர் ஒரு சில நாடுகளில் இறை அழைப்புப் பணியைச் செய்யுமாறு கட்டளையிட்டு அனுப்பியிருந்தார்கள். அங்கு ஒரு சில சஹாபாக்கள் ஸைய்யதுனா அலீ ரளியல்லாஹு அன்ஹு அவர்களை தவறாக புரிந்து கொண்டு நபியவர்களிடத்தில் தொடர்ந்து புகார் செய்து கொண்டிருந்தார்கள்.

தொடர்ந்து புகார் சொல்லப்பட்ட விடயத்தை கண்டுகொள்ளாமல் இருந்த இறைத்தூதர் அவர்கள் தக்க தருணத்தில் இந்த குற்றச்சாட்டுகளுக்கு விளக்கம் அளிக்கலாம் என்று கருதி தனது ஹஜ்ஜை முடித்தபின்பு துல்ஹிஜ்ஜா பதினெட்டு அன்று மக்காவிலிருந்து, மதீனாவிற்கு

செல்லும் இடையில் "கும் - خم" என்ற தண்ணீர் தடாகத்தில் தங்களது உபதேசத்தை வழங்குகிறார்கள்.

இறைத்தூதர் ﷺ அவர்கள் "ஸைய்யதுனா அலீ ரளியல்லாஹு அன்ஹு அவர்களை பற்றி தவறாக கூறாதீர்கள். அவர்கள் செய்தது சரி அவர்கள் தங்களது உரிமைகளை எடுத்துக் கொண்டார்கள்" என்று கூறி அலீ இன்னும் தங்களது குடும்பத்தினரை பற்றிய மதிப்பை மரியாதையை எனது மரணத்திற்குப் பின்பும் நீங்கள் வழங்க வேண்டும் என்று சொல்லி அவர்களுக்கு ஜக்காத் பணத்தில் இருந்து உண்பது ஹராம்" என்ற கருத்தையும் குறிப்பிடுகிறார்கள்.

இதுதான் அல்லாஹ்வின் தூதர் ﷺ ஸைய்யதுனா அலீ இன்னும் தங்களின் குடும்பத்தினரை பற்றி கூறிய உண்மையான நிலைப்பாடு.

அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கண்ணோட்டத்தில் சஹாபாக்களும் ஷிஆக்கள் வழியில் பயணிக்கும் பரேல்விகளும்

ஸைய்யதுனா அபூபக்ர், உமர், உஸ்மான், ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹும் போன்ற சஹாபாக்கள் பத்ரு யுத்தத்தில் கலந்து கொண்டவர்கள். பத்ரில் கலந்துகொண்ட சஹாபாக்களை அல்லாஹ் மன்னித்து விட்டதாகவும் அவர்களுக்கு சுவனம் கட்டாயமாக்கப்பட்டு விட்டது என்ற பல அங்கீகாரம் மிக்க நபிமொழியையும் நாம் காணமுடியும்.

ஒவ்வொரு நபித்தோழருக்கும் தனி சிறப்புகள் இருக்கின்றன. ஸைய்யதுனா அலீ (ரளி) அவர்களுக்கும் தனி சிறப்புகள் இருக்கின்றன என்பது நாம் அனைவரும் அறிந்திருக்கிறோம். ஆனால், அவர்களும் அவர்கள் குடும்பத்தாரும் மட்டுமே நேர்மையானவர்கள். அவர்கள்தான் முஸ்லிம்களை ஆட்சி செய்வதற்கு தகுதியானவர்கள். மற்றவர்கள் அனைவரும் தகுதியற்றவர்கள் என்று சொல்வது முறைகேடான ஒரு விடயமாகும். கீழ்காணும் இறைவசனத்தில் நபித்தோழர்களுக்கு அல்லாஹ் வழங்கி இருக்கக் கூடிய அங்கீகாரத்தை காண முடிகிறது.

لَقَدْ رَضِيَ اللّٰهُ عَنِ الْمُؤْمِنِيْنَ اِذْ يُبَايِعُوْنَكَ تَحْتَ الشَّجَرَةِ فَعَلِمَ مَا فِيْ قُلُوْبِهِمْ
فَاَنْزَلَ السَّكِيْنَةَ عَلَيْهِمْ وَاَثَابَهُمْ فَتْحًا قَرِيْبًا

அந்த மரத்தினடியில் உங்களிடம் கைகொடுத்து வாக்குறுதி செய்த நம்பிக்கையாளர்களைப் பற்றி நிச்சயமாக அல்லாஹ்

திருப்தியடைந்தான். அவர்களின் உள்ளங்களிலிருந்த (உண்மையான தியாகத்)தை நன்கறிந்து, சாந்தியையும், ஆறுதலையும் அவர்கள் மீது சொரிந்தான். உடனடியான ஒரு வெற்றியையும் (கைபர் என்னும் இடத்தில்) அவர்களுக்கு வெகுமதியாகக் கொடுத்தான். (அல்குர்ஆன் 48:18)

வழிகெட்ட ஷீஆக்களும், "இறைவன் தூணிலும் இருக்கிறான், துரும்பிலும் இருக்கிறான்" என்ற அத்வேத கொள்கையுடைய பரேல்விகளும் கூறுவதைப் போன்று இந்த நபிமொழி மறைக்கப்பட்ட ஒன்றல்ல. இது நமது அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் உலமாக்களால் சிலாகித்துச் சொல்லப்படக்கூடிய ஒரு நபிமொழி. அதை அவர்கள் தவறாக விளங்கிக் கொண்டு இன்றுவரை அரசியல் ரீதியான முரண்பாட்டை கையாளுகிறார்கள். அவர்களின் பாதையை பின்பற்றும் அத்வேதக் கொள்கை உடைய பரேல்விகளும் இந்த தவறான கருத்தை மக்களிடம் பரப்பிக் கொண்டிருக்கின்றனர்.

இஸ்திகாஸா மீண்டும் ஒரு பார்வை...

இன்று முஸ்லிம்களுடைய பிரச்சனைகள் எத்தனையோ இருக்கின்றன, இதைப் பற்றிய விவாதங்கள் செய்ய யாரும் இல்லை அதற்கு தீர்வு அளிப்பதற்கு யாரும் முன் வருவதில்லை. இதைப்போன்ற தேவையில்லாத சர்ச்சைகளை ஏன் நீங்கள் செய்கிறீர்கள்? என்ற கேள்வியை சிலர் என்னிடம் கேட்கிறார்கள்.

இஸ்லாமியர்களின் பொருளாதார பிரச்சனை, அரசியல் ரீதியான பிரச்சனை, சமூக ரீதியான பிரச்சனை எந்த அளவுக்கு அது பற்றி விவாதம் செய்வது தீர்வு காண்பது மிக முக்கியமோ அதைவிட கொள்கை ரீதியான குழப்பங்களில் தெளிவு பெறுவது மிக அவசியம்.

இன்று பலருக்கு இஸ்லாமிய அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கை என்றால் என்ன என்பது அறவே தெரிவதில்லை. ஆனால், தங்களை இஸ்லாமிய விழிப்புணர்வு பெற்றவர்களாகவும், மார்க்கத்தை ஆழமாக அறிந்தவர்களாகவும் நினைத்துக் கொள்கிறார்கள்.

ஒரு முஸ்லிமின் நற்கருமங்கள் இறைவனிடம் ஏற்றுக் கொள்ளப் படுவதற்கு மறுக்கப்படுவதற்கு அவன் கொண்டுள்ள கொள்கைகள்தான் ஓர் அடிப்படையான அளவுகோல். நாளை மறுமை நாளில் இறைவனை முறையாக சந்திக்க வேண்டுமென்று ஆசைப்பட்டால் இறைவனுக்கு யாரையும் இணை கற்பித்திருக்கக் கூடாது, ஷிர்க் செய்திருக்கக் கூடாது.

قُلْ اِنَّمَا اَنَا بَشَرٌ مِّثْلُكُمْ يُوْحٰى اِلَىَّ اَنَّمَا اِلٰهُكُمْ اِلٰـهٌ وَّاحِدٌ فَمَنْ كَانَ يَرْجُوْالِقَآءَ رَبِّه
فَلْيَعْمَلْ عَمَلًا صَالِحًا وَّلَا يُشْرِكْ بِعِبَادَةِ رَبِّه اَحَدًا

(நபியே!) நீர் கூறுவீராக, “நிச்சயமாக, நான் உங்களைப் போன்ற ஒரு மனிதன்தான், நிச்சயமாக உங்களுடைய (வணக்கத்திற்குரிய) நாயன் ஒரே நாயன்தான் என்று எனக்கு வஹீமூலம் அறிவிக்கப்படுகிறது,

ஆகவே, எவர் தன் இரட்சகனைச் சந்திக்க ஆதரவு வைக்கிறாரோ, அவர் நற்கருமங்களைச் செய்யவும், தன் இரட்சகனின் வணக்கத்தில், அவர் எவரையும் இணையாக்க வேண்டாம். (அல்குர்ஆன் 18:110)

இஸ்திகாஸா பி கைரில்லாஹ் - **استغاثة بغير الله** -அல்லாஹ் அல்லாத பிறரிடம் உதவி தேடுதல் என்று அர்த்தம்,

அல்லாஹ்விடம் உதவி தேடுவதை அல்லாஹ் இவ்வாறு கூறுகிறான்

اِذْ تَسْتَغِيْثُوْنَ رَبَّكُمْ فَاسْتَجَابَ لَكُمْ اَنِّىْ مُمِدُّكُمْ بِاَلْفٍ مِّنَ الْمَلٰۤٮِٕكَةِ مُرْدِفِيْنَ

நீங்கள் உங்கள் இரட்சகனிடம் (உங்களை) இரட்சிக்கத் தேடியபோது "(அணி அணியாக) உங்களோடு இணைந்து (அடுத்து) வரக்கூடியவர்களாக மலக்குகளில் ஆயிரம் பேர்களைக் கொண்டு நிச்சயமாக நான் உங்களுக்கு உதவி செய்வேன்" என்று அவன் உங்களுக்கு பதிலளித்தான். (அல்குர்ஆன் 8:9)

அறிஞர்கள் இந்த வசனத்தில் இடம் பெற்றிருக்கும் இஸ்திகாஸா என்பது அல்லாஹ்விற்கு மட்டுமே உரித்தான துஆவை சேர்ந்தது என்றும் மனிதர்களால் நமது தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத துஆ அல்லாஹ்விடமே கேட்கப்பட வேண்டும். அந்த இஸ்திகாஸா ஒரு இபாதத் என்கிறார்கள். நிச்சயமாக பிரார்த்தனை என்பது அல்லாஹ்விடமே கேட்கப்பட வேண்டிய ஒன்று.

اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ

(எங்கள் இரட்சகா!) உன்னையே நாங்கள் வணங்குகிறோம்; உன்னிடமே நாங்கள் உதவியும் தேடுகிறோம். (அல்குர்ஆன் 1:5)

மனிதரிடம் உதவி கேட்பதும் இருக்கிறது. அல்லாஹ்விடம் உதவி கேட்பதும் இருக்கிறது. இரண்டுக்கும் என்ன வித்தியாசம்?

தண்ணீரில் மூழ்கி கொண்டிருக்கும் ஒருவன் "என்னை காப்பாற்றுங்கள்!" என்று கத்துகிறான் என்று வைத்துக் கொள்வோம். "இல்லை, இல்லை உதவி என்பது அல்லாஹ்விடம் மட்டுமே கேட்க வேண்டும்" என்று நாம் காப்பாற்றாமல் விட்டுவிடுவோமா? நமக்கு சக்தி இருந்தால் அவரை காப்பாற்றுவோம் அல்லவா?

இந்த வகையான உதவிகள் அதாவது மனிதர்கள் மனிதர்களுக்கு செய்ய முடிந்த உதவிகள் ஷிர்க் அல்ல குஃப்ர் அல்ல. அவ்வாறு இருந்தால் அல்லாஹ்வும் தூதரும் நமக்கு தெளிவுபடுத்தி இருப்பார்கள்.

இதை வைத்துதான் மாற்றுக் கருத்து உடையவர்கள், பரேல்விகள் மனிதர்களிடம் நாம் உதவி கேட்பது கூடும் என்றபோது மனிதர்களை விட மிக உயர்ந்த ஸ்தானத்தில் இருப்பவர்கள் இறைநேசர்கள் அவர்களிடத்தில் நமது பிரச்சினையை சொல்லி உதவி கேட்பதில் என்ன தவறு இருக்கிறது? என்பதாக "கியாஸ்" சட்டம் எடுக்கிறார்கள். இந்த வகையான கியாஸ் சட்டத்திற்கு உஸூலுல் ஃபிக்ஹில் (ஃபிக்ஹு துறையின் அடிப்படையான விதிமுறைகள்) கியாஸ் மஃஅல் ஃபாரிக் (قياس مع الفارق) என்று சொல்வார்கள். இது ஒரு தவறான அணுகுமுறையும் ஆகும்.

ஆக தான் சக்தி பெறாத விடயங்களில் உதாரணமாக, உடல் ஆரோக்கியத்தை கேட்பது, மழை பெய்யச் சொல்லி கேட்பது, கவலைகளை போக்க சொல்லி கேட்பது, வியாபாரத்தில் அபிவிருத்தியை கேட்பது, ஒரு மனிதன் மற்றொரு மனிதனிடமோ, அல்லாஹ் அல்லாத மற்றவர்களிடமோ எனக்கு உதவி செய்யுங்கள் என்று கேட்பது இணை வைத்தலாகும்.

எதிர் கருத்து உடைய பரேல்விகள் அந்தளவுக்கு மார்க்கத்தில் ஞானம் இல்லாதவர்களா? என்று நீங்கள் ஒரு கேள்வி கேட்கலாம். நியாயமான ஒரு கேள்வியை தான் முன் வைத்திருக்கிறீர்கள்.

முதலாவது பதில்: அவர்களுக்கு உண்மையாகவே மார்க்கத்தில் ஞானம் மிகக் குறைவு. அல்லாஹ்வும் ரஸூலும் எந்த முறையில் மார்க்கத்தைச் சொன்னார்களோ அதை ஓர் அளவுகோலாக எடுத்துக் கொள்ளாமல் தங்களது ஷைகுமார்களும், வலிமார்களும் எதைச் சொல்லி இருக்கிறார்களோ அதுதான் மார்க்கம் என்று விளங்கி இருக்கிறார்கள். இதுவே அவர்களின் ஒருவகை அறியாமை.

இரண்டாவது பதில்: நபியவர்கள் நமக்காக பரிந்துரை செய்வதும் (ஷஃபாஅத்தும்),வஸீலா தேடுவது, இஸ்திகாஸா இவைகளுக்கு மத்தியில் எந்த வித்தியாசமும் இல்லை. இஸ்திகாஸா இந்த அடிப்படையில் கூடும் என்பது ஷாஃபிஈ மத்ஹபில் பின்வந்த சில அறிஞர்கள் இமாம் ரமலி, இமாம் இப்னு ஹஜர் ஹைதமி ரஹிமஹுமுல்லாஹ் போன்றோரின் கருத்து. இது பிழையான இஜ்திஹாத் ஆகும்.

لا مصاغ الاجتهاد في النصوص லா முஸாக அல்இஜ்திஹாது ஃபின் நுஸூஸ் தெளிவான ஆதாரங்கள் குர்ஆனிலும் ஹதீஸிலும் சொல்லப்பட்ட பின்பு யாருக்கும் இஜ்திஹாத் செய்வதற்கு அனுமதி இல்லை என்ற

அடிப்படையான உஸூலை அலட்சியப் படுத்துவதால் ஏற்படும் விளைவுகளே இவைகள்.

நமது காலத்திலும் சில அறிவிலிகள்

குர்ஆன் ஸுன்னாவில் தெளிவாக ஒரு விடயத்தைப் பற்றி சொல்லப்பட்டு இருந்தும் சுய ஆய்வு செய்கிறேன் (இஜ்திஹாத்) என்ற அடிப்படையில் வழிகேட்டிற்கு செல்கிறார்கள். அதையும் நாம் பார்க்கிறோம். புத்திக்கு பட்டால் ஹதீஸை ஏற்றுக் கொள்வோம். இல்லையென்றால் அது சரியான ஆதாரம் மிக்க ஒரு நபிமொழியாக இருந்தாலும் மறுப்போம் என்ற ஒரு வழிகேடு இதனடிப்படையில்தான் ஏற்படுகிறது.

ஷாஃபிஈ மத்ஹபின் முன்சென்ற இமாம்கள் இஸ்திகாஸா கூடாது என்று சொல்கிறார்கள். பின் வந்த சில அறிஞர்கள் தான் இதை அனுமதிக்கிறார்கள். இதுதான் சற்று சர்ச்சைக்கு வழிவகுக்கிறது. மாற்றுக் கருத்துடைய பரேல்விகளிடத்தில் வஸீலா தொடர்பாக வந்திருக்கும் நபிமொழிகளை இஸ்திகாஸாவாக பார்ப்பார்கள். கண் தெரியாத ஒரு நபித்தோழர் நபியவர்கள் காலத்தில் கேட்ட வஸீலா இதற்கு நல்ல உதாரணம். அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையின்படி கீழ்க்கண்ட முறையில் வஸீலா தேடலாம்.

1. ஸாலிஹான நல்ல அமல்கள் ஊடாக துஆ கேட்பது.

2. உயிருடன் இருக்கும் சாலிஹான இறைநம்பிக்கையாளர் ஊடாக துஆ கேட்பது.

3. அல்லாஹ்வின் திருநாமங்களைக் கொண்டு கேட்பது.

இமாம் இப்னு ஹஜர் அல்ஹைதமி, அஷ்ஷாஃபிஈ ரஹிமஹுல்லாஹ் இமாம் ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா ரஹிமஹுல்லாஹ்[10] அவர்களை காஃபிர் என்று கூறினார்கள். இமாம் இப்னு தைமிய்யா அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தின் கொள்கை அடிப்படையில் மரணித்தவர்களிடத்தில் துஆ கேட்பது கூடாது என்றார்கள்.

இந்த மார்க்க தீர்ப்பை கொடுத்த உடனேயே பல மூத்த உலமாக்கள் இப்னு ஹஜர் ஹைதமி அவர்களை விமர்சித்ததும் வரலாற்றில் இடம் பெற்றுள்ளது.

---

10 ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா ரஹிமஹுல்லாஹ் அவர்களை பற்றி கூடுதலான தகவலுக்கு எனது யூடியூப் சானலில் பார்க்கவும்.

நாஸிருத்தீன் திமிஸ்கி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா காஃபிர் என்று தவறாக நினைத்தவர்களுக்கு மறுப்பு என்ற பெயரிலும் புத்தகம் வெளியிட்டார். "அர்ரத்து அல்வாஃபிர் அலா மன் ஸஃஅம பி அன்ன மன் ஸம்மா இப்னு தைமிய்யா ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா காஃபிர்"

("الرد الوافر على من زعم بأن من سمّى ابن تيمية شيخ الإسلام كافر")

அன்றைய காலகட்டத்திலே இருந்த ஹனஃபி மத்ஹபைச் சேர்ந்த பிரபலமான இமாம் பதுருதீன் அல்ஐனி அல்ஹனஃபி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் நாஸிருத்தீன் திமிஸ்கி அவர்களின் புத்தகத்தை சிறந்த புத்தகமாக சொல்லி இருக்கிறார்கள்.

மரணித்தவர்களிடத்தில் அல்லாஹ்விடம் கேட்கப்படக்கூடிய துஆக்களை போன்று கேட்கலாம் என்ற இந்த அசத்தியமான கொள்கை தவ்ஹீதுக்கு முரணானது. இது ஷிர்க்கையும், குஃப்ரையும் உண்டாக்கிவிடும்.

இன்று அசத்திய கொள்கைகள் பல நமது சமூகத்தில் இஸ்லாமிய பெயரில் நுழைந்துவிட்டது. அதை சரியாக இனம்கண்டு கொள்ள வேண்டும் என்பதே நமது நூலின் நோக்கம். ஆலிம்களாக இருப்பதால் அல்லாஹ் நம்மை மறுமையில் இந்த வழி கேடுகளுக்கு மறுப்பாக ஆலிம் என்ற விதத்தில் என்ன செய்தாய் என்று கேட்பான் என்ற எண்ணமே இந்த நூல்.

பொதுமக்களே அல்லாஹ் நம் அனைவரையும் உண்மையான அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் சத்தியக் கொள்கையில் நிலை பெறச் செய்து அதிலே மரணிக்க தவ்ஃபீக் செய்வானாக!!

மக்கா ஹரம் ஷரீஃபின் மீது தொடரும் தாக்குதல்களும், பரேல்விகளின் சதிவலைகளும்

2021ஆம் ஆண்டு மார்ச் மாதம் 30ஆம் தேதி செவ்வாய்க்கிழமை அன்று மக்கா மஸ்ஜிதுல் ஹராமில் பயங்கர ஆயுதத்துடன் பயங்கரவாத அமைப்புகளின் பெயர்களை சப்தமாக முழங்கிக் கொண்டு அங்கு வணக்க வழிபாடுகளில் ஈடுபட்டு கொண்டிருந்த மக்களை அச்சுறுத்திய ஒருவர் இறுதியாக ஹரம் ஷரீஃப் பாதுகாவலர்களால் கைது செய்யப்பட்டார். இது சவூதி அரசாங்கத்தின் அதிரகாரப்பூர்வ தகவல் தான்.

இது போன்ற நிகழ்வுகள் அவ்வப்போது நடைபெற்று வருவதை நாம் பல்வேறு ஊடகங்களின் வாயிலாக கண்டு வருகிறோம். உடனே, வஹாபிகளின் கோட்டையான ஸஊதி அரேபியா. ஆல ஸஃஊது அரசாங்க குடும்பத்தினர் புரியும் அட்டூழியங்களும், அநீதங்களும் நாளுக்கு நாள் அதிகமாகி கொண்டே செல்கின்றது. அதனால் அவர்கள் இறை அதிருப்தியை பெற்றுவிட்டனர். என்றெல்லாம் கூறி பொய்யான நபிமொழிகளையும் சொல்லி மக்களிடையே தவறான கருத்துக்களை சிலர் பரப்பும் முயற்சி செய்கின்றனர்.

இதேபோன்று வரலாற்றிலே யாரும் மறக்க முடியாத ஒரு சம்பவம் மக்கா மஸ்ஜிதுல் ஹராமில் 1979ஆம் ஆண்டில் நடைபெற்றது.

ஸஊதி பிரஜை ஜுஹைமான் அல்உதைபி என்பவன் பயங்கரமான ஆயுதங்களுடன் ஹரம் ஷரீஃபில் நுழைந்து முற்றுகையிட்டது தான். ஜுஹைமான் அல்உதைபியை பற்றி அறிவதற்கு முன், இவரை பற்றி உலக அறிஞர்கள் என்ன எழுதி இருக்கிறார்கள் என்று பார்க்கவும்.

பொதுவாக ஸஊதி அரேபியாவைச் சேர்ந்த அறிஞர் ஒருவரின் புத்தகத்தை மேற்கோள் காட்டினால் இந்த பரேல்விகள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள். பொய், பித்தலாட்டம் என்று சொல்வார்கள். அதனால் வரலாற்று ஆசிரியர்கள் ஊடாக இந்த வாதம் வைக்கப்படுகிறது.

அமல் அச்சகம் (Amal press) என்ற பதிப்பகம் "தி மெக்கன் ரெபில்லியன்" மக்கத்து போராளி என்ற புத்தகத்தை, மேற்கத்திய ஆய்வாளர்கள் Thomas Hegghammer & Stephen Lacroix எழுதியதை வெளியிட்டிருக்கிறது. அதில் கிடைத்த சில தகவல்கள்:

⋆ ஜுஹைமான் அல் உதைபி என்ற ஸவூதி பிரஜை, 18 வருடங்கள் சவூதி தேசிய பாதுகாப்பு படையில் பணி செய்தவர்.

⋆ இவர் மக்காவிலும், மதீனாவிலும் இஸ்லாமிய ஷரீஆ கல்வியை முறையாக படித்தவர்.

⋆ தன் சகோதரியின் கணவர் முகம்மது பின் அப்துல்லாஹ் அல்கஹ்தானி உடன் சேர்ந்து, இரகசிய உடன்படிக்கை செய்கிறார்.

⋆ நடப்பில் இருக்கும் அரசாங்கம், குரைஷி வம்சத்தினர் இல்லை. எனவே, இந்த அரசு, அல்லாஹ்வின் ஷரீஅத்திற்கு மாற்றமானது. இவர்கள் காஃபிர்கள். நாம் இந்த அரபு உலகை அநீதியிலிருந்து விடுதலை பெறச்செய்து, நாம் ஆட்சி செய்வோம் என்று கூறி, தன் மைத்துனர் முஹம்மது பின் அப்துல்லாஹ் அல்கஹ்தானி தான் எதிர்பார்க்கப்பட்ட "மஹதீ" என்றார்.

⋆ "இனி அவரைத்தான் அமீராக பைஅத் செய்தாக வேண்டும்" என்று இரகசியமாக, பல ஆயிரக்கணக்கில் மக்களை அரசிற்கு எதிராக கிளர்ச்சி செய்ய தூண்டினார்.

⋆ எனவே, 1400 வது ஹிஜ்ரீ 1979-11-20 ல் புனித கஃபாவை முற்றுகையிட்டு, அங்கிருந்த பலரை பணயக்கைதியாக ஆக்கி, தவாஃப் இன்னும் தொழுகையையும் நடத்த விடாமல் தடுத்தனர். அரசாங்கம், பல நாட்கள் அமைதியாக பேச்சுவார்த்தை நடத்தியும் பயனில்லை. இறுதியாக, உள்ளிருந்த மக்களை மீட்பதற்காக, கமாண்டோ தாக்குதல் நடத்தி, பொய்யன் முஹம்மது பின் அப்துல்லாஹ் அல் கஹ்தானி (போலி மஹதியை) கொலை செய்தனர்.

இதனால், இவர் எதிர்பார்க்கப்பட்ட மஹ்தி இல்லை என்ற

உண்மை நிலையை அறிந்த ஜுஹைமான் அல்உதைபியும் அவரின் 61 சகாக்களும், சரணடைந்து, பின்னர் தூக்கிலிடப்பட்டனர்.

ஆனால், இந்த பயங்கரவாத சதியை ஆதரித்து தவறாக எழுதி ஸஊதி அரசாங்கத்தை மக்கள் மன்றத்தில் குற்றவாளிஆக மாற்றுகின்றார், “மக்கா படுகொலை” என்ற புத்தகத்தின் ஆசிரியர் அறிஞர் ஷபர் பங்கஷ், ஷீஆக்களை போன்று நடந்தேறிய உண்மைகளை மறைத்திருக்கிறார்!

அறிஞர் ஷபர் பங்கஷ், பிரபல்யமான டொரன்டோவின் இஸ்லாமிய அறிஞரும், இன்னும் ஒரு பத்திரிகையாளரும் கூட. ஈரானிற்கு, தனது ஆதரவை தந்து வருபவர் என்பது அனைவரும் அறிந்ததே.

ஈரானிய செய்தி தொலைக்காட்சிக்கு இவர் கொடுத்த பேட்டியில் பின்வருமாறு கூறுகிறார்:

அவர், “ஜுஹைமான் அல்உதைபியை, சவூதி அரசாங்கத்தின் தவறை சுட்டிகாட்டியவர்கள். அதனால் அவர்களின் மூதாதையர்கள் கொல்லப்பட்டனர். அவரும், அவர் கூட்டாளிகளும், ஹரமில் தஞ்சம் புகுந்தனர். இருந்தும், சவூதி அரசாங்கம் ஈவு இரக்கமின்றி அவர்களை கொலையும், சிறைவாசமும் அளித்தது” என்றெல்லாம் வரலாற்று இருட்டடிப்பு செய்து, மேலும் படிப்பவர்களுக்கு குழப்பத்தையும் ஏற்படுத்தி, “ஹரம் ஷரீஃபின் கண்ணியத்தை போக்கினார்” என்றெல்லாம் கூறியது மக்களின் கவனத்தை திசை திருப்புவதற்காக மட்டுமே!

மேலும், இவர் தனது புத்தகத்தில் 1987 ல் நடந்த படுகொலை சம்பவம் என்று பல வரலாற்று பின்னணியில் பொய்களை எழுதி இருக்கிறார். ஆனால், நடந்தது என்ன என்று தாங்களே கீழ்கண்ட தகவலை படித்துப் பாருங்களேன்.

லாஸ் ஏஞ்சல்ஸ் டைம்ஸ் (Los Angels Times) *என்ற பத்திரிகையில் வந்த தகவல். 02-08-1987 அன்று சார்லஸ் பி. வால்லஸ்* (CHARLES P. WALLACE) *என்ற பத்திரிகையாளர் எழுதி இருக்கிறார். அது என்ன?*

“பல நூற்றுக்கணக்கான ஈரானியர்கள், இன்னும் பல மற்ற நாட்டவர்களும், அதிலும் பல சவூதி பிரஜைகளும் இந்த ஈரானிய ஹாஜிக்களின் கால்களுக்கு கீழ் உயிரிழந்தனர். ஆனால், ஒரு தோட்டா கூட சவூதி பாதுகாவலர்கள் இவர்கள் மீது பயன்படுத்தவில்லை”.[11]

---

11 மேலும், 1987 ல் ஹஜ்ஜில் ஸஃஊதி அரசாங்கத்தால் திட்டமிட்டு ஈரானியர்கள் படுகொலை

சமாதி வழிபாட்டை ஒழித்து பித்அத்துகளையும் அனாச்சாரங்களையும் அடியோடு துடைத்து எறிந்த ஸஊதி அரேபியா மீது இந்த ஷீஆ சிந்தனையாளர்கள் கக்கும் இந்த அபாயகரமான விஷங்களை முறியடிப்பதற்காகதான் இந்த செய்திகள் உங்களுக்கு தரப்படுகின்றன.

இந்தப் புத்தகத்தை, படித்த பிறகு, தயவு கூர்ந்து, இவரைப் பற்றிய தெளிவான பின்னணியையும், எதற்காக, இந்த புத்தகத்தை எழுதினார் என்பதனையும் படிக்க தவறாதீர்கள்.

இல்லையேல், ஷீஆக்களின் நோக்கமாகிய அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாத் மக்களை இழிவு படுத்தவேண்டும் என்ற அந்த அபாய வலையில் நீங்களும் விழுந்து பலியாகி விடுவீர்கள். அதிலும், ஸவூதி அரேபிய அரசாங்கம் இன்னும் அவர்களுக்கு இவர்கள் (ஷீஆக்கள்) வைத்த “வஹ்ஹாபிகள்” என்ற பட்டத்தை, நாம் அறியாமலேயே, நம்மீது சுமத்தி இந்த உம்மத்தின் பிரிவினைக்கு ஆளாகி விடுவோம்.

எனவே, வரலாற்றை மாற்றி அமைக்க வேண்டாம். மேலும், பிரிவினைவாத சிந்தனைகளுக்கு எப்பொழுதும் துணை போகாமல் அவற்றை களைந்து விடுங்கள்.

وَتَعَاوَنُوْا عَلَى الْبِرِّ وَالتَّقْوٰى وَلَا تَعَاوَنُوْا عَلَى الْاِثْمِ وَالْعُدْوَانِ
وَاتَّقُوا اللّٰهَ اِنَّ اللّٰهَ شَدِيْدُ الْعِقَابِ

இன்னும், நன்மைக்கும், (அல்லாஹ்வுடைய) பயபக்திக்கும் நீங்கள்

செய்யப்பட்டனர் அன்று நடந்த இந்த விபத்தை படுகொலையாக சித்தரித்தவர்களைப் பற்றிய உண்மை நிலையை அறியுங்கள்.

1. Khamene'i's message, Radio Tehran, 28 June 1990, quoted in FBIS, 2 July 1990. “Khomeini's message, Radio Tehran, 20 July 1988, quoted in FBIS, 21 July 1988. Abu Sufyan was a member of the Prophet Muhammad's tribe who had originally opposed Muhammad. His son, Yazid, was responsible for the killing of the Imam Husayn. Another son, Mu'awiya, founded the Umayyad dynasty. The family and the dynasty are deemed usurpers in the Shi'ite reading of early Islamic history.”

2. On the bombing incident, see Reinhard Schulze, “The Forgotten Honor of Islam,” MECS 13 (1989): 182-84.

3. Al-Alam (London), 16 May 1992.

4. Sa'ud al-Faysal quoted by Radio Tehran, 30 September 1990, quoted by FBIS, 1 October 1990.

5. Nateq-Nuri's interview, Middle East Insight, July-August 1993. இன்னும் பல.........

ஒருவருக்கொருவர் உதவியாக இருங்கள். பாவத்திலும் பகைமையிலும் நீங்கள் ஒருவருக்கொருவர் உதவியாக இருக்க வேண்டாம். இன்னும் அல்லாஹ்வை நீங்கள் பயந்து கொள்ளுங்கள். (ஏனென்றால்) நிச்சயமாக அல்லாஹ் தண்டிப்பதில் மிகக் கடினமானன். (அல்குர்ஆன் 5:2)

ஐயமும் தெளிவும்

ஐயம்: *வழிகேடுகளையும் பித்அதுகளையும் தவிர்த்துக் கொண்டு,மீலாத் என்ற பெயரில் நபி ﷺ அவர்களின் வாழ்க்கையை இந்த ரபீஉல் அவ்வல் மாதத்தில் பரப்புரை செய்வது இறை அழைப்புப் பணிக்கு உகந்ததுதானே?*

தெளிவு: இஸ்லாம் அல்லது குஃப்ர் என்ற இரண்டே வகைகள் தான் மார்க்கத்தில் இருக்கிறது.

பெரும் பாவங்கள் செய்தவர்கள் தவ்பாச் செய்யவில்லை என்றால் சொர்க்கத்திற்கோ, நரகத்திற்கோ செல்ல மாட்டார்கள் நடுவில் இருப்பார்கள் (منزلة بين المنزلتين)என்று வாதிட்ட வழிகேடர்களின் வரலாறு நினைவுக்கு வருகிறது. சில சமயம் கருத்து வேறுபாடுகளிலிருந்து தப்பிப்பதற்காக மேற்கொள்ளப்படும் ஒரு வழிதான் நடுநிலை என்று வாதிடுவது.

நமக்கேன் பொல்லாப்பு இவர்களையோ அவர்களையோ எதிர்க்க வேண்டாம், சமநிலையை பேணுவோம், என்று சில நேரங்களில் மார்க்கம் காட்டித்தராத விதத்தில் சமரசம் செய்து கொள்கிறோம்.

மார்க்கம் வணக்கமாக சொல்லும் விடயங்களில் கூடுதல் குறைவு ஏற்படுத்துவதற்கு யாருக்கும் எந்த அனுமதியும் இல்லை. மார்க்க கிளை சட்டங்களில் ஏற்படும் கருத்து வேறுபாடுகளை நளினமான முறையில் இணக்கமாக சமரசம் செய்யலாம். கொள்கை விடயங்களில் மாற்றுக் கருத்துள்ளவர்களுடன் சமரசம் என்பது இல்லை.

لا طاعة للمخلوق في معصية الخالق

அல்லாஹ்வுக்கு மாறுபடும் விடயத்தில் படைப்பினங்களுக்கு எந்த கட்டுப்படுதலும் இல்லை. மார்க்கம் காட்டி இருக்கும் பாதையில்

பயணிப்பது தவிர்த்து இருக்கும் பாதையை விட்டு ஒதுங்கி இருப்பதே இஸ்லாம்.

இதையும் செய்து கொள்ளலாம் அதையும் செய்து கொள்ளலாம் என்று சொல்வது நம்மை நாமே ஏமாற்றிக் கொள்வதற்கு சமம். எது அசல் எது போலி என்று தெரிந்து கொள்ளாமல் இருப்பது ஒரு அறியாமை. போதிய கல்வியை பெறுவதன் மூலம் இதை சரி செய்து விடலாம்.

நபியவர்களின் நேசம் நமது நம்பிக்கையில் பரவியிருக்கிறது. அவர்களின் நேசத்தின் வெளிப்பாடு அவர்களை பின்பற்றுவதில் தான் இருக்கிறது. அல்லாஹ்வும், தூதரும் காட்டித் தராத வணக்க வழிபாடுகளாக கட்டமைக்கப்படும் மீலாதுகள் வழிகேடுகளே என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

நபியவர்களின் வாழ்க்கை வரலாறை வருடத்தின் மற்ற மாதங்களிலும் பரப்புரை செய்யலாமே! ஏன் குறிப்பாக ரபீஉல் அவ்வல் மாதம்? வரலாற்று ரீதியில் நபியவர்கள் இந்த மாதத்தில் பிறந்ததற்கு அதிகாரப்பூர்வமான ஆதாரங்கள் இல்லை. இறந்ததற்கு தான் ஆதாரம் இருக்கிறது. நாம் மகிழ்ச்சியாக மீலாதை கொண்டாடுகிறோம்! எதற்கு நபியவர்கள் மரணித்தற்கா?

உமர் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் ரபீஉல் அவ்வல் மாதம் நிகழ்ந்த ஆதாரப்பூர்வமான ஹிஜ்ரதை முன்வைத்து தான் ஹிஜ்ரா காலண்டரை ஏற்படுத்துகிறார்கள்.

இந்த மாதத்தில் நபியவர்கள் பிறந்திருந்தது ஊர்ஜிதமாக இருந்தால் அதையே நபியவர்களுடைய மிக நெருங்கிய தோழரான உமர் ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் நபியவர்கள் பிறந்த தினத்தை முற்படுத்தி ஹிஜ்ரா காலண்டரை ஏற்படுத்தியிருக்கலாமே!!! தயவுகூர்ந்து மார்க்கத்தை நபித்தோழர்களில் வழியில் நின்று விளங்கவும்.

وَمَا كَانَ لِمُؤْمِنٍ وَّلَا مُؤْمِنَةٍ اِذَا قَضَى اللّٰهُ وَرَسُوْلُه اَمْرًا اَنْ يَّكُوْنَ لَهُمُ الْخِيَرَةُ
مِنْ اَمْرِهِمْ وَمَنْ يَّعْصِ اللّٰهَ وَرَسُوْلَه فَقَدْ ضَلَّ ضَلٰلًا مُّبِيْنًا

அல்லாஹ்வும், அவனுடைய தூதரும் யாதொரு காரியத்தை முடிவெடுத்துவிட்டால், அவர்களுடைய அக்காரியத்தில் சுயமாக வேறு அபிப்பிராயம் கொள்பவதற்கு, விசுவாசியான எந்த ஆணுக்கும்,

எந்தப் பெண்ணுக்கும் உரிமையில்லை. (அதில்) அல்லாஹ்வுக்கும், அவனுடைய தூதருக்கும் எவர் மாறு செய்கிறாரோ அவர், பகிரங்கமான வழிகேடாக திட்டமாக வழிகெட்டுவிட்டார். (அல்குர்ஆன் 33:36)

ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா ரஹிமஹுல்லாஹ் அவர்களின் புத்தகத்தை பரேல்விகள் அவ்வப்பொழுது ஆதாரமாக சுட்டிக்காட்டி தங்களின் வழிகேடான கருத்துக்களை திணிக்க பார்ப்பார்கள் சற்று விழிப்புடன் இருங்கள் பொதுமக்களே,

ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தங்களின் புத்தகமான "இக்திழாஉஸ் ஸிராதில் முஸ்தகீம்" (اقتضاء الصراط المستقيم) பக்கம்: 297 ல் கீழ்காணும் விதத்தில் மீலாது விழா கொண்டாடுவதை ஆதரித்து இருக்கிறார்கள் என்ற கருத்து பரேல்விகளால் பரப்பப்பட்டு வருகிறது.

தவறான கருத்து

சிலர் மீலாது விழாவை கண்ணியப்படுத்தும் விதத்தில் குதூகலமாக கொண்டாடுகிறார்கள். அவரின் நோக்கம் நல்லதாக இருப்பதனாலும் இறைத்தூதர் ﷺ அவர்களை கண்ணியப்படுத்துவதாலும் அதில் மகத்தான நற்கூலி அவர்களுக்கு இருக்கிறது.

தெளிவு

இவர்கள் சொல்லி இருக்கும் 297 வது பக்கத்தில் அவ்வாறு எதுவும் அங்கு இல்லை. இதுதான் பரேல்விகளின் வரலாறு காணாத இருட்டடிப்புகள் யாராவது எதையாவது எழுதினால், அதை அவ்வாறே காப்பி பேஸ்ட் பண்ணுவது சிந்திப்பதற்கு அல்லாஹ் நமக்கு பகுத்தறிவை கொடுத்திருக்கிறான் என்ற எண்ணமே வருவதில்லை! ஏன் இவ்வாறான இருட்டடிப்புகள் பொய் பித்தலாட்டங்கள்?

ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தங்களின் புத்தகமான "இக்திழாஉஸ் ஸிராதில் முஸ்தகீம்" (اقتضاء الصراط المستقيم) பக்கம்: 252 ல் இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்:

இவ்வாறு சிலர் (முஸ்லிம்கள்) கிறிஸ்தவர்களை பின்பற்றி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவருடைய பிறந்த நாளுக்கு அவர்கள் செய்வதைப் போன்றே நபி ﷺ அவர்கள் மீது அன்பையும் கண்ணியத்தையும் வெளிப்படுத்தி பிறந்தநாள் காண முயற்சி செய்கிறார்கள். இவர்கள் செய்த இந்த செயலுக்கு சில சமயம் அல்லாஹ் இவர்களின் முயற்சிக்கும்,

நேசத்திற்கும் கூலி கொடுக்கக் கூடும். ஆனால், இவர்கள் செய்யும் பித்அத் (அனாச்சாரம்) என்ற அடிப்படையில் நன்மைகள் கிடைக்காது.

மீலாது விழா கொண்டாடுவதற்கு நேரடியான தடை வரவில்லை என்று கருதி யார் நபியவர்கள் ﷺ பிறந்த தினத்தை கருத்து வேறுபாடுகள் இருப்பதுடன் கொண்டாட்டமாக எடுத்துக் கொள்வார்களோ, இது போன்ற செயல்களை நமது முன்னோர்கள் (சஹாபாக்கள்) செய்யவே இல்லை என்று அவர்கள் அறிந்து கொள்ளட்டும்.

இதை செய்வதில் சிறப்பும் உயர்வும் இருந்திருந்தால் நமது முன்னோர்களான சஹாபாக்கள் ரளியல்லாஹு அன்ஹும் அதிக உரிமை பெற்றிருப்பார்கள் காரணம் அவர்கள் நபியவர்களை மிகவும் நேசித்தார்கள்.

ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா ரஹிமஹுல்லாஹ் அவர்களின் மரணம் இறுதிவரை அனாச்சாரங்கள் பித்அத் புரிபவர்களுக்கு சிம்ம சொப்பனமாகவே இருந்து வந்திருக்கிறார்கள்.

இந்த வழிகேடர்களை மக்கள் மன்றத்தில் வெளிச்சத்திற்குக் கொண்டு வருவதற்காக மட்டுமே எழுதப்பட்ட இந்த புத்தகத்தை தங்களின் வழிகெட்ட கருத்துக்கு வளைப்பது நகைப்புக்குரியதாக இருக்கிறது.

வழிகெட்ட பரேல்விகள் தொடர்ந்து புரிந்து வரும் மத்ஹபுகளின் சங்கையான இமாம்கள் பெயரில் வரலாறு காணாத வரலாற்று இருட்டடிப்புகளை மிக கவனத்துடன் பொதுமக்கள் கையாள வேண்டும்.

ஹதீஸ் கலை

Vs

ஃபிக்ஹு கலை

ஹதீஸ் கலை தொடர்பான ஆய்வுக் கட்டுரையைப் பற்றி முகநூலில் ஒரு பதிவை கண்டேன். அதில் ஸலஃபு உலமாக்கள் மட்டுமே ஹதீஸ் கலையில் தேர்ச்சி பெற்றவர்கள் என்ற கட்டமைப்பு தவறு என்ற அடிப்படையில் அந்த பதிவு தொடர்ந்தது...

பொதுவாக அசத்தியக் கொள்கையில் இருக்கும் ஷீஆக்களும், பரேல்விகளும் உண்மையான அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையில் இருப்பவர்களுக்கு மத்தியில் பிணக்கை ஏற்படுத்தி ஒற்றுமையின்மையின் வட்டத்தை அதிகப்படுத்துவார்கள்.

பொதுவாக ஹதீஸ் துறையில் தென் ஆசிய (இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ்) உலமாக்கள் ஆற்றிய பங்களிப்பு என்ன? அவர்கள் யார்? என்ற அகன்று விரிந்த பார்வையில் ஆய்வு செய்யப்பட்டால் அது ஏற்புடையது.

நபிமொழிகளுக்கான சேவைகளில் ஹதீஸ் துறை வல்லுனர்களும், ஃபிக்ஹு துறை வல்லுனர்களும் எந்த ஏற்றத்தாழ்வும் இன்றி சரிக்கு சமமாக தங்களின் பங்களிப்புக்களை வழங்கி இருக்கிறார்கள் என்பதுதான் உண்மை.

அதே நேரத்தில் ஹதீஸ் மற்றும் ஃபிக்ஹு ரீதியான ஒப்பாய்வுகளை சங்கையான மத்ஹபுகளின் இமாம்களை முன்வைத்து சமூக வலைதளங்களில் மிகப்பெரிய ஒரு தாக்கத்தை ஏற்படுத்திய ஒரு பங்கு ஸலஃபு உலமாக்களுக்கு (சஹாபாக்களை பின்பற்றுபவர்கள்) சற்று அதிகம் என்று சொல்லலாம்.

காரணம் ஸலஃபு உலமாக்களின் ஹதீஸ் துறை அணுகுமுறை "மன்ஹஜு அக்ரபி இலஸ் ஸுன்னாவை" - "منهج اقرب الى السنة" நபிமொழிக்கு நெருக்கமான ஒரு ஃபிக்ஹு துறைச் சார்ந்த அணுகுமுறை.

ஸலஃபு உலமாக்கள் என்பவர்கள் மத்ஹபை மறுப்பவர்கள் இமாம்களை நிந்திப்பவர்கள் என்ற பிரஜையை மாற்றுக் கருத்துடைய ஷீஆக்களும், அவர்கள் வழி நடக்கும் பரேல்விகளும் கட்டமைத்து விட்டனர்.

அதை இக்வானிய சிந்தனை கொண்டிருக்கும் சிலர் இந்தியாவிலும், இலங்கையிலும் எதிர்மறையான சிந்தனைகளால் தங்களது பரப்புரையாக எடுத்துக்கொண்டு எங்கெல்லாம் ஸலஃபு உலமாக்களுக்கு இழிவுகளை ஏற்படுத்த முடியுமோ, அவர்களை தவறாக மக்கள் மன்றத்திலே சந்தேகிக்க வைக்க முடியுமோ தங்குதடையின்றி செய்கின்றனர்.

அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கை ரீதியில் ஸலஃபுகளும், இக்வானியர்களும் ஒரே சிந்தனையில் சித்தாந்தத்தில் பயணித்தாலும் அவர்களின் அரசியல் ரீதியான சில சித்தாந்தங்களில் கடுமையாக முரண்படுகின்றனர். உதாரணமாக, வலா வல் பரா கொள்கை (அல்லாஹ்விற்காக விரும்புவது அல்லாஹ்விற்காக வெறுப்பது என்ற சட்டத்தின் அடிப்படையில் அநீதியான ஆட்சியாளர்களை எதிர்க்கும் விடயத்தில் உள்ள ஒரு சித்தாந்தம்)

ஆக இமாம் இப்னு தைமியா, தஹபி, இப்னு கதீர், இப்னுல் கையும் அல் ஜவ்ஸியா, இவர்கள் பாதையில் பயணித்த சமகால அறிஞர்களான அல்லாமா பின் பாஸ், இப்னு உஸைமீன், நாஸிருத்தீன் அல்பானி ரஹிமஹுமுல்லாஹ் இவர்கள் அனைவரும் ஹதீஸ் துறையை ஃபிக்ஹு ரீதியான ஒப்பாய்வுகளை கொண்டே முன் வைத்திருக்கின்றனர் என்பது அவர்களின் மார்க்கத் தீர்ப்புகளை பார்ப்பவர்களுக்குப் புரியும்.

மத்ஹபுகளின் இமாம்களுடைய கருத்துக்கள் இல்லாமல் மார்க்கத் தீர்ப்புகளை அவர்கள் வழங்குவது மிகக் குறைவு. இமாம் இப்னு தைமியா ரஹிமஹுல்லாஹ் அதிகமான அவர்களின் மார்க்க தீர்ப்புகள் இமாம் அபூஹனீஃபா ரஹிமஹுல்லாஹ் அவர்களைப் பின்பற்றி இருக்கிறார்கள் என்பது இவர்களின் மஜ்மூஉல் ஃபதாவாவை படிப்பவர்களுக்கு விளங்கும்.

ஆக உண்மையான அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையில் பயணிக்கும் ஸலஃபு உலமாக்கள் (ஸஹாபாக்களை பின்பற்றுபவர்கள்) நமது முன்னோர்களான ஸஹாபாக்களின் வழியில் நின்று மார்க்கத்தை நமக்கு தெளிவுபடுத்துவதினால் இதைப் பொறுத்துக்கொள்ள முடியாத ஷீஆக்களும், பரேல்விகளும் இவர்களை மக்கள் மன்றத்திலே

மத்ஹபுகளை எதிர்ப்பவர்கள், நபி ﷺ அவர்களின் நேசம் குன்றியவர்கள், வஹாபிகள் என்றெல்லாம் தவறாக விமர்சித்து வருகின்றனர்.

வாருங்கள் முக்கியமான இரு இமாம்களின் நிபுணத்துவமும் துறைசார்ந்த கண்ணோட்டமும் வேறு இரு திசையில் இருந்த பொழுதிலும், ஃபிக்ஹு துறையில் நிபுணத்துவம் பெற்று இருந்து ஹதீஸ் கலையில் இல்லாததும் ஹதீஸ் கலையில் நிபுணத்துவம் பெற்றிருந்து ஃபிக்ஹு கலையில் இல்லாததும் என்ற தவறான கண்ணோட்டத்தை சரியாக புரிந்து கொள்வதற்காக ஹதீஸ் துறையுடன் ஃபிக்ஹு ரீதியாக எவ்வாறு அவர்கள் அணுகுமுறை இருந்தது என்பதைக் காண்போம்.

இமாம் அபூ ஹனீஃபா நுஃமான் பின் தாபித்து ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஓர் ஃபிக்ஹுத் துறை சார்ந்த சட்ட மேதை மட்டுமல்ல அவர் ஓர் முஹத்திஸும் (ஹதீஸ் கலை வல்லுனர்) ஆவார்கள். அன்னாரின் முஸ்னத் இமாம் அபூ ஹனீஃபா மிக பிரசித்திப்பெற்ற ஒரு ஹதீஸ் புத்தகம் இதை இமாம் அபூ நயீம் அல்அஸ்பஹானி அவர்கள் ஒன்று திரட்டினார்கள்.

இதிலிருந்து இமாம் அவர்கள் தங்களுக்கும் ஹதீஸிற்கும் சம்பந்தமில்லாமல் சுயகருத்துகளை மார்க்க சட்டதில் கூறினார்கள் என்பது தவறு என்று விளக்கப்படுகிறது.

அறிஞர் முஹம்மத் அல்பாரியாபி ஆய்வு செய்து இதை ரியாத், சவூதி அரேபியவில் உள்ள மக்தபா அல்கவ்தர் பதிப்பகம் வெளியிட்டுள்ளது என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அறிஞர் முஹம்மது அல்கார்ஸமி தன் புத்தகமான “ஜாமிஃ இமாம் அல் அஃலமில்” (ஹிஜ்ரீ 1332 ல் இந்தியாவில் அச்சிடப்பட்டது) பின்வரும் 15 அறிஞர்களும் முஸ்னத் அபீ ஹனீஃபாவை திரட்டியுள்ளனர் என்று குறிப்பிடுகின்றார்கள்.

1. الإمام الحافظ أبو عبد الله بن محمد بن يعقوب بن الحارث الحارثي
2. الإمام الحافظ القاسم طلحة بن محمد بن جعفر الشاهد العدل رحمه الله تعالى.
3. الإمام الحافظ أبوالحسين محمد بن مطهر بن موسى بن عيسى بن محمد رحمه الله تعالى.

4. الإمام الحافظ أحمد بن عبد الله بن أحمد الأصفهاني رحمه الله تعالى.

5. الشيخ الإمام الثقة العدل أبو بكر محمد بن عبد الباقي ابن محمد الأنصاري رحمه الله تعالى.

6. الإمام الحافظ صاحب الجرح والتعديل أبو أحمد عبد الله بن عدي الجرجاني رحمه الله تعالى.

7. الإمام الحسن بن زياد اللؤلؤي رحمه الله تعالى الثامن : مسند له جمعه الإمام الحافظ عمر بن الحسن الأشناني رحمه الله تعالى.

9. التاسع : مسند له جمعه الإمام الحافظ أحمد بن محمد بن خالد بن خلي الكلاعي رحمه الله تعالى.

10. الإمام الحافظ أبو عبدالله محمد بن الحسين بن محمد بن خسرو البلخي رحمه الله تعالى.

11. الإمام أبو يوسف القاضي يعقوب بن إبراهيم الأنصاري رحمه الله تعالى ورواه عنه يسمى : نسخة أبي يوسف.

12. الإمام محمد بن الحسن الشيباني رحمه الله تعالى ورواه عنه يسمى : نسخة محمد، مطبوع ومتداول.

13. الإمام حماد بن أبي حنيفة ورواه عن أبيه رضي الله عنهما.

(இமாம் அவர்களின் புதல்வர்)

14. الإمام محمد بن الحسن معظمه عن التابعين ورواه عنه يسمى : الآثار. مطبوع ومتداول.

15. الإمام الحافظ أبو القاسم عبد الله بن محمد بن أبي العوام السغدي رحمه الله تعالى

இமாம் ஷாஃபிஈ அவர்கள் ஃபிக்ஹு துறையில் மட்டுமின்றி ஹதீஸ் கலைதொடர்பான விஷயங்களிலும் மிகவும் தேர்ச்சிபெற்றவர்களாகவும், சிந்தனைமிக்கவர்களாகவும் விளங்கினார்கள்.

“நபியவர்கள் கூறியதாக வரக்கூடிய ஹதீஸ் உறுதியான அறிவிப்பாளர்கள் மூலம், அறிவிப்பாளர்களுக்கு மத்தியில்

தொடர்புவிடுபடாமல் வருமென்றால் அதை யார்செய்திருந்தாலும், செய்யா விட்டாலும் நடைமுறைப்படுத்த வேண்டும் என்பது இமாம் ஷாஃபிஈ அவர்களின் உறுதியான கருத்தாகும்.

“ஆனால் இமாம் மாலிக் தன்னுடைய ஆசிரியராக இருந்தாலும், இமாம் அபூஹனீஃபா தனக்கு முந்திய கால அறிஞராக இருந்தாலும் அவர்களுடைய கருத்து தவறு என்பதைத் தெளிவுபடுத்தி அதற்கு மாற்றமான தன்னுடைய கருத்தை இமாம் ஷாஃபிஈ அவர்கள் பதிவு செய்திருக்கிறார்கள்.

“இதன் காரணமாக ஹதீஸ் கலை அறிஞர்கள் இமாம் ஷாஃபிஈ அவர்களுக்கு “நாஸிருஸ் ஸுன்னா” நபி வழிக்கு உதவிசெய்தவர் என்ற பட்டப் பெயரைச் சூட்டியுள்ளனர்.

நாங்கள் நபியவர்களுடைய ஹதீஸ்களில் முஜ்மல் (மூடலானது) எது? “முஃபஸ்ஸிர்” (தெளிவு படுத்துவது) எது? “நாஸிஹ்” (பழைய சட்டத்தை மாற்றிய ஹதீஸ்) எது? “மன்ஸூஹ்” (மாற்றப்பட்ட சட்டம்) எது? என்பதை ஷாஃபிஈயுடன் அமர்கின்றவரை அறியாதவர்களாகத் தான் இருந்தோம்” என்று இமாம் அஹ்மத் பின் ஹன்பல் அவர்கள் கூறியுள்ளார்கள். (ஆதாரம்: ஹுல்யத்துல் அவ்லியா, பாகம்: 9, பக்கம்: 97)

இமாம் அவர்களின் சில முக்கிய போதனைகள்

“ஆதாரம் இல்லாமல் ஏற்காதே!”

இமாம் ஷாஃபிஈ அவர்கள் கூறுகிறார்கள்: ஆதாரம் இல்லாமல் கல்வியைத் தேடுபவனின் உதாரணம் இரவில் விறகு சுமப்பவனின் உதாரணத்தைப் போன்றதாகும். அவன் ஒருகட்டு விறகைச் சுமக்கின்றான். அதில் ஒரு கடும்விஷப் பாம்பு இருக்கிறது. அவன் அறியாத நேரத்தில் அவனைத் தீண்டி விடும். (இதுபோன்று தான் ஆதாரம் இல்லாமல் கல்வியைத் தேடுபவனை அக்கல்வி அவன் அறியாதவிதத்தில் அவனை வழிதவறச் செய்து விடும்) (மத்கல், இமாம் பைஹகீ பாகம்: 1, பக்கம்: 211)

“ஆதாரப்பூர்வமான ஹதீஸை மட்டும்பின்பற்று!”

ஷாஃபிஈ அவர்கள் ஒரு ஹதீஸைஅறிவித்தார்கள். அப்போது ஒருவர் ஷாஃபிஈ அவர்களிடம், “நீங்கள் இதனை ஆதாரமாக எடுப்பீர்களா?” என்று கேட்டார். அதற்கு இமாம் ஷாஃபிஈ அவர்கள் “எப்போது

நபி (ஸல்) அவர்களிடமிருந்து ஒரு ஹதீஸ் அறிவிக்கப்பட்டு நான் அதை பற்றிப்பிடிக்கவில்லையோ (அப்போது) என்னுடைய அறிவு மழுங்கி விட்டது என்று நான் உங்களிடம் சான்று பகர்கிறேன்" என்று கூறி தன்னுடைய கரத்தால் தம்முடைய தலையை நோக்கி சுட்டிக் காட்டினார்கள். (முஹ்தஸர் அல்முஅம்மல், பாகம்: 1 பக்கம்: 57)

"தவறு இல்லாத நூல்கள் இல்லை!"

ஷாஃபிஈ இமாம் அவர்கள் கூறினார்கள்: "நான் இந்தப் புத்தகங்களை தொகுத்துள்ளேன். நான் ஆய்வு செய்வதில் குறைவைக்கவில்லை. என்றாலும் இதில் கட்டாயம் தவறுகள் பெற்றுக்கொள்ளப்படும். ஏனென்றால் அல்லாஹ் "அல்லாஹ் அல்லாதவர்களிடமிருந்து வருமென்றால் அதிலே அவர்கள் அதிகமான முரண்பாடுகளை பெற்றிருப்பார்கள்" என்று தன்திருமறையில் கூறுகிறான். என்னுடைய இந்தப்புத்தகங்களிலே திருமறைக் குர்ஆனுக்கும், நபிவழிக்கும் மாற்றமாக நீங்கள் கண்டால் நிச்சயமாக நான் அதை விட்டும் திரும்பிவிட்டேன். (அதாவது என்னுடைய கருத்து தவறானது. நபிவழி தான் சரியானது என்பதாகும்) (முஹ்தஸர் அல்முஅம்மல், பாகம்: 1 பக்கம்: 57)

இந்த நிலைப்பாட்டில் தான் நமது முன்னோர்கள் பயணித்து இருக்கிறார்கள். மாற்றுக் கருத்துடைய அசத்தியவாதிகளின் சதித் திட்டத்தால் இந்த சத்திய சித்தாந்தங்களை சீர்குலைக்க முன்வைக்கப்படும் பல யுக்திகளில் ஒன்றுதான் ஸலஃபிகள் என்பவர்கள் வஹாபிகள் என்ற பரப்புரை!!!

ஐயமும் தெளிவும்

கேள்வி: நபியவர்களுக்கு ﷺ தூரத்தில் இருந்து ஸலாம் சொல்ல முடியுமா? நான் கேள்விப்பட்டிருக்கிறேன் நேராக சென்றுதான் ஸலாம் சொல்ல வேண்டும் இது சரியா?

பதில்: நபியவர்களின் ரவ்ளாவிற்கு அருகில் நின்று ஸலாம் சொல்வதை நபியவர்களே காதால் கேட்கிறார்கள். யார் தூரத்தில் இருந்து நபியவர்களுக்கு ஸலாம் சொல்லி விடுகிறார்களோ, அவர்களின் ஸலாத்தை மலக்குகள் கொண்டுவந்து சேர்க்கிறார்கள். யார் மரணித்தவர்கள் பார்க்கிறார்கள், வருகை தருகிறார்கள் என்ற கொள்கை இல்லாதவர்கள் (பரேல்விகள்) இவர்கள் சொல்லும் ஸலாம் மலக்குகளின் ஊடாக எத்தி வைக்கப்படும் என்று நம்பினால் ஸலாம் சொல்லி விடுவது கூடும்.[12]

நேரடியாக மஸ்ஜிதுன் நபவிக்கு சென்றுதான் நபி ﷺ அவர்களுக்கு ஸலாம் சொல்லவேண்டும். நாம் கூறும் ஸலாமை மலக்குமார்கள் எத்தி வைக்கிறார்கள் என்பதுதான் உண்மையான அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கை. இதைத்தான் தேவ்பந்த் மத்ரஸாவும் தனது மார்க்கத் தீர்ப்பை-ஃபத்வாவை வழங்கியிருக்கிறது.

வழமைபோல அசத்திய கொள்கைவாதிகள் மாற்றுக் கருத்துடைய பரேல்விகள் சங்கையான இமாம்களின் பெயரில் இருட்டடிப்புகள் செய்வார்கள். அதைத்தான் பொதுமக்களுக்கு வெளிப்படுத்தி கொண்டிருக்கிறோம்.

இதுதான் பரேல்விகள் நபியவர்களுக்கு தூரத்திலிருந்து பிறரின் மூலம் ஸலாம் சொல்லிவிடுவது கூடும். இதை தாருல் உலூம் தேவ்பந்த் மத்ரஸா கொடுத்திருக்கும் ஃபத்வா என்று கூறுகிறார்கள்.

தேவ்பந்த் ஃபத்வா

Fatwa ID: 566-562/B=7/1436-U

12 https://darulifta-deoband.com/home/ur/islamic-beliefs/29845

سوال: میرا سوال یہ ہے کہ کیا روضہ رسول کے سامنے کھڑے ہو کر "السلام علیکم یا رسول اللہ" کہنا جائز ہے؟ نیز یا کیا اگر کوئی دوست عمرہ پر جارہا ہو اور اس کے ذریعہ سے سلام بھیجنا کہ روضہ رسول پر میرا نام لے کر نبی پاک کو سلام دیدینا صحیح ہے ؟ کیا اس طرح سلام نبی پاک کو پہنچ جاتاہے؟ جزاک اللہ

جواب نمبر: 58927 بسم اللہ الرحمن الرحیم

جی ہاں روضۂ اطہر کے سامنے کھڑے ہوکر السلام علیکم یا رسول اللہ کہنا جائز ہے۔ نیز اپنے دوست کے ذریعہ یہ کہلوانا کہ میرا نام لے کر نبی پاک صلی اللہ علیہ وسلم کو سلام پہنچانا بھی صحیح ہے، دونوں طرح سے سلام رسول پاک صلی اللہ علیہ وسلم کو پہنچ جاتا ہے۔ واللہ تعالیٰ اعلم

தாருல் உலூம் தேவ்பந்த் மத்ரஸாவை மதிக்கும் தமிழக ஆலிம்கள் "மீலாது விழா கூடாது" என்ற அதே தேவ்பந்த் மத்ரஸாவின் ஃபத்வாவை புறக்கணிக்கிறார்கள்?[13]

இன்று முழு தமிழ்நாட்டிலும் ஜமாஅத்துல் உலமா சார்பாக இந்த மீலாது விழா நடத்தப்படுகிறது. தேவ்பந்த் மத்ரஸாவில் படித்த ஆலிம்கள் கூட மீலாது விழா கொண்டாடுகிறார்கள்.

ஜமாஅத்துல் உலமா தேவ்பந்த் மத்ரஸாவுக்கு முரணான கொள்கை உடையதா?

அதே தேவ்பந்த் ஃபத்வாவிற்கு எதிராக ஃபாத்திஹா, மௌலூது, அங்கீகாரத்துடன் ஓதப்படுகிறது. மாற்றுக் கருத்துடையவர்கள் மேற்கோள் காட்டியிருக்கும் தேவ்பந்த் மத்ரஸாவின் ஃபத்வாவின்படி அவர்களின் கொள்கை தான் என்ன? ஏன் இந்த இரட்டை நிலைப்பாடு?

அடியேன் பரேல்விகளிடம் கூடுதலாக ஒரு கேள்வியை கேட்கிறேன். நபி ﷺ அவர்களுக்கு சஹாபாக்கள் இது போன்று ஸலாமை நபியவர்கள் மரணத்திற்கு பின்பு ஜியாரத் செய்பவர்களின் ஊடாக சொல்லியிருக்கிறார்களா? ஸஹீஹான ஸனதுடன் ஆதாரம் உண்டா? குர்ஆன் ஸுன்னா இஜ்மாஃ, கியாஸின் ஊடாக ஆதாரம் தரமுடியுமா?

13 https://darulifta-deoband.com/.../innovations-customs/151011

புத்தக அறிமுகம்

جهود علماء الحنفية في ابطال عقائد القبورية

ஜீஹுது உலமாயில் ஹனஃபிய்யதி ஃபீ இப்தாலி அகாயிதில் குபூரிய்யதி

இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் ஸுன்னத்துகளை அடியோடு அழிப்பதற்காக காலம் காலமாக மக்களை ஸுன்னத் ஜமாத் என்ற பெயரில் (உண்மையான அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் போல்) மத்ஹபின் பெயரிலே பல அனாச்சாரங்களையும் பித்அத்துகளையும் அரங்கேற்றியவர்கள் தான் இந்த பரேல்விகளான சமாதி வழிபாடு செய்பவர்கள்.

இவர்களின் முழு கொள்கைகளையும் தோலுரிக்க எழுதப்பட்ட மிகச்சிறந்த ஆய்வு புத்தகம் உலமா பெருமக்கள் அனைவரும் படிக்க வேண்டிய புத்தகமும் கூட جهود علماء الحنفية في ابطال عقائد القبورية ஜீஹுது உலமாயில் ஹனஃபிய்யதி ஃபீ இப்தாலி அகாயிதில் குபூரிய்யதி கபுருக் கொள்கையை உடைத்து எறிவதற்கு ஹனஃபி உலமாக்களின் முயற்சிகள் 1861 பக்கங்கள் கொண்ட ஆய்வு புத்தகம்.

அல்-மதீனா அத்தைய்யுபாவின் பச்சை குவிமாடம்-ஓர் வரலாற்றுப் பார்வை

(Green Dome - القبة الخضراء)

மதீனமா நகரம் என்று சொல்லும் பொழுதே நம் அனைவரின் சிந்தனையில் உதிக்கும் ஒரு காட்சி மஸ்ஜித் நபவியில் இறைத்தூதர் ﷺ அவர்களின் மண்ணறைக்கு மேல் இருக்கும் பச்சை குவிமாடம் தான்.

அல்-மதீனா அத்தைய்யுபா எங்கும் அமைதியும், மன நிம்மதியும் சூழ்ந்திருக்கும் ஒரு நகரமாகும். மதீனாவில் நாம் நுழையும் பொழுது நமக்கு ஏற்படும் மெய்சிலிர்ப்புகளும் நபியவர்களின் மீது நாம் கொண்டிருக்கும் நேசமும் மஸ்ஜித் நபவியை நெருங்க நெருங்க நம்மை தொற்றிக் கொள்ளும். நபிநேசத்தை உணர்ந்தவர்கள் தான் புரிந்து கொள்ள முடியும்.

இங்குதான் எங்களது ஹபீப் நேசர் அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் தங்களது நபி தோழர்களுக்கு உபதேசம் செய்து கொண்டிருந்தார்கள். இஸ்லாத்தின் சாம்ராஜ்யத்தை கட்டி எழுப்பினார்கள் என்ற சிந்தனை நமது கண் முன் வந்து போகும்.

ஹஜ்ஜுக்கும் உம்ராவுக்கும் செல்பவர்கள் தங்களது வாழ்நாளின் கனவாக பார்ப்பது இறைத்தூதர் ﷺ அவர்களின் கண்ணியத்திற்குரிய மஸ்ஜித் நபவிக்கு வருகை புரிந்து அங்கு நபிமொழிகளில் கூறப்பட்டிருக்கும் ஒரு ரக்அத்திற்கு ஆயிரம் நன்மைகளையும், சுவனத்தின் பூங்காவன ரவ்ளா ஷரீஃபில் தொழுது நபியவர்களின் மண்ணறைக்கு ஸலாம் சொல்வதையும் தான். அல்லாஹ் நம் அனைவருக்கும் ஹஜ் உம்ரா உடைய பாக்கியங்களை வழங்கிடுவானாக!

நபி நேசம் என்பது ஓர் இறை நம்பிக்கையைச் சேர்ந்த விடயம். நபியவர்களை பின்பற்றுவதுதான் உண்மையான நேசத்தின்

அடையாளம். அவ்வாறு செய்வதினால் அல்லாஹ்வின் நேசத்தையும் அடைய முடியும்.

அல்லாஹ் திருக்குர்ஆனில் கூறும் பொழுது:

قُلْ إِن كُنتُمْ تُحِبُّونَ ٱللَّهَ فَٱتَّبِعُونِى يُحْبِبْكُمُ ٱللَّهُ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوبَكُمْ وَٱللَّهُ غَفُورٌ رَّحِيمٌ

(நபியே! மனிதர்களை நோக்கி) நீங்கள் கூறுங்கள்: "நீங்கள் மெய்யாகவே அல்லாஹ்வை நேசிப்பவர்களாக இருந்தால் என்னைப் பின்பற்றுங்கள். உங்களை அல்லாஹ் நேசிப்பான். உங்கள் பாவங்களையும் அவன் மன்னித்து விடுவான். அல்லாஹ் மிக அதிகம் மன்னிப்பவனும், நிகரற்ற அன்புடையவனுமாக இருக்கின்றான்". (அல்குர்ஆன் 3:31)

உங்களில் ஒருவர் இறை நம்பிக்கையாளராக முடியாது. நான் அவரிடத்தில் தனது பிள்ளை, தந்தை, அனைவரையும் விட பிரியமானவராக ஆகும் வரை. (நூல்: திர்மிதீ-7582, தரம்-ஸஹீஹ், அறிவிப்பாளர்-அனஸ் பின் மாலிக் (ரளி))

لا يُؤْمِنُ أحدُكم حتى أكونَ أحبَّ إليه من ولدِهِ ، ووالدِهِ، والناسِ أجمعينَ (الراوي : أنس بن مالك | المحدث : الألباني | المصدر : صحيح الجامع | الصفحة أو الرقم: 2857 | خلاصة حكم المحدث : صحيح)

ஆனால், நபி நேசம் என்ற பெயரில் சிலர் செய்யும் அனாச்சாரங்களை, பித்அத்துகளை மார்க்கம் அங்கீகரிப்பதில்லை. நபியவர்களின் மண்ணறையின் குவிமாடம் பச்சையாக இருப்பதால், இதை நபி நேசத்திற்கு அடையாளமாகவும் தங்களது வீடுகளிலும், தங்களது நிறுவனங்களிலும், அலுவலகத்திலும், முகநூல் படமாகவும் புனிதப்படுத்தி நபியவர்கள் நேசத்தை சிலர் வெளிப்படுத்துகிறார்கள்.

இது மார்க்க பார்வையில் கூடுமா? கூடாதா?

ஹஜ் உம்ரா காலங்களில் இந்தியாவிலிருந்தும், பாகிஸ்தானிலிருந்தும், சில நாடுகளிலிருந்தும் வரும் சில ஹாஜிகள் பச்சை நிறத்தில் தலையில் இருந்து கால் வரை ஆடை அணிந்து இருப்பார்கள். நபி நேசத்தை அவர்கள் வெளிப்படுத்துகிறார்களாம்!

அங்கிருக்கும் உலமா பெருமக்கள் அவர்களை அழைத்து அவர்களுக்கு இங்கிதமாக அழைப்பு பணி செய்வதை உண்மையான

நபி நேசத்தை அவர்களின் மொழிகளில் விளக்கப்படுவதை நாம் பல முறை அங்கு கண்டிருக்கிறோம்.

ஸஊதி அரேபியாவில் வாழ்ந்த காலங்களில் உம்ராவிற்கு செல்லும் போதெல்லாம் மஸ்ஜித் நபவியில் அமர்ந்து கொண்டு இறைத்தூதர் ﷺ அவர்களின் மண்ணறைக்கு மேல் இருக்கும் பச்சை குவிமாடத்தை பார்த்து யோசித்ததுண்டு.

இது இந்த நிறத்தில் தான் நபியவர்கள் காலத்தில் இருந்ததா? சஹாபாக்கள் காலத்திலும் இருந்ததா? இதன் பின்னணி என்ன? இந்த நிறத்தை வைத்துக் கொண்டுதான் "தர்காக்கள்" என்ற சித்தாந்தங்களை மக்கள் உருவாக்கினார்களா? பள்ளிவாயில்களில் மண்ணறைகள் இருந்தால் அங்கு தொழலாமா?

இறை ஆலயமாகிய கஃபத்துல்லாஹ் இஸ்லாத்திற்கு முன்பாக புனர்நிர்மாணம் செய்யப்பட்டு பாதுகாக்கப்பட்டு வந்தது. பின்பு அதை இடிப்பதற்கு பலர் முயன்றனர். அல்லாஹ் அவர்களின் இழிவான கரங்களில் இருந்து இறை இல்லத்தை பாதுகாத்தான் இது நாம் அறிந்த வரலாறு.

"அல்பிதாயா வன் நிஹாயா" என்ற வரலாற்று புத்தகத்தில் பின்வருமாறு இமாம் இப்னு கஸீர் குறிப்பிடுகிறார்கள்:

இஸ்லாத்திற்கு பின்பு கஃபா ஆலயம் இரண்டு முறை இடிக்கப்பட்டு, புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. ஒன்று புகாரீ, முஸ்லிம் போன்ற இன்னும் பல ஹதீஸ் கிரந்தங்களில் இடம்பெற்றிருக்கும் அங்கீகாரமான நபிமொழி அப்துல்லாஹ் பின் ஜுபைர் (ரளி) அவர்களின் சிறிய தாயாகிய ஆயிஷா (ரளி) அவர்களின் சொல்லுக்கு இணங்க நபியவர்கள் கூறினார்கள். உயிரோடு இருந்தால் வரும் காலத்தில் இந்த ஆலயத்திற்கு கிழக்கிலும் மேற்கிலும் இரண்டு வாயில்களை வைத்து ஹஜ்ருல் அஸ்வத்தை உள்ளே வைப்பேன். ஆனால், மக்களோ புதிதாக இஸ்லாத்திற்கு வந்திருப்பதனால் (அவ்வாறு செய்ய விரும்பவில்லை) என்று கூறினார்கள்.

யஜீத் பின் முஆவியாவின் காலத்தில் ஏற்பட்ட விபத்தினால் கஃபாவை நபியவர்கள் வேண்டிக் கொண்டது அடிப்படையில் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது. பின்னர் அப்துல் மலிக் பின் மர்வான் அவர்களின் ஆட்சி காலத்தில் ஹஜ்ஜாஜ் பின் யூஸுஃப் இறைத் தூதர் ﷺ அவர்கள் காலத்தில் கஃபா எவ்வாறு இருந்ததோ அவ்வாறு

மாற்றி அமைத்தார். பிறகுதான் ஆயிஷா (ரளி) அவர்களின் நபிமொழி அவருக்கு கிடைக்கிறது. அதற்காக அவர் வேதனை பட்டார்.

பிறகு கலீஃபா இப்னு மன்சூர் அல்மஹதி மீண்டும் இப்னு ஜுபைர் (ரளி) அவர்களின் திட்டப்படி கஃபாவை மாற்றி அமைக்க முயற்சித்தார். அன்று இருந்த மாமேதை இமாம் மாலிக் பின் அனஸ் ரஹிமஹுல்லாஹ் அவர்களிடம் மார்க்கத் தீர்ப்பை கேட்டார் இமாமவர்கள் ஆட்சியாளர்கள் விளையாடும் பொருளாக கஃபா மாறிவிட்டது என்று தனது மறுப்பை தெரிவித்து விட்டார்கள். அன்று முதல் கஃபா பாதுகாக்கப்பட்டு எவ்வாறு இருந்ததோ அவ்வாறே இன்றும் இருந்து வருகிறது.

இமாம் இப்னு கஸீர் தங்களது புத்தகத்தில் ஹிஜ்ரீ 317ஆம் ஆண்டு நிகழ்ந்த ஒரு வருத்தமான சம்பவத்தையும் குறிப்பிடுகிறார்கள். ஹஜ்ஜுடைய காலத்தில் "கராமத்தா" என்று சொல்லக்கூடிய பாரசீக நெருப்பு வணங்கிகளாக இருந்தவர்கள் யூதர்களாக இருந்தார்கள் என்றும் சொல்லப்படுகிறது. ஜஃபர் அஸ்ஸாதிக் ரஹிமஹுல்லாஹ் அவர்களின் பரம்பரையில் இருந்து வந்த நபியவர்கள் குடும்பத்தார் என்று பொய்யுரைத்து மக்களை நம்ப வைத்து தனி நாடேயே உருவாக்கி, மக்கமா ஹரமில் நுழைந்து ஹாஜிகள் அனைவரையும் கொன்று கஃபத்துல்லாஹ்வை சேதப்படுத்தி ஹஜ்ருல் அஸ்வத்தை தங்கள் நாட்டிற்கு கொண்டு சென்று விட்டனர். சுமார் 22 வருடங்களுக்கு பிறகு ஹஜ்ருல் அஸ்வத்தை ஃபாத்திமா கலீஃபா மஹதி மீட்டார். ஹஜ் கிரியைகள் பல வருடங்கள் நிறுத்தி வைக்கப்பட்டது என்று வரலாறு கூறுகிறது.

ஆக வரலாற்றில் ஷீஆக்கள் செய்த அநீதங்களும் அழிச்சாட்டியங்களும் எண்ணிலடங்காதவைகள். இறை இல்லத்தை மதிக்காத, அதை வெறும் கட்டிடமாக பார்த்த "கராமத்தா" வழிகேட்டினர் அதை இழிவுபடுத்த முயற்சித்து தாங்கள் இழிவானவர்களாக ஆகினார்கள் என்பது வரலாறு.

இங்கு ஒரு முக்கிய விடயத்தை கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த கராமத்தா கொள்கையை சேர்ந்தவர்கள் நபியவர்களின் குடும்பத்தினரை சேர்ந்தவர்கள் என்று பொய்யுரைத்து மக்களும் அதை நம்பி அவர்களுக்கென்று தனிநாடையும் உருவாக்கி அவர்களுக்கு தினந்தோறும் 50 தொழுகைகள் தொழுக வேண்டும் என்று அன்றைய அரசன் கராமத்தா பின் அஷ்அத் கட்டளையிட்டானாம்.

மக்கள் அனைவரும் வழிபாடுகளிலும் வணக்கங்களிலும்

ஈடுபட்டுக் கொண்டிருக்கும் பொழுது மக்காவில் கொள்ளையையும், கொலையையும் செய்து ஹஜ்ருல் அஸ்வத்தை எவ்வாறு திருடி எடுத்து வருவது என்ற திட்டத்தை தீட்டினானாம்.

நபிவழிக்கு மாற்றமாக இபாதத்துகளின் பெயர்களில் பித்அத்தை மார்க்கமாக ஆக்க நினைப்பவர்கள் எந்தளவுக்கு இந்த சமூத்திற்கு அபாயமானவர்கள் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

இப்பொழுது மஸ்ஜித் நபவியில் இருக்கும் இறைத்தூதர் ﷺ அவர்களின் மண்ணறைக்கு மேல் காணும் பச்சை குவிமாடம் எவ்வாறு இந்த நிறத்தை பெற்றது என்பதை பற்றி பார்ப்போமா?

மதீனமா நகரில் மஸ்ஜித் நபவியில் கட்டப்பட்டிருக்கும் பச்சை குவிமாடத்திற்கும் மக்கமா நகரில் உள்ள கஃபத்துல்லாஹ்வின் மீது தொடுக்கப்படும் மோதல்களுக்கும் பாரிய தொடர்பு இருக்கிறது.

சமாதி வழிபாட்டை ஒழித்து பித்அத்துகளையும் அனாச்சாரங்களையும் அடியோடு துடைத்து எறிந்த ஸஊதி அரேபியா மீது இந்த ஷீஆ சிந்தனையாளர்கள் கக்கும் அபாயகரமான விஷங்களை முறியடிப்பதற்காக தான் இந்த செய்திகள் உங்களுக்கு தரப்படுகின்றன.

இந்தப் புத்தகத்தை, படித்த பிறகு, தயவு கூர்ந்து, இவரைப் பற்றிய தெளிவான பின்னணியையும், எதற்காக இந்த புத்தகத்தை எழுதினார் என்பதனையும் படிக்க தவறாதீர்கள். இல்லையேல், ஷீஆக்களின் நோக்கமாகிய அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் மக்களை இழிவு படுத்தவேண்டும் என்ற அந்த அபாய வலையில் நீங்களும் விழுந்து பலியாகி விடுவீர்கள்.

அதிலும் ஸஊதி அரேபிய அரசாங்கத்திற்கு இவர்கள் (ஷீஆக்கள்) வைத்த "வஹ்ஹாபிகள் " என்ற பட்டத்தை, நாம் அறியாமலேயே, நம்மீது சுமத்தி இந்த உம்மத்தின் பிரிவினைக்கு ஆளாகி விடுவோம்.

இப்பொழுது புரிந்திருப்பீர்கள் வரலாற்று ஓட்டத்தில் எத்தனை தாக்குதல்கள் எத்தனை அத்துமீறல்கள் வணக்கஸ்தலங்களுக்கு எதிராக நிகழ்ந்திருக்கின்றன. அதனால் உம்மத்தில் ஏற்பட்ட குழப்பங்களும் அழிவுகளும் ஏராளம்.

தொடர்ந்து இறை இல்லமான கஃபத்துல்லாஹ்வின் மீது ஒவ்வொரு காலகட்டத்திலும் தாக்குதல்களும் மோதல்களும் தொடர்ந்தன

என்பதை வரலாற்றுத் தகவல்களுடன் பார்த்தோம்.இப்பொழுது வாருங்கள் மதீனமா நகரத்திற்கு செல்வோம்...

இறைத்தூதர் ﷺ அவர்களின் மண்ணறைக்கு மேல் இருக்கும் பச்சை குவிமாடத்தை சற்று வரலாற்று பின்னணியில் பார்த்தால் ஹிஜ்ரீ ஏழாம் நூற்றாண்டு வரை எந்த குவிமாடமும் நபியவர்களின் மண்ணறைக்கு மேல் இல்லை.

எகிப்திய மம்லூக்கிய சாம்ராஜ்ய ஸுல்தான் அல்மன்சூர் ஸைஃபுத்தீன் அல்கலாவூன் என்பவர் தான் முதலில் குவிமாடத்தை கட்டினார். ஆரம்பத்தில் மரக்கட்டையின் நிறத்திலும், பிறகு வெள்ளை நிறத்திலும், ஊதா நிறத்திலும் இருந்து இறுதியாக இன்று வரை பச்சை நிறத்தில் இருக்கிறது.

இந்த வரலாற்று நிகழ்வை ஆதாரத்துடன் உஸ்தாத் அலீ ஹாஃபிழ் தனது புத்தகமான "ஃபுசூலு மின் தாரீகி அல்மதீனா அல்முனவ்வராஹ்" பக்கம் 127, 128 ல் இவ்வாறு குறிப்பிடுகிறார்:

நபிமொழிகளில் பரிசுத்தமான ஹுஜ்ரா அறையில் எந்த குப்பாவும் (குவிமாடம்) இல்லை. செங்கலால் ஆன (மூன்று அடி உயரத்திற்கு) முகடுகளாக போடப்பட்டிருந்தன. அது நபியவர்களின் ஹுஜராவை மற்ற கட்டிடங்களிருந்து வேறுபடுத்தி காட்டுவதற்காக அவ்வாறு அமைக்கப்பட்டிருந்தது.

ஸுல்தான் அல்கலாவூன் என்பவர் தான் முதன் முதலில் ஹுஜ்ரா ஷரீஃபாவின் மீது குவிமாடத்தை கட்டினார். ஹிஜ்ரீ 678ல் செவ்வக வடிவில் பல உயர்ந்த மர வேலைப்பாடுகளால் குவிமாடத்தை கட்டினார்.

அதற்குப் பின் ஸுல்தான் நஸ்ர் ஹஸன் அல்கலாவூன் என்பவர் அதை புதுப்பித்தார். பிறகு மரக்கட்டைகளால் ஆன அந்த குவிமாடம் பழுதடைந்து போனதால் மீண்டும் அதை ஸுல்தான் அஷ்ரஃப் ஷஃபான் என்பவர் காலத்தில் ஹிஜ்ரீ 765ல் புதுப்பிக்கப்பட்டது. ஹிஜ்ரீ 881ல் மீண்டும் ஸுல்தான் காய்தபாய் காலத்தில் மீண்டும் புனர்நிர்மாணம் செய்யப்பட்டது.

ஹிஜ்ரீ 886ல் மஸ்ஜித் நபவியில் நபியவர்களின் அறையில் நடந்த தீ விபத்தில் குவிமாடம் தீக்கிரையானதையொட்டி ஹிஜ்ரீ 887ல்

ஸுல்தான் காய்தபாய் மஸ்ஜித் நபவியின் நிலத்திலிருந்து உயரமாகச் செல்லக்கூடிய மிகப்பெரிய தூண்களால் அமைத்து செங்கலால் சற்று உயரமாக குவிமாடத்தை கட்டினார்.

ஹிஜ்ரீ 892ல் இந்தக் குவிமாடத்தின் மீது ஆங்காங்கே கீரல்களும் பிளவுகளும் ஏற்பட்டதால் ஸுல்தான் உறுதியான கான்கிரீட் கட்டிடங்களால் வெள்ளை நிறத்தில் குவிமாடத்தை அமைத்தார்.

ஹிஜ்ரீ 1253ல் கிட்டத்தட்ட 191 வருடங்களுக்கு முன் உஸ்மானிய பேரரசின் கலீஃபாவாக கருதப்பட்ட ஸுல்தான் அப்துல் ஹமீது ரஹிமஹுல்லாஹ் அவர்கள் பச்சை நிறத்தில் குவிமாடத்தை அமைக்கிறார். அதுதான் இன்றுவரை நமக்கு பச்சை நிறமாக காட்சியளிக்கிறது.

இவ்வாறு குவிமாடம் கட்டுவதையும் அதற்கு வண்ணம் பூசுவதையும், இதனால் மார்க்கத்தில் வன்மையாக கண்டிக்கப்பட்ட ஷிர்க்கான செயல்பாடுகள் நிகழ்ந்து விடக்கூடாது என்பதனால் அன்று பல மார்க்க அறிஞர்கள் கண்டித்தார்கள்.

யமன் நாட்டில் ஹிஜ்ரீ 11ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த முஹம்மது பின் அஸ்ஸன்ஆனி ரஹிமஹுல்லாஹ் தனது புத்தகமான தத்ஹீருல் இஃதிகாதில் (تطهير الإعتقاد) நபியவர்களின் மண்ணறையின் மீது குவிமாடம் எழுப்பி இருப்பது உண்மை நிலையை அறியாத காரணத்தினால் ஏற்பட்ட அறியாமையே, நபியவர்களோ தனது தோழர்களோ அவர்களின் மாணவர்களோ, நான்கு மத்ஹபுகளின் இமாம்களோ இதை அமைக்கவில்லை.

ஏழாம் நூற்றாண்டில் எகிப்திய அரசர்களால் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு இருக்கிறது. இது முழுக்க முழுக்க அரசு ரீதியான நடவடிக்கையே தவிர மார்க்க ரீதியான எந்த பங்கும் இதற்கு இல்லை.

ஸஊதியில் உள்ள ஃபத்வா கமிட்டியில் கேட்கப்பட்ட ஒரு கேள்விக்கு பதிலாக கீழ் வரும் விடயம் இருக்கிறது.

கேள்வி: நபியவர்களின் மண்ணறைக்கு மேல் இருக்கும் பச்சை நிற குவிமாடத்தை வைத்து பலர் இறை நேசர்கள் போன்றோரின் மண்ணறைகளில் குப்பாக்கல் எழுப்புகிறார்கள் இது கூடுமா?

பதில்: மண்ணறைகள் மீது கட்டிடங்கள் எழுப்புவது, குப்பாக்கல் கட்டுவது ஹராம் இவ்வாறு செய்பவர் பாவத்திற்குரியவர் ஆவார்.

காரணம் அபுல் ஹியாஜ் அல்அஸதி (ரளி) அவர்கள் ஊடாக அங்கீகாரமான ஓர் அறிவிப்பு அலீ (ரளி) அவர்கள் தங்களுக்கு கட்டளையிட்டார்களாம், நபியவர்கள் எனக்கு ஏவிய ஒன்றை உமக்கு ஏவட்டுமா? சிலைகளை உடைத்தெறியுமாறும், உயரமாக கட்டப்பட்டிருக்கும் மண்ணறைகளை சமப்படுத்துமாறும் எனக்கு கட்டளையிட்டார்கள்.

قالَ لي عَلِيُّ بنُ أَبِي طَالِبٍ: أَلَا أَبْعَثُكَ علَى ما بَعَثَنِي عليه رَسولُ اللهِ صَلَّى اللَّهُ عليه وَسَلَّمَ؟ أَنْ لا تَدَعَ تِمْثَالًا إلَّا طَمَسْتَهُ، وَلَا قَبْرًا مُشْرِفًا إلَّا سَوَّيْتَهُ. [وفي رواية]: وَقالَ: وَلَا صُورَةً إلَّا طَمَسْتَهَا. (الراوي : علي بن أبي طالب | المحدث : مسلم | المصدر : صحيح مسلم, الصفحة أو الرقم: 969 | خلاصة حكم المحدث : [صحيح])

முஸ்லிம் கிரந்தத்தில் வரும் அங்கீகாரமான நபிமொழி மண்ணறைகள் பூசப்படுவதும் அதன் மீது கட்டிடம் எழுப்பப்படுவதும் நபியவர்களால் தடை செய்யப்பட்டு இருக்கிறது.

نَهَى رَسولُ اللهِ صَلَّى اللَّهُ عليه وَسَلَّمَ أَنْ يُجَصَّصَ القَبْرُ، وَأَنْ يُقْعَدَ عليه، وَأَنْ يُبْنَى عليه. (الراوي : جابر بن عبدالله | المحدث : مسلم | المصدر : صحيح مسلم |الصفحة أو الرقم : 079 | خلاصة حكم المحدث : [صحيح])

ஆக நபியவர்கள் சொன்ன பின்பு அவர்களின் வார்த்தைக்கு மாறுதலாக ஒரு சிலரின் செயலை ஆதாரமாக எடுத்து மண்ணறைக்கு மேல் குப்பாக்கல் கட்டுவதும் கட்டிடங்கள் எழுப்பவும் மார்க்கத்தில் அனுமதி கிடையாது. நபியவர்களின் சொல்லுக்கு கட்டுப்பட வேண்டும். இதற்கு எச்சரிக்கையும் திருக்குர்ஆனில் வந்திருக்கிறது.

وَمَآ ءَاتَىٰكُمُ الرَّسُولُ فَخُذُوهُ وَمَا نَهَىٰكُمْ عَنْهُ فَٱنتَهُوا۟ وَٱتَّقُوا۟ ٱللَّهَ إِنَّ ٱللَّهَ شَدِيدُ ٱلْعِقَابِ

நம்முடைய தூதர் உங்களுக்குக் கொடுத்ததை நீங்கள் (மனமுவந்து) எடுத்துக்கொள்ளுங்கள். அவர் எதை விட்டும் உங்களை தடுத்தாரோ, அதைவிட்டு நீங்கள் விலகிக்கொள்ளுங்கள். (இவ்விஷயத்தில்) நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் கடும் தண்டனை தருபவன். (அல்குர்ஆன் 59:7)

ஆக இது போன்ற பல வசனங்களும் நபிமொழிகளும் நமக்கு

உணர்த்துவது மண்ணறையின் மீது கட்டிடம் எழுப்புவதும் குப்பாக்கள் கட்டுவதும் ஷிர்க்கான காரியங்களின் பக்கம் நம்மை கொண்டு சேர்க்கும். எனவே ஷிர்கை ஏற்படுத்தும் வழிமுறைகளை அடைத்தல் என்ற சட்டப்படி கூடாது. (ஃபத்வா - மார்க்கத் தீர்ப்பு முற்றுப்பெற்று விட்டது)

(★அஷ்ஷைக் அப்துல் அஜீஸ் பின் பாஸ்★அஷ்ஷைக் அப்துர் ரஸ்ஸாக் அல் அஃபி★அஷ்ஷைக் அப்துல்லாஹ் பின் கழ்த்து (உலமாக்களின் கையொப்பங்கள்) ஃபதாவா லஜ்னா அத்தாயிமா - 2/264,265 **(فتاوى اللجنة الدائمة)**)

கூடுதலாக இந்த மார்க்கத் தீர்ப்பில் இடம்பெற்றிருக்கும் சில விடயங்கள் உங்களின் பார்வைக்கு:

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸ்ஸல்லம் அவர்களின் மண்ணறைக்கு மேல் இருக்கும் இந்த குவிமாடத்தை காரணம் காட்டி இறை நேசர்களின் கபருக்கு மேல் கட்டிடம் எழுப்புவதையும் உயர்த்துவதையும் ஆகுமாக்க முடியாது. இறைத்தூதர் ﷺ அவர்களின் வசியத்தோ, நபித்தோழர்கள் அல்லது நபியவர்களால் சிறப்பிக்கப்பட்ட மூன்று நூற்றாண்டுகளில் வாழ்ந்த இமாம்களின் முயற்சியோ அல்ல. இதை பித்அத்வாதிகள் தான் கட்டினார்கள்.

இதை பின்வரும் நபிமொழி நமக்கு தெளிவுபடுத்துகிறது. நபியவர்கள் கூறியதாக ஆயிஷா (ரளி) கூறுகிறார்கள்: யார் நமது மார்க்கத்தில் இல்லாத நூதனமாக ஒரு விடயத்தை செய்வாரோ அது மறுக்கப்பட வேண்டியவை. (நூல்: முஸ்லிம்-2697, தரம்-ஸஹீஹ்)

مَن أَحْدَثَ في أَمْرِنَا هذا ما ليسَ فِيهِ، فَهو رَدٌّ (الراوي : عائشة أم المؤمنين | المحدث : البخاري | المصدر : صحيح البخاري الصفحة أو الرقم : **7962** | خلاصة حكم المحدث : [صحيح] | الشيخ عبد العزيز بن باز ، الشيخ عبد الرزاق عفيفي ، الشيخ عبد الله بن غديان ، الشيخ عبد الله بن قعود . " فتاوى اللجنة الدائمة " (**2 / 264 ، 265**) .)

ஃபதாவா கமிட்டி, ஃபதாவா லஜ்னா அத்தாயிமா - 2/264,265

பிறகு ஏன் இந்த பச்சை குவிமாடம் அகற்றப்படவில்லை என்ற கேள்வி நம்மில் எழுவது இயல்பே இதற்குக் காரணம், இந்த குவிமாடத்தை அகற்றினால் மிகப்பெரிய குழப்பத்தை இது ஏற்படுத்தி விடும் என்ற அச்சமே. கஃபத்துல்லாவின் புனர் நிர்மாணங்கள்

இடிப்பதும் கட்டுவதுமாக இருந்தது. பிறகு இன்று வரை எந்த மாற்றமும் இல்லாமல் பாதுகாக்கப்பட்டு வருவது நபியவர்களின் விருப்பம். மாற்றி அமைப்பதாக இருப்பினும் கஃபாவின் மீது உள்ள கண்ணியத்தின் காரணமாக விட்டு வைக்கப்பட்டிருக்கிறது.

பித்அத்வாதிகளை குழப்பம் செய்ய தூண்டுபவர்கள் இரண்டு புனித ஹரம்களின் ஆட்சியாளர்கள் மீது இதையே காரணம் காட்டி பொதுமக்களால் குறை கூற வைப்பார்கள். இதனால் மிகப்பெரிய ஃபித்னா ஏற்பட்டு நாடும் நாட்டு மக்களும் சீர்கேடு அடைவார்கள் என்ற பயத்தினால் இன்று வரை பச்சை குவிமாடம் அகற்றப்படாமல் இருக்கிறது.

ஸஊதியுடைய சில அறிஞர்கள் கூறும் பொழுது மார்க்கத்தில் இவ்வாறு குவிமாடம் கட்டப்படுவது அனுமதி இல்லை. இது உலமாக்களின் செயல்களும் அல்ல. உலமாக்கள் உபதேசம் செய்யத்தான் முடியும் அதை ஆட்சியாளர்கள் தான் அமல்படுத்த வேண்டும் என்று கூறுகிறார்கள்.

பொதுவாக அந்த காலங்களில் நபியவர்களின் கண்ணியமிகு வீடுகள் மஸ்ஜித் நபவியின் சுற்றுப்புறத்தில் இருந்தது. குறிப்பாக ஆயிஷா (ரளி) அவர்களின் வீட்டில் இறைத்தூதர் ﷺ அவர்கள் வஃபாத்தானதால் நபிமார்களின் மண்ணறைகள் அதே இடத்தில் அமைக்கப்படும் என்பதால் பொது மண்ணறையில் நபியவர்களை அடக்காமல் அன்னை ஆயிஷா (ரளி) அவர்களின் வீட்டில் தஃபன் செய்யப்பட்டார்கள்.

பின்னர் மஸ்ஜித் நபவியின் விஸ்தீரத்தினால் நபியவர்களின் சங்கைமிகு ஹுஜ்ரா மஸ்ஜிதுன் நபவியின் வளாகத்திற்குள் வந்துவிட்டது.

மீலாது விழாவும் வரலாற்று இருட்டடிப்புகளும்

ஓர் பார்வை...

இமாம் அபூ ஷாமா அல்மக்திஸி, ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா ரஹிமஹுமுல்லாஹ் இன்னும் ஏனைய அறிஞர்கள் மீது பித்அத் வாதிகளால் சுமத்தப்பட்டுவரும் பழிகளுக்கு பல விளக்கங்கள் தெளிவுபடுத்தப்பட்டிருந்தாலும், வலைதளங்களில் உண்மைக்கு புறம்பான பொய்யான பல தகவல்கள் சுற்றிக் கொண்டிருக்கின்றன. அதற்கான நமது மறுப்பு பின்வருமாறு:

பித்அத் என்ற வரைவிலக்கணத்தை இமாம் இப்னு தைமிய்யா அவர்களும், அவர்களின் மாணவர்களான இப்னு அல்கய்யிம் அல்ஜவ்ஸிய்யா, இமாம் தஹபி, இமாம் இப்னு கஸீர் ரஹிமஹுமுல்லாஹ் இவர்கள்தான் சமூகத்திற்கு அறிமுகம் செய்து குழப்பத்தை ஏற்படுத்தினார்கள் என்ற வாதம் பித்அத்வாதிகளால் பரவலாக பேசப்பட்டு வருகிறது.

ஆனால், உண்மை நிலைமை இப்னு தைமிய்யா ரஹிமஹுல்லாஹ் (பிறப்பு ஹிஜ்ரீ-661) நான்கு வயதாக சிறுவராக இருக்கும் பொழுதே இமாம் அபூ ஷாமா அல்மக்திஸி ரஹிமஹுல்லாஹ் வஃபாத்தாகி விட்டார்கள் (வஃபாத் ஹிஜ்ரீ-665)

அபூ ஷாமா அவர்கள் தங்களின் காலத்திலே பித்அத்தை பற்றி விழிப்புணர்வை ஏற்படுத்தும் அளவிற்கு ஒரு சிறந்த நூலை எழுதியிருக்கிறார்கள். "அல்பாயிஸ் அலா இன்காரி அல்பிதஃ வல் ஹவாதிஸ்" (الباعث على انكار البدع والحوادث-لأبي شامة) இந்த புத்தகத்தில் 13ஆம் பக்கத்தில் இமாம் அவர்கள் மீலாது விழாவை ஆதரித்து எழுதி இருப்பதாக சமூக வலைதளங்களில் பதிவிட்டு இருக்கிறார்கள்.

ஆனால் அவர்கள் குறிப்பிட்டிருந்த அந்த பக்கத்தில் எந்த பேச்சும் எழுதப்படவில்லை.

இந்த புத்தகத்தில் 93 ஆம் பக்கம் நமது காலத்தில் ஏற்படுத்தப்பட்ட பித்அத்தில் நபியவர்கள் பிறந்த தினம் அன்று ஏழை எளியவர்களுக்கு உணவளிப்பது விரும்பத்தக்கது என்றும் இமாம் அவர்களின் பார்வையில் இவ்வாறு ஏழைகளுக்கு உணவளிப்பது நல்ல பித்அத் என்றும் குறிப்பிடுகிறார். இதை வைத்துக்கொண்டு மீலாது விழா கொண்டாடலாம் என்று இமாம் கூறியதாக தங்களது வாதத்தை முன்வைக்கின்றனர். இது அவரின் தனிப்பட்ட கருத்து என்றும், மார்க்கத்திற்கு முரணானது என்றும், நபித்தோழர்களோ, சங்கையான நான்கு மத்ஹபுகளின் இமாம்களோ இதை ஆதரிக்கவில்லை என்றும் இந்த புத்தகத்திற்கு ஓரக்குறிப்பு எழுதிய டாக்டர் முஹம்மது முஹிப்புத்தீன் அபூ ஜைது பல விளக்கங்களை அதே புத்தகத்தில் கீழே அடிகுறிப்பாக எழுதியிருக்கிறார்.

அதுமட்டுமல்ல இமாம் அபூ ஷாமாவிற்கு முன்னால் இப்னு அல்வழ்ழாஹ் அல்குர்துபி ரஹிமஹுமுல்லாஹ், இவர்கள் அனைவருக்கும் முன்பாகவே பித்அத்தை கண்டித்து "அல்பிதஃ வ அன்வாவுஹா", (البدع و انواعها – بن الوضاح القرطبي) என்ற தனி நூலை எழுதியிருக்கிறார்கள்.

சமீபமாக "மீலாது விழா கொண்டாட்டம் - ஐயங்களும், தெளிவுகளும்" என்ற புத்தகம் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது கண்டிப்பாக வாசிக்கவும்.

"இக்திழாஉஸ் ஸிராதில் முஸ்தகீம்", என்ற இமாம் இப்னு தைமியா அவர்களின் புத்தகத்தில் இமாமவர்கள் சொல்லாததும், அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கைக்கு முரணான தகவலை அதாவது நபியவர்கள் ﷺ பிறந்தநாளை இமாமவர்கள் ஆதரித்ததாக, இந்த பரேல்விகள் இன்று அல்ல பலகாலமாக அவர்களின் புத்தகத்திலிருந்து மேற்கோள்காட்டி சொல்லிக்கொண்டு வருகிறார்கள்.

அதற்கு மறுப்பாக அரபு உலமாக்கள் அந்த காலத்திலேயே அந்த அரபு பித்அத்வாதிகளுக்கு தக்க பதிலை வழங்கி அசத்தியத்தை குழிதோண்டி புதைத்து விட்டார்கள். இருப்பினும் அதை மீண்டும் தோண்டி எடுக்கின்ற பித்அத்திகள் குறிப்பாக இந்திய பரேல்விகளின்

அசத்தியங்கள் நமது மறுப்புகளால் மீண்டும் மீண்டும் குழிதோண்டி புதைக்கப்படும்.

வழிகேடான பித்அத்தை எதிர்ப்பதற்காக முழு வாழ்க்கையையும் கழித்த இமாம் இப்னு தைமியா அவர்கள் மீதே நேர்த்தியான முறையில் இட்டுக்கட்டி இருப்பது தான் இங்கு மிக சுவாரசியமான விஷயம்.

முதலில் இமாம் இப்னு தைமிய்யா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தங்களது புத்தகத்தில் முதலாவது பாகத்தில் 297 வது பக்கம் மீலாது விழாவை ஆதரித்து தங்களது கருத்தை தெரிவித்ததாக சொன்ன அவர்கள், இரண்டாவது பாகத்தில் 126 பக்கத்தில் இருப்பதாக கூறி டிராக் மாறுகிறார்கள்.

இதுவே இவர்களின் மீதுள்ள நம்பகத்தன்மையை சிதைத்து விடுகிறது. சரி போகட்டும்! புத்தகங்கள் பொதுவாக வெளியிடப்படும் பொழுது ஒவ்வொரு வெளியீட்டாளர்கள் தங்களின் வசதிக்கேற்ப ஒரே பாகமாக அல்லது இரண்டு பாகமாக வெளியிடும்பொழுது இந்த பிரச்சினைகள் வருவது இயல்பு என்று ஏற்றுக் கொண்டாலும், இவர்கள் செய்திருக்கும் வரலாறு காணாத மோசடியை நம்மால் சகித்துக் கொள்ளவே முடியவில்லை.

அல்லாஹுதஆலா திருக்குர்ஆனில் பின்வருமாறு கூறுகிறான்

فَوَيْلٌ لِّلْمُصَلِّيْنَ

எனவே, தொழுகையாளிகளுக்கு கேடுதான். (அல்குர்ஆன் 107:4)

الَّذِيْنَ هُمْ عَنْ صَلَاتِهِمْ سَاهُوْنَ

அவர்கள் எத்தகையோரென்றால், தங்கள் தொழுகையை (நிறைவேற்றுவதை)விட்டும் பராமுகமாக இருப்போர்.
(அல்குர்ஆன் 107:5)

இந்த வசனத்தில் வரும் தொழுகையாளிகளுக்கு கேடுதான் என்று தவறாக விளங்கி, இதற்கு அடுத்துள்ள வசனத்தை சரியாகப் படிக்காமல் போனால் வரும் விபரீதத்தை தான் இந்த பித்அத்வாதிகள் செய்திருக்கிறார்கள்.

சில வருடங்களுக்கு முன்பு கிறிஸ்தவர்களுடன் விவாதம் செய்யும் பொழுது இதே முறைகேடைத் தான் அவர்கள் இந்த வசனத்தை சுட்டிக்காட்டி, பாருங்கள் திருக்குர்ஆனே அதன் வழிகாட்டலுக்கு

முரண்படுகிறது. தொழுகை சுவனத்தின் திறவுகோல் என்ற நபிமொழிக்கு முரண்படுகிறது. தொழுதால் கேடு உண்டாகும் என்று கூறுகிறது என்பதாக தங்களின் அறியாமையால் நம்முடன் விவாதித்தது நினைவுக்கு வருகிறது.

இதேபோல்தான் இமாம் இப்னு தைமியா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் (இவர்கள் சுட்டிக் காட்டி இருக்கும்) தங்களின் புத்தகத்தில் 126ஆம் பக்கத்தில் கீழ்க்காணும் விதத்தில் மீலாதை ஆதரித்ததாக பரேல்விகள் கூறுகிறார்கள்:

فتعظيم المولد واتخاذه موسما قد يفعله بعض الناس ويكون له فيه أجر عظيم، لحسن قصده وتعظيمه لرسول الله

"நபியவர்களின் பிறந்தநாளை கண்ணியப்படுத்தி அதை கொண்டாட்டமாக சிலர் எடுத்துக் கொள்கிறார்கள். இந்த அழகான நோக்கத்தினாலும், நபியவர்களை கண்ணியப்படுத்துவதாலும் அதற்கு மகத்தான நற்கூலி இருக்கிறது" என்ற வரிகளை மட்டும் சொல்லிவிட்டு அடுத்த வரிகளை மேற்கோள் காட்டாமல், அதை மறைத்து இருட்டடிப்பு செய்து விட்டார்கள் இந்த பரேல்விகள்.

(هداهم الله)

அந்த புத்தகத்தில் அவ்வாறு என்ன உண்மையை அவர்கள் மறைத்து விட்டார்கள்? வாருங்கள் பார்போம்!

இவர்கள் குறிப்பிட்டிருக்கும் பக்கம் எண் 126க்கு முன்பாக பக்கம் எண் 125ல் இமாமவர்கள் இறை அழைப்புப் பணியில் பேணவேண்டிய இரண்டு முக்கியமான விடயத்தை மேற்கோள் காட்டுகிறார்கள்:

1. நபிவழியை முறையாக அகத்திலும் புறத்திலும் பின்பற்ற வேண்டும்.

2. முடிந்த அளவுக்கு சரியான நபிவழியை மக்களுக்கு அறிமுகம் செய்ய வேண்டும்.

இதுதொடர்பாக இமாமவர்கள் தெளிவுபடுத்திக் கொண்டு வரும்பொழுது வணக்க வழிபாடுகளில் புகுத்தப்பட்ட அனாச்சாரங்களை மறுப்பவர்கள் நபிவழியை பேணுவதில் குறை உடையவர்களாக இருக்கிறார்கள்.

நபிவழியை விட்டு விட்டு அனாச்சாரங்களின் பக்கம் திரும்பி விடுகிறார்கள். எனவே, நன்மையை முறையாக ஏவி தீமையை முறையாக தடுக்க வேண்டும். (என்று தொடர்ந்து கூறி இப்பொழுது பரேல்விகள் மோசடியாக முன்வைத்த கருத்து வருகிறது...)

நபியவர்களின் பிறந்தநாளை கண்ணியப்படுத்தி அதை கொண்டாட்டமாக சிலர் எடுத்துக் கொள்கிறார்கள். இந்த அழகான நோக்கத்தினாலும், நபியவர்களை கண்ணியப்படுத்துவதாலும் அதற்கு மகத்தான நற்கூலி இருக்கிறது என்று சிலர் கூறுவதை உனக்கு நான் சொன்னதைப் போல் மெய்யான இறைநம்பிக்கையாளர் எதை வெறுப்பாரோ (பித்அத்தினால்) அதை சிலர் அழகுபடுத்தி காண்பிக்கின்றனர். இந்தவகை அரபு இலக்கிய நடைக்கு அரபு மொழியில் "இஸ்தித்ராத்", استطراد என்று சொல்வார்கள்.

قال الجرجاني: "الاستطراد: سَوقُ الكلام على وجهٍ يَلزم منه كلامٌ آخرُ، وهو غير مقصود بالذات، بل بالعَرَ

كتاب التعريفات؛ لعلي بن محمد بن علي الزين الشريف الجرجاني (المتوفى: 618هـ)

இந்த வார்த்தைகளைத்தான் இந்த பரேல்விகள் மறைத்துவிட்டு தொழுகையாளிகளுக்கு கேடு இருக்கிறது என்று அல்குர்ஆனே முரண்படுவது போன்ற பாவனையை ஏற்படுத்தி இருட்டடிப்பு செய்து விட்டார்கள்.

சுருக்கமாக பக்கம் 125லிருந்து 138க்கும் அதிகமான பக்கங்களில் இமாமவர்கள் நோக்கமான நபிவழியை விட்டுவிட்டு நோக்கமில்லாத வேறு சில விடயங்களை கவனம் செலுத்துவது வழிகேட்டை ஏற்படுத்தும். உதாரணமாக நபியவர்களின் மீது நேசம் இருக்கிறது என்ற விதத்தில் அவர்களாலோ அவர்களின் தோழர்களாலோ காட்டி தரப்படாத பிறந்ததினத்தை கண்ணியப்படுத்தி அவர்களை பின்பற்றாமல் அவர்கள் பிறந்த நாளை கொண்டாடுவது என்ற கருத்தில் தொடர்ந்து எழுதுகிறார்கள்.

அதே பக்கத்தில் ஓர் உதாரணத்தையும் குறிப்பிடுகிறார்கள். இமாம் அஹ்மத் பின் ஹன்பல் ரஹிமஹுல்லாஹ் அவர்களின் ஆய்வில் திருக்குர்ஆன் அலங்கரிக்கப்படுவது வெறுக்கத்தக்க விடயமாகும்.

திருக்குர்ஆனை நேர்த்தியாக அலங்கரித்து விட்டு அதை ஓதாமல் விட்டு விடுவது தவறான வழிமுறையாகும்.

அனாச்சாரங்களை மார்க்கமாகக் கருதி செய்பவர்களை கண்டிப்பதற்கே இமாமவர்கள் இந்த புத்தகத்தை எழுதினார்கள். மீலாது விழா ஓர் அனாச்சாரம், பித்அத் என்ற கருத்தை மேலும் வலுப்படுத்தும் விதத்தில் இவர்கள் மேற்கோள் காட்டி இருக்கும் இதே புத்தகத்தில் பக்கம் 123ல் இமாமவர்கள் மீலாது விழாவை கண்டித்து பின்வருமாறு கூறுகிறார்கள்:

இவ்வாறு சிலர் (முஸ்லிம்கள்)கிறிஸ்தவர்களை பின்பற்றி ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவருடைய பிறந்த நாளுக்கு அவர்கள் செய்வதைப் போன்றே நபி ﷺ அவர்கள் மீது அன்பையும் கண்ணியத்தையும் வெளிப்படுத்தி பிறந்தநாள் காண முயற்சி செய்கிறார்கள்.

இவர்கள் செய்த இந்த செயலுக்கு சில சமயம் அல்லாஹ் இவர்களின் முயற்சிக்கும், நேசத்திற்கும் கூலி கொடுக்கக் கூடும். ஆனால், இவர்கள் செய்யும் பித்அத் (அனாச்சாரம்) என்ற அடிப்படையில் நன்மைகள் கிடைக்காது.

மீலாது விழா கொண்டாடுவதற்கு நேரடியான தடை வரவில்லை என்று கருதி யார் நபியவர்கள் ﷺ பிறந்த தினத்தை கருத்து வேறுபாடுகள் இருப்பதுடன் கொண்டாட்டமாக எடுத்துக் கொள்வார்களோ, இது போன்ற செயல்களை நமது முன்னோர்கள் (சஹாபாக்கள்) செய்யவே இல்லை (என்று அவர்கள் அறிந்து கொள்ளட்டும்).

இதை செய்வதில் சிறப்பும் உயர்வும் இருந்திருந்தால் நமது முன்னோர்களான சஹாபாக்கள் ரளியல்லாஹுஅன்ஹும் அதிக உரிமை பெற்றிருப்பார்கள். காரணம் அவர்கள் நபியவர்களை மிகவும் நேசித்தார்கள்.

ஒரு வாதத்திற்கு வைத்துக் கொள்வோம். அதாவது இமாம் இப்னு தைமியா அவர்கள் பக்கம் எண் 126ல் மீலாது விழா கூடும் என்று சொல்லிவிட்டு 123ல் கூடாது என்று சொல்லி ஏன் தானே முரண்பட வேண்டும்?

இதுதான் இவர்களின் இருட்டடிப்புகளின் வழக்கம். தயவுகூர்ந்து வழிகேட்டின் பக்கம் அழைத்துச் செல்லும் இவர்களை இனம் கண்டு கொள்ளுங்கள்.

அஹ்லுஸ் ஸுன்னாவின் பார்வையில்

மஹதி

மஹதி (அல்லாஹ்வின் அருள் அவர்களின் மீது உண்டாவதாக) தொடர்பாக, அறிஞர் பெருமக்கள் பல வேறுபட்ட கருத்துக்களை, தங்கள் புத்தகங்களில் பதிவு செய்திருக்கிறார்கள்.

அதிகப்படியான அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் & அனைத்து ஷீஆக்களின் வாதமும், மறுமை நாளின் அடையாளத்தில், மஹதி அவர்களின் வருகையும் ஒன்று என்பதுதான்.

அதை, ஷீஆக்கள் சற்றே மிகைப்படுத்தி, தங்களுக்கே உரிய பொய்கள் கலந்த பாணியில் அவர்கள் கூறியிருப்பது நமக்கு ஆச்சரியமான ஒன்றல்ல. அதே நேரத்தில், உண்மையை எதிர் கருத்தினர் சொன்னாலும் அதை ஏற்றுக் கொள்வதுதான், இறை நம்பிக்கையாளர்களின் பண்பும் கூட.

மஹதி தொடர்பாக, தற்கால அறிஞர்களும் பல கருத்துக்களை கூறி இருப்பினும், 'அவரவர் முயற்சி, அவரவர்களுக்கு நன்மையை தரும்' என்று நாம் கடந்துச் சென்று, அவர்களை விமர்சிப்பதில் நேரத்தை வீணாக்காமல், குர்ஆன் ஸுன்னாவிற்கு நெருக்கமான கருத்துக்களை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மஹதி அவர்களின் தொடர்பாக பல நபிமொழிகள் ஆதாரப்பூர்வமாக வந்திருக்கிறது. (அதை மிகவும் பலவீனம் என்று கருதும் சில உலமாக்களும் இருக்கின்றனர்)

இதோ ஓர் ஆதாரப்பூர்வமான நபிமொழி:

அலீ ரளியல்லாஹு அன்ஹு அவர்கள், இறைத்தூதர் ﷺ அவர்கள் கூறியதாக அறிவிக்கிறார்கள்:

"மஹதி, நமது குடும்பத்தில் இருந்து தோன்றுவார். அவரை, அல்லாஹ், ஒரே இரவில் தகுதி உடையவராக ஆக்கிவிடுவான்".

(நூல்: முஸ்னத் அஹ்மத்-2/58) (அல்லாமா அஹ்மத் ஷாகிர் ரஹிமஹுல்லாஹ் ஆதாரப்பூர்வமானது என்று சரி கண்டிருக்கிறார்கள்) (நூல்: ஸுனன் இப்னு மாஜா-2/1367, ஸஹீஹுல் ஜாமிஃ அஸ்ஸஹீர் -6735) (அல்லாமா நாஸிருத்தீன் அல்பானி ரஹிமஹுல்லாஹ் ஆதாரப்பூர்வமானது என்று சரி கண்டிருக்கிறார்கள்)

وعن علي رضي الله عنه قال : قال رسول الله صلى الله عليه وسلم : " المهدي منا أهل البيت يصلحه الله في ليلة " . مسند أحمد 85/2 ح 546 تحقيق أحمد شاكر وقال : إسناده صحيح وسنن ابن ماجه 7631/2 . والحديث صححه أيضاً الألباني في صحيح الجامع الصغير 5376

ஹம்பலி மத்ஹபின் பிரபலமான இமாம் முஹம்மத் பின் அஹ்மத் அஸ்ஸஃபாரீனி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் "லவாமிஃ அல்அன்வாரில் பஹிய்யா" என்ற தங்களது புத்தகத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார்கள்.

மஹதி தொடர்பாக பல அறிவிப்புகள் வந்து உள்ரங்கமான "தவாத்துரை", (அங்கீகாரத்தை) பெறுகிறது, அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் உலமாக்களிடம், இது பிரபலமானதாக காணப்படுகிறது. நபித்தோழர்கள் வாயிலாகவும், அவர்களின் மாணவர்களின் வாயிலாகவும் பெறப்பட்ட பல அறிவிப்புகளின் ஊடாக, உறுதியான ஒரு விடயத்தை பெறமுடிகிறது. எந்தளவுக்கு என்று சொன்னால், அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையின் அடிப்படையில், மஹதி அவர்களின் வருகையை ஏற்றுக்கொள்வது, வாஜிபான ஒன்றாக மாறிவிட்டது.

இமாம் ஷவ்கானி அவர்கள் தங்களது புத்தகத்தில் எதிர்பார்க்கப் படுகின்ற (ஸஊதி அரேபியாவைச்சேர்ந்த அல்லாமா உஸைமீன் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் எதிர்பார்க்கப்பட்ட - المنتظر என்ற வார்த்தையை தவிர்த்துக்கொள்வது நல்லது என்று கூறுகிறார்கள். ஷீஆக்களின் அதிகப்படியான பயன்பாடுகளின் காரணமாக கூட இவ்வாறு கூறி இருக்கலாம்) மஹதி தொடர்பாக 50 நபிமொழிகள் வந்திருக்கிறது. அவைகளில் ஆதாரம் மிக்கது, ஆதாரமற்றது, பலவீனமானது என்று பல தரங்களில் வந்திருக்கின்றன.

உஸூலின் அடிப்படையில், இது எந்த சந்தேகத்திற்கும் இடமில்லாமல், தவாத்துரின் (அங்கீகாரத்தை) அந்தஸ்தை பெற்றிருக்கிறது.

ஆனால், சில அறிஞர் பெருமக்கள், மர்யமின் குமாரரான ஈஸாவைத் தவிர மஹ்தி என்பவர் யாருமில்லை என்ற இப்னு மாஜா, ஹாகிம் போன்ற கிரந்தங்களில் இடம்பெற்றிருக்கும் அறிவிப்பை வைத்து, மஹ்தி அவர்களின் வருகையை மறுக்கின்றனர். ஆனால், இந்த அறிவிப்பு பலவீனமானது என்று ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமியா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகிறார்கள்.

قال السفاريني في لوامع الأنوار البهية (وقد كثرت بخروجه الروايات، حتى بلغت حد التواتر المعنوي، وشاع ذلك بين علماء السنة، حتى عُدّ من معتقداتهم" إلى أن قال: "وقد روي عمن ذُكر من الصحابة وغير من ذُكر منهم رضي الله عنهم، بروايات متعددة، وعن التابعين من بعدهم، ما يفيد مجموعه العلم القطعي ، فالإيمان بخروج المهدي واجب كما هو مقرر عند أهل العلم ، ومدون في عقائد أهل السنة والجماعة" انتهى. وقال الشوكاني: "والأحاديث في تواتر ما جاء في المهدي المنتظر ، التي أمكن الوقوف عليها ، منها خمسون حديثاً، فيها الصحيح والحسن والضعيف المنجبر، وهي متواترة بلا شك ولا شبهة، بل يصدق وصف التواتر على ما هو دونها في جميع الاصطلاحات المحررة في الأصول..." انتهى.وقد أنكر جماعة خروج المهدي محتجين بحديث "ولا مهدي إلا عيسى ابن مريم" وهو حديث رواه ابن ماجه والحاكم، لكنه ضعيف كما جزم بذلك جماعة منهم شيخ الإسلام ابن تيمية وغيره.

ஸஊதி அரேபியாவின் முன்னாள் தலைமை முஃப்தியான இமாம் இப்னு பாஸ் ரஹிமஹுல்லாஹ், மஹ்தி அலைஹிஸ்ஸலாம் தொடர்பாக வழங்கிய மார்க்கத் தீர்ப்பு பின் வருமாறு:

எதிர்பார்க்கப்பட்ட மஹ்தி அவர்களின் வருகை உண்மைதான். கியாமத் தினம் வருவதற்கான கால அடையாளங்கள் தோன்றும் சமயத்தில், தஜ்ஜால் தோன்றுவதற்கு அருகிலும், ஈஸா (இயேசுவின்)

அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வானில் இருந்து இறங்குவதற்கு அருகிலும், ஒரு கலீஃபாவின் மரணத்தில் மக்களிடையே கருத்து வேறுபாடு ஏற்படும் போது, மஹ்தி வெளிப்படுவார். (ஒரு மனதுடன் இந்த உம்மத்தின் கலீஃபாவாக ஏற்கப்பட்டு) அவர் பைஅத் செய்யப்படுவார். ஏழு அல்லது ஒன்பது ஆண்டுகளாக, மக்களிடையே நீதியை நிலைநாட்ட பாடுபடுவார். மர்யமின் மகன் ஈஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் வர இருக்கின்ற காலத்தில், இவர் இறங்குவார். இதைத்தான் ஆதாரமான நபிமொழிகள் கூறுகின்றன.

ராஃபிழியாக்கள் என்ற ஷீஆக்கள் கூறும் சுரங்கப்பாதையில் இருந்து வெளிப்படும் மஹ்தியின் வருகை, நமது அஹ்லுஸ் ஸுன்னாவைச் சார்ந்த அறிஞர்களின் கூற்றுப்படி, அதற்கு எந்த அடிப்படையும் இல்லை. மாறாக, அது எந்த அடிப்படையும் இல்லாத,செல்லுபடியாகாத ஒரு கட்டுக்கதை.

நம்பகமான ஹதீஸ்கள் மூலம் கொண்டு வரப்பட்ட, "எதிர்பார்க்கப் பட்ட மஹ்தியைப் பொருத்தவரை, அவர் அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸ்ஸல்லம் அவர்களின் பரம்பரையில், ஃபாத்திமா ரளியல்லாஹு அன்ஹா அவர்களின் சந்ததியில் இருந்து தோன்றுவார். அவருடைய பெயர் இறைத் தூதரின் பெயரைப் போன்றது. (முஹம்மது/அஹ்மத்) மற்றும் அவரது தந்தை பெயர் அப்துல்லாஹ்வாக இருக்கும், இது உண்மையான ஆதாரப்பூர்வமான ஹதீஸ்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. அது காலத்தின் முடிவில் நடக்கும். அது அவரது தோற்றத்தின் காரணமாக நடக்கும். அவர் தோன்றிய பிறகு, மக்களின் நலனிலும், இஸ்லாமிய ஷரீஅத்தை நிலைநாட்டுவதிலும், நீதத்தை நிலைநாட்டுவதிலும் மிகவும் பங்களிப்பார்.

அவர் காலத்தில், அநியாயத்தால் நிரம்பிய பிறகு, பூமி அநீதியால் நிரம்பிவிடும் என்றும், இருக்கும் கலீஃபாவின் மரணத்தைத் தொடர்ந்து மக்களிடையே சச்சரவுகள், கருத்து வேறுபாடுகள் ஏற்படும் போது, அவர் தோன்றுவார் என்றும் ஹதீஸ்களில் கூறப்பட்டுள்ளது. (கண்ணியத்திற்குரிய ஷைக் அப்துல் அஜீஸ் பின் பாஸ் ரஹிமஹுல்லாஹ் நூல்:"ஃபதாவா நூர் அலத்-தர்ப்" (1/354))

இஜ்மாஃ

ஒற்றைக் கருத்தும் மாற்றுக் கருத்தினரின் இருட்டடிப்பும்

மார்க்க சட்டக்கலைகளில் ஆதாரம் எடுப்பதற்கு அடிப்படையான அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட நான்கு மூல ஆதாரங்கள் குர்ஆன் -ஸுன்னா-இஜ்மாஃ -கியாஸ் மிக முக்கியமான அம்சங்களை பெற்றிருக்கிறது.

அதில் குறிப்பாக இஜ்மாஃ என்ற இஸ்லாமிய சட்டம் இயற்றும் ஆதாரம் மிக முக்கியமானவை ஆகும்.

குர்ஆன் ஹதீஸிலிருந்து விளங்கிய சட்டங்களை அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸ்ஸல்லம் அவர்களின் தோழர்கள் எவ்வாறு விளங்கி வைத்திருந்தார்களோ எந்த விடயத்தில் ஒன்றுபட்ட ஒத்த கருத்தை கொண்டிருந்தார்களோ அதுதான் இஜ்மாவாகும்.

இஜ்மாஃ

அந்த சொல்லுக்கான அர்த்தம் ஒன்றுபடுதல், எகோபித்திருத்தல் என்று கூறலாம். ஃபிக்ஹு சட்டக் கலையில் அதனை பின்வருமாறு வரைவிலக்கணப்படுத்துவர்.

اتفاق مجتهدي هذه الأمة على أمر ديني بعد وفاة الرسول في عصر من العصور

நபிகளாருடைய மரணத்தின் பின்னர், ஏதோ ஒரு காலத்தில் இஸ்லாமிய உம்மத்தில் இருக்கும் ஆய்வாளர்கள், ஒரு மார்க்க விடயத்தில் ஒன்றுபடுதல்.

வரைவிலக்கணத்தின் உள்ளடக்கம்

1. ஆய்வாளர்கள் (சாதாரண மக்கள் ஒன்று படுவதல்ல)
2. மார்க்க விடயம் (உலக விடயங்கள் அல்ல)

3. நபிகளாரின் மரணத்தின் பின் (நபிகளார் உயிரோடிருக்கும் போது அது நிகழ முடியாது)

4. ஒன்றுபட்ட கருத்து. (கருத்து முரண்பாடு இருக்கக் கூடாது)

وَاعْتَصِمُوا بِحَبْلِ اللَّهِ جَمِيعًا وَلَا تَفَرَّقُوا

இன்னும், நீங்கள் எல்லோரும் அல்லாஹ்வின் கயிற்றை வலுவாக பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள்; நீங்கள் பிரிந்தும் விடாதீர்கள்; (அல்குர்ஆன் 3:103)

وَمَن يُشَاقِقِ الرَّسُولَ مِن بَعْدِ مَا تَبَيَّنَ لَهُ الْهُدَىٰ وَيَتَّبِعْ غَيْرَ سَبِيلِ الْمُؤْمِنِينَ نُوَلِّهِ مَا تَوَلَّىٰ وَنُصْلِهِ جَهَنَّمَ ۖ وَسَاءَتْ مَصِيرًا

எவனொருவன் நேர்வழி இன்னது என்று தனக்குத் தெளிவான பின்னரும், (அல்லாஹ்வின்) இத்தூதரை விட்டுப் பிரிந்து, முஃமின்கள் செல்லாத வழியில் செல்கின்றானோ, அவனை அவன் செல்லும் (தவறான) வழியிலேயே செல்லவிட்டு நரகத்திலும் அவனை நுழையச் செய்வோம்; அதுவோ, சென்றடையும் இடங்களில் மிகக் கெட்டதாகும். (அல்குர்ஆன் 4:115)

இந்த இரண்டு வசனங்களையும் நோக்கினால்; முதல் வசனம் குர்ஆனில் ஒன்றுபடுவதையும், இரண்டாவது வசனம், நபிகளாரோடு ஒன்றுபட்ட இஸ்லாமிய சமூகத்தை சேர்ந்துபோக வேண்டுமென்பதையும் வலியுறுத்துகிறது.

عَنِ المُغِيرَةِ بْنِ شُعْبَةَ، عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، قَالَ: «لاَ يَزَالُ طَائِفَةٌ مِنْ أُمَّتِي ظَاهِرِينَ، حَتَّى يَأْتِيَهُمْ أَمْرُ اللهِ وَهُمْ ظَاهِرُونَ» صحيح البخاري

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: என் சமுதாயத்தாரில் ஒரு குழுவினர் (உண்மைக்கு) ஆதரவாளர்களாக இருந்து கொண்டே இருப்பார்கள். இறுதியாக, அவர்கள் மேலோங்கியவர்களாக இருக்கும் நிலையிலேயே அவர்களிடம் இறைக் கட்டளை(யான மறுமைநாள்) வரும். (புகாரீ:7311, முஸ்லிம்)

இந்த ஹதீஸை நோக்கினாலும் சத்திய சமூகம் எதில் ஒன்றுபட்டிருக்கும் என்பது தெளிவாக விளங்குகிறது.

வழமையைப் போன்று நமது உண்மையான அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கைக்கு மாற்றுக் கருத்துக் கொண்டிருப்பவர்கள் நமது உலமாக்கள் ஏதாவது தவறு செய்கிறார்களா அதை எவ்வாறு பூதாகரமாக ஆக்குவது என்று பூதக்கண்ணாடியினால் பார்த்துக்கொண்டிருப்பதை முன்பே விளக்கியிருக்கிறோம்.

அந்த அடிப்படையில் யமன் நாட்டைச் சேர்ந்த ஸலஃபு உலமாக்களில் பிரபலமானவருமான அஷ்ஷைக் முக்பில் அல்வாதிஈ ரஹிமஹுல்லாஹ் அவர்களின் كتاب غارة الأشرطة على أهل الجهل والسفسطة—ج ٢،ص-٧٤١-கிதாப் காரதுல் அஷ்ரிததி அலா அஹ்லில் ஜஹ்லி வல் ஸஃப்ஸததி பாகம்-2, பக்கம்-147 என்ற புத்தகத்தில் இஜ்மாவை மறுத்திருக்கிறார் என்று கூறி இதை புதிய பிரச்சினையாக உருவாக்க நினைக்கிறார்கள் நமது மாற்றுக் கருத்தினர். நமது உலமாக்கள் ஊடாக என்றோ இது போன்ற குற்றச்சாட்டுகளுக்கு பதில் கூறப்பட்டு இருக்கிறது என்பதை இவர்கள் மறந்து விட்டார்கள் போலும்!

இவர்கள் குறிப்பிட்டு இருக்கும் 147 வது பக்கத்தில் குறிப்பிடும் படியான எந்த தகவலும் இல்லை. இவர்கள் ஆதாரமாக காட்டியிருக்கும் புத்தகப் பக்கம் 147ல் "தப்தீலுல் ழுலாம் அன்ஹுக்மி அல்இன்திகாபி ஃபில் இஸ்லாம்" تبديل الظلام عن الحكم الإنتخاب في الإسلام என்று எழுதி இருக்கிறது. ஆனால், இவர்கள் குறிப்பிட்டு இருக்கும் புத்தகத்தின் பெயர் வேறு "கிதாப் காரதுல் அஷ்ரிததி அலா அஹ்லில் ஜஹ்லி வல் ஸஃப்ஸததி" كتاب غارة الأشرطة على أهل الجهل والسفسطة வழமையாக இந்த பித்அத்வாதிகள் செய்யும் இருட்டடிப்புகளை தான் இங்கும் செய்திருக்கிறார்கள். வாருங்கள் பார்ப்போம்!

மேல்காணும் புத்தகத்தில் 163ஆம் பக்கம் ஒரு வாலிபர், அறிஞர் முக்பில் அல்வாதிஈ ரஹிமஹுல்லாஹ் அவர்களிடம் ஒரு கேள்வி கேட்கிறார்.

கேள்வி பதிலின் சுருக்கம்

நீங்கள் இஜ்மாவை மறுப்பதாக சொல்கிறார்கள் உங்களின் பதில் என்ன?

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اَطِيْعُوا اللّٰهَ وَاَطِيْعُوا الرَّسُوْلَ وَاُولِى الْاَمْرِ مِنْكُمْ فَاِنْ تَنَازَعْتُمْ فِىْ شَىْءٍ
فَرُدُّوْهُ اِلَى اللّٰهِ وَالرَّسُوْلِ اِنْ كُنْتُمْ تُؤْمِنُوْنَ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ ذٰ لِكَ خَيْرٌ وَّاَحْسَنُ تَاْوِيْلًا

நம்பிக்கையாளர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு நடங்கள். (அவ்வாறே அல்லாஹ்வுடைய) தூதருக்கும், உங்கள் அதிபர்களுக்கும் கட்டுப்பட்டு நடங்கள். (நம்பிக்கையாளர்களே!) உங்களுக்குள் ஒரு விஷயத்தில் பிணக்கு ஏற்பட்டால் மெய்யாகவே நீங்கள் அல்லாஹ்வையும், இறுதிநாளையும் நம்பிக்கை கொண்டவர்களாயிருந்தால் அதை அல்லாஹ்விடமும் (அவனுடைய) தூதரிடமும் ஒப்படைத்துவிடுங்கள். (அவர்களுடைய தீர்ப்பை நீங்கள் மனதிருப்தியுடன் ஒப்புக் கொள்ளுங்கள்). இதுதான் உங்களுக்கு நன்மையும், அழகான முடிவும் ஆகும்.

(அல்குர்ஆன் 4:59)

மேற்காணும் இறைவசனம் எனது ஆதாரம். பிரச்சனைகள் வரும் பொழுது தீர்வை குர்ஆன் ஸுன்னாவில் கையாள வேண்டும் என்பதே எனது நோக்கம்.

நான் இஜ்மாவை மறுக்கவில்லை. ஆனால், இஜ்மா என்ற ஆதாரம் குர்ஆன் ஹதீஸுக்கு நிகரானது அல்ல.

وَمَنْ يُّشَاقِقِ الرَّسُوْلَ مِنْ بَعْدِ مَا تَبَيَّنَ لَهُ الْهُدٰى وَ يَـتَّبِعْ غَيْرَ سَبِيْلِ الْمُؤْمِنِيْنَ نُوَلِّه مَا تَوَلّٰى وَنُصْلِه جَهَـنَّمَ وَسَآءَتْ مَصِيْرًا

எவர் நேரான வழி இன்னதென்று தனக்குத் தெளிவானதன் பின்னரும் (அல்லாஹ்வுடைய) இத்தூதரை விட்டுப் பிரிந்து நம்பிக்கையாளர்களின் வழி அல்லாததில் செல்கிறாரோ அவரை நாம் அவர் செல்லும் (தவறான) வழியிலேயே செல்லவிட்டு (பின்னர்) அவரை நரகத்தில் சேர்த்து விடுவோம். அது செல்லும் இடங்களில் மிகக் கெட்டது.

(அல்குர்ஆன் 4:115)

இறைத்தூதரை விட்டு பிரிந்து விடுவது என்ற ஒரு செய்தியே இந்த வசனத்தில் எச்சரிக்கைக்கு போதுமான ஒன்று இதில் இஜ்மாவிற்குரிய ஆதாரம் இல்லை .

இந்த கருத்தை தான் இமாம் அஹ்மத் பின் ஹம்பல்,ஷவ்கானி ரஹிமஹுமுல்லாஹ் போன்றோர் குறிப்பிடுகிறார்கள், சஹாபாக்களுக்கு பின் இஜ்மா என்பது இல்லை. இத்துடன் இந்த புத்தகத்தில் இந்த செய்தி முடிவடைந்து விட்டது.

இதில் எங்கு இமாம் அவர்கள் இஜ்மா என்பது இஸ்லாமிய ஃபிக்ஹு சட்டங்களில் ஆதாரமாக எடுக்க முடியாது என்று கூறுகிறார்கள்!?

ஹிஜ்ரீ இரண்டாம் நூற்றாண்டில் இப்ராஹீம் அந்நழ்ழாம் அல்பஸரி என்ற வழிகெட்ட முஃதஜிலா கொள்கையைச் சேர்ந்தவர் இஜ்மாவை முதலில் மறுக்கிறார். இவரைப் பற்றி எகிப்து நாட்டைச் சேர்ந்த அஹ்மத் அமீனும் லுஹல் இஸ்லாமில் (ضحى الإسلام 3/126)இப்ராஹீம் அந்நழ்ழாம் இஜ்மாவை மறுத்தார் என்று குறிப்பிட்டு இருக்கிறார்.

சமகாலத்தில் வாழ்ந்த எகிப்து நாட்டைச் சேர்ந்த மஹ்மூத் அபூ ரய்யா (أضواء على السنة المحمدية) அள்வா அலஸ்ஸுன்னா அல்முஹம்மதிய்யா என்ற புத்தகத்திலும் இஜ்மாவை மறுத்து ஷீஆக்கள், முஃதஜிலா கொள்கைக்கு ஒத்துப் போகிறார்.

நான்கு ஃபிக்ஹு மத்ஹபுகளில் ஒன்றான ஹம்பலி மத்ஹபின் இமாம் அஹ்மத் பின் ஹம்பல் ரஹிமஹுல்லாஹ் இஜ்மா என்ற மூல சட்டத்தை மறுத்தார்கள் என்று அவர்களின் மீதும் சிலர் குற்றத்தை சுமத்தினர்.

قال ابن القيم: "وليس مراده – أي: الإمام أحمد – بهذا استبعاد وجود الإجماع، ولكن أحمد وأئمة الحديث بُلُوا بمن كان يرد عليهم السنة الصحيحة بإجماع الناس على خلافها، فبين الشافعي وأحمد أن هذه الدعوى كذب، وأنه لا يجوز رد السنن بمثلها". "مختصر الصواعق" (506). " معالم أصول الفقه عند أهل السنة والجماعة " للدكتور: محمَّد بنْ حسَيْن بن حَسنْ الجيزاني ص: 163

இமாம் இப்னுல் கையிம் ரஹிமஹுல்லாஹ் தனது புத்தகமான (مختصر الصواعق 506) முக்தஸருல் ஸவாயிகில் (506 பக்கம்) இமாம் அஹ்மத் அவர்கள் மீது இட்டுக்கட்ட பட்ட கூற்று மாறாக இமாம் அவர்கள் இஜ்மாவே தனது அடிப்படையான மூல ஆதாரங்கள் ஒன்றாக கருதுகிறார்கள் இமாம் ஷாபி அவர்கள் மீதும் இதே குற்றச்சாட்டு வைக்கப்பட்டது என்று குறிப்பிடுகிறார்கள்.

பித்அத்வாதிகள் தெளிவான நபிமொழிகள் ஆதாரங்கள் இருந்தும் அதை விட்டுவிட்டு தாங்கள் கூறும் கூற்றை சரி செய்வதற்காக தங்களின் சிந்தனை பள்ளியை சேர்ந்த ஒரு சில அறிஞர்கள் கூறியதை இஜ்மா என்று தவறுதலாக கூறி வந்தனர்.

இதை மறுத்து இமாம் ஷாஃபிஈ தனது புத்தகமான அர்ரிஸாலாவிலும் இமாம் அஹ்மத் பின் ஹம்பல் ரஹிமஹுமுல்லாஹ்வும் இந்த

கருத்துக்களை எதிர்த்து தெளிவான ஆதாரங்கள் இருக்கும் பொழுது ஒரு சில நபர்கள் மனத்தோண்றலில் கூறும் செய்திகளை இஜ்மாஃ என்று சொல்ல முடியாது, இந்த வகையான இஜ்மா ஆதாரமற்றது என்று கூறியதை இஜ்மா ஆதாரம் இல்லை என்று புனைந்து விட்டார்கள் இந்த மாற்றுக் கருத்துடைய பித்அத் வாதிகள்.

அஷ்ஷைக் முக்பில் அல்வாதிஈ ரஹிமஹுல்லாஹ் ஸுன்னத்தை வலியுறுத்தியும் பித்அத்தை கண்டித்தும் இன்னும் பல மார்க்க சேவைகளையும் செய்திருக்கிறார்கள் அல்லாஹ் அவர்களை மன்னிப்பானாக!! அவர்களின் சேவைகளைப் ஏற்றுக் கொள்வானாக!!

ஆனால், அவர்களின் கூற்றுப்படி இஜ்மா என்பது ஆதாரம் இல்லை என்று கூறுவது இமாம் ஷாஃபிஈ, அஹ்மத் பின் ஹம்பல் ரஹிமஹுமுல்லாஹ் போன்றோர் கூறிய அடிப்படையில் கூறி இருக்கலாம். அல்லது தெளிவாக இஜ்மாவை மறுத்தும் இருக்கலாம். அவ்வாறு இஜ்மாவை தெளிவாக அவர்கள் மறுத்து இருப்பது ஊர்ஜிதம் ஆகும் பொழுது அவரின் வாதம் பிழை என்றே கூறுவோம்.

அஷ்ஷைக் முக்பில் அல்வாதிஈ ரஹிமஹுல்லாஹ் அவர்களின் இந்த கூற்றை சமகால அறிஞரான அஷ்ஷைக் ஹிஷாம் பின் ஃபுஆத் அல்பைலி என்ற எகிப்து நாட்டைச் சேர்ந்த அறிஞரும் இன்னும் சில உலமாக்களும் மறுத்து இருக்கிறார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

அசத்திய கருத்தை யார் சொன்னாலும் அதை மறுப்பது தான் வாய்மையானவர்களின் அடையாளம்.

பரேல்விகள் போன்று உண்மையை மறைப்பதும் மார்க்கத்தில் சொல்லப்படாத விஷயங்களை வலியுறுத்தப்பட்டதாக சொல்வதும் இது போன்ற பல இருட்டடிப்புகளை நாமும் நமது உலமாக்களும் செய்வதில்லை.

இறையருளால் இது போன்ற பல இருட்டடிப்புகள் பற்றிய விழிப்புணர்வு பதிவுகளை பலகாலமாக சமூக வலைதளங்களில் எழுதியும் வருகிறோம் தெளிவுபடுத்தியும் வருகிறோம்...

வாசிப்பு பழக்கம் மிக முக்கியமான ஒன்று. அது இன்று கொஞ்சம் கொஞ்சமாக நமது சமூகத்திடமிருந்து மறைந்து வருகிறது. இன்றைய காலத்தில் காணப்படும் மிகப்பெரிய பிரச்சினை ஒருவர் தான் கொண்டிருக்கும் கொள்கையின் அறிஞர்கள் ஒரு கருத்தை முன் வைக்கும் பொழுது அதை கண்மூடித்தனமாக ஆய்வு செய்யாமல்

பின்பற்றுவது தவறு. அவர் பிழை செய்திருந்தால் அதை பிழை என்று ஏற்றுக் கொள்வதும் மார்க்கத்தில் அடிப்படையான ஒன்று என்பதை உணர வேண்டும்.

மார்க்கத்தில் சத்தியத்தை அறிந்து கொள்வது தான் முக்கியமே தவிர, தனி நபர்களை ஆராதனை செய்வதோ, புனிதப்படுத்துவதோ முக்கியமல்ல. அல்லாஹ் நமக்கு மார்க்கத்தில் ஆழமான அறிவையும் அதனால் பெறப்படும் இறையச்சத்தையும் வழங்கிடுவானாக!!

நான் அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையை தான் பின்பற்றுகிறேன் என்று எனக்கு எப்படித் தெரியும்?

நீங்கள் எவ்வாறு நபியவர்கள் எச்சரித்த வழிகேடான (72) பிரிவுகளில் இருந்து தவிர்ந்து, எஞ்சியிருக்கும் பிரிவினரில் இருக்கிறீர்கள்?

இமாம் அப்துல்லாஹ் பின் அல்-முபாரக் அவர்கள் கூறினார்கள்: "எழுபத்திரண்டு பிரிவுகளின் தோற்றம்: நான்கு வழி தவறிய கொள்கையிலிருந்திருக்கிறது. இந்த நான்கிலிருந்துதான் எழுபத்திரண்டு பிரிவுகள் தோன்றின.

1. கதரியா
2. முர்ஜிஆ
3. ஷிஆக்கள்
4. கவாரிஜிகள்

எவர் அபூபக்ர், உமர், உஸ்மான், அலீ ரளியல்லாஹு அன்ஹும் ஆகியோருக்கு இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மற்ற தோழர்களை விட முன்னுரிமை அளித்து, மற்ற நபித்தோழர்கள் பற்றி நல்லதைத் தவிர வேறு எதையும் பேசாமல் இருந்து அவர்களுக்காக துஆ செய்தால் அவர் முற்றிலும் ஷீஆயிஸத்தை விட்டு வெளியேறி விடுகிறாரோ அவர் அஹ்லுஸ் ஸுன்னாவைச் சார்ந்தவராவார்.

யார் ஈமான் (இறைநம்பிக்கை என்பது) சொல்லும்,செயலுமாகும், அது (அல்லாஹ்விற்கு கட்டுப்படுவதனால்) அதிகரிக்கிறது மற்றும் (அவனுக்கு மாறுபடுவதனால்)குறைகிறது; என்று நம்புகிறாரோ அவர் வழிகெட்ட முர்ஜிஆ கொள்கையில் இருந்து முற்றிலும் வெளியேறி விடுகிறாரோ அவர் அஹ்லுஸ் ஸுன்னாவைச் சார்ந்தவராவார்.

யார் ஒவ்வொரு நீதமான மற்றும் நீதமற்ற அமீருக்குப் பின்னால் தொழுகிறாரோ, மேலும் ஜிஹாத் ஒவ்வொரு கலீஃபாவுடன் இணைந்து (இஸ்லாமிய ஷரீஆ ஆட்சியின் அமீருடன்) எதிரிகளை எதிர்கொள்வாரோ, மேலும் சுல்தானுக்கு(ஷரீஆ அரசுக்கு) எதிராக வாளால் கிளர்ச்சி செய்யாமல் இருந்து, மார்க்கத்துக்கு முரணாக நடக்கும் பொழுது அவர்கள் நீதியுள்ளவர்களாக இருக்க துஆ & உபதேசம் செய்தால்; அவர் கவாரிஜ்களின் கொள்களிலிருந்து முற்றிலும் வெளியேறி விடுகிறாரோ அவர் அஹ்லுஸ் ஸுன்னாவைச் சார்ந்தவராவார்.

விதிகளும், நன்மைகளும் தீமைகள் அனைத்தும் அல்லாஹ்விட மிருந்து வந்தவை என்றும் அல்லாஹ் தான் விரும்பியவர்களை நேரான வழியில் நடத்துகிறான், மேலும் அவன் விரும்பியவர்களை வழி கெடச் செய்கிறான்; என்று எவர் நம்பி கூறுகிறாரோ வழிகெட்ட கதாரிய்யா கொள்கையிலிருந்து முற்றிலும் வெளியேறி விடுகிறாரோ அவர் அஹ்லுஸ் ஸுன்னாவைச் சார்ந்தவராவார். (இமாம் அல்-பர்பஹாரியின் ஷரஹுஸ் ஸுன்னா, ரஹிமஹுல்லாஹ்)

ஸஹ்ல் பின் அப்துல்லாஹ்விடம் கூறப்பட்டது: “ஒரு மனிதன் அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையில் இருப்பதாக எவ்வாறு அறிவார்?!”

“அஹ்லுஸ் ஸுன்னாவின் பத்து குணங்களை அவர் கொண்டிருந்தால் அவர் சரியான கொள்கைகளில் இருக்கிறார் என்று அர்த்தம் என்று கூறினார்:

- அவர் தனி நபராக இருந்தாலும் (அஹ்லுஸ் ஸுன்னாவை) ஜமாத்தை விட்டு விடமாட்டார்
- அவர் நபிகள் நாயகத்தின் தோழர்களை சபிக்க மாட்டார்.
- அவர் இந்த உம்மத்திற்கு எதிராக வாளால் கிளர்ச்சி செய்ய மாட்டார்.
- அவர் விதியை பொய் பிக்கமாட்டார்.
- அவர் ஈமானை (இறைநம்பிக்கையை) சந்தேகிக்கமாட்டார்.
- அவர் (இறுதியாக முடிவு செய்யப்பட்ட) மார்க்க விஷயத்தில் சர்ச்சை செய்யமாட்டார்.
- கிப்லாவின் மக்களிடமிருந்து (இறை நம்பிக்கையாளர்களிடமிருந்து)

ஏற்பட்ட பாவத்தால் அந்த நபர் மரணித்துவிட்டால் அவருக்காக நடத்தப்படும் ஜனாஸா தொழுகையை விடமாட்டார்.

- *வுளூ செய்யும் பொழுது காலுறைகளில் மஸஹ் செய்வதை மறுக்க மாட்டார்.*
- *ஒவ்வொரு நீதமான அல்லது அநீதம் இழைக்கக் கூடிய ஆட்சியாளருக்கு பின்னால் ஜமாஅத் தொழுகையை விட்டு விட மாட்டார். (ஷரஹ் உஸூலு அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் -இமாம் அல்-லாலிகாயி, ரஹிமஹுல்லாஹ் (183)).*

நவீன பித்னா!

சமீப காலமாக சமூக வலைதளங்களில் இஸ்லாமிய விழிப்புணர்வு பதிவுகள் பல வலம் வந்து கொண்டிருக்கிறது. ஒருபுறம் மகிழ்ச்சியாக இருந்தாலும், மறுபுறம் பாவங்களும் அல்லாஹ்வின் கட்டளைகளுக்கு மாறுபடுவதும் இறைத்தூதர் ﷺ அவர்களின் வழிமுறைகளை கைவிட்டு மனதோன்றல்களை மார்க்கமாக ஆக்கப்படும் சீர்கேடுகளை காணும் பொழுது மனதில் ஆழமான காயங்களை ஏற்படுத்துகிறது.

இன்று சில வாலிபர்கள் மார்க்கத்தை முறையாக ஆசிரியர்களிடம் கற்று இஜாஸா,ஸனது போன்ற அனுமதிகளை பெறாமல் தங்கள் சுயவாசிப்பு என்ற அடிப்படையில், மார்க்கத்தில் குழப்பத்தை ஏற்படுத்தும் இஸ்லாமிய ஒற்றுமையை தவிடு பொடியாக்கக்கூடிய பல நச்சுக் கருத்துகளை சமூக வலைதளங்களில் தொடர்ந்து பரப்பி வருகின்றனர்.

ஸஹாபாக்களை தரக்குறைவாக பேசுவது, சங்கையான இமாம்களை கொச்சைப்படுத்துவது, மார்க்கத்தின் அடிப்படை கொள்கைகளை மாற்றி அமைப்பது, மார்க்கத்தில் இல்லாத விஷயங்களை மார்க்கமாக சொல்வது போன்ற பல தலைப்புகளில் ebutuoy போன்ற சேனல்களில் பேசியும் சமூக வலைதளங்களில் எழுதியும் வருகின்றனர்.

இளம் வாலிப ஆண் பெண்கள் இவர்களின் சதிவலையில் சிக்கி விடுகின்றனர். சிலர் முறையாக கல்வி கற்று தேர்ச்சி பெற்ற ஆலீம்களிடம் விளக்கம் கேட்டு தெளிவு பெற்றுக் கொள்கிறார்கள். ஆனால், அதிகமானோர் வழிகேட்டை நோக்கி பயணிக்கிறார்கள்.

அவர்களிடத்தில் இருக்கும் குறைவான மார்க்க அறிவு அவர்கள்

செய்து கொண்டிருக்கும் இந்த குழப்பங்களுக்கு அடிப்படையான காரணமாகும்.

அவர்களின் பேச்சுகளை எழுத்துக்களை கேட்கும் பொழுது பிரமிக்க வைக்கும் தகவல்களை அவர்கள் வழங்குகிறார்கள். அவர்கள் முழுமையாக இஸ்லாமிய மூல புத்தகங்களிலிருந்தும் அரபு புத்தகங்களிலிருந்தும் இந்த செய்திகளை படிக்கவில்லை.

அவர்கள் யாரை இமாமாக காண்கிறார்களோ அவர்களின் தமிழ், ஆங்கிலம், உர்தூ போன்ற புத்தகங்களை படித்து அரைகுறையான செய்திகளை சமூகத்திற்கு ஆரோக்கியமற்ற சிந்தனையில் எடுத்துரைக் கிறார்கள். இது அல்லாஹ்வின் அதிருப்தியை பெற்றுத் தரக்கூடும் என்று அவர்கள் விளங்கவில்லை.

தயவு கூர்ந்து தாங்கள் இந்த விஷமத்தனத்தை நிறுத்திக் கொள்ளுங்கள் செய்யாதீர்கள் என்று சொன்னால், தாங்கள் சமாதானத்தை ஏற்படுத்துப வர்கள் விஷமிகள் அல்லர் என்று கூறுகின்றனர்.

وَاِذَا قِيْلَ لَهُمْ لَا تُفْسِدُوْا فِى الْاَرْضِ قَالُوْا اِنَّمَا نَحْنُ مُصْلِحُوْنَ

அவர்களை நோக்கி பூமியில் விஷமம் செய்(துகொண்டு அலை) யாதீர்கள் என்று கூறினால், அதற்கவர்கள் “நாங்கள் சமாதானத்தை உண்டாக்குபவர்கள்தான் (விஷமிகள் அல்லர்)'' எனக் கூறுகிறார்கள். (அல்குர்ஆன் 2:11)

اَلَا اِنَّهُمْ هُمُ الْمُفْسِدُوْنَ وَلٰـكِنْ لَّا يَشْعُرُوْنَ

நிச்சயமாக அவர்கள் விஷமிகளே! ஆனால், (தாங்கள்தான் விஷமிகள் என்பதை) அவர்கள் உணர்ந்துகொள்ள மாட்டார்கள்.(அல்குர்ஆன் 2:12)

இறைநேசர்களின் அடையாளங்கள்

இறைநேசர்களை நிந்திப்பது, தரக்குறைவாக பேசுவது, அவர்களை அத்துமீறி நேசித்து கொண்டாடுவது இரண்டுமே இஸ்லாம் காட்டித் தராத ஏற்றத்தாழ்வான சமநிலை சிந்தனையற்ற ஒரு போக்கு.

இறைநேசர்கள் என்பவர்கள் அல்லாஹ்வின் புறத்திலிருந்து அனுப்பப்பட்டு தேர்வு செய்யப்பட்ட நபிமார்கள் அல்லர். இறைப் பொருத்தத்தை பெற்ற இறைநம்பிக்கையாளர்களில் சிறப்பான பண்பு நலன்களை பெற்ற நல்லடியார்கள். அவர்களை தர்காக்களிலோ, புகழ்ந்து பாடப்படும் மவ்லிதுகளிலோ மட்டுப்படுத்தி விட முடியாது. மறுமைநாள் வரை இறைநேசர்கள் வருகை புரிவார்கள் நம்முடன் நிகழ் காலங்களில் வாழ்ந்தும், மறைந்தும் இருக்கிறார்கள்.

இறைத்தூதர் ﷺ அவர்கள் சொன்னார்கள்: சுவனவாசிகள் சுவனத்தில் பிரவேசிக்கும் பொழுது அவர்களின் தோழர்கள் யார் உலகத்திலே நலன்களோடு அவர்களுடன் இருந்தார்களோ அவர்களை அங்கு காணாத பொழுது அவர்களைப்பற்றி கண்ணியத்திற்குரிய ரப்பிடத்தில், ரப்பே! எங்களுடன் நோன்பு நோற்று தொழுத எங்களது சகோதரர்களை நாங்கள் பார்க்க முடியவில்லையே என்று வினவுவார்கள். அல்லாஹ் கூறுவான்: நீங்கள் நரகத்திற்குச் சென்று யாருடைய மனதில் கடுகளவு இறை நம்பிக்கை இருக்குமோ அவர்களை இங்கு அழைத்து வாருங்கள். (நூல்: அஸ்ஸில்ஸிலதுஸ் ஸஹீஹா 3054, ஸஹீஹுல் புகாரீ & முஸ்லிம்)

இமாம் ஹஸனுல் பஸரி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் இதற்கு விளக்கம் அளிக்கிறார்கள்: இறைநம்பிக்கையாளர்களான நண்பர்களை அதிகப்படுத்தி கொள்ளுங்கள் அவர்கள் மறுமையில் சிபாரிசு செய்வார்கள்.

قال ﷺ: إن أهل الجنة إذا دخلوا الجنة ولم يجدوا أصحابهم الذين كانوا معهم على خير

في الدنيا فإنهم يسألون عنهم رب العزة ويقولون :يا رب ! لنا إخوان كانوا يصلون معنا ويصومون معنا لم نراهم !! فيقول الله جل و علا : اذهبوا للنار وأخرجوا من كان في قلبه مثقال ذرة من إيمان. (السلسلة الصحيحة : (4503))

قال الحسن البصري رحمه الله: استكثروا من الأصدقاء المؤمنين فإن لهم شفاعة يوم القيامة.

ஆக இறை நேசர்களை நாம் முறையாக நேசிப்பது உடன் திருக்குர் ஆனில் நமக்கு தெளிவுபடுத்தப்பட்ட அவர்களின் பண்பு நலன்களை அடையாளம் காண்பதும் அதன்பால் மக்களை அழைப்பதும் இன்றி அமையாத ஒன்று.

இதோ திருக்குர்ஆன் கூறும் இறைநேசர்களின் அடையாளங்கள்:

1. பொறுமையாளர்கள்
2. உண்மையாளர்கள்
3. இறை கட்டளைகளுக்கு கீழ்ப்படிபவர்களாகவும்
4. (இறைவழியில் தாராளமாகச்) செலவழிப்பவர்கள்
5. பின்னிரவு நேரங்களில் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பிற்காக இறைஞ்சுபவர்கள்.

பின்னிரவு நேரங்களில் (தஹஜ்ஜுத்) அல்லாஹ்விடத்தில் இறைஞ்சி பாவ மன்னிப்பு கேட்பது மிகச்சிறந்த இபாதத்தாக மார்க்கத்தில் வலியுறுத்தி சொல்லப்பட்டிருக்கிறது.

அதைக் கீழ்க்காணும் திருக்குர்ஆன் வசனங்களில் நாம் தெரிந்து கொள்ளலாம். இறைநேசர்கள் இறைநம்பிக்கையாளர்களுடைய அடையாளங்களில், பண்புகளில் ஒன்றுதான் பின்னிரவு நேரங்களில் அல்லாஹ்விடத்தில் பாவ மன்னிப்பு கேட்பது. எனவே, பின்னிரவு நேரங்களில் அல்லாஹ்வின் பொருத்தத்தை அடைந்து கொள்வதற்காக நமது பிழைகளையும், பாவங்களையும் அல்லாஹ்விடத்தில் இறைஞ்சி, இறைவழியில் செலவு செய்து, இறைக் கட்டளைகளுக்கு கீழ்ப்படிந்து, உண்மையாளர்களாகவும், பொறுமையாளர்களாகவும் இருக்கும் இறைநேசர்களில் நம்மை ஆக்கி அருள்புரிவானாக!

اَلصّٰبِرِيْنَ وَالصّٰدِقِيْنَ وَالْقٰنِتِيْنَ وَالْمُنْفِقِيْنَ وَالْمُسْتَغْفِرِيْنَ بِالْاَسْحَارِ

இவர்கள் பொறுமையாளர்களாகவும், உண்மையாளர்களாகவும், கீழ்ப்படிபவர்களாகவும் மற்றும் (இறைவழியில் தாராளமாகச்) செலவழிப்பவர்களாகவும் இருப்பதுடன் பின்னிரவு நேரங்களில் அல்லாஹ்விடம் பாவமன்னிப்பிற்காக இறைஞ்சுபவர்களாகவும் இருக்கிறார்கள். *(அல்குர்ஆன் 3:17)*

மத்ஹபுகளின் முன் சென்ற சத்திய இமாம்களும் பின் வந்த மத்ஹபுகளின் பெயர் தாங்கிய அசத்தியவாதிகளும்

சித்தாந்தங்கள், கொள்கை கோட்பாடுகள் உருவாகிய பின்பு கொஞ்சம் கொஞ்சமாக பிற்காலத்தில் தோன்றும் அதே சித்தாந்தத்தை பேசக்கூடிய சிலர்களால் அவைகள் வேறுபட்ட கோணத்தில் மாற்றி அமைக்கப்படும், சீர்குலைக்கப்படும்.

இது அரசியல், பொருளாதாரம் வணிகம், அறிவியல், போன்ற துறைகளுக்கு வேண்டுமென்றால் பொருத்தமான ஒன்றாக, இயல்பான ஒன்றாக அமையும், ஆனால் மார்க்கத்தைப் பற்றிப் பேசக்கூடிய கொள்கைக் கோட்பாடுகள் என்பது சீர்குழையாமல், மாற்றி அமைக்கப் படாமல் தூயவடிவில் மாசு அடையாமல் இருந்தால்தான் அவைகள் இஸ்லாமியக் கொள்கைகளாக தொடர்ந்து நிலைக்க முடியும்.

ஸஹாபாக்கள் இறைத்தூதர் ﷺ அவர்களை நன்கு புரிந்து, இறைச் செய்தியான வஹியின் பின்னணிகளையும் காலச் சூழ்நிலைகளையும் தெளிவாக விளங்கி வைத்திருந்தார்கள், அவர்கள் சென்ற அடிச்சுவடு களைப் பின்பற்றி வந்த அவர்களின் மாணவர்களாகிய தாபியீன்களின் காலகட்டங்களில் இஸ்லாமிய கொள்கைகள் மிகப்பெரிய சவாலை சந்தித்து, பல வழிகெட்ட பிரிவுகளும்

தோன்றியது இந்த சூழ்நிலையில் மார்க்கத்தை (உசூல்கள் என்ற (அகீதா - عقيدة) இஸ்லாமிய கொள்கைகள், ஃபுரூஆதுகள் (فقه) இஸ்லாமிய கிளை சட்டங்கள்) முறையாக பாதுகாப்பதற்கு அந்தக் காலகட்டத்தில் தோன்றிய பல அறிஞர்கள் தங்களது முழு முயற்சியையும்

எடுத்து இஸ்லாமிய கொள்கைகளை, மார்க்க கிளை சட்டங்களை ஆவணப்படுத்தினார்கள், புத்தக வடிவில் கொண்டு வந்தார்கள்,

காலப்போக்கில் பின் வந்த சில அறிஞர்கள் தங்களது ஆசிரியர்களான மத்ஹபுகளின்

(Fiqh School of thoughts- மார்க்கசட்ட சிந்தனை பள்ளிகள்) இமாம்களின் கொள்கைகள் கோட்பாடுகளை தங்களுடைய சுய புரியுதல் களினால், சுய சிந்தனைகளால் மாற்றி அமைத்தனர் இதுவே பிறகு மத்ஹபுகள் தேவை இல்லை என்ற சிந்தனைகளை முன்னோக்குவதற்கு காரணமாக அமைந்தது,

நேரடியாக மார்க்கத்தை குர்ஆன் ஸுன்னாவில் இருந்து விளங்குவோம் இஜ்மாஃ,கியாஸ் தேவை இல்லை என்ற முயற்சியில்

நான்கு மத்ஹபுகள் தேவையில்லை என்று சொன்னவர்கள் ஐந்தாவது மத்ஹபை உருவாக்கி இன்று பல குழுக்களாக பிரிந்து நிற்கின்றனர், மத்ஹபுகளின் பெயர்களில் அரங்கேற்றப்படும் மார்க்கத்திற்கு புறம்பான விடயங்கள் எந்த அளவுக்கு கண்டிக்கப்பட வேண்டுமோ அதே போன்று மத்ஹபுகள் தேவையில்லை என்ற வாதத்தின் அடிப்படையில் மார்க்கத்திற்கு புறம்பாக செய்யப்படுகிற பல விடயங்களும் கண்டிக்கப்பட வேண்டும்.

குர்ஆன் ஸுன்னாவிற்கு நெருக்கமான இமாம்களின் ஆய்வுகளான இஜ்திஹாதுகளை ஓர் அளவுகோலாக வைத்து பின்பற்றுவது தவறு இல்லை.

ஆனால், தங்களது மத்ஹபுகளின் வழிமுறைதான் சரி மற்றவர்கள் வழிமுறை வழிகேடு என்று நினைப்பது ஆரோக்கியமான விடயம் அல்ல.

தங்களுடைய ஆய்வு சத்தியத்திற்கு நெருக்கமானது என்று நினைப்பதே உகந்தது (المذهب الاقرب الى السنة)

சங்கையான இமாம்களான அபூ ஹனீஃபா, மாலிக், ஷாஃபிஈ, அஹ்மத் ரஹிமஹுமுல்லாஹ் போன்றோர் தங்களுக்கென்று எந்த ஒரு தனிப்பட்ட கொள்கைகளையும் இஸ்லாத்திற்கு மாறுபட்ட வழிமுறைகளையும் தங்களுக்காக அவர்கள் அமைத்து அதை மற்றவர்கள் பின்பற்றச் சொல்லவில்லை.

இன்னும் தெளிவாகச் சொன்னால் அவர்களின் காலங்களில் தங்களை குறிப்பிட்ட மத்ஹபுகளின் பெயர்களில் அவர்கள் அழைத்து கொண்டதில்லை, பின்வந்த அறிஞர் பெருமக்கள் அந்தந்த இமாம்களின் மார்க்க சட்ட ரீதியான வழிமுறைகளை, சட்டம் இயற்றப்படுகின்ற விதிமுறைகளை மத்ஹபுகளாக தோற்றுவித்தனர்.

காரணம் அவர்கள் காலத்து வழிகெட்ட பிரிவினர்களில் இருந்து தங்களை நேரான பாதையில் பயணிக்கக் கூடிய அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையை சேர்த்தவர்கள் என்ற அடையாளத்தை காட்டுவதற்காக தங்களின் பெயர்களுக்கு பின்பு ஹனஃபி, ஷாஃபிஈ, மாலிக்கி, ஹம்பலி என்று இட்டுக் கொண்டார்கள்.

மார்க்க கிளை சட்டங்களில் தங்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், இஸ்லாமிய கொள்கை சட்டங்களில்(அகீதா) அனைவரும் ஒத்த கருத்தைக் கொண்டிருந்தனர், அதுவே அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கைகளாக தோன்றியது.

இந்த அழகான கட்டமைப்பை உடைப்பதற்காக ஷீஆக்களும் அவர்களின் சீடர்களான பித்அதுவாதிகளான, பரேல்விகள் போலி ஸுன்னத் ஜமாஅதை கட்டமைத்து உண்மையான அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅதாக இன்று மக்கள் மன்றத்திலே காட்டிக் கொண்டு தங்களின் வழிகேடான கொள்கைகளை பரப்பி கொண்டிருக்கிறார்கள்.

அதன் விளைவாக சங்கையான இமாம்களின் பெயரில் மார்க்கம் கூறியதாக பல அணாச்சாரங்களை கட்டவிழ்த்து விட்டனர். பொதுமக்கள் இவர்களின் வழிகேட்டிற்கு பலியாகி இன்று இதுவே சரியான இஸ்லாமிய கொள்கை என்ற விதத்தில் மார்க்கமாக, அவைகள் தான் மத்ஹபுகளாக கல்வி ஞானம் இல்லாத பொது மக்களிடம் பிரச்சாரம் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இதற்கு நல்ல உதாரணம் தான் அரபு மொழியில் ஆய்வு புத்தகமாக பல்கலைக்கழகத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஒரு நூலை அறிமுகம் செய்ய விரும்புகிறேன், அரபு மொழி தெரிந்த அறிஞர்கள் இதை தங்களது ஆய்வுக்கு கண்டிப்பாக பயன்படுத்த வேண்டும்.

அஸீஸா பின்தி முபாரக் அல்கல்பானி என்ற இஸ்லாமிய பெண் ஆய்வாளர்

المسائلُ العَقَديَّة التي خالف فيها بعضُ فُقَهاء الشافعيَّة أئمَّة المذهب

"ஷாஃபிஈ மத்ஹபின் சிலர் இஸ்லாமிய கொள்கை விடயத்தில் தங்களது இமாம்களுக்கே மாறு செய்தார்கள்"என்ற தலைப்பில் ஒரு ஆய்வு புத்தகத்தை வெளியிட்டிருக்கிறார்.

நபிமார்கள்,இறைநேசர்கள், வலிமார்களிடம் (அல்லாஹ்விடம் கேட்பது போன்று) துஆ கேட்பது (இஸ்திகாஸா,வஸீலா) என்று ஆரம்பித்து மார்க கிளை சட்டங்களில் அவசியமாக்கப்படாத சில விடயங்களை வாஜிபுகளாக ஆக்கிய விடயங்கள் வரை துறை சார்ந்த நிபுணர்களின் நூல்களை மேற்கோள் காட்டி மிக நேர்த்தியான முறையில் இந்த புத்தகத்தை எழுதி இருக்கிறார்.

கபர்ஸ்தானில்

திருக்குர்ஆனை ஓதலாமா?

இன்று சடங்கு, சம்பிரதாயம், ஊர் வழக்கு, குடும்ப வழக்கு என்ற வாதத்தை முன் வைத்து நமது சமூகத்தில் பல மூட நம்பிக்கைகள் மார்க்க லேபிளில் வலம் வருகின்றன,

இதில் ஆலிம், உலமாக்கள்,இயக்க சகோதரர்கள் என்று யாரும் விதிவிலக்கு இல்லாமல் அனைவரும் தினமும் கடந்துசெல்லும் அனாச்சாரங்கள் பல.

மார்க்கத்தில் தெளிவாகச் சொல்லப்பட்டு இருந்தாலும் நமக்கு எந்த அக்கறையும் இல்லை,ஊருடன் ஒத்துப்போக வேண்டும் என்ற வாதம் மிகவும் வலுவாக இன்று நமது சமூகத்தில் முன் வைக்கப்படுகிறது

قَالُوْا بَلْ وَجَدْنَا اٰبَآءَنَا كَذٰلِكَ يَفْعَلُوْنَ

அதற்கவர்கள் "இல்லை. எனினும் எங்கள் மூதாதைகள் இவ்வாறே (ஆராதனை) செய்துகொண்டிருக்க நாங்கள் கண்டோம் (ஆகவே, நாங்களும் அவைகளை ஆராதனை செய்கிறோம்)" என்றார்கள்.

(அல்குர்ஆன் 26:74)

மேல் காணும் வசனத்தில் மூட நம்பிக்கைகளை தங்களது சமூக வழக்காக ஆக்கி கொண்ட அரபு குறைஷிகளை நோக்கி இறைத்தூதர் ﷺ அவர்கள் இறை அழைப்பு பணி செய்யும் பொழுது எங்கள் மூதாதையர்கள் எதை செய்தார்களோ அதையே நாங்கள் மார்க்கமாக பெருவோம் என்று சொன்ன வார்த்தைகள் நமக்கு நினைவூட்டுகிறது.

இன்றும் நம்மில் மார்க்கம் தெளிவாகச் சொல்லப் பட்ட பின்பும்

"ஊர் வழக்கு " என்ற இதே கருத்தைதான் சமூகம் முன்வைக்கிறது .

பின் வரும் நபிமொழியில், "மார்க்கத்தில் புதிதாக புகுத்தப்பட்ட விடயங்கள் மறுக்கப்பட வேண்டியவையாகும்" என்ற செய்தியை நாம் ஆயிஷா ரளியல்லாஹுு அன்ஹா அவர்களின் ஊடாக நாம் ஆதாரப்பூர்வமான நபிமொழியாக ஸஹீஹுுல் புகாரீயில் பெறுகிறோம்

مَن أَحْدَثَ في أَمْرِنَا هذا ما ليسَ فِيهِ، فَهو رَدٌّ

الراوي : عائشة أم المؤمنين | المحدث : البخاري | المصدر : صحيح البخاري

الصفحة أو الرقم : 7962 | أحاديث مشابهة | خلاصة حكم المحدث : [صحيح

குர்ஆன் ஸுுன்னாவில் ஆதாரங்கள் தெளிவாக கூறப்பட்டிருந்தாலும் சங்கையான மத்ஹபுகளை முன்வைத்து சிலர் தவறான புரிதல்களை கொண்டு அனாச்சாரங்களை மார்க்கமாக மக்களுக்கு மத்தியில் பரப்ப முயற்சி செய்கிறார்கள் மக்களே உஷார்!

குறிப்பாக ஹனஃபி மத்ஹபை முன்வைத்து மண்ணறையில் மையித்தை ஸியாரத் செய்யும்பொழுது திருக் குர்ஆன் ஓதலாம் (ஸுூரா அல்ஃபாதிஹா, யாஸீன்) அதனூடாக ஈஸால் தவாப் (நன்மையே எத்தி வைத்தல்) செய்யலாம் என்ற கருத்து வலுவாக சிலர்களால் முன் வைக்கப்படுகிறது.

மரணத்தவர்களுக்காக திருக்குர்ஆனை, தானே ஓதி (இமாம்களை அழைத்து வந்து ஓதச் சொல்வது அல்ல) அவர்களுக்கு நன்மையை சேர்த்து வைப்பது பற்றி கண்ணியமான நான்கு மத்ஹபுகளின் இமாம்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன.

இமாம் மாலிக் ரஹிமஹுுல்லாஹ் அவர்களைத் தவிர ஏனைய இமாம்களான அபூ ஹனீபா, ஷாஃபிஈ, இமாம் அஹ்மத் ரஹிமஹுுமுல்லாஹ் அனைவரும் மரணித்த ஒரு இறை நம்பிக்கையாளருக்காக திருக்குரான் ஓதப்பட்டு நன்மைகள் எத்தி வைக்கப் படுவது என்பது மார்க்கத்தில் இல்லை அதற்கு ஆதாரங்களும் மிகவும் குறைவு என்று கூறுகின்றனர்.

ஹனஃபி மத்ஹபின் இமாமான முல்லா அலீ அல்காரி அல்ஹனஃபி ரஹிமஹுுல்லாஹ் "அல்ஃபிக்ஹுுல் அக்பர்", என்ற புத்தகத்தில் 511 ஆம் பக்கத்தில் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

மண்ணறைகளில் திருக்குர்ஆனை ஓதுவது இமாம் அபூஹனீபா, இமாம் அஹ்மத் அவர்கள் இடத்தில் வெறுக்கப்பட்ட ஒன்றாகும், (தடைசெய்யப்பட்ட ஒன்று) காரணம் மார்க்கத்தில் நூதனமாக புகுத்தப்பட்டு நபியவர்களால் அங்கீகரிக்கப்படாத ஒன்றாகும்.

(ஒரு அறிவிப்பில் ஓதுவது கூடாது என்றும்-வேறொரு அறிவிப்பில் (தஃபன்) அடக்கப்படும் போது மட்டும் குர்ஆன் ஓதலாம் வேறு சந்தர்ப்பங்களில் மண்ணறைகளில் ஓதக்கூடாது என்றும் உள்ளது)

இதே கருத்தை இஹ்யா உலூமித்தீன் என்ற புத்தகத்தின் விரிவுரையாளர் மூன்றாம் பாகம் 285 வது பக்கத்தில் குறிப்பிடுகிறார்.

ஹனஃபி மத்ஹபின் ஃபத்வா

ஹனஃபி மத்ஹபின் இமாமான அல்பர்கவி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் தங்களது புத்தகமான "அத்தரீகா அல்முஹம்மதிய்யா", ல் மூன்றாம் பகுதியில் அசத்தியமான, பித்அத்தான விடயங்களில் மக்கள் நாடப்பட்ட நன்மைகுரிய விடயங்கள் என்று கருதி மும்முரமாக செயல்படுகிறார்கள்.

எந்த அளவுக்கு என்றால் இறந்த நாள் அன்றும் அதற்கடுத்த நாட்களும் உணவு தயாரித்து வழங்குவது, மையத்திற்காக காசுகளைக் கொடுத்து ஓதவைப்பது தஸ்பீஹ்கள் செய்ய வைப்பது போன்ற விடயங்கள் மறுக்கப்பட வேண்டிய பித்அத்துகளாகும்.

இவ்வாறு ஓதுவதற்கு பணம் வாங்குவதும் பணம் கொடுப்பதும் ஹராமாகும், உலக ஆதாயத்திற்காக ஓதுவது பாவமான காரியமாகும்,

ஸஹீஹுல் புகாரீ நபிமொழி கிரந்தத்தின் விரிவுரையாளர் அல்லாமா பதுருதீன் அல்அய்னி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் உலக ஆதாயத்திற்காக ஓதுவது தடுக்கப்பட்ட ஒன்றாகும், இதற்காக பணம் வழங்குபவர் வாங்குபவர் இரண்டு பேரும் குற்றவாளிகளாவர்.

ஹனஃபி மத்ஹபின் மிகப் பிரபலமான புத்தகமான அல்ஹிதாயாவின் விரிவுரையாளர் தாஜுஷ் ஷரீஆ அவர்கள் பணத்தை பெற்றுக் கொண்டு ஓதுவது என்பது

அந்த ஓதும் நன்மையாகிறது ஓதுபவருக்ககோ மையத்திற்கோ போய் சேராது.

مذهب أبي حنيفة:

قال في كتاب الفقه الأكبر للإمام ملا علي القاري الحنفي (ص 511) : "ثم القراءة عند القبور مكروهة عند أبي حنيفة ومالك وأحمد رحمهم الله في رواية. لأنه محدث لم ترد به السنة" وكذلك قال شارح الإحياء (ج 3 ص 582) (1) 1.

فتوى المذهب الحنفي: قال الإمام البركوي في كتابه (الطريقة المحمدية) في الفصل الثالث في أمور مبتدعة وباطلة أكب الناس عليها على ظن أنها قرب مقصودة ... إلى أن قال: "ومنها الوصية من الميت باتخاذ الطعام والضيافة يوم موته أو بعده ولإعطاء دراهم لمن يتلو القرآن لروحه ويسبح أو يهلل له، وكلها بدع منكرة باطلة والمأخوذ منها حرام للآخذ وهو عاص بالتلاوة والذكر لأجل الدنيا" انتهى ملخصا. وقال الإمام العلامة العيني شارح البخاري: "ويمنع القاريء للدنيا، والآخذ والمعطى آثمان" وقال تاج الشريعة في (شرح الهداية) من كتب الحنفية: "إن القراءة بالأجرة لا يصل ثوابها لا للميت ولا للقاريء.

https://al-maktaba.org/book/10169/19

இவ்வளவு தெளிவாக மார்க்கத்தில் கூறப்பட்டு இருந்தும் மரணித்தவர்கள் வீட்டில் மையத்திற்கு பாத்திஹா ஓதுதல், மூன்றாம் நாள் ஏழாம் நாள் நாற்பதாம் நாள் வருடப் பாத்திஹா, ஜனாஸாவிற்கு பின் கபர்ஸ்தானிலிருந்து வெளிவந்த பின்பு கூட்டு துஆக்கள் இன்னும் எத்தனையோ சடங்கு சம்பிரதாயங்கள் என்ற பெயரில் இஸ்லாம் அவமதிக்கப்படுகிறது, பித்அதுகளும், அனாச்சாரங்களும் மதிப்பு மரியாதை களுடன் அரங்கேற்றப்படுகின்றன.

வாருங்கள் இந்த அனாச்சாரங்களை எடுத்துரைத்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தி ஸுன்னாவை பாதுகாத்து பித்அதை ஒழிப்போம்.

மார்க்க அறிஞர்களை சிறுமைப்படுத்துவது...

சமீபமாக எனது மீள் பதிவு ஒன்றை வலைதளத்தில் பகிர்ந்திருந்தேன் அது இமாம் இப்னு கஸீர் ரஹிமஹுல்லாஹ் அவர்களின் பிரபலமான தப்ஸீர் இப்னு கஸீர் குறித்த செய்தி, அந்த பதிவுக்கு கீழ் ஒரு சகோதரச் சிறுவர் இமாம் இப்னு கஸீர் யார் அல்லாஹ்வின் தூதரா?

அவர் தப்ஸீர் செய்தால் ஏற்றுக் கொள்ள வேண்டுமா? என்று சிறுமைப்படுத்தும் தோனியில் பேசி இருந்தார் நான் அவரின் பின்னோட்டத்திற்க்கு பதில் அளிக்காமல் கடந்துவிட்டேன்.

இமாம் இப்னு கஸீர் ரஹிமஹுல்லாஹ் ஷைஹுல் இஸ்லாம் இப்னுதைமியா ரஹிமஹுல்லாஹ் அவர்களின் மாணவர் குர்ஆன் ஸுன்னாவின் அடிப்படையில் தனது வாழ்க்கையை கழித்தவர் மார்க்க பணிக்காக தன் முழு வாழ்வையும் அர்ப்பணித்தவர்.

மிக கவலைக்குரிய விடயம் என்னவென்றால் தற்காலத்தில் இஸ்லாமிய விழிப்புணர்வுகள் நமது வாலிபர்களிடத்தில் அதிகமாக இருக்கிறது என்ற சந்தோஷத்தை விட புத்தக வாசிப்பு மிக குறைவாக இருக்கிறது என்ற கவலைக்குரிய விடயத்தை,கசப்பான உண்மையை நாம் ஏற்றுக்கொள்ள தான் வேண்டும்.

இயக்கங்கள் தங்களுக்கு புரோகிராமாக எதை தலையில் செலுத்திருக்கிறார்களோ அதை வேதவாக்காக கருதி அதையே தனது வாழ்வின் மூச்சாக எடுத்துக் கொள்ளும் பல பரிதாபத்திற்குரிய பெயர் தாங்கிய இஸ்லாமிய அழைப்பாளர்கள் இன்று சமூகத்திற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாகவே இருக்கிறார்கள்.

ஒரு சில இஸ்லாமிய இயக்கங்கள் வாசிப்பு வட்டங்களை வைத்துக்கொண்டு அவர்கள் எதை மார்க்கமாக விளங்கி இருக்கிறார்களோ அதை தங்களது குறுகிய பார்வையினால், அந்த சிறிய வட்டத்திற்குள்

தங்களது அழைப்பாளர்களை உருவாக்குகிறார்கள் இதன் விளைவு குர்ஆன் ஸுன்னாவை தன் வாழ்வில் உயிர் நாடியாக மதித்து அதற்காக பெரும் தியாகங்கள் செய்து பயணித்த பல அறிஞர் பெருமக்களை சில சிறார்கள் சிறுமைப்படுத்துவதும் மரியாதை குறைவாக பேசுவதும் சர்வ சாதாரணமாக அரங்கேறிக் கொண்டிருக்கிறது.

ஒருபுறம் இமாம்களின் கருத்துக்கள் என்று கூறிக்கொண்டு குர்ஆன் ஸுன்னாவிற்கு மாற்றமான பல பொய்யான தகவல்கள் மார்க்கமாக அரங்கேறிக் கொண்டிருக்கிறது இது எந்த அளவுக்கு வன்மையாக கண்டிக்கப்பட வேண்டுமோ அதே போன்று தான்

குர்ஆன் ஸுன்னாவை தெளிவாக சொல்லும் இமாம்களின் கருத்துக்களை மதிக்காமல் அவர்களை சிறுமைப்படுத்துதல் இழிவு படுத்துதல் என்பதும் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டிய விடயம்.

குர்ஆன் ஸுன்னாவை பின்பற்ற வேண்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை அதுதான் நாம் பல வருடங்களாக அழைப்பு பணியில் நமது அடிப்படைக் கொள்கையாக, ஓர் அளவுகோலாக வைத்துக் கொண்டு பயணிக்கிறோம், ஆனால் குர்ஆன் ஸுன்னாவை நமக்கு அல்லாஹ்வின் தூதர் அவர்கள் தங்களது தோழர்களுக்கு எந்த விதத்தில் போதித்தார்களோ சத்திய ஸஹாபாக்கள் அவர்களின் மாணவர்களான தாபியீன்கள் போன்ற சங்கையான இமாம்களின் வழிமுறைகளில் நாம் விளங்கவில்லை என்று சொன்னால் வழிகேடு நிச்சயமே!!

ஏதோ ஒரு சில மார்க்க அறிவை வைத்துக் கொண்டு தன்னை மிகப்பெரும் இமாமாக கருதும் ஒரு சில வழிகேடர்கள் சங்கையான நமது சான்றோர்களான இமாம்களை இழிவுபடுத்த தொடங்கினார்கள் இன்று அவர்கள் இழிவுபடுத்தப்பட்டு சமுதாயத்தில் மிகக் கேவலமாக பார்க்கப்படுகிறார்கள் அவர்கள் இந்த சமுதாயத்திற்கு கற்றுக் கொடுத்ததெல்லாம் வீணான தர்க்கங்களும் இஸ்லாமிய சமூகத்தில் ஒற்றுமையை சீர்குலைப்பதும் தான் வேற எதுவும் இல்லை.

இன்று பல குழுக்களாக பிரிந்து தங்களுக்குள் அடித்துக் கொண்டு குழாய் அடி சண்டை போட்டுக்கொண்டு ஒற்றுமையை இழந்து நிற்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம்,அங்கீகாரம் பெற்ற நபி மொழிகளை சந்தேகிப்பது, மறுப்பது மார்க்கத்தில் ஊர்ஜிதமாக சொல்லப்பட்ட கருத்துக்களை தங்கள் சிற்றறிவின் ஊடாக மாற்றி அமைப்பது போன்ற இழிவான செயல்களால் வழி கேட்டை நோக்கி

பயணித்துக் கொண்டிருக்கிறார்கள், அல்லாஹ் அவர்களுக்கு நேரான பாதையை காட்டி தருவானாக.

இமாம் இப்னு அஸாகிர் ரஹீமஹுல்லாஹ்

" அறிஞர்களின் மாமிசம் விஷம் தோய்கபட்டிருக்கிறது," என்று கூறி அறிஞர்களை இழிவுபடுத்தும் பொழுது அவர்கள் மாமிசத்தை புசிக்க நினைக்கும் கயவர்கள் விஷத்தால் மடிந்து விடுவார்கள் என்று எச்சரித்தது நினைவுக்கு வருகிறது.

ஒருமுறை இந்தியாவைச் சேர்ந்த அஷ்ஷைக் ஜியாவுர் ரஹ்மான் அல்ஆஷமி ரஹிமஹுல்லாஹ் (இவரின் ஹதீஸ் துறை சேவையின் காரணத்தினால் இவருக்கு ஸஊதி அரசாங்கம் ஸஊதி குடியுரிமை வழங்கியது என்பது குறிப்பிடத்தக்கது

"الجامع الكامل في الحديث الصحيح الشامل"

"அல்ஜாமிஃ அல்காமில் ஃபில் ஹதீஸ் அஷ்ஷஹீஹ் அஷ்ஷாமில் " என்ற பிரபலமான புத்தகத்தை எழுதியவர் பல புத்தகங்களுக்கு விளக்க உரைகளும் ஆய்வையும் செய்த ஒரு அறிஞர்.

அவர் மக்காவில் உள்ள சர்வதேச இஸ்லாமிய லீக் அமைப்பின் முக்கிய பொறுப்பில் இருந்த பொழுது அவருடைய நண்பர் எகிப்தைச் சேர்ந்த அஷ்ஷைக் அப்துல் ஹக்கீம் ஹம்மாதா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஒரு ஆச்சரியமான சம்பவத்தை கூறுகிறார்கள்.

எகிப்து நாட்டின் பிரபலமான அறிஞரான மஹ்மூத் அபூ ரய்யா என்பவர் நபி தோழரான ஸய்யதுனா அபூ ஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்களை இழிவுபடுத்தி அரபு மொழியில் ஒரு புத்தகம் எழுதி இருந்தார்,

"أضواء على السنة المحمدية"

"அழ்வா அலஸ் ஸுன்னா அல்முஹம்மதிய்யா"

أبو هريرة شيخ المضيرة

"அபூஹுரைரா ஷைஹுல் முலீரா" என்ற புத்தகங்களில் அபூ ஹுரைரா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் நபி அவர்களுடன் ஒரு வருடம் 9 மாதங்கள் மட்டுமே வாழ்ந்திருக்கிறார்.

ஆனால், மார்க்கத்தில் அதிகப்படியான நபிமொழிகளை இவர் அறிவித்திருக்கிறார் இது சாத்தியமானதா என்ற சந்தேகத்தை எழுப்பி சில நபித்தோழர்களை பரிகாசம் செய்திருக்கிறார்.

யமன் நாட்டைச் சேர்ந்த முஅல்லிமி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் அந்த காலத்திலே இவருக்கு எதிராக அல்அன்வாருல் காஷிபஃஆ

الأنوار الكاشفة لما في كتاب أضواء على السنة من الزلل والتضليل

என்ற புத்தகத்தை மறுப்பாக எழுதி இருப்பது இங்கு குறிப்பிடத்தக்க ஒன்று. ஆக மஹ்மூத் அபூ ரய்யா என்பவரை அப்துல் ஹக்கீம் ஹம்மாதா சந்திப்பதற்காக எகிப்து நாட்டிற்கு செல்கிறார் அவரின் குடும்பத்தினர் அவரை சந்திக்க விடாமல் தடுக்க முயல்கின்றனர் அவரோ சந்தித்து தான் செல்வேன் என்று பிடிவாதமாக சந்தித்து விடுகிறார்.

மூடப்பட்ட அறைக்குள் மஹ்மூத் அபூ ரய்யா (மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில்) இருந்தார் அவரின் முகம் நிலக்கரி போன்று கருத்துப் போய் இருந்தது கண்கள் வெளியே தொங்கிக் கொண்டிருந்தன பார்ப்பதற்கே பரிதாபமான ஒரு நிலையில் இருந்தார் சுவற்றைப் பார்த்துக் கொண்டு அபூஹுரைரா வந்து விட்டார் என்று புலம்பி கொண்டே இருந்தார்.

இந்த காட்சியை காண முடியாமல் அங்கிருந்து சென்று விட்டேன்.

நபித்தோழர்களை இழிவாக பேசும் நபர்களுக்கு உலகத்திலே அல்லாஹ் கொடுக்கும் தண்டனை தான் என்பதை நான் ஆழமாக உணர்ந்தேன் என்கிறார்.

இந்த சம்பவத்தை எனக்கு அறிவித்தார் நான் இதை ஆதாரத்துடன் குறிப்பிடுகிறேன் என்று சங்கிலி தொடரில் இந்த சம்பவத்தை அஷ்ஷைக் ஜியாவுர் ரஹ்மான் அல்ஆஷமி ரஹிமஹுல்லாஹ் தனது கையொப்பத்துடன் எழுதி இருக்கும் ஒரு பதிவு எனக்கு கிடைத்தது அதையும் இந்த பதிவின் கீழ் இணைத்திருக்கிறேன்.

அன்பானவர்களே நபித்தோழர்களை பரிகாசம் செய்வதும் மார்க்க அறிஞர்களை இழிவு படுத்துவதும் அபாயகரமான ஒன்று என்பதை புரிந்து கொள்ளுங்கள்!!!

பிரச்சனைகளை வஹியின் ஊடாக கையாளுதல்

இப்ராஹீம் நபி அவர்கள் இயல்பாக மக்கள் வணங்கிக் கொண்டிருந்த சிலைகளை வெறும் கல்லாகவும் மரக்கட்டையாகவும் பார்த்தார்கள் ஆனால் அவரின் சமூகத்தில் அவரைப் போன்று வாழ்ந்த வாலிபர்கள் தங்களின் பார்வையில் அந்த சிலைகள் சாதாரணமான கட்டைகளாகவோ கல்லாகவோ பார்க்கவில்லை நன்மையும் தீமையும் மனிதர்களுக்கு வழங்கும் பல பெயர்கள் கொண்ட இறைவனாக அதை கொண்டு அஞ்சுபவர்களாகவும் பயப்பட கூடியவர்களாகவும் அதை பார்த்தார்கள்!!

நாம் இன்று பார்க்கக்கூடிய வீணான கலாச்சாரங்கள் வெளிப்படையாக பிரமிக்க வைக்கும் தோற்றத்தை காணலாம் ஆனால் அதன் உள்றங்கத்தை தெளிவாக பார்க்கக்கூடிய ஒரு பார்வையை நீங்கள் கொண்டு இருந்தால் அதன் உண்மை நிலையை விளங்கிக் கொள்ளலாம்.

அதனால்தான் நபி இப்ராஹீம் அலைஹிஸ்ஸலாம் தனது தந்தையை பார்த்து இந்த சிலைகளையா இறைவனாக எடுத்துக் கொண்டீர்கள் ?

தந்தையே கேட்காத பார்க்காத உங்களுடைய தேவையை பூர்த்தி செய்யாத ஒன்றையா இறைவனாக நினைத்து வணங்குகிறீர்கள் ? என்று கேட்டார்கள் ஆனால் இப்ராஹீம் நபி அவர்களின் இந்த பேச்சு அவர்களை விழிக்க வைக்கவில்லை,

யார் இந்த சிலையை உடைத்தது என்று அவர்கள் கேட்கும் பொழுது இதோ இந்த பெரிய கடவுளிடம் அவைகள் பேசினால் அதிடமே கேட்டு தெரிந்துகொள்ளுங்கள் என்று கூறியது அவர்களின் பிரமிக்க வைக்கும் அறிவாற்றலை நமக்கு உணர்த்துகிறது.

அல்லாஹ் இதைப் பற்றி திருக்குர்ஆனில் கூறும் பொழுது:

قَالَ بَلْ فَعَلَه كَبِيْرُهُمْ هٰذَا فَسْـَٔلُوْهُمْ اِنْ كَانُوْا يَنْطِقُوْنَ

அதற்கவர் "இல்லை. இவற்றில் பெரிய சிலை இதோ இருக்கிறதே! இதுதான் செய்திருக்கலாம்! (உடைப்பட்ட) இவை பேசக்கூடியவையாக இருந்தால் அவைகளையே கேளுங்கள்" என்றார்.(அல்குர்ஆன் 21:63)

فَرَجَعُوْا اِلٰٓى اَنْـفُسِهِمْ فَقَالُوْۤا اِنَّكُمْ اَنْـتُمُ الظّٰلِمُوْنَ

அவர்கள் (இதற்குப் பதில் கூறமுடியாமல் நாணமுற்றுத்) தங்களுக்குள் (ஒருவர் மற்றவரை நோக்கி) "நிச்சயமாக நீங்கள்தான் (இவற்றைத் தெய்வமெனக் கூறி) அநியாயம் செய்து விட்டீர்கள்" என்று கூறிக் கொண்டார்கள். (அல்குர்ஆன் 21:64)

ثُمَّ نُكِسُوْا عَلٰى رُءُوْسِهِمْ لَـقَدْ عَلِمْتَ مَا هٰٓؤُلَاۤءِ يَنْطِقُوْنَ

பின்னர், அவர்கள் (வெட்கத்தால் சிறிது நேரம்) தலை குனிந்திருந்து (இப்ராஹீமை நோக்கி) "இவை பேசாது என்பதை நிச்சயமாக நீங்கள் அறிவீரே! (அவ்வாறிருக்க இவற்றைக் கேட்கும்படி எங்களிடம் எவ்வாறு கூறுகிறீர்?)" என்று கூறினார்கள். (அல்குர்ஆன் 21:65)

அவர்களுக்கு சிலை பேசாது என்று தெரியாமலா இருந்தது!? இதுதான் குழப்பங்களின் மொத்த பிரச்சனையும். மிகப்பெரிய வடிவில் அந்த குழப்பங்கள் காட்சியளிக்கும் மிகப்பெரியதாக தோற்றமளிக்கும்.

சில சமயம் நாமும் நமது சமூகத்தில் அருவருக்கத்தக்க ஓரினச் சேர்க்கை கலாச்சாரத்தை சிலர் சரி காண்பதும் அது தவறில்லை என்று சொல்வதும் நாம் பார்க்கின்றோம்.

அழகான முறையில் இந்தப் பாவங்கள் காட்டப்படுவதால் மக்களுக்கு இதன் குறைகள் தெரிவதில்லை ஆனால் ஒரு நம்பிக்கையாளர் தனது அல்லாஹ்விற்குரிய அடிமைத்தனத்தை முறையாக கொண்டிருப்பவர் அவருடன் இறைச் செய்தியின் விழிப்புணர்வும் இருந்தால் குழப்பங்களும் பாவங்களும் அழகான வடிவங்களில் காட்டப்பட்டாலும் அதன் உண்மையான தோற்றத்தை வஹியின் ஊடாக அறிந்து கொள்வார்.

எனவே ஒரு இஸ்லாமிய வாலிபர் வெளிப்படையாக தோன்றும் புதிது புதிதான குழப்பங்களை வஹியுடைய சிந்தனையால் (இறைச் செய்தியின் ஊடாக) அறிந்து கொள்ள வேண்டுமே தவிர அதை சமூகம் எவ்வாறு விளங்கி இருக்கிறது என்பதை கொண்டு நிறுத்திப் பார்க்கக் கூடாது. -அஷ்ஷைக் அஹ்மத் அஸ்ஸய்யது

ஸைய்யதுனா அலீ ரழியல்லாஹு அன்ஹும் விலாயத்தும்

"இறைத்தூதர் ﷺ அவர்களின் மறைவிற்கு பின்பு அலீ ரளியல்லாஹு அன்ஹு அவர்களுக்குத்தான் விலாயத்", இருக்கிறது தரீக்காக்களின் சங்கிலித்தொடர்

ஸெய்யதுனா அலீ அவர்களை மட்டும்தான் சென்றடைகிறது என்று ஷிஆக்களுக்கு தங்களது மறைமுகமான ஒத்துழைப்பை வழங்குகிறார்கள் சிலர்.

இதை புரிந்துகொள்ளாமல் சில உலமாக்களும் அலீ ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் தொடர்பில் வரும் சில நபிமொழிகளை மக்களிடத்திலே தவறாக கொண்டு சேர்க்கின்றனர்,இந்தக் கருத்தை பல பயான்களில் கூறியும் வருகின்றனர் இதன் உண்மை நிலை என்ன வாருங்கள் சற்று ஆய்வு செய்வோம்.

ஷீஆக்கள் தங்களது அரசியல் லாபத்திற்காக தவறாக மாற்றி அமைத்த நபிமொழிகள்

وروى الإمام مسلم في صحيحه عن زيد بن أرقم أنه قال: قام رسول الله صلى الله عليه وسلم يوما فينا خطيبا بماء يدعى خما بين مكة والمدينة، فحمد الله وأثنى عليه ووعظ وذكر ثم قال: أما بعد ألا أيها الناس، فإنما أنا بشر يوشك أن يأتي رسول ربي فأجيب، وإني تارك فيكم ثقلين، أولهما كتاب الله فيه الهدى والنور، فخذوا بكتاب الله واستمسكوا به - فحث على كتاب الله ورغب فيه- ثم قال: وأهل بيتي، أذكركم الله في أهل بيتي، أذكركم الله في أهل بيتي.

ஸஹீஹ் முஸ்லிம் கிரந்தத்தில் பதிவு செய்யப்பட்டிருக்கும் நபிமொழி ஜெய்து பின் அர்கம் அவர்கள் கூறுகிறார்கள்

அல்லாஹ்வின் தூதர் அவர்கள் ஒரு நாள் எங்களுக்கு மக்காவிற்கும் மதீனாவிற்கும் இடையில் இருக்கும் " கும் ",என்று சொல்லக்கூடிய ஒரு தண்ணீர் தடாகத்தில் உபதேசத்தை செய்கிறார்கள், அல்லாஹ்வைப் புகழ்ந்து தங்களது உபதேசத்தை ஆரம்பிக்கிறார்கள் ...

மக்களே! நான் மனிதனாக இருப்பதால் என்னிடத்தில் மிக விரைவில் இறை தூதுவர் (வானவர்)ஒருவர் வருவார் அவரின் அழைப்பை ஏற்றுக் கொள்ள வேண்டி இருக்கும், நான் உங்களுக்கு இரண்டு முக்கியமான விடயங்களை விட்டுச் செல்கிறேன்

முதலாவது அல்லாஹ்வின் வேதம் அதில் நேர்வழியும், பிரகாசமும் இருக்கிறது.

அல்லாஹ்வின் வேதத்தை எடுத்துக் கொள்ளுங்கள் அதைப் பற்றிப் பிடித்துக் கொள்ளுங்கள், அல்லாஹ்வின் வேதத்தைப் பற்றி ஆர்வம் ஊட்டினார்கள் பிறகு சொன்னார்கள் என்னுடைய குடும்பத்தினர்,

என்னுடைய குடும்பத்தினரைப் பற்றி அல்லாஹ்வை சாட்சியாக வைத்து உங்களிடத்தில் நினைவு கூறுகிறேன். என்னுடைய குடும்பத்தினரைப் பற்றி அல்லாஹ்வை சாட்சியாக வைத்து உங்களிடத்தில் நினைவு கூறுகிறேன். என்னுடைய குடும்பத்தினரைப் பற்றி அல்லாஹ்வை சாட்சியாக வைத்து உங்களிடத்தில் நினைவு கூறுகிறேன்,

(இவ்வாறு மூன்று தடவைகள் கூறினார்கள்)

இந்த அறிவிப்பு அங்கீகாரம் பெற்றதாக நமது உலமாக்கள் கூறுகின்றனர் ஷீஆக்கள் கூறும் வேறொரு நபி மொழி இட்டுக்கட்டப் பட்ட அந்தஸ்தில் இருக்கிறது என்று நமது அறிஞர்கள் கூறுகின்றனர்.

ஒரு முஸ்லிம் இறைத்தூதர் அவர்களை முழுமையாக நேசம் கொள்ளாமல் நம்பிக்கை கொள்ளாமல் ஒரு பரிபூரணமான முஃமினாக ஆக முடியாது என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை.

இறைத்தூதரை விரும்புவதும் அவர்கள் குடும்பத்தினரை நேசிப்பதும் நமக்கு மார்க்கம் கற்றுத்தந்த அடிப்படையான விடயங்களில் ஒன்று என்பதிலும் எந்த மாற்று கருத்தும் இல்லை.

அதனால்தான் நாம் நம்முடைய பிரார்த்தனைகளில் கூட இறை தூதுவர் அவர்கள் மீது ஸலவாத் சொல்லும்பொழுது அவர் குடும்பத்தினர் மீதும் அல்லாஹ்வுடைய அருள் இறங்குமாறு துவா செய்கிறோம்,

ஆனால் வழிகெட்ட இந்த ஷீஆக்கள் காலம் காலமாக இந்த நபிமொழியை தங்களுக்கு சாதகமாக பயன்படுத்துகிறார்கள் இறைத்தூதரின் மரணத்திற்கு பின்பு கலீஃபாவாக ஆகுவதற்கு முற்றிலும் தகுதியானவர் ஸெய்யதுனா அலீ இன்னும் அவர்களின் குடும்பத்தினர் மட்டுமே என்கின்றனர்,

இதைத்தான் அல்லாஹ்வுடைய தூதர் தங்களின் நபிமொழியில் அல்லாஹ்வுடைய வேதத்தையும் தனது குடும்பத்தையும் பற்றிபிடிக்குமாறு கூறினார்கள் என்று முறைகேடாக வியாக்கியானம் செய்து அதிகாரம் பெற்ற நபிமொழிகளில் வந்துள்ள சுவனத்தில் முதலில் பிரவேசிக்கும் தகுதி உடையவர் ஸெய்யதுனா அபூபக்கர், அடுத்ததாக உமர் உஸ்மான் ரளியல்லாஹு அன்ஹும் போன்ற தலைசிறந்த சஹாபாக்களை இழிவு படுத்துகிறார்கள், அன்னை ஆயிஷா,முஆவியா ரளியல்லாஹு அன்ஹும் அவர்களையும் தவறான வார்த்தைகளை பயன்படுத்தி கொச்சைப்படுத்துகிறார்கள்.

ஸெய்யதுனா அலீ அவர்கள் இறைத்தூதர் அவர்களின் காலத்திற்கு பின்பு இறைத்தூதரால் மிகவும் மதிக்கப்பட்ட இந்த மூன்று சஹாபாக்களுக்கு மிகவும் மதிப்பும் மரியாதையும் வழங்கி வந்தார்கள் என்பது வரலாற்றில் நிரூபிக்கப்பட்ட ஒன்று,

மேலும் ஒரு நபிமொழியில் அவர்களின் வழமையான இருட்டடிப்புகளையும் பொய்யான கருத்துக்களையும் மார்க்கமாக சொல்லி மக்களை குழப்பி கொண்டிருக்கிறார்கள்,

கீழ்க்காணும் நபிமொழியிலிருந்தும் ஸெய்யதுனா அலீ மட்டுமே ஆட்சியாளராக ஆக தகுதியானவர் என்று பிழையாக கூறுகின்றனர்

وأخرج الإمام أحمد وغيره عن بريدة قال: غزوت مع علي اليمن فرأيت منه جفوة فلما قدمت على رسول الله صلى الله عليه وسلم، ذكرت عليا فتنقصته فرأيت وجه النبي صلى الله عليه وسلم يتغير، فقال يا بريدة: ألست أولى بالمؤمنين من أنفسهم؟

قلت: بلى يا رسول الله، قال: من كنت مولاه فعلي مولاه. قال الأرناؤوط: إسناده صحيح على شرط الشيخين

இமாம் அஹ்மத் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் அறிவிக்கும் ஓர் அங்கீகாரம் பெற்ற நபிமொழி. புரைதா ரளியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் எமன் தேசத்தில் அலீயுடன் போர் புரிந்தேன்.

நான் அங்கு அவரிடம் முறைகேடை கண்டேன். நான் எப்பொழுது அல்லாஹ்வின் தூதர் இடத்தில் திரும்பி வந்தேனோ அலீயைப் பற்றி சற்று குறையை சொன்னேன் நபியவர்களின் முகம் சற்று மாறுவதை கண்டேன்,

புரைதாவே நான் இறைநம்பிக்கையாளர்களில் தலை சிறந்தவன் இல்லையா ? என்று கேட்டார்கள் நான் ஆம் என்று சொன்னேன்,

"நான் யாருக்கு எஜமானனாக இருக்கிறேனோ அவர்களுக்கு அலீயும் எஜமானராக இருக்கிறார் ",

இந்த நபிமொழியின் பின்னணி என்ன என்று பார்த்தால் ஹஜ்ஜுடைய காலகட்டத்திலே சில ஸஹாபாக்களுக்கு அல்லாஹ்வின் தூதுவர் ஒரு சில நாடுகளில் இறை அழைப்புப் பணியைச் செய்யுமாறு கட்டளையிட்டு அனுப்பியிருந்தார்கள் அங்கு ஒரு சில சஹாபாக்கள் ஸெய்யதுனா அலீ ரளியல்லாஹு அன்ஹு அவர்களை தவறாக புரிந்து கொண்டு நபியவர்கள் இடத்தில் தொடர்ந்து புகார் செய்து கொண்டிருந்தார்கள்,

தொடர்ந்து புகார் சொல்லப்பட்ட விடயத்தை கண்டுகொள்ளாமல் இருந்த இறைத்தூதர் அவர்கள் தக்க தருணத்தில் இந்த குற்றச்சாட்டுகளுக்கு விளக்கம் அளிக்கலாம் என்று கருதி தனது ஹஜ்ஜை முடித்தபின்பு துல்ஹிஜ்ஜா பதினெட்டு அன்று மக்காவிலிருந்து மதீனாவிற்கு செல்லும் இடையில் "கும் - خم "என்ற தண்ணீர் தடாகத்தில் தங்களது உபதேசத்தை வழங்குகிறார்கள்,

இறைத்தூதர் அவர்கள் ஸைய்யதுனா அலீ (ரளி) அவர்களை பற்றி தவறாக கூறாதீர்கள். அவர்கள் செய்தது சரி. அவர்கள் தங்களது உரிமைகளை எடுத்துக் கொண்டார்கள் என்று கூறி அலீ இன்னும் தங்களது குடும்பத்தினரை பற்றிய மதிப்பை மரியாதையை எனது

மரணத்திற்குப் பின்பும் நீங்கள் வழங்க வேண்டும் என்று சொல்லி அவர்களுக்கு ஜகாத் பணத்தில் இருந்து உண்பது ஹராம் என்ற கருத்தையும் குறிப்பிடுகிறார்கள். இது தான் அல்லாஹ்வின் தூதர் ஸைய்யதுனா அலீ இன்னும் தங்களின் குடும்பத்தினரை பற்றி கூறிய உண்மையான நிலைபாடு.

அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கண்ணோட்டத்தில் சஹாபாக்களும் ஷீஆக்கள் வழியில் பயணிக்கும் வழிகேடர்களும்

ஸைய்யதுனா அபூபக்ர், உமர், உஸ்மான், ஆயிஷா ரளியல்லாஹு அன்ஹும் போன்ற சஹாபாக்கள் பத்ரு யுத்தத்தில் கலந்து கொண்டவர்கள் பத்ரில் கலந்துகொண்ட சஹாபாக்களை இறைவன் மன்னித்து விட்டதாகவும் அவர்களுக்கு சுவனம் கட்டாயமாக்கப்பட்டு விட்டது என்ற பல அங்கீகாரம் மிக்க நபிமொழியையும் நாம் காணமுடியும்.

ஒவ்வொரு நபித்தோழருக்கும் தனி சிறப்புகள் இருக்கின்றன, செய்யதுனா அலீ அவர்களுக்கும் தனி சிறப்புகள் இருக்கின்றன என்பது நாம் அனைவரும் அறிந்திருக்கிறோம் ஆனால் அவர்களும் அவர்கள் குடும்பத்தாரும் மட்டுமே நேர்மையானவர்கள் அவர்கள்தான் முஸ்லிம்களை ஆட்சி செய்வதற்கு தகுதியானவர்கள் மற்றவர்கள் அனைவரும் தகுதியற்றவர்கள் என்று சொல்வது முறைகேடான ஒரு விடயமாகும்,

கீழ்காணும் இறைவசனத்தில் நபித்தோழர்களுக்கு அல்லாஹ் வழங்கி இருக்கக் கூடிய அங்கீகாரத்தை காண முடிகிறது.

لَقَدْ رَضِيَ اللّٰهُ عَنِ الْمُؤْمِنِيْنَ اِذْ يُبَايِعُوْنَكَ تَحْتَ الشَّجَرَةِ فَعَلِمَ مَا فِىْ قُلُوْبِهِمْ
فَاَنْزَلَ السَّكِيْنَةَ عَلَيْهِمْ وَاَثَابَهُمْ فَتْحًا قَرِيْبًا

அந்த மரத்தினடியில் உங்களிடம் கைகொடுத்து வாக்குறுதி செய்த நம்பிக்கையாளர்களைப் பற்றி நிச்சயமாக அல்லாஹ் திருப்தியடைந்தான். அவர்களின் உள்ளங்களிலிருந்த (உண்மையான தியாகத்)தை நன்கறிந்து, சாந்தியையும், ஆறுதலையும் அவர்கள் மீது சொரிந்தான். உடனடியான

ஒரு வெற்றியையும் (கைபர் என்னும் இடத்தில்) அவர்களுக்கு வெகுமதியாகக் கொடுத்தான். (அல்குர்ஆன் 48:18)

ஆக நபித்தோழர்களை தரம் தாழ்த்தி பேசுவது இழிவாக பேசுவது அவர்களை பரிகாசம் செய்வது விமர்சிப்பது திட்டுவது நம்மை வழிகேட்டில் கொண்டு போய் சேர்க்கும் வழிகேடு நம்மை நரகத்தில் தள்ளிவிடும்.

அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையில் நபித்தோழர்கள் அனைவரும் நீதமானவர்களே! பாவத்திலிருந்து பாதுகாக்கப்பட்டவர்கள் (**معصومون**) என்று கூறவில்லை. பாவம் செய்வதற்கு இடம்பாடு உள்ளவர்கள். ஆயினும், அவர்கள் நீதமானவர்கள் என்பதே நமது கொள்கை கோட்பாடு.

خَيْرُ النَّاسِ قَرْنِي ، ثُمَّ الَّذِينَ يَلُونَهُمْ ، ثُمَّ الَّذِينَ يَلُونَهُمْ (رواه البخاري-2562, ومسلم -2352)

நான் வாழும் இந்த நூற்றாண்டில் வாழும் மனிதர்களே மிகவும் சிறந்தவர்கள். இதனை அடுத்து அவர்களை அடுத்து வரும் நூற்றாண்டில் வாழும் மனிதர்கள். அதற்கு அடுத்து அவர்களை அடுத்து வரும் நூற்றாண்டில் வாழும் மனிதர்கள் என இறைத் தூதர் (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

(ஆதாரம்: புகாரீ, முஸ்லிம்)

வானவர்களிடம் உதவி கேட்கலாமா?

வழக்கமாக அசத்தியவாதிகளான பரேல்விகள் (பித்அத்திகள்) தங்களின் கொள்கைகளுக்கு எதிரான நச்சு கருத்தைகளை வலுப்படுத்துவதற்காக சில சந்தர்ப்பங்களில் அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தின் சிறந்த இமாம்களை அவர்களின் மன இச்சைகாக பலியாக்குவது வழக்கம், அப்பொழுதுதான் பொதுமக்கள் இவர்கள் பேச்சை மறுக்காமல் கேட்பார்கள் என்ற யுக்தி.

இதை அடியேன் தனது தொடர்களில் தொடர்ந்து எழுதி வருகிறேன், இது போன்ற அசத்திய கருத்துக்களுக்கு பல வருடங்களுக்கு முன்பாக எனது எழுத்துக்கள் ஊடாக வீடியோக்கள் மூலம் விளக்கங்கள் & மறுப்புகள் தெரிவித்தும் நான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள் என்று சொல்வதை போல் தங்கள் கருத்தில் நிலையாகவே இருந்து

வருகின்றனர். அல்லாஹ் அவர்களுக்கு மிக விரைவாக நேரான வழியை ஹிதாயத்தை காட்டுவானாக! நம்மை அதில் நிலைக்கச் செய்வானாக!

அதாவது இமாம் அஹ்மத் பின் ஹன்பல் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஹஜ் உடைய பயணத்தில் வழி தவறி சென்ற பின் வானவர்களிடம் வழி காண்பிக்குமாறு கேட்டு வழி பெற்றார்கள் என்ற கருத்தை முன்வைத்து வானவர்களிடம் உதவி கேட்கலாம் என்று ஸலஃபு உலமாக்கள் கூறியதாகவும் அதை ததஜவினர் மறுத்தார்கள் என்று கோர்த்து விடுகின்றனர். தவறான ஒரு வழிகாட்டுதலை சமூகத்திற்கு தர முயற்சி செய்திருக்கிறார். எனது சில மாணவர்களும் நண்பர்களும் கேட்டுக் கொண்ட பெயரில் அதற்குரிய மறுப்பை அடியேன் ஒரு வருடத்திற்கு முன்பாகவே வகுப்பாக எடுத்து யூட்யூபில் பதிவு செய்திருக்கிறேன், இதோ அதன் லிங்க் கொடுக்கப்பட்டிருக்கிறது முழுவதுமாக வகுப்பை கேட்கவும்.

அல்லாஹ்வின் தூதர் ﷺ அவர்கள் உதவி கேட்டால் அல்லாஹ்விடமே கேளுங்கள் என்று தெளிவாக நபி மொழிகளில் கூறி இருக்கிறார்கள்.

அல்லாஹ்விடம் மட்டுமே கேட்க வேண்டிய விடயங்களை அல்லாஹ் அல்லாத நல்லடியார்களிடம் வானவர்கள், ஜின்களிடம் கேட்பது இணைகற்பித்தலாகும்(ஷிர்க்).

குர்ஆன் ஹதீஸை முறைகேடாக பயன்படுத்தும் இவர்கள், சற்று வரம்பு மீறி இவர்களின் வாய்மையற்ற இந்தக் கொள்கைகளை வாழ்க்கை முழுவதும் தவ்ஹீதிலும் ஏகத்துவத்திலும் நிலைத்திருத்த உலமாக்களை ஆதாரமாக கூறி பலியாக்குவது வன்மையாக கண்டிக்கத்தக்கது.

மரணித்த நல்லடியார்களின் வஸீலா கேட்பது (ஊடாக துஆ கேட்பது) கூடுமா? கூடாதா?

மரணித்த நல்லடியார்களிடம் நேரடியாக துஆ கேட்கும் இஸ்திகாஸாவும் (استغاثة بغير الله) இவர்களின் பொருட்டால் அல்லது இதன் பொருட்டால் என்று துஆவில் கேட்கப்படும் வஸீலாவும் வேறு வேறு என்பதை முதலில் தெளிவாக புரிந்து கொள்ள வேண்டும்.

இதைப் புரிந்து கொள்ள சிரமப்படும் பரேல்விய நண்பர்களுக்கு சற்று திறந்த மனதுடன் அடியேன் கூறும் அறிவுரை, சத்தியத்தை விளங்க வேண்டும் என்ற எண்ணத்தை நீங்கள் ஆழமாக கொள்ளுங்கள். சத்தியம்

எதிர் கருத்தில் இருந்தாலும் ஏற்றுக் கொள்ளும் மனப்பான்மையை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

நாம் விளங்கிய கொள்கை நாம் படித்த கொள்கை நமது ஆசிரியர்கள் சொல்லிக் கொடுத்த கொள்கை எமது மதரஸா எனக்கு படித்துக் கொடுத்த கொள்கை என்று இல்லாமல் சத்தியத்தை பின்பற்ற வேண்டும் என்று எண்ணுபவர்கள் மட்டும் எனது தொடர்களை படிக்கவும் மற்றவர்கள் தாராளமாக தங்களின் பணிகளை மேற்கொள்ளுங்கள்.

அல்லாஹ் நம் அனைவருக்கும் சத்தியத்தை மரணம் வரை விளங்கி பின்பற்றும் பாக்கியத்தை வழங்கி விடுவானாக!

வஸீலா & தவஸ்ஸுல்

மரணித்த நல்லடியார்களின் ஊடாக கேட்பது பற்றி மார்க்க அறிஞர்களான உலமாக்கள் மூன்று கருத்துகளை முன் வைக்கின்றனர்.

முதலாவது

மரணித்த நல்லடியார்கள் யாராக இருந்தாலும் அவர்களின் "ஊடாக யா அல்லாஹ்! இந்த நல்லடியாரின் ஊடாக இந்த தேவையை நிறைவேற்றிக் கொடு" என்று கேட்பது போல் கேட்பது அறவே கூடாது. அது நபியவர்களாக இருந்தாலும் சரியே. இந்தக் கருத்தை முன்வைப்பவர்கள் இமாம் அபூ ஹனிஃபா மற்றும் அவர்களின் மாணவர்கள், இமாம் இப்னு தைமிய்யா ரஹிமஹுல்லாஹ் இந்த கருத்தைப் பற்றி தனது புத்தகமான

(قاعدة جليلة في التوسل والوسيلة كتاب من تأليف ابن تيمية يتحدث فيه عن التوسل وأحكامه من منظور أهل السنة والجماعة.)

"காயிதா ஜலீலா பீஃத் தவஸ்ஸுலி, வல் வஸீலா" இந்த புத்தகத்தில் இந்தக் கருத்தை சிறந்த கருத்தாகவும் ஏகத்துவத்திற்கு நெருக்கமான கருத்தாகவும், இறைத்தூதர் ஸல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை நேசிப்பதில் மார்க்கம் காட்டித் தந்த வரைமுறைகளுக்குள் இருக்கிறது என்று கூறுகிறார்கள்.

நபியவர்கள் காலத்திலும் அவர்கள் மரணத்துக்கு பின்பும் அவர்களின் ஆதாரப்பூர்வமான எந்த நபி மொழியும் நபியவர்களின் ஊடாக துவா

கேட்டதற்கு சான்றுகள் இல்லை இதற்கு பல மார்க்க அறிஞர்களின் கருத்துக்களை ஷைகுல் இஸ்லாம் அவர்கள் தங்கள் புத்தகத்தில் ஒன்று திரட்டி இருக்கிறார்கள்.

கூறும்பொழுது நபி அவர்களின் ஊடாக நமது அமல்களையும் இபாதத்துகளையும் மார்க்க விடயங்களையும் அமைத்துக் கொள்வது கூடுமா கூடாதா என்ற கேள்விக்கு அப்பால் அவர்களை முழுக்க முழுக்க பின்பற்றுவதும் அவர்கள் காட்டித் தந்த வழியில் நாம் பயணிப்பதும் நமக்கு அவசியம் இதுதான் இஸ்லாம் நமக்கு காட்டித் தந்த வழிமுறை இந்த முறையான வஸீலா ஜாயிஸ் (கூடும்) என்பது மட்டுமல்ல வாஜிபாகும்.

ஆனால், அவர்களின் வாழ்வில் வசிலா கூடும் உதாரணமாக நபியவர்களே எங்களுக்காக துஆ செய்யுங்கள், எவ்வாறு நாம் நல்லடியார்கள் என்று கருதும் உயிருடன் இருக்கும் பெரியார்களிடம் எனக்காக துஆ செய்யுங்கள் என்று கூறுகிறோம் இது கூடும்,அவர்களின் மரணத்திற்குப் பின்பு அவர்களின் ஊடாக துஆ கேட்பது கூடாது அது இணைவைத்தலை கற்பித்து விடும்.

இந்த கருத்தை அல்லாமா பின் பாஸ் ரஹிமஹுல்லாஹ் கூறுகிறார்கள்.

இரண்டாவது

மரணித்த நல்லடியார்கள் யாரின் ஊடாகவும் வசிலா கேட்கக் கூடாது ஆனால் இறைத்தூதர் ﷺ அவர்கள் ஊடாக வஸீலா கேட்கலாம் இந்த கருத்தை இமாம் இஸ் பின் அப்துஸ்ஸலாம் ரஹிமஹுல்லாஹ் கூறுகிறார்கள்.

மூன்றாவது

நபியவர்களை வைத்து துஆ கேட்பது மரணத்திற்கு பின்பு கூடும் என்ற கருத்து இருப்பதினால் ஏனைய இறை நேசர்கள் நல்லடியார்கள் அவர்களையும் துஆவில் வஸீலவாக தேடலாம்.

ஆனால், அல்லாஹ் ஒருவனே தீமையை தடுப்பதற்கு நன்மை வழங்குவதற்கும் சக்தி பெற்றவன் என்ற ஈமானுடன் நல்லடியார்களின் பொருட்டால் வசீலா கேட்கலாம் இந்தக் கருத்தை இமாம் ஷவ்கானி ரஹிமஹுல்லாஹ் தங்களது புத்தகத்தில் துஹ்பஃதுத் தாகிரீன் (تحفة الذاكرين) ல் கூறுகிறார்கள்.

இமாம் ஷாஃபிஈ ரஹிமஹுல்லாஹ் அவர்களும் இந்த கருத்தை கூறுகிறார்கள் என்று இமாம் தகியுத்தீன் அஸ்ஸுபுகி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் குறிப்பிடுகிறார்கள்.

திர்மிதியின் விளக்க உரையான துஹ்பஃதுல் அஹ்வதியில் (تحفة الأحوذي) அதன் ஆசிரியரான அஷ்ஷைக் முபாரக்பூரி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் இந்த கருத்து வேறுபாடுகளை கூறுகிறார்கள்.

ஆக நபியவர்களின் மரணத்துக்கு பின்பு அவர்களின் ஊடாக துஆ கேட்கலாம் என்று முன்வைக்கப்படும் மாற்றுக் கருத்தினரின் நபிமொழிகள் அனைத்தும் ஆதாரங்கள் அற்றதாகவும் இட்டுக்கட்டப் பட்ட நபிமொழிகளாகவும் இருக்கின்றன. அல்லாஹு அஃலம்.

ரஜப் மாதமும் மார்க்கம் நமக்கு காட்டித்தந்த வழிமுறைகளும்

ரஜப் மாதத்தில் மாத்திரம் குறிப்பான பிரத்தியேகமான வணக்கவழிபாடுகள் என்ற ஒன்று குறிப்பிடப்பட்டதாக வரவில்லை. அதிலே சில ஸலவாத்துக்கள் என்றும் பிரார்த்தனைகள் என்றும் வரக்கூடிய அறிவிப்புக்கள் அனைத்துமே ஆதாரபூர்வமற்றது. அவைகளைப் பற்றி கீழே விளக்கமாகப் பார்ப்போம்.

அல்ஹாபில் இப்னு ஹஜர் றஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறினார்கள்: “ரஜப் மாதத்தின் சிறப்பு சம்பந்தமாகவோ அல்லது அதிலே நோன்பு நோற்பது சம்பந்தமாகவோ அல்லது அவைகளில் குறிப்பிட்ட சில நோன்புகள் நோற்பது பற்றியோ அல்லது அதிலே குறிப்பிட்ட இரவில் நின்று வணங்குவது சம்பந்தமாகவோ எந்தவித ஆதாரபூர்வமான ஹதீஸ்களோ வரவில்லை. மேலும் “அல்ஹாபில் அபூ இஸ்மாஈல் அல்ஹரவி” அவர்களும் எனக்கு முன்னர் இதே நிலைப்பாட்டிலேயே இருந்தார்கள்.” (தப்ஈனுல் உஜுப் பிமா வரத பீ ஷஹ்ரி ரஜப் - இப்னு ஹஜ்ர் - பக்கம் 23)

இன்னும் கூறினார்கள்: ரஜப் மாத சிறப்பைப் பற்றியோ அல்லது அதில் நோன்பு நோற்பது பற்றியோ அல்லது அதில் சில நாட்கள் தெளிவாக நோன்பு நோற்பது பற்றி வரக்கூடிய ஹதீஸ்களை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்: ஒன்று பலவீனமானது மற்றையது இட்டுக்கட்டப்பட்டது. (தப்ஈனுல் உஜுப் பிமா வரத பீ ஷஹ்ரி ரஜப் ௫ இப்னு ஹஜ்ர் ௫ பக்கம் 23)

ரஜப் மாத துஆவும் அது பற்றிய தெளிவும்

ரஜப் மாதம் வந்து விட்டால் "அல்லாஹும்ம பாரிக் லனா பீ ரஜப வ ஷஃபான வபல்லிக்னா ரமளான"

"யா அல்லாஹ் ரஜபிலும், ஷஃபானிலும் எமக்கு பரக்கத் செய்வாயாக,

இன்னும் ரமழான் மாதத்தை அடைந்துகொள்ளும் பாக்கியத்தை தந்தருள்வாயாக!" என்று துஆ செய்யம் பழக்கம் அதிகமானவர்களிடம் இருக்கிறது. இந்த துஆவை நபி (ஸல்) கற்றுத்தந்ததாகவே பலரும் சொல்லவும் செய்கின்றனர்.

அப்படி ஒரு ஹதீஸ் இருப்பது உண்மையே. ஆனால் அந்த ஹதீஸை அறிவிக்கும் அறிவிப்பாளர்களில் இருவர் ஹதீஸ் துறை அறிஞர்களால் விமர்சிக்கப்பட்டவர்கள் நிராகரிக்கப்பட்டவர்கள் என்பதால் அந்த ஹதீஸ் மிகவும் பலகீனமானது என்பதே ஹதீஸ் துறை அறிஞர்களின் முடிவு.

எனவே இந்த துஆவை நபி கற்றுத் தந்த துஆ என்று கூறுவதும் அவ்வாறு நம்பி ஓதிவருவதும் தவறாகும்.

ஆனால் நமது சான்றோர்கள் ஆறு மாதத்திற்கு முன்பிருந்தே ரமளானை வரவேற்க ஆரம்பிப்பார்கள் ரமலானில் நல் அமல்கள் புரிய இறைவனிடத்திலே பிரார்த்தித்துக் கொள்வார்கள் என்று இமாம் இப்னு ரஜப் ஹம்பலி ரஹிமஹுல்லாஹ் தனது புத்தகமாகிய "லதாயிபிஃல் மஆரிபிஃல்" குறிப்பிடுகிறார்கள்

நபி கற்றுத்தந்த துஆ என்று இல்லாமல் நாம் அல்லாஹ்விடம் இந்த வார்த்தைகளைக் கொண்டு பிரார்த்திக்கிறோம் என்று யாராவது கூறினால் அப்படி துஆ கேட்பதில் தவறு ஏதும் இருப்பதாக கூறவோ அதனைத் தடுக்கவோ முடியாது.

சங்கையான இமாம்களின் கூற்றுக்கள்

ரஜப் மாத பிஃத்அத் (அனாச்சாரங்கள்) பற்றி :-

ரஜப் மாதத்தில் முதல் ஜுமுஆ இரவில் மஃரிபுக்கும் இஷாவிற்கும் இடையில் 12 ரக்அத் கொண்ட தொழுகையும், ஷஅபான் மாதத்தில் நடுப்பகுதி 15ஆவது இரவில் தொழும் 100ரக்அத்கள் கொண்ட தொழுகையும் இழிவாக்கப்பட்ட அனாச்சாரங்களாகும். இதை செய்வது குற்றம். இதை (தொழுகையை) தடுப்பது பொறுப்பாளர்கள் மீது கட்டாயமாகும்.-இமாம் ஷாபி(ரஹ்)

இஆனதுல் தாலிபீன் என்ற புத்தகத்தில் முதல் பாகத்தில் 27ம் பக்கம்.

"மக்களிடம் அறிமுகமான ஷஅபான் பிறை 15ல் (இவர்களால் உருவாக்கப்பட்ட 100 ரக்அத்கள்) தொழும் தொழுகையும் ஆஷுரா தினமன்று தொழும் தொழுகையும் மோசமான

அனாச்சாரங்களாகும். இது சம்பந்தமாக வரும் அனைத்து ஹதீஸ்களும் இட்டுக்கட்டப்பட்டவைகளாகும்.

-இமாம் ஷாஃபி(ரஹ்)

பத்ஹுல் முயீனில் முதல் பாகத்தில் 27ம் பக்கம்.

"பராஅத் இரவன்று பள்ளி வாசல்களிலும் வீதிகளிலும் கடை வீதிகளிலும் விளக்குகளை வைப்பது (பித்அத்) அனாச்சாரமாகும்.

-ஹனஃபி மத்ஹபின் பஹ்ருர் ராஹிக் என்ற புத்தகத்தில் 5ஆம் பாகத்தில் 232ஆம் பக்கம்.

அல்ஹாபிள் இப்னு ஹஜர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுகின்றார்கள்: ரஜப் மாதத்தின் சிறப்பு, அதில் நோன்பு நோற்றல், அதில் சில நாட்கள் குறிப்பாக நோன்பு நோற்றல், மேலும், அதில் மாத்திரம் குறிப்பாக்கப்பட்ட இரவுத்தொழுகை ஆகிய விடயங்களில் ஆதாரம் பிடிப்பதற்குத் தகுதியான எந்த ஸஹீஹான ஹதீஸும் இடம்பெறவில்லை.

மேலும், அவர் ரஜப் மாதம் குறித்து வரக்கூடிய ஹதீஸ்களை பலவீனமானவை மற்றும் இட்டுக்கட்டப்பட்டவை என்று இரண்டு வகைகளாகப் பிரித்துள்ளார். அதனடிப்படையில் அவர் ரஜப் மாதம் குறித்து வரக்கூடிய பதினொரு பலவீனமான ஹதீஸ்களையும் இட்டுக்கட்டப்பட்ட இருபத்தி ஒரு ஹதீஸ்களையும் ஒன்று சேர்த்திருக்கின்றார்.

ரஜப் மாதம் குறித்து வரக்கூடிய சில பொய்யான மற்றும் பலவீனமான ஹதீஸ்களை இங்கு குறிப்பிடுகின்றோம்.

1. சுவர்க்கத்தில் ஓர் ஆறு உண்டு, அதன் பெயர் ரஜபாகும். இது பலவீனமான ஹதீஸாகும்.

2. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ரஜப் மாதம் வந்தால், எனது இறைவனே எங்களுக்கு ரஜப் மற்றும் ஷஃபான் மாதத்தில் அபிவிருத்தி செய்வாயாக. இன்னும், எங்களுக்கு ரமழான் மாதத்தை அடையச்செய்வாயாக என்று கூறுவதாக இடம் பெற்ற ஹதீஸும் பலவீனமானதாகும்.

3. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ரமழானுக்குப் பின்பு ரஜப் மற்றும் ஷஃபானைத்தவிர வேறு தினங்களில் நோன்பு நோற்கவில்லை. இந்த ஹதீஸ் பலவீனமானதாகும்.

4. ரஜப் அல்லாஹ்வுடைய மாதமாகும். இந்த ஹதீஸ் பொய்யானதாகும்.

5. ஏனைய மாதங்களைவிட ரஜப் மாதத்திற்கு சிறப்பு உள்ளதாக வரும் ஹதீஸ் இட்டுக்கட்டப்பட்டதாகும்.

6. ரஜப் மாதத்தின் நாட்கள் ஆறாவது வானத்தின் வாசல்களில் எழுதப்பட்டுள்ளன. இந்த ஹதீஸின் அறிவிப்பாளர் வரிசையில் ஒரு பொய்யன் இருக்கின்றான்.

7. ரஜப் மாதத்தின் முதலாவது இரவில் தொழுவதின் சிறப்பு குறித்து வரக்கூடிய ஹதீஸ் இட்டுக்கட்டப்பட்டதாகும்.

8. ரஜப் மாதம் இருபத்தி ஏழாம் தினத்தில் நான் நபியாக அனுப்பப்பட்டேன். இதன் அறிவிப்பாளர் வரிசை மறுக்கப்பட்டதாகும்.

இன்னும், பல செய்திகள் இது குறித்து இடம்பெற்றுள்ளன. அவைகளில் ஒன்று கூட சரியான ஹதீஸாக இடம்பெறவில்லை.

அல்இஸ்ராஃ, அல்மிஃராஜ் - நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் இராப்பயணம் மற்றும் விண்ணுலகப் பயணம் - இடம்பெற்றது ரஜப் மாதத்திலா?

அபூஷாமா என்ற அறிஞர் அல்பாஇஸ் அலா இன்காரில் பிதஇ வல்ஹவாதிஸ் என்ற தன்னுடைய நூலில் இஸ்ரா ரஜப் மாதத்தில் நடைபெறவில்லை என்று குறிப்பிடுகின்றார்.

சில கதை கூறும் வழக்கமுடையவர்கள் இஸ்ரா ரஜப் மாதத்தில் நடைபெற்றது என்று கூறியிருக்கின்றார்கள். இது ஹதீஸ் கலை அறிஞர்களிடத்தில் பொய்யான ஒரு தகவலாகும்.

அபூ இஸ்ஹாக் அல்ஹர்பீ என்ற அறிஞர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விண்ணுலகப் பயணத்தை ரபீஉல் அவ்வல் இருபத்தி ஏழாம் தினத்தில் மேற்கொண்டதாகக் கூறியுள்ளார்.

இப்னு தைமிய்யா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் இஸ்ரா மிஃராஜுடைய இரவு குறித்து அது எம்மாத்தில் இடம்பெற்றது என்பதில் அறியப்பட்ட ஆதாரங்கள் இடம்பெறவில்லை என்று குறிப்பிட்டுள்ளார்கள்.

إن شهر رجب شهر عظيم ، من صام منه يوماً كتب الله له صوم ألف سنة

"நிச்சயமாக ரஜப் மாதம் ஒரு மகத்தான மாதமாகும். எவர் அதில் ஒரு நாள் நோன்பு நோற்பாரோ அவருக்கு ஆயிரம் வருடம் நோற்பு நோற்ற நன்மை கிடைக்கும்" இப்னுல் ஜவ்ஸி இது இட்டுக்கட்டப்பட்டது என குறிப்பிடுகிறார். (மவ்லூஆத் 2: 206, 207, தப்யீனுல் அஜப் பக்: 26)

நமது இந்த மார்க்கத்தில் இல்லாத ஒன்றை புதிதாக உருவாக்கினால் அது நிராகரிக்கப்படும் என்று இறைத்தூதர் (ஸல்) கூறினார்கள். (அறிவிப்பவர்: ஆயிஷா (ரளி) அவர்கள், நூல்: ஸஹீஹுல் புகாரீ-2697, முஸ்லிம்-3242)

اَلْيَوْمَ اَكْمَلْتُ لَكُمْ دِيْنَكُمْ وَاَتْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِيْ وَرَضِيْتُ لَكُمُ الْاِسْلَامَ دِيْنًا

இன்றைய தினம் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தை பரிபூர்ணமாக்கி விட்டேன்; மேலும் நான் உங்கள் மீது என் அருட்கொடையைப் பூர்த்தியாக்கி விட்டேன்; இன்னும் உங்களுக்காக நான் இஸ்லாம் மார்க்கத்தையே (இசைவானதாகத்) தேர்ந்தெடுத்துள்ளேன்;

(அல்குர்ஆன் 5:3)

பள்ளிவாசல்கள் பாதுகாக்கப்பட வேண்டுமா? வாருங்கள் மதர்ஸாக்களை பாதுகாப்போம்!!

இன்று மதரஸாக்கள் (மக்தப், அரபுக்கல்லூரிகள்) புறம்தள்ளப்படுகிறது, மார்க்க கல்வியை கற்பதற்கு இன்றைய முஸ்லிம்கள் முன்வரவில்லை, நூற்றுக்கணக்கான மாணவர்கள் ஓதி வந்த மதரஸாக்களில் இன்று விரல் விட்டு எண்ணக்கூடிய அளவிற்கு சொற்பமான எண்ணிக்கையில் மாணவர்கள் கல்வி பயின்று வருகிறார்கள் என்பது நாம் அனைவரும் அறிந்தவை....

பொதுவாக மதரஸாக்கள் மிக சிரமத்துடன் பொருளாதார நெருக்கடியில் செயல் பட்டு வந்தாலும் இறையருளால் அல்லாஹ் சிறப்பாக நடத்தி கொண்டிருக்கிறான்.

மதரஸாக்களின் அவசியம் ஏன்?

இதோ இந்த சம்பவத்தை தாங்கள் படித்தால் புரிந்து கொள்ளலாம்....

பாலஸ்தீனத்தில் அன்று பைத்துல் மக்திஸ் சிலுவை படையினரிடமிருந்து எவ்வாறு மீட்கப்பட்டது என்பதை நாம் அனைவரும் அறிவோம்!!

குருதிய இனத்தைச் சேர்ந்த மாவீரர் அய்யூபிய சாம்ராஜ்யத்தை நிறுவிய மாவீரர் ஸலாஹுத்தீன் அய்யூபி ரஹிமஹுல்லாஹ் இந்த மாபெரும் வெற்றிக்குரியவர் என்பதையும் நாம் அறிவோம் !!

நமது மாவீரரின் தந்தை நூருதீன் ஜங்கி ரஹிமஹுல்லாஹ் தனது வீர மகனான ஸலாஹுதீன் அய்யூபியை செதுக்கிய பொழுதே பிரம்மாண்டமான தேக்கு மரத்தாலான கலை நுணுக்கத்துடன் செய்யபட்ட மிம்பரையும் சற்று சேர்த்தே செதுக்கினார்.

இந்த பிரம்மாண்டமான கலை நுணுக்கத்துடைய மிம்பருக்கு பின் ஒரு பெரிய தத்துவம்,இரகசியமும் இருக்கிறது, சிலுவை படையினர்களால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்ட மஸ்ஜிதுல் அக்ஸா மீண்டும் மீட்டெடுக்கப்பட்டு முஸ்லிம்களிடம் கொடுக்கப்பட்டது.

அக்ஸா பள்ளிவாசலின் வெற்றிக்கு சுமார் 20 வருடங்களுக்கு முன்பே சிரியா நாட்டின் "ஹலப் ", என்ற நகரத்தில் தச்சு வேலையில் தேர்ச்சி பெற்றிருந்த சில கலைஞர்களை கொண்டு நேர்த்தியாக செதுக்கப்பட்டது அந்த பிரம்மாண்டமான மிம்பர்.

3568 மரக்கட்டைகளை கொண்டு மிம்பர் உருவாக்கப்பட்டது, ஒரு சிறிய ஆணியின் உதவி இன்றி தயாரிக்கப்பட்டது ஏன் தெரியுமா ?

இந்த மரக்கட்டைகளை போன்று இடைவெளி இல்லாமல் பிணைக்கப்பட்டு, இணைக்கப்பட்டு முஸ்லிம்கள் ஒற்றுமையாக இருந்து இந்த மஸ்ஜிதை மீட்க வேண்டும் என்ற தத்துவம் தான் இதன் பின்னணி.

அன்றிருந்தவர்கள் அய்யூபியின் தந்தையை கேலியும் கிண்டலும் செய்தார்கள், குதுசு நகரமே சிலுவை படையினரால் கைப்பற்றப் பட்டுள்ளது இவரோ அக்ஸா பள்ளிக்கு மிம்பர் செய்கிறாராம்!

மக்கள் ஒரு புறம் பரிகாசம் செய்து வந்தாலும் நூருதீன் அவர்களின் மனதில் இருந்த ஆழமான இறை நம்பிக்கையும் தூர நோக்கு சிந்தனையும் பள்ளியை மீட்டெடுப்பதற்கு முன்பே மிம்பரை செதுக்க வேண்டும் என்பதாக இருந்தது!

1168 ஆம் ஆண்டு மஸ்ஜிதுல் அக்ஸா மீட்டெடுக்கப்பட்டது, மஸ்ஜிதில் கிப்லாவின் திசையில் அழகான மிம்பர் பொருத்தப்பட்டது.

அர்ரவ்ழதைனி பீ ஃ அக்பாரி அத்தவ்லதைனி (الروضتين في اخبار دولتين) என்ற புத்தகத்தின் ஆசிரியரான இப்னு ஷாமா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் இந்த சம்பவங்களை எழுதும் பொழுது முக்கியமாக ஒரு கருத்தை பதிவு செய்கிறார்.

மன்னர் ஸலாஹுத்தீன் அய்யூபியும் அவரின் தந்தையும் பல வெற்றிகளை பெற்று எத்தனை வலிமையானகோட்டைகளையும், ராணுவ அறண்களையும் கட்டினார்களோ அதற்கு நிகராக மதரஸாக்களையும் பள்ளிவாசல்களையும் கட்டி எழுப்பினார்கள்.

காரணம் இந்த கோட்டையை பாதுகாக்க கூடிய மாவீரர்கள்

அல்லாஹ்வை முழுமையாக நம்பக்கூடிய ராணுவ வீரர்கள் இந்த மதரசாக்களில் இருந்து தான் வெளிவருவார்கள் என்பதை ஆழமாக நம்பினார்கள்.

இஸ்லாம் இவர்கள் காலத்தில் மீண்டும் புதுப்பிக்கப்பட்டு மார்க்க பெயரில் அரங்கேறிய பல பித்அதுகளையும், அனசாரங்களையும் தோலுரித்து காட்டி ஸுன்னாவை உயிர்ப்பித்து ஆன்மீக ரீதியாகவும் பல அரசியல் சீர்திருத்தங்களை புரிந்து மக்களுக்கு ஒரு சிறந்த ஆட்சியாளராக திகழ்ந்தார் அய்யூபி.

இமாம் இப்னு கதீர் ரஹிமஹுல்லாஹ் தங்களது புத்தகமான அல்பிதாயா வன் நிஹாயாவில் இந்த கருத்தை பதிவு செய்கிறார்.

1969 ஆகஸ்ட் 1 வியாழன் அன்று காலையில் மஸ்ஜிதுல் அக்ஸா சிலுவைபடையினரால் கைப்பற்றப்பட்டது.

இந்த மிம்பர் தீக்கிரையானது .....

இறையருளால் இந்த மிம்பர் முழுவதும் உருகுலைந்து விடவில்லை, அது ஓர் உயர்ந்த நோக்கத்திற்காக செதுக்கப்பட்டது, ஜோர்டான் நாடு இதை புனர் நிர்மாணம் செய்வதற்கு பொறுப்பேற்றுக் கொண்டது, 40 கலைஞர்கள் மீண்டும் கலை நுணுக்கத்துடன் இந்த மிம்பரை தயார் செய்தார்கள், இப்பொழுது 16,500 மறக்கட்டைளை கொண்டு ஒரு சிறிய ஆனியன் உதவிகள் இல்லாமல் மீண்டும் புதுப்பிக்கப்பட்டது.

அன்று மலேசியா, ஜோர்டான், சிரியா, எகிப்து போன்ற இஸ்லாமிய நாடுகள் ஒன்று சேர்ந்து இந்த மிம்பரை மீண்டும் உயிர்ப்பித்தன.இந்த மிம்பரை உருவாக்கிய அய்யூபிய குடும்பத்தினரின் நோக்கமான "முஸ்லிம்களின் வலிமையே அவர்களின் ஒற்றுமை", என்பது நிறைவேறியது.

ஆக பள்ளிவாசல்கள் மீட்கப்பட வேண்டும் என்றால் முஸ்லிம்களின் ஒற்றுமை இன்றியமையாத ஒன்று, இந்த ஒற்றுமைக்கு வழி வகுக்கக் கூடிய இறையச்சத்தை ஆழமாக மனதில் விதைக்க வேண்டும் என்றால் மதரஸாக்கள் பாதுகாகப்பட வேண்டும்.

மதரஸாக்கள் பாதுகாக்கப்படவில்லை என்றால் இன்னும் நாம் பல பள்ளிவாயில்களை இழப்போம்.

ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா (ரஹி) பற்றி இந்திய உலமாக்கள் அரபு மொழியில் எழுதிய புத்தகங்கள்

"மின் மஃஆலிமி அத்தஜ்தீத் வல் அஸீமதி ஃபித்தஃவதி"

من معالم التجديد و العزيمة في الدعوة

இப்னு தைமிய்யா ரஹிமஹுமுல்லாஹ் அவர்களைப் பற்றி மிகப்பிரபலமான இந்தியாவின் முதல் கல்வி அமைச்சருமான இஸ்லாமிய சிந்தனையாளருமான மௌலானா அபுல்கலாம் ஆசாத் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் 1958 ல் எழுதிய புத்தகத்தை ஜமீல் அஹ்மத் ழமீர் அவர்கள் تذكرة -தத்கிரா என்ற உருது மொழியில் எழுதப்பட்ட புத்தகத்திலிருந்து அரபு மொழிக்கு மொழி பெயர்த்து வெளியிட்டிருக்கிறார்கள்.

இந்தியாவைச் சேர்ந்த இமாம் அபுல் ஹஸன் நத்வி ரஹிமஹுமுல்லாஹ் அவர்களும் ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா ரஹிமஹுல்லாஹ் அவர்களைப் பற்றி தனது இஸ்லாமிய வரலாற்று ஆய்வு புத்தகமாகிய

" ரிஜாலுல் ஃபிக்ரி வத்தஃவா"

رجال الفكر و الدعوة

என்ற புத்தகத்தில் அரபு மொழியில் தனி வாலியமாகவே எழுதி இருக்கிறார்கள்,

تذكرة الشيخ ابن تيمية

"தத்கிரது அஷ்ஷேக் இப்னு தைமிய்யா ", என்ற புத்தகத்தை

இந்தியாவைச் சேர்ந்த அறிஞர் சலாஹுத்தீன் அவர்கள் அரபு மொழியில் எழுதி இருக்கிறார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது,

இவர் மிகப் பிரபலமான புத்தகம் ஆகிய "அர்ரஹீக்குல் மக்தூம்" (الرحيق المختوم) என்ற புத்தகத்தை எழுதிய அல்லாமா ஸபிஃயுர் ரஹ்மான் முபாரக்பூஃரி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் மாணவரும், ஹதீஸ் கிரந்தமான திர்மிதீதியின் விளக்கவுரை "துஹ்பஃதுல் அஹ்வதி" (تحفة الأحوذي) என்ற புத்தகத்தை எழுதிய முஹம்மது பின் அப்துர் ரஹ்மான் முபாரக்பூஃரி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் மாணவரும் ஆவார் என்பது குறிப்பிடத்தக்கது.

இவர் பல இஸ்லாமிய ஆய்வு புத்தகங்களை தொடர்ந்து இஸ்லாமிய இலக்கிய உலகத்திற்கு வழங்கிக் கொண்டிருக்கிறார் இதுவரை 20க்கும் அதிகமான புத்தகங்கள் அரபு மொழியில் எழுதப்பட்டிருக்கிறது இவர் ஒரு சிறந்த ஆய்வாளரும் இஸ்லாமிய அறிஞராகவும் இருக்கிறார் இது அரபு நாடுகளில் தற்சமயம் விற்பனைக்கு வந்திருக்கிறது.

தற்காலச் சூழ்நிலையில் குனூத் நாஸிலா பள்ளிகளில் ஐந்து நேரத் தொழுகைகளில் ஓதலாமே!

நமது முதலாம் கிப்லாவான பைத்துல் மக்திஸை அக்கிரமக்கார ஜியோனிஸ இஸ்ரேலிடமிருந்து மீட்க, நமது சகோதரர்கள் பாலஸ்தீனத்தில் அன்றாடம் எதிர்கொண்டு இருக்கும் போரின் அழிவுகளில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என்பதற்காக மார்க்கம் நமக்கு வழிகாட்டிய அடிப்படையில் ஒரு ஸுன்னாவை பின்பற்றுவோம் வாருங்கள்!

இஸ்லாத்தின் தூண்களே! பள்ளிவாயில்களின் சங்கையான இமாம்களே !

ஏன் இன்னும் தயக்கம்!

ஈமானிய உணர்வுகள் புரையோடி போய் கிடக்கும் இந்த சமூகத்தின் சிந்தனைகளை தட்டி எழுப்பும் விதத்தில் ஒரு ஸுன்னாவை (நபிவழியை) குனூத்துன் நாஸிலாவை, உங்களின் பள்ளிகளில் 5 வேளை தொழுகைகளில் இன்று முதல், ஓதலாமே!

அதை விட்டுவிட்டு மார்க்கம் நமக்கு சொல்லித் தராத விதங்களில் பிரார்த்திப்பது அல்லாஹ்வின் உதவியை எவ்வாறு நமக்கு பெற்று தரும் ?

குனூத்துன் நாஸிலா என்பது சோதனையான காலகட்டங்களில் முஸ்லிம்களுக்கு இறையுதவியை வேண்டியும், எதிரிகளுக்கு எதிராக இறைவனின் சாபத்தை வேண்டியும் நபி (ஸல்) அவர்கள் ஓதிய குனூத் ஆகும். இதனை இறைத்தூதர் ﷺ அவர்கள் சோதனைகள் ஏற்படும் காலகட்டங்களில் ஓதியுள்ளார்கள்.

و حَدَّثَنِي عُبَيْدُ اللهِ بْنُ مُعَاذٍ الْعَنْبَرِيُّ وَأَبُو كُرَيْبٍ وَإِسْحَقُ بْنُ إِبْرَاهِيمَ وَمُحَمَّدُ بْنُ عَبْدِ الْأَعْلَى وَاللَّفْظُ لِابْنِ مُعَاذٍ حَدَّثَنَا الْمُعْتَمِرُ بْنُ سُلَيْمَانَ عَنْ أَبِيهِ عَنْ أَبِي مِجْلَزٍ عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ قَنَتَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ شَهْرًا بَعْدَ الرُّكُوعِ فِي صَلَاةِ الصُّبْحِ يَدْعُو عَلَى رِعْلٍ وَذَكْوَانَ وَيَقُولُ عُصَيَّةُ عَصَتْ اللهَ وَرَسُولَهُ

அனஸ் பின் மாலிக் (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸ்ஸல்லம் அவர்கள் சுப்ஹுத் தொழுகையில் ருகூவிற்குப் பின்னால் ஒரு மாத காலம் குனூத் (சோதனைக் காலப் பிரார்த்தனை) ஓதினார்கள். அதில் ரிஅல், தக்வான் ஆகிய குலத்தாருக்கு எதிராகப் பிரார்த்தித்தார்கள். மேலும் 'உஸய்யா குலத்தார் அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் மாறு செய்து விட்டார்கள்'என்றும் கூறினார்கள் நூல்: முஸ்லிம் 1201

حَدَّثَنَا مُسَدَّدٌ قَالَ حَدَّثَنَا عَبْدُ الْوَاحِدِ بْنُ زِيَادٍ قَالَ حَدَّثَنَا عَاصِمٌ قَالَ سَأَلْتُ أَنَسَ بْنَ مَالِكٍ عَنْ الْقُنُوتِ. إِنَّمَا قَنَتَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ بَعْدَ الرُّكُوعِ شَهْرًا أُرَاهُ كَانَ بَعَثَ قَوْمًا يُقَالُ لَهُمْ الْقُرَّاءُ زُهَاءَ سَبْعِينَ رَجُلًا إِلَى قَوْمٍ مِنْ الْمُشْرِكِينَ دُونَ أُولَئِكَ وَكَانَ بَيْنَهُمْ وَبَيْنَ رَسُولِ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ عَهْدٌ فَقَنَتَ رَسُولُ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ شَهْرًا يَدْعُو عَلَيْهِمْ

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸ்ஸல்லம் அவர்கள் ருகூவிற்குப் பிறகு ஒரு மாதம் தான் குனூத் ஓதினார்கள். நபி அவர்கள் குர்ஆனை மனனம் செய்த சுமார் எழுபது நபர்களை இணை வைப்பவர்களில் ஒரு கூட்டத்தாரிடம் அனுப்பி வைத்தார்கள். இவர்கள் அந்த முஷ்ரிகீன்களை விடக் குறைந்த எண்ணிக்கையினராக இருந்தனர். அவர்களுக்கும் நபி அவர்களுக்குமிடையே ஒரு உடன்படிக்கையும் இருந்தது. (அந்த முஷ்ரிகீன்கள் எழுபது நபர்களையும் கொன்று விட்டனர்) அப்போது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸ்ஸல்லம் அவர்கள் முஷ்ரிகீன்களுக்கு எதிராக ஒரு மாதம் குனூத் ஓதினார்கள்'' என்று அனஸ் (ரளி) விடையளித்தார்கள். நூல்: புகாரீ 1002

குர்ஆனை மனனம் செய்த எழுபது ஸஹபாக்களை, இணை வைப்பாளர்கள் கொன்ற காரணத்தினால் தான் நபியவர்கள் அவர்களைச்

சபித்து கடமையான தொழுகைகளில் ஒரு மாத காலம் குனூத் ஓதியுள்ளார்கள்.

நபியவர்கள் ஒருமாத காலம் ஓதினார்கள் என்பது ஒரு செய்தியாகத்தான் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு மாத காலம் ஓத வேண்டும் என்று நபியவர்கள் நிர்ணயித்த எல்லையாக கட்டளையாகக் குறிப்பிடப்படவில்லை.

எனவே பாதிப்பின் தாக்கம் மனதில் இருந்து நீங்கும் கால அளவிற்கு நாம் இந்த சோதனைக் கால குனூத்தினை ஓதிக் கொள்ளலாம்.

கடமையான தொழுகை அனைத்திலும் சோதனைக்கால குனூத் ஓதலாம்

சோதனையான கால கட்டங்களில் ஓதக்கூடிய இந்தக் குனூத்தை நபியவர்கள் சுப்ஹு்த் தொழுகையில் மட்டுமல்லாது அனைத்து கடமையான தொழுகைகளிலும் ஓதியுள்ளார்கள்.

கடமையான தொழுகைகளில் கடைசி இரக்அத்தில் ருகூவிற்குப் பிறகு ஓதியுள்ளார்கள்.

இதனைப் பின்வரும் ஹதீஸ்களிலிருந்து நாம் விளங்கிக் கொள்ளலாம்.

حَدَّثَنَا عَبْدُ اللهِ بْنُ أَبِي الْأَسْوَدِ قَالَ حَدَّثَنَا إِسْمَاعِيلُ عَنْ خَالِدٍ الْحَذَّاءِ عَنْ أَبِي قِلَابَةَ عَنْ أَنَسِ بْنِ مَالِكٍ رَضِيَ اللهُ عَنْهُ قَالَ كَانَ الْقُنُوتُ فِي الْمَغْرِبِ وَالْفَجْرِ

அனஸ் (ரளி) அவர்கள் அறிவிக்கிறார்கள்: மஃரிப், ஃபஜ்ர் ஆகிய தொழுகைகளில் குனூத் ஓதுதல் (நபி அவர்களின் காலத்தில்) இருந்தது. நூல்: புகாரீ 798, 1004.

சமீபமாக "மீலாது விழா கொண்டாட்டம் - ஐயங்களும், தெளிவுகளும்" என்ற புத்தகம் தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டிருக்கிறது கண்டிப்பாக வாசிக்கவும்.

பித்ஆகளை ஒழிப்பதற்கான மூன்று விதிகள்

அஷ்ஷேக் வலீத் அஸ்ஸயீதான் ஹஃபிழஹுல்லாஹ் அவர்கள் பித்ஆகளை ஒழிப்பதற்கான மூன்று அழகிய விதிகளை கூறுகிறார்கள்.

1- மார்க்க சட்டங்கள் அங்கீகாரம் பெறுவதற்கு தெளிவான ஆதாரப்பூர்வமான ஆதாரங்கள் தேவை.

الأحكام الشرعيه تفتقر في ثبوتها الادلة الصريحة الصحيحة

உம்- மார்க்க சட்ட திட்டங்களில் தொழுகை திக்ரு செய்தல் போன்ற வழிபாடுகளை செய்வதற்கு அனுமதிக்கப்பட்ட இருப்பதன் அடிப்படை மார்க்கம் சொல்லி இருக்கும் தெளிவான ஆதாரப்பூர்வமான ஆதாரங்களே.

எனவே மௌலூது , மீலாது போன்ற விடயங்கள் மார்க்கமாக மாற்றப்பட்டு வணக்கமாக நிறைவேற்றப்படும் பொழுது அதற்கு தெளிவான ஆதாரப்பூர்வமான ஆதாரங்கள் தேவை, ஆதாரங்கள் இல்லாததால் இவைகள் அனைத்தும் பித்ஆ வழிகேடு.

2-மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டிருக்கும் ஒரு அடிப்படையான சட்டத்தை வைத்து வர்ணிக்கப்படும் விடயங்கள் அனுமதிக்க ப்படுவது கிடையாது.

مشروعية الشيء بأصله لا تستلزم مشروعية وصفه

உம்- சூரத்துல் பாத்திஹா மார்க்கத்தில் ஓதுவதற்கான சிறப்புகள் இன்னும் தொழுகையில் அதை ஓத வேண்டிய அவசியங்கள் தெளிவாகச் சொல்லப்பட்டிருப்பதை வைத்து சூரத்துல் பாத்திஹாவை மார்க்கத்தில் சொல்லப்படாத வைபவங்களிலும் விசேஷங்களிலும் மார்க்கமாக ஓதுவது "அல்பாஃதிஹா ", என்று கூறுவது பித்ஆ நூதனமானவைகள்.

நபியவர்கள் மீது ஸலவாத்து சொல்வது மார்க்கத்தில் இன்றியமையாத ஒன்று அதனால்தான் தொழுகையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறது இதை வைத்து நபி அவர்கள் மீது நாங்கள் அன்பு கொண்டிருக்கிறோம் என்று

கூறிக்கொண்டு இணை கற்பித்தல்களை அர்த்தங்களாகக் கொண்டிருக்கும் மௌலூது போன்ற கவிதைகளை வணக்கமாக ஆக்குவது பித்ஆ.

3-எந்தெந்த விடயங்களில் நபியவர்களின் காலத்தில் செய்வதற்கான காரணிகளும் இடம்பாடுகளும் இருந்து அதை நபியவர்கள் செய்யவில்லையோ அதை செய்யாமல் விட்டு விடுவது மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்ட ஒன்று.

كل شيء يتوفر سببه في عهد النبي صلى الله عليه وسلم
ولم يفعله و المشروع تركه

உம்- கூட்டாக அமர்ந்து திக்ரு செய்தல், ஐந்து நேர தொழுகைக்குப் பின்பு கூட்டு துஆ ஓதுதல், தர்காக்களுக்குச் சென்று சஜ்தா செய்தல், இறைநேசர்களிடம் வஸீலா தேடுதல் உதவி தேடுதல்.

இவைகள் பித்ஆ வழிகேடு மட்டுமல்ல ஷிர்க் இணை வைத்தலாகும்.

கூடுதலான விளக்கம் பெற இவர்களின் கீழ்காணும் புத்தகத்தை வாசிக்கவும் கிட்டத்தட்ட 1,200க்கும் அதிகமான பக்கங்கள் எழுதியுள்ளார்கள்.

"ஷரஹ் அல்கவாயிதுல் அல்முதாஆ பீஃ அஹ்லிஸ் ஸுன்னத் வல் ஜமாஆ " (1598 பக்கங்கள்)

"شرح القواعد المذاعة في اهل السنة و الجماعة"

இரண்டு புத்தகங்கள் அல்ல
இரண்டு வைரக் கற்கள்

தஞ்சை பாபநாசம் மதரஸா தாருல் இக்லாஸ் அஸ்ஸித்தீகிய்யா நூலகத்தில் அரிதான இரண்டு நூல்களை கண்டெடுக்க முடிந்தது, இந்த இரண்டு நூல்களும் கிட்டத்தட்ட 1967 ஆம் ஆண்டு அச்சடிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்க ஒன்று.

1970-1980 ஆண்டுகளில் கூத்தாநல்லூர் பைஜுல் பாகிய்யாதில் முதல்வராக பணியாற்றிய மௌலானா அப்துல் ஹய் பாக்கவி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் அரிதான அற்புதமான நூலக புத்தகங்கள் அவர்களின் புதல்வரான பண்டாரவடை ஜைனுல் உலூம் மதரஸாவின் பேராசிரியருமான மௌலானா அப்துல் அலீம் இர்ஷாதி அவர்களின் ஊடாக எங்கள் மதரஸாவில் நூலகத்திற்கு வந்தது.

உஸ்தாத் பாகவி அவர்களின் புத்தகங்களை அடியேன் சற்று பார்வை யிட்டதில் பிரமிப்புக்கும் ஆச்சரியத்திற்கும் கொஞ்சம் கூட குறைவே இல்லை அந்த அளவிற்கு உலகளாவிய அளவில் அவர்களுடைய புத்தக வாசிப்பு இருந்திருக்கிறது,

அல்லாமா அபுல் ஹசன் நத்வி, அல்லாமா ஸெய்யது ஸுலைமான் நத்வி, மௌலானா அபுல் அஃலா மௌதூதி , மௌலானா வஹீதுத்தீன் கான் (ரஹிமஹுமுல்லாஹ்)எகிப்திய நாட்டின் அரபு இலக்கிய வாதியான அஹ்மத் அமீன், என்று பட்டியல் சற்று நீண்டு கொண்டே செல்கிறது.

இவர்களின் அரபு ,உருது ,புத்தகங்களின் தொகுப்புகளும், மிக அரிதான அன்றைய காலத்தில் வெளிவந்த அரபு இஸ்லாமிய பத்திரிக்கைகளும் கட்டு கட்டாக இருந்தது.

எனது ஆசிரிய தந்தை அல்லாமா கலீல் அஹ்மத் கீரனூரி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் கூறுவார்கள்.

ஒரு அறிஞரின் சைஸ் அவரின் மூலையில் இருக்கும் புத்தகத்தின் சைஸ் என்று சொல்வார்கள்.

புத்தகங்களே நமது அறிவின் தொழிற்சாலைகள்! புத்தகங்களே நன்மை பக்குவப்படுத்தி செதுக்குகிறது!!

இந்த இரண்டு புத்தகங்களில் முதலாவது வைரம்.

"الأبيات المقدسة -*அரபுத் திருக்குறள்*"

1980 ஆம் ஆண்டு 15 ரூபாய் விலைமதிப்பில் இந்த புத்தகம் வெளியிடப்பட்டிருக்கிறது.

திருக்குறளின் 1330 குறள்களையும் நேர்த்தியாக அரபு மொழியிலே மூல புத்தகமாக எழுதப்பட்டது போன்ற ஒரு பிரமிப்பை நமக்கு தருகிறது, அவர்களின் காலகட்டத்தில் அச்சுக்கோர்வை வசதிகள் குறைவாக இருந்திருக்கலாம் அதை தனது கை பிரதியாக வெளியிட்டு இருக்கிறார்கள். இந்த புத்தகத்தை மொழிபெயர்த்த அறிஞர்.

திருக்குறளை அரபு மொழியில் விபரித்த அந்த பேரறிஞர் உஸ்தாத் முஹம்மது யூசுப் கோகன் உமரி ரஹிமஹுல்லாஹ் 1916 ஆம் ஆண்டு தமிழக ஆற்காட்டில் பிறந்தவர்கள், ஜாமிஆ தாருஸ்ஸலாம் உமராபாதில் ஆலிம் பட்டம் பெற்று, மெட்ராஸ் யூனிவர்சிட்டியில் அப்சலுல் உலமா பயின்று பிறகு அதே பல்கலைக்கழகத்தில் பல வருடங்கள் அரபு பாரசீக உருது மொழி துறையின் தலைவராகவும் இருந்திருக்கிறார்கள்.

இவர்களின் முன்னோர்கள் அரபு நாட்டிலிருந்து இடம்பெருந்து தமிழகத்திற்கு வந்திருந்தாலும் தங்களின் முன்னோர்களைப் போன்றே தானும் இஸ்லாத்திற்கும் அரபு இலக்கியத்திற்கும் மிகப்பெரிய சேவையை உஸ்தாத் உமரி அவர்கள் செய்திருக்கிறார்கள்.

அல்லாமா ஷிப்லி நுஃமானி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் முயர்ச்சியால் உத்தர பிரதேசத்தில் உள்ள "ஆஸம்கட்", என்ற ஊரில் "தாருல் முஸன்னிபீஃன்", என்ற இஸ்லாமிய புத்தகஆய்வு நிலையத்தில் அல்லாமா ஸெய்யது ஸுலைமான் நத்வி ரஹிமஹுமுல்லாஹ் அவர்களின் தலைமையின் கீழ் கிட்டத்தட்ட ஐந்து வருடம் பல புத்தகங்களை அரபு மொழியில் இருந்தும்,பார்ஸி மொழியிலிருந்தும் உருது மொழியில் மொழியாக்கம் செய்திருக்கிறார்கள்.

சென்னை ஜமாலியா மதரஸா, கேரளா தலைச்சேரி ,காலிகட் ,போன்ற இடங்களில் உள்ள பல்கலைக்கழகங்கள் என்று பல இடங்களில் ஆசிரியராக பணி செய்து இருக்கிறார்கள்.

அரபு மொழியில் அரபு இலக்கிய வரலாறு, ஆன்மீகம், அரசியல்,போன்ற தலைப்புகளில் ஆங்கிலம் & உருதுவிலும் பல புத்தகங்களை எழுதி இருக்கிறார்கள்.

உம்-

١–أعلام النثر والشعر في الأدب العربي الحديث (ثلاثة أجزاء)،

٢–وترجمة تروكورل،

٣– ودولة المغول،

٤–والعرب وآدابهم،

٥– والقراءة العربية،

٦–والقراءة المفيدة،

٧– ابن تيمية

அதுமட்டுமல்ல எகிப்து,ஜோடான், லெப்னான், சிரியா, சவுதி அரேபியா ரஷ்யா போன்ற நாடுகளுக்கு தான் பயணம் செய்து நவீன கால அரபு இலக்கியவாதிகள் என்ற தலைப்புகளில் பல அரிதான தகவல்களை ஒன்று திரட்டி இருக்கிறார்கள்.

தங்களது எகிப்திய பயணத்தில் அரபு இலக்கியவாதிகளான டாக்டர் தாஹா ஹுசைன்,ஸௌகி தைப்ஃ போன்றவர்களின் நேரடி வகுப்புகளில் கலந்து கொண்டு பயனடைந்து இருக்கிறார்கள்.

இன்று இவர்களின் புத்தகங்கள் பி எச் டி பிரிவில் படிக்கும் மாணவர்கள் தங்களது ஆய்வுகளில் பயன்படுத்துகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அதேபோன்று தமிழகத்தைச் சேர்ந்த உஸ்தாத் முஹம்மது இஸ்மாயில் நத்வி ரஹிமஹுமுல்லாஹ் தமிழக தாய் மதரசாவான ஜாமிஆ பாக்கியத்துஸ் ஸாலிஹாத்தில் 1960களில் பட்டம் பெற்று உத்தர பிரதேசம் தாருல் உலூம் நத்வதுல் உலமா இஸ்லாமிய பல்கலைக்கழகத்தில் கல்வி பயின்று எகிப்து நாட்டிற்கு மேல் கல்வியை படிக்க சென்ற அறிஞர் அரபுகளுக்கே உஸ்தாதாக பணி செய்து அரிதான தலைப்புகளில் பல புத்தகங்களை அரபு மொழியில் எழுதி (تاريخ ثقافة الهند)

அல்ஜீரியாவில் வபாத்தாகி அங்கேயே அடக்கப்பட்டவர்கள்.

மிக கவலைக்குரிய விடயம் என்னவென்றால் தமிழகத்தில் அரபு

மொழிக்கும் இஸ்லாமிய இலக்கியத்திற்கும் மிகப்பெரிய சேவைகள் செய் ஸீதீத பல அறிஞர்கள் புத்தகங்கள் இன்று நமது பார்வையில் இருந்து மறைந்து கொண்டு வருகிறது,

அரபுக் கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் மாணவர்களுக்கு இவர்களைப் பற்றி நாம் அவ்வப்பொழுது எடுத்துச் சொல்லிக் கொண்டே இருக்க வேண்டும், இது வருங்காலத்தில் பல அரபு மொழி திறன்களைக் கொண்ட பல அறிஞர்களை உருவாக்குவதற்கு வழிவகுக்கும் என்று நம்புகிறேன்.

இரண்டாவது வைரம்

அல் அகீததுஸ் ஸனிய்யா (العقيدة السنية)

இஸ்லாமிய கொள்கைகளில் உண்மையான அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கை பிடிப்போடு எழுதப்பட்ட அற்புதமான ஒரு புத்தகம்.

இந்த புத்தகத்தின் மூல ஆசிரியர் இமாம் ஷாஹ் வலியுல்லாஹ் தஹ்லவி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் புத்தகத்தின் பெயர் அல்அகீததுல் ஹசனா (العقيدة الحسنة) அதற்கு விரிவுரையாக உஸ்தாத் உவைஸ் நிகராமி நத்வி அவர்கள் எழுதி இருக்கிறார்கள்.

உஸ்தாத் அவர்கள் தாருல் உலூம் நதுவத்துல் உலமாவில் ஷேகுத் தப்ஃஸீராக பேராசிரியராக பணியாற்றி இருக்கிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த புத்தகம் 1962 ஆம் ஆண்டு வெளியிடப்பட்டிருக்கிறது என்பது இங்கு குறிப்பிடத்தக்க ஒன்று.

ஷிர்க்கு பித்அத்தை உரக்கச் சொல்லி கண்டித்த இந்திய உலமாக்களின் இஸ்லாமிய கொள்கை நமது முன்னோர்களான சத்திய சஹாபாக்கள் தாபியீன்கள் சங்கையான மத்ஹபுகளின் இமாம்கள் நடை போட்ட கொள்கையான உண்மையான அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையில் தான் இருந்தது என்பதை இந்த புத்தகம் நமக்கு தரும் ஆதாரங்கள்.

தவ்ஹீதுர் ருபூபிய்யா,உலூஹிய்யா , அஸ்மா வ ஸிபாஃத் என்று சொல்லப்படுகிற முத்தான மூன்று அடிப்படை கொள்கை சட்டங்களை சவுதி அரேபிய வஹாபிய(!!!!) அரசாங்கம் இந்தியாவிற்கு கொண்டு வந்தது என்ற ஒரு பிழையான கண்ணோட்டத்தை உடைத்து தகர்த்தெரிகிறது.

கடந்த சில வருடங்களாக அகீதா துறையில் அடியேன் வகுப்புகள் எடுத்து வருவதால் இந்த புத்தகத்தை கண்ட பின்பு பிரமிப்பும் அதிர்ச்சியும்

என்னை தொற்றிக் கொண்டது எனது பல கேள்விகளுக்கு பதில்களும் இந்த புத்தகத்தின் ஊடாக கிடைத்தது.

இது போன்ற இன்னும் அரிதான பல புத்தகங்களை நமது நூலகத்திற்கு வழங்கிய அல்லாமா அப்துல் ஹய் பாக்கவி ரஹிமஹுல்லாஹ் அவர்களுக்கும் அவர்களின் சங்கையான புதல்வர் உஸ்தாத் அவர்களுக்கும் அல்லாஹ் அருள் புரிவானாக!

மூடநம்பிக்கையின் அடிப்படை அறியாமையே!

இன்று தமிழ் இஸ்லாமிய சமூகத்தில் நடந்தேறிக் கொண்டிருக்கும் அனைத்து மூடநம்பிக்கைகளின் அடிப்படை அறியாமை என்ற இருள்தான்,

அந்த இருள் அகல வேண்டும் என்றால் குர்ஆன் ஸுன்னா என்ற இரண்டு வஹீகளை , வெளிச்சங்களை (இறை செய்திகளை) முறையாக நமது அன்றாட வாழ்வில் அமல்படுத்துவதற்கு முயற்சிக்க வேண்டும்.

இந்த இரு வஹீகளை நபித்தோழர்களின் விளக்கத்தில் விளங்க வேண்டும்.

இஸ்லாமிய கொள்கைகள் அகீதா, இஸ்லாமிய சட்டங்கள் அனைத்திற்கும் பொருந்தும்.

இதை நாம் இலகுவாக புரிந்து கொள்ள அஷ்ஷேக் வலீத் அஸ்ஸயீதான் ஹஃபிழஹுல்லாஹ் பின்வரும் உஸுலை நமக்கு கற்றுத் தருகிறார்கள்.

இந்த உஸுலின் அடிப்படையில் நமது சமூகத்தில் நிகழும் அனைத்து பிரச்சனைகளுக்கும் இலகுவாக தீர்வு காண முடியும்.

كل فهم يخالف فهم اصحاب النبي صلى الله عليه وسلم فهو باطل

குல்லு பஃஹ்மின் யுகாலிபு பஃஹ்மின் நபிய்யி ஹுவ பாதிலுன்

(மார்க்கத்தில்)நபித்தோழர்களின் புரிதலுக்கு மாறுபடும் அனைத்து புரிதல்களும் அசத்தியமே!

இந்த அடிப்படையான விதியை நாம் புரிந்து கொண்டால் திருக்குர்ஆனில், நபி மொழிகளில் இடம்பெற்று இருக்கும் அல்லாஹ்வின் ஸிபாஃதுகளை (صفات பண்புகளை)அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையில் விளங்குவோம்,

இதற்கு மாறாக கிரேக்க தத்துவம்(فلسفة) தர்க்ககலை (منطق)போன்ற சீர்கேடான வழிகளின் அடிப்படையில் இஸ்லாமிய கொள்கைகளை விளங்குவதை நியாயப்படுத்த மாட்டோம்.

உதாரணமாக அல்லாஹ் அர்ஷில் இருக்கிறான் என்ற கீழ்காணும் திருக்குர்ஆன் வசனம் நமக்கு கூறுகிறது.

اَلرَّحْمٰنُ عَلَى الْعَرْشِ اسْتَوٰى

(அவற்றைப் படைத்த) ரஹ்மான் (-அளவற்ற அருளாளனாகிய அல்லாஹ்) அர்ஷின் மீது (தன் மகிமைக்குத் தக்கவாறு) உயர்ந்துவிட்டான். (அல்குர்ஆன் : 20:5)

இந்த வசனத்திற்கு சஹாபாக்களின் மாணவர்களளான தாபியீன்கள் கூறும் விளக்கத்தை விட்டு விட்டு நமது பகுத்தறிவை பயன்படுத்தினால் அல்லாஹ் எவ்வாறு அர்ஷில் இருப்பான் (استوى) அல்லாஹ் எந்த இடத்திலும் இல்லை எந்த திசையிலும் இல்லை, எனவே அல்லாஹ் அர்ஷில் இருக்கிறான் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது .

அதற்கு என்ன விளக்கம் என்றால் அல்லாஹ் கைப்பற்றி ஆட்சி செய்கிறான் (استولى) என்ற அர்த்தமாக விளங்கி வழிகேடான கொள்கையில் பயணிக்க வேண்டிய சூழல் வந்து விடுகிறது.

அல்லாஹ் அர்ஷில் இருந்து கொண்டு முழு உலகத்திலும் தன்னுடைய ஞானத்தை செலுத்துகிறான் என்றால் தவறில்லை அதுதான் அஹ்லுஸ் ஸுன்னாவின் உண்மையான கொள்கை.

நபியவர்களின் விண்ணுலகப் பயணமான மிஃராஜ் பயணம் அல்லாஹ் அர்ஷில் இருக்கிறான் என்பதற்கு ஆதாரம், ஏராளமான திருக்குர்ஆன் வசனங்கள், ஸஹீஹான நபிமொழிகள் இதற்கு ஆதாரமாக இருக்கிறது.

நபித்தோழர்கள் தங்களின் காலத்தில் அல்லாஹ்வின் பெயர்களையும் ,பண்பு நலன்களையும் திருக்குர்ஆனிலும் நபி மொழிகளிலும் இறக்கி அருளப்பட்ட அடிப்படையில் மாற்றுக் கருத்துக்கள் கூறாமல் ஈமான் கொண்டார்கள்.

சஹாபாக்களின் மாணவர்களளான தாபியீன்கள் காலத்தில்தான் இந்த குழப்பங்கள் வந்தது.

ஆனால் முஃதஸிலா,ஜஹமியா போன்ற வழி கேட்டினர் அஷ்அரிய்யா, மாதுருதிய்யா போன்ற (15 ஷிபாத்துகளில் மட்டும் அஹ்லுஸ் ஸுன்னதினருடன் ஒத்துப் போகிறார்கள்)பிரிவினர் ,அல்லாஹ்வின் பண்புகளை இருப்பதை போன்று விளங்கினால் படைப்பிடங்களுடன் ஒப்பிடும் தன்மை ஏற்பட்டு விடும் .

அவ்வராகிவிட்டால் அல்லாஹ்விற்கு சடவாதத்தை உருவாக்க வேண்டிய சூழல் ஏற்பட்டு விடும் என்ற புதிய சிந்தனைக்கு இஸ்லாமிய

கொள்கையில் நூதனமாக ஏற்பட்ட அனாச்சாரத்திற்கு பித்அதிற்கு வழி வகுத்தார்கள்

சில வழிகெட்ட பிரிவினர், அதை நமது ஸலபுஃ மன்ஹஜில் பயணித்த நபித்தோழர்களின் மாணவர்களான தாபியீன்கள் அவ்வப்பொழுது உண்மை நிலையை மக்களுக்கு விளக்கி வந்தார்கள்.

தாபியீன்களில் மிக தலைசிறந்த அறிஞரான இமாமுல் அஃலம் அபூ ஹனீபா ரஹிமஹுல்லாஹ் கூறுகிறார்கள்.

"அல்லாஹுத் தஆலா அர்ஷின் மீது அதன் எந்த தேவையும் இல்லாமல் இருக்கிறான் என்பதை நாம் ஏற்றுக் கொள்கிறோம் ".

நூல் - பாபர்தியின் அபூ ஹனீஃபா அவர்களின் வசியத் என்ற நூலின் தெளிவுரை -87.

قال أبو حنيفةَ: (نُقِرُّ بأنَّ اللهَ تعالى على العَرْشِ استوى من غيرِ أن يكونَ له حاجةٌ) يُنظر: ((شرح وصية الإمام أبي حنيفة)) للبابرتي (ص: ٨٧).

இப்னு ருஷ்து அவர்கள் கூறுகிறார்கள்:

தாஹா என்ற அத்தியாயத்தில் ஐந்தாம் வசனத்தில் இடம் பெற்றிருக்கும் "அல்இஸ்திவா", என்ற வார்த்தைக்கு "அல்இஸ்தீலா", என்று யார் அர்த்தம் வைப்பார்களோ அவர் தவறு இழைத்து விட்டார்.

காரணம் இதற்கு அர்த்தம் "கைப்பற்றி ஆட்சி செய்வது", என்று வைத்துக் கொண்டால் அல்லாஹ்வை யாரோ மிகைத்து விட்டார்கள் என்ற அல்லாஹ்விற்கு தகாத வார்த்தையை சொல்ல வேண்டி இருக்கும், அல்லாஹ்வை யாரும் மிகைக்க கைப்பற்ற முடியாது அல்லாஹ் மிக உயர்ந்தவன்.

இந்த பதத்திற்கு அல்லாஹ் உயர்ந்து மேல் இருக்கிறான் என்பதே சரியானது.

"இஸ்திவா", என்ற அரபு வார்த்தைக்கு எவ்வாறு வானில் சூரியன் உயர்வாக இருக்கிறது என்று சொல்லப்படுமோ அரபு மொழியில் அது போன்று இந்த வார்த்தைக்கு அல்லாஹ் அர்ஷில் இருக்கிறான் என்று சொல்ல வேண்டும்.

நூல் - அல்முகத்திமாத் அல்முமஹ்ஹிதாது -1/21

وقال ابنُ رشدٍ: (أمَّا من قال: إنَّ الاستواءَ بمعنى الاستيلاءِ فقد أخطَأَ؛ لأنَّ

الاستيلاءَ لا يكونُ إلَّا بعد المغالَبةِ والمقاهَرةِ، واللهُ يتعالى عن أن يُغالِبَه أحَدٌ. وحَمْلُ الاستواءِ على العُلُوِّ والارتفاعِ أَولى ما قيلَ، كما يقالُ: استوَت الشَّمسُ في كَبِدِ السَّماءِ، أي: عَلَت) يُنظر: ((المقدمات الممهدات)) (١/ ٢١)

இமாம் இப்னு கஸீர் ரஹிமஹுல்லாஹ் அல்லாஹ் அர்ஷில் இருக்கிறான் என்ற வார்த்தையை அருளப்பட்ட அடிப்படையில் ஏற்றுக்கொள்ள வேண்டும் அதில் மாற்றுக் கருத்து கூடாது எவ்வாறு முன் சென்ற இமாம்களான மாலிக், அவுஸாயி சவ்ரி,அல்லைஸ்,ஷாபிஃயீ, அஹ்மத் பின் ஹம்பல் , இஸ்ஹாக் பின் ராஹவைஹி ரஹிமஹுமுல்லாஹ் அனைவரும் ஏற்றுக் கொண்டார்களோ அவ்வாறுதான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறுகிறார்கள்.

அல்லாஹ்வின் பண்பு நலன்களை படைப்புகளுடன் ஒப்பிடக்கூடாது.

தப்ஃஸீர் இப்னு கஸீர்- 3/624

وقال ابنُ كثيرٍ: (قَولُه تعالى: ثُمَّ اسْتَوَى عَلَى الْعَرْشِ [الأعراف: ٥٤] للنَّاسِ في هذا المقامِ مقالاتٌ كثيرةٌ جِدًّا، ليس هذا مَوضِعَ بَسْطِها، وإنما يُسلَكُ في هذا المقامِ مَذهَبُ السَّلَفِ الصَّالحِ: مالِكٍ، والأوزاعيِّ، والثَّوريِّ، واللَّيثِ بنِ سَعدٍ، والشَّافعيِّ، وأحمَدَ بنِ حَنبلٍ، وإسحاقَ بنِ راهَوَيهِ، وغَيرِهم مِن أئِمَّةِ المسلِمينَ قديمًا وحديثًا، وهو إمرارُها كما جاءت مِن غيرِ تكييفٍ ولا تشبيهٍ ولا تعطيلٍ. والظَّاهِرُ المتبادِرُ إلى أذهانِ المشَبِّهينَ مَنفيٌّ عن اللهِ؛ فإنَّ اللهَ لا يُشبِهُه شَيءٌ من خَلْقِه، ولَيْسَ كَمِثْلِهِ شَيْءٌ وَهُوَ السَّمِيعُ الْبَصِيرُ -الشورى:١١ يُنظر: ((تفسير ابن كثير)) (٣/ ٤٢٦)

ஹிஜ்ரி நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த இமாம் இப்னு குஸைமா ரஹிமஹுல்லாஹ் கூறுகிறார்கள்:

யார் அல்லா ஏழு வானத்தில் மேல் அர்சியில் இல்லை அவனுடைய ஞானம் படைப்பினங்கள் அனைத்தையும் சூழ்ந்து இருக்கிறது என்று கூறவில்லையோ அவன் தவ்பா செய்ய வேண்டும் அவ்வாறு செய்யவில்லை என்றால் அவனுக்கு மரண தண்டனை அளிக்க வேண்டும், (ஷரீஆ ஆட்சி இருந்தால்)பின்பு அந்த உடலை குப்பையில் இட வேண்டும், அதன் நாற்றம் முஸ்லிம்களுக்கோ மற்ற முஸ்லிம்கள் பொறுப்புகளில் இருப்பவர்களுக்கோ தொந்தரவு அளிக்க கூடாது.

நூல் - அஸ்ஸியர் அஃலாமுன் நுபலா- இமாம் தஹபி- 14/365

الإمام ابن خزيمة صاحب الصحيح ت ٣١١ هـ

قال: من لم يقل بأن الله فوق سمواته وأنه على عرشه بائن من خلقه وجب أن يستتاب فإن تاب وإلا ضربت عنقه ثم القي على مزبلة لئلا يتأذى بنتن ريحه أهل القبلة ولا أهل الذمة

انظر درء التعارض ٦/ ٢٦٤ قال عنه الذهبي في السير: ١٤/ ٣٦٥

உண்மையான அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையின் முக்கியத்துவம் என்ன என்பதை இமாம்களின் வார்த்தைகளின் ஊடாக நாம் அறிந்து கொள்ள முடியும்.

நாம் இந்த சத்திய கொள்கையில் நிலைத்திருப்பது மிகப்பெரிய ஜிஹாதாகும் , இதுதான் ஜமாத் ஆகும்.

ஷாபி மத்ஹபின் தலைசிறந்த அறிஞரான ஹிபதுல்லாஹ் லால்காயி ரஹிமஹுல்லாஹ் கூறுகிறார்கள்:

ஜமாஅத் என்பது எது சத்தியத்தில் இருக்குமோ அதுதான், எனவே நீ தனியாக இருந்து சத்தியத்தை சொன்னாலும் சரியே (நீ ஜமாஅத்தில் தான் இருக்கிறாய்) நூல் -திர்மிதீ- 4/467

ஷரஹு இஃதிகாதி அஹ்லிஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் -1/221.

قال ابن مسعود رضي الله عنه: "الجماعة ما وافق الحق؛ ولو كنت وح دك" (رواه اللالكائي في شرح أصول اعتقاد أهل السنة والجماعة:١/١٢٢- رقم١٦٠، وصحح سنده الشيخ الألباني كما في تعليقه على مشكاة المصابيح: ٦١/١، ورواه الترمذي في سننه:٤/٤٦٧).

யார் இந்த ஸலபிஃகள்?

மன்ஹஜ் அஸ்ஸலபஃ அல்லது ஸலபிஃ என்றால் என்ன?

பின்வரும் காரணங்கள் மன்ஹஜ் அஸ்ஸலபஃ அல்லது ஸலபிஃ என்பதாக இன்று தவறுதலாக புரிந்து கொள்ளப்படுகிறது.

1) மார்க்க கிளை சட்டங்களில் காணப்படும் நான்கு மதுஹபுகளில் எந்த மத்ஹபையும் பின்பற்றாமல் இருப்பது.

2) சுன்னத் ஜமாத் அல்லது அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் என்று தன்னை அழைத்துக் கொள்ளாமல் இருப்பது.

3) தொழுகும் பொழுது தலையை திறந்து, நெஞ்சில் தக்பீர் கட்டிக்கொண்டு இரு கால்களையும் அகற்றிக்கொண்டு நிற்பது, விரல்களை ஆட்டுவது அத்தஹிய்யாத்தில் இவ்வாறு இருந்தால் மட்டுமே ஸலஃபி என்று நினைத்துக் கொள்வது.

(இங்கு கூறப்பட்டு இருக்கும் அனைத்து விடயங்களும் குர்ஆன் சுன்னாவின் அங்கீகாரத்திற்கு உட்பட்டவைகள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை ஆனால் சில தவறான புரிதல்கள் தெளிவுபடுத்தப்பட வேண்டும்)

4) பிறை விடயத்தில் பொதுமக்கள் எந்த ஒரு நாளில் ஈது தொழுகைகளை தொழுவார்களோ அதற்கு மாற்றமாக தொழுவது, அதை ஊக்குவிக்கும் ஜமாத்தினர் உடன் தொழுகுவது.

5) ஸலஃபி ,அஹ்லுஸ் ஹதீஸ், தவ்ஹீத் வாதிகள் என்று தன்னை அடையாளப்படுத்துவது, அவ்வாறு கூறவில்லை என்றால் பிறர்களை வழிகேடர்கள் என்று கருதுவது. (பிடிவாதங்கள் இல்லாமல் இணக்கமாக முறையாக தன்னை அடையாளப்படுத்துவது

தவறில்லை)

6) பித்அத் & ஷிர்க் பற்றிய விடயங்களில் மட்டும் தன்னை ஸலஃபியாக பார்ப்பது, ஏனைய மார்க்க விடயங்களில் ஸலஃப் மன்ஹஜை விட்டுவிடுவது.

7) மார்க்கக் கிளை சட்டங்களில் சர்ச்சைக்குரிய விஷயங்களை மட்டும் தெரிந்து கொள்வது அதை ஆர்வத்துடன் படிப்பது மார்க்க அறிஞர்களுடன் அதை வைத்துக்கொண்டு விவாதம் செய்வது.

8) தஸ்கிய்யா (உளத்தூய்மை & சுய சீர்திருத்தம்) என்பது பித்அத் சங்கைக்குரிய ஸஹாபாக்கள் அவர்களின் மதிப்பிற்குரிய மாணவர்கள் அவர்களை பின்பற்றி வந்த தலைசிறந்த இமாம்கள் கூறும் வார்த்தைகள் இஸ்லாத்திற்கு முரணானவைகள் என்று கருதுவது.

9) மார்க்க கல்வியை முறையாக படிக்க ஆர்வம் இன்றி தாங்கள் யாரை ஸலபிஃகளாக பார்க்கிறார்களோ அந்த அமைப்பினருடன் தனது ஸலஃப் மன்ஹஜை சுருக்கிக் கொள்வது.

10) ஸலஃப் மன்ஹஜை முறையாக அமல்படுத்தும் கல்வியாளர்களை அறிஞர்களை, மாணவர்களை அவர்கள் தங்களை ஸலஃபிகள் என்று சொல்லாததினால் சிறுமைப்படுத்துதல் , இழிவுபடுத்துதல்.

11) குர்ஆன், ஸுன்னாவின் அடிப்படையில் மார்க்க கல்வியை முறையாக கற்றுக்கொள்ள வேண்டும் என்றால் அரபு மொழியை தெளிவாகவும் முறையாகவும் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதை மறந்து இருப்பது.

12) இஸ்லாமிய அரசியலை (السياسة الشرعية) அங்கீகரிக்காமல் இருப்பது, அரசியல் ஆட்சி என்பது ஸலஃப் மன்ஹஜுக்கு முரணானது என்று கருதுவது.

13) பொதுமக்களுக்கு அழைப்பு பணி செய்வது மட்டுமே மார்க்க பணியாகும், பொது மக்களுக்கு செய்யும் பொது சேவைகள் மார்க்கப் பணியில் சேராது அது மன்ஹஜுஸ் ஸலஃபுக்கு முரணானது என்று கருதுவது.

14) ஓட்டு போடுவது கூடாது, அரசு பணிகளில் பங்கு பெறுவது கூடாது, குறுங்குழுவாத சிந்தனைகளுக்கு அடிமையாகுவது, ஜிஹாத் என்ற அற்புதமான விளக்கத்தை முறைகேடாக பயன்படுத்துவது.

15) சர்ச்சைக்குரிய மார்க்க விடயங்களில் குர்ஆன் சுன்னாவிற்கு இணக்கமாக போவதை விட்டுவிட்டு, வாக்குவாதங்கள் சண்டை சச்சரவுகள்

தெருமுனை பிரச்சாரங்கள், சமூக வலைதளங்களில் பிற சமூகத்தினருக்கு முன்பு கருத்து வேறுபாடான விஷயங்களை சர்ச்சை செய்து கொள்வது இவைகள் அனைத்தும் சமூக ஒற்றுமையை வலுஇழக்கச் செய்யும் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை.

இன்னும் பல.....

ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா ரஹிமஹுமுல்லாஹ் அவர்களின் பிரபல்யமான ஒரு சிறிய ரிஸாலா (புத்தகம்)

ஹதீஸ் இப்ஃதிராகுல் உம்மா حديث افتراق الأمة

அதற்கு மஸ்ஜிது நபவியின் தலைசிறந்த மார்க்க அறிஞர்களில் ஒருவரான அஷ்ஷேக் யூசுஃப் அல்கபீஃஸ் ஹஃபிழஹுல்லாஹ் அவர்களின் விளக்கம் (87 பக்கங்கள் கொண்டது) கிட்டத்தட்ட ஏழு பக்கங்கள் மிக ஆழமாக மத்ஹகபுகளை பின்பற்றலாமா? அதன் அளவுகோல் என்ன? மத்ஹபின் பெயரில் அரங்கேற்றப்படும் வீண் பிடிவாதங்கள் எவ்வாறு தவிர்க்கப்பட வேண்டுமோ அதேபோல் அந்த மத்ஹபுகளின் இமாம்களின் கல்வி ரீதியான ஆய்வுத் தொகுப்புகளை முன்வைத்து மத்ஹபுகள் பின்பற்றப்படலாம் என்று அழகாக கூறியிருக்கிறார்கள்.

சமகால அறிஞரான இமாம் நாஸிருத்தீன் அல்பானி ரஹிமஹுல்லாஹ் தனது முழு வாழ்க்கையையும் நபி மொழிகளை ஆய்வு செய்வதற்கும் அதைப் பின்பற்றுவதற்கும் மக்களுக்கு வழிகாட்டுவதற்கும் அர்ப்பணித்திருக்கிறார்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை,

அதே போன்று அவர்கள் புரிந்த அனைத்து இஸ்லாமிய ஆய்வுகளையும் சரிகாண வேண்டுமென்று அவசியம் இல்லை.

அல்பானி ரஹிமஹுல்லாஹ் போன்ற சில எமனைச் சேர்ந்த அறிஞர்கள் குர்ஆன், ஸுன்னா , இஜ்மா போன்ற மார்க்க சட்டங்களை இயற்றும் அடிப்படை அம்சங்களில் கருத்து வேறுபாடுகள் கொள்ளாமல் குறிப்பிட்ட மத்ஹபுகளை பின்பற்றாமல் தங்கள் ஆய்வுகளை அமைத்திருக்கிறார்கள் இது அவர்களின் தனிப்பட்ட ஒரு முயற்சி இது மன்ஹஜ் அஸ்ஸலபுஃக்கு எதிரான ஒன்றும் அல்ல.

ஆக மத்ஹபுகளை பின்பற்றி தான் ஆக வேண்டும் என்றும் கூறவில்லை, மத்ஹபுகளை பின்பற்றக் கூடாது என்றும் கூறவில்லை.

தக்லீது செய்வது கூடாது அது முற்றிலும் மன்ஹஜ் அஸ்ஸலபுஃக்கு எதிரான ஒன்று என்ற கருத்து பிழையானது.

சவுதி அரேபியாவில் டாக்டர் அஷ்ஷேக் ஆமீர் பஹ்ஜத்

டாக்டர் அஷ்ஷேக் அப்துல் சலாம் பின் ஷுவைய்ர் போன்ற ஹம்பலி மத்ஹபைச் சேர்ந்த பல அறிஞர்களை உதாரணமாக காட்டலாம், ஆனால் இன்று சவுதி அரேபியாவில் மையமாக வைத்து ஸலஃப் மன்ஹஜை அமைத்திருக்கிறார்கள் என்று கூறுபவர்கள் மத்ஹபிற்கு முரணாக இருப்பது அவர்களின் அறியாமை என்றே கூறலாம்.

ஸலஃபிய சித்தாந்தத்தில் மிக பிரபலமான இமாமாகிய இப்னு ரஜப் ஹம்பலி ரஹிமஹுல்லாஹ் தாங்கள் ஒரு புத்தகத்தை எழுதி இருக்கிறார்கள்...

நான்கு மத்ஹபுகளை பின்பற்றாதவர்களுக்கு மறுப்பு

(الرد على من اتبع غير المذاهب الأربعة)

அவர்களைப் போன்றே மூத்த அறிஞரான இப்னுஸ் ஸலாஹ் ரஹிமஹுல்லாஹ் அவர்களும் கூறியிருக்கிறார்கள்.

ஆக மன்ஹஜ் ஸலஃப் என்றால் குறிப்பிட்ட எந்த ஒரு இயக்கமோ அமைப்போ அல்ல, மாறாக கொள்கை கோட்பாடு ஆகும்.

அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கை கோட்பாடுகளை பிரதிபலிக்கும் ஒரு வரைவிலக்கணம் ஆகும்.

குர்ஆன் ஸுன்னாவை மனம் தோன்றிய அடிப்படையில் விளக்கம் கூறாமல் நபித்தோழர்களின் வழியில் நின்று விளங்குதல் என்பது தான் ஸலஃப் மன்ஹஜாகும், அவர்கள் வழியில் நின்று மறுமை வரை யார் இந்த சத்தியத்தை உரக்கச் சொல்வார்களோ அவர்களும் ஸலஃபிகளே,

இன்று அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் என்ற பெயரில் போலியான அசத்தியவாதிகள் தங்களின் கொள்கைகளை வடிவமைத்துக் கொண்டு வருகிறார்கள், அப்பாவி பொதுமக்களை சங்கையான நான்கு மத்ஹபுகளின் இமாம்களின் பெயரிலே வழி கெடுக்கிறார்கள்.

அவர்களை இனம் காணுவதற்கு தன்னை ஸலஃபியாக அடையாளப்படுத்திக் கொள்வதில் எந்த தப்பும் இல்லை.

காரணம் நபித்தோழரின் காலத்துக்கு பின்னால் சரியான முறையான இஸ்லாமிய கொள்கை கோட்பாடுகளில் இருப்பவர்கள் தங்களை அடையாளம் காண அன்று புஃகஹாக்கள்,குர்ராகள் என்று கூறி வந்தார்கள் என்று பிஃக்ஹு கலை வல்லுனர்கள் தங்கள் புத்தகங்கள் எழுதி வைத்திருக்கிறார்கள்.

ஆனால் அசத்திய கொள்கை உடையவர்கள் இந்த பெயரில் தங்களை அழைக்க ஆரம்பித்தவுடன் அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் என்ற

பெயரை சரியான சத்திய கொள்கையில் இருக்கும் அறிஞர்கள் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டார்கள்.

கீழ்காணும் நபிமொழியிலிருந்து தான் ஸலஃபு ஸாலிஹீன்கள் (நமது முன்னோர்கள்) அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் என்ற சித்தாந்தத்தை இஸ்லாமிய சமூகத்திற்கு அறிமுகம் செய்கிறார்கள்.

إنَّ بني اسرائيلَ افترقتْ على إحدى وسبعين فرقةً ، وإنَّ أمتي ستفترقُ علي اثنتيْنِ وسبعين فرقةً ، كلُّها في النارِ إلا واحدةً وهي الجماعةُ .

الراوي : أنس بن مالك | المحدث : العراقي | المصدر : الباعث على الخلاص الصفحة أو الرقم: ١٦ | خلاصة حكم المحدث : إسناده صحيح

التخريج : أخرجه ابن ماجه (٣٩٩٣)، وأحمد في ((المسند)) (١٤٥/٣)، وأبو يعلى (٣٦/٧)

பனீ இஸ்ரவேலர்கள் 71 குழுக்களாகவும் எனது சமூகம் 72 குழுவாகவுபா பிறிவார்கள், ஜமாத்தாக (ஐக்கியத்தை கொண்டிருக்கும்) ஒரு குழுவினரைத் தவிர அனைத்து குழுக்களும் நரகம் புகும்.

அறிவிப்பாளர்- அனஸ் பின் மாலிக் ரழியல்லாஹு அன்ஹு, நூல்-இப்னுமாஜா (3993), முஸ்னத் அஹ்மத் (3/145), தரம் - ஸஹீஹ் (ஆதாரபூர்வமானது)

இதே கருத்தில் வேறு ஒரு ஆதாரப்பூர்வமான ஜாமிஃ திர்மிதியில் அப்துல்லாஹ் பின் அம்ரு ரழியல்லாஹு அன்ஹு அவர்களால் அறிவிக்கப்படும் ஒரு நபிமொழி அதில்

ما أنا عليه و اصحابي

"நானும் எனது தோழர்களும் எந்தக் கொள்கையில் இருக்கிறோமோ அந்த குழுவினரைத் தவிர" என்ற வாக்கியம் இடம் பெறுவதால் நானும் என்ற வார்த்தை "அஹ்லுஸ் ஸுன்னத் ",என்றும் எனது தோழர்கள் என்ற வார்த்தை "வல் ஜமாஅத் " என்ற ஒரு வரைவிலக்கணத்தை நமது முன்னோர்களான சத்தியப்பாதையில் பயணித்த சஹாபாக்கள் இடம் படித்த மாணவர்களான தாபியீன்கள் நமக்கு வழங்குகிறார்கள்.

ஆனால் இன்றைய நிலையில் பார்த்தால் அசத்திய கொள்கை உடைய பித்அத்வாதிகள் தங்களை ஸுன்னத் வல் ஜமாஅத் என்று கூறுகிறார்கள்.

இஸ்லாமிய அடிப்படை கொள்கைகளான ஆறு அடிப்படை அம்சங்களில் ஒன்றான (அல்லாஹ்வைக் கொண்டு ஈமான் கொள்வது, மலக்குகளை, வேதங்களை, நபிமார்களை, விதியை, மறுமை நாளை நம்புவது)

இதில் அல்லாஹ்வை நம்புவது என்று பார்த்தோம் என்றால் அதில்

தவ்ஹீத் ருபூபிய்யத்,உலூஹிய்யத்,அஸ்மா வஸ்ஸிபஃத் (அல்லாஹ் ரப்பாகவும், இறைத்தன்மை, அல்லாஹ்வின் அழகிய திருநாமங்கள்) போன்றவைகளில் தவ்ஹீதை முழுமையாக விளங்க வேண்டும். பேரளவில் தவ்ஹீத் என்று வைத்துக் கொண்டால் தவ்ஹீத்வாதியாக ஆகிவிட முடியாது.

அல்லாஹ் வானில் அர்ஷில் இருக்கிறான் ஒவ்வொரு இரவின் இறுதிப் பகுதியில் முதல் வானத்திற்கு இறங்குகிறான் என்று திருமறையும், ஆதாரம் மிக்க நபிமொழியும் கூறுகிறது.

ஆனால் இன்று பெயர் தாங்கிய சில தவ்ஹீத் வாதிகள் அல்லாஹ் அர்ஷில் இருந்து இறங்கிவிட்டால் அர்ஷ் காலியாகி விடாதா ? இன்று அறிவிலிகளாக தங்களது அறியாமையை அறியாதவர்களாக கேட்கிறார்கள்!

அனாச்சாரங்களை அல்லாஹ்வின் திருநாமங்களில் முறையில்லாமல் மாற்று விளக்கங்களை கூறி அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கோட்பாடு இருக்கும் முரண்பாடாக இருக்கும் சில முஸ்லிம்களை காஃபிராக ஆக்குவதற்கு முயற்சிப்பதும் அவர்களுக்கு அழைப்பு பணி செய்வதை மறந்து விடுவதும் ஸலஃப் மன்ஹஜை முறையாக பின்பற்றாதவர்கள் என்று தெளிவாக நமக்கு விளங்குகிறது.

சுருக்கமாகச் சொன்னால் தமிழகத்திலும் இஸ்லாமிய சமூகத்திலும் இன்று சிலர் சிறு அமைப்பில் தங்களை ஸலஃபிகளாக கூறிக்கொண்டு உண்மையான ஸலஃப் மன்ஹஜை முறையாக படிக்காமல் சிந்தனை தெளிவு பெறாமல், தாங்களும் குழம்பி பொதுமக்களையும் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

எச்சரிக்கை!! எச்சரிக்கை!! எச்சரிக்கை!!

அல்லாஹ் எங்கே இருக்கிறான்?

ஒருவர் அஷ்ஷைக் அஹ்மத் அஸ்ஸய்யத் ஹஃபிழஹுல்லாஹு அவர்களிடம் ட்விட்டரில் : காசா மக்களுக்கு என்ன நடக்கிறது என்பது குறித்து அறிந்த அல்லாஹ் எங்கே இருக்கிறான், ஒடுக்கப்பட்டவர்களின் பிரார்த்தனைகளுக்கு அவன் பதிலளிப்பான் என்று எப்படி சொல்ல முடியும்? கேள்வி கேட்டார்.

ஷேக் அவர்கள் ஒரு விரிவான மற்றும் திருப்திகரமான பதிலை அளித்தார்கள், உங்கள் நலனுக்காக நான் இங்கே மேற்கோள் காட்டுகிறேன்:

இத்தகைய ஷைத்தானிய ஊசலாட்டங்களை தவிர்ப்பதற்காக உங்களுக்கு இந்த விளக்கம் தரப்படுகிறது:

1- சர்வவல்லமையுள்ள அல்லாஹ், அவன் நாம் படும் துன்பங்களுக்கு பதிலளிக்கிறான் என்று நமக்குத் தெளிவுபடுத்தியவன், அவன் துன்பத்தின் ஊடாக சோதிக்கவும் செய்கிறான் என்பதையும் ஒன்று சேர தெளிவுபடுத்தியுள்ளான்,

اَمْ حَسِبْتُمْ اَنْ تَدْخُلُوا الْجَـنَّةَ وَ لَمَّا يَاْتِكُمْ مَّثَلُ الَّذِيْنَ خَلَوْا مِنْ قَبْلِكُمْ
مَسَّتْهُمُ الْبَاْسَآءُ وَالضَّرَّآءُ وَزُلْزِلُوْا حَتّٰى يَقُوْلَ الرَّسُوْلُ وَالَّذِيْنَ اٰمَنُوْا مَعَه
مَتٰى نَصْرُ اللّٰهِ اَلَا اِنَّ نَصْرَ اللّٰهِ قَرِيْبٌ

(நம்பிக்கையாளர்களே!) உங்களுக்கு முன் சென்றவர்களுக்கு ஏற்பட்டது போன்ற (கஷ்டமான) நிலைமை உங்களுக்கு வராமலே நீங்கள் சொர்க்கத்தில் நுழைந்து விடலாம் என்று நினைத்துக் கொண்டீர்களோ? (உங்களைப் போல) நம்பிக்கை கொண்ட அவர்களையும் அவர்களுடைய தூதரையும், வாட்டும் வறுமையிலும், நோயிலும் பீடித்து (அவர்கள் வருந்தித் தங்கள் கஷ்டங்களை நீக்கி வைக்க) ''அல்லாஹ்வுடைய உதவி எப்பொழுது (வரும்? எப்பொழுது வரும்?)'' என்று கேட்டதற்கு ''அல்லாஹ்வுடைய

உதவி நிச்சயமாக (இதோ) சமீபத்திலிருக்கிறது'' என்று (நாம் ஆறுதல்) கூறும் வரை அவர்கள் ஆட்டிவைக்கப்பட்டார்கள். (அல்குர்ஆன் : 2:214)

எனவே முதல் தகவலை எடுத்து கொண்டு இரண்டாவது தகவலை விட்டுவிடாதீர்கள்!

2- சர்வவல்லமையுள்ள அல்லாஹ் காசாவில் என்ன நடக்கிறதோ அதைப் போல அல்லது அவற்றை விட மோசமான துன்பங்களை கொண்ட வரலாறுகளை அவனுடைய குர்ஆனில் நமக்குக் கூறியிருக்கிறான். அவன் பிஃர்அவ்னைப் பற்றி கூறுகிறான்:

اِنَّ فِرْعَوْنَ عَلَا فِى الْاَرْضِ وَجَعَلَ اَهْلَهَا شِيَـعًا يَّسْتَضْعِفُ طَآٮِٕفَةً مِّنْهُمْ
يُذَبِّحُ اَبْنَآءَهُمْ وَيَسْتَحْىٖ نِسَآءَهُمْ ‌ اِنَّهٗ كَانَ مِنَ الْمُفْسِدِيْنَ

நிச்சயமாக ஃபிர்அவ்ன், பூமியில் மிகவும் பெருமை கொண்டு, அதில் உள்ளவர்களைப் பல வகுப்புக்களாகப் பிரித்து, அவர்களில் ஒரு பிரிவினரை பலவீனப்படுத்தும் பொருட்டு அவர்களுடைய ஆண் மக்களைக் கொலை செய்து, பெண் மக்களை உயிருடன் வாழவைத்து வந்தான். மெய்யாகவே (இவ்வாறு) அவன் விஷமிகளில் ஒருவனாகவே இருந்தான். (அல்குர்ஆன் : 28:4)

பின்னர் அவன் இந்த ஒடுக்கப்பட்ட மக்களை சிறிது காலத்திற்குப் பிறகு காப்பாற்றினான் என்பதை விளக்கி இருக்கிறான்:

وَاَوْرَثْنَا الْقَوْمَ الَّذِيْنَ كَانُوْا يُسْتَضْعَفُوْنَ مَشَارِقَ الْاَرْضِ وَمَغَارِبَهَا الَّتِىْ بٰرَكْنَا فِيْهَا
وَتَمَّتْ كَلِمَتُ رَبِّكَ الْحُسْنٰى عَلٰى بَنِىْۤ اِسْرَآءِيْلَ بِمَا صَبَرُوْا وَدَمَّرْنَا مَا كَانَ يَصْنَعُ
فِرْعَوْنُ وَقَوْمُهٗ وَمَا كَانُوْا يَعْرِشُوْنَ

இன்னும், எவர்களை இவர்கள் பலவீனமானவர்களென்று (கேவலமாக) எண்ணிக் கொண்டிருந்தார்களோ அந்த மக்களுக்கே மிக்க பாக்கியமுள்ள (அவர்களுடைய) பூமியின் கிழக்குப் பாகங்களையும், மேற்குப் பாகங்களையும் சொந்தமாக்கிக் கொடுத்தோம். ஆகவே, இஸ்ராயீலின் சந்ததிகள் (ஃபிர்அவ்னால் ஏற்பட்ட கஷ்டங்களை) பொறுமையுடன் சகித்துக் கொண்டிருந்ததன் காரணமாக (அவர்களுக்கு) உங்கள் இறைவன் கொடுத்த வாக்கு மிக நல்ல விதமாகவே நிறைவேறிற்று. ஃபிர்அவ்னும் அவனுடைய மக்களும் கட்டியிருந்த மாட மாளிகைகளையும் (உற்பத்தி செய்திருந்த தோட்டம் துறவுகளையும்) நாம் தரைமட்டமாக்கி விட்டோம். (அல்குர்ஆன் : 7:137)

ஆக அவர்கள் பொறுமையாக இருந்ததால் விமோசனத்தை அடைந்தார்கள், ஒரு சம்பவத்தின் முடிவில் தெளிவு கிடைக்குமே தவிர ஆரம்பத்தில் அல்ல என்பதை நாம் முதலில் புரிந்து கொள்ள வேண்டும்.

3- தவறு செய்பவர்களுக்கு அவகாசம் அளித்து, பிறகு அவர்களைத் தண்டிப்பது என்பது அல்லாஹ்வின் நியதியாகும் என்பதை எல்லாம் வல்ல அல்லாஹ் நமக்குத் தெளிவுபடுத்தியுள்ளான்

وَلَا يَحْسَبَنَّ الَّذِيْنَ كَفَرُوْٓا اَنَّمَا نُمْلِىْ لَهُمْ خَيْرٌ لِّاَنْفُسِهِمْ
اِنَّمَا نُمْلِىْ لَهُمْ لِيَزْدَادُوْٓا اِثْمًا وَلَهُمْ عَذَابٌ مُّهِيْنٌ

நிராகரிப்பவர்களை (தண்டிக்காமல்) நாம் தாமதப்படுத்துவது தங்களுக்கு நல்லதென்று நிச்சயமாக அவர்கள் எண்ணிவிட வேண்டாம். (வேதனையை) நாம் அவர்களுக்குத் தாமதப்படுத்துவதெல்லாம் (அவர்களுடைய) பாவம் (மேன்மேலும்,) அதிகரிப்பதற்காகவேதான். மேலும், (முடிவில்) அவர்களுக்கு இழிவு தரும் வேதனை உண்டு. (அல்குர்ஆன் : 3:178

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்: அல்லாஹ் அநீதம் இழைப்பவனை (தண்டிக்காமல்) தாமதப்படுத்துகிறான். (நூல் - ஸஹீஹ் முஸ்லிம் எண் - 3852)

إنَّ اللهَ عزَّ وجلَّ يُمْلِي لِلظَّالِمِ، فإذا أَخَذَهُ لَمْ يُفْلِتْهُ، ثُمَّ قَرَأَ وكَذلكَ أَخْذُ رَبِّكَ، إذا أَخَذَ القُرَى وهي ظَالِمَةٌ إنَّ أَخْذَهُ أَلِيمٌ شَدِيدٌ.

الراوي : أبو موسى الأشعري | المحدث : مسلم | المصدر : صحيح مسلم | الصفحة أو الرقم : ٢٥٨٣ | خلاصة حكم المحدث : [صحيح]

இங்கு இரண்டு நிலைமைகள் சுட்டிக்காட்டப்படுகின்றன ஒடுக்கப்பட்டவர் தொடர்பான ஒரு நிலைமை , அடக்குமுறையாளருக்கு உள்ள மறு நிலைமை, நாம் அவசரப்படாமல் சற்று அமைதி காக்க வேண்டும் அநீதம் இழைத்தவர்களுக்கு தண்டனை கொடுக்காமல் அல்லாஹ் தாமதப்படுத்துவது அவர்களை கடுமையாக தண்டிப்பதற்கு தான் என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

4- இறை விசுவாசிகளுக்கு அல்லாஹ்வின் உதவி கிடைப்பது என்பது வெற்றியின் ஊடாக என்று குறிப்பிடப்படவில்லை, ஆனால் அது துன்பங்களுக்கு எதிராக தாங்கக்கூடிய வலிமையான இதயங்களாக

மாற்றி அதில் மன நிம்மதியை தருகிறான் என்று நாம் விளங்க முடியும்.

اِذْ يُوْحِىْ رَبُّكَ اِلَى الْمَلٰٓئِكَةِ اَنِّىْ مَعَكُمْ فَثَبِّتُوا الَّذِيْنَ اٰمَنُوْا سَاُلْقِىْ فِىْ قُلُوْبِ الَّذِيْنَ كَفَرُوا الرُّعْبَ فَاضْرِبُوْا فَوْقَ الْاَعْنَاقِ وَاضْرِبُوْا مِنْهُمْ كُلَّ بَنَانٍ

(நபியே!) உமது இறைவன் வானவர்களை நோக்கி ''நிச்சயமாக நான் உங்களுடன் இருக்கிறேன். ஆகவே, நீங்கள் நம்பிக்கையாளர்களை உறுதிப்படுத்துங்கள்; (என்று கட்டளையிட்டு) நிராகரிப்பவர்களுடைய உள்ளங்களில் நான் திகிலை உண்டு பண்ணுவேன் (என்று கூறி, நம்பிக்கையாளர்களை நோக்கி) நீங்கள் அவர்களுடைய பிடரிகளின் மேல் வெட்டுங்கள். அவர்களை கணுக்கணுவாகத் துண்டித்து விடுங்கள்'' என்று அறிவித்ததை நினைத்துப் பாருங்கள். (அல்குர்ஆன் : 8:12)

இதைத்தான் தற்பொழுது பாலஸ்தீனத்தில் மனிதர்களால் தாங்க முடியாத துன்பங்களை சகித்துக்கொள்ளும் காசா மக்களாகவும், அதே நேரத்தில் தோல்வியை கொஞ்சம் கொஞ்சமாக தழுவி சகிப்புத்தன்மை அற்றவர்களாக மாறிக்கொண்டிருக்கும் எதிரிகளின் நிலைமையும் நாம் பார்க்க முடிகிறது.

5- அல்லாஹ் தனது வேதத்தில் மறுமை வெகுமதியைப் பற்றியும், இந்த உலகம் மாயையின் இன்பம் என்றும், அது அற்பமானது என்றும், மறுமை நாளில் எந்த ஆன்மாவும் அநீதி இழைக்கப்படாமல் இருக்க அவன் நியாயமான தராசுகளை அமைப்பான் என்றும் கூறி இருக்கிறான்

அங்கு அநீதம் இழைத்தவர்கள் தப்ப முடியாது நியாய தீர்ப்பு நாள் வந்தே தீரும் என்று ஆழமாக நாம் இறை நம்பிக்கையாளர்கள் நம்ப வேண்டும் .

இவ்வுலகத்தில் நடக்கும் விடயங்களை மட்டும் பார்த்து மறுமையை மறந்து போய் துவண்டு விடக்கூடாது.

6- இவ்வாறு இருக்க இறுதி முடிவு இறையச்சம் உடையவர்களுக்கே என்ற இறைவேத வாக்குறுதிகளை நாம் மறந்து விடக்கூடாது , நமக்கு முன் சென்ற சமூக த்தினரின் இறைத் தூதர்களான நூஹ், இப்ராஹீம்,மூஸா,ஈஸா அலைஹிஸ்ஸலாம் போன்றவர்களுக்கு அல்லாஹ் வழங்கிய வெற்றிகளை நாம் நினைவு கொள்ள வேண்டும்.

இந்த வெற்றி முன் சென்ற நபிமார்களின் சமூகத்திற்கு மட்டும் சொந்தமானதல்ல இந்த வாக்குறுதி மறுமை வரை தொடரும் ஆனால் அந்த வெற்றியை இறை உதவியை பெறுவதற்கு முன்பு நாம் பட

வேண்டிய துன்பங்களையும் சோதனைகளையும் நாம் கடந்து தான் செல்ல வேண்டும்.

حَتّٰۤى اِذَا اسْتَيْـَٔسَ الرُّسُلُ وَظَنُّوْۤا اَنَّهُمْ قَدْ كُذِبُوْا جَآءَهُمْ نَصْرُنَا فَـنُجِّىَ مَنْ نَّشَآءُ
وَلَا يُرَدُّ بَاْسُنَا عَنِ الْقَوْمِ الْمُجْرِمِيْنَ

நம் தூதர்கள் (தாங்கள்) பொய்யாக்கப்பட்டு விட்டதாக நினைத்து, நம்பிக்கை இழந்து விடும்வரை (அவ்வக்கிரமக்காரர்களை நாம் விட்டு வைத்தோம்.) பின்னர், நம் உதவி அவர்களை வந்தடைந்தது. நாம் நாடியவர்கள் பாதுகாக்கப்பட்டனர். குற்றம் செய்யும் மக்களை விட்டு நம் வேதனை நீக்கப்படாது. (அல்குர்ஆன் : 12:110)

"எந்த நிலையிலும், ஒரு முஃமின் நிராசையடையக் கூடாது. அல்லாஹ்வின் மேல் நம்பிக்கை இழக்கக் கூடாது. நடப்பவை எல்லாம், அல்லாஹ்வின் நாட்டப்படியே நடக்கின்றன. " என்பதைத் தான், ஷேக் அவர்களின் விளக்கம் நமக்கு கற்றுத்தருகிறது.

பித்அதுக்களை துடைத்து எறியும் உஸூல் (சட்டம்)

مشروعية الأصل لا تستلزم مشروعية الوصف

மஷ்ரூயியதுல் அஸ்லி லா யஸ்தல்ஸிமு மஷ்ரூயிதுல் வஸ்பிஃ

மார்க்கத்தில் வன்மையாக கண்டிக்கப்பட்டு இருக்கும் தடுக்கப்பட்டிருக்கும் ஒரு விடயம் தான் இந்த பித்அதுகள் (மார்க்கத்தில் கூறப்படாத அனாச்சாரங்கள்).

குர்ஆன் சுன்னாவிற்கு முற்றிலும் மாறுபடக்கூடிய சித்தாந்தங்களை மார்க்கமாக ஏற்று நடைமுறை படுத்தி கொண்டிருக்கும் ஒரு கடுமையான சோதனை காலத்தில்தான் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

ஒரு காலகட்டத்தில் மக்கள் அறியாமையில் மார்க்கத்திற்கு புறம்பான விஷயங்களை மார்க்கமாக செய்து வந்தார்கள், அன்றைய காலத்தில் வாழ்ந்த அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையில் பயணித்த அறிஞர் பெருமக்கள் அதை கண்டித்தார்கள் மக்களும் சரி செய்து கொண்டனர்.

ஆனால் இன்றைய நிலை முற்றிலும் மாறுபட்ட மோசமான ஒரு சூழல், மார்க்கத்துக்கு முரணாக காணப்படுகிற இந்த பிதஹத்துகளுக்கு குர்ஆன் ஹதீஸிலிருந்து தவறான முறையற்ற ஆதாரங்களை திரட்டி நியாயப்படுத்தும் சிலர் இன்று சமூகத்தில் தோன்றி,

கொஞ்சம் கூட இறை அச்சம் இல்லாமல் பொதுமக்களை குழப்பி தங்களது மன இச்சைகளை மார்க்கமாக ஆக்க விரும்புகிறார்கள்.

உதாரணமாக மரணித்தவர்களுக்கு பாத்திஹா ஓதுவது,

மஜ்லிஸில் அமர்ந்து கொண்டு அல் பாத்திஹா என்று சப்த்தமாக கூறுவது மக்கள் சூரத்துல் பாத்திஹாவை ஓதுவது பிறகு துவா செய்வது.

ஐந்து நேர தொழுகைக்கு பின்பு செய்யப்படும் கூட்டு துவாக்கள்.

கூட்டாக அமர்ந்து கொண்டு விளக்குகளை அணைத்துக் கொண்டு இருட்டில் திக்ர் செய்தல்.

ஒவ்வொரு வியாழன் அன்றும் மக்ரிப் தொழுகைக்குப் பின்பு அனைவரும் அமர்ந்து பள்ளிவாசலில் சூரா யாசின் ஓதுதல்.

இன்னும் பல பித்அத்துகள் இன்று சர்வ சாதாரணமாக மார்க்க போர்வையில் உலா வருகின்றது.

யார் மார்க்கத்திற்கு புறம்பான இந்த பித்அதுகளை நபி நேசம் என்ற பெயரில் செய்கிறார்களோ அவர்களுக்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களின் சிபாரிசு அரவே கிடைக்காது என்ற ஆதாரப்பூர்வமான நபி மொழிகளை நாம் பார்க்கிறோம்.

இதை சரி என்று தெரிந்த சில அறிஞர் பெருமக்களும் சமூகத்தில் இருக்கத்தான் செய்கிறார்கள்,இதை நாம் சொன்னால் ஒதுக்கப்பட்டு விடுவோமோ மற்றவர்களால் விமர்சிக்கப்படுவோமோ உலக ஆதாயங்கள் கிடைக்காமல் போய்விடுமோ என்ற அடிப்படையில் வாய்மூடி மௌனமாக இருக்கிறார்கள்.

அல்லாஹ்வின் அருளால் ஒவ்வொரு காலகட்டத்திலும் அல்குர்ஆனை ஸுன்னாவை பாதுகாக்க கூடிய சத்திய மார்க்க அறிஞர்கள் தோன்ற தான் செய்கிறார்கள் மார்க்கத்தை உரக்க சொல்லிக்கொண்டே இருக்கிறார்கள்,

எழுதிக் கொண்டே இருக்கிறார்கள் பரப்புரைகள் செய்து கொண்டே இருக்கிறார்கள், அல்லாஹ் அவர்களுக்கு அருள் புரிவானாக !!

مشروعية الأصل لا تستلزم مشروعية الوصف

மஷ்ரூயியதுல் அஸ்லி லா யஸ்தல்ஸிமு மஷ்ரூயிதுல் வஸ்பிஃ

மார்க்கத்தில் அனுமதிக்கப்பட்டிருக்கும் அடிப்படையான ஒரு ஆதாரத்தை வைத்து வர்ணிக்கப்பட்டு இருக்கும் ஒரு விஷயத்தை ஆகுமாக ஆக்குவது கூடாது.

உதாரணமாக தொழுகையில் சூரத்துல் பாத்திஹா ஓதுவது ஆதாரப் பூர்வமான நபிமொழியில் நிரூபணம் செய்யப்பட்ட ஒரு சட்டம்.

இதை வைத்துக்கொண்டு திருமண வைபவங்களில் மரண துக்கங்களில் மஜ்லிஸ்களில் பாத்திஹா ஓதப்படுவது மார்க்கத்தில் இல்லாத ஒரு விஷயம் அல்லாஹ்வின் தூதரோ சத்திய சஹாபாக்களோ சங்கையான நான்கு மதுகபுவின் இமாம்களோ எங்கும் கூறவில்லை.

ஆனால் இந்த வழிகேட்டை மார்க்கமாக மக்களிடத்தில் அறிமுகம் செய்பவர்களிடத்தில் நீங்கள் இது ஒரு பித்அத் ஏன் செய்கிறீர்கள் என்று கேட்டால்

சூரத்துல் பாத்திஹாவை தானே நாங்கள் ஓதுகிறோம், ஹராமான விஷயத்தைச் செய்கிறோம் திருக்குர்ஆன் ஓதுவது கூடாது என்று சொல்ல வருகிறீர்களா என்று நம்மை திசை திருப்பி விடுவார்கள்.

இதைப் பற்றி அறியாத ஞானம் இல்லாத பொதுமக்கள் நம்பியும் விடுவார்கள்.

மார்க்கத்தில் சொல்லப்பட்ட ஒரு தெளிவான ஆதாரத்தை வைத்து மார்க்கத்தில் சொல்லப்படாத நூதனமான செயல்களை மார்க்கமாக சொல்லுவது கூடாது என்பதே இந்த சட்டத்தின் அடிப்படையான கருத்து.

இப்பொழுது ஒரு கேள்வி வரும் இந்த சட்டத்தை எந்த ஆதாரத்தின் அடிப்படையில் எடுத்தீர்கள் இதோ ஆதாரங்கள்.

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اَطِيْعُوا اللّٰهَ وَاَطِيْعُوا الرَّسُوْلَ وَاُولِى الْاَمْرِ مِنْكُمْ فَاِنْ تَنَازَعْتُمْ فِىْ شَىْءٍ فَرُدُّوْهُ اِلَى اللّٰهِ وَالرَّسُوْلِ اِنْ كُنْتُمْ تُؤْمِنُوْنَ بِاللّٰهِ وَالْيَوْمِ الْاٰخِرِ ذٰ لِكَ خَيْرٌ وَّاَحْسَنُ تَاْوِيْلًا

நம்பிக்கையாளர்களே! நீங்கள் அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டு நடங்கள். (அவ்வாறே அல்லாஹ்வுடைய) தூதருக்கும், உங்கள் அதிபர்களுக்கும் கட்டுப்பட்டு நடங்கள். (நம்பிக்கையாளர்களே!) உங்களுக்குள் ஒரு விஷயத்தில் பிணக்கு ஏற்பட்டால் மெய்யாகவே நீங்கள் அல்லாஹ்வையும், இறுதிநாளையும் நம்பிக்கை கொண்டவர்களாயிருந்தால் அதை அல்லாஹ்விடமும் (அவனுடைய) தூதரிடமும் ஒப்படைத்துவிடுங்கள். (அவர்களுடைய தீர்ப்பை நீங்கள் மனதிருப்தியுடன் ஒப்புக் கொள்ளுங்கள்.) இதுதான் உங்களுக்கு நன்மையும், அழகான முடிவும் ஆகும்.

(அல்குர்ஆன் : 4:59)

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "எங்கள் இந்த (மார்க்க) விஷயத்தில் ஒரு பகுதியாக இல்லாத ஒன்றை யார் (புதுமையாக மார்க்கமாக) அறிமுகப்படுத்தினாலும் அது நிராகரிக்கப்படும்". வேறொரு அறிவிப்பில்: "மார்க்க விஷயத்தில் இல்லாததை மார்க்கமாக செய்பவர் நிராகரிக்கப்படுவார்."

நூல்- புகாரி-2697, முஸ்லிம் -1718, அறிவிப்பாளர்- ஆயிஷா ரழியல்லாஹு அன்ஹா, தரம் - ஸஹீஹ்

எந்த ஒரு சட்டத்தை முன்வைத்து சவுதி அரேபியாவின் தலைசிறந்த அறிஞரான அஷ்ஷேக் வலீத் அஸ்ஸயீதான் ஹஃபிழஹுல்லாஹ் அவர்கள் எழுதிய ஒரு அற்புதமான புத்தகம் அரபு தெரிந்த உலமாக்கள் கண்டிப்பாக படிக்க வேண்டிய ஒரு புத்தகம்.

رسالة بالتفريق بين أصل العبادة وصفها

ரிஸாலதுன் பித்தப்ஃரீகி பைன அஸ்லி அல்இபாததி வ வஸ்பிஃஹா

ஐயமும் தெளிவும்

கேள்வி:

இகாமத் சொன்ன பின் பஃஜ்ரு தொழுகையின் முன் சுன்னத்தை தொழலாமா?

பதில்:

இன்று பொதுவாக நமது பள்ளிவாசல்களில் இகாமத் சொல்லப்பட்ட பிறகு சுன்னத்துகள் தொழப்படுகின்றன, குறிப்பாக பஜர் தொழுகையின் முன் சுன்னத்தை வெளிப்பள்ளியிலும் உள்பள்ளியின் ஓரத்திலும் சிலர் தொழுவதை நாம் பார்த்திருக்கிறோம், பிறகு பொறுமையாக வந்து ஜமாத்தில் கலந்து கொள்கிறார்கள் இது மார்க்கத்தில் கூடுமா?

என்ற கேள்வி வலைதளங்களில் பரவலாக சுற்றி வந்து கொண்டிருக்கிறது,

இதில் இரு வகையினர் கருத்து வேறுபாடுகள் கொண்டிருக்கின்றனர், அதில் ஒரு வகையினர் தங்களது கருத்துக்கு முரண்படும் மாற்றுக் கருத்து உடையவர்களை பித்அத் வாதிகள், மத்ஹப் என்பது பிழையானது ஆதாரம் மற்றது என்ற தடித்த வார்த்தைகளால் சாடுவதையும், இதை மிகப்பெரிய ஒரு பிரச்சனையாக சமூகத்தில் பேசும்பொருளாக்கப்படுவதையும் பார்த்து வருகிறோம், இன்னொரு வகையினர் இகாமத் சொல்லப்பட்டு விட்டாலும் முன் சுன்னத் தொழுது தான் தொழுக வேண்டும் என்று பிடிவாதம் செய்கின்றனர் அதுதான் சரியானது ஆதாரம் மிக்கது என்றும் கூறுகின்றனர்.

குர்ஆன் சுன்னாவின் அடிப்படையில், சங்கையான சஹாபாக்கள், இமாம்களின் கருத்துக்களுடன் இதோ நமது பதில்...

நான்கு மத்ஹபுகளில் ஹனபிஃ மத்ஹபைத் தவிர அனைவரும் (மாலிகி, ஷாஃபி, ஹம்பளி) பஜ்ர் தொழுகையின் முன் சுன்னத்துக்கு அதிகப்படியான சிறப்பம்சங்கள் நபிமொழிகளில் வந்த பொழுதும் இகாமத் சொல்லப்பட்டு விட்டால் தொழக்கூடாது என்று கூறுகிறார்கள்.

முன் சுன்னத்திற்குரிய அதிகப்படியான சிறப்புகள் இருப்பதனால் தொழுகை ஜமாத்துடன் முடிந்த பின்பு தொழுது கொள்ளலாம் அல்லது

சூரியன் உதித்த பின்பு தொழுது கொள்ளலாம் என்று கூறுகிறார்கள்.

ஹனபிஃ மத்ஹபில் பஜ்ரு தொழுகையின் முன் சுன்னத்தை இகாமத் சொன்ன பின்னரும் தொழலாம் என்று கூறப்பட்டிருக்கிறது,

முஸன்னபஃ அப்துர் ரஸ்ஸாக் என்ற நபிமொழி கிரந்தத்தில் அப்துல்லா பின் அபூ மூசா ரழியல்லாஹு அன்ஹு அவர்களின் வாயிலாக அறிவிக்கப்படும் ஒரு அறிவிப்பில் அப்துல்லாஹ் இப்னு மஸ்வூது ரழியல்லாஹு அன்ஹு எங்களிடம் வந்தார்கள் இமாம் பஜ்ர் தொழுகையை தொழ வைத்துக் கொண்டிருந்தார், அவர் தனியாக இரண்டு ரக்காத்துகள் தொழுதார் என்று வருகிறது. நூல் -ஹாஷியது இப்னு ஆபிதீன் (1/378)

ஆனால் ஹனபி மத்ஹபில் அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் இந்த செயல் ஆதாரமாக கூறப்படுகிறது.

ஹாபிழ் இப்னு அப்துல் பர் ரஹிமஹுல்லாஹ் தங்களது புத்தகமான தம்ஹீதில் ஒரு அழகான ஒரு சட்டத்தை கூறுகிறார்கள்.

கருத்து வேறுபாடு நிகழும் பொழுது சுன்னத்தை பற்றி பிடிக்க வேண்டும். (நூல் - தம்ஹீத் - 22/74.)

இந்த அறிஞரின் ஆழமான கருத்தின் அடிப்படையில் கருத்து வேறுபாடு நிகழும் பொழுது ஸஹீஹான நபிமொழியை தெளிவான சுன்னத்தை பின்பற்றுவது அடிப்படையான ஒரு விடயம்.

கருத்து வேறுபாடு நிகழும் பொழுது என்ன செய்ய வேண்டும் என்று அல்லாஹ் மிகத் தெளிவாக கூறிவிட்டான்.

يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْۤا اَطِيْـعُوا اللّٰهَ وَاَطِيْعُوا الرَّسُوْلَ وَاُولِى الْاَمْرِ مِنْكُمْ
فَاِنْ تَنَازَعْتُمْ فِىْ شَىْءٍ فَرُدُّوْهُ اِلَى اللّٰهِ وَالرَّسُوْلِ اِنْ كُنْتُمْ تُؤْمِنُوْنَ بِاللّٰهِ وَالْيَـوْمِ
الْاٰخِرِ‌ؕ ذٰ لِكَ خَيْرٌ وَّاَحْسَنُ تَاْوِيْلًا

நம்பிக்கை கொண்டவர்களே! அல்லாஹ்வுக்குக் கீழ்ப்படியுங்கள். அவனுடைய தூதருக்கும் கீழ்ப்படியுங்கள். மேலும், உங்களில் அதிகாரம் உடையவர்களுக்கும் (கீழ்ப்படியுங்கள்.) பின்னர், ஏதேனும் விவகாரத்தில் நீங்கள் கருத்து வேறுபாடு கொண்டால் அதனை அல்லாஹ்விடமும் அவனுடைய தூதரிடமும் திருப்பி விடுங்கள். நீங்கள் அல்லாஹ்வின் மீதும் மறுமைநாளின் மீதும் நம்பிக்கை கொண்டோராயின் இதுதான் சரியான வழிமுறையாகும்; இறுதி விளைவின் கோணத்திலிருந்து பார்த்தாலும் இதுவே சிறந்தது. (அல்குர்ஆன் : 4:59)

"அல்லாஹ்விடமும்", என்றால் திருக்குர்ஆன் "தூதரிடமும்", என்றால் நபிமொழி என்று புரிய முடிகிறது .

عَنْ وَرْقَاءَ، عَنْ عَمْرِو بْنِ دِينَارٍ، عَنْ عَطَاءِ بْنِ يَسَارٍ، عَنْ أَبِي هُرَيْرَةَ، عَنِ النَّبِيِّ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ، قَالَ: (إِذَا أُقِيمَتِ الصَّلَاةُ فَلَا صَلَاةَ إِلَّا الْمَكْتُوبَةُ) رواه مسلم (٧١٠).

அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் ஒரு அறிவிப்பு

"தொழுகைக்காக இகாமத் சொல்லப்பட்டு விட்டால் பர்ளு தொழுகையை தவிர எந்த தொழுகையும் இல்லை" *(நூல் - முஸ்லிம் -710, தரம் - ஸஹீஹ்)*

எனவே நபிமொழி மிகத் தெளிவாக இருக்கிறது இருந்தாலும் இதற்கு ஹனபி மத்ஹபில் கீழ்காணும் அடிப்படையில் விளக்கம் தரப்படுகிறது. இந்த அறிவிப்பில் "வரக்கா", என்பவர் இடம் பெறுகிறார், இவர் அபூ ஹுரைராவோடு தனது அறிவிப்பை நிறுத்தி விடுகிறார் எனவே இந்த நபிமொழி மவ்கூஃப் (موقوف) என்ற தரத்தில் மாறி ஸஹீஹ் என்ற தரத்தை இழந்து விடுகிறது.

இந்த கருத்தை ஹதீஸ் கலை வல்லுனர்கள் ஹம்மாது பின் ஜைது, ஸுஃப்யான் இப்னு உயைனா, ஹாபிழ் அபூ ஸுர்ஆ ரஹிமஹுமுல்லாஹ் போன்றோர் ஆமோதிக்கின்றனர். ஆனால் அதிகப்படியான ஹதீஸ்கலை வல்லுனர்கள் இந்த ஹதீஸை ஸஹீஹ் என்று கூறுகிறார்கள்.

இமாம் புகாரி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் ஆசிரியரான யஹ்யா பின் முயீன் ரஹிமஹுல்லாஹ் இந்த ஹதீஸ் ஸஹீஹ் என்று கூறுவதில் மௌனம் காத்தார்கள் எனவே இமாம் புகாரி அவர்கள் இந்த நபி மொழியை தங்களது கிரந்தத்தில் அறிவிக்கவில்லை.

இவ்வாறு இருந்தும் இமாம் புகாரி அவர்கள் மேலே அறிவிக்கப்பட்ட இந்த ஹதீஸின் கருத்தின் அடிப்படையில்

"புகாரியில் இகாமத் சொல்லப்பட்ட பின்பு எந்த தொழுகையும் இல்லை" என்ற தலைப்பை எழுதி இருக்கிறார்கள் இது அவர்களின் நிலைப்பாட்டை நமக்கு தெளிவாக உணர்த்துகிறது.

அது மட்டுமில்லாமல் இகாமத் சொல்லப்பட்டு விட்டால் தொழுகை

கூடாது என்ற கருத்தில் வரக்கூடிய மற்ற ஸஹீஹான அறிவிப்புகள் இருக்கின்றன.

நபி அவர்கள் ஒருமுறை இகாமத் சொன்ன பின்பு சுன்னத் தொழுத நபரை பார்க்கிறார்கள் தொழுகை முடிந்த பின்பு அவரிடம் பஃஜ்ரு தொழுகை நான்கு இரக்காத்தாக மாறிவிட்டதா என்று கேட்கிறார்கள் ? நான்கு இரக்காத்தாக மாறிவிட்டதா என்று கேட்கிறார்கள்? (நூல் -புகாரி - 663 முஸ்லிம் -711)

மேல் கூறப்படும் இந்த நபிமொழி இகாமத் சொல்லப்பட்ட பின்பு முன் சுன்னத் தொழுகை கூடாது என்று தெளிவான தடை இருப்பதை தெளிவுபடுத்துகிறது.

ஹனபிஃ மத்ஹபில் ஸுனனு பைஹகியில் வரும் ஒரு அறிவிப்பை தங்கள் கருத்திற்கு ஆதாரமாக கூறுகிறார்கள்.

அபூஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் நபி அவர்கள் சொன்னதாக கூறுகிறார்கள்: தொழுகைக்கு இகாமத் சொல்லப்பட்டு விட்டால் எந்த தொழுகையும் (ஸுன்னத் உங்கள் ,நபிஃில்கள்)கிடையாது பர்ளு தொழுகையையும் பஃஜ்ரின் முன் சுன்னத்தையும் தவிர. (நூல் - பைஹகி -5/291, தரம் - பலகீனம்)

وقد وردت رواية تستثني سنة الفجر من هذا الحكم، وهي ما رواه البيهقي في "السنن الكبرى" (٥ / ٢٩١)؛ حيث قال: وَقَدْ رُوِيَ عَنْ حَجَّاجِ بْنِ نُصَيْرٍ، عَنْ عَبَّادِ بْنِ كَثِيرٍ، عَنْ لَيْثٍ، عَنْ عَطَاءٍ، عَنْ أَبِي هُرَيْرَةَ رَضِيَ اللهُ عَنْهُ، أَنَّ رَسُولَ اللهِ صَلَّى اللهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ: (إِذَا أُقِيمَتِ الصَّلَاةُ فَلَا صَلَاةَ إِلَّا الْمَكْتُوبَةَ، إِلَّا رَكْعَتَيِ الصُّبْحِ).

وهذا سند ضعيف. قال البيهقي رحمه الله تعالى: "وهذه الزيادة لا أصل لها، وحجاج بن نصير، وعباد بن كثير ضعيفان.

இந்த ஹதீஸை அறிவிக்கும் இமாம் பைஹகி அவர்கள் இந்த ஹதீஸை அறிவித்த பின்பு இதில் இடம் பெற்று இருக்கும் "பஃஜ்ரின் முன் சுன்னத்தையும் தவிர ", என்ற இந்த அதிகப்படியான அறிவிப்பு ஆதாரம் அற்றது இதை அறிவிக்கும் ஹஜாஜ் பின் நுஸைர், அப்பாது பின் கதீர் பலகீனமான அறிவிப்பை அறிவிக்கக்கூடியவர்கள் என்று அவர்களே கூறியிருக்கிறார்கள்.

இங்கு இரண்டு முக்கியமான விடயங்கள் கவனிக்கத்தக்கது.

முதலாவது- ஆதாரம்மிக்க ஸஹீஹான ஹதீஸில் இகாம சொல்லப்பட்டு விட்டால் முன் சுன்னத் தொழுகை தடை என்று வந்திருப்பதால் தொழாமல் இருப்பது சிறந்தது.

இரண்டாவது- அவ்வாறு ஹனபி மத்ஹபின் அடிப்படையில் தொழும் நபர்களை பித்அத் வாதிகள் என்றோ மதுஹபுகள் பிழையானது என்று கொச்சைப்படுத்தும் தடித்த வார்த்தைகள் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டியவைகள்.

உஸூலுல் பிஃக்ஹூ கலை அடிப்படையில் ஒரு நபிமொழி தெளிவாக ஆதாரம் மிக்கதாக வரும் பொழுது நபித்தோழரின் வார்த்தை ஆதாரமாக எடுத்துக் கொள்ளப்படாது என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

எனவே பஜ்ர் தொழுகையின் முன் சுன்னத் இகாமத் சொல்லப்பட்டு விட்டால் தொழுவதை தவிர்த்துக் கொள்ள வேண்டும், இகாமத் சொல்லப்படுவதற்கு முன்பு தொழுகையை ஆரம்பித்து விட்டால் தவறில்லை.

முன் சுன்னத் தொழுவதற்காக தக்பீர் கட்டியவுடன் இகாமத் சொல்லப்பட்டு விட்டால் தொழுகையை விட்டு விட்டு ஜமாத்தில் இணைந்து கொள்ள வேண்டும்.

பஃஜ்ரு தொழுகையின் முன் சுன்னத்திற்கு அதிகப்படியான சிறப்புகள் வந்து இருப்பதினால் பள்ளிக்குச் செல்வதற்கு முன்பு வீட்டில் தொழுவது சுன்னத்தாகும், அல்லது இகாமத் சொல்லுவதற்கு ஐந்து நிமிடம் முன்பு பள்ளிக்கு வந்து முன் சுன்னத்தை தொழ வேண்டும்,இகாமத் சொல்லப்பட்டு விட்டால் தொழுது முடித்த பின்பு தொழுது கொள்வது சிறந்தது.

அல்லாஹு அஃலம்.

அறியாமையின் அடிப்படையில் மன்னித்தல்!

அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஆ கொள்கையின் அடிப்படையில் சமூகத்தில் ஏற்படும் கொள்கை ரீதியான பிரச்சினைகளை கையாளும் பொழுது வழிகேடுகள் ஏற்படுவதற்கு வாய்ப்புகள் மிகவும் குறைவாக இருக்கும், குர்ஆன் சுன்னாவின் அடிப்படையில் இந்த கொள்கை கோட்பாடுகள் அமைக்கப்பட்டிருப்பதால் நாம் எளிதாக தீர்வுகளை பெற்றுக் கொள்ளலாம்.

எனது உம்மத்தினர் 73 பிரிவினராகப் பிரிவார்கள். அவர்களில் ஒரு கூட்டத்தினரைத் தவிர ஏனைய அனைவரும் நரகம் செல்வர் என்று கூறினார்கள்: அப்போது அல்லாஹ்வின் தூதரே அவர்கள் (அந்த ஒரு கூட்டம்) யார் என்று கேட்கப்பட்டது. அதற்கு நபியவர்கள் நானும் எனது ஸஹாபாக்களும் இருக்கின்ற இந்த கொள்கையைப் பின்பற்றி நடப்பவர்கள் என்று பதிலளித்தார்கள். (அறிவிப்பவர் அபூஹுரைரா (ரழி), நூல்: திர்மிதீ 2641)

இந்த நபி மொழியின் அடிப்படையில் நானும் எனது ஸஹாபாக்களும் என்ற கருத்தின் அடிப்படையில் தான் அஹ்லுஸ் ஸுன்னத் (நானும்) வல் ஜமாஅத் (எனது ஸஹாபாக்கள்) உருவாகியது.

நமது முன்னோர்களான நபித்தோழர்கள் அவர்களின் மாணவர்கள் தாபியீன்களான சங்கையான இமாம்கள் வகுத்துக் கொடுத்திருக்கும் கொள்கை தான் அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத், அதாவது நபி வழியை ஸுன்னாவை நபித்தோழர்களின் புரிதலில் மார்க்க விஷயங்களை பற்றிப் பிடித்துக் கொள்வது என்ற கருத்து.

இந்த அடிப்படையில் தவ்ஹீதுக்கு ஏத்துவ கொள்கைக்கு முரண்படும் ஷிர்க், பித்ஆ (இணை வைத்தல், மார்க்க பெயரில் அனாச்சாரங்கள் புரிதல்) அவ்வப்பொழுது நமது முன்னோர்களால் இந்த அஹ்லுஸ் ஸுன்னா என்ற ஒரு அளவுகோலில் பிரச்சனைகளை நிறுத்து தீர்வுகள் எடுக்கப்பட்டு வருகிறது.

ஆனால் ஒரு சில தருணங்களில் மாற்றுக்கருத்துடைய இணை வைத்தல் அனாச்சாரங்கள் செய்பவர்களை தடித்த வார்த்தைகளால் மார்க்கம் வரையறுத்த அந்த வரையறைக்குள் நின்று அழைப்புப் பணி செய்யாமல் தனது கொள்கைக்கு மாறுபடுபவர்களை முஷ்ரிக் என்றும் காஃபிர் என்றும் சொல்லக்கூடிய சில நபர்களை அமைப்புகளை பார்க்கிறோம்.

உதாரணமாக தர்காவிற்கு சென்று மரணித்த நல்லடியார்களிடத்தில் அல்லாஹ்விடம் கேட்கும் துவாவை போன்று கேட்டல், சஜ்தா செய்தல், ஃபாத்திஹா ,மௌலூது போன்ற மார்க்கத்திற்கு புறம்பான ஷிர்க்கான பித்ஆவான விடையங்களை செய்பவர்களை நாம் ஆவேசத்துடன் இறை மறுப்பாளர்களாகவும் , இணை வைப்பாளர்களாகவும் ஆக்கி விடுகிறோம்.

உண்மையில் அவர்களின் கொள்கைகள் வழிகேடானது இறை மறுப்புக்கு வழி வகுக்கும் விடையங்கள் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் மார்க்கத்தில் ஒருவரை காபிர் என்று சொல்வதற்கோ, வழிகேடர் என்று சொல்வதர்க்கு சில நிபந்தனைகள் இருக்கின்றன.

இதைப் பற்றி நாம் எனது வேறு சில கட்டுரைகளில் விளக்கமாக கூறியிருக்கிறேன்.

இங்கு சொல்ல வேண்டிய ஒரு முக்கியமான விடயம் என்னவென்றால் ஒரு முஸ்லிம் அறியாமையில் இந்த தவறுகளை செய்கின்றான் என்று சொன்னால் அறியாமையின் அடிப்படையிலே அவனை மன்னித்து அவனுக்கு அழைப்பு பணி செய்து அவனை மீண்டும் சரியான பாதைகள் கொண்டு வருவது தான் அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையின் அடிப்படை விட்டு விட்டு அவனை இறை மறுப்பாளனாக மாற்றுவது காபிர் என்று சொல்வது அவனை மீண்டும் வழிகேட்டில் கொண்டு செல்வதற்கு காரணமாக அமைந்து விடும்.

இந்த வகையான ஒரு அணுகுமுறைக்கு இஃதார் பில் ஜஹ்ல் (அறியாமையின் அடிப்படையில் மன்னித்தல்) என்று மார்க் அறிஞர்கள் கூறுகிறார்கள். இந்த தலைப்பின் கீழ் காரசாரமான விவாதங்கள் அரபு மொழியில் பல புத்தகங்களாக எழுதப்பட்டிருக்கிறது.

கடந்த காலங்களில் இமாம் இப்னு ஜரீர் அத்தபரீ, அல்கராபிஃ, இமாம் ஷவ்கானி ரஹிமஹுமுல்லாஹ் சம கால அறிஞர்களில் அஷ்ஷேக் ஹமத் பின் நாசிர் பின் முஅம்மர், அஷ்ஷேக் அப்துல்லாஹ் அபூ பதீன் ரஹிமஹுமுல்லாஹ் போன்றவர்கள் அறியாமை அடிப்படையில் மன்னித்தல் என்ற இந்த அணுகுமுறையை மறுக்கிறார்கள்.

ஒருவர் ஷிர்க் வைத்து விட்டால் அல்லாஹ்விடம் தவ்பா செய்து

மன்னிப்பு கேட்காமல் இருந்தால் அவர் முஸ்லிமாக இருந்தாலும் காபீஃர், முஷ்ரிக் என்று கூறுகிறார்கள், அவர்களை முஸ்லிம்களின் மண்ணறைகளில் அடக்கக் கூடாது, ஜனாஸா தொழுகையில் கலந்து கொள்ளக் கூடாது, என்று கூறி விடுகிறார்கள்.

ஆனால் வேண்டுமென்றே முழு மனதுடன் இணைவைப்பான காரியங்களில் ஈடுபடுபவர்களை முஷ்ரிக் என்று கூறுவதில் எந்த தயக்கமும் இல்லை, ஆனால் அவர்களும் கூட அறியாமையில் அடிப்படையில் அதிகமாக இந்த தவறுகளை செய்கிறார்கள் என்பதே கள நிலவரம்.

இன்னும் சிலர் அனைத்து ஆதாரங்களையும் அறிந்து தெளிவான விளக்கங்கள் பெற்ற பின்பும் வழிகேட்டில் பயணிக்க விரும்புவது கவலைக்குரிய விடயம், அல்லாஹ் அவர்களுக்கு நேர்வழியை காட்ட வேண்டும்.

ஆனால் கடந்த காலங்களில் இமாம் இப்னு ஹஸ்ம், இப்னு ருஷ்து, இப்னு தைமிய்யா ரஹிமஹுமுல்லாஹ் சமகால அறிஞர்களில் அல்லாமா ஸாலிஹ் அல் உஸைமீன், அஷ்ஷேக் அப்துர் ரஹ்மான் அல் முஅல்லிமி ரஹிமஹுமுல்லாஹ் போன்றவர்கள் அறியாமையில் ஷிர்க், பித்ஆ செய்தால் அவர்களை காஃபிர் என்று சொல்லக்கூடாது என்று கூறுகின்றனர்.

ஆக இந்த தலைப்பில் எனது ஆசிரியரும் சவுதி அரேபியாவின் மக்கா நகரில் உம்முல் குறா இஸ்லாமிய பல்கலைக்கழகத்தின் அகீதா துறை பேராசிரியருமான அஷ்ஷேக் ஸுல்தான் அல்உமைரி ஹஃபிழஹுல்லாஹ்

இஷ்காலியதுல் இஃதாரி பில் ஜஹ்ல் - إشكالية الإعذار بالجهل

என்ற தலைப்பில் 351 பக்கங்கள் கொண்ட ஒரு ஆய்வு புத்தகத்தை அரபு மொழியில் எழுதி இருக்கிறார்கள், மிக நேர்த்தியாக நடுநிலையுடன் ஆய்வு செய்து இருக்கிறார்கள்.

மார்க்க கல்வியை முறையாக படித்துக் கொண்டே இருக்க வேண்டிய தேவை நமக்கு இருக்கின்றது என்பதை இது போன்ற புத்தகங்கள் நமக்கு அவ்வப்போது உணர்த்துகிறது.

கடந்த உம்ராவில் அஷ்ஷேக் ஸுல்தான் அல்உமைரி ஹஃபிழஹுல்லாஹ் அவர்களை அவரின் வீட்டில் நேரில் சந்தித்து அவரது கரங்களில் இந்த புத்தகத்தை அன்பளிப்பாக பெற்றது நெகிழ்வைத் தருகிறது.

அல்லாஹு அஃலம்.

இறைபண்புகளில்
அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கையாளும்
மூன்று முக்கியமான சட்டங்கள்

1- திருக்குர்ஆனின் வசனங்களில் இடம்பெறும் இறைப் பண்புகளை இடம்பெற்று இருப்பதை போன்று உறுதி செய்வது.

2-உறுதி செய்யப்பட்ட இறைப் பண்புகளை படைப்புகளுடன் ஒப்பிடும் தன்மையை வேரோடு அறுப்பது.

3-படைப்புகளுடன் ஒப்பிடும் தன்மையை அறவே தவிர்ப்பதுடன் இறை பண்புகளின் நிலைபாடுகளை அறிய விரும்பும் எண்ணங்களை அறவே தவிர்த்துக் கொள்வது.

உதாரணமாக

اَلرَّحْمٰنُ عَلَى الْعَرْشِ اسْتَوٰى

அர்ரஹ்மான் (தன் கண்ணியத்திற்குத் தக்கவாறும், மகத்துவத்திற் குரியவாறும் அர்ஷின் மீதிருப்பது அவனுக்கு எவ்வாறு தகுமோ அவ்வாறே) அவன் அர்ஷின் மீது உயர்ந்து (நிலைபெற்று) விட்டான்.
(அல்குர்ஆன் : 20:5)

1-இந்த அத்தியாயத்தில் இடம் பெற்றிருக்கும் அல்லாஹ்வின் பண்பான அர்ஷின் மீது இருக்கிறான் என்பதை உறுதி செய்வது.

2-அர்ஷின் மீது இருக்கிறான் என்ற இந்த இறைப் பண்பை படைப்புகளுடன் ஒப்பிடுவதை அறவே தவிர்த்துக் கொள்ள வேண்டும்.

(அல்லாஹ்வின் தகுதிக்கு ஏற்ப அவன் அர்ஷில் இருக்கிறான் என்று நம்ப வேண்டும், இதற்கு அல்லாஹ் அர்ஷிலிருந்து ஆட்சி செய்கிறான் என்று அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்தின் கோட்பாட்டிற்கு மாறாக விளங்கக்கூடாது, அல்லாஹ்வின் தூதர் அவர்களினால் வார்த்தெடுக்கப்பட்ட

நபித்தோழர்களின் புரிதலுக்கு மாற்றமாக இருக்கும் வழிகேடர்களின் கொள்கைகளை தவிர்த்துக் கொள்வது.)

3- அல்லாஹ் அர்ஷில் எவ்வாறு இருப்பான் என்ற சிந்தனைகளை எழாமல் அறவே அதை தவிர்ப்பது.

சுருக்கமாக இறை பண்புகளை எடுத்து உரைக்கும் இறை வசனங்கள் நபிமொழிகளை நாம் அதிகம் விவாதிக்காமல் ,நபித்தோழர்களைப் போல அமைதி காக்க வேண்டும், அந்த வசனங்களில் இடம் பெற்றிருக்கும் இறை பண்புகளை மாற்றுக் கருத்துக்கள் தெரிவிக்காமல் ஒப்பு உவமை செய்யாமல் எவ்வாறு எப்படி என்று கேள்விகள் கேட்காமல் உள்ளது உள்ளதைப் போன்று அவ்வாறே நம்ப வேண்டும்.

இதுதான் அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கோட்பாடும் நெறி பிறழாமல் இருக்க உதவும் சட்டங்களுமாகும்.

நூல் - அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்திடம் காணப்படும் சட்டங்கள் - டாக்டர் வலீத் அஸ்ஸுஐதான் ஸத்ததஹுல்லாஹ்.

شرح قواعد المذاعة في اهل السنة و الجماعة – د.وليد السعيدان سدده الله

பரக்கத்தும் தபர்ருக்கும்

இன்று நமது சமூகத்தில் பரக்கத் என்ற பெயரில் பல அனாச்சாரங்கள் மார்க்க போர்வையில் நிகழ்த்தப்படுகின்றது,

திருக்குர்ஆன் ஓதிய பின்பு இனிப்புகள் பங்கிட்டு அதை பரக்கத் பொதிந்த "தபர்ருக்", என்று சொல்கிறார்கள்.

மார்க்கத்தில் அல்லாஹ்வும், அல்லாஹ்வின் தூதரும் இதற்கு மிக முக்கியத்துவம் அளித்ததை போன்று, இன்று ஒரு தோற்றத்தை சிலர் மார்க்க பெயரில் அரங்கேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

பரக்கத் என்றால் என்ன?

மார்க்கத்தில் அதை எவ்வாறு கையாள வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது என்று பார்ப்போம்,

وَلَوْ اَنَّ اَهْلَ الْقُرٰٓى اٰمَنُوْا وَاتَّقَوْا لَـفَتَحْنَا عَلَيْهِمْ بَرَكٰتٍ مِّنَ السَّمَآءِ وَالْاَرْضِ
وَلٰـكِنْ كَذَّبُوْا فَاَخَذْنٰهُمْ بِمَا كَانُوْا يَكْسِبُوْنَ

ஆனால், அவ்வூர்களில் வாழ்ந்த மக்கள் இறைநம்பிக்கை கொண்டு, இறையச்சமுள்ள நடத்தையை மேற் கொண்டிருப்பார்களேயானால் வானம், பூமி ஆகியவற்றின் அருள்வளங்க(ளின் வாயில்)கள் அனைத்தையும் அவர்களுக்கு நாம் திறந்து விட்டிருப்போம். ஆனால், அவர்கள் சத்தியத்தைப் பொய்யென்று உரைத்தார்கள். எனவே, அவர்கள் சம்பாதித்துக் கொண்டிருந்த தீய செயல்களின் காரணமாக அவர்களை நாம் தண்டித்தோம். *(அல்குர்ஆன் : 7:96)*

மேல் காணும் இறை வசனத்திலிருந்து "பரக்கத்", என்பது அல்லாஹ்வின் அருள் என்பதை தெரிந்து கொள்ள முடிகிறது.

இன்று இந்த அல்லாஹ்வின் அருளை, பரக்கத்தை பெறுவதற்கு

மார்க்கம் கூறிய அடிப்படையில் கையாளாமல், மனம் தோன்றி அடிப்படையில் பித்அத்தான முறையில் இன்று அணுகப்படுகிறது.

பரகத் என்றால் நிலையானதும் அதிகமானதும் என்று அர்த்தம்.

செய்யும் செயல்களில் இருக்கும் பொருள்களில் அபிவிருத்தியை அல்லாஹ் வழங்குகிறான்.

பரக்கத்தை பெறுவதற்கு மார்க்கம் சொல்லும் உதாரணம் -

நபி ஸல் அவர்கள் கூறினார்கள்:- ‘பூமியில் உள்ள எல்லா நீரை விடவும் ஜம்ஜம் நீர் சிறந்ததாகும் மேலும், பசிக்கு’ உணவாகவும் நோய்களுக்கு நிவாரணமாகவும்" இருக்கின்றது. (அறிவிப்பவர்: இப்னு அப்பாஸ் (ரலி), தப்ரானீ 11167, இப்னு ஹிப்பான்)

மேல் காணும் நபி மொழியில் ஜம்ஜம் தண்ணீர் பருகுவதற்கும் உணவாகவும் பயன்படுத்தலாம் என்று தெளிவாகிறது.

ஜம்ஜம் தண்ணீர் பரக்கத் பெற்ற ஒன்று, ஆனால் அந்த பரகத்தை பெறுவதற்காக சிலர் வீட்டில் மூளைகளில் தெளிப்பதும் வாகனங்களில் தெளிப்பதும் உடம்பில் தெளித்துக் கொள்வதும் இன்னும் சிலர் ஒழு செய்வதும் இவ்வாறு பரகத்தை அடைய முயற்சி செய்கிறார்கள்.

இதுதான் மார்க்கம் கூறிய நபிவழியாகும்.

இதோ பரக்கத் தொடர்பான உஸூல்களை பார்ப்போம்.

பரக்கத் தொடர்பான உஸூல்கள்

பரக்கத்தை வழங்குபவன் அல்லாஹ்

பொருள்களில் பரக்கத்தை அடைய வேண்டுமென்றால் அதற்கு மார்க்கம் குர்ஆன் ஸுன்னா மூலம் ஆதாரத்தை கொடுத்திருக்க வேண்டும், மார்க்க ஆதாரங்கள் நிலையான ஒன்று.

(أمور توقيفية)

காலங்களில் பரக்கத்தை அடைய வேண்டுமென்றால் அதற்கு மார்க்கம் ஆதாரத்தை கொடுத்திருக்க வேண்டும், மார்க்க ஆதாரங்கள் நிலையான ஒன்று.

(أمور توقيفية)

இடங்களில் பரக்கத்தை அடைய வேண்டுமென்றால் அதற்கு மார்க்கம் ஆதாரத்தை கொடுத்திருக்க வேண்டும், மார்க்க ஆதாரங்கள் நிலையான ஒன்று.

(أمور توقيفية)

பரக்கத் இரண்டு வகைப்படும்

1- தானும் பரக்கத்தை கொண்டிருக்கும் பிறருக்கும் பரக்கத் சென்றடையும்.

2- தன்னிடத்தில் மட்டும் இருக்கும் பிறருக்கு சென்று அடையாது.

முதல் வகை பரகத் அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுடைய பரக்கத், அவர்கள் வாழும் காலத்தில் அவர்கள் உமிழ்நீரில் உமிழ்ந்தால் அது சஹாபாக்கள் எடுத்துக் கொள்வார்கள் காரணம் தங்களுடைய பரக்கத் பிறருக்கும் சென்றடையும், தங்கள் ஒழு செய்தால் சஹாபாக்கள் அந்த தண்ணீரை பரக்கத் பெறுவதற்கு பயன்படுத்துவார்கள், நபி அவர்களின் வேர்வை பரக்கத் அதை சஹாபாக்கள் அடைவதற்காக பயன்படுத்தினார்கள்.

ஆனால் இன்று நம்பியவர்கள் பயன்படுத்திய பொருள்கள் அவர்கள் அணிந்த காலணிகள் அவர்கள் அணிந்த ஆடைகள் என்று வலைதளங்களில் பரவி வரும் வீடியோக்களுக்கு எந்த ஆதாரமும் இல்லை.

நபியவர்கள் தொடர்பாக எந்த ஒரு விஷயம் மார்க்கத்தில் இருந்தாலும் அதை நம்மை விட நபித்தோழர்களும் அவர்களின் மாணவர்களும் நமது சங்கையான நான்கு மத்ஹபுகளின் இமாம்களும் எந்த புத்தகத்திலோ எந்த வரலாற்றிலோ இந்த இடத்தில் நபி அவர்கள் பயன்படுத்திய பொருள் இருக்கிறது என்று ஆதாரத்தோடு குறிப்பிட்டிருப்பார்கள்,

இன்னும் சொல்லப்போனால் இந்த பொருள்களுக்கு சங்கிலி தொடரையும் வைத்திருக்கிறார்கள், ஆனால் அதை ஆய்வு செய்து பார்த்தோம் என்றால் பொய்யான அறிவிப்புகள் இருக்கின்றன.

எனவே நபியவர்கள் பெயரில் இந்த பித்அத்துகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றது. மக்களே எச்சரிக்கை!

இரண்டாவது வகை பரக்கத் தன்னிடத்தில் இருக்கும் பிறருக்கு அதை வழங்க முடியாது.

உதாரணம் திருக்குர்ஆன் பரகத்தான அல்லாஹ்வின் அருளைப் பெற்ற ஒரு வேதம் எந்த சந்தேகமும் இல்லை.

அந்த பரக்கத் திருக்குர்ஆனோடு மட்டுமே இருக்கும், அதை ஓதினால் நன்மை கிடைக்கும் அதன்படி அமல் செய்தால் ஹிதாயத் கிடைக்கும் இது மார்க்கம் தெளிவாகச் சொல்கிறது.

ஆனால் அதை முகத்தில் தடவிக் கொள்வதும் தலையில் வைத்துக்

கொள்வதும் உடம்பில் தடவிக் கொள்வதும், திருக்குர்ஆனின் பக்கங்களை தாயத்து கட்டிக் கொள்வதும், திருக்குர்ஆனை அவமதிப்பு செய்வதாகும். அந்த பரக்கத் பிறருக்கு சென்றடையாது.

சில அறிஞர் பெருமக்களின் உடலை தடவி தங்களது உடலில் பரக்கத்தை பெற்றுக்கொள்கிறேன் என்று தடவி கொள்கிறார்கள்.

உண்மையில் அந்த அறிஞர்களின் பரகத் அவர்களுடன் மட்டும் தான் இருக்கும் அந்த பரக்கத் பெறுவதற்கு சென்றடையாது.

காபத்துல்லாவை தவாப் செய்யும் பொழுது தனது கைக்குட்டை கர்ச்சிப்புகளை அதில் தேய்த்து பரக்கத் எடுப்பதற்கு முயற்சி செய்வது, ஹஜ்ரல் அஸ்வத் கல்லை கைக்குட்டையால் தேய்த்து பரக்கத் எடுக்க முயற்சிப்பது.

அவ்வாறு இருந்தால் நம்மை விட மார்க்கத்தை ஆழமாக தெரிந்த புரிந்து வைத்திருந்த சஹாபாக்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் பரக்கத்தை அவர்களின் காலத்தில் பெறுவதற்கு போட்டி போட்டுக் கொண்டு முயற்சி செய்தவர்கள், நபியவர்கள் வபாத்தான பின்பு அபூபக்கர் உமர் உஸ்மான் அலி ரலியல்லாஹு அன்ஹும் போன்ற நபித்தோழர்கள் ஊடாக ஏன் பரகத்தை தேடவில்லை.

அவர்களின் வியர்வையை அவர்களின் உமிழ்நீரை அவர்கள் உளூ செய்த தண்ணீரை ஏன் பரக்கத்தாக எடுத்துக் கொள்ளவில்லை....???

ஏதாவது ஸஹீஹான அறிவிப்புகள் இருக்குமா?

பரக்கத் தன்னுடைய பண்பு நலனை தன்வசப்படுத்தி இருக்கிறது, இதை அடைவதற்கு நமக்கு மார்க்கத்தில் ஆதாரங்கள் தேவை ஆதாரங்கள் இல்லாமல் பரக்கத்தை அடைவதற்கு நாம் முயற்சி செய்தால் அது பாவமும் பித்அத்தும் வழிகேடுமே அன்றி வேறில்லை.

நூல் - ஷரஹ் அல்கவாயிதுல் அல்முதாஆ பீஃ அஹ்லிஸ் ஸுன்னத் வல் ஜமாஅத்

யார் இந்த
அஷ்ஷேக் வலீத் அஸ்ஸயீதான்...!

நாம் வாழும் இந்த குழப்பமான காலத்தில் அல்லாஹ்வின் அருளால் உசூல்கள் மற்றும் அடிப்படையான சட்டங்களின் ஊடாக மார்க்க கல்விகளை குறிப்பாக அகீதா துறையில் அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையில் கற்பிப்பதில் தேர்ச்சி பெற்ற வேறு சிறந்த அறிஞரை எனக்குத் தெரியவில்லை என்று சொல்லும் அளவிற்கு உண்மையாகவே மிகவும் கல்வி ஞானத்தில் உயர்ந்தவர் அஷ்ஷேக் வலீத் அல்-சயீதான் ஹஃபிழஹுல்லாஹ், الشيخ وليد السعيدان حفظه الله

சவுதி அரேபியாவில் ரியாத் நகருக்கு அருகில் இருக்கும் திலம் என்ற பகுதியில் உள்ள இஸ்லாமிய கல்வி நிலையத்தில் ஆசிரியராக இருக்கிறார்கள். 70க்கும் அதிகமான புத்தகங்கள் அரபு மொழியில் எழுதியிருக்கிறார்கள்.

குறிப்பாக "ஷரஹ் அல்கவாயிதுல் அல்முதாஆ பீஃ அஹ்லிஸ் ஸுன்னத் வல் ஜமாஆ " (1598 பக்கங்கள்)

"شرح القواعد المذاعة في اهل السنة و الجماعة"

இவரைப் போல் நேர்த்தியாக அசத்திய கொள்கைகளை எளிதாக மாணவர்களுக்கு எழுத்தில் படித்துக் கொடுக்கும் ஒரு புதிய பாதையை யாரும் வகுக்கவில்லை என்றே கூறலாம், இக்கலையில் புத்தகங்களும், படைப்புகளும் ஏராளமாகக் கிடப்பவை என்று நீங்கள் கருதலாம்!

ஆனால் யார் அதை நேர்த்தியாக மக்களுக்கு எளிய முறையில் புரிய வைப்பார்கள் அதுதான் மிக முக்கியம்.

அறிஞர் அவர்கள் எழுதிய புத்தகங்களில் மிகவும் பிரபலயமானவைகளில் கீழ்காணும் புத்தகங்களும் உள்ளடங்குவைகளாகும் .

١- اتحاف أهل الالباب بمعرفة التوحيد والعقيدة في سؤل وجواب، دار الأصحاب للنشر

والتوزيع، الرياض، 2010

٢-اتحاف النبهاء بضوابط الفقهاء، دار اللؤلؤة للنشر والتوزيع، مصر، ٢٠٢١

٣-تلقيح الأفهام العلية بشرح القواعد الفقهية، دار اللؤلؤة للنشر والتوزيع، مصر، ٢٠٢١

٤-أحكام الكلام على لامية شيخ الإسلام، دار اللؤلؤة للنشر والتوزيع، مصر، ٢٠٢١

٥- أصول الفقه على منهج أهل السنة -تأصيلا وتدليلا وتفريعا، دار القلم للطباعة والنشر والتوزيع، دمشق، ٢٠٢٢

٦-الانجم الزهرات في حل اخصر المختصرات. الى متى عدم الحكمة.

٧-تحرير القواعد ومجمع الفرائد.

٨-تذكير الأماجد بأدلة و فروع قواعد المصالح والمفاسد حكم التصوير الفوتوغرافي.

٩-كشف الالتباس عن كثير من مسائل: الحيض والنفاس

١٠- تذكير اسود الصحوة بجمل من قواعد الدعوة.

١١-شرح منظومة تائية العقيدة.

١٢-شرح منظومة الألفية في العقيدة.

١٣-شرح متن الورقات.

١٤-الرّاصد في فقه المقاصد.

١٥-شرح الكُلِّيات الفقهية.

١٦- شرح الأرجوزة المفيدة في نظم قواعد العقيدة.

١٧-شرح رسالة سبيل الرشاد في توضيح الاعتقاد.

١٨-شرحُ لجملٍ من قواعدِ الصيامِ.

١٩-شرح المنظومة السّنيّة في أصول الفقه والقواعد الفقهيّة.

٢٠-شرح خلاصة القواعد الأصوليّة.

٢١- شرح الأصول الثلاثة

அஷ்ஷேக் அஹ்மத் அஸ்ஸயித்
ஹஃபிழஹுல்லாஹ்
ஓர் அறிமுகம்

போதை பழக்கங்களில் சிக்குண்டு சின்னாபின்னமாகி, லிநிஙிஜி போன்ற அருவருப்பான பாவமான காரியங்களில் சிக்கிக் கொண்டு அந்தக் கோர உலகத்தின் பிடியிலிருந்து தப்ப முடியாமல் தவித்துக் கொண்டிருக்கும் இன்றைய வாலிபர்களை சீர் செய்து நெறிப்படுத்தி சிறந்த மார்க்க அறிஞர்களாக மார்க்க கல்விகளில் ஆழமான அறிவு கொண்ட நிபுணர்களாக மாற்றிக் கொண்டு வரும் சவுதி அரேபியாவை சேர்ந்த மதீனா தய்யிபாவில் பிறந்து வளர்ந்து துருக்கியில் மார்க்கப் பணியாற்றி கொண்டு வரும் எனது ஆசிரிய பெருந்தகை ஷைக் அஹ்மது அஸ்ஸய்யிது ஹஃபிழஹுல்லாஹ் அவர்களின் கல்வி திட்டங்களின் நான்கு தூண்கள்.

1) அறிவு (குர்ஆன் & ஸுன்னா)

2) தஸ்கிய்யா (உள்ளத்தை சீர் செய்தல்)

3) நிகழ்காலங்களின் அறிவுசார் விழிப்புணர்வு

4) சீர்திருத்த அணுகுமுறை

الأركان الأربعة لبرامج الشيخ أحمد السيد

١) العلم

٢) التزكية

٣) الوعي الفكري اي الوعي بالمواقع

٤) المنهج الإصلاحي

யூடியூபில் இவர்களின் சேனலை பார்க்கும் பொழுது நமக்கு நெகிழ்வை அடைய வைக்கிறது, லட்சக்கணக்கில் மக்கள் இவர்களின் வகுப்புகளை பெற்று பயன் அடைந்து வருகிறார்கள், ஒரு அழைப்பாளருக்கு தேவையான அனைத்து துறைகளிலும் பல ஆண்டுகள் படித்து தேர வேண்டிய வகுப்புகளை அகீதா, தஸ்கிய்யா, ஹதீஸ் தப்ஸீர் இன்னும்

பல துறைகளில் எளிமையான மொழியில் அவர்களுக்கே உண்டான ஒரு பாணியில் பல மணி நேரங்கள் பாடம் நடத்துகிறார்கள்.

அரபு மொழி தெரிந்த அரபுக் கல்லூரியின் கண்ணியமிகு உஸ்தாத்மார்கள், பள்ளிவாசலின் கண்ணியத்திற்குரிய இமாம்கள் பாசத்திற்குரிய அரபுக் கல்லூரி மாணவர்களுக்கும் இவர்களின் வகுப்புகளை அறிந்து சமூகத்தை சீர் செய்வது மிக கட்டாயம் என்று கருதுகிறேன்.

ஷைகு அவர்களின் Youtube சேனல் : https://youtube.com/@alsayyed

அறிஞர் அவர்கள் திறன்பட இஸ்லாமியக் கல்விகளை அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையில் போதித்து வருகிறார்கள் இஸ்லாமிய அனைத்து கலைகளையும் ஆழமாக இவர்களிடத்தில் படிக்கலாம், குறிப்பாக இஸ்லாமிய சித்தாந்தங்களில் நடுநிலையை பேணுவதில் இவர்களுக்கு நிகர் இவர்கள்தான், தஸ்கிய்யா விடயத்தில் மிகவும் முக்கியத்துவம் அளிப்பார்கள்.

அல்லாஹ் ஷைஹ் அவர்களுக்கு அருள் புரிவானாக!

அகீதா
இஸ்லாமிய கொள்கை
ஒரு சுருக்கமான பார்வை...

இன்று நமது வாலிபச் சகோதரர்கள் சிலர் பல தடவை கீழ்காணும் கேள்வி களை கேட்ட வண்ணமாக இருக்கிறார்கள் அதற்கு அடியேன் சுருக்கமான சில பதில்களை எழுதி இருந்தேன். அவை உங்களின் பார்வைக்கு...

இஸ்லாமிய கொள்கை ரீதியாக ஹம்பளிகளுக்கும், அஷ்அராவினருக்கும் கருத்து மோதல்கள் என்ன? மாதுருதியனருக்கும் அஷ்அராவினருக்கும் வேறுபாடு உள்ளதா?

கட்டுரையை முழுவதுமாக வாசித்து தங்கள் கருத்துக்களை பதியுங்கள். இந்த கருத்துக்களை விரும்பாதவர்கள் தயவு செய்து கடந்து சென்று விடவும்.

அடியேன் அகீதா துறையில் மாணவன் என்ற உரிமையில் இந்த கருத்துக் களை பதிவு செய்கிறேன். அகீதா துறையில் கடந்த சில வருடங்களாக எமது மாணவர்களுக்கும் நடத்தியும் வருகிறேன், இன்னும் கூடுதலாக வாசித்தும் வருகிறேன்.

சிலர் கூறுவதைப் போல ஹம்பலிகளின் வாதம் மட்டுமல்ல முழு அஹ்லுஸ் ஸுன்னத்து வல் ஜமாத்தின் ஒருங்கிணைந்த பார்வை அல்லாஹ்வின் திருநாமங்களும் அவனுடைய பண்புகளையும் எவ்வாறு அல்லாஹ் தனது இறை தூதரின் மூலம் அறிவித்திருக்கிறானோ அதை அவ்வாறே எந்த மாற்றுக் கருத்துக்களும் இல்லாமல், ஒப்புவுவமை செய்யாமல், இறைப் பண்புகளை தஃதீல் -மறுக்காமல், குர்ஆனிலும் ஹதீஸிலும் வந்திருப்பது போன்று ஈமான் கொள்வது இறை நம்பிக்கை யாளர்களின் மீது கடமை.

இது ஒரு சில எழுத்துக்களால் அல்லது சிறிய பதிவால் விளக்கமளிக்க கூடிய விடயம் அன்று, இதற்கு முன்பாகவும் அகீதா விடயத்தில் சிலர் கேட்ட கேள்விகளுக்கு எனது கருத்துக்களை பதிவு செய்திருக்கிறேன்

இது எளிதாக கடந்து போய் விடுகிற ஒரு விடயம் அல்ல கவனங்கள் குவிக்கப்பட வேண்டிய ஒரு சப்ஜெக்ட்.

மார்க்க சட்டங்களை விளங்குவதற்கு அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் சொன்ன செயல்படுத்திய ஆமோதித்த நபி மொழிகளை வைத்து சட்டம் இயற்றும் பொழுது ஒன்றிற்கும் பல கருத்துக்கள் வருவதற்கு இடம்பாடு இருக்கிறது எனவே அங்கு பல பிக்ஹு கலாச்சாலைகள் மத்ஹபுகள் தேவைப்படுகின்றன.

இதைப்பற்றி வேறு சில சந்தர்ப்பங்களில் விரிவாக விளக்க முயற்சி செய்கிறேன்,

ஆனால் அகீதா (Doctrine & Principles) கொள்கை சித்தாந்தத்தில் எந்தவித பிரிவமோ அல்லது சிந்தனை கலாச்சாலையமோ (மத்ஹபோ) கிடையாது, மேலே சொல்லி இருப்பது போல மார்க்க கிளை சட்டங்களை வழங்குவதற்கு மத்ஹபுகளின் அவசியம் தேவைப்படுகின்றன.

அஷ்அரி என்ற முறையிலோ மாத்துரிதி என்ற முறைகளோ நாம் அகீதாவை கூறு போட முடியாது. காரணம் அகீதாவின் அடிப்படைகள் குர்ஆனும் சுன்னாவும் மட்டும்தான்.

தாங்கள் சொல்வதைப் போன்று அஷ்அரியாக்களுக்கும், மாத்துரிதி யாக்களுக்கும் அவ்வளவு பெரிய வித்தியாசம் இல்லை என்று சொல்வது ஏற்புடையது அன்று. இன்னும் அதிகமாக வாசியுங்கள் விளக்கங்கள் கிடைக்கும்.

அபுல் ஹசன் அஷ்அரி ரஹிமஹுல்லாஹ்

இவர் ஒரு சிறந்த இஸ்லாமிய அறிஞர் என்பது எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் அவர் கடந்து வந்த முக்கியமான மூன்று பாதைகள் இருக்கிறது.

முதலாவது அபுல் ஹசன் அஷ்அரி உடைய ஆசானான அபூ அலி அல்ஜுபாயி சென்ற பாதையில் ஒரு முஃதஸிலாவாக பயணித்தார்.

முஃதஸிலாக்கள் அறிவை முற்படுத்தி குர்ஆன் சுன்னாவை பிற்படுத்துவார்கள். இந்த அடிப்படையில் இந்த கொள்கையை நிறுவிய வாஸில் பின் அதா என்பவர் இமாம் ஹசனுல் பஸரியின் ரஹிமஹுல்லாஹ் சபையிலிருந்து பிரிந்து வந்த சம்பவம் மிகவும் பிரபலமான ஒன்று. அதனால்தான் இவர்கள் பிரிந்து வந்தவர்கள் முஃதஸலாக்கள் என்று அழைக்கப்படுகிறார்கள்.

இவர் தோற்றுவித்த முதல் அமைப்புதான் நீதமும் தவ்ஹீதும் (حركة العدل و التوحيد) இன்றைய அறிவு ஜீவிகள் என்று கருதும் தவ்ஹீத் பெயரில் வலம் வரும் சிலரை நமக்கு நினைவூட்டுகிறது.

இரண்டாவது இமாம் அபுல் ஹசன் அவர்கள் இந்த வழிகேடான கொள்கையில் இருந்து வெளிவந்த பின்பு தங்களுடைய ஆசனாக இப்னுல் குல்லாபை (அப்துல்லாஹ் பின் ஸஃஈது பின் குல்லாப்) பின்பற்றத் தொடங்கினார் இவரும் இல்முல் கலாமை அதிகம் பேசியதால் இவரிடமும் சரியான இஸ்லாமிய கொள்கை காணப்படவில்லை அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் உலமாக்களுக்கு மாற்று கருத்துக்களை இவர் கூறினார்.

இன்னொரு வேடிக்கையான விடயம் என்னவென்றால் இன்று யார் தன்னை சுன்னத்துல் ஜமாத் என்று சொல்லிக் கொள்கிறார்களோ அவர்களிடம் யார் அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாத் என்று கேட்டால் சரியான பதில் கிடைப்பதும் இல்லை.

காரணம் அரபுமதரஸாக்களில் ஆரம்ப வருடத்தில் இருந்து முறையாக அகீதா போதிக்கப்படுவதில்லை.

எங்கள் காலங்களில் "அகீதா பதுல் ஆமாலி", என்ற புத்தகத்தின் ஊடாக கவிதையாக போதிக்கப்பட்டது , ஆனால் இன்றைய காலத்தில் மதரசாக்கலில் இந்த புத்தகமும் கூட போதிக்கப்படுவதில்லை, இறுதியாக பட்டம் வாங்கும் மாணவர்களுக்கு அகீதா நஸஃபிய்யா என்ற புத்தகமும் சில இடங்களில் அகீதா தஹாவியும் போதிக்கப்படுகிறது ஆனால் கவலைக்குரிய விடயம் படித்து தருபவரும் சரி படிப்பவர்களும் சரி கவனம் இல்லாமல் இந்த துறை வெற்றிடமாகவே விடப்படுகிறது.

மூன்றாவது இமாம் அபுல் ஹசன் அவர்கள் மூன்றாம் நிலையில் வருகிறார்கள் அதுதான் சரியான நிலைபாடும் அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையிலும் அவர்களை உறுதிப்படுத்தியது ஆனால் அவர்களின் மரண இறுதியில் தங்கள் புத்தகமான அல்இபானாவில் (الإبانة عن أصول الديانة)

இஸ்லாமிய கொள்கையில் இமாமுஸ் ஸுன்னா என்று அழைக்கப்படும் இமாம் அஹமத் பின் ஹம்பல் ரஹிமஹுமுல்லாஹ்வை நான் சார்ந்து இருக்கிறேன் என்று எழுதி இருக்கிறார்கள். தனது பழைய கருத்துக்களை விட்டு திரும்பி விட்டதாக அதில் கூறுகிறார்கள்.

ஆனால் சமகால சில அறிஞர்கள் இமாம் அபுல் ஹசன் ரஹிமஹுல்லாஹ் இறுதிவரை சரியான கொள்கையில் திரும்பவில்லை என்ற கருத்தையும் பதிவு செய்கிறார்கள்.

இங்குதான் கவனிக்க வேண்டிய முக்கிய விடயம் யார் தங்களை அஷ்அரிஆக்கல் என்று சொல்கிறார்களோ அவர்கள் பெரும்பாலும் இப்னுல் குல்லாபின் கொள்கையில் இருப்பவர்கள்.

அல்லாஹ்வின் பண்புகளுக்கு விளக்கம் அளிப்பவர்கள் மாற்று கருத்துக்களை கூறுபவர்கள் ஷியாக்களும் முஃதஸிசீலாக்களும் தான்.

அல்லாஹ்விற்கு உடல் இருக்கிறது என்பதை வாதிட்டவர்கள் இவர்கள்தான். முஜஸ்ஸிமாக்கள், ஹம்பலி உலமாக்கள் மீது இந்த ஷியாக்களால் பலி சுமத்தப்பட்ட பின்பு அனைவரும் ஹம்பலியாக்கள் முஜஸ்ஸிமாக்கள் என்று அழைக்க தொடங்கினர்.

இப்னுல் குல்லாபிடம் ஒரு கொள்கை இருந்தது யார் அல்லாஹ்வின் சிபாத்துகளை (பண்புகளை)மாற்றுக்கருத்துக்கள் சொல்லாமல் (தஃவீல்- تاويل) விளங்குவாரோ அவர் ஷிர்க் வைத்து விட்டார் என்ற வழிகேடான கொள்கையைக் கொண்டிருந்தார் இவரின் பாதையில் வந்த ஒரு சிலர் இன்னும் திருக்குர்ஆனில் அல்லாஹ்வின் பண்புகள் எங்கெல்லாம் வந்திருக்கிறதோ அதை மாற்றி விளக்கம் அளித்து தங்களை உண்மையான அஷ்அராக்கள் என்று கூறிக் கொள்கின்றனர்.

அஷ்ஷைக் ஸாலிஹ் அல்பௌஸான் ஹஃபிழஹுல்லாஹு அவர்கள் கூறும் பொழுது அஷ்அரியாக்கள் என்று கூறாதீர்கள் காரணம் இமாம் அபுல் ஹசன் அல்அஷ்அரி தான் கொண்டிருந்த வழிகேடான கொள்கையில் இருந்து மீண்டு, தவ்பா செய்து இமாம் அஹ்மத் பின் ஹம்பல் அவர்களின் கொள்கைக்கு திரும்பி விட்டேன் என்று தனது புத்தகமாகிய அல்இபானாவில்- الإبانة عن أصول الديانة

குறிப்பிடுகிறார், அவர் வழிகேடான சிந்தனைகளை பின்பற்றிய பொழுது இப்னுல் குல்லாபின் கொள்கையைச் சார்ந்திருந்தார்கள் அதனால் அல்குல்லாபிய கொள்கைகள் என்று வேண்டுமானால் கூறிக் கொள்ளலாம்.

அஷ்அரியாக்களுக்கும், மாத்துரிதியாக்களுக்கும் வித்தியாசங்கள் இல்லை என்று சொல்வது உகந்ததல்ல, அவர்கள் இருவருக்கும் ஷிபாத்துகளில் ஏழு எட்டு விடயங்களில் மாற்று கருத்துக்கள் இருக்கின்றன.

உதாரணமாக அபூ மன்ஸூர் ரஹிமஹுல்லாஹ் மாதுரிதியாவின் இமாம் அவர்கள் அல்லாஹ்வுடைய சிபத்தில் (பண்புகளில்)குர்ஆன் அல்லாஹ்வின் பேச்சு என்று கூறுகிறார்கள் அதேபோன்று அஷாஅராக்களும் குர்ஆன் அல்லாஹ்வின் கலாம் என்று ஏற்றுக் கொள்கிறார்கள் ஆனால் அதற்கு எந்த சப்தமோ வடிவமோ இல்லை என்று கூறுகிறார்கள்.

மாத்துருதியாக்கள் திருக்குர்ஆன் அல்லாஹ்வின் கலாம் (இறை

பேச்சு) அதற்கு எழுத்துக்கலோ சப்தமோ இல்லை (திருக்குர்ஆனில் எழுத்துகளும், சப்தமும் இருக்கிறது என்பதை எல்லா முஸ்லிம்களும் அறிந்திருக்கிறார்கள்) கலாமுன் நப்ஃஸி (வெளியே சத்தம் வராத ஒரு இறை பேச்சு).

எனவேதான் திருக்குர்ஆனில் இருக்கும் வார்த்தைகள் இறைவனின் பேச்சு அல்ல அது படைக்கப்படவும் இல்லை மக்லூக் அல்ல, மனிதர்களால் கேட்க முடியாது என்று முஃதஸிலாக்களை போன்றே திருக்குர்ஆனில் இன்று இருக்கும் எழுத்துக்களும் அதை நாம் ஓதும் பொழுது வரும் சப்தங்களும் படைக்கப்பட்டவைகள் என்று கூறுகிறார்கள்.

இதை நாம் கேட்கும் பொழுதே நமது தலை சுற்றுகிறது அல்லவா!

இவ்வாறுதான் வழிகேடான இல்முல் கலாமை அவர்கள் படித்து முஃதஸிலாக்களுக்கு மறுப்பு தருகிறேன் என்று சொல்லி, திருக்குர்ஆனில் இருந்தும் நபிமொழிகளில் இருந்தும் ஆதாரங்களை கூற மறந்து போய் வந்த பாதையை மறந்து விட்டார்கள்.

திருக்குர்ஆன் அருளப்பட்டதா? படைக்கப்பட்டதா?

இந்த நீண்ட நெடிய ஒரு விவாதம் நமது அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் இமாம்கள் காலத்தில் மாற்றுக் கருத்துடைய வழிகேடர்களுக்கு எதிராக நடைபெற்ற காரசாரமான விவாதமாகும்.

ஆக முஃதஸலாக்கள் கூறும் குர்ஆன் ஒரு படைப்பு என்ற வாதத்தை நமது சங்கையான அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் இமாம்கள் மறுத்து அதற்காக பல தண்டனைகளையும் அனுபவித்திருக்கிறார்கள் அதற்கு நல்ல உதாரணம் இமாம் அஹ்மத் பின் ஹம்பல் ரஹிமஹுமுல்லாஹ்.

சிலர் இதை மிக லேசாக எடுத்துக் கொள்கிறார்கள் இதில் எந்த பிரச்சினையுமே இல்லை தேவையில்லாமல் இந்த ஹம்பலிகள் இதை பெரிசு படுத்துகிறார்கள் என்று கடந்து விடுகிறார்கள் ஆனால் மிகவும் தவறான ஒரு கருத்து.

குர்ஆன் படைக்கப்பட்ட ஒன்று என்ற வாதம் மிகவும் அபாயகரமான ஒன்று இதை ஏற்றுக் கொண்டால் பின்னால் சொந்த கருத்துக்கள் திணிக்கப்படலாம் ஏனைய வேதங்களைப் போன்று குர்ஆனும் மாற்றம் அடையலாம் எனவே நமது உலமாக்கள் குர்ஆன் என்பது அல்லாஹ்வின் கலாம் படைக்கப்பட்ட ஒன்று அல்ல அருளப்பட்டது என்று தெளிவாக உறுதியாகச் சொல்லி வந்தார்கள்.

ஆனால் இப்னுல் குல்லாபின் இந்த வழிகேடான கொள்கையை சுமந்திருக்கும் இன்றைய அஷாராக்கள் தலை சுற்றி மூக்கை தொடும்

விதத்தில் குர்ஆன் அல்லாஹ்வின் கலாம், ஆனால் அதற்கு எந்த எழுத்துக்களோ சப்தமோ இல்லை என்று மறுத்து வழிகேடர்களான முஃதஸிலாக்களின் கொள்கையில் வந்து சேர்கின்றனர்.

எனவே தான் அன்றைய காலத்தில் மாத்துருதியாக்கள் இவர்களை எதிர்த்து மறுத்தனர்.

சுருக்கமாக அல்லாஹ்வின் பண்புகள் ஏழோ அல்லது எட்டோ அல்லது 99 மட்டுமோ அல்ல. எதையெல்லாம் அல்லாஹ் தனது பண்பாக குர்ஆனிலும் சுன்னாவிலும் அறிவித்திருக்கிறானோ அல்லது தானே மறைத்து வைத்திருக்கிறானோ அல்லது அந்த பண்புகள் தனக்கு இல்லை என்று மறுத்து இருக்கிறானோ அவைகள் அனைத்தையும் இறை நம்பிக்கையாளர்கள் மாற்றுக் கருத்துக்கள் சொல்லாமல் படைப்புகளுடன் ஒப்பு உவமை செய்யாமல் அவ்வாறே ஏற்றுக் கொள்வதுதான் ஒரு தூய்மையான அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையாகும்.

இன்று தங்களை அஷ்அராக்கள், மாத்துருதியாக்கள் என்று சொல்லும் சிலர் தவறான சில கொள்கைகளை அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கை என்று வாதிடுகிறார்கள் கவனம் தேவை. இது வாசிப் பின்மையையும் கண்மூடித்தனமான பின்பற்றுதலையும் குறிக்கிறது.

அந்த காலத்தில் குழப்பம் ஏற்படுத்திய வழிகேடர்களான முஃதஸிலாக்களை எதிர்த்த நபர்கள் தங்களை அடையாளப்படுத்த வேண்டி இருந்ததால் அஷ்அராக்கள், மாத்துருதியாக்கள் என்று சொல்லிக் கொண்டார்கள்.

காரணம் அன்றிருந்த அனைத்துக் கூட்டமும் தங்களை அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் என்று கூறிவந்தது. வேறொரு சந்தர்ப்பத்தில் அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் யார் என்ற தலைப்பில் விரிவாக பேசுகிறேன்.

அஷ்அராக்கள், மாத்துருதியாக்களும் உண்மையான குர்ஆன் ஹதீஸின் அடிப்படையில் அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாத் கொள்கையில் தங்கள் வாதத்தை முன் வைத்தால் அவர்களும் அஹ்லுஸ் ஸுன்னாவை சார்ந்தவர்களே ஏழு அல்லது எட்டு என்ற எண்ணிக்கையில் அல்லாஹ்வின் பண்புகளை எண்ண ஆரம்பித்தார்கள் என்றால் அப்பொழுது அவர்கள் வழி தவறுகிறார்கள் என்று அர்த்தம்.

நமது முன்னோர்களான சஹாபாக்களும் அவர்களின் பாதையில் பயணித்த தாபியீன்கள் சங்கையான நான்கு மத்ஹபுகளின் இமாம்கள் இஸ்லாமிய கொள்கை விடயத்தில் அல்லாஹ்வின் ஷிபாத்துகளான

பண்புகளில் எந்தவிதமான மாற்றுக் கருத்துகளோ பண்புகளை இல்லாமல் ஆக்குவதோ படைப்பினங்களுடன் ஒப்புவுமையோ செய்யாமல் ஏற்றுக் கொண்டார்கள்.

உதாரணமாக இமாம் மாலிக் ரஹிமஹுமுல்லாஹ்

اَلرَّحْمٰنُ عَلَى الْعَرْشِ اسْتَوٰى

(அவற்றை படைத்த) ரஹ்மான் (ஆகிய அல்லாஹ்) அர்ஷின் மீது (தன் மகிமைக்குத் தக்கவாறு) உயர்ந்துவிட்டான். (அல்குர்ஆன் : 20:5)

என்ற வசனத்திற்கு கீழ் வருமாறு விளக்கம் அளிக்கிறார்கள்.

அர்ஷில் ரஹ்மானின் இஸ்திவா -சமமாகுதல் / உயர்தல் / அமர்தல் என்பது இந்த வசனத்தின் மூலம் அறியபட்டிருக்கின்றது

ஆனால் எவ்வாறு சமமாகுதல் என்பது அறியப்படாததாக இருக்கின்றது, ஆனால் அல்லாஹாவின் இஸ்திவா என்பதை நம்புவது (ஈமான் கொள்வது) அவசியம் (வாஜிப்) அது எவ்வாறு என்று கேள்வி கேட்பது அனாச்சாரம் (பித்அத்).

شرح لمعة الاعتقاد للمحمود 6/9-

நூல் -இப்னு குஸைமா, பகுதி -ஏகத்துவம், பக்கம் -105, இன்னும் நூல் -பைஹகீ, பகுதி -அஸ்மா வா சிபாத், பக்கம் -401.

இது போன்ற நமது முன்னோர்களின் புத்தகங்களில் இவ்வாறு தான் நாம் அல்லாஹ்வின் ஷிஃபாத்துகளிலும் பண்புகளிலும் கொள்கையை கொண்டிருக்கிறோம்.

இறைவன் பண்புகளில் குர்ஆனிலும் ஹதீஸிலும் தன்னை பற்றி சொல்லும் பொழுது அதை மாற்றுக்கருத்து கூறி விளக்கப்படுத்தாமல் அவ்வாறே விளங்க வேண்டும் என்ற கொள்கையில் நமது இமாம்களும் இருந்திருக்கிறார்கள் என்பதற்கு உதாரணம்தான் ....

இமாம் அபூ ஹனீஃபா ரஹிமஹுமுல்லாஹ் கூறுகிறார்கள் இறைவனின் கரம் என்று எங்கு வந்திருக்கிறதோ அதை வலிமை என்றும் அருட்கொடை என்றும் சொல்லக்கூடாது அவ்வாறு சொன்னால் அல்லாஹ்வின் ஒரு பண்பை இல்லாமல் ஆக்கியதாக கருதப்படும் இது வழிகேடர்களின் செயலாகும்.

பார்க்க - அல்ஃபிக்ஹுல் அக்பர்- 302

قال الإمام أبو حنيفة: ولا يقال إن يده قدرته أو نعمته لأنَّ فيه إبطال صفة، وهو قول أهل القدر والاعتزال. [الفقه الأكبر ص302]

வேடிக்கையான விடயம் என்னவென்றால் அசத்தியவாதிகளான பரேல்விகள் இது இமாம் அபூஹனீபா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் சொன்ன கருத்தல்ல இடை சொருகுதல் என்று சத்தியத்தை மறுக்கிறார்கள்.

நம்மிடத்தில் சங்கையான 4 மத்ஹபுகளின் இமாம்கள் இறை பண்புகள் விடயத்தில் எந்த கொள்கையில் இருந்தார்கள் என்பதற்கு அதிகமான ஆதாரங்கள் இருக்கின்றன அனைத்து இங்கு கூறுவது இயலாது ஒன்று.

இதோ ஹனபி மத்ஹபின் சிறந்த அறிஞராக இருக்கக் கூடிய அலீ காரி ரஹிமஹுல்லாஹ் மிஷ்காத்துல் மஸாபீஹ் நபி மொழி கிரந்தத்திற்கு விளக்க உரையாக மிர்காதுல் மபாஃதீஹில் 8 வது வால்யத்தில் 251 ஆம் பக்கத்தில் பின்வருமாறு கூறுகிறார்கள்...

இமாம் மாலிக் அவர்களின் கூற்றான அல்லாஹ் அர்ஷில் இருக்கிறான் என்பது தெளிவாக ஆகிறது அவன் எப்படி இருக்கிறான் என்று தெரியவில்லை என்ற இந்த பிரபலியமான கூற்றுக்கு விளக்கம் சொல்லும் பொழுது நமது மகத்துவமிக்க இமாமாகிய அபூஹனீஃபா ரஹிமஹுல்லாஹ் அவர்களும் இந்த கூற்றையே தெரிவு செய்திருக்கிறார்கள், திருக்குர்ஆனில் இருந்தும் நபிமொழிகளில் இருந்தும் வரக்கூடிய கரம் கண் முகம் போன்ற இறைவனின் பண்புகளை வந்திருப்பது போன்றே விளங்க வேண்டும் எவ்வாறு என்று கேட்கக் கூடாது படைப்பினங்களோடு ஒப்பிடக்கூடாது,

இறைவன் தனது பண்புகளை தானே முன்வந்து திருக்குர்ஆனில் நபி மொழிகளில் கூறி இருப்பதை மாற்றி அமைத்து விளக்கம் கூறாமல் பண்புகளை இல்லாமல் ஆக்காமல் இவ்வாறு அவ்வாறு என்று விளக்கம் சொல்லாமல் உதாரணங்கள் ஒப்புவுவமை சொல்லாமல் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

இதுதான் பிரயோஜனம் அளிக்க கூடிய பாதுகாப்பான ஒரு விடயமாகும்.

قال الملاَّ عليُّ القاري بعد ذكره قول الإمام مالك: "الاستواء معلوم والكيف مجهول" : اختاره إمامنا الأعظم - أي أبو حنيفة - وكذا كل ما ورد من الآيات والأحاديث المتشابهات من ذكر اليد والعين والوجه ونحوها من الصفات. فمعاني الصفات كلها معلومة وأما كيفيتها فغير معقولة؛ إذْ تَعقُّل الكيف فرع العلم لكيفية الذات وكنهها. فإذا كان ذلك غير معلوم؛ فكيف يعقل لهم كيفية الصفات. والعصمة النَّافعة من هذا الباب أن يصف الله بما وصف به نفسه، ووصفه به رسوله من

غير تحريف ولا تعطيل ومن غير تكييف ولا تمثيل، بل يثبت له الأسماء والصفات وينفي عنه مشابهة المخلوقات، فيكون إثباتك منزهاً عن التشبيه، ونفيك منزَّهاً عن التعطيل. فمن نفى حقيقة الاستواء فهو معطل ومن شبَّهه باستواء المخلوقات على المخلوق فهو مشبِّه، ومن قال استواء ليس كمثله شيء فهو الموحِّد المنزه. [مرقاة المفاتيح شرح مشكاة المصابيح ج٨ ص٢٥١]

عقيدة الأئمة الأربعة في الأسماء والصفات - المجلد ١ - الصفحة ٥ - جامع الكتب الإسلامية

எகிப்தின் அல்அஷ்ஹர் இஸ்லாமிய பல்கலைக்கழகத்தில் பல ஆண்டுகள் பேராசிரியராக பணி செய்த 1975 ஆம் ஆண்டு மரணித்த அஷ்ஷைக் முஹம்மது கலீல் ஹர்ராஸ் ஏனைய எகிப்திய உலமாக்களை போன்று இமாம் இப்னு தைமியா ரஹிமஹுல்லாஹ் அவர்களைத் தவறாக விளங்கி வைத்திருந்தார்கள் அஷ்அரிய கொள்கையில் இருந்தார்கள்,

தனது முனைவர் ஆய்வில் (Ph.D) அஷ்அரியாக்களை விமர்சித்த இப்னு தைமியாவை விமர்சிப்பதற்கும் தலைப்பில் ஆய்வை ஆரம்பித்து பின்பு இப்னு தைமியா ரஹிமஹுல்லாஹ் அவர்களின் கல்வி ஞானத்தை உணர்ந்து அவரின் மீது நேசத்தை அதிகமாகி உண்மையான அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கை எது என்ற பல தலைப்புகளில் புத்தகங்களை எழுத ஆரம்பித்தார்,

இவரின் சேவையை கருத்தில் கொண்டு சவுதி அரசாங்கம் சவுதி பல்கலைக்கழகங்களில் பல வருட காலம் பேராசிரியராக பணியாற்ற வாய்ப்புகள் வழங்கியது ,

இவரின் கரங்களிலிருந்து பல பல தலை சிறந்த உலமாக்கள் பட்டம் பெற்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது

(الشيخ محمد أمان الجامي. د. عبد الفتاح سلامة. الشيخ علي بن ناصر الفقيهي.)

எகிப்து நாட்டைச் சேர்ந்த வேறோரு அறிஞர் முஹம்மது கஸ்ஸாலி ரஹிமஹுல்லாஹ் அவர்களை உதாரணமாக காணலாம், இவர்கள் தங்களின் புத்தகமான அத்தஃவா அல்இஸ்லாமிய்யாவில்

كتاب : الدعوة الإسلامية في

القرن الحالي فضيلة الشيخ محمد الغزالي

அல்அஷ்ஹர் இஸ்லாமிய பல்கலைக்கழகம் இஸ்லாமிய கல்வி களில் கவனம் செலுத்திக் கொண்டிருக்கும் காலத்தில் அரபு உலகில் ஏற்பட்ட பல சீர்கேடுகளில் அக்கறையில்லாமல் இருந்தார்கள் இமாம்

முஹம்மத் இப்னு அப்துல் வஹ்ஹாப் அந்நஜ்தி ரஹிமஹுல்லாஹ் மட்டுமே மிகப்பெரிய ஒரு புரட்சியை செய்து வெற்றி பெற்றார்கள் என்று குறிப்பிடுகிறார்கள்.

இணைவைத்தலையும் இஸ்லாமிய பெயரில் அரங்கேற்றப்பட்ட பல அனாச்சாரங்களையும் தட்டிக் கேட்க உலமாக்களுக்கு இன்று வரை வஹ்ஹாபிகள் இன்று இந்த இமாமின் பெயரை வைத்து தான் குறிப்பிடுகிறார்கள்.

இந்தியாவில் இருக்கும் தாருல் உலூம் நத்வதுல் உலமா இஸ்லாமிய பல்கலைக்கழகமும் உண்மையான அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையில்தான் பயணித்துக் கொண்டிருக்கிறது, அஷ்அரிய, மாத்துருதிய கொள்கையில் அல்ல,

சமீபமாக வஃபாதான நத்வாவின் முன்னால் தலைவர்அறிஞர் முஹம்மது ராபிஃ அல்ஹஸனி நத்வி ரஹிமஹுல்லாஹ் நத்வாவின் சிந்தனைகளும் ,கொள்கைகளும் என்று எழுதி இருக்கிறார்கள்

(ندوة العلماء فكرتها و منهجها)

இமாம் அபுல் ஹசன் நத்வி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் பிரபலமான அரபு புத்தகமான ரிஸாலதுத் தவ்ஹீதிலும் (رسالة التوحيد)

தாங்களும் தங்களது உலமாக்களும் சரியான இஸ்லாமிய அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையில் இருப்பதாக சுட்டிக் காட்டி இருக்கிறார்கள், அதில் தங்களை அஷ்அரியாக்களாகவோ, மாதுரிதியாக்களாகவோ அடையாளப்படுத்தவில்லை என்பது இங்கு குறிப்பிடத்தக்க ஒன்று.

இந்தியாவிற்கு ஹதீஸ்கலையை முறையாக அறிமுகப்படுத்திய இமாம் ஷாஹ் வலியுல்லாஹ் ரஹிமஹுல்லாஹ் தங்களின் கொள்கையை தங்களது பல புத்தகங்களில் குறிப்பிட்டு இருக்கிறார்கள்,

அவர்களும் தங்களை அஷ்அரியாக்களாகவோ,மாதுரிதியாக்களாகவோ அடையாளப் படுத்தவில்லை, காரணம் புனித ஹஜ்ஜுக்கு சென்ற பின்பு அரபு உலாமாக்களிடமிருந்து ஹதீஸ்களை முறையாக படித்து அனுமதி பெற்று மெய்யான அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையை பற்றி பிடித்தார்கள்.

இது அவர்களின் ஹுஜ்ஜதுல்லாஹ் அல்பாலிகாவில் (حجة الله البالغة) பார்கலாம்.

ஆக உலகளாவிய நமது அறிஞர் பெருமக்களும், இந்திய துணை

கண்டத்தின் பெரும் அறிஞர்களும் முறையான இஸ்லாமிய கொள்கைகள் இருந்து வந்திருக்கிறார்கள் என்று தெளிவாக வரலாற்று பக்கங்களில் எழுதப்பட்டிருக்கிறது.

பின் வந்தவர்கள் தங்கள் மன இச்சைக்கு ஏற்ப பல குழுக்களாக பல சிந்தனை சித்தாந்த பள்ளிகளாக மாற்றிக் கொண்டனர் என்பதே உண்மை இதற்கு மூல புத்தகமான அரபு மொழியில் பல புத்தகங்களை விருப்புவெறுப்பின்றி வாசிக்க வேண்டும்.

ஏதோ ஒரு சில ஆங்கில, தமிழ் புத்தகங்களை படித்துவிட்டு தனது புத்திக்கப்பட்ட விஷயங்களை எழுதுவதும் அதை விமர்சிப்பதும் அறியாமை என்று நமக்கு தெளிவுபடுத்துகிறது.

இது போன்ற இன்னும் பல இமாம்களின் கருத்துக்களை ஒன்று திரட்டினாலும் அசத்தியவாதிகள் ஏற்றுக் கொள்வதற்கு தயாராக இல்லை.

ஆக நமது கட்டுரை சற்று நீண்டு விட்டது,

இஸ்லாமிய கொள்கையில் இன்னும் அதிகமாக வாசிப்புகளும் ஆய்வுகளும் தேவை என்பது கசப்பான ஒரு உண்மை.

அல்லாஹு அஃலம்

யார் இந்த ஜியோனிஸ யூதர்கள்?

இன்று சிலர் யூதர்களுக்கும் இஸ்ரேலில் நடக்கும் ஜியோனிச தீவிரவாத சிந்தனைகளுக்கும் சம்பந்தமில்லை என்று எழுதியும் பேசியும் வருகிறார்கள்,

யூதர்கள் என்றுமே அனைவருக்கும் விரோதிகள் தான் இது இஸ்லாமிய வரலாறு தனது கடந்து வந்த பாதைகளை தெளிவாக நமக்கு ஆதாரத்துடன் கூறுகிறது.

இறை அருளிலிருந்து விரட்டியடிக்கப்பட்ட இப்லீசு, காலச் சக்கரத்தின் ஓட்டத்தை, தனது வழிகேட்டின் வலிமையால் சுற்றச் செய்து, அன்றிலிருந்து இன்று வரை, நெறி தவறிய மனிதர்களை வழி தவறச் செய்து கொண்டிருக்கின்றான்.

அவனுக்கு கட்டுப்பட்ட மனிதர்களான வழிகெட்ட ஸியோனிஸ யூத, நசரானிகளை, தன் வசம் சிந்தனைச் சிறைசெய்து, அதிலிருந்து விடுதலை பெறாத ஆயுள் கைதிகளாக மாற்றி, இந்த பிரதிநிதிகளான முஸ்லீம்களை வழி தவற செய்யலானான் ரு ஆனால் இறைவன் நாடியவர்களை தவிர .

யூதர்களின் கொட்டு மேளத்திற்கு நடனமாடும் நசரானிகளாகவே (கிருத்தவர்களாக) இன்றும் நாம் இஸ்ரேலையும், அமேரிக்கா போன்ற நாடுகளையும் காணுகின்றோம். இந்த கூற்றுக்களை மெய்ப்படுத்தக் கூடியவர்களாக, முஸ்லீம்களுக்கு எதிராக புரியும் சதிகளையும், நாசங்களையும்,

ஒவ்வொரு நாளும் அன்று ஈராக்கிலும், ஸிரியாவிலும், ஆப்கானிஸ் தானிலும், ஏன் இன்று பர்மாவிலும் கூட, முஸ்லீம்களை களை எடுக்கும் பௌத்தர்களின் இனப் படுகொலைகளையும் கூட, கண்டுக் கொள்ளாமல், இந்த ஈனச் செயல்களை மறைமுகமாக ஆதரித்து கொண்டிருப்பதை, நாம் பார்த்துக் கொண்டுதான் வருகின்றோம்.

இறுதியில், ஒரே ஒரு கேள்வி, 'ஏன் இறை பிரதிநிதிகளாகிய முஸ்லீம்களுக்கு இந்த அவல நிலை?'

பதிலை, தெள்ளத்தெளிவாக இறைவன் அல்குர்ஆனில் கூறிவிட்டான்,

'(நபியே!) யூதர்களும், கிறிஸ்தவர்களும், அவர்கள் வழியை, நீர் பின்பற்றாதவரையில் உம்மைப்பற்றி திருப்தியடைய மாட்டார்கள். (ஆகவே, அவர்களை நோக்கி;) "நிச்சயமாக அல்லாஹ்வின் வழி-(இஸ்லாம்) அதுவே நேர்வழி" என்று சொல்லும்'. (அல்குர்ஆன் -2:120)

இந்த முஸ்லீம்கள், எப்பொழுது தூய மார்க்கமான இஸ்லாத்தை விட்டு விடுவார்களோ,

யூத நசரானிகளின் வழியில் நடக்க ஆரம்பிக்கிறார்களோ, அப்பொழுது, இந்த யூதர்கள் தாங்கள் காணும் கனவை நிறைவேற்றி கொள்வார்கள் போலும்.

அதற்கு, எந்த ஒரு ஏக இறைநம்பிக்கையாளரும் அனுமதிக்க மாட்டார்கள் என்பது மட்டுமல்ல இவர்களின் சதிகளை, பலகீனமான ஈமான் கொண்ட முஸ்லீம்களிடத்தில், உரக்கச் சொல்லிக் கொண்டே இருப்பார்கள்!

யூதர்கள் பற்றிய அறிவு முஸ்லிம்களுக்கு மிகவும் அவசியமானது. ஏனெனில் அல்லாஹுத்தஆலா ஷைத்தான் எமக்கு பகிரங்க எதிரி என்று எச்சரிப்பது போன்றே யூதர்களையும் முஸ்லிம்களின் எதிரி என எச்சரிக்கை செய்துள்ளான். இதை எதைக் காட்டுகிறது. எனின் யூதர்களைப் பற்றி ஆரம்பம் முதல் வரலாறு நெடுகிலும் உலக முடிவு வரையும் அவர்களின் சதித் திட்டங்கள் பற்றியும் எமக்கு அறிவு தேவை என்பதையும் அதை நாம் ஆழ ஊடுருவி அறிய வேண்டியது அவசியம் என்பதையும் உணர்த்துகிறது.

யூதர்களின் தன்மைகள், அவர்களின் சிந்தனைகள், அவர்களின் இலக்குகள், அவர்கள் தெரிவு செய்யும் பாதைகள், அவர்கள் குறி வைத்துத் தாக்கும் இலக்குகள் போன்றவைகளை முஸ்லிம்கள் தேடித்தேடிக் கற்றுக் கொள்வதோடு அவற்றிலிருந்து தப்பித்துக் கொள்ளும் வழிகள் பற்றிய அறிவையும் நாம் பெற்றுக் கொள்ள வேண்டும்.

யூதர்கள் இப்றாஹிம் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் மைந்தனாகிய இஸ்ஹாக் அலைஹிஸ்ஸலாம் அவர்களின் மகன் யஃகூப் அலைஹிஸ் ஸலாம் அவர்களின் பன்னிரண்டு மகன்களில் ஒருவரான யஹூதாவின் வாரிசுகளிலிருந்து தோன்றியவர்களாவர். யஃகூப் அலைஹிஸ்ஸலாம்

அவர்கள் இஸ்ரேல் எனவும் அழைக்கப்பட்டார். இதன் காரணத்தாலேயே அவர்கள் இஸ்ரேலின் பிள்ளைகள் எனவும் அழைக்கப்பட்டனர்.

ஆரம்ப காலம் முதல் இவர்கள் வழிப்படாதவர்களாகவும் மாறு செய்பவர்களாகவும் விதண்டாவாதம் புரிபவர்களாகவும் பெருமை பிடித்தவர்களாகவும் இருந்தே வந்திருக்கின்றனர். இவர்களின் சந்ததி களிலிருந்து ஆட்சியாளர்களும் நபிமார்களும் தோன்றினாலும் இவர்கள் நபிமார்களைக் கொலை செய்வதையே வழக்கமாகக் கொண்டிருந்தனர்.

யூசுப் அலைஹிஸ்ஸலாம் அவர்கள் தனது தந்தையையும் குடும்பத்தினரையும் எகிப்திற்கு அழைத்தெடுத்து வாழச் செய்தார். கிட்டத்தட்ட இரு நூறு வருடங்கள் அவர்களின் சொந்தப் பிரதேசமான ஷாமிலிருந்து வந்து எகிப்தில் குடியேறி வாழ்ந்தார்கள். அதன் பிறகு பிர்அவ்ன் மூலமாக மிகுந்த துன்பங்களுக்கும் இன்னல்களுக்கும் இவ் இஸ்ரேலின் பிள்ளைகள் உள்ளாக்கப்பட்டார்கள்.

இந்தக் காலப்பகுதியில் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்கள் அல்லாஹுத்த ஆலாவினால் நபியாக பிர்அவ்னிடம் அனுப்பப்பட்டார்கள். பிர்அவ்ன் மூஸா அலைஹிஸ்ஸலாம் அவர்களை நிராகரித்து விட பிர் அவ்னின் அழிவின் பின் மூஸா நபியவர்கள் இஸ்ரேலின் சந்ததிகளுடன் புனித பூமியாகிய பலஸ்த்தீனத்திற்குச் சென்றார்கள்.

அங்கும் இஸ்ரேலின் சந்ததிகள் கீழ்ப்படிய மறுத்தார்கள் அதே நேரத்தில் அல்லாஹுத்தஆலா அவர்களுக்கு பல நிஃமத்துகளை அழித்திருந்தான். அவ்வாறு இருந்தும் அவர்கள் மாறு செய்தனர்.

(நன்றி -https://www.mudukulathur.com)

அரபு மொழி படித்தவர்கள் ஆலிம்கள் அரபுக் கல்லூரி மாணவர்களுக்கு நீங்கள் யூதர்களைப் பற்றி தெளிவாக அரபு மொழியில் படிப்பதற்கு கீழ்காணும் சில புத்தகங்களை உங்களது ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளலாம்.

1- அஸ்ஸிஹ்யூனிய்யா அல்ஆலமஇய்யஆ

الصهيونية العالمية – محمود عباس العقاد

எகிபத்தைச் சேர்ந்த அரபு இஸ்லாமிய இலக்கியவாதியான மஹ்மூத் அப்பாஸ் அல்அக்காத் தனது 116 பக்கங்கள் கொண்ட இந்த புத்தகத்தில் 24 பகுதிகளாக பிரித்து யூதர்களின் வரலாற்றையும் சதிவலைகளையும் நமக்கு குறிப்பிடுகிறார்.

2- குவைத் நாட்டைச் சேர்ந்த இஸ்லாமிய சிந்தனையாளரான டாக்டர் தாரிக் ஸுவைதான் யூதர்கள் சம்பந்தமாக தான் எழுதிய புத்தகமான

'அல்யஹூது அல்மவ்ஸூஆ அல்முஸவ்வரா'

'யூதர்கள்...... கலைக்களஞ்சியம்'

'اليهود ....الموسوعة المصورة د.طارق السويدان'

3- எகிப்து நாட்டைச் சேர்ந்த பிரபலமான வரலாற்று ஆசிரியர் பல்கலைக்கழக முனைவர் டாக்டர் அப்துல் வஹ்ஹாப் அல்மசீரி யூதர்கள் தொடர்பாக எழுதிய நான்கு புத்தகங்கள் பிரபலமானவைகள்

١- من هم اليهود؟ وما هي اليهودية؟ أسئلة الهوية وأزمة الدولة اليهودية

٢- تاريخ الفكر الصهيوني: جذوره ومساره وأزمته

٣- نهاية التاريخ: دراسة في بنية التفكير الصهيوني

4- எகிப்து நாட்டைச் சேர்ந்த வுஜூதி நஜீப் அல்மிஸ்ரி சம்பந்தமாக எழுதிய புத்தகமான

البعد التوراتي للإرهاب الإسرائيلي

அல்புஃது அத்தவ்ராதி லில்இர்ஹாபி அல்இஸ்ராயிலி

(இஸ்ரேலிய பயங்கரவாத சிந்தனையில் இருந்து முற்றிலும் வேறுபடும் யூத வேதமான தவராத்)

இன்னும் இதுபோன்று 29 புத்தகங்கள் என்னிடத்தில் PDF இருக்கிறது. இதையெல்லாம் படித்துவிட்டு யூதர்களுக்கு நீங்கள் எந்த அளவுக்கு துணை புரிகிறீர்கள் என்பதை புரிந்து கொள்ள முடியும்.

பாலஸ்தீனத்தில் நடந்து கொண்டிருப்பது இன படுகொலை மட்டுமே அரபுகளுக்கும் யூதர்களுக்கும் மத்தியில் நடந்து கொண்டிருக்கிற வாழ்வா சாவா போராட்டம் மட்டுமே என்று கூறுபவர்களுக்கு மறுப்பை இந்த புத்தகங்கள் தருகிறது.

யூதர்கள் எந்த காலத்திலும் அவர்கள் யூதர்களாக தான் இருந்தார்கள் இருக்கிறார்கள் இன்னும் இன்ஷா அல்லாஹ் இருப்பார்கள்.

வெளிப்படையாக பார்க்கும் பொழுது அங்கங்கே ஜியோனிஸ சிந்தனை யுடைய யூதர்களுக்கு எதிராக சில நாடுகளில் யூதர்களே போராட்டம் செய்வது, முதலை கண்ணீர் வடிப்பதைப் போன்றது, நம்மை விட அவர்கள் தங்களது வேதத்தில் ஆழமான நம்பிக்கை கொண்டிருக்கிறார்கள் அல்லாஹ்வின் சாபம் அவர்கள் மீது ஏற்பட்ட பின்பு யூதர்கள் ஒரு இடத்தில் தங்களுடைய யூத நாடாக உருவாக்கி ஒன்று சேரும்பொழுது அவர்கள் அல்லாஹ்வால் அழிக்கப்படுவார்கள் எனவே உலக வாழ்வில்

மிகவும் பேராசை கொண்ட யூதர்கள் தங்கள் அழிவை உடனடியாக விரும்பவதில்லை இதுதான் யூதர்களில் சிலர் யூத ஜியோனிஸ இஸ்ரேல் நாட்டை உருவாக்காமல் இருப்பதற்கு செய்யும் போராட்டமே தவிர உங்கள் மீது உள்ள அக்கறை அல்ல என்பதை நடுநிலைவாதிகள் என்று கூறும் சிலர்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

அடுத்த முக்கியமான ஒரு விடயம் அசத்தியத்திற்கும் சத்தியத்திற்கும் மத்தியில் நடுநிலை என்பது இல்லை என்பதை உணரவேண்டும்.

மங்கி போகும் வாசிப்புத் திறன்

வாசிப்புத் திறன்-Reading skills-مهارة القراءة இன்று சமூகத்தில் நிலவும் ஏனைய பிரச்சினைகளுக்கு தீர்வு புத்தக வாசிப்பில் இருக்கிறது என்பதில் யாருக்கும் மாற்று கருத்து இருக்க முடியாது என்று அடியேன் கருதுகிறேன் ,

இவர் இதைப் பற்றி இப்படி சொன்னார் அவர் அதைப் பற்றி இப்படி படி சொல்கிறார் எது சரியானது? என்று நாமும் குழம்பி விடுகிறோம், ஒரு துறையில் சிந்தனை தெளிவில்லாமல் இருந்தால் முதலில் நமக்கு தேவை வாசிப்பு அதை நாம் முதலில் முறையாக நமது வழக்கமாக ஆக்கிக் கொள்ள வேண்டும்.

எனது உஸ்தாத் அஷ்ஷேக் கலீல் அஹ்மத் கீரனூரி ரஹிமஹுல்லாஹ் கூறுவார்கள் ஒரு துறையில் எழுதப்பட்டுள்ள புத்தகங்களை வாசிப்பதை விட இன்றயத் தேவை அந்தத் துறையில் எழுதப்பட்டுள்ள புத்தகங்களின் பெயர்களையும் புத்தகத்தை எழுதிய ஆசிரியர்களுடன் தெரிந்து கொள்வது மிகப்பெரிய ஒரு கலை என்று சொல்வார்கள்.

சமகால மார்க்க அறிஞர்களில் ஒருவரான அஷ்ஷைக் முஸன்னா பின் அப்துல் அஜீஸ் அல்ஜர்பா ஹஃபிழஹுல்லாஹு

அவர்கள் ஒரு அற்புதமான கருத்தை தெரிவிக்கிறார்கள், குறிப்பாக இந்த தகவலை இங்கு பதிவதற்கு அடிப்படையான காரணம் நாம் கொண்டிருக்கும் சித்தாந்தம் நாம் கொண்டிருக்கும் இயக்கச் சிந்தனை நாம் வாசித்த புத்தகங்கள் என்று தம்மை ஒரு சிறு வட்டத்திற்குள் சுருக்கி விடாமல் துறை சார்ந்த விடயங்களில் நமக்கு மாற்றுக் கருத்துக்கள் இருந்தாலும் அதையும் வாசிக்க வேண்டும்.

இந்த செய்தி இஸ்லாமிய அழைப்பாளர்கள் குறிப்பாக ஆலிம் உலமாகக்கள், இஸ்லாமிய கல்வி நிலையங்களில் கல்வி கற்றுக் கொண்டிருக்கும் என்னைப் போன்ற மாணவர்களுக்கும் சமர்ப்பணம்.

இமாம் தஹபி அவர்கள் தங்களது புத்தகமான ஸியர் அல்அஃலாமின்

நுபலா (سير أعلام النبلاء) என்ற வரலாற்று புத்தகத்தில் பதினெட்டாம் வால்யமில்

இமாம் இஃஸ் பின் அப்திஸ் ஸலாம் ரஹிமஹுல்லாஹ் அவர்களின் வாழ்க்கை வரலாற்றில் கீழ்கண்ட புத்தகங்களை போல் நான் இஸ்லாத்தில் சிறந்த புத்தகங்களை கண்டதில்லை இன்று சில புத்தகங்களை குறிப்பிடுகிறார்கள்.

1- அல்முஹல்லா பீஃ ஷரஹி அல்முஜல்லா - இமாம் இப்னு ஹஸ்ம் அல்ழாஹிரி ரஹிமஹுல்லாஹ்

المحلى في شرح المجلى بالحجج والآثار لمؤلفه الأمام علي بن حزم الأندلسي

2- அல்முக்னீ - இமாம் இப்னுல் குதாமா ரஹிமஹுல்லாஹ்

المغني لابن قدامة

3- அஸ்ஸுனனுல் குப்ரா - இமாம் அல்பைஹகி

السنن الكبرىأبو بكر أحمد بن الحسين بن علي بن موسى البيهقي

4- அத்தம்ஹீத் - இமாம் இப்னுல் பர் ரஹிமஹுல்லாஹ்

التمهيد لما في الموطأ من المعاني والأسانيد هو شرح للأحاديث المرفوعة في الموطأ،
ألفه الحافظ ابن عبد البر

5-அத்தப்ஃஸீர் அத்தபரி - இமாம் தபரி

جامع البيان في تفسير القرآن أو جامع البيان عن تأويل آي القرآن أو جامع البيان في تأويل القرآن المعروف بـ «تفسير الطبري» للإمام محمد بن جرير بن يزيد بن كثير بن غالب الشهير بالإمام أبو جعفر الطبري

6- பஃத்ஹுல் பாரி - இமாம் இப்னுல் ஹஜர் அஸ்கலானி ரஹிமஹுல்லாஹ்

فتح الباري بشرح صحيح البخاري ألفه الحافظ ابن حجر العسقلاني

7- மஜ்மூஃ அல்பஃதாவா - ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா ரஹிமஹுல்லாஹ்

مجموعُ الفتاوىٰ هو كتاب يجمع فتاوى شيخ الإسلام ابن تيمية

இந்த புத்தகங்கள் குறிப்பிட்ட பிஃக்ஹுத்துறை சார்ந்ததல்ல, இதில் ஹம்பளி, மாலிகி, ஷாஃபிஈ, ழாஹிரி போன்ற பிஃக்ஹுத்துறை சிந்தனை பள்ளிகளைச் சார்ந்த இமாம்களின் புத்தகங்கள் இடம் பெற்றுள்ளன

ஒவ்வொரு புத்தகமும் 15 பாகங்களுக்கு அதிகமானது, இஸ்லாமிய கல்வியில் மிகப்பெரிய கலைக்களஞ்சியம் என்று சொல்லலாம்,

அதேபோல் தப்ஸீர் திருக்குர்ஆன் விளக்கவுரை நபி மொழிகளின் விளக்க உரை, இஸ்லாத்தின் அதிகப்படியான துறைகளில் மார்க்க தீர்ப்புகள் என்ற இந்த ஏழு புத்தகங்களை (100க்கும் அதிகமான பாகங்கள் கொண்ட)ஒரு மார்க்க அறிஞர் முழுவதும் படித்து விளங்கினால் அவரிடம் இருந்து சமூகத்திற்கு மிகப்பெரிய மறுமலர்ச்சியும் மாற்றமும் வரும் என்று நம்பலாம்.

இதற்கு மாற்றமாக குறிப்பிட்ட சிந்தனை பள்ளியை மையமாக வைத்து ஒரு சில புத்தகங்களை படித்து அதை மட்டுமே மார்க்கமாக கருதி அழைப்பு பணி செய்வதால் ஏற்படும் விளைவு சமூகத்தில் பிளவுகளும் ஒற்றுமையின்மையும் உருவாகிறது.

(ஹனபி மத்ஹப்பைச் சேர்ந்த இமாம் ஷம்ஷுத்தீன் ஸர்கஸி ரஹிமஹுல்லாஹ் அவர்களின் பிரபலமான புத்தகமான அல்மப்ஸூத் மார்க்க கல்வியை படிக்கும் மாணவர்கள் ஆசிரியர்கள் வாசிக்க வேண்டிய புத்தகம்,

المبسوط هو كتاب في الفقه على المذهب الحنفي

من تأليف الإمام شمس الأئمة السرخسي (ت: ٤٨٣هـ)

பிஃக்ஹு கலைக்களஞ்சியமாக கருதப்படக் கூடிய அற்புதமான புத்தகம் 15 பாகங்கள் கொண்டது, நான்கு மதுஹபுகளின் பகுப்பாய்வு அடிப்படையில் இந்த புத்தகத்தில் ஆய்வு செய்யப்பட்டுள்ளதுடன் (அல்பிக்ஹு அல்முகாரன் -الفقه المقارن)

இமாம் அவர்கள் இந்த புத்தகத்தை 15 வருடங்கள் வற்றிய ஆழ் கிணற்றின் அடியிலிருந்து விளக்கங்களை சொல்ல கிணற்று மேலிருந்து தங்களது மாணவர்கள் அதை எழுதினார்கள், மங்கோலியக் காக்கான் மன்னன் மார்க்க விஷயத்தில் முரண்பட்டதால் இமாம் அவர்கள் மன்னனை கண்டித்தார்கள் அவர்களை தண்டிப்பதற்காக சிறையில் இட்டுவிட்டான், இதை இமாம் அவர்கள் தங்கள் புத்தகத்தில் கூறுகிறார்கள்)

வாருங்கள் புத்தக வாசிப்பை அதிகப்படுத்துவோம் கல்வி ஞானத்தை மெருகூட்டுவோம்.

சவூதி அரேபியாவும் & ஷீஆக்களின் சதிவலைகளும்

தொடர் - 1

கடந்த 13 டிசம்பர் 2023அன்று எனது ஒரு பதிவில் மிக நீண்ட நாளாக ஆய்வு செய்து கொண்டிருந்த ஒரு முக்கியமான விடயம் மக்கமா நகரில் ஹரம் ஷரீஃபில் இருக்கும் நூலகத்தில் கிடைத்தது என்று குறிப்பிட்டிருந்தேன் அதைப்பற்றிய பதிவை இன்ஷா அல்லாஹ் பின்னால் எழுதுவேன் என்றும் கூறியிருந்தேன்...

மிக நீண்ட காலமாக வரலாற்று இருட்டடிப்பு செய்பவர்களின் வழக்கம் ஒரு பொய்யை மீண்டும் மீண்டும் பரப்பிக் கொண்டே இருக்கும் பொழுது அது உண்மையாக ஆகிவிடும் என்ற நிலைபாட்டை ஊர்ஜிதம் செய்துள்ளார்கள்.

சவுதி அரேபியாவை ஆட்சி செய்து கொண்டிருக்கும் மன்னர்களான ஆல ஸவூத் (சவூத் குடும்பத்தினர்) மற்றும் சவுதி அரேபியாவின் தலைசிறந்த அரசு முப்ஃதிகளை காலம் காலமாக தோற்றுவித்துக் கொண்டு வரும் ஆல அஷ்ஷைக் (ஷைக் குடும்பத்தினர்) அதாவது இன்றைய ரியாத் தலைநகரத்திற்கு அருகில் இருக்கும் "திராயா", கோட்டையின் அமீர் (குறுநில மன்னர்) முஹம்மது பின் சவூதும், இமாம் முஹம்மது பின் அப்துல் வஹ்ஹாப் அந்நஜ்தி ரஹிமஹுமுல்லாஹ் இருவரும் கைகோர்த்து நாட்டிய தவ்ஹீத் மரம் தான் இன்றைய சவூதி அரேபியா.

உஸ்மானிய பேரரசின் துருக்கிய சாம்ராஜ்யம் ஆட்டம் காணும் நிலைமையில் இணைவைப்பும் சமாதி வழிபாடும் தலைவிரித்து ஆடிய அந்த தருணங்களில், மூடநம்பிக்கைகளை மார்க்கமாக கருதப்பட்ட அந்த சூழலில் இருவரும் இணைந்து எடுத்த ஒரு முயற்சியே இன்று நாம் காணும் சவுதி அரேபியா, தவ்ஹீதை மையமாக வைத்து கட்டமைக்கப் பட்ட இரு புனித நகரங்களான அல்மக்கா அல்முகர்ரமா, அல்மதீனா

அல் முனவ்வராவிற்க்கு பணிவிடை செய்து கொண்டிருக்கும் குடும்பத்தினர்கள்தான் இவர்கள்.

காலம் காலமாக இஸ்லாத்திற்கும் முஸ்லிம்களுக்கும் எதிரிகளாக இருக்கின்ற யூத ஜியோனிஸ சிந்தனைவாசிகளுக்கு பக்க பலமாக இருந்து வந்த தங்களை நபியவர்களின் குடும்பத்தை பாதுகாக்க பிறந்தவர்கள் என்று பல குழப்பங்கள் இஸ்லாத்தின் பெயரில் இன்று கட்டவிழ்த்தவர்கள் ஷீஆக்கள், இது வரலாறு.

இந்த ஷீஆக்களின் குழப்பங்களான சமாதி வழிபாடு போன்ற பல பித்னாக்களை, வேரோடு பிடுங்கி எறிந்தவர்கள் தான் இந்த ஆல ஸவூத் & ஆல ஷைக் குடும்பத்தினர்கள்.

ஆல சவூத் குடும்பத்தினர் அரசாங்கத்தை பார்த்துக் கொள்வார்கள், ஆல ஷைக் குடும்பத்தினர் மார்க்க பணிகளை முன் நின்று நடத்துவார்கள் என்பது தான் இவர்களின் ஒப்பந்தம்.

அந்த அடிப்படையில்தான் மன்னர் பரம்பரை ஆல் சவூதாகவும், அரசு தலைமை முப்ஃதியாக ஆல ஷைக் குடும்பத்தினர் இன்றும் சவுதி அரேபியாவில் தொடர்ந்து வாழையடி வாழையாக பணி செய்து வந்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனால் இந்த ஷீஆ சிந்தனைவாதிகள் கடந்த பல தசாப்தங்களாக இந்த குடும்பத்தினர் கொள்ளைக்காரர்கள் யூதர்களின் வழியில் வந்தவர்கள் என்றெல்லாம் வாய்க்கு வந்தபடி பல பொய்களைக் கலந்து வரலாற்று இருட்டடிப்பு செய்து கொண்டிருந்தார்கள்.

எப்படியாவது அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையில் இருக்கும் சவுதி அரசாங்கத்தினரின் ஆட்சியை கைப்பற்றி ஷியா சிந்தனை வாத ஆட்சியாக மாற்ற வேண்டும் என்று ஈரான் பலகாலமாக துடித்துக் கொண்டிருக்கிறது. அதற்குப் பின்னணியில் பல சதிவலைகளையும் செய்து கொண்டிருக்கிறது.

சவுதி அரேபியாவின் தலைசிறந்த இமாம்களை கொலை செய்வது குழப்பங்களை விளைவிப்பது என்று பல சதி வழிகளை செய்து கொண்டு வருகிறது. அதனால்தான் தாங்கள் ஹஜ் & உம்ரா அல்லது நீங்கள் பணி செய்யும் உங்கள் சவூதி ஊர்களில் சவூதி அரேபியாவின் இமாம்களுக்கு இராணுவ பாதுகாப்பு கொடுக்கப்படுவதை பார்க்கலாம்.

சவூதி அரேபியாவும் & ஷீஆக்களின் சதிவலைகளும்

தொடர் -2

குறிப்பு- எனது முழு தொடர்களையும் முழுவதுமாக படித்து தங்களின் அழகிய உரையாடல்களை முன் வைக்கலாம் அதை மதிக்கிறோம், பதிவை வாசிக்காமல் விஷமக் கருத்துகளை பகிர நினைக்கிற மாற்றுக் கருத்துடையவர்கள் தயவுசெய்து என் பதிவில் இருந்து கடந்து செல்லலாம், அவர்களின் கருத்துக்கள் இங்கு வரவேற்கப்படாது மற்றவர்கள் தொடர்ந்து பயணிக்கலாம்)

வஹ்ஹாபிகளின் கோட்டையான சவூதி அரேபியா ஆல ஸஃஊது அரசாங்க குடும்பத்தினர் புரியும் அட்டூழியங்களும் அநீதங்களும் நாளுக்கு நாள் அதிகமாகி கொண்டே செல்கின்றது அதனால் அவர்கள் இறை அதிருப்தியை பெற்றுவிட்டனர் என்றெல்லாம் கூறி , அங்குள்ள தற்போதய பிரச்சனையான அமெரிக்காவுக்கு சவூதி அளித்து வரும் ஆதரவுகள் இன்னும் அங்கு நடந்து கொண்டிருக்கும் வழக்கத்துக்கு முரணான சில மாற்றங்களை அவர்களுக்கு சாதகமாக பயன்படுத்தி,பொய்யான நபிமொழிகளையும் சொல்லி மக்களிடையே தவறான கருத்துக்களை சிலர் பரப்ப முயற்சி செய்கின்றனர்.

எனது இந்த கருத்துக்கள் சொந்த கருத்துக்கள் அல்ல கடந்த வாரம் நேரடியாக சவுதி அரேபியா சென்ற பொழுது அங்குள்ள பல உலமாக்களிடம் அமர்ந்து கேட்ட அவர்களின் கருத்துக்களை மட்டுமே இங்கு பதிவு செய்கிறேன்....

மார்க்கத்துக்கு முரணாக இசையை அனுமதிக்கிறார்கள் ஹிஜாப் பேணப்படவில்லை அங்குள்ள உலமாக்கள் வாய்மூடி இருக்கிறார்கள் என்ற கேள்விகள் எல்லாம் வைக்கப்படுகிறது.

நாமும் அவ்வப்பொழுது அங்கு நடக்கிற மார்க்கத்திற்கு முரணான சில விடயங்களை நமது முகநூல் பதிவின் ஊடாக விமர்சனம் செய்து

தான் வருகிறோம் என்பது நமது பதிவை தொடர்ந்து படித்து வரும் வாசகர்களுக்கும் புரியும்..!!!

யார் சொன்னது அங்குள்ள உலமாக்கள் வாய்மூடி இருக்கிறார்கள் என்று ...!

மார்கத்துக்கு முரணான விடயங்களை அவர்கள் எதிர்த்துப் பேசியதால் அவர்கள் இன்றும் கடுமையாக தண்டிக்கப்படுகிறார்கள் என்பது நம்மில் எத்தனை பேருக்கு தெரியும் ...!!!

எது சரி தவறு என்பதை இங்கு இருந்து கொண்டு விமர்சிப்பதும் தவறே....!!!!

வாய் சவுடால்களாக பொது தளங்களில் பதிந்து பாலஸ்தீனத்திற்கு ஆதரவாக தாங்கள் பேசுவதாகவும் அதற்கு தனது இராணுவப்படை அனுப்புவதாக பேசிக் கொண்டிருக்கும் ஈரான் துருக்கி போன்று இருந்து விடக்கூடாது என்பதில் மிகவும் கவனமாக இருக்கிறது போலும்...

லெபனானில் இருந்து ஹஸ்புல்லா இஸ்ரேலை தாக்குவதை நமது சில அறிவிலிகள் பெரிதாக பேசிக் கொண்டு திரிகிறார்கள், அதற்கு பகரமாக பதிலில் தாக்கப்படுபவர்கள்

லெபனான் ஹிஸ்பிகளோ, ஷீஆக்களோ அல்ல!!

பாலஸ்தீனர்கள் தான் அதிகம் பாதிக்கப்படுகிறார்கள் என்பது நாம் உடனே புரிந்து கொள்ள வேண்டிய சமயோசித சிந்தனை....!!!

ஒவ்வொரு ஜும்மாவின் குத்பாவில் ஆட்சியாளர்களுக்கு நேரான வழியையும் அறிவையும் இறை அச்சத்தையும் கொடு என்று துஆ கேட்கும் துணிவுள்ள உலமாக்கள்தான் சவுதி அரேபியாவின் உலமாக்கள்...

அல் வலா வல் பரா.... என்ற அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையில் வெளிப்படையான இறைநிராகரிப்பை மேற்கொள்ளாத வரை ஆட்சியாளர்களுக்கு எதிராகவும் கிளர்ச்சி செய்யவோ எதிர்கவோ கூடாது, அதனால்தான் அன்று மது அருந்தும் வழக்கம் கொண்ட வலீத் பின் அகபாவிற்க்கு பின் அப்துல்லாஹ் பின் மஸ்ஊத் ரழியல்லாஹு அன்ஹுவும் ஹஜ்ஜாஜ் பின் யூசுப் போன்ற கொடுங்கோலர்களின் பின்னால் அவர்களை நேரடியாகவோ , மறைமுகமாகவோ எதிர்காமல், அவர்களுக்கு உபதேசம் செய்தும் சில நபி தோழர்கள் அவருக்கு நேர்வழி கிடைக்கவும் தொழுதும் & அமைதியாக வாழ்ந்தும் வந்தார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மார்க்கத்திற்கு முரணாக ஆட்சியாளர்கள் நடக்கிறார்கள் என்று

ஆட்சியாளர்களுக்கு எதிரான புரட்சிகளை ,கிளர்ச்சிகளை மேற்கொள்ளும் பொழுது நாட்டு மக்களின் அமைதிக்கு மிகவும் அபாயத்தையும், அச்சுறுத்தலையும் தரும் என்பதால் (ஐவேளை தொழுகை கூடாது ஹஜ் கூடாது போன்ற மார்க்கத்தில் கடமையாக்கப்பட்ட விடயங்களை மறுக்கும் பொழுது அமைதியாக இருக்க கூடாது) இறைநிராகரிப்பை அவர்கள் வெளிப்படுத்தாத வரை அவர்களுக்கு எதிராக புரட்சி செய்யக்கூடாது அவர்களுக்கு உலமாக்கள் புத்திமதி சொல்ல வேண்டும் துஆ செய்ய வேண்டும்.

எங்கெல்லாம் இந்த இஸ்லாமிய கொள்கை கவனிக்கப்படவில்லையோ ஆட்சியாளர்களுக்கு எதிராக புரட்சிகள் நடந்தது அங்கு இன்று பொது மக்களுக்கு எந்த அளவுக்கு பாதிப்புகளும் பிரச்சினைகளும் தொடர்ந்து நடந்து வருகிறது என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியும் (உம் இந்த குழப்பங்களால் இன்று சூடானில் மோசமான மக்களுக்கு எதிரான ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது , கொலை,கொள்ளை, கற்பழிப்பு

போன்ற மனித நேயத்திற்கு எதிரான அநீதங்கள் நடைபெறுகின்றன.

எகிப்து, ஈராக், லெபனான், ஸிரியா, யமன் போன்ற நாடுகள் இதற்கு நல்ல உதாரணங்கள்.

சவூதி அரசாங்கம் இரண்டு புனித தளங்களை பாதுகாக்க வேண்டும் என்றும் ஹாஜிகளுக்கும் இந்த புனித நகரங்களுக்கு வருகை தரும் மக்களுக்கு பாதுகாப்பு அளிக்க வேண்டும் என்பதில் மிக அதிகம் கவனம் செலுத்தி வருகிறார்கள் அதற்காக பல விடயங்களை தியாகம் செய்தும் வருகிறார்கள்.

பாலஸ்தீன பிரச்சினையில் சவூதி அரசாங்கம் நேரடியாக இஸ்ரேலுக்கு எதிர்ப்பை தெரிவிப்பதில்லை என்று நமக்கு வருத்தங்கள் இருந்தாலும், பல உதவிகளை (மருத்துவம், உணவு, தேவைகள்) பாலஸ்தீன மக்களுக்கு சவூதி அரசாங்கம் செய்து வருகிறது என்பது அதிகமானோர் அறியாத ஒரு தகவல்.

இது போன்ற தருணங்களில் ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம் என்று சொல்வார்கள் அல்லவா இதோ பாருங்கள் சவுதி அரசாங்கம் இஸ்ரேலுக்கு துணை புரிகிறது அதை செய்கிறது இதை செய்கிறது என்று பொதுமக்களை அதிகம் குழப்பிக் கொண்டிருக்கிறார்கள் இந்த ஈரானிய சிந்தனையாளர்கள்.

சவூதி அரேபியாவில் விக்ரக வழிபாடுகள் மீண்டும் உருவாகிறது என்றெல்லாம் பல தவறான கருத்துக்களை வலைதளங்களில் பரப்பி வருகின்றனர்.

சவூதி அரேபியாவும் & ஷீஆக்களின் சதிவலைகளும்

தொடர் - 3

சவுதி அரேபியாவின் அரச பரம்பரையைச் சேர்ந்தவர்கள் முறையான வம்சாவளியை சேராதவர்கள், யூத வம்சாவளியை சேர்ந்தவர்கள் என்றெல்லாம் காலம் காலமாக மாற்றுக்கருத்துடையவர்கள் எழுதிய பேசியும் தெளிவான முறையில் வெறுப்பு அரசியல் புரிந்து வருகிறார்கள் இதையே காரணமாக வைத்து ஆட்சி செய்வதற்கு குரேஷிகளே தகுதியானவர்கள், அஹ்லுல் பைத் -இறைத்தூதர் அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களே தகுதியானவர்கள் இவர்கள் வழிப்பறி கொள்ளைக்காரர்கள் என்றெல்லாம் அவதூறு பரப்பி வந்தவர்களுக்கு இதோ மறுப்பு....

சவூதி அரச பரம்பரையைச் சேர்ந்தவர்களான ஆல ஸவூத் குடும்பத்தினர் இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழித்தோன்றல்களைச் சார்ந்தவர்களே என்ற ஆய்வில் மேற்கொள்ளப்பட்ட தகுதி வாய்ந்த ஆதாரங்களை நாம் உங்களுக்கு ஆதாரத்துடன் இந்தக் கட்டுரையில் கூறி இந்த தொடரை முடிக்க இருக்கிறோம் இன்ஷா அல்லாஹ்.

உடனே மாற்றுக் கருத்து உடையவர்கள் சவூதி அரசாங்கத்தால் பொருளாதார உதவிகளை பெற்று இவர் இவ்வாறு எழுதுகிறார் என்று மிகவும் கீழ்த்தரமாக விமர்சிப்பார்கள், இதைப் பற்றி எனக்கு எந்த கவலையும் இல்லை. உண்மையை உரக்கச் சொல்ல வேண்டும் என்பதே நமது கட்டுரையின் நோக்கம்.

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் பதினெட்டாவது பாட்டனரான ரபீஆ பின் நஸ்ஸார் பின் முஇத் பின் அத்னான் என்பவரின் அளவில் சவூதி அரேபியாவின் ஆல ஸவூத் குடும்பத்தினர்களும்,ஆல ஷைக் குடும்பத்தினர்களும் (இமாம் முஹம்மது பின் அப்துல் வஹ்ஹாப் அந்நஜ்தி) இணைகின்றனர்.

இதை சவூதி அரசாங்கம் மிக ஆதாரத்துடன் சவுதி அரசாங்கமும் 100 வருடமும் என்ற 22 வால்யூம் கொண்ட புத்தகத்தில் கூறியிருக்கிறது.

அதை மக்கமா நகரில் உள்ள புனித ஹரம் ஷரீபில் உள்ள நூலகத்தில் கண்டேன், இந்த கட்டுரையின் கீழ் ஆதாரத்தை கொடுத்துள்ளேன்.

மேலும் இந்த புத்தகம் அதில் இடம்பெற்றிருக்கும் தகவல்கள் மிகவும் ஆதாரமானது என்பதை நிரூபிப்பதற்கு 500க்கும் அதிகமான பக்கங்கள் கொண்ட சவூதி அரேபியாவின் வரலாறுகள் எந்தெந்த வரலாற்று ரீதியான அடிப்படையான புத்தகங்களில் (References) *இடம் பெற்று இருக்கிறதோ அவைகளை ஒன்று திரட்டியும் ஒரு புத்தகத்தை அரசாங்கம் வெளியிட்டு இருக்கிறது அதையும் இங்கு குறிப்பிட்டிருக்கிறேன்.*

இதோ ஆல சவூத் குடும்பத்தினரின் பரம்பரையின் சங்கிலி தொடர் இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மூதாதையர்களுடன் சென்று முடிகிறது.

மன்னர் அப்துல் அஜீஸ் பின் அப்துர் ரஹ்மான் பின் பைசல் பின் துருக்கி பின் அப்துல்லாஹ் பின் முஹம்மத் பின் சவூத் பின் முஹம்மத் பின் முக்ரின் பின் மிர்கான் பின் மூஸா இப்ராஹிம் பின் ரபீஆ பின் மானிஃ பின் முஸய்யிப் பின் முக்இத் பின் பத்ரான் பின் மாலிக் பின் ஸாலிம் பின் மாலிக் பின் கஸ்ஸான் பின் ரபீஆ பின் முன்கித் பின் ஹாரிஸ் பின் ஸஃத் பின் ஹுமாம் பின் முர்ரா பின் துஹுல் பின் ஸைபான் பின் தஃலபா பின் உகாபா பின் ஸஃப் பின் பக்ரு பின் வாயில் பின் காஸித் பின் ஹனப் பின் துஃமா பின் ஜதீலா பின் அஸத் பின் ரபீஆ பின் நஸ்ஸார் பின் முஇத் பின் அத்னான்.

தாரீக் அல்புல்தான் அந்நஜ்திய்யா பிஃல் மஸாதீர் அத்தாரீகிய்யா என்ற நூலாகும்.

تاريخ البلدان النجدية في المصادر التاريخية -عبد الله المبرز و حمد الوهيبي

ஆக நபியவர்கள் குடும்பத்தினர்களை பாதுகாப்பதற்காக தான் எங்களது வாழ்க்கையை தியாகம் செய்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லும் ஷீஆ கொள்கையின் ஆதரவாளர்களே!

ஆல ஸவூத் குடும்பத்தினர்களும் முறையான பாரம்பரிய கண்ணியத்திற்குரிய குடும்பத்தினர் என்பதை மனதில் வைத்து இனி விமர்சனம் செய்யுங்கள்,

சவுதி அரேபிய அரசாங்கம் பாலஸ்தீனத்திற்கு உதவி செய்யப் போவதில்லை , மார்க்கத்துக்கு முரணான விஷயங்கள் சவுதி அரேபியாவில் நடைபெறும் என்று இன்று செய்திகள் நம்மை வந்து சேர்கிறது, இதற்குரிய

பதிலை அல்லாஹ்விடத்தில் இந்த அரசாங்கம் கூற கடமைப்பட்டு இருக்கிறது.

இதற்காக நாம் முழுமையாக வருத்தப்படுகிறோம் கவலை கொள்கிறோம், அதே நேரத்தில் இது போன்ற சந்தர்ப்பத்தை பயன்படுத்தி ஷியாக்களின் சதி வலையில் சிக்கிவிட வேண்டாம், ஏகத்துவத்தின் ஜோதியை முழு உலகத்திலும் பரப்பியது வஹியை முழு உலகத்திலும் கொண்டு சேர்த்தது அன்று முதல் இன்று வரை சவூதி அரேபியா அதில் நமது புனித தலங்கள் இருக்கின்றன, அதை விமர்சனம் செய்வது புனித தலங்களை விமர்சனம் செய்வதற்கு இணையாகும் என்பதை மறந்து விட வேண்டாம்!!

அல்லாஹ் நம் அனைவருக்கும் அருள் புரிவானாக!

ஷீஆக்கள் அனைவரும் ஒரு படித்தரத்தில் இல்லை

இந்த காரணத்திற்காக, அறிஞர்களால் அவர்களுக்கு எதிராக பல தீர்ப்புகள் வழங்கப்பட்டுள்ளன, மேலும் ஷீஆக்கள் மீதான தீர்ப்பின் சுருக்கம் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது:

ஷீஆக்கள் மூன்று வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளனர்

1- ஏகோபித்த கருத்தின் அடிப்படையில் இந்த வகையைச் சேர்ந்தவர்கள் காஃபிர்கள் (இறை நிராகரிப்பாளர்கள்)

அவர்களில் இஸ்மாயீலி ஷியாக்கள், நுசைரிகள் - சிரியாவில் அநீத ஆட்சி செய்து கொண்டிருந்த பஷ்ஷாருல் அஸத், இவரின் தந்தை ஹாபிழ் அல்அஸத் போன்றோர் இந்த கொள்கையை சார்ந்தவர்கள் என்று கூறப்படுகிறது.கராமத்தியர்கள் மற்றும் அலி ரழியல்லாஹு அன்ஹு அவர்களை இறைவனாக பார்ப்பவர்கள்.

2- ஏகோபித்த கருத்தின் அடிப்படையில் இந்த வகையைச் சேர்ந்தவர்கள் காஃபிர்கள் இல்லை.

இவர்கள் ஷீஆ முபஃழ்ழலா வகையினர், இந்த வகையைச் சேர்ந்தவர்கள் ஷீஆக்கள் இவர்கள் அலி ரலியல்லாஹு அன்ஹு அவர்களை அபூபக்கர், உமர், உஸ்மான் ரழியல்லாஹு அன்ஹும் போன்ற சஹாபாக்களை விட சிறந்தவர் என்று நம்புபவர்கள் நபியவர்களின் காலத்திற்கு பின்பு இவர்களுக்கு தான் கிலாபஃத் கொடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று மட்டும் நம்புபவர்கள்.

3- இந்த பிரிவினர் குறித்து அறிஞர்களிடையே கருத்து வேறுபாடு நிகழ்கிறது,இவர்களில் ராஃபிழாக்களும் அடங்குவர்.

ஈரானில், ஈராக்கில் வசிக்கும் ஷீஆக்கள், இன்றுஎமனில் வசிக்கும்

ஜெய்திய ஜாரூதிய ஷீஆக்களின் கொள்கையை சுமந்த "ஹுஸியீன்கள்", என்றும் அழைக்கப்படுகிறார்கள்.

இப்னு தைமியா ரஹிமஹுல்லாஹ்வின் வார்த்தைகளால் இந்த பிரிவுகள் சுட்டிக்காட்டப்படுகிறது.

ராபிழா ஷியாக்கள் தொடர்பாக இப்னு தைமியாவின் நிலைபாடு என்ற புத்தகத்திலிருந்து...

من بحث تحرير موقف ابن تيمية من الرافضة.

-அஷ்ஷேக் ஸுல்தான் அல்உமைரி ஹஃபிழஹுல்லாஹ்

மவ்லிது
ஒரு பார்வை

இறைவன் தன் தூதுவரின் மீது (ஸல்லல்லாஹு அலைஹி வ ஸல்லம்) ஸலவாத்து கூறுவதை கட்டளையாக ஆக்கிருக்கிறான் தன் திருமறையில்.

اِنَّ اللّٰهَ وَمَلٰٓـئِكَتَه يُصَلُّوْنَ عَلَى النَّبِىِّ يٰۤاَيُّهَا الَّذِيْنَ اٰمَنُوْا صَلُّوْا عَلَيْهِ وَسَلِّمُوْا تَسْلِيْمًا

"இந்த நபியின் மீது அல்லாஹ் அருள் புரிகிறான். மலக்குகளும் அவருக்காக அருளைத் தேடுகின்றனர். முஃமின்களே! நீங்களும் அவர் மீது ஸலவாத்து சொல்லி அவர் மீது ஸலாமும் சொல்லுங்கள்." *(அல்குர்ஆன் -33:56)*

இதிலிருந்து நமக்கு தெரியவருவது ஸலவாத் என்பது ஒரு இபாதத். அதை நாம் இறைவன் கூறிய முறையில் நபி(ஸல்) அவர்களின் வழிமுறையில் செய்தால் ஈடேற்றம். இல்லை என்றால் வழிகேடு.

وَمَا آتَاكُمُ الرَّسُولُ فَخُذُوهُ وَمَا نَهَاكُمْ عَنْهُ فَانتَهُوا وَاتَّقُوا اللهَ إِنَّ اللهَ شَدِيدُ الْعِقَابِ

"மேலும், (நம்) தூதர் உங்களுக்கு எதைக் கொடுக்கின்றாரோ, அதை எடுத்துக் கொள்ளுங்கள் (மார்க்கமாக); இன்னும், எதை விட்டும் உங்களை விலக்குகின்றாரோ, அதை விட்டும் விலகிக் கொள்ளுங்கள்; மேலும், அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளுங்கள். நிச்சயமாக அல்லாஹ் வேதனை செய்வதில் மிகக் கடினமானவன்." *(அல்குர்ஆன் - 59:7)*

228- மக்கள், நபி (ஸல்) அவர்களிடம், "அல்லாஹ்வின் தூதரே! உங்கள் மீது நாங்கள் எப்படி ஸலவாத்து சொல்வது?" என்று கேட்டார்கள். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் "அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மதின் வ அஸ்வாஜிஹி வ துர்ரியத்திஹி கமா ஸல்லய்த்த அலா ஆலி இப்ராஹீம இன்ன(க்)க ஹமீதுன் மஜீத்".

"இறைவா! இப்ராஹீம்(அலை) அவர்களுடைய குடும்பத்தார் மீது, நீ

கருணை புரிந்ததைப் போன்று, முஹம்மத் அவர்கள் மீதும், அவர்களுடைய மனைவிமார்கள் மற்றும் அவர்களுடைய சந்ததிகள் மீதும் கருணை புரிவாயாக! இப்ராஹீம் (அலை) அவர்களுடைய குடும்பத்தார் மீது நீ உன் அருள் வளத்தைப் பொழிந்ததைப் போன்று, முஹம்மதின் மீதும் அவர்களுடைய மனைவிமார்கள் மீதும் அவர்களுடைய சந்ததிகள் மீதும் உன் அருள் வளத்தைப் பொழிவாயாக! நிச்சயம் நீயே புகழுக்குரியவனும் கண்ணியம் நிறைந்தவனும் ஆவாய்!" என்று சொல்லுங்கள் என பதிலளித்தார்கள். -புகாரி- 3369: அபூ ஹுமைத் அஸ்ஸாஇதீ (ரலி)

ஆதலால் நம் தொழுகையில் இந்த ஸலவாத்தை ஓதுகிறோம். இதனால் தான், இமாம் அஹ்மத் பின் ஹம்பல் (ரஹ்) அவர்கள் தொழுகையின் ருக்ன் (அங்கமாக) ஸலாவத்தை கருதுகிறார்கள். யார் அதை வேண்டுமென்றே விட்டு விட்டால் அவரிடத்தில் தொழுகை கூடாது.

ஆனால் மற்ற இமாம்களிடம் சுன்னாவாகவும் இன்னும் வாஜிபாகவும் இருக்கிறது. எனவே, நான் குர்ஆன் இன்னும் சுன்னா மற்றும் மத்ஹபுகளின் சங்கையான இமாம்களின் கூற்றையும் இங்கு சுருங்க கூறிருக்கிறேன்.

இவைகள் அல்லாமல் நாம் ஸலவாத் (?) என்று ஓத கூடியவைகளை மக்களின் வழக்கம், மஹல்லாவின் சம்பிரதாயம், எங்கள் மூதாதயர்களின் வழிமுறை என்று ஓதினால், அவைகள் அல்லாஹ்வும் அவனின் தூதுவரும் அங்கீகாரம் வழங்காத, இன்னும் ஷிர்க் (இணைவைத்தல்) உள்ள வார்த்தைகள் இருந்தால், அது ஒரு தெளிவான வழிகேடன்றி வேறெதுவும் இல்லை.

عن أم المؤمنين أم عبد الله عائشة رضي الله تعالى عنها قالت: قال رسول الله صلى الله عليه وسلم: (من أحدث في أمرنا هذا ما ليس منه فهو رد)

ஆயிஷா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள், நபி(ஸல்) அவர்கள் கூறியதாக. "யார் நம் மார்க்க விடயத்தில் நூதனமான புதிய விடயங்களை உண்டாக்குகின்றாரோ, அது மறுக்கப்பட வேண்டியவை."
(நூல்: முஸ்லிம், புகாரி)

நபி (ஸல்) அவர்கள் காட்டித்தராத, கூட்டு திக்ரு செய்தவர்களை, இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் கண்டித்தார்கள். அவ்வாறு செய்தவர்களை நோக்கி, ''நீங்கள் முஹம்மது (ஸல்) அவர்களின் மார்க்கத்தை விட மிக நேர்வழியான ஒரு மார்க்கத்தில் இருக்கின்றீர்கள் அல்லது வழிகேட்டின் வாசலை திறக்கின்றீர்கள்'' என்று கோபத்துடன் இப்னு மஸ்ஊத் (ரலி) அவர்கள் கூறினார்கள். நீண்ட இந்தச் செய்தியில் தொடர்ந்தும் அந்த மக்களை கண்டித்ததாக உள்ளது. பார்க்க : ஸீனனுத்தாரிமீ (204)

இது போன்ற செய்தி முஸன்னஃப் அப்திர்ரஸ்ஸாக் (5409, 5410) இப்னு வழ்ழாஹ் அவர்களின் "அல்பிதஉ" (9) ஆகிய நூல்களிலும் இடம் பெற்றுள்ளது.

இதோ! மாலிக் மத்ஹபைச் சேர்ந்த இமாம் அபூ ஹஃப்ஸ் தாஜுத்தீன் அல்ஃபாகிஹானி (இறப்பு 734 ஹி) அவர்கள் நபி பிறந்த நாள் விசேஷம் தொடர்பாக வழங்கியுள்ள ஃபத்வாவை பாருங்கள்!

"இந்த மவ்லிதுக்கு (நபி பிறந்த தின விஷேசத்துக்கு) (அல்லாஹ்வின்) வேதத்திலும் சுன்னாவிலும் எந்த ஒரு அடிப்படை ஆதாரத்தையும் நான் அறியவில்லை. எவர்கள் மார்க்கத்தில் வழிகாட்டிகளாக இருக்கின்றார்களோ, அத்தகைய உம்மத்தின் உலமாக்கள் எவர் ஒருவரும் இதைச் செய்ததாக அறிவிக்கப்படவுமில்லை. அந்த உலமாக்கள், தங்களுக்கு முன்பிருந்தவர்களின் அடிச்சுவடுகளைப் பற்றிப்பிடித்தவர்களாக இருந்தார்கள். மாறாக இது ஒரு பித்அத் (புதிதாக உண்டாக்கப்பட்டது) ஆகும். இதை வீணர்கள் உருவாக்கியுள்ளார்கள். இது மனோ இச்சையாகும். இதன் மூலம் சாப்பாட்டு பிரியர்கள் தங்களின் தேவையை நிறைவு செய்து கொள்கிறார்கள்".

மவ்லிது பாடல்களின் தவறுகள்:

மீலாதுவை சரி கண்ட சில முற்கால அறிஞர்களுக்கு இப்போது தமிழகத்தில் பாடப்பட்டு கொண்டிருக்கும் சுப்ஹான மவ்லிது பாடல்கள் கிடைத்திருந்தால் அவற்றை கடுமையாக எதிர்த்திருப்பார்கள். ஏனென்றால் மார்க்கத்தின் அடிப்படையான ஓரிறைக் கொள்கைக்கே விரோதமான பாடல் அடிகள் பல அதில் உள்ளன. உதாரணத்திற்கு சிலவற்றை காண்போம்:

சுப்ஹான மவ்லிதின் ஐந்தாவது பைத்தில் ஓர் அடி

"பஸத்து கஃப்ப ஃபாக்கத்தீ வன்னதமி -
அர்ஜூஜஸீல பழ்லிகும் வல்கரமி",

பொருள்: "என் வறுமை, என் கைசேதம் ஆகிய கைகளை நான் விரித்து விட்டேன். ஆகவே யான், தங்களின் மிகுதியான அருட்கொடை மற்றும் கொடைத் தன்மையை எதிர்பார்கிறேன்".

இந்த அடியில் வறுமையை நீக்க நபியின் அருட்கொடையை வேண்டி நபியிடம் கைவிரிப்பதைப் பார்க்கிறோம். இது அல்லாஹ்விடம் கேட்க வேண்டியதை நபியிடம் கேட்கும் இணைவைப்பு வாசகங்களாகும்.

இது குர்ஆனுடன் எப்படி மோதுகிறது? அல்லாஹ் கூறுகிறான்:

“நிச்சயமாக உம்முடைய இறைவன், தான் நாடியவருக்கு வாழ்வாதாரத்தை விசாலமாக வழங்குகிறான். (தான் நாடியவருக்கு) அளவாகவும் கொடுக்கிறான். நிச்சயமாக அவன் தன் அடியார்களை நன்கறிந்தவனாகவும் பார்ப்பவனாகவும் இருக்கிறான்.” (அல்குர்ஆன் 17:30, 31)

இது போன்ற பல இறைவசனங்களுக்கு இந்த மவ்லிது பாடல் அடி முரண்படுவதை பார்க்கலாம்.

அதற்கடுத்த அடி :

“முஸ்தஷ்ஃபிஅன் நஸீல ஹாதல் ஹரமி-
ஃபலாஹிலுணீ பிதவாமில் மததி”

பொருள்: “மதீனாவெனும் இந்த மகத்தான பூமியில் இறங்கிய மாநபியே! தங்களின் பரிந்துரையை தேடியவனாக தங்கள் முன் நிற்கின்றேன். எனவே, நிரந்தரமான நல்லுதவி செய்வதன் மூலமாக என்பால் கடைக்கண் பார்வையைச் செலுத்துவீர்களாக!”

இந்த அடி “உன்னையே நாங்கள் வணங்குகிறோம் உன்னிடமே உதவியும் தேடுகிறோம்” என்ற *(அல்குர்ஆன் : 1:4)* வசனத்துக்கும், இந்த கருத்தை கொண்ட பல்வேறு வசனங்களுக்கும் முரணாக உள்ளது. *(உதாரணத்திற்கு பார்க்க : அல்குர்ஆன் 35:2, 3).*

அதற்கடுத்த அடி :

“கத் ஃபுக்துமுல் கலக பிஹுஸ்னில் குலுகி
ஃபஅன்ஜிதுல்மிஸ்கீன கப்லல் கரகி”

பொருள்: அழகிய நற்குணங்களின் மூலமாக தாங்கள் நிச்சயமாக படைப்பினங்களை விட்டு மேம்பட்டு விட்டீர்கள். எனவே, யான் கவலையில் மூழ்குவதற்கு முன்னரே, இந்த ஏழையை காப்பாற்றுங்கள்!”.

அல்லாஹ் கூறுவதை கவனியுங்கள் : "(நபியே) நீர் கூறுவீராக ! அல்லாஹ் நாடியதை தவிர எனக்கு எவ்வித தீமையோ, நன்மையோ எனக்கே செய்து கொள்ள நான் எவ்வித அதிகாரமும் பெற்றிருக்கவில்லை." (அல்குர்ஆன் 10:49).

மற்றொரு வசனம் : “(நபியே) நீர் கூறுவீராக ! நிச்சயமாக நான் உங்களுக்கு நன்மையோ, தீமையோ செய்ய சக்தி பெற மாட்டேன்”. *(அல்குர்ஆன் 72:21.)*

இந்த வசனங்களுக்கும், இந்த கருத்திலமைந்த பல வசனங்களுக்கும் மேற்கண்ட மவ்லிது அடி முரண்படுகிறது.

இவை போன்று, மவ்லிதில் உள்ள வேறு பல அடிகளும் இஸ்லாத்திற்கு முரணாக அமைந்துள்ளன. அவற்றின் பொருளை அறியும் பொது இஸ்லாத்தைப் பற்றி குறைந்த அளவு தெரிந்த ஒருவரும் கூட, அவற்றில் தவறு உள்ளதை புரிந்து, தெரிந்து கொள்ளலாம்.

அல்லாஹ்விடமே பிரார்த்திக்க வேண்டும். அல்லாஹ் அல்லாதவர்களிடம் - அது நபியாகவே இருந்தாலும் - பிரார்த்திப்பது இணைவைத்தலாகும். இதன்படி மவ்லிதின் இந்த அடிகளையும் அங்கீகரித்து படிப்பதும் பாடுவதும், இணைவைத்தலாகும்.

அல்லாஹ் கூறுகிறான் : "எவனொருவன் அல்லாஹ்வுக்கு இணை கற்பிக்கின்றானோ, அவனுக்கு அல்லாஹ் சுவனபதியை தடுத்து விட்டான். மேலும் அவன் ஒதுங்குமிடம் நரகமேயாகும். அக்கிரமகாரர்களுக்கு உதவிபுரிபவர் எவருமில்லை." - அல்குர்ஆன் 5:72.

ஆகவே, பித்அத்தான மீலாதையும், இணை வைப்பதாகவும் பித்அத்தாகவும் உள்ள மவ்லிது பாடல்களையும் விட்டொழிக்க வேண்டும்! அல்லாஹ் நல்லுதவி செய்வானாக!

ஐயமும் தெளிவும்

கேள்வி: *மஸ்ஜிதில் அல்லது வீட்டில் பர்ளு தொழுகைக்கு முன் அல்லது பின் சஜ்தாவில் இருந்து துஆ செய்யலாமா?*

பதில்:

வணக்க வழிபாடு என்பது அல்லாஹ்வை திருப்தி படுத்துவதற்காகவும் இறைவனின் அதிருப்தியை விட்டு தவிர்ந்திருப்பதற்காகவும் இஸ்லாம் நமக்கு வழங்கிய ஒரு அற்புதமான வழிமுறை.

இறைத்தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள் எவரொருவர் இந்த மார்க்கத்தில் இல்லாத ஒன்றைப் புதிதாகப் புகுத்துகிறாரோ அது மறுக்கப்பட வேண்டியதாகும். (புஹாரி முஸ்லிம் : ஆயிஷா ரழியல்லாஹுஅன்ஹா.

முஸ்லிமில் இடம்பெறும் மற்றொரு அறிவிப்பில் எந்தக் காரியத்தை நான் உத்தரவிடாது செய்யப்பட்டாலும் அதை யார் செய்தாலும் நிராகரிக்கப் பட வேண்டும் என நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்.

ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள்:

நிச்சயமாக பேச்சுக்களில் மிகச் சிறந்தது அல்லாஹ்வின் வேதமாகும். பாதைகளில்மிகச் சிறந்தது முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பாதையாகும். நிச்சயமாக மார்க்கத்தில் மிகக் கெட்டது பித்அத் எனும் நூதன அனுஷ்டானமாகும் (மார்கத்தில் புதிதாகப் புகுத்தப்பட்டது). எல்லா பித்அத்துகளும் வழகேடாகும்.வழிகேடுகள் நரகுக்கு இட்டுச் செல்லும். நூல்: முஸ்லிம் - ஜாபிர் ரழியல்லாஹு அன்ஹு

வணக்க வழிபாடு என்பது மார்க்கம் நமக்கு எந்த ஒரு அளவுகோலில்

எந்த ஒரு வரைமுறையில் கூறியிருக்கிறதோ அதுதான் அதில் கூடுதல் குறைவு செய்வது அனுமதி அல்ல.

الأصل في العبادة التوقيف

அல்அஸ்லு பிஃபில் இபாததி அத்தவ்கீப்ஃ.

மேல் காணும் இந்த உசூலின் (சட்டத்தின்) அடிப்படையில் மார்க்க விஷயங்களை நிறுத்துப் பார்ப்பது இன்றையமையாத ஒன்று.

இன்று சிலர் சஜ்தாவில் துஆ செய்வதை வழமையாக்கி கொண்டிருக்கிறார்கள், அவர்களின் பார்வையில் அல்லாஹ்விடம் தான் துஆசெய்கிறோம் இதில் என்ன குற்றம் இருக்கிறது என்று நியாயமான கருத்தை முன் வைக்கிறார்கள்.

இதோ மார்க் ரீதியான பார்வையில் நமது பதில்.

இமாம் நவவி ரஹிமஹுல்லாஹ் இது போன்ற சஜ்தாவில் செய்யும் துஆவை தவிர்க்குமாறு கூறுகிறார்கள். வெறுமனே ஒரு மனிதர் தொழுகைக்கு வெளியில் ருக்கூ செய்து துஆ செய்வது எவ்வாறு வெறுக்கத்தக்க ஒன்றோ அதேபோன்று தொழுகைக்கு வெளியில் சஜிதாவில் துவா செய்வது பித்அதாகும் (நூதனமான மார்க்கத்தில் இல்லாத விடயம்) பித்அத்தான விஷயத்தை செய்தால் வழிகேடு ஏற்படும்.

(நூல் - மஜ்மூஃ -3/565)

குறிப்பாக பஃஜ்ர் தொழுகைக்கு பின் அஸர் தொழுகைக்கு பின் தொழுகை தடை செய்யப்பட்ட நேரத்தில் சிலர் இந்த வகையான ஸஜ்தாவை செய்து துஆ செய்கிறார்கள்.

அதைப் பார்க்கும் இமாம்களோ முஅத்தின்களோ தொழுகையாளிகளோ இந்த செயலை செய்யும் நபருக்கு விளக்கம் அளிப்பதில்லை, நமக்கு என்ன தேவை என்று கடந்து சென்று விடுகிறார்கள்.

இமாம் இப்னு தைமிய்யா ரஹிமஹுமுல்லாஹ் கூறுகிறார்கள்

வெறுமனே சஜ்தா செய்து துஆ செய்வது பித்ஆ ஆகும், எந்த அறிஞர்களும் இது முஸ்தஹப்பாக (விரும்பத்தக்க ஒன்று) மார்க்கத்தில் கூறவில்லை.

வணக்க வழிபாடு என்பது ஷரீஆவின் (மார்க்க சட்டத்தின்) அடிப்படையிலும், நபியவர்களை முறையாக பின்பற்றுவதிலும் தான் அமைந்திருக்கிறது.

மனம் தோன்றலின் அடிப்படையில் வணக்கம் செய்வது கூடாது.

இஸ்லாம் இரண்டு அடிப்படையான அம்சங்கள் மீது அமைக்கப்பட்டு இருக்கிறது.

முதலாவது அல்லாஹ்வை மட்டுமே வணங்குவது.

இரண்டாவது நபியவர்கள் சொன்ன அடிப்படையில் அல்லாஹ்வை வணங்குவது மன இச்சையின் அடிப்படையில் வழங்குவது கூடாது.

நூல் - பஃதாவா குப்ரா - 2/242

ஷைத்தான் கீழ்காணும் அடிப்படையில் இறை நம்பிக்கையாளர்களை பித்அது செய்ய தூண்டுவதில் கவனமாக இருப்பான்.

1-பித்அது செய்வதால் எந்த நன்மையும் கிடைக்கப் போவதில்லை.

2- நபி வழியை விட்டும் பாராமுகமாக ஆக்குவதில் சைத்தானுக்கு உதவி புரிகிறது, நபி வழியில் தான் நேர்வழி இருக்கிறது என்பதை தவிர்த்து விட்டு வழிகேடை நேர்வழியாக தேர்ந்தெடுப்பது அவனுக்கு மிகவும் விருப்பமான ஒன்று.

ஆக ஸஜ்தா என்பது மூன்று வகைப்படும்

1- தொழுகையில் செய்வது (இதில் மார்க்கம் வரையறுத்த நபிமொழிகளில் வந்த துஆக்களை ஓதலாம்)

2- குர்ஆன் ஓதும் பொழுது ஸஜ்தாவின் ஆயத்து வரும் பொழுது ஸஜ்தா செய்வது.

3- அல்லாஹ்வுக்கு நன்றி செய்வதற்காக ஸஜ்தா ஷுக்ரு செய்வது.

(இதில் நீண்ட நேரம் துவா செய்வது என்பது இல்லை நன்றியை தெரிவித்து ஸஜ்தா செய்து எழுந்து விட வேண்டும்)

துஆவில் ஏற்றமானது கையேந்தி செய்வதாகும், சஜ்தாவில் துஆ செய்வது முறையான துஆவிற்கு முரணாக இருக்கிறது.

இந்த மூன்று வகை சஜ்தாக்களை தவிர்த்து செய்யப்படும் சஜ்தா அதில் துஆ செய்வது பித்அதாகும்.

அல்லாஹு அஃலம்.

சஹாபாக்களை குறை கூறுதல்

-ஓர் ஃபித்னா

இன்று சர்வ சாதாரணமாக நபித்தோழர்கள் விமர்சிக்கப்படுகிறார்கள்! வரலாற்றுச் சம்பவங்களில் அவர்கள் சம்பந்தமாக நடந்த விடயங்களை வைத்து தான் நாம் பேசுகிறோம்!

சஹாபாக்கள் பாவமற்றவர்களா?

சஹாபாக்கள் பாவமற்றவர்களா என்ற பல வீணான விமர்சனங்கள், நியாயம் கற்பித்தலும் சமூக வலைதளங்களில் பரவலாக காணப்படுகிறது.

மிக கவலைக்குரிய விடயம் என்னவென்றால் தற்காலத்தில் இஸ்லாமிய விழிப்புணர்வுகள் நமது வாலிபர்களிடத்தில் அதிகமாக இருக்கிறது என்ற சந்தோஷத்தை விட புத்தக வாசிப்பு மிக குறைவாக இருக்கிறது என்ற கவலைக்குரிய விடயத்தை ,கசப்பான உண்மையை நாம் ஏற்றுக்கொள்ள தான் வேண்டும்.

இயக்கங்கள் தங்களுக்கு புரோகிராமாக எதை தலையில் செலுத்தி இருக்கிறார்களோ அதை வேதவாக்காக கருதி அதையே தனது வாழ்வின் மூச்சாக எடுத்துக் கொள்ளும் பல பரிதாபத்திற்குரிய பெயர் தாங்கிய இஸ்லாமிய அழைப்பாளர்கள் இன்று சமூகத்திற்கு மிகப்பெரிய அச்சுறுத்தலாகவே இருக்கிறார்கள்.

ஒரு சில இஸ்லாமிய இயக்கங்கள் வாசிப்பு வட்டங்களை வைத்துக் கொண்டு அவர்கள் எதை மார்க்கமாக விளங்கி இருக்கிறார்களோ அதை தங்களது குறுகிய பார்வையினால், அந்த சிறிய வட்டத்திற்குள் தங்களது அழைப்பாளர்களை உருவாக்குகிறார்கள். இதன் விளைவு குர்ஆன் சுன்னாவை தன் வாழ்வில் உயிர் நாடியாக மதித்து அதற்காக பெரும் தியாகங்கள் செய்து பயணித்த சத்திய சஹாபாக்கள், அறிஞர் பெருமக்களை

சில சிறார்கள் சிறுமைப்படுத்துவதும் மரியாதை குறைவாக பேசுவதும் சர்வ சாதாரணமாக அரங்கேறிக் கொண்டிருக்கிறது.

ஒருபுறம் இமாம்களின் கருத்துக்கள் என்று கூறிக்கொண்டு குர்ஆன் சுன்னாவிற்கு மாற்றமான பல பொய்யான தகவல்கள் மார்க்கமாக அரங்கேறிக் கொண்டிருக்கிறது இது எந்த அளவுக்கு வன்மையாக கண்டிக்கப்பட வேண்டுமோ அதே போன்று தான் குர்ஆன் சுன்னாவை தெளிவாக சொல்லும் இமாம்களின் கருத்துக்களை மதிக்காமல் அவர்களை சிறுமைப்படுத்துதல் இழிவுபடுத்துதல் என்பதும் வன்மையாக கண்டிக்கப்பட வேண்டிய விடயம்.

குர்ஆன் சுன்னாவை பின்பற்ற வேண்டும் என்பதில் எந்த மாற்றுக் கருத்தும் இல்லை அதுதான் நாம் பல வருடங்களாக அழைப்பு பணியில் நமது அடிப்படைக் கொள்கையாக, ஓர் அளவுகோலாக வைத்துக் கொண்டு பயணிக்கிறோம், ஆனால் குர்ஆன் சுன்னாவை நமக்கு அல்லாஹ்வின் தூதர் அவர்கள் தங்களது தோழர்களுக்கு எந்த விதத்தில் போதித்தார்களோ சத்திய சஹாபாக்கள் அவர்களின் மாணவர்களான தாபியீன்கள் போன்ற சங்கையான இமாம்களின் வழிமுறைகளில் ,ஓர் அளவுகோலாக நாம் விளங்கவில்லை என்று சொன்னால் வழிகேடு நிச்சயமே!!

ஏதோ ஒரு சில மார்க்க அறிவை வைத்துக் கொண்டு தன்னை மிகப்பெரும் இஸ்லாமிய ஆளுமையாக கருதும் ஒரு சில வழிகேடர்கள் சங்கையான நமது சான்றோர்களான ஸஹாபாக்களை ,இமாம்களை இழிவுபடுத்த தொடங்கினார்கள் இன்று அவர்கள் இழிவுபடுத்தப்பட்டு சமுதாயத்தில் மிகக் கேவலமாக பார்க்கப்படுகிறார்கள் , திருக்குரானை முறையாக ஓத முடியாமல் அவர்கள் இந்த சமுதாயத்திற்கு கற்றுக் கொடுத்ததெல்லாம் வீணான தர்க்கங்களும் இஸ்லாமிய சமூகத்தில் ஒற்றுமையை சீர்குலைப்பதும் தான் வேற எதுவும் இல்லை.

இன்று பல குழுக்களாக பிரிந்து தங்களுக்குள் அடித்துக் கொண்டு குழாய் அடி சண்டை போட்டுக்கொண்டு ஒற்றுமையை இழந்து நிற்பதை நாம் பார்த்துக் கொண்டிருக்கிறோம், அங்கீகாரம் பெற்ற நபி மொழிகளை சந்தேகிப்பது, மறுப்பது மார்க்கத்தில் ஊர்ஜிதமாக சொல்லப்பட்ட கருத்துக்களை தங்கள் சிற்றறிவின் ஊடாக மாற்றி அமைப்பது போன்ற இழிவான செயல்களால் வழிகேட்டை நோக்கி பயணித்துக் கொண்டிருக் கிறார்கள், அல்லாஹ் அவர்களுக்கு நேரான பாதையை காட்டி தருவானாக.

இமாம் இப்னு அஸாகிர் ரஹீமஹுல்லாஹ்

"அறிஞர்களின் மாமிசம் விஷம் தோய்கப்பட்டிருக்கிறது," என்று கூறி ஸஹாபாக்களை இழிவுபடுத்தும் பொழுது அவர்கள் மாமிசத்தை

புசிக்க நினைக்கும் கயவர்கள் விஷத்தால் மடிந்து விடுவார்கள் என்று எச்சரித்தது நினைவுக்கு வருகிறது.

இமாம் இப்னு கதீர் ரஹிமஹுல்லாஹ் அவர்கள் நபித்தோழர்களின் கண்ணியத்தை பேணும் விடயத்தில் கூறும் பொழுது...

நபித்தோழர்கள் அனைவரும் நியாயமானவர்கள், நீதிமான்கள், மார்க்கம் அவர்களை புகழ்ந்து கூறியிருக்கும் பல திருமறை வசனங்களும் நபி மொழிகளும் அவர்களுக்கு மிகப்பெரிய நன்மையையும், மறுமையின் வெகுமதிகளையும் அல்லாஹ்விடத்தில் கொண்டு இருக்கிறது என்பதை நமக்கு உணர்த்துகிறது. (அல்பாயிது அல்ஹஸீஸ் -172)

ஸெய்யதுனா இப்னு மஸ்வூது ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் அறிவிக்கும் நபி மொழியை இமாம் அஹ்மத் அவர்கள் தங்கள் முஸ்னத்தில் கூறுகிறார்கள்.

அல்லாஹ் நபி அவர்களின் உள்ளத்தை அடியார்களில் சிறந்ததாக பார்த்தபின் நபித் தோழர்களின் இதயங்களை தனது அடியார்களின் இதயங்களில் சிறந்ததாகக் கண்டான், எனவே அல்லாஹ் அவர்களை தனது நபியின் மந்திரிகளாக ஆக்கினான், மார்க்கத்திற்காக அவர்கள் போராடினார்கள்.

நூல் - முஸ்னது அஹ்மத், எண்-3600, தரம் - ஹஸன் (அங்கீகாரம் பெற்றது)

வழிகெட்ட ஷீஆக்களைப் போன்று தங்களது இமாம்கள் அனைவரும் நபிமார்கள் போன்று பாவத்திலிருந்து பாதுகாக்கப்பட்டவர்கள் என்று கூறுவதும், சஹாபாக்களை தரக்குறைவாக விமர்சிப்பதும் தெளிவான வழிகேடு மட்டுமின்றி ஷரீஆ ஆட்சி இருக்கும் பட்சத்தில் சஹாபாக்களை விமர்சிப்பவர்களுக்கு கடும் தண்டனைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்று இமாம்கள் எழுதி வைத்திருக்கிறார்கள்.

சஹாபாக்களை முறைகேடாக விமர்சிப்பவர்கள் ஜிந்தீகுகள் (நயவஞ்சகர்களானன நாத்தீகர்கள்) என்றும் கூறியிருக்கிறார்கள்.

யார் சஹாபாக்களை குறை கூறுகிறார்களோ, அவர் இஸ்லாத்தை குறைபடுத்துகிறார் இன்று இமாம் அஹ்மத் கூறுவதாக இப்னு கஸீர் ரஹிமஹுமுல்லாஹ் கூறுகிறார்கள். (நூல் - அல்பிதாயா வன் நிஹாயா-8/139)

உமர் பின் அப்துல் அஜீஸ் ரஹிமஹுல்லாஹ் அவர்களிடம் உஸ்மான், அலி ரழியல்லாஹு அன்ஹும் அவர்களைப் பற்றியும் சஹாபாக்கள் கலந்து கொண்ட ஸிப்பீன்,ஜமல் யுத்தங்களைப் பற்றியும் கேட்கப்படும்

பொழுது அல்லாஹ் அவர்களின் இரத்தத்தில் எனது கையை நினைப்பதை தடுத்து விட்டான்.

எனவே அவர்களைப் பற்றி பேசுவதற்கு எனது நாவு வெறுக்கிறது என்று கூறினார்கள். (நூல் - அத்தபகாதுல் குப்ரா- 5/394.)

ஒருமுறை இந்தியாவைச் சேர்ந்த அஷ்ஷைக் ஜியாவுர் ரஹ்மான் அல்ஆஷமி ரஹிமஹுல்லாஹ் (இவரின் ஹதீஸ் துறை சேவையின் காரணத்தினால் இவருக்கு சவுதி அரசாங்கம் சவுதி குடியுரிமை வழங்கியது என்பது குறிப்பிடத்தக்கது

"الجامع الكامل في الحديث الصحيح الشامل"

"அல்ஜாமிஃ அல்காமில் ஃபில் ஹதீஸ் அஷ்ஷஹீஹ் அஷ்ஷாமில் "

என்ற பிரபலமான புத்தகத்தை எழுதியவர் பல புத்தகங்களுக்கு விளக்க உரைகளும் ஆய்வையும் செய்த ஒரு அறிஞர்.

அவர் மக்காவில் உள்ள சர்வதேச இஸ்லாமிய லீக் அமைப்பின் முக்கிய பொறுப்பில் இருந்த பொழுது அவருடைய நண்பர் எகிப்தைச் சேர்ந்த அஷ்ஷைக் அப்துல் ஹக்கீம் ஹம்மாதா ரஹிமஹுல்லாஹ் அவர்கள் ஒரு ஆச்சரியமான சம்பவத்தை கூறுகிறார்கள்.

எகிப்து நாட்டின் பிரபலமான அறிஞரான மஹ்மூத் அபூ ரய்யா என்பவர் நபி தோழரான ஸய்யதுனா அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்களை இழிவுபடுத்தி அரபு மொழியில் ஒரு புத்தகம் எழுதி இருந்தார்,

"أضواء على السنة المحمدية"

"அழ்வா அலஸ் ஸுன்னா அல்முஹம்மதிய்யா"

أبو هريرة شيخ المضيرة

"அபூஹுரைரா ஷைஹுல் முலீரா"

என்ற புத்தகங்களில் அபூ ஹுரைரா ரழியல்லாஹு அன்ஹு அவர்கள் நபி அவர்களுடன் ஒரு வருடம் 9 மாதங்கள் மட்டுமே வாழ்ந்திருக்கிறார்.

ஆனால் மார்க்கத்தில் அதிகப்படியான நபிமொழிகளை இவர் அறிவித்திருக்கிறார் இது சாத்தியமானதா என்ற சந்தேகத்தை எழுப்பி சில நபித்தோழர்களை பரிகாசம் செய்திருக்கிறார்.

எமன் நாட்டைச் சேர்ந்த முஅல்லிமி ரஹிமஹுல்லாஹ் அவர்கள் அந்த காலத்திலே இவருக்கு எதிராக அல்அன்வாருல் காஷிபஃஆ

الأنوار الكاشفة لما في كتاب أضواء على السنة من الزلل والتضليل

என்ற புத்தகத்தை மறுப்பாக எழுதி இருப்பது இங்கு குறிப்பிடத்தக்க ஒன்று.

ஆக மஹ்மூத் அபூ ரய்யா என்பவரை அப்துல் ஹக்கீம் ஹம்மாதா சந்திப்பதற்காக எகிப்து நாட்டிற்கு செல்கிறார் அவரின் குடும்பத்தினர் அவரை சந்திக்க விடாமல் தடுக்க முயல்கின்றனர் அவரோ சந்தித்து தான் செல்வேன் என்று பிடிவாதமாக சந்தித்து விடுகிறார்.

மூடப்பட்ட அறைக்குள் மஹ்மூத் அபூ ரய்யா

(மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில்) இருந்தார் அவரின் முகம் நிலக்கரி போன்று கருத்துப் போய் இருந்தது கண்கள் வெளியே தொங்கிக் கொண்டிருந்தன பார்ப்பதற்கே பரிதாபமான ஒரு நிலையில் இருந்தார் சுவற்றைப் பார்த்துக் கொண்டு அபூஹுரைரா வந்து விட்டார் என்று புலம்பி கொண்டே இருந்தார்.

இந்த காட்சியை காண முடியாமல் அங்கிருந்து சென்று விட்டேன்.

நபித்தோழர்களை இழிவாக பேசும் நபர்களுக்கு உலகத்திலே அல்லாஹ் கொடுக்கும் தண்டனை தான் என்பதை நான் ஆழமாக உணர்ந்தேன் என்கிறார்.

இந்த சம்பவத்தை எனக்கு அறிவித்தார் நான் இதை ஆதாரத்துடன் குறிப்பிடுகிறேன் என்று சங்கிலி தொடரில் இந்த சம்பவத்தை அஷ்ஷைக் ஜியாவுர் ரஹ்மான் அல்ஆஷமி ரஹிமஹுல்லாஹ் தனது கையொப்பத்துடன் எழுதி இருக்கும் ஒரு பதிவு எனக்கு கிடைத்தது அதையும் இந்த பதிவின் கீழ் இணைத்திருக்கிறேன்.

அன்பானவர்களே நபித்தோழர்களை பரிகாசம் செய்வதும் மார்க்க அறிஞர்களை இழிவு படுத்துவதும் அபாயகரமான ஒன்று என்பதை புரிந்து கொள்ளுங்கள்!

பித்ஆ - நூதனம்

அஷ்ஷேக் அப்துர் ரசாக் பின் பத்ர் ஹஃபிழஹுல்லாஹ் (மதீனாவில் மஸ்ஜிதுன் நபவியின் ஆசிரியர்)

தனது வகுப்பில் இவ்வாறு கூறுகிறார்கள்....

மார்க்கத்தில் நூதனமாக புகுத்தப்பட்ட அனாச்சாரங்களை இலகுவாக இனம் கண்டு கொள்ள வேண்டும் என்றால் பின்வரும் மூன்று கேள்விகளை கேளுங்கள்....

1- நபித்தோழர்கள் இந்த பித்ஆவை பற்றி அறிந்திருக்கிறார்களா?

இல்லை என்ற பதில் வந்தால் நபித்தோழர்களின் மார்க்க அறிவில் குறை கூறுபவர்களாக (طعن) அவர்கள் அறியாத ஒன்றை நீங்கள் அறிந்திருக்கிறீர்களா என்று கூறி பித்ஆவை இனம் கண்டு கொள்ளலாம்.

2- நபித்தோழர்கள் தாங்கள் புரிந்து வைத்திருக்கும் மார்க்க அறிவை தெளிவாக கூறுவதற்கு சக்தி பெற்று இருக்கிறார்களா?

இல்லை என்ற பதில் வந்தால் அவர்கள் தெளிவாக சொல்ல முடியாத ஒன்றை நீங்கள் சொல்ல முடியுமா என்று கூறி பித்ஆவை இனம் கண்டு கொள்ளலாம்.

3- நபித்தோழர்கள் இந்த அனாச்சாரங்களை தெரிந்து இருக்கிறார்கள் அதை தெளிவாக கூறுவதற்கு சக்தி பெற்று இருக்கிறார்கள் என்று சொன்னால் எங்கு அதை தெளிவுபடுத்தி கூறியிருக்கிறார்கள் அதற்கு ஆதாரம் கேளுங்கள் .

ஆக இஸ்லாமிய கொள்கை கோட்பாடுகளில் நபித்தோழர்கள் அன்று எதை மார்க்கமாக அறியவில்லையோ இன்றும் அது மார்க்கமாக இருக்கப் போவதில்லை .

அகீதா கொள்கை கோட்பாடுகளில் நாம் கொண்டிருக்கும் வழிகேடான

பிழையான கொள்கைகள் என்பது நபித்தோழர்களின் கொள்கை கோட்பாடுகளுடன் பகுப்பாய்வு செய்யும் பொழுது தெளிவாக விளங்கும்.

காரணம் திருக்குர்ஆனையும் நபி மொழிகளையும் நடைமுறைப் படுத்தியவர்கள் அவர்கள், நம்மை விட ஆழமாக தெளிவாக விளங்கியவர்கள் அவர்கள் எனவே குர்ஆன் சுன்னாவை பின்பற்றுவோம் என்று ஒரு அளவுகோலை வைத்து முடிவுக்கு வருவது என்பது எந்த அளவிற்கு சரியான விடயமோ அதேபோன்று குர்ஆன் சுன்னாவை பின்பற்றும் விடயத்தில் நபித்தோழர்களின் விளக்கத்தை அளவுகோலாக வைப்பதும் இன்றியமையாத ஒன்று, அவ்வாறு இல்லை என்றால் வழிகேடு நிச்சயம்.

இமாம் சுஃபியான் சௌரி ரஹிமஹுல்லாஹ் அவர்களிடம் பித்அத் பற்றிய அபாயத்தை பற்றி கேட்கப்பட்ட பொழுது இப்லீசுக்கு பித்அத் என்பது பாவம் செய்வதை விட பிடித்தமான ஒன்று, காரணம் பாவம் செய்துவிட்டு பாவமன்னிப்பு கேட்பதற்கு வாய்ப்புகள் இருக்கிறது. ஆனால் பித்அத் செய்பவர் தவ்பா செய்யும் வாய்ப்பை பெறுவதில்லை. நூல் - மஜ்மவுல் ஃபதாவா- 11/472

வணக்க வழிபாடுகளில் பேணப்பட வேண்டிய மூன்று விதிகள்

இறைத்தூதர்(ஸல்) அவர்களின் காலத்தில் மார்க்கத்திலோ ஷரீஆவிலோ இல்லாத அனைத்தும் அவருடைய காலத்திற்குப் பிறகு மார்க்கமாகவோ ஷரீஆவாகவோ இருக்க முடியாது.

முஹம்மது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தோழர்களுக்குத் தெரியாத ஒவ்வொரு வழிபாட்டு முறையும், எந்த விதமான தோற்றம் அல்லது முக்கியத்துவம் வாய்ந்த வழிபாட்டு முறையின் ஒரு பகுதியாக இருக்க முடியாது.

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் காலத்தில் செய்யக் காரணமான ஒவ்வொரு வணக்கமும் நபியவர்கள் செய்யாமல் இருந்தால், அதை விடுவது தான் மார்க்கமாகும்.

எனவே மவ்லூதும் மீலாதும் மார்க்கமாக ஆக முடியாது.

ஆதாரங்கள்:

اَلْيَوْمَ اَكْمَلْتُ لَـكُمْ دِيْنَكُمْ وَاَ تْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِىْ وَرَضِيْتُ لَـكُمُ الْاِسْلَامَ دِيْنًا

இன்றைய தினம் நான் உங்களுக்கு உங்கள் மார்க்கத்தை முழுமையாக்கி வைத்து என் அருளையும் உங்கள் மீது முழுமையாக்கி வைத்துவிட்டேன். உங்களுக்காக இந்த இஸ்லாமை மார்க்கமாக திருப்தியடைந்தேன் (அங்கீகரித்துக் கொண்டேன்). (அல்குர்ஆன் : 5:3)

நமது மார்க்கத்தில் இல்லாத ஒன்றை யாரேனும் உருவாக்கினால் அது நிராகரிக்கப்படும்' என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி), நூல்கள்: புகாரி 2697, முஸ்லிம் 3242.

كل ما ليس من الدين و لا من الشرع في عهد الرسول صلى الله عليه وسلم فلا يمكن ان يكون من الدين او من الشرع بعد عهده صلى الله عليه وسلم

كل تعبد لا يعرفه اصحاب محمد صلى الله عليه وسلم ليس من العبادة في صدر و لا ورد

كل فعل تعبدي توفر سبب فعله على عهد النبي صلى الله عليه وسلم و لم يفعله فالمشروع تركه.

-அஷ்ஷைக் வலீத் அஸ்ஸயீதான் ஹஃபிழஹுல்லாஹ்.

நபியவர்கள் மரணித்த தினத்தை கொச்சைப்படுத்தும் பரேல்விகள்

அனஸ் பின் மாலிக் ரழியல்லாஹுு அன்ஹுு கூறுகிறார்கள்:

இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மரண நாளை விட மோசமான, இருண்ட ஒரு நாளை நான் பார்த்ததில்லை.

(நபி அவர்கள் இறந்த அந்த நாள் நபித்தோழர்களின் உச்சகட்ட துக்கமாக கவலையின் எல்லையாக இருந்தது ஒரு காலம் ஆனால் அதே நாளில் இன்று நபி நேசம் என்று சொல்லிக்கொண்டே இந்த பித்அத் வாதிகளின் சந்தோசமும் மகிழ்ச்சியும் நபி அவர்களின் பிறந்த தினத்தை கொண்டாடுகிறோம் என்று நம்பியவர்கள் மரணித்த தினத்தை கொச்சைப்படுத்துகிறார்கள்.

கேள்வி: நபி ஸல்லல்லாஹுு அலைஹி வஸல்லம் அவர்கள் எப்போது வபாத் ஆனார்கள்?

பதில்: "ஹிஜ்ரா பதினொன்றாம் ஆண்டு ரபீ அல் அவ்வல் பன்னிரண்டாவது திங்கட்கிழமை மதீனாவில் வபாஃத் ஆனார்கள்."

நூல் - "தஹ்ரீஜ் அல்-மிஷ்காத் அல்-மஸாபீஹ்"-(5907) தரம் - ஸஹீஹ் (ஆதாரப்பூர்வமானது)

சவூதி அரேபியாவின் லஜ்னா தாயிமா கமிட்டியின் பஃத்வா -(302/4)

நான் அஹ்லுஸ் ஸுுன்னத் வல் ஜமாஅத் கொள்கையை தான் பின்பற்றுகிறேன் என்று எனக்கு எப்படித் தெரியும்?!

நீங்கள் எவ்வாறு நபியவர்கள் எச்சரித்த வழிகேடான (72) பிரிவுகளில் இருந்து தவிர்ந்து, எஞ்சியிருக்கும் பிரிவினரில் இருக்கிறீர்கள்?!

இமாம் அப்துல்லாஹ் பின் அல்-முபாரக் அவர்கள் கூறினார்கள்:

"எழுபத்தி இரண்டு பிரிவுகளின் தோற்றம்: நான்கு வழி தவறிய கொள்கையிலிருந்திருக்கிறது, இந்த நான்கிலிருந்துதான் எழுபத்திரண்டு பிரிவுகள் தோன்றின.

1 - கதரியா

2 - முர்ஜிஆ

3 - ஷிஆக்கள்

4 - கவாரிஜிகள்

எவர் அபூபக்கர், உமர், உஸ்மான், அலி ரழியல்லாஹு அன்ஹும் ஆகியோருக்கு இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் மற்ற தோழர்களை விட முன்னுரிமை அளித்து, மற்ற நபித்தோழர்கள் பற்றி நல்லதைத் தவிர வேறு எதையும் பேசாமல் இருந்து அவர்களுக்காகப் துஆ செய்தால் அவர் முற்றிலும் ஷீயிஸத்தை விட்டு வெளியேறி விடுகிறாரோ

யார் ஈமான் (இறைநம்பிக்கை என்பது) சொல்லும்,செயலுமாகும், அது (அல்லாஹ்விற்கு கட்டுப்படுவதனால்)அதிகரிக்கிறது மற்றும் (அவனுக்கு மாறுபடுவதனால்)குறைகிறது; என்று நம்புகிறாரோ அவர் வழிகெட்ட முர்ஜிஆ கொள்கையில் இருந்து முற்றிலும் வெளியேறி விடுகிறாரோ

யார் ஒவ்வொரு நீதமான மற்றும் நீதமற்ற அமீருக்குப் பின்னால் தொழுகிறாரோ, மேலும் ஜிஹாத் ஒவ்வொரு கலீஃபாவுடன் இணைந்து (இஸ்லாமிய ஷரீஆ ஆட்சியின் அமீருடன்) எதிரிகளை எதிர்கொள்வாரோ, மேலும் சுல்தானுக்கு(ஷரீஆ அரசுக்கு) எதிராக வாளால் கிளர்ச்சி செய்யாமல் இருந்து, மார்க்கத்துக்கு முரணாக நடக்கும் பொழுது அவர்கள் நீதியுள்ளவர்களாக இருக்க துஆ & உபதேசம் செய்தால்; அவர் கவாரிஜ்களின் கொள்களிலிருந்து முற்றிலும் வெளியேறி விடுகிறாரோ

விதிகளும் , நன்மைகளும் தீமைகள் அனைத்தும் அல்லாஹ்விடமிருந்து வந்தவை என்றும் அல்லாஹ் தான் விரும்பியவர்களை நேரான வழியில் நடத்துகிறான், மேலும் அவன் விரும்பியவர்களை வழி கெடச் செய்கிறான்; என்று எவர் நம்பி கூறுகிறாரோ வழிகெட்ட கதாரிய்யா கொள்கையிலிருந்து முற்றிலும் வெளியேறி விடுகிறாரோ .

(அவர் அஹ்லுஸ் ஸுன்னாவைச் சார்ந்தவராவார்) [இமாம் அல்-பர்பஹாரியின் ஷரஹுஸ் ஸுன்னா, ரஹிமஹுல்லாஹ்].

ஸஹ்ல் பின் அப்துல்லாஹ்விடம் கூறப்பட்டது: "ஒரு மனிதன்

அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையில் இருப்பதாக எவ்வாறு அறிவார்?!"

"அஹ்லுஸ் ஸுன்னாவின் பத்து குணங்களை அவர் கொண்டிருந்தால் அவர் சரியான கொள்கைகளில் இருக்கிறார் என்று அர்த்தம் என்று கூறினார்:

- அவர் தனி நபராக இருந்தாலும் (அஹ்லுஸ் ஸுன்னாவை) ஜமாத்தை விட்டு விடமாட்டார்

- அவர் நபிகள் நாயகத்தின் தோழர்களை சபிக்க மாட்டார்.

- அவர் இந்த உம்மத்திற்கு எதிராக வாளால் கிளர்ச்சி செய்ய மாட்டார்.

- அவர் விதியை பொய் பிக்கமாட்டார்.

- அவர் ஈமானை (இறைநம்பிக்கையை) சந்தேகிக்கமாட்டார்.

- அவர் (இறுதியாக முடிவு செய்யப்பட்ட) மார்க்க விஷயத்தில் சர்ச்சை செய்யமாட்டார்.

- கிப்லாவின் மக்களிடமிருந்து (இறை நம்பிக்கையாளர்களிடமிருந்து) ஏற்பட்ட பாவத்தால் அந்த நபர் மரணித்துவிட்டால் அவருக்காக நடத்தப்படும் ஜனாஸா தொழுகையை விடமாட்டார்.

- ஒலு செய்யும் பொழுது காலுறைகளில் மஸஹ் செய்வதை மறுக்க மாட்டார் .

- ஒவ்வொரு நீதமான அல்லது அநீதம் இழைக்கக் கூடிய ஆட்சியாளருக்கு பின்னால் ஜமாஅத் தொழுகையை விட்டு விட மாட்டார் .

[*ஷரஹ் உஸூலு அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் -இமாம் அல்-லாலிகாயி, ரஹிமஹுல்லாஹ் (183)*].

ஐயமும் தெளிவும்

ஐயம்: - *பித்அத் (நூதனம், அனாச்சாரம்) என்றால் என்ன? நல்ல பித்அத் வழிகேடான பித்அத் என்று இருக்கிறதா? உதாரணம் தரவும்?*

தெளிவு:

இபாததுக்களில், (வணக்க வழிபாடுகளில்) இறைத்தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கற்றுத்தந்த ஸுன்னதுகளை (வழிமுறைகளை) விட்டுவிட்டு ஊர்வழக்கு, குடும்ப வழக்கு, மஹல்லா வழக்கு என்று மன இச்சைகளை மார்க்கமாக ஆக்க முற்படுவது.

பித்அத்துக்களை "முபாஹ்", என்று முறைகேடாக இவர்கள் விளக்கம் தருகிறார்கள், வணக்க வழிபாடுகளில் கூடுதல் குறைவு செய்ய வேண்டும் என்றால் அதற்கு ஆதாரங்கள் வேண்டும்.

உலக விடயங்களில் இஸ்லாம் ஒரு விஷயத்தை தடை செய்யாத வரை அது "முபாஹ்", கூடும்.

இந்த உண்மையை மறைக்க பார்க்கிறார்கள் இந்த அசத்தியவாதிகள். தாங்கள் புரியும் அனாச்சாரங்களை மார்க்கம் சொல்லாத விதத்தில் விளக்கம் தருகிறார்கள்.

அது தொழுகை, நோன்பு, ஸதகா, என்ற எந்த வகை வணக்கமாக இருந்தாலும் இறைத்தூதர் அவர்களின் வழிகாட்டுதலில் வணங்கவில்லை என்றால் அது பித்அத் (நூதனம், அனாச்சாரம்)

அதை ஊர் மக்கள் அனைவரும் சேர்ந்து மார்க்க அறிஞர்களை வைத்து அரங்கேற்றம் செய்தாலும் ஒரு பித்அத் ஸுன்னதாக ஆகாது, அது வழிகேடே அன்றி வேறில்லை.

من أحدث في أمرنا هذا ما ليس منه، فهو ردٌّ))؛ رواه البخاري ومسلمُ

யார் இந்த மார்க்கத்தில் இல்லாத ஒன்றை புதிதாக உருவாக்குகின்றாரோ

அது அல்லாஹ்விடத்தில் எற்றுக்கொள்ளப்படமாட்டாது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)

من عمل عملًا ليس عليه أمرنا، فهو ردٌّ

யார் இந்த மார்க்கத்தில் இல்லாத ஒன்றை புதிதாக செய்கின்றாரோ அது அல்லாஹ்விடத்தில் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்)

இவ்விரு நபிமொழிகளிலிருந்தும் பித்அத்தான செயல்கள் அனைத்தும் அல்லாஹ்விடத்தில் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பது நமக்கு தெளிவாக விளங்குகின்றது.

எல்லா பித்அத்தும் வழிகேடாகும்

இஸ்லாத்தில் புதிதாக (ஒன்றை) உருவாக்குவதிலிருந்து உங்களை நான் எச்சரிக்கை செய்கின்றேன். ஏனென்றால் புதிதாக ஏற்படுத்தப்பட்ட அனைத்தும் பித்அத்தாகும், அனைத்து பித்அத்தும் வழிகேடாகும், என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (திர்மிதி)

இன்னும் ஒரு அறிவிப்பில் அனைத்து வழிகேடும் நரகத்திற்கு கொண்டு செல்லக்கூடியவை எனவும் வந்திருக்கின்றது.

எல்லா பித்அத்துகளும் வழிகேடு என்று நபி(ஸல்) அவர்கள் தெளிவாகச் சொல்லியிருந்தும், இன்று முஸ்லிம்களில் சிலர், எல்லா பித்அத்தும் வழிகேடல்ல, கெட்ட பித்அத்துக்கள்தான் வழிகேடாகும், நல்ல பித்அத்துக்கள் வழிகேடல்ல என்று பித்அத்துக்களை இரண்டாக பிரிப்பதுதான் ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக இருக்கின்றது. இது முற்றிலும் தவறாகும்.

நபி(ஸல்) அவர்கள் பித்அத்துக்களை விவரிக்கும் போது குல்லு பித்அத்தின் ளலாலத்துன் என்றே கூறினார்கள். குல்லு என்றால் "எல்லாம்" என்பது பொருள். குல்லு பித்அத்தின் ளலாலத்துன் என்றால் எல்லா பித்அத்தும் வழிகேடு என்றுதான் பொருள். அரபு இலக்கணம் தெரிந்த யாரும் இதை மறுக்கமாட்டார்கள். இதற்குப் பிறகும் சில பித்அத் வழிகேடு, சில பித்அத் நல்லது என்று கூறுவது நபியவர்களின் ஹதீஸுக்கு தவறான விளக்கம் கொடுத்ததாக ஆகாதா? இனிமேலாவது சிந்தித்துப் பார்க்கட்டும்!

பித்அத் வாதிகள் எடுத்து வைக்கும் ஆதாரங்கள்?

1. யார் இஸ்லாத்தில் நல்ல ஒரு காரியத்தை ஆரம்பிக்கின்றாரோ

அவருக்கு அதற்குரிய நன்மையும், (அவருக்குப் பின்) செய்பவர்களுக்குக் கிடைக்கும் நன்மையில் ஒரு பங்கும் இவருக்கு உண்டு. ஆனால் அவர்களின் நன்மையில் ஏதும் குறைக்கப்படமாட்டாது என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (முஸ்லிம்).

அவர்கள் தரும் விளக்கம்: இந்த ஹதீஸில் நபி(ஸல்) அவர்கள், புதிதாக நல்ல காரியத்தை இஸ்லாத்தில் ஆரம்பிக்கலாம் என அனுமதி அளித்திருக்கின்றார்கள். ஆகவே நல்ல பித்அத்தைச் செய்வது ஆகுமானதாகும்.

நாம் கொடுக்கும் விடை: இது நீளமான ஹதீஸின் ஒரு பகுதியாகும். அந்த ஹதீஸை முழுமையாகப் படித்தால் தெளிவு கிடைத்து விடும். அதாவது நபி(ஸல்) அவர்களிடத்தில் மிக வறுமை நிலையில் சில நபித் தோழர்கள் வந்தார்கள். அதைப்பார்த்த நபி(ஸல்) அவர்கள் தன் தோழர்களைப் பார்த்து, அவர்களுக்கு தர்மம் செய்யும்படி வற்புறுத்தினார்கள். இதைக் கேட்ட ஒரு நபித் தோழர் தன் வீடு சென்று தன் கை நிரம்பிய அளவு வெள்ளிக்காசுகளைக் கொண்டு வந்து அவர்களுக்குக் கொடுத்தார். இதைப்பார்த்த மற்ற நபித் தோழர்களும் தங்கள் வீடுகளுக்குச் சென்று உணவு மற்றும் ஆடைகளைக் கொண்டு இரு குவியல்களாகக் குவித்தார்கள். இப்போதுதான் நபி(ஸல்) அவர்கள் மேற் கூறிய வார்த்தையைக் கூறினார்கள். அதாவது ஒரு நல்ல செயலை முதலில் யார் செய்கின்றாரோ அவரைப் பார்த்து செய்பவர்களின் நன்மையில் ஒரு பங்கு இவருக்கும் கிடைக்கும். இதுதான் அந்த வார்த்தையின் விளக்கமாகும். நல்ல பித்அத் கெட்ட பித்அத் என்பதற்கு இங்கே எந்த ஆதாரமும் இல்லை. நபி(ஸல்) அவர்கள் ஏவியதைச் செய்வது எப்படி பித்அத்தாகும்?

2. உமர்(ரலி) அவர்கள் "இது நல்ல பித்அத்" எனக் கூறினார்கள். (முஅத்தா)

அவர்கள் தரும் விளக்கம்: நல்ல பித்அத் இருப்பதினால்தான் இப்படி உமர்(ரலி) அவர்கள் கூறியிருக்கின்றார்கள்.

நாம் கொடுக்கும் விடை: இது உமர்(ரலி) அவர்களின் ஆட்சி காலத்தில் நடந்த ஒரு சம்பவமாகும். அதாவது நபி(ஸல்) அவர்கள் மக்களுக்கு தராவீஹ் தொழுகையை மூன்று நாட்கள் ஜமாஅத்தாகத் தொழவைத்தார்கள். அது பர்ளாக்கப்பட்டு விடும் என்பதால் அவர்களின் மரணம் வரைக்கும் பின்பு ஜமாஅத்தாக மக்களுக்குத் தொழவைக்கவில்லை. நபியவர்களின் மரணத்திற்குப் பிறகு அபூபக்ர்(ரலி) அவர்களின் ஆட்சி காலத்திலும் அப்படியே விடுபட்டிருந்தது. உமர்(ரலி) அவர்களின் ஆட்சி வந்த போது

மக்கள் தராவீஹ் தொழுகையை தனிமையில் தொழுவதைப் பார்த்து, இவர்களை ஒரு ஜமாஅத்தாகத் தொழ வைத்தால் நன்றாக இருக்குமே என்று நினைத்து, உபை இப்னு கஃபு, தமீமுத் தாரி(ரலி) என்னும் இரு நபித் தோழர்களை இமாமாக ஆக்கி, அவர்களுக்குப் பின் மக்கள் ஒரு ஜமாஅத்தாக ஒருங்கிணைந்து நின்று தொழுததைப் பார்த்து விட்டே இது நல்ல பித்அத்து என்றார்கள்.

இதை வைத்து நல்ல "பித்அத்", கெட்ட "பித்அத்" இருக்கின்றது என்று கூற முடியாது. காரணம் நபி(ஸல்) அவர்கள் மூன்று நாட்கள் மக்களுக்கு ஜமாஅத்தாக தொழவைத்திருக்கிறார்கள். நபியவர்கள் செய்ததைச் நாம் பின்பற்றுவது எப்படி பித்அத்தாகும்.? அப்படியானால் ஏன் உமர்(ரலி) அவர்கள் இது நல்ல பித்அத் என்று கூறினார்களென்றால், பித்அத் என்ற அரபு வார்த்தைக்குரிய நேரடி கருத்தை வைத்தே. பித்அத் என்ற அரபு வார்த்தைக்கு புதியது என்ற அர்த்தமாகும். நீண்ட காலமாக விடுபட்டிருந்த சுன்னத்தை புதுப்பித்திருப்பது நல்லது என்ற அர்த்தத்தில்தான் அப்படி கூறினார்களே தவிர, நபியவர்கள் தடுத்த பித்அத்தைப்பற்றி அல்ல. அதாவது நீண்ட காலமாக மக்கள் தனித்தனியாக தொழுததை விட ஒரு ஜமாஅத்தாக இன்று மக்கள் தொழுவது நன்றாக இருக்கின்றதே என்ற அர்த்தத்தில்தான்.

3. மாடிக் கட்டிடங்கள் கட்டுவது, விமானத்தில் மற்றும் வாகனங்களில் பிரயாணம் செய்வது இன்னும் இவைகள் போன்றவைகள்.

அவர்கள் தரும் விளக்கம்: இவைகள் அனைத்தும் நபி(ஸல்) அவர்கள் காலத்தில் இருக்கவில்லை. மாறாக புதிதாக உருவானவைகள்தான். இவைகளை உபயோகிப்பதை யாரும் தடுக்கவில்லை. ஆகவே நல்ல பித்அத்தை செய்வது ஆகுமாகும்.

நாம் கொடுக்கும் விடை: இஸ்லாத்தில் ஒன்றை புதிதாக உருவாக்குவதற்குத்தான் பித்அத் என்று சொல்லப்படும். மாடிக்கட்டிடத்தை, விமானத்தை, வாகனங்களை ஆதாரமாகக் காட்டுவது, பொருத்தமற்ற ஒன்றாகும். இவைகள் மார்க்கத்தோடு சம்மந்தப்பட்டவைகளும் அல்ல.

பித்அத்தினால் ஏற்படும் விளைவுகள்

1. முஸ்லிம் சமுதாயத்திற்குள் பல தவறுகள் ஊடுருவதற்கு மிகப் பெரும் காரணம்.

2. பித்அத் செய்பவர் பித்அத்தை விடாதவரை அவருடைய தவ்பாவை அல்லாஹ் ஏற்றுக் கொள்ளமாட்டான் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (தர்கீப், வதர்கீப்)

3. மறுமையில் கவ்தர் தடாகத்தின் தண்ணீரை அருந்த விடாமல் அவர் தடுக்கப்படுவார். (புகாரி)

நபியவர்களை நேசிப்பது எப்படி?

நபி(ஸல்) அவர்களை நேசிப்பது அனைத்து முஃமின்களின் மீது கடமையாகும். தன் உயிரை விடவும் நபி(ஸல்) அவர்களை நேசிக்காதவர் உண்மை முஃமினாக முடியாது. நபி(ஸல்) அவர்களை நேசிப்பதென்பது அவர்கள் கொண்டு வந்த மார்க்கத்தை முழுமையாக பின்பற்றுவதாகும்.

யார் என்னை நேசிக்கின்றாரோ அவர் என் வழிமுறைகளை பின்பற்றட்டும் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (பைஹகி)

எதையாவது ஒன்றை நான் உங்களுக்கு ஏவினால், அதில் முடியுமானதைச் செய்யுங்கள். ஏதாவது ஒன்றை நான் உங்களை விட்டும் தடுத்தால் அதை முற்றாகத் தவிர்ந்து கொள்ளுங்கள் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (நஸாயி)

நபி(ஸல்) அவர்களின் வழிமுறையை முழுமையாக பின்பற்றி, அவர்கள் தடுத்த அனைத்தையும் தடுத்து நடக்க நம் அனைவருக்கும் அல்லாஹ் வாய்ப்பளிப்பானாக !!

பித்அதின் சில உதாரணங்கள்

கதம் ஃபாத்திஹா

மௌலூது ஓதுதல்

ஸலாத்துன் நாரியா ஓதுதல்

மிஃராஜ் & பராத் இரவுகளில் விஷேடமாக விழித்து வணங்குதல்,

அன்று பகல் நோன்பு நோற்பது

நபியவர்கள் காட்டித் தராத விதத்தில் சில எண்ணிக்கைகளில் சப்தமாக இசையுடனும் ,ஆடலுடனும் திக்ருச் செய்தல் ,

ரஜப் மாதத்தில் உம்ரா செய்வது நபிவழி என்று புரிதல்

ஐவேளை தொழுகைக்குப்பின்

நபியவர்கள் கற்றுக் கொடுத்த துஆக்கள்,தஸ்பீஹாதுக்கள், திருக்குர்ஆன் வசனங்கள் இந்த அனைத்து ஸுன்னதுகளையும் தனி தனியாக செய்வதை விட்டு விட்டு

இமாமுடன் ஆமீன் ஆமீன் என்று சப்தமாக கூறி கூட்டு துஆ செய்தல் அல்லது ஜமாத் தொழுகை முடிந்தவுடன் மேற்கூறப்பட்ட விதத்தில் நபிவழியை பின்பற்றாமல்

எழுந்து சென்று விடுவது தான் ஸுன்னத் என்று தவறாக விளங்குவது

இன்னும் பல ....

இவைகள் அனைத்தையும் விட்டுவிட்டு மன இச்சையை மார்க்கமாக ஆக்க முயலும் சிலர்

அல்லாஹ்வை அஞ்சிக் கொள்ளட்டும்!

இதைத்தான் காலம் காலமாக சத்திய பாதையில் பயணித்த சஹாபாக்களும், சங்கையான நான்கு மத்ஹபுகளின் இமாம்களும் புரிந்து வந்தனர்.

الله اعلم من الصواب

اَفَرَءَيْتَ مَنِ اتَّخَذَ اِلٰهَه هَوٰىهُ وَاَضَلَّهُ اللّٰهُ عَلٰى عِلْمٍ وَّخَتَمَ عَلٰى سَمْعِه وَقَلْبِه وَجَعَلَ عَلٰى بَصَرِه
غِشٰوَةً فَمَنْ يَّهْدِيْهِ مِنْ بَعْدِ اللّٰهِ اَفَلَا تَذَكَّرُوْنَ

(நபியே!) தன்னுடைய உடல் ஆசையை இச்சையை(த் தான் வணங்கும்) தெய்வமாக எடுத்துக்கொண்ட ஒருவனை நீங்கள் கவனித்தீர்களா? அவனுக்கு(ப் போதுமான) கல்வி இருந்தும் (அவனது பாவத்தின் காரணமாக) அல்லாஹ் அவனைத் தவறான வழியில் விட்டு, அவனுடைய செவியின் மீதும், உள்ளத்தின் மீதும் முத்திரையிட்டு விட்டான். அவனுடைய பார்வையின் மீதும் ஒரு திரையை அமைத்து விட்டான். அல்லாஹ் இவ்வாறு செய்த பின்னர், அவனை யாரால்தான் நேரான வழியில் செலுத்த முடியும்? (இதனை) நீங்கள் கவனித்துப் பார்க்க வேண்டாமா?

(அல்குர்ஆன் : 45:23)

பிஃக்ஹு கலையும் நமது மதரஸாக்களும்

அரபுக் கல்லூரியில் படிக்கும் காலத்தில் எனது ஆசிரியர் ஒருவர் பிஃக்ஹு கலை என்றால் என்ன என்பதை எங்களுக்கு அன்று புரியும் விதத்தில் விளக்கினார் அது இன்றும் எனது மனதில் பதிந்திருக்கிறது,

குர்ஆன் ஸுன்னா என்ற இரண்டு பழங்களை பிழிந்தால் வரும் சாறுதான் பிஃக்ஹு கலை என்று சொன்னார், ஒரு இறை நம்பிக்கையாளருக்கு தனது வாழ்வில் இன்றியமையாத ஒன்று, தனிநபர் வாழ்க்கை, சமூக வாழ்க்கை, இல்லறம், வணிகம், பாகப்பிரிவினை, வாரிசுரிமைச் சட்டங்கள், இவ்வாறு விரிந்து கொண்டே செல்கிறது இந்த கலை, நமது அன்றாட வாழ்வில் பிஃக்ஹு கலை தவிர்க்க முடியாத ஒன்று.

பொதுவாக தமிழகத்திலும் இந்திய பிராந்தியங்களிலும் இன்னும் அதிகமாக சொல்லப்போனால் அருகில் உள்ள பங்களாதேஷ், பர்மா, பாகிஸ்தான் இலங்கை வரை பிஃக்ஹு துறை பாடத்தில் அரபு கல்லூரிகளில் இரண்டு விதமான கலைகள் மட்டுமே போதிக்கப்படுகின்றன.(சில அரபுக் கல்லூரிகள் விதி விளக்கிற்கு உட்பட்டது)

ஒன்று பிஃக்ஹு கலைச்சட்டங்கள்

(الاحكام الفقهية),

அதன் உஸூல்களும் அடிப்படைகளும்

(اصول الفقه)

ஹனபிஃ பிஃக்ஹு துறையில் படிக்கும் மாணவர்கள், ஷாஃபி பிஃக்ஹு துறையை படிப்பது இல்லை ஷாஃபி பிஃக்ஹு துறையை படிக்கும் மாணவர்கள் ஹனபிஃ பிஃக்ஹு துறையில் கவனம் செலுத்துவதுமில்லை,

இதன் விளைவு இரு வேறுபட்ட மத்ஹபுகளின் சட்டங்கள் மார்க்க

கல்வியை படிக்கும் மாணவர்களுக்கு தெளிவில்லாமல் போய்விடுகிறது, நாளை அவர்கள் மார்க்க சேவை செய்வதற்காக இமாம்களாக செல்லும் பள்ளிகளிலும் பேராசிரியராக பாடங்களை நடத்த செல்லும் கல்லூரிகளிலும் தங்களுக்கு மாறுபட்ட மத்ஹபை விளங்கும் விஷயத்திலும் அதைப் படித்துக் கொடுக்கும் விஷயத்திலும் பல சட்ட சிக்கல்கள் இருப்பதை நாம் காண்கிறோம்.

அரபுக் கல்லூரியில் படிக்கும் பொழுது இரு வேறுபட்ட மத்ஹபுகளை படிக்கும் மாணவர்களுக்கு மத்தியில் கருத்து வேறுபாடுகள் கல்வியின் முன்னேற்றதற்காக வேண்டி சிறுபிள்ளைத்தனமாக விவாதங்கள் ஊடாக செய்ய ஆரம்பித்து இறுதியில் தங்களது மத்ஹபுகள் மட்டுமே சிறந்தன பிற மத்ஹகபுகள் கருத்துக்கள் பிழை என்ற ஒரு நிலைப்பாட்டுக்கு வந்து விடுகின்றனர்.

சுருக்கமாக அடியேன் கூற விரும்பும் விடயம் பொதுமக்களுக்கும் ஆலிம்களுக்கும் மிகப் பெரிய வித்தியாசம் இருக்கிறது, பொதுமக்களுக்கு குர்ஆன் ஹதீஸின் ஆழமான கல்வி ஞானம் இல்லாமல் இருப்பதால் அவர்கள் ஆழமான ஒரு கல்வி அறிவை தேடுவது அவர்கள் மீது கட்டாயக் கடமை அல்ல, ஆனால் ஆலிம்கள் அவ்வாறில்லை குர்ஆன் ஹதீஸை ஆழமாக விளங்குவதற்கு பிஃக்ஹு கலைகளில் பிரதானமாக படித்து தரப்பட வேண்டிய இன்னும் பல கலைகள் நமது மதரஸாக்களில் படித்து தரப்பட்டால் சிறப்பாக இருக்கும் என்பது அடியேனின் கருத்து .

மார்க்க தீர்ப்பை ஒருவர் கேட்டால் இடம் பொருள் ஏவல் அறிந்து கூடும் கூடாது என்று மட்டும் சொல்லாமல் ஆதாரம் மிக்க நம்பத் தகுந்த பிஃக்ஹு நூல்களில் இருந்து பஃத்துவா கொடுத்தால் சிறப்பாக இருக்கும், மார்க்க தீர்ப்பை குர்ஆன் சுன்னாவில் இருந்தும் ஏனைய மத்ஹகபுகளின் இமாம்களின் பார்வைகளில் இருந்தும் பகுப்பாய்வு செய்து, எந்த கூற்று குர்ஆன் ஹதீஸிற்கு மிக நெருக்கமாக இருக்கிறதோ அதை பொதுமக்களுக்கு அமானிதமாக சொல்ல வேண்டும், சமகால பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதில் குர்ஆன் ஹதீஸின் ஒளியில் எழுதப்பட்டிருக்கும் பிஃக்ஹு நூல்களில் ஊடாக அணுக வேண்டும் என்ற சிந்தனையுடன் பயணிக்கும் பொழுது நமது சமூகத்திற்கு மிகவும் பயனளிக்கும்.

ஜோர்டான் நாட்டின் சர்வதேச இஸ்லாமிய பல்கலைக்கழகத்தின் ஹனபிஃ பிஃக்ஹு கல்லூரியில்

(كلية الفقه الحنفي بجامعة العلوم الاسلامي العالمي)

பேராசிரியராக இருக்கும் டாக்டர் அஷ்ஷேக் ஸலாம் அபுல் ஹாஜ்

எழுதி இருக்கும் ஒரு புத்தகம் அனைத்து பிஃக்கஹுத் துறை மாணவர்களும் படிக்க வேண்டிய 677 பக்கங்கள் கொண்ட ஒரு புத்தகம், அல்மத்ஹலுல் முபஃஸ்ஸல் பீஃ பிஃக்ஹில் ஹனபிஃ -

المدخل المفصل في الفقه الحنفي

இந்த புத்தகத்தை றிஞிதி ல் வாசிக்க

https://1drv.ms/b/s!AiRz3-vjWJZ7ozMgAktsxW-5kRQt

அதேபோன்று சிரியாவின் தலைசிறந்த பிஃக்ஹு கலை நிபுணர் டாக்டர் வஹபதுஸ் ஸுஹைலி ரஹிமஹுல்லாஹ் போன்றோர் நமக்கு பிஃக்ஹு துறையில் சிறந்த முன்னோடிகள்.

பிஃக்ஹு துறையில் கீழ்காணும் பல கிளை துறைகளும் இருக்கின்றன.

١- الفقه المقارن

٢- الترجيح و التعارض

٣- تخريج الاصول على الفروع و الفروع على الوصول

٤- الاجتهاد و التقليد

٥- العقود المدنية

٦- السياسة الشرعية

٧- مقاصد الشريعة الإسلامية

٨- نظرية التقعيد الفقهي و اثرها في اختلاف الفقهاء

٩- مناهج الفقهاء في استنباط الاحكام

١٠- منهج البحث العلمي

١١- فقه النوازل

١٢- فقه الواقع

١٣- فقه الأولوية

١٤- فقه المآلات

இன்னும் பல கிளைத் துறைகள் பிஃக்ஹு கலையில் நமது இந்திய மதரஸாக்களில் போதிக்கப்பட வேண்டிய தேவை இருக்கிறது.

நமது ஸலபு ஸாலிஹீன்களான கண்ணியமாக இமாம்களால் எழுதப்பட்ட புத்தகங்களை பிஃக்ஹு கலையாக படித்து கொடுப்பதுடன்

சமகால அறிஞர்கள் எதை நவீன ஆய்வுகளாக இணைத்து எழுதி இருக்கிறார்களோ அதை சேர்த்து படித்து கொடுத்தால் உகந்ததாக இருக்கும். மதரசாவின் பாட நூல்களை இவ்வாறு நாம் அமைக்க வேண்டும்.

உதாரணமாக 2015 ஆம் ஆண்டு மரணித்த சிரியாவை சேர்ந்த டாக்டர் அஷ்ஷைக் வஹபா அஸ்ஸுஹைலி ரஹிமஹுல்லாஹ் நான்கு மத்ஹபுகுகளிலும் அற்புதமான முறையில்

الفقه الميسر الحنفي

الفقه الميسر الشافعي

الفقه الميسر الحنبلي

الفقه الميسر المالكي

மேல் காணும் தலைப்புகளில் எழுதி இருக்கிறார்கள்.

பிஃக்ஹு சட்டங்களுக்கு குர்ஆன் சுன்னாவிலிருந்து ஆதாரங்களை சேர்த்து எழுதி இருப்பது இந்த புத்தகங்களில் மிகச் சிறப்புமிக்க விடயங்களாகும்.

தற்கால ஆலிம்களின் கல்வித்தரம் எந்த அளவுக்கு இருக்கிறது என்பதை சொல்லித் தெரியவேண்டிய அவசியம் இல்லை, ஆக பழைய சிறந்த பிஃக்ஹு கலை நூல்களையும் நவீன நூல்களையும் ஒருசேர வாசித்து சர்வதேச பார்வையுடன் அனுகுவது மிக அவசியமாக இருக்கிறது,

குறிப்பாக அரபு க் கல்லூரியின் ஆசிரியர்கள், காஜிகள், முஃப்திகள் இதை தெரிந்து கொள்வது அவசியமாக இருக்கிறது.

இறையருளால் தஞ்சை பாபநாசம் மதரஸா ஸித்தீகியாவில் எங்களது மாணவ சகோதரர்களுக்கு மேல் காணும் புத்தகங்களை பற்றிய அறிமுகங்களும், பிஃக்ஹு துறை பற்றிய ஆழமான வரலாற்று ரீதியான அறிமுகங்களும் சிறப்பு வகுப்புகளும் அவ்வப்பொழுது எடுத்துக் கொண்டிருக்கிறோம்.

கூடுதலாக அரபு நாடுகளின் மார்க்க அறிஞர்களின் வகுப்புகளில் கலந்து கொள்ள செய்து நவீன அரபு மொழியில் சரளமாக பேச எழுத முயற்சிகளையும் எடுத்து சிறப்பு வகுப்புகளில் கலந்து கொண்டதற்கான சான்றிதழ்களையும் பெற்று தரும் நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம்.

இன்ஷா அல்லாஹ் வரும் காலங்களில் ஸித்திகியீன்கள் பிஃக்ஹு துறையில் பல சாகசங்களை நிகழ்த்தி , உண்மையான அஹ்லுஸ் ஸுன்னத்

வல் ஜமாஅத் கொள்கையில் பயணித்து இந்த தமிழ் சமூகத்திற்கு சிறந்த மார்க்க தொண்டுகளை அல்லாஹ்வின் பொருத்தத்தை நாடி செய்வார்கள் என்று நம்புகிறோம் தங்களின் துவாவை நாடியவனாக.

அத்துடன் பிஃக்ஹுத் துறைச் சார்ந்த எனது ஆய்வும் அமெரிக்காவின் கல்வி அமைச்சரகத்தின் அங்கீகாரத்துடன் இயங்கி வருகிற அமேரிக்க திறந்த பல்கலைக்கழகத்தின் (நிகழ்நிலை) ஊடாக செய்யப்பட்டு வருகிறது அதன் தலைப்பு பின் வருமாறு

"நத்வி உலமாக்களின் பிஃக்ஹுத் துறை சேவைகளும் ,இஸ்லாமிய சமூகத்தில் அதன் தாக்கமும் ".

சிறந்த முறையில் அடியேன் இந்த ஆய்வை முடிப்பதற்கு தாங்கள் அனைவரும் துஆ செய்யுங்கள்.

இப்னு தைமிய்யாவும் ஜின்னும்

ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா ரஹிமஹுல்லாஹ் அவர்களின் இறை அழைப்பு பணி மிகவும் பிரமிக்க தக்க ஒன்று, ஒரு சிறந்த இராணுவ வீரராகவும் எதிரிகளுக்கு எதிராக தனது போர்வாளை சுழட்றியிருக்கிறார்கள், அழைப்புப் பணியில் தங்களது எழுதுகோல் ஊடாகவும் போர்வாளை சுழட்றியிருக்கிறார்கள்.

அதிகமான நாட்கள் சிறைச்சாலையிலும் கழித்திருக்கிறார்கள், ஒரு மிகப்பெரிய நூலகமே அவருடைய மனன சக்தியில் சிந்தனையில் தெளிவாக இருந்திருக்கிறது, இன்று ஒரு சிறிய புத்தகம் எழுத வேண்டும் என்றால் பல புத்தகங்கள் படித்திருக்க வேண்டும் இது எதார்த்தமான ஒரு விடயம்.

சிறைச்சாலையில் இருந்து 37 வாலியம்கள் கொண்ட அவர்களின் ஃபத்வா கிரந்தம் (மார்க்க தீர்ப்புகள்) நேர்த்தியாக எழுதப்பட்டது என்பதை நாம் அனைவரும் அறிவோம்.

சில நாடுகளில் இருந்து அறிஞர் பெருமக்கள் இஸ்லாமிய கொள்கை ரீதியாக எங்களுக்கு புத்தங்கள் எழுதித் தாருங்கள் என்று கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் அஸர் தொழுகைக்கு மஃரிப் தொழுகைக்கும் மத்தியில் அமர்ந்து உடனே எழுதி கொடுத்து இருக்கிறார்கள்.

"அல்வாஸிதிய்யா,ததம்முரிய்யா,ஹமவிய்யா", என்ற புத்தகங்கள் இதற்கு நல்ல உதாரணங்கள், எந்தெந்த ஊரில் இருந்து வந்து புத்தகம் எழுதி கேட்டார்களோ அந்த ஊரின் பெயரை அது புத்தகத்தின் பெயராக அவர்கள் வைத்தார்கள்.

இது அவர்களின் கல்வியின் ஆழமான ஞானத்தையும், ஆளுமை திறன்களையும் நமக்கு விளக்குகிறது.

ஒருமுறை அவர்கள் எகிப்து நாட்டின் சிறைச்சாலையில் அடைக்கப் பட்டிருக்கும் பொழுது, எகிப்து நாட்டின் மன்னர் பக்கத்து நாட்டிற்கு

தாங்கள் சென்று வந்ததாகவும் வகுப்பு நடத்தியதாகவும் அந்த மன்னர் கூறுகிறார் என்று கேட்டார்.

அது நான் அல்ல எனது வகுப்பில் கலந்து கொண்டிருந்த ஜின் இனத்தை சேர்ந்த ஒரு மாணவர் என்று சொல்ல, அரசர் ஆச்சிரியத்தல் மூழ்கிப் போனார்.

இப்னு தைமிய்யா ரஹிமஹுமுல்லாஹ் அவர்கள் செய்து வந்த அழைப்பு பணியை எந்த குறையும் இல்லாமல் செய்து இஸ்லாத்தின் பக்கம் அவர்களை துருக்கியவர்களை அழைத்து அவர்களுக்கு உணவும் வழங்கி கண்ணியப்படுத்தி இருக்கிறது.

அரசர் கேட்டாராம் அவர் மலக்காக இருக்கலாம் அல்லவா என்று அதற்கு அறிஞர் இப்னு தைமியா வாய்ப்பில்லை, காரணம் நான் இப்னு தைமிய்யா என்று அந்த ஜின் கூறி இருக்கிறது மலக்குகள் பொய் உரைக்க மாட்டார்கள் என்று அப்பொழுதும் கல்வியின் ஞானத்தை தெளிவுபடுத்தி இருக்கிறார்கள்.

ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா ரஹிமஹுமுல்லாஹ் அவர்களின் கல்வி ஞானத்தின் வெளிப்பாடு அவர்களிடத்தில் ஜின்களும் கல்வி கற்று இருக்கின்றனர் என்பது தெளிவாக விளங்குகிறது.

இந்த சம்பவத்தை பிரபல்யமான சவூதி அரேபியாவை சேர்ந்த ஹரம் ஷரீப் ஆசிரியர் அல்லாமா ஸாலிஹ் அல் உஸைமி ஹஃபிழஹுல்லாஹ் தனது வகுப்பு ஒன்றில் கூறியிருக்கிறார்கள்.

நூல் - மஜ்மவுல் ஃபதாவா- 13/93-92

وقد بيّن هذا شيخ الإ سلام في نهاية القصة التي ذكرها، حيث قال رحمه الله تعالى: "كنت في مصر في قلعتها، وجرى مثل هذا إلى كثير من الترك من ناحية المشرق، وقال له ذلك الشخص أنا ابن تيمية، فلم يشك ذلك الأمير أني أنا هو، وأخبر بذلك ملك ماردين، وأرسل بذلك ملك ماردين إلى ملك مصر رسولا وكنتُ في الحبس؛ فاستعظموا ذلك وأنا لم أخرج من الحبس، ولكن كان هذا جنيا يحبنا، فيصنع بالترك التتر مثل ما كنت أصنع بهم لما جاءوا إلى دمشق؛ كنت أدعوهم إلى الإسلام، فإذا نطق أحدهم بالشهادتين أطعمتهم ما تيسر، فعمل معهم مثل ما كنت أعمل، وأراد بذلك إكرامي، ليَظُن ذاك أني أنا الذي فعلت ذلك.

قال لي طائفة من الناس: فلم لا يجوز أن يكون ملكا؟

قلت: لا، إن الملك لا يكذب، وهذا قد قال: أنا ابن تيمية، وهو يعلم أنه كاذب في ذلك" انتهى من "مجموع الفتاوى" (١٣/ ٩٢-٩٣).

والله أعلم.

அறியாமையால் ஷிர்க் வைத்தால் காஃபிரா?

இஸ்லாத்தின் கோட்பாடுகளை சிதைக்கும் விதத்தில் இணை கற்பித்தல் நிராகரித்தல் போன்ற செயல்களை கொண்ட சித்தாந்தத்தை நாம் குப்ர் (இறை நிராகரிப்பு) என்று தெளிவாக கூறினாலும், தனிப்பட்ட ரீதியில் ஓர் இறை நம்பிக்கையாளர் இணை கற்பித்தல் போன்ற செயல்களை செய்கிறார் என்று நாம் அறிந்தால் உடனடியாக அவரை காஃபிர் இறை நிராகரிப்பாளர் என்று நாம் அந்த தனி நபரை கூற முடியாது.

இறை அழைப்பு பணியை முழுமையாக முறையாக நாம் செய்வதை தவற விட்டு விட்டோம் என்று தான் அர்த்தம் அதை விட்டுவிட்டு அழைப்பு பணியை செய்யாமல் இறை நிராகரிப்பை கொண்டு இருக்கிறார் என்று தீர விசாரிக்காமல் ஒரு தனி நபரை காபிர் என்று கூறுவது மார்க்கத்திற்கு முரணான விடயம்.

அஷ்ஷேக் டாக்டர் வலீத் அஸ்ஸஃஈதான் ஸத்ததஹுல்லாஹ் தனது புத்தகத்தில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்கள்.

(அல்-கவாயிதில் முதாஆ இந்த அஹ்லிஸ் ஸுன்னத்தி வல்ஜமாஆ-

(القواعد المذاعة عند اهل السنة والجماعة)

அஷ்ஷேக் அப்துல்லாஹ் அல்ஜிப்ரின் ஹஃபிழஹுல்லாஹ் அவர்களின் புத்தகமான தனி நபரை காபிர் என்று கூறுவதின் விதிமுறைகள் -

(ضوابط تكفير المعين)

போன்ற புத்தகங்கள் நமக்கு கீழ்காணும் கருத்துக்களை தருகிறது.

இஸ்லாம் இறை நிராகரிப்பை செய்யும் தனி நபர்களுக்கு பின்வரும் நிபந்தனைகளை வைக்கிறது .

- ⋆ அறிவு
- ⋆ பருவ வயதை அடைதல்

★ சுய முடிவு

★ சுய புத்தியோடு செய்தல்

★ சந்தேகங்களும், விளக்கங்களும் இன்றி தெளிவாக இறை மறுப்பை செய்வது

மேற்காணும் நிபந்தனைகளுக்கு முரண்படக்கூடிய

★ பைத்தியம்

★ சிறு வயது

★ சுய புத்தியை இழக்குதல்

★ அறியாமை

★ தங்கள் கொண்டிருக்கும் இஸ்லாத்துக்கு முரணான கொள்கைகளில் சந்தேகங்களும், தவறான விளக்கங்களும் அவரிடத்தில் இருக்கிறது.

• இந்த நிபந்தனைகளும் அதற்கு முரண்படக்கூடிய விடயங்களையும் கவனத்தில் கொள்ள வேண்டும், அவ்வாறு இருப்பின் இறை நிராகரிப்பை இட்டு செல்லும் கொள்கைகளைக் கொண்டிருந்தாலும் தனிநபர் மேல் காணும் நிபந்தனைகளுக்கும் விசாரணைக்கும் உட்படுத்தப்பட்டு உறுதி செய்யப்பட்டால் அப்பொழுது அவர் இணை வைப்பவர், இறை நிராகரிப்பாளர் என்று கூற முடியும்.

எனவே எடுத்ததற்கெல்லாம் தனி நபரை காஃபிர்,முஷ்ரிக் ,பித்அத்வாதி, பாவிஎன்று மார்க்க தீர்ப்பு கூற முடியாது.

பொதுவாக ஷிர்க், குப்ர் ,பித்அத் போன்ற இறை நிராகரிப்பு & வழிகேடுகளை மக்கள் மத்தியில் விளக்குவதும் அதைப்பற்றிய விழிப்புணர்வுகளை செய்வதும் எந்த தவறும் இல்லை, செய்ய வேண்டியது இன்றியமையாத ஒன்றும் கூட.

ஷிர்க் (அல்லாஹ்விற்கு இணை கற்பித்தல்)அறியாமைக்கான அனுமதிகள் பற்றிய கூற்றின் உண்மை அடிப்படையானது, ஒரு முஸ்லீம் தனது இஸ்லாத்தை அங்கீகரிப்பதாக அறிவித்து, இஸ்லாத்தின் அனைத்து கொள்கைகளையும் கடைப்பிடித்து, அதை ஒப்புக்கொண்டது நமக்கு உறுதியாக நிரூபிக்கப்பட்டால்.

அல்லாஹ் அல்லாத பிறரிடம் உதவி தேடுவது (அல்லாஹ்விடம் துஆ கேட்பது போன்று மரணித்த நல்லடியார்களிடம் துஆ கேட்பது)போன்ற சில முக்கியமான பெரிய ஷிர்கில் அவர் அகப்படுகிறார் என்று வைத்துக் கொள்வோம்.

உதாரணமாக, அவர் தனது செயலின் மீதான மார்க்க தீர்ப்பைப் பற்றி அறியாதவர், அவர் செய்தது ஷிர்க் என்பது அவருக்குத் தெரியாது,

தனது அறியாமையால் அது பற்றிய அறிவு இல்லாததாலோ அல்லது அதன் விளக்கம் எழுந்ததாலோ, அவர் காஃபிர் என்று தீர்மானிக்கப் படுவதில்லை, இஸ்லாத்தின் அடையாளங்கள் அவரிடமிருந்து அகற்றப் படாது, மாறாக அவர் ஒரு முஸ்லிமாக நடத்தப்படுவார். இஸ்லாத்தின் அனைத்து விதிகளும் அவருக்குப் பொருந்தும்.

இஸ்லாமிய கொள்கை ரீதியான ஆய்வில் அறியாமைக்கான அனுமதிகளின் சந்தேகங்கள் அறியாமைக்கான -33

அஷ்ஷேக் டாக்டர். ஸுல்தான் அல்-உமைரி

(إشكالية الإعذار بالجهل في البحث العقدي- 33)

இஸ்லாத்திற்கு சவால் விடும் முதல் ஆய்வு மைய்யமான" தக்வீன்" - உருவாக்கம் - எச்சரிக்கை! (அத்தன்வீரு", التنوير -அறிவொளி இயக்கம்)

பஹ்ரைன் நாட்டைச் சேர்ந்த பிரபலமான அழைப்பாளர் அஷ்ஷைக் ஹஸன் ஹுஸைனி ஸத்ததஹுல்லாஹ் தனது பதிவு ஒன்றில் இஸ்லாத்தை கேள்விக்குறியாக ஆக்கி சவால்களை தொடுக்கம் புதிய குழப்பவாதிகளை நமது இஸ்லாமிய சமூகத்திற்கு வெளிச்சம் இட்டு காட்டி இருக்கிறார், அல்லாஹ் இவர்களுக்கு அருள் புரிவானாக!!

இந்த நிறுவனத்தின் பெயர்"தக்வீன்", இதுவரை யூதர்கள் இஸ்லாத்திற்கு வெளியில் இருந்தும் தங்களது தத்துப் பிள்ளைகளான ஷீஆக்களின் தகுதியால் இஸ்லாத்திற்கும் உள்ளம் பல குழப்பங்களை செய்து வந்தனர், ஓரியண்டலிஸம் (استشراق -கீழேத்தியவாதம்)

மேற்கத்தியவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளாமல் இஸ்லாமிய கலைகளை நுணுக்கமாக படித்து நிபுணத்துவம் பெற்ற அதற்கு சேவை செய்கிறோம் என்ற பெயரில் பல குழப்பங்களை கடந்த காலங்களில் உருவாக்கியவர்கள்,

ஓரியண்டலிஸம் ஓர் பார்வை

சந்தேகிக்க வைக்கும் நஞ்சை முஸ்லிம்கள் உள்ளத்தில் நுணுக்கமான முறையில் விதைத்தவர்கள் இவர்கள் இதன் குழப்பம் இன்று வரை இஸ்லாமிய சமூகத்தில் மிகப்பெரிய ஒரு தாக்கத்தை ஏற்படுத்தி வந்துள்ளது நான் கண்ட வருகிறேன் அதற்கு நமது மார்க்க அறிஞர்கள் பல காலங்களில் பல சூழல்களில் மறுப்புகளை எழுதியும் விமர்சனம் செய்தும் இஸ்லாத்தை பாதுகாத்து வந்திருக்கிறார்கள் என்பது நாம் அனைவரும் அறிந்த உண்மை.

ஆனால் இப்பொழுது இஸ்லாத்தை கொச்சைப்படுத்துவதற்கும் அதன் தூய்மையை போக்குவதற்கும் நேரடியாக பகிரங்கமாக சவால் விடக் கூடிய அளவில் முஸ்லிம்களின் கரங்களில் இந்த புதிய குழப்பத்தை தொடங்கி இருக்கிறார்கள்.

தக்வீன் அறக்கட்டளையை நிறுவிய இந்த பெயர் தாங்கிய முஸ்லிம்களின் ஒவ்வொருவருக்கும் அவரவர் துறை உள்ளது.

அவர் எனது துறைகளில் மிகப் பிரபலமாக அறியப்பட்டவர்களும் மற்றும் நிபுணத்துவம் பெற்றவர்களும் கூட.

1- குர்ஆனுக்கு எதிராக சவால் செய்ததாக இப்ராஹிம் ஈசா மீது விமர்சனம் செய்யப்பட்டுள்ளார்.

2- ஸுன்னாவை மறுத்ததாக இஸ்லாம் புஹைரி மீது விமர்சனம் செய்யப்பட்டுள்ளார்.

3- ஃபிராஸ் அல்-சவா இஸ்லாமிய கொள்கைகளை அழிக்கும் முயற்சியில் இருந்ததாக விமர்சனம் செய்யப்பட்டுள்ளார்.

4- இஸ்லாமிய வரலாற்றை அழித்ததாக யூசுப் ஜைதான் மீது விமர்சனம் செய்யப்பட்டுள்ளார்.

5- ஆல்ஃபா யூஸுஃப் இஸ்லாத்தின் தனிநபர் சட்ட வாரியம் மற்றும் வாரிசு உரிமை சட்டங்களுக்கு எதிராக களம் கண்டதாக விமர்சனம் செய்யப்பட்டுள்ளார்.

இவர்களைப் போன்றே மீதமுள்ள தக்வீன் - நிறுவனத்தின் நிர்வாகிகளும் இஸ்லாத்திற்கு எதிரான சிந்தனைகளை கொண்டவர்கள், இவர்களின் திட்டங்களை அல்லாஹ் முறியடிப்பானாக!!

இவர்கள் தங்களை "தன்வீரிய்யூன்", அறிவொளி இயக்கம் என்று கூறிக் கொள்கிறார்கள்.

இவர்கள் மேற்கத்திய உலகத்தினரால் இஸ்லாத்தை தாக்குவதற்கு தயார் செய்யப்பட்ட அதிபயங்கரமான நாசக்கார ஆயுதங்கள் என்பதை நாம் மறந்துவிட வேண்டாம்.

இஸ்லாத்தின் பெயரில் ஆய்வு செய்கிறேன் என்ற அடிப்படையில் இஸ்லாம் தொன்று தொட்டு போதித்து வந்த இறை செய்திகளை விமர்சிப்பது மட்டுமல்லாமல் மறுக்கவும் செய்யக்கூடியவர்கள் இவர்கள்.

வரும் காலங்களில் பல ஆய்வுகளை இவர்கள் ஆங்கில மொழியிலும் அரபு மொழியிலும் பல்வேறு மொழிகளிலும் எழுதி விழிப்புணர்வு என்ற பெயரில் விஷத்தை காற்றில் கலக்க இருக்கிறார்கள்.

இவர்களைப் பற்றி நமது இஸ்லாமிய சமூகத்திற்கு எடுத்துரைப்பதும் முறையான விழிப்புணர்வுகளை தருவதும் நமது கடமை.

يُرِيْدُوْنَ لِيُطْفِـُوْا نُوْرَ اللّٰهِ بِاَ فْوَاهِهِمْ وَاللّٰهُ مُتِمُّ نُوْرِه وَلَوْ كَرِهَ الْكٰفِرُوْنَ

அல்லாஹ்வுடைய பிரகாசத்தைத் தன் வாயினால் ஊதி அணைத்து விடலாமென்று இவர்கள் கருதுகின்றனர். இந்நிராகரிப்பவர்கள் வெறுத்த போதிலும் அல்லாஹ் தன் பிரகாசத்தை (உலகமெங்கும் ஜொலிக்கும்படி) முழுமையாகவே ஆக்கிவைப்பான். (அல்குர்ஆன் : 61:8)

الله هو المستعان و عليه التكلان

சமூகம் மறந்து போன
இரண்டு முக்கியமான சுன்னா...!

பொதுவாக மார்க்கத்தில் வணக்க வழிபாடுகள் அனைத்திலும் தெளிவான வழிகாட்டுதல்கள் இருக்கின்றன, எனவே இறை நம்பிக்கையாளர்கள் நன்மையை கருதி புதிதாக ஒன்றை வணக்க வழிபாடாக இணைக்கவும், நீக்கவும் தேவையில்லை.

அவ்வாறு செய்தால் அது அனாச்சாரமான பித்அத் ஆகும், எல்லா பித்அத்துகளும் வழிகேடுகளாகும்.

ஐந்து நேர தொழுகைக்குப் பின்பு பொதுவாக இமாம் ஓதும் துவாவிற்கு ஆமீன் சொல்வதில் கவனம் செலுத்தும் இந்த சமூகம் , மெய்யான இமாமாகிய இறைத்தூதர் (ஸல்) அவர்களின் மிக அறிய போதனையை மறந்து போயினர்.

நபியவர்கள் ஐந்து நேர தொழுகைக்குப் பின்பு பின்வரும் நபி மொழியில் திக்ரு செய்வதற்கு முக்கியத்துவம் அளித்திருக்கிறார்கள் என்பது விளங்குகிறது.

"இரண்டு நல்ல குணங்கள் அல்லது பழக்கங்கள் உண்டு, அவற்றைக் கடைப்பிடிக்கும் எந்த முஸ்லிமும், அவன் சொர்க்கத்தில் நுழைவான். அவை எளிதானதாகும், ஆனால் அவற்றைப் பின்பற்றுவதற்கானவர் சிலரே: ஒவ்வொரு தொழுகையின் பின்னரும் சுப்ஹானல்லாஹ் பத்து முறை, அல்ஹம்துலில்லாஹ் பத்து முறை, அல்லாஹு அக்பர் பத்து முறை, (இதற்கான நன்மை)நாவில் நூற்றி ஐம்பது (நன்மைகளாகவும்) மற்றும் (மறுமை நாளில்) தராசில் ஆயிரத்து ஐந்நூறாக (நன்மைகளாக) இருக்கும்.

அதைப் போல, இரவில் படுக்கைக்கு செல்லும் முன் 34 முறை அல்லாஹு அக்பர், 33 முறை அல்ஹம்துலில்லாஹ், 33 முறை சுப்ஹானல்லாஹ் சொல்லுவோம், (இதற்கான நன்மை)

நாவில் நூறு (நன்மைகளாகவும்)மற்றும் (மறுமை நாளில்) தராசில் ஆயிரமாகும்(நன்மைகளாக) இருக்கும், நான் நபியவர்கள் கையை பார்த்தேன் கையால் எண்ணிக் கொண்டிருந்தார்கள்.

இவை எளிது, ஆனால் அவற்றை யாரும் பின்பற்றுவதில்லை என்று கூறுகிறார்களே?" என்று நபி அவர்களிடம் கேட்டார்கள், நபி (ஸல்) கூறினார்: "உங்களுள் ஒருவர் தூங்கும் போது ஷைத்தான் வந்து அவனை இவைகளை சொல்வதற்கு முன்பு (மறக்கடித்து) தூங்க வைக்கிறது, இவைகளை சொல்வதற்கு முன்பு தொழுகையின் போது (தொழுகைக்குப் பின்னுள்ள) அவன் தேவையை நினைவுபடுத்துகிறது.

(இப்னு மாஜா- 926, அபூ தாவூத் -5065, திர்மிதி -3410, நஸாயி -1348, அஹ்மத் -6910)." தரம் - ஸஹீஹ்

மேல் காணும் நபிமொழியில் கிடைத்த வழிகாட்டடல்கள்.

1- அல்லாஹ்வை நினைவு கூறுவது திக்ரு செய்தல் சொர்க்கத்தை பெற்று தருகிறது.

2- ஐந்து நேர தொழுகைக்குப் பின்பு நபி மொழியில் வந்திருக்கும் அங்கீகாரம் பெற்ற ஒரு அமல் திக்ரு செய்தல்.

3- வணக்க வழிபாடுகளில் இறைத்தூதர் (ஸல்) அவர்களை முழுக்க பின்பற்றுதல்.

4- தொழுகைக்குப் பின்பு செய்யப்படும் திக்ர்களின் எண்ணிக்கை 30 என்றும் தூங்குவதற்கு முன்பாக செய்யப்படும் திக்ருகளின் எண்ணிக்கை நூறு என்றும் அறிய முடிகிறது.

5- விரல்களினால் மடக்கி மடக்கி திக்ரு செய்தல் நபி வழியாகும்.

6- குறைந்த அமல்கள் அதிகப்படியான நன்மைகள்.

7- இறை சிந்தனையற்ற காலியான உள்ளத்தில் சைத்தானின் ஊசலாட்டங்கள் இருக்கும் என்பதை அறிய முடிகிறது.

8- நபியவர்களால் வலியுறுத்தப்பட்டு இருக்கும் இந்த ஒரு வணக்கத்தை அதிகமானோர் செய்யாமல் ஒரு சிலர் மட்டுமே செய்வார்கள் என்று கூறி இருப்பது இன்று நாம் பள்ளிவாசல்களில் அதிகமான தொழுகையாளிகள் செய்கின்ற தவறை தெளிவுபடுத்துகிறது.

அதாவது தொழுகை முடிந்தவுடன் திக்ரு செய்வதற்கு கூட நேரத்தை ஒதுக்காமல் உலகத்தின் பக்கம் விரைந்து செல்லும் நபர்களை பார்க்கின்றோம்.

9- அல்லாஹ்வும் இறை தூதரும் சொன்ன அடிப்படையில் நமது வாழ்க்கை அமைந்து விட்டால் அதுவே ஒரு வணக்கம் தான்.

10- ஐந்து நேரத் தொழுகைக்குப் பின்பு கூட்டு துஆ என்ற பித்அத்தை தவிர்த்து தனியாக இதுபோன்ற திக்ருகளை செய்வது துஆக்களை செய்வது தான் சுன்னா நபிவழி.

குறிப்பு: 33 தடவை ஓதுவதும் நபிமொழிகளில் வந்திருக்கின்றன, 10 தடவை ஓதுவதும் நபிமொழிகளில் வந்திருக்கின்றன இரண்டுமே நபி வழிகள் தான்.

خصلتانِ ، أو خَلَّتانِ ، لا يُحافِظُ عليهما عبدٌ مسلِمٌ إلَّا دخل الجنَّةَ ، وهما يسيرٌ ، ومن يعملْ بهما قليلٌ : يُسَبِّحُ اللهَ في دبُرِ كلِّ صلاةٍ عشرًا ، و يحمَدُهُ عشرًا ، و يُكَبِّرُهُ عشرًا ، وذلِكَ خمسونَ ومائَةٌ باللسانِ ، وألْفٌ وخمسُمِائَةٍ في الميزانِ. و يكبرُ أربعًا وثلاثينَ إذا أخذَ مضْجِعَهُ ، ويحمدُ ثلاثًا وثلاثينَ ، ويسبحُ ثلاثًا وثلاثينَ ، فذلِكَ مائَةٌ باللسانِ ، وألْفٌ في الميزانِ قال : فلقدْ رأيتُ رسولَ اللهِ يعقِدُها بيدِهِ قالوا : يا رسولَ اللهِ كيف هما يسيرٌ ، ومن يعملْ بهما قليلٌ ، قال : يأتي أحدَكم يعني الشيطانُ في منامِهِ فينوِّمُهُ قبلَ أنْ يقولَ ، ويأتيه في صلاتِهِ ، فيُذَكِّرُهُ حاجَتَهُ قبلَ أنْ يقولَها

الراوي : عبدالله بن عمرو | المحدث : الألباني | المصدر : الكلم الطيب | الصفحة أو الرقم : ١١٢ | خلاصة حكم المحدث : صحيح | التخريج : أخرجه أبو داود (٥٠٦٥)، والترمذي (٣٤١٠)، والنسائي (١٣٤٨)، وابن ماجه (٩٢٦)، وأحمد (٦٩١٠) باختلاف يسير.

இஸ்லாமிய சமூகத்தை அச்சுறுத்தும்

நவீன ஆபத்து...!

இன்றைய இஸ்லாமிய சமூகத்தை அச்சுறுத்தும் மிகப்பெரிய ஆபத்து, தாமாக புத்தகத்தை வாசித்து அரைகுறையாக விளங்கி தான் படித்த மார்க்க கல்விகளை மக்களிடத்தில் கொண்டு போய் சேர்க்க வேண்டும் இது ஒரு அழைப்பு பணி என்று சிலர் ஆங்காங்கே பிரச்சாரங்கள் செய்ய ஆரம்பித்து விட்டனர்.

அரபு மொழியின் ஒரு பழமொழி கூறுகிறது யாருடைய ஆசான் புத்தகமாக ஆகிவிடுமோ அவர் சரி காண்பதை விட தவறுகாண்பதுதான் அதிகமாக இருக்கும்.

من كان شيخه كتابه خطئه أكثر من صوابه

புத்தக வாசிப்பு இன்றியமையாத ஒன்று, ஆனால் அந்தத் துறையை சார்ந்த நிபுணர்களின் ஆசிரியர்களின் துணையோடு மட்டுமே அதை வாசிக்க வேண்டும் அப்பொழுதுதான் அந்த கல்வியை முழுமையாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

இல்லையென்றால் Youtube ஐ பார்த்து சமையல் செய்த கதை தான்.

யூட்யூபில் சொன்னபடி பாத்திரத்தை வைத்து உணவு பதார்த்தங்களை இட்டு சொன்னதை எல்லாம் செய்திருக்கிறேனே ஏன் சமையல் ஆகவில்லை என்றால் அடுப்பை பற்ற வைக்கவில்லை காரணம் யூட்யூபில் சொல்லவில்லை என்று கூறப்படும் நகைச்சுவை போன்று இன்றைய காலத்தில் அரைகுறையாக மார்க்கத்தைப் படித்து பிரச்சாரம் செய்யும் நபர்களின் நிலைமையும் மாறிவிட்டது.

ஒரு ஆசிரியரிடம் மண்டியிட்டு முறையாக பல வருடங்கள் படிப்பது தான் ஆரோக்கியமான கல்வி, குறைந்தது குறிப்பிட்ட காலங்களாவது முறையாக கல்வி கற்க வேண்டும்.

மார்க்க கல்வியை தெளிவாக கூறுகிறேன் என்ற நோக்கில் வெறுப்பு

அரசியல், வீணான விவாதங்கள், இவைகளால் ஏற்படும் பிடிவாதங்கள் இவைகள் தான் இன்று மிகப்பெரிய நமது இஸ்லாமிய சமூகத்திற்கு ஒரு அச்சுறுத்தலாக இருக்கிறது.

தமிழகத்தில் மன்ஹஜுஸ் ஸலபைஃ, சத்தியமான அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையை பொதுமக்களுக்கு போதித்து இறையச்சம் உடைய மக்களாக மாற்றுவதற்கு முறையாக முயற்சி செய்ய வேண்டும், அனாச்சாரங்கள், பித்ஆக்கள் போன்ற விஷமங்களை வேரோடு கலைவதும் ஆக்கப்பூர்வமாக உள்ளத்தில் இறை நம்பிக்கையை வலுப்படுத்துவதும் பாசிச சிந்தனை உடைய அசத்தியவாதிகளின் நோக்கங்களை முறியடிப்பதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும் நமது பிரச்சாரம்.

எங்கு திரும்பினாலும் விவாதங்கள் செய்வதும் வெறுப்பு அரசியல் செய்வதும் வீண்பிடிவாதங்கள் புரிவதும் இந்த உயர்ந்த நோக்கத்தை சிதைத்து விடும்.

அழைப்பு பணி செய்பவர்கள் அனைவரும் ஒரே சிந்தனையில் இருக்கப் போவதில்லை, தாங்கள் கொண்டிருக்கும் சித்தாந்தங்கள் கொள்கை கோட்பாடுகளை வைத்து தான் செய்கின்றார்கள்.

ஆனால் குர்ஆன் சுன்னாவை நபித்தோழர்கள் விளங்கிய ஒரு அடிப்படையில் மார்க்கத்தில் குழப்பம் ஏற்படுத்தாமல் செய்ய வேண்டும், மாறாக பிரச்சனைகளை மட்டும் மக்களுக்குச் சொல்லி தீர்வுகளை வழங்காமல் போவது கொழுந்து விட்டு எரியும் நெருப்பில் எண்ணெயை ஊற்றுவதற்கு சமம்.

அடியேன் கடந்த 30 வருடங்களாக கல்விப் பணியிலும் , அழைப்பு பணியிலும் இருக்கிறேன், தொடர்ந்து புத்தகத்தை வாசிக்கும் ஒரு வாசகனாக எனது ஆசிரியர்களிடம் முறையாக கல்வி கற்றுக் கொள்ளும் ஒரு மாணவனாக மார்க்க கல்வியை இன்றும் கற்று வருகிறேன் அதை எனது கல்லூரியிலும் ஆன்லைனிலும் பல மாணவர்களுக்கும் போதித்தும் வருகிறேன்.

எனது ஆசிரியர்கள் துறை சார்ந்த நிபுணர்கள் பல வருடங்கள் அந்த குறிப்பிடப்பட்ட துறைகளில் தேர்ச்சி பெற்றவர்கள் அவர்கள் சில நேரங்களில் பாடம் நடத்தும் பொழுது கூறுவார்கள் மார்க்க சட்டத்தில் ஒரு குறிப்பிட்ட ஒரு மஸ்அலாவில் பல கருத்துக்கள் இருக்கும் பொழுது கருத்து வேறுபாடுகளை எவ்வாறு அணுகுவது என்ற உசூல்களை சட்டங்களை அறிந்திருப்பதனால் மாற்றுக் கருத்துடையவர்களின் கருத்தை

என்னால் புறக்கணிப்பதற்கு மனம் வருவதில்லை என்று கூறும் பொழுது சற்று அதிர்ந்து விட்டேன்.

இன்று அரைகுறையாக கல்வி படிப்பவர்கள் தஜ்வீதுடன் முழுமையாக திருக்குர்ஆனை ஓத முடியாதவர்கள் குர்ஆன் வரிகளின் அர்த்தம் என்ன என்று தெளிவாக தெரியாதவர்கள்...

அகீதா என்றால் என்ன? நபிமொழிகளின் பின்னணி என்ன, உஸூல் என்ன? பிஃக்ஹு என்றால் என்ன? அதன் உஸூல் என்ன, அரபு இலக்கண இலக்கியம் என்றால் என்ன? என்பதை தெரியாதவர்கள் 50க்கும் அதிகமான இஸ்லாமிய கலைகளை கற்காதவர்கள் ஏதோ ஒரு சில புத்தகங்களை படித்திருக்கிறார்கள் மொழிபெயர்த்திருக்கிறார்கள் என்ற காரணத்தினால் இன்று சமூக வலைதளங்களில் பிறரை சாடுவதும் சங்கடப்படுத்துவதும், வெறுப்பு அரசியலை கக்குவதுமாக இருந்து வருகிறார்கள் தனியாகவும் பல தடவை புத்திமதிகள் கூறப்பட்டு விட்டது அல்லாஹ் அவர்களுக்கு நேர் வழியை காட்டுவானாக.

மிகப்பெரிய ஒரு மார்க் அறிஞரை அவரின் தவறான அணுகுமுறைகளும் வெறுப்பு அரசியல்கள் செய்ததாலும் ஒரு ஆசிரியரின் கீழ் இருந்து பொறுமையாக மார்க்க கல்வியை கற்காமல் தானே பல புத்தகங்களை படித்து பல புத்தகங்களை எழுதிய ஒருவர் எந்த நிலைமைக்கு மாறிவிட்டார் பாருங்கள்!

இந்த மனிதருக்கு (அப்துல்லாஹ் பின் அலி அந்நஜ்தி அல்கஸீமி) பின்னால் ஒரு ஆச்சரியமான சம்பவம் இருக்கிறது.

இவர் காலத்து மார்க்க அறிஞர்கள் இவரை இப்னு தைமிய்யா ரஹிமஹுல்லாஹ் அவர்களின் மறு பிம்பம் என்று கூறினார்கள்.

அல்லாஹ்வின் மார்க்கத்தை எடுத்துச் சொல்வதில் இவருக்கு நிகர் இவர்தான் அழகான எழுத்துநடை வலிமையான ஆதாரங்கள் என்று இவர் எழுத்துக்கள் உரத்து பேசின...

இஸ்லாத்தை பாதுகாக்க கூடிய விடயங்களில் எண்ணில் அடங்காத புத்தகங்களை எழுதினார், குறிப்பாக இஸ்லாமிய கொள்கை ரீதியான (அகீதா) பல புத்தகங்கள் அன்று மாற்றுக்கருத்தினருக்கு சவுக்கடியாக இருந்தது.

இவருடைய சில முக்கியமான புத்தகங்கள் ......

⋆ இஸ்லாத்திற்கும் விக்கிரக வழிபாடுக்கும் மத்தியில் நிகழும் மோதல்

(இது இவருடைய Magnum opus பிரபலமான புத்தகம்)

الصراع بين الإسلام والوثنية

(وهو أشهر مؤلفاته على الإطلاق)

அல்புரூக் அந்நஜ்தியா பீஃ இக்திஸாஹி அத்துலுமாதி அத்திஜ்விய்யா

(மனிதர்கள் ஊடாக வஸீலா தேடலாம் என்று சொல்பவர்களுக்கு மறுப்பு)

البروق النجدية في اكتساح الظلمات الدجوية .

(وهو كتاب يرد فيه على من يدعي جواز التوسل بالبشر)

⋆சிக்கலான நபிமொழிகளின் விளக்கங்கள்

(நபிமொழிகள் அறிவுக்கு முரண்படுகின்றன என்ற நாத்திகர்களுக்கு எதிரான மறுப்பு)

مشكلات الأحاديث النبوية وبيانها.

(وهو كتاب يرد فيه على علماء المادة والملاحدة ، ويبين أن لا تناقض

بين الأحاديث النبيوية والعلم الحديث!!!)

அல்பஃஸ்லுல் ஹாஸிம் பைனல் வஹ்ஹாபிய்யீன வ முகாலிபிஃஹிம்

(வஹாபியர்களுக்கும் எதிர் கருத்து உடையவர்களுக்கும் மத்தியில் நிழவும் பிரச்சனைகளுக்கு தீர்வு)

الفصل الحاسم بين الوهابيين ومخالفيهم .

"ஹயாத் முஹம்மது", என்ற நூலுக்கு விமர்சனம்.

نقد كتاب (حياة محمد).

இஸ்லாத்தை பாதுகாப்பதற்காக இவர் ஆற்றிய பணிகளுக்கு பின்பும் இவர் இறை மறுப்பாளராக மாறிவிட்டார்.

இஸ்லாத்தை கொச்சைப்படுத்தும் அதன் கண்ணியத்தை தாக்கக்கூடிய கடுமையான விமர்சனங்கள் நிறைந்த புத்தகங்களை எழுத தொடங்கினார், இந்நிலையில் அவர் மரணித்தும் விட்டார்.

"இதோ இவைகள் தான் சங்கிலிகள் ",

هذه هي الأغلال

என்ற நூலை முதன் முதலில் எழுதி சவுதி அரேபியாவில் தலைசிறந்த ஆலிம்களின் கோட்டை என்று சொல்லப்படக்கூடிய அல்கஸீமின் முதல் வழிகேடராக மாறினார்.

இந்த சம்பவத்திலிருந்து நாம் பெற வேண்டிய படிப்பினைகள்.....

1- ஏகத்துவத்தின் அடிப்படையில் மரணம் சம்பவிக்காத வரை நிம்மதி அடையக் கூடாது.

2-எத்தனையோ இஸ்லாத்தின் பாதுகாவலர்கள் இணை வைப்பையும் அனாச்சாரத்தையும் கண்டித்தவர்கள் இன்று வழிகேடர்களாக இருக்கிறார்கள்.

3- மார்க்க கல்வியை தேடுவது நம்மைப் பாதுகாக்கும் என்று மட்டும் எண்ணி அமர்ந்து விடாமல் அல்லாஹ்விற்கு முழுமையாக கட்டுப்பட்டு பணிவுடனும்

இறுதி முடிவை அஞ்சியவனாக மிக கவனத்துடன் பயணிக்க வேண்டும், தனது கல்வி அறிவின் மீது பெருமிதம் கொள்ளலாகாது.

4-குழப்பங்களில் இருந்து நம்மை பாதுகாப்பவன் அல்லாஹ் ஒருவனே அவனைத் தவிர சோதனையிலிருந்து நம்மை மீட்பவர் யாரும் இல்லை என்று ஆழமாக நம்ப வேண்டும்.

5- பின்வரும் இந்த நபி மொழியை உங்களின் உள்ளங்களில் ஆழமாக வைத்துக் கொள்ளுங்கள்.

ஒரு மனிதன் சுவனத்தின் அமல்களை தொடர்ந்து செய்து இறுதியாக நரகவாதியின் அமலை கொண்டு அவன் வாழ்வு முடிவு பெறும், ஒரு மனிதன் நரகத்தின் அமல்களை தொடர்ந்து செய்து இறுதியாக சுவனத்தின் அமலை கொண்டு அவன் வாழ்வு முடிவு பெறும்.

நூல் -ஸஹீஹ் முஸ்லிம் -2651

5- உயிரை பாதுகாக்கும் முக்கோணம் - Survival Triangle - இறையச்சம் ஒன்றே.

يَٰٓأَيُّهَا ٱلَّذِينَ ءَامَنُوٓاْ إِن تَتَّقُواْ ٱللَّهَ يَجۡعَل لَّكُمۡ فُرۡقَانٗا وَيُكَفِّرۡ عَنكُمۡ
سَيِّـَٔاتِكُمۡ وَيَغۡفِرۡ لَكُمۡۗ وَٱللَّهُ ذُو ٱلۡفَضۡلِ ٱلۡعَظِيمِ

விசுவாசங்கொண்டோரே! நீங்கள் அல்லாஹ்வுக்குப் பயப்படுவீர் களாயின், அவன் உங்களுக்கு (பத்ரில் நடத்தியது போன்று தீர்க்கமான) முடிவை ஆக்குவான், உங்களை விட்டும் பாவங்களைப் போக்கி உங்களை மன்னித்தும் விடுவான், இன்னும் அல்லாஹ் மிக்க மகத்தான பேரருளுடையவன். (அல்குர்ஆன் : 8:29)

இவருடைய பிரபலமான புத்தகமாகிய "இஸ்லாத்திற்கும் விக்கிரக வழிபாடுக்கும் மத்தியில் நிகழும் மோதல்"

الصراع بين الإسلام والوثنية

நீங்கள் படித்தால் அதை எழுதியவர் உங்களுக்கு ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமியாவாகவும், இமாம் ஆலுஸியாகவும், ஸஃதியாகவும் ரஹிமஹுமுல்லாஹ் தோன்றும் அந்த அளவிற்கு நேர்த்தியாக எழுதி இருப்பார் ஆனால் அவரின் இறுதி முடிவு மிக மோசமாக மாறி இருந்தது.

எனவே நாம் அல்லாஹ்வை மிகவும் அஞ்ச வேண்டும் முறையாக மார்க்கத்தை படித்து ஒரு ஆசிரியரின் கீழ் நம்மை ஒரு மாணவனாக பயணித்து மார்க் சேவைகளை அழைப்பு பணிகளை செய்ய வேண்டும்.

அல்லாஹ் நம் அனைவரின் இறுதி முடிவையும் இறை அச்சம் உடையவர்களின் இறுதி முடிவாக ஆக்கி அருள் புரிவானாக!

நூல் - அப்துல்லாஹ் அல்கஸீமி மினல் அஸாலதி இலா மா பஃதல் ஹதாஸதி - ஸபாஹ் முப்ஃதின் ஹமீதி.

(عبد الله القصيمي من الأصالة إلى ما بعد الحداثة- صباح مفتن حميدي)

وألّف القاضي «إبراهيم بن عبد العزيز السويح» كتابه: «بيان الهدى من الضلال في الرد على صاحب الأغلال» يرد فيه على ما أورده القصيمي في كتابه: «هذه الأغلال». وألّف وكتب في ذلك غيره من العلماء منهم: محمد بن عبد الرزاق حمزة، والشيخ عبد الله بن يابس

சரியான அகீதாவிலிருந்து (இஸ்லாமிய கோட்பாட்டை) மீறுவதை பாதுகாக்கும் 13 விதிகள்

1- இபாதத் (வழிபாடு) என்பது சர்வவல்லமையுள்ள அல்லாஹ்வுக்கு முற்றிலும் நிறைவேற்றப்பட வேண்டிய ஒரு கடமையாகும், ஆக அல்லாஹ்விற்கு நிறைவேற்றப்படும் வணக்கங்கள் அல்லாஹ்விற்கு மிகவும் நெருங்கிய மலகுக்கோ (வானவருக்கோ) அல்லது அவனால் அனுப்பப்பட்ட நபிமார்களுக்கோ (தீர்க்கதரிசிகள்) அல்லது ஒரு ஸாலிஹான இறைநேசருக்கோ நிறைவேற்றப்படக்கூடாது (பயம் மற்றும் நம்பிக்கை, ஆசை போன்றவை, அனைத்தும் எல்லாம் வல்ல இறைவனுக்கு மட்டுமே நிறைவேற்றப்பட வேண்டும்)

- மேல் காணும் இந்த விதியின் அடிப்படையில் அல்லாஹ்வின் பெயரில் மட்டுமே சத்தியம் செய்ய முடியும்

உம் : வல்லாஹி, பில்லாஹி, தல்லாஹி (அல்லாஹ்வின் மீது ஆணையாக)

2- அல்லாஹ்விடம் மட்டுமே பிரார்த்தனை செய்ய வேண்டிய ஒரு விஷயத்தில் அல்லாஹ்வை தவிர மற்றவர்களிடம் (மரணித்த நல்லடியார்களிடம்) உதவி தேடும் நபர் ஷிர்கை(பல தெய்வ வழிபாட்டை) செய்து இஸ்லாத்தை விட்டு வெளியேறிவிடுவார்.

-அல்லாஹ்விடம் மட்டுமே பாதுகாவல் தேட வேண்டிய ஒரு விஷயத்தில் அல்லாஹ்வை தவிர மற்றவர்களிடம் (மரணித்த நல்லடியார்களிடம்) பாதுகாவல் தேடுபவர் ஷிர்கை(பல தெய்வ வழிபாட்டை) செய்து இஸ்லாத்தை விட்டு வெளியேறிவிடுவார்.

3- சர்வவல்லமையுள்ள அல்லாஹ்வை தவிர வேறு யாருக்கும் நன்மையைக் கொண்டுவரவோ அல்லது தீமையைத் தடுக்கவோ முடியாது என்று ஆழமாக நம்புதல்

4- ஷிர்கான தகடு தாயத்துக்கள் மார்க்கத்தில் தடைசெய்யப்பட்டவை என்று அறிஞர்களால் ஒருமனதாக ஒப்புக் கொள்ளப்பட்டது, ஆனால் அவை குர்ஆனிலிருந்து எடுத்து எழுதப்பட்ட தாயத்துக்களைப் பற்றி கருத்துகள் அறிஞர்களிடத்தில் வேறுபடுகின்றன.

ஆனால் நடைமுறையில் உள்ள இந்த பழக்கவழக்கங்களினால் கொஞ்சம் கொஞ்சமாக ஷிர்க்கான தாயத்துகளையும் அணிவதற்கு வழிவகுக்கும் என்பதால் سد للذرائع ஸத்துன் லித்தராயிஃ என்ற விதியின் அடிப்படையில் குர்ஆனிய தாயத்துகளையும் அணிவது தடைசெய்யப்பட்டுள்ளது.

இப்னு மசூத் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வின் தூதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுவதைக் கேட்டேன்: மந்திரிப்பது, தாயத்துக்கள் , மாந்திரீகங்கள் (சூனியம்)என்பது இணை கற்பித்தலாகும். (நூல்: அஹ்மத், அபூ தாவூத்)

தாயத்துக்கள் என்பது கண் திருஷ்டிக்காக குழந்தைகளின் கழுத்தில் தொங்கவிடும் ஒரு கயிறு, தகடுகளில் புரியாத வார்த்தைகளால் மார்க்கத்திற்கு முரணான வார்த்தைகளால் எழுதப்பட்டு கழுத்தில் கட்டிக் கொள்வது.

5- மார்க்க விடயங்களில் மிகைப்படுத்தாமல் - غلو ஜாக்கிரதையாக இருக்க வேண்டும், உங்களுக்கு முன் வந்தவர்கள் மார்க்கத்தில் தீவிர மிகைப்படுத்தலால் அழிக்கப்பட்டனர்.

உம் - இறை நேசர்களை சஹாபாக்களை விட உயர்த்தி பேசுவது, இறைநேசர்களை இறைத்தூதர் ﷺ அவர்களை காட்டிலும் உயர்வாக பேசுதல்.

இறைத்தூதர் ﷺ அவர்களை அல்லாஹ்வுக்கு நிகராக பேசுதல்.

6- திருக்குர்ஆனிலும், இடம்பெற்றிருக்கும் அல்லாஹ்வின் பண்புகளைத் தவிர வேறு எதையும் அவனுடன் இணைக்காதீர்கள், இறைத் தொடர்புடைய அவனது செயல்களுடன் யாரையும் தொடர்புபடுத்தாதீர்கள்.

உம்- "அல்லாஹ்வின் அருளாலும் வேறொருவராலும் என்று கூறக் கூடாது,"அல்லாஹ்வின் கிருபையால்" என்று மட்டும் சொல்லுங்கள்.

7- காலத்தை சபிக்கிறவன், அல்லாஹ்வை பழிக்கிறான்

உம் -இந்த காலத்தில் இந்த நேரத்தில் இவ்வாறு நடந்திருக்க கூடாது, இந்த நேரத்தில் இவ்வாறு செய்யக்கூடாது.

8- சர்வவல்லமையுள்ள அல்லாஹ்வை தவிர வேறு யாருக்கும்

மறைமுகமான ஞானம் இருப்பதாக கற்பிக்க வேண்டாம்.

உம் - அல்லாஹ்வைப் போன்று இறைத்தூதர்களுக்கும் இறைநேசர்களுக்கும் மறைமுகமான ஞானம் இருப்பதாக நினைப்பது.

9- அல்லாஹ்விடம் இருந்து முற்றிலும் வேறுபடுத்தக்கூடிய வார்த்தைகளால் அல்லாஹ்வை விவரிக்கும் எந்த சொற்றொடரும் அனுமதிக்கப்படாது.

உம்-உருவமற்ற அல்லாஹ், வானில் இல்லாத அர்ஷில் இல்லாத என்று கூறுவதைப் போல.

10- படைப்பாளருக்குக் கீழ்ப்படிவதைப் போன்று படைப்புகளுக்கு கீழ்ப்படியக் கூடாது, அல்லாஹ்விற்கு கீழ் படிவதைப் போன்று ஒரு அரசிற்கோ அல்லது அரசியலமைப்புக்கோ கீழ்ப்படிதல் இல்லை.

அல்லாஹ் அனுமதித்த விஷயத்தில் ஆட்சியாளருக்கும் தாய் தந்தையர்களுக்கும் கட்டுப்படுதல் என்பது அவசியம் ஆனால் அவர்களுக்கு கட்டுப்படுகிறேன் என்ற பெயரில் அல்லாஹ்விற்கும், மார்க்கத்திற்கும் மாறுபடக்கூடாது.

11- பரக்கதை (அபிவிருத்தியை / ஆசிர்வாதத்தை) தேடுவது என்பது மார்க்கம் சொல்லிய அடிப்படையில் மட்டுமே இருக்க வேண்டும், அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களுக்கு மட்டுமே உரிய ஒரு சிறப்பம்சம், நபியவர்களை வேறு யாருடனும் ஒப்பிடவோ அல்லது பரக்கத் தேடுவதை அனுமதிக்கும் ஆதாரமாகப் பயன்படுத்தவோ அனுமதிக்கப்படவில்லை.

உம்-நபி அவர்களின் காலத்தில் அவர்களின் பரக்கத் பெற்ற வியர்வை அவர்கள் உளூ செய்த தண்ணீர், உமிழ்நீர் பரக்கத்தாக நபித்தோழர்கள் பயன்படுத்தினார்கள்.

ஆனால் அதை ஆதாரமாக எடுத்துக்கொண்டு ஷேகுமார்களின் பரக்கத்தை அடைகிறேன் என்று ஒருவர் முயற்சி செய்தால் அது அவருக்கு பாதகமாக மார்க்கத்தில் அமைந்து விடும் அவருக்கு அனுமதி இல்லை இவ்வாறு செய்வதற்கு.

எந்த விஷயங்களில் பரக்கத் இருப்பதாக அல்லாஹ் திருக்குர்ஆனிலும் நபி மொழியிலும் கூறியிருக்கிறானோ அவைகளில் மட்டும்தான் பரக்கத் இருக்கும் அது வேறொருவருக்கு தனது பரக்கத்தை தராது.

உம்- ஜம்ஜம் தண்ணீர் -அதை அருந்துவதற்கு மார்க்கம் சொல்லி

இருக்கிறது. ஆனால் அதை வீட்டின் மூளைகளில் பரக்கத் பெறுவதற்காகவும், சைத்தான்களை விரட்டடிப்பதற்காகவும் பயன்படுத்துவது, பரகத் பெறுவதற்காக அதில் உளூ செய்வது அனாச்சாரம் / பித்அத் ஆதாரம் இல்லை. (ஒருவர் தண்ணீர் இல்லாமல் ஜம்ஜம் தண்ணீரில் உழூ செய்தால் கூடும்)

12- குறி சொல்பவரிடமோ சென்று அவர் சொல்வதை நம்புபவர் அல்லாஹ் இறக்கி அருளி இருக்கிற இந்த மார்க்கத்தை நிராகரித்தவராவார்.

(சேகுமார்களிடம் சென்று எதிர்காலத்தில் இவ்வாறு நடக்கும் என்று அறியாமையில் நம்புவது மார்க்கத்தில் கடுமையாக கண்டிக்கப்பட்டு இருக்கிறது)

13- மார்க்கத்திலிருந்து அறியப்பட்ட ஒன்றைத் நன்கு அறிந்தே ஒரு முஸ்லிம் மறுத்தால் அவர் இறை மறுப்பாளராக விடுகிறார்.

உம்- கடமையான மார்க்கத்தில் வலியுறுத்தி சொல்லப்பட்ட விஷயங்களில் விமர்சனம் செய்தல் கேளி பரிகாசம் செய்தல், ஹிஜாபை கிண்டல் செய்தல், ஹராம் ஹலாலை விமர்சித்தல் போன்றவைகள்.

மூலம்- ஷேக் வலீத் அல்-சயீதான் ஹஃபிழஹுல்லாஹ் அவர்களின் சொற்பொழிவிலிருந்து எடுக்கப்பட்ட கருத்துக்கள்.

இனி வேண்டாமே
வீணான விவாதங்கள் !

நமது கைகளில் ஐந்து விரல்கள் உள்ளன. அவைகள் எப்பொழுதும் சமமாக இருக்காது. மாறுபட்ட அளவுகளைக் கொண்ட விரல்களாக அவைகள் இருப்பதால்தான் அழகாக தென்படுகிறது. அதேபோன்றுதான் நமது வாழ்விலும் மாறுபட்ட கருத்துடையவர்கள் ஏராளமாக இருப்பர். ஆனால், அவர்களோடு நாம் எந்த முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்ற அளவுகோலை நமது மார்க்கம் நமக்கு தெளிவுபடுத்தி இருக்கிறது.

சில நாட்களுக்கு முன்பாக என்னுடன் ரயிலில் பயணம் செய்த ஒரு சகோதரர் திருச்சியில் இறங்கியதுடன் “நத்தர்ஷா தர்காஹ் செல்ல வேண்டும் எப்படி செல்வது?” என்று கேட்டார்.

நானும் “ரயில் நிலையத்திலிருந்து இந்த பஸ்ஸை பிடியுங்கள் இங்கு இறங்குங்கள்” என்று சொன்னேன்.

“நான் எனது சொந்த ஊரான சென்னைக்கு சென்று கொண்டிருக்கிறேன் இடையில் திருச்சியில் இந்த தர்காஹ் இருப்பதால் எங்கள் பள்ளியின் இமாம் அவர்கள் திருச்சியில் இறங்கி அங்கு சென்று ஸலாம் சொல்லி ஜியாரத் செய்து செல்லுங்கள் என்று கூறினார்” என்பதாக என்னிடம் சொன்னார்.

அந்த சகோதரர் எனது கோட்பாட்டுக்கு முரண்பட்டு இருந்தாலும் அடியேனும் அவரிடம் எந்த வாக்குவாதமும் செய்யாமல், அவரை இந்த தர்காஹ்வின் முன் இறக்கி விட்டு அவரிடம் ஒரு சிறிய கோரிக்கை வைத்தேன். “நீங்கள் இவ்வாறு தர்காஹ்வை ஜியாரத் செய்வதற்காக வந்திருப்பது உங்களின் மார்க்கப்பற்றை வெளிப்படுத்தினாலும், இது மார்க்கத்தில் ஆகுமானதா? இல்லையா? என்று ஒரு முறை சிந்தித்துப் பார்த்துக் கொள்ளுங்கள்” என்று சில விளக்கங்களை அவருக்குக்

கொடுத்தேன். அவரும் மிக முகமலர்ச்சியுடன் எனது மொபைல் நம்பரை கூடுதலான விளக்கங்களை பெறுவதற்காக வாங்கிக் கொண்டு அங்கிருந்து நகர்ந்து விட்டார். என்னுடன் இதுவரை தொடர்பிலும் இருக்கிறார். இதுதான் எதிர்க் கருத்துடையவர்களுடன் நாம் நடந்து கொள்ள வேண்டிய ஒரு இயல்பான நிலை.

அதபுல் இஃதிலாஃப் - ادب الاختلاف

கருத்துவேறுபாடில் கையாளப்பட வேண்டிய ஒழுக்கங்கள் மிக இன்றியமையாத ஒன்று. நமது முன்னோர்களாகிய சங்கையான இமாம்களும் சத்தியப் பாதையில் இஸ்லாமிய கொள்கைகளை விளக்கும் பொழுது அதபுல் இஃதிலாஃப் - ادب الاختلاف ஐ மிக கவனத்துடன் கடைபிடித்திருக்கிறார்கள் என்பது அவர்களின் வாழ்க்கை வரலாற்றில் நாம் காணலாம்.

ஆரோக்கியமான விமர்சனங்கள் அறிவை வளர்க்கும் ஞானத்தை அதிகப்படுத்தும். அதேநேரத்தில் வீணான விவாதங்கள், கடும் வாக்குவாதம், தன் கருத்தை அகம்பாவத்துடன் முற்படுத்தி சத்தியத்தை பிற்படுத்த வேண்டிய சூழலுக்கு அது நம்மை தள்ளி விடும்.

இமாம் அபூ ஈஸா திர்மிதீ ரஹிமஹுமுல்லாஹ் தனது ஆசிரியரான இமாம் புகாரீ அவர்களுடன் பல இரவுகள் ஆரோக்கியமான விமர்சனங்கள் (constructive criticism -النقد الايجابي) கொண்ட விவாதங்களை செய்திருக்கிறார்கள் என்பது அவர்கள் எழுதிய இலலுஸ் ஸஹீர் என்ற ஹதீஸ் அடிப்படைகலை புத்தகத்தில் நாம் காணலாம்.

நமது சமகாலத்தில் கூட நாம் சில அறிஞர்களை பார்க்கிறோம். அந்த அறிஞர்களுக்கு மத்தியில் ஏற்படும் கருத்து வேறுபாடுகளை அழகான முறையில் தங்களுக்கு மத்தியில் பகிர்ந்து கொண்டு மனோ இச்சையை மார்க்கமாக ஆக்காமல் சத்தியத்தை முன்வைப்பார்கள். தங்களது கருத்தில் பிழை இருந்தால் சத்தியத்தை எடுத்துக் கொள்வார்கள். தனது கருத்துக்கு முரணான கருத்து உடையவர்களை சாடாமல், வசைபாடாமல் விருப்பு வெறுப்புகள் இன்றி கருத்துக்களை முன் வைப்பார்கள்.

ஷைகுல் இஸ்லாம் இப்னு தைமிய்யா ரஹிமஹுல்லாஹ் அவர்களுக்கும் இமாம் தகியுத்தீன் ஸுபுக்கி, இமாம் ஸுயூத்தி ரஹிமஹுமுல்லாஹ் போன்ற மார்க்க அறிஞர்களுக்கு மத்தியில் நிலவி இருக்கிற கருத்து வேறுபாடுகளை நாம் பல புத்தகங்களில்

விரிந்து கிடப்பதை பார்க்கலாம். ஆனால், யாரும் யாரையும் தவறான சொல்லாடல்களில் மன வேதனைப் படுத்தும்படி இழிவுபடுத்தாமல் நற்குணத்துடன் நடந்து கொள்வார்கள். இமாம் தகியுத்தீன் ஸுப்க்கி, இமாம் ஸுயூத்தி ரஹிமஹுமுல்லாஹ் இமாம் இப்னு தைமிய்யாவை பற்றி விமர்சனம் செய்யும் பொழுது "ஷைகுல் இஸ்லாம்" என்ற அடைமொழியுடன் தான் அழைப்பார்கள். இது அன்றய நிலைபாடு....

இன்று மனோ இச்சையை மார்க்கமாக ஆக்க விரும்பும் சிலர், மனநோயாளிகளாக இருக்கும் சிலர், தங்களின் கருத்துகளை பிறர் மீது திணிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் சத்திய தேடலே இல்லாமல் மாற்றுக் கருத்துடையவர்களை புறக்கணித்து, அவர்களை இழிவுபடுத்தி, வீணான விவாதங்கள் செய்து வருவதும்தான் இன்றைய மன வருத்தத்திற்குரிய நிலைப்பாடு.

மார்க்கத்தில் சிந்தனை தெளிவு பெற ஆரோக்கியமான விவாதங்கள் வரவேற்கப் பட்டவையே. "எனக்கு இந்த விடயத்தில் தெளிவு இல்லை தாங்கள் விளக்கம் தாருங்கள்" என்று பணிவுடன் ஆரம்பிக்கும் இன்றைய காலத்து மாற்றுக் கருத்துடைய நண்பர்கள், திட்டுவதும், கேலி செய்வதும், கருத்துக்களைத் திரிப்பதுமாக கருத்துக்களுடன் மோதாமல், எதிர் கருத்து உடையவர்களுடன் மோதுகிறார்கள்.

இதன் காரணமாகவே அடியேன் கடந்த சில வருடங்களாக விவாதங்களை முற்றிலும் தவிர்த்து இறை அழைப்பு பணிகளில் கவனம் செலுத்தி வந்தேன். "உங்களுடைய கொள்கைகள் நம்பிக்கைகள் உங்களுக்கு எனது கொள்கைகள் நம்பிக்கைகள் எனக்கு" என்ற ரீதியில் பயணம் செய்துகொண்டிருந்தேன்.

சமீபமாக சிலர் தானாக முன்வந்து "சில தலைப்புகளில் விளக்கம் தேவை நீங்கள் மார்க்கத்தை தெளிவாக விளக்கி இருக்கிறீர்கள்" என்று கூற அடியேனும் ஆதாரங்களை முன்வைத்து அவர்களுக்கு சிந்தனைத் தெளிவை வழங்கினேன்.

ஆனால், மாற்றுக் கருத்துடைய நண்பர்கள் தங்களது கருத்துக்களை அடியேன் முன்வைத்த ஆதாரங்களுடன் உரசிப் பார்க்காமல் ஒரு தலைப்பிலிருந்து வேறு ஒரு தலைப்பிற்கு தாவித் தாவி, ஒரு தலைப்பை முழுமையாக பேச விட மாட்டார்கள். ஆதாரங்களை சரியான முறையில் எடுத்து வைக்காமல் குளறுபடிகள் செய்வதும், திட்டுவதும், கேலி செய்வதுமாக திசைதிருப்பி இறுதியில் வெறுப்பு அரசியலை செய்ய ஆரம்பித்து விட்டனர்.

இதே நிலையில்தான் கிட்டதட்ட ஐந்து, ஆறு வருடங்களுக்கு முன்பாக எதிர்கருத்து உடைய சில நண்பர்கள் என்னுடன் ஆறு மாதத்திற்கும் அதிகமாக விவாதம் செய்தார்கள். அப்பொழுதும் எண்ணிக்கையில் அதிகமாக இருந்த அவர்கள் நாம் முன்வைக்கும் ஆதாரங்களை சகித்துக் கொள்ள முடியாமல் வீணான புகைப்படங்களைப் போட்டு கேலி பரிகாசம் செய்து நம்மை விவாதத்தில் இருந்து வெளியேற வைத்துவிட்டனர்.

ஆகவே, எனது எதிர்க்கருத்து உடைய நண்பர்களுக்கு சொல்லிக் கொள்ளும் இறுதியான வார்த்தை, நாம் உண்மையில் சத்திய தேடலில் இருந்தால் அல்லாஹ் நமக்கு சிந்தனைத் தெளிவை வழங்குவான். தயவு கூர்ந்து எனது பொன்னான நேரங்களை விவாதம் என்ற பெயரில் வீணடிக்க வேண்டாம்.

உங்களுடைய சிந்தனைகளையும் கொள்கைகளையும் மக்கள் மன்றத்தில் முன் வையுங்கள். அடியேனும் ஆதாரங்களுடன் மக்கள் மன்றங்களில் முன்வைக்கிறேன். எது சரி, தவறு என்று பொதுமக்கள் முடிவு எடுத்துக் கொள்ளட்டும்.

அபூதாவூத் கிரந்தத்தில் வரும் ஸஹீஹான அறிவிப்பின் அடிப்படையில் அபூ உமாமா பாஹிலி ரளியல்லாஹு அன்ஹு அவர்கள்: “ஒருவர் சத்தியத்தை கொண்டிருந்தாலும் வீணான விவாதங்களை தவிர்த்து கொள்வாரோ அவருக்கு சுவனத்தில் கீழ்தளத்தில் தங்குவதற்கு பொறுப்பேற்றுக் கொள்கிறேன்” என்று இறைத்தூதர் (ஸல்) அவர்கள் சொல்வதாக கூறுகிறார்கள்.

மேலே காணப்படும் நபிமொழியின் அடிப்படையில் இத்துடன் எனது வீண் விவாதங்களை நிறுத்திக்கொள்கிறேன். சத்திய தேடலிலும், மார்க்கத்தில் சிந்தனை தெளிவை பெறவேண்டும் என்ற எண்ணத்துடன் இருக்கும் எனது மாணவர்களுக்கும் பொதுமக்களுக்கும் இனி வழமை போல் அழைப்பு பணியில் கவனம் செலுத்தலாம் என்று அடியேன் கருதுகிறேன்.

இது என்னுடைய பின்னடைவு அல்லது பயந்து கோழையாக பின்வாங்கி விட்டேன் என்ற அர்த்தம் அல்ல. கருத்துக்கள்தான் முரண்பட வேண்டுமே தவிர கருத்துக்களை சுமந்து இருப்பவர்களுடன் முரண்பட கூடாது. உள்ளங்கள் உடைந்து விடக்கூடாது. ஒற்றுமை பேணப்பட வேண்டும். அது நமது இலக்கை விட்டு திசை திருப்பி

விடக் கூடாது என்ற நன்நோக்கிலே தான் இந்த ஒரு முடிவை அடியேன் எடுத்திருக்கிறேன்.

அல்லாஹ் நம் அனைவருக்கும் அருள் புரிவானாக!!

خُذِ الْعَفْوَ وَأْمُرْ بِالْعُرْفِ وَأَعْرِضْ عَنِ الْجٰهِلِيْنَ

(நபியே!) இவ்வறிவீனர்(களின் செயல்)களை நீங்கள் மன்னித்துப் புறக்கணித்து விட்டு (பொறுமையையும் கைகொண்டு, மற்றவர்களை) நன்மை (செய்யும்படி) ஏவி வாருங்கள். (அல்குர்ஆன் 7:199)

மாற்றுக் கருத்துடையவர்களையும் மதிப்போம்! அறியாமையில் இருக்கும் சகோதரர்களாக! எதிரிகளாக அல்ல!

நாம் அனைவரும், ஐவேளை தொழுகையில், ஒரே ஸஃப்பில் (அணியில்) இருந்து, எவ்வாறு அல்லாஹ்வை இபாதத் செய்கின்றோமோ, மாறுபட்ட நிறம், சிந்தனை உடையவர்களாக இருந்தும், விருப்பு, வெறுப்புகளின்றி ஒன்றிணைகின்றோமோ, அது போல், நமது கருத்துகள் முரண்படலாம். ஆனால், உள்ளங்கள் முரண்பட கூடாதல்லவா!

இந்த விதத்தில், மக்களை வழி நடத்தி செல்ல வேண்டும். அதற்குரிய, பக்குவத்தைப் பெற வேண்டிய கால கட்டத்தில், நாம் இருக்கின்றோம்.

சில இஸ்லாமிய சகோதரர்கள் இதுபோன்ற அசத்திய சிந்தனை வாதிகள் பின் நின்று தொழுவது கூடுமா? என்று கேட்கிறார்கள்!

சற்று மனவேதனையுடன் எனது எழுத்துக்கள் சமூகத்தில் எதிர்மறையான சிந்தனை பாதிப்பை ஏற்படுத்தி விட்டதோ என்ற கவலையுடன் அவரிடம் கூறினேன்,

தவ்ஹீதை ஏகத்துவத்தை ஏற்றுக்கொண்ட அனைத்து இறைநம்பிக்கையாளர்கள் பின் நின்று தொழுகலாம், ஆனால் அவர்கள் வெளிப்படையான குஃப்ரை - இறைநிராகரிப்பை செய்யாமல் இருக்க வேண்டும்.

அவருடைய பார்வையில் ஷிர்க்கும் குஃப்ரும் தவ்ஹீதாக மார்க்கமாக தெரிகிறது என்றால், அவர் அறியாமையில் இருக்கிறார் என்று அர்த்தம், இந்த குழப்பமான நிலையில் அவர் எவ்வாறு இறை மறுப்பாளராக மாறுவார்?

عن أنس بن مالك قال قال رسول الله صلى الله عليه وسلم من صلى صلاتنا واستقبل قبلتنا وأكل ذبيحتنا فذلك المسلم الذي له ذمة الله وذمة رسوله فلا تخفروا الله في ذمته (رواه صحيح البخاري)

யார் நமது தொழுகையை தொழுதாரோ, நமது திசையை முன்னோக்கி (கிப்லாவாக) தொழுதாரோ, நாம் அறுத்த பிராணிகளைப் புசித்தாரோ அவர்தான் முஸ்லிம். (நூல்: ஸஹீஹுல் புகாரீ, அறிவிப்பாளர்: அனஸ் பின் மாலிக் (ரளி), தரம்-ஸஹீஹ்)

மேல் காணப்படும் நபி மொழியை வைத்து நாம் எந்த இறைநம்பிக்கையாளர்களையும் இறைமறுப்பாளர்களாக ஆக்கக்கூடாது, இறைநம்பிக்கையாளர்கள் உடைய அடையாளங்கள் தெளிவாக ஹதீஸில் கூறப்பட்டிருக்கிறது, மாற்றுக்கருத்துடையவர்கள் நம்மை காபிர்கள் என்று அழைத்தாலும் சரியே!!!

சத்தியமான அஹ்லுஸ் ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கையை பற்றி பிடிப்பவர்கள் ஈடேற்றம் பெறுவார்கள். அதில் எந்த சந்தேகமும் இல்லை அந்த சரியான கொள்கையின் பக்கம் நாம் நபி வழியில் நின்று மக்களை அழைப்போம்.

வரலாற்றில் நாம் பார்க்கின்றோம் ஹஜ்ஜாஜ் பின் யூஸுஃப் அஸ்ஸகஃபி போன்ற பாவங்கள் புரிந்த கொடுங்கோல் ஆட்சியாளர்களுக்கு பின் அனஸ் பின் மாலிக் அப்துல்லாஹ் பின் உமர் ரளியல்லாஹு அன்ஹும் போன்ற சஹாபாக்கள் பலர் ஜமாத் தொழுகையை தொழுது இருக்கிறார்கள், அவருக்கு எதிராக கிளர்ச்சி செய்யவில்லை, அவர்களுக்கு உபதேசமும், அழகிய முறையில் நினைவூட்டலையும் செய்து வந்தார்கள்.

இதைத்தான் இஸ்லாமிய கொள்கையில் அல்வலா வல் பரா என்றும் சொல்வார்கள், அல்லாஹ்விகாக நேசிப்பது அல்லாஹ்விற்காக வெறுப்பது.

மார்க்க பெயரில் அசத்தியங்களை அழகாக ஆக்க விரும்பும் சில அசத்திய வாத சகோதரர்களுக்கு சிந்தனை தெளிவை ஏற்படுத்த வேண்டும், சமூகம் வழிகேட்டில் சென்று விடக்கூடாது என்ற உயர் நோக்கிலே என்ற அடிப்படையில் தான் எனது எழுத்துக்கள் எழுதப்படுகின்றன.

அசத்திய வாதிகளை முஷ்ரிகாகவோ,காஃபிராகவோ ஆக்குவது

நமது நோக்கமல்ல கூடுதலாக வழிகேட்டில் செல்கிறார் என்று நினை ஊட்டலாம், என்னென்ன காரியங்களை செய்தால் ஒரு மனிதன் இணைவைப்பை நெருங்கி விடுகிறான் நிராகரிப்பை தொட்டு விடுகிறான் என்று எச்சரிக்கை செய்கிறோம், இறைத்தூதர் ﷺ அவர்கள் முஸ்லிம் அல்லாதவர்களை இஸ்லாத்தின் பக்கம் அழைக்கச் சொன்னார்கள். நமது பணி இன்று இஸ்லாத்தில் இருப்பவர்களை காஃபிர்களாக ஆக்குவது என்று இருந்தால் அது முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டியவை.

கீழ்க்காணும் இறைவசனம் நமக்கு முஸ்லிம்களுக்கு மத்தியில் ஒருவர் மற்றொருவருக்கு இறையச்சத்தையும் உண்மையான காரியங்களையும் நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும் என்று கட்டளையாக இட்டிருக்கிறான்.

اِلَّا الَّذِيْنَ اٰمَنُوْا وَ عَمِلُوا الصّٰلِحٰتِ وَتَوَاصَوْا بِالْحَقِّ وَتَوَاصَوْا بِالصَّبْرِ

விசுவாசங்கொண்டு நற்கருமங்களையும் செய்து, சத்தியத்தை ஒருவருக்கொருவர் உபதேசம் செய்தும், (பாவங்களை விடுவதிலும், நன்மைகளைச் செய்வதிலும் ஏற்படும் கஷ்டங்களைச் சகித்து) பொறுமையைக் கொண்டும் ஒருவருக்கொருவர் உபதேசிக்கிறார்களே அத்தகையோரைத் தவிர. (அல்குர்ஆன்: 103:3)

இந்த கட்டளைகளை நடைமுறைப்படுத்தும் விடையத்தில் தான் நமது மறுப்புகள் தொடர்கள் எழுதபட்டு வந்தன, இன்னும் எழுதப்படும் இன் ஷா அல்லாஹ் என்பதை நமது இஸ்லாமிய சகோதரர்கள் தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும்,

இதன் காரணமாகத்தான் எனது பதிவுகளில் சிலர் முறைகேடாக விமர்சித்து விமர்சனம் செய்யும் பொழுது என் மீது மதிப்புக் கொண்ட சில நண்பர்கள் மாற்றுக் கருத்து உடையவர்களை சாடும் பொழுது அவர்களை திட்டுவதும் அவர்களைப் போன்று நாமும் தரம் தாழ்ந்து நடந்து கொள்வதும் தவறு என்றும் அடியேன் அவர்களை கண்டித்து இருக்கிறேன்.

நமது நோக்கம் அசத்திய சிந்தனையை வேரோடு கலைவது தான், அசத்தியவாதிகளின் பெயர்களை மக்கள் மன்றத்திலே சிந்தனை தெளிவு பெறுவதற்காக அடையாளமாக சுட்டிக்காட்டலாம்,

ஏன் இன்னும் ஸலஃபி, ஹனஃபி, இக்வானி, ஜமாதி, பரேல்வி என்றெல்லாம் வசை பாடுவதற்காக பயன்படுத்த வேண்டும்?

அந்தச் சித்தாந்தங்களை சுமந்து இருப்பவர்கள் நமது எதிரிகள் அல்லர் என்ற சமநிலை சிந்தனைக்கு நமது சகோதரர்கள் வரவேண்டும்.

அனைத்து சிந்தனைக் கலாசாலைகளுமே, (School of thoughts - مكتب الفكر) ஏக இறைவனின் பக்கம், மனிதனை நெருங்கச் செய்யவே கட்டமைக்கப்பட்டது.

நாம் பயணிக்கும் வாகனம், என்னவோ மாறுபடலாம். ஆனால், இலக்கு - இறைவனின் உவப்பை பெறுவது என்றிருக்கட்டும்.

இயக்க மறுப்புகளையும், வெறுப்புகளையும் மனதில் விதைப்பதை விட, இமாம் அபுல் ஹஸன் நத்வி (ரஹ்) அவர்கள் கூறியது போல் இருக்க வேண்டும்.

"நாம் சமூகத்தை கட்டெழுப்பும் பொறுப்புள்ள மக்களாக இருக்க வேண்டுமே தவிர, சமூக அழிவிற்கு காரணிகளாக இருக்கக் கூடாது"

சகோதரர்களே!! ஏன் நமது திறன்களை, ஆக்கபூர்வமான, சமூக ஒற்றுமைக்கு அடிப்படையாக ஆக்க கூடாது?

அசத்தியங்களை தோலுரித்துக் காண்பிப்பதை உண்மைகளை வெளிச்சத்துக்கு கொண்டு வரும் விடையங்களை அறிஞர் பெருமக்களிடம் விட்டுவிடுங்கள், உங்களின் கொள்கைகளுக்கு மாறுபடுகிறவர்களை அறியாமையில் இருக்கும் சகோதரர்களாக மட்டுமே பாருங்கள்.

2000 ஆண்டு மறக்கமுடியாத ஒரு வருடம், இஸ்லாமிய உலகத்தில் வாழ்ந்து வந்த பல அறிஞர் பெருமக்கள் மில்லினியம் தோன்றுவதற்கு முன்பாகவே அல்லாஹ்விடம் மீண்ட வருடம்!!

எங்களது ஆசிரியத் தந்தை இமாம் அபுல் ஹஸன் அலீ நத்வி ரஹிமஹுமுல்லாஹ் அவர்களும் 1999 டிசம்பரில் 31 ல் தான் வபஃபாத்தானார்கள்.

நாங்கள் லக்னோவில் படித்துக் கொண்டிருக்கிறோம் இவர்களின் இறங்களுக்கு உலகத்திலிருந்து பல அறிஞர் பெருமக்கள் வந்து ஆறுதல் கூறினார்கள்.

அப்பொழுது அகில இந்திய ஷீஆக்களின் தலைவரான கல்பே

ஸாதிக் அவர்கள் எங்களுடன் தோளோடு தோள் இணைந்து லுஹர் தொழுகையை ஹனஃபி மத்ஹபின் அடிப்படையில் தொழுதார், நாங்கள் ஆச்சரியமாக கேட்டோம் பொதுவாக அவர்கள் பள்ளியில் நாம் தொழுதால் அந்த இடத்தை கழுவி விட்டு விடுவார்கள், கர்பலாவில் எடுக்கப்பட்ட மண்ணில்தான் ஸஜ்தா செய்வார்கள், அப்படி இருக்க எவ்வாறு நீங்கள் இவ்வாறு தொழுகிறார்கள் என்று கேட்ட பொழுது,

அவர் கூறிய பதில் எங்களை சிந்திக்க வைத்தது இமாம் அபுல் ஹஸன் நத்வி அவர்கள் உயிருடன் இருந்த காலத்தில் வேறுபட்ட கருத்துடைய ஷீஆக்கள், ஸுன்னத் வல் ஜமாஅத் கொள்கை உடையவர்களை ஓர் அணியில் நிறுத்தி அழகு பார்த்தார்கள், எங்களையும் முஸ்லிம்களாக பார்த்தார்கள், இஸ்லாமிய தனிநபர் சட்ட வாரியத்தில் எங்களையும் உறுப்பினராக சேர்த்தார்.

அவர் மரணித்த பின்பு அவருடைய இடத்தில் நான் அவருடைய கொள்கையில் தொழுவது தான் அவருக்கு செய்யும் நன்றி மரியாதை எனது கொள்கையை முன்வைப்பது அநீதம் என்று அழகான முறையில் எதிர்க் கருத்துடையவர்களுடன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்று மாற்றுக் கருத்துடைய ஷீஆக்களின் தலைவர் கூறுகிறார் பாருங்கள்!

எப்பொழுதும் விமர்சனங்களே தீர்வுகளாக ஆகாது. 'நாம், இந்த உம்மத்தை வழி நடத்தும் அழைப்பாளர்களாக இருக்க வேண்டுமே தவிர, சிந்தனை தடுமாற்றத்தையும், இறைத்தொடர்பை வலுவிலக்கச் செய்யும் காரியங்களில் அதிகம் அதிகமாய் கவனம் செலுத்தக் கூடாது' என்பதினை தாழ்மையுடன் விண்ணப்பித்துக் கொள்கின்றேன்.

ஆரோக்கியமான விமர்சனங்கள் தவிர்த்து, என் இயக்கம்', 'என் தலைவர்', என்றெல்லாம், 'இயக்க வெறி' அல்லது 'தனி நபர் வழிபாடுகள்' - இவைகள் அனைத்தையுமே விட்டொழித்துவிட்டு,

மாற்றுக் கருத்துடையவர்களையும் மதித்து, இன்னும், அவர்கள் கூறும் கருத்துக்களை செவிமடுத்து, அது சத்தியத்தை கொண்டிருந்தால் இயல்பாக ஏற்கலாம் இல்லையா!

முறைகேடாக இருந்தால் நாம், அவர்களை சாடாமல் நமது கருத்துக்களை மக்கள் மன்றத்தில் தெளிவுபடுத்தி விட்டு ஒதுங்கி, நாம் செய்ய வேண்டிய கடமைகளில் கவனம் செலுத்தலாம் இல்லையா !!

நமது, மாற்றுக் கருத்துடையவர் ஃபிர்அவ்னாக இருந்தாலும்,

அவனிடமும் நளினமாக, மென்மையாக பேசுங்கள். அந்தத் தன்மை, அவனிடத்தில் - சிந்திக்க, இறையச்சம் கொள்ள

ஏதுவாக இருக்கும் என்று அல்லாஹ்வே இறைத்தூதர் மூசா(அலை) இன்னும் ஹாருன் (அலை) அவர்களுக்கும் சொல்லித்தர வில்லையா ?

இன்று, மாற்றுக்கருத்து கொண்டுள்ளவர், எதிரியாகவே காணப்பட்டு அணுகும் இந்த சுகாதாரமற்ற நடைமுறையை, நாம் அதிகம், அதிகமாக சமூக வலைத்தளங்களில் காண்கின்றோம். இந்தப் போக்கை, இந்தக் கணமே கைவிட்டு, அறியாமையில் என் சகோதரன் இருக்கின்றான். நாம் அவனுக்கு சிந்தனைத் தெளிவை தரலாம். இது மார்க்கத்தில் நன்மையை ஏவி, தீயதைத் தடுக்கும் அற்புதமான நபிமார்களின் பணி என்று மாற்றுக்கருத்துடைய தோழருக்கு, மென்மையாக சத்தியத்தை புரிய வைக்க, உதவி புரியலாமே!!

فَقُوْلَا لَه قَوْلًا لَّيِّنًا لَّعَلَّه يَتَذَكَّرُ اَوْ يَخْشٰى

நீங்கள் அவனுக்கு நளினமாகவே உபதேசம் செய்யுங்கள். அவன் நல்லுணர்ச்சி பெறலாம் அல்லது அச்சம் கொள்ளலாம்" என்றும் கூறினோம். (அல்குர்ஆன்: 20:44)